D IV 4, 1

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சமயகுரவாசாரியர்களின் முதல்வராகிய

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

தேவாரப்பதிகங்கள்

திருமுறை ௩

கயிலாயபரம்பரையாகிய

[illegible] திருவாவடுதுறை ஆதீனத்துப்பிர[illegible]

வித்வான் - காஞ்சீபுரம்

சபாபதிமுதலியாரவர்களால்

ஆராய்ச்சிசெய்வித்து

திருமயிலை

சுப்பராயஞானியாரவர்களால்

அச்சிட்டபிரதிக்கிணங்க

சென்னை. [illegible]

வித்வான் நெல்வேலி

முருகேசமுதலியாரவர்கள்

முன்னிலையில்

வித்வான் - திருமயிலை

சிவப்பிரகாசையரவர்கள் மாணாக்கர்

பா - மாசிலாமணிமுதலியாரவர்களால்

கண்ணோட்டமிடப்பட்டு

சென்னை:

மநோன்மணிவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

Copy-right.

154

1893.

2

[illegible]

PRINTED BY K. MANICKAM MUDALIAR, AT THE MAN[illegible] VILASAM
PRESS—MADRAS

Price Rs 3 - 8 - 0 Postage As 5

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அம்மையார் அருளிச்செய்த

திருவாலங்காடு

மூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்துகுண்டுகண்வெண்பற்குழிவயிற்றுப்
பங்கிசிவந்திருபற்கணீண்டுபரடுயர்நீள்கணைக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலறுகாட்டிற்றாழ்சடையெட்டுத்திசையும்வீசி
யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௧)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை
விள்ளவெழுதிவெடுவெடென்னநக்குவெருண்டுவிலங்குகாட்டி
றுள்ளித்துடித்துச்சுடுபிணத்தீச்சுட்டிடமுற்றுஞ்சுளிந்துபூதி
யள்ளியவிக்கநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௨)

வாகைவிரிந்துவெண்ணெற்றொலிப்பமயங்கிருள்கூர்நடுநாளையாங்கே
கூகையோடாண்டலைபாடவாந்தைகோடதன்மேற்குதித்தோடவீசி
யீகைபடர்தொடர்கள்ளிநீழலீமமிடுசுடுகாட்டகத்தே
யாகங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவா

குண்டிலோமிக்குழிச்சோற்றைவாங
கண்டிலோமென்றுகனன்றுபேய்கள்

மண்டிலநின்றங்குளாளமிட்டுமட்டித்துவீசியெடுத்தபாத
மண்டமுறநிமிர்ந்தாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௪)

விழுதுநிணத்தைவிழுங்கிவிட்டுவெண்டலைமாலைவிரவிப்பூட்டிக்
கழுதுதன்பிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாய்வளர்த்துப்
புழுதிதுடைத்துமுலைகொடுத்துப்போயினதாயைவரவுகாணா
தழுதுறங்கும்புறங்காட்டிலாடுமப்பனிடந்திருவாலங்காடே. (௫)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழ்ந்துதுணங்கையிட்டோடியாடித்
தழலுளெரியும்பிணத்தைவாங்கித்தான்றடித்தின்றணங்காடுகாட்டிற்
கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர்வட்டணையிட்டுநட்ட
மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடுமப்பனிடந்திருவாலங்காடே. (௬)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய்பருந்தொடுகூகைபகண்டையாந்தை
குட்டியிடமுட்டைகூகைபேய்கள்குறுநரிசென்றணங்காடுகாட்டிற்
பிட்டடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினைப்போகப்புரட்டியாங்கே
யட்டமேபாயநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௭)

நாடுநகருந்திரிந்துசென்றுநன்னெறிநாடிநயந்தவரை
மூடிமுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணமூழைசூழக்
காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி
யாடுமரவப்புயங்கனெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௮)

துத்தங்கைக்கிள்ளைவிளரிதாரமுழையிளியோசைபண்கெழுமப்பாடிச்
சச்சரிகொக்கரைதக்கையோடுதகுணிச்சந்துந்துபிதாளம்வீணை
மத்தளங்கரடிகைவன்கைமென்றோற்றமருகங்குடமுழாமொந்தைவாசித்
தத்தனைவிரவினோடாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௯)

புந்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச்
சந்தியில்வைத்துக்கடமைசெய்துதக்கவரிட்டசெந்தீவிளக்கா
முந்தியமரர்முழவினோசைதிசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க
வந்தியின்மாநடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௧௦)

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடித்தொக்கலித்துப்
பப்பினையிட்டுப்பகண்டைபாடப்பாடிருந்தந்நரியாழமைப்ப
வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளைச்செடிதலைக்காரைக்காற்பேய்
செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

மூத்ததிருப்பதிகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கவ்விப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே.

நிணந்தானுருகிநிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
துணங்கையெறிந்துசூழுநோக்கிச்சுடலைவித்தெங்குங்
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனல்கையேந்தியழகனாடுமே. (௨)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புறமேநரிகவ்வ
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிட்கநட்டம்பேணுமிறைவன்பெயரும்பெருங்காடே. (௩)

முள்ளிதீந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே
புள்ளியுழைமான்றோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனாடுமே. (௪)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனல்விட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே.

வாளைக்கிளரவளைவாளெயிற்றுவண்ணச்சிறுகூகை
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுரலுமுதுகாட்டிற்
றாளிப்பனையினிலைபோன்மயிர்க்கட்டழல்வாயழல்கட்பேய்
கூளிக்கணங்கள்குழறலோடியம்பக்குழகனாடுமே

நொந்திக்கிடந்தசுடலைதடவிநுகருமுப்புக்கின்றிச்
சிந்தித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்தியமரர்முழவினோசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (௭)

வேய்களோங்கிவெண்முத்துதிரும்வெடிகொள்சுடலையு
ளோயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய

மூத்ததிருப்பதிகம்.

பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்குபெருங்காட்டின்
மாயனோடமலையான்மகளுமருண்டுநோக்குமே.

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுதும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெழுந்தபெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபாடப்
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே.

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பே
யீண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
குண்டுகுழிவித்தழுவவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே.

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே.

திருச்சிற்றம்பலம்.

அம்மையார் அருளிச்செய்த

திருவாலங்காடு

மூத்ததிருப்பதிகம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

முதற்றிருமுறையின்

பதிக அட்டவணை.

பதிகப்பெயர்.	பக்கம்.
பண்-நட்டபாடை.	
திருப்பிரமபுரம்...	...க
திருப்புகலூர்...	உ
திருவலிதாயம்...	...ங
ஸ்ரீபுகலியுந்திருவீழிமிழலையும்...	ரு
திருக்காட்டுப்பள்ளி...	எ
திருமருகலுந்-திருச்செங்காட்டங்குடியும்	அ
திருநள்ளாறும்-திருவாலவாயும் ...	கூ
திருவாவூர்ப்பசுபதீச்சரம்...	...கக
திருவேணுபுரம் ...	...கஉ
திருவண்ணுமலை...	...கங
...ழிமிழலை...	...கரு
...றதுகுன்றம்...	..கசா
...வியலூர்...	கஎ
...க்கொடுங்குன்றம்...	ககூ
...நெய்த்தானம் ...	உo
...புள்ளமங்கைதிருவாலந்துறை	உக
...டும்பாவனம்...	உங
...ின்றயூர்...	...உச
...கழுமலம்-திருவிராகம ...	உரு
...ழிமிழலை-திருவிராகம ...	உஎ
...சிவபுரம்-திருவிராகம ...	உஅ
...றைக்காடு-திருவிராகம் ...	உகூ
பண்-தக்கராகம்.	
...காலக்கா...	...ஙக
...	ஙஉ
...சம்பொன்பள்ளி...	...ஙங
...த்தூர்...	...ஙரு
...ண்கூர்...	...ஙசா
...சாற்றுத்துறை...	...ஙஅ
...யூர்ச்-சித்தீச்சரம் ...	ஙகூ
...	சக
...ங்கணின்முட்டம் ...	சஉ
திருவிடைமருதூர்...	சங
திருவன்பிலாலந்துறை ...	...சச
சீகாழி...	சரு
திருவீழிமிழலை...	...சசா
திருவையாறு ...	சஎ
திருப்பனையூர்...	...சஅ
திருமயிலாடுதுறை...	சகூ
திருவேட்களம்...	...ருo
திருவாழ்கொளிபுத்தூர்...	...ருக
திருப்பாம்புரம்...	ருங
திருப்பேணுபெருந்துறை ...	ருச
திருககற்குடி...	ருசா
திருப்பாசசிலாசசிராமம்-முயலகன்றீர்த்தது	ருஎ
திருப்பழையனூர் திருவாலங்காடு	ருஅ
திருவதிகை-வீரட்டானம் ...	சாo
பண்-பழந்தக்கராகம்.	
திருச்சிரபுரம்...	சாக
திருச்சேய்ஞலூர்...	சாங
திருநள்ளாறு...	...சாச
திருவலிவலம்...	சாசா
திருச்சோபுரம்...	சாஎ
திருநெடுங்களம்...	சாஅ
திருமுதுகுன்றம்...	எo
திருஒத்தூர்-ஆண்பனைபெண்பனை	எக
திருமாற்பேறு...	எஉ
திருப்பாற்றுறை ...	எங
திருவேற்காடு...	...எங
திருக்கரவீரம்...	...எச
திருத்தூங்கானைமாடம் ...	எரு
திருத்தோணிபுரம்...	எஎ
திருச்செங்காட்டங்குடி ...	எஅ
திருக்கோளிலி...	எகூ

பதிகப்பெயர்.	பக்கம்
பண்-தக்கேசி	
திருப்பிரமபுரம்-பல்பெயர்ப்பத்து	அக
திருப்பூவணம்...	அஉ
காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்	அச
திருச்சண்பைநகர்... ...	அரு
திருப்பழனம்... ...	அசா
ஸ்ரீகயிலாயம்... ...	அஅ
திருவண்ணாமலை... ...	அகூ
திருவீங்கோய்மலை... ...	கூ0
திருநறையூர்ச்சித்தீச்சரம்...	கூஉ
திருக்குடந்தைக்காரோணம்...	கூ௩
திருக்கானூர்...	கூச
திருப்புறவம்	கூசா
பண்-குறிஞ்சி.	
திருவெங்குரு... ...	கூஎ
திருவிலம்பையங்கோட்டூர் ...	கூகூ
திருவசிறுபாக்கம்... ...	க00
திருவிடைச்சுரம்... ...	க0உ
திருக்கழுமலம்...	க0௩
கோயில்...	க0ரு
சீகாழி...	க0சா
திருவீழிமிழலை	க0எ
திருவம்பர்மாகாளம்.. ...	க0கூ
திருக்கடனாகைக்காரோணம் ...	கக0
திருநல்லம்	ககக
திருநல்லூர...	கக௩
திருவடுகூர்...	ககச
திருஆப்பனூர்... ...	ககசா
திருவெருக்கத்தம்புலியூர்...	ககஎ
திருவிருக்குக்குறள்.	
திருப்பிரமபுரம்... ...	க[illegible]
திருவாரூர்...	கககூ
திருவீழிமிழலை... ...	கஉ0
திருமுதுகுன்றம்... ...	கஉக
திருவாலவாய்...	கஉக
திருவிடைமருது... ...	கஉஉ
திருவன்னியூர்... ...	கஉ௩
திருப்புறவம்...	கஉச
திருச்சிராப்பள்ளி... ...	கஉரு
திருக்குற்றாலம்	கஉசா
திருப்பரங்குன்றம்... ...	கஉஅ
திருக்கண்ணார்கோயில்... ...	கஉகூ

பதிகப்பெயர்.	பக்கம்
சீகாழி...	க௩க
திருக்கழுக்குன்றம்... ...	க௩உ
பண்-வியாழக்குறிஞ்சி.	
ஸ்ரீபுகலி...	க௩௩
திருவாரூர்... —	க௩ச
திருவூறல்...	க௩சா
திருக்கொடிமாடச்செங்குன்றூர்	க௩எ
திருப்பாதாளீச்சரம்... ...	க௩அ
திருச்சிரபுரம்...	க௩கூ
திருவிடைமருதூர்... ...	கச0
திருக்கடைமுடி... ...	கசஉ
திருச்சிவபுரம்...	கசஉ
திருவல்லம்...	கசச
திருமாற்பேறு... ...	கசரு
திருவிராமனதீச்சரம்... ...	கசசா
திருநீலகண்டம்... ...	கசஅ
திருப்பிரமபுரம்-மொழிமாற்று	கசகூ
திருப்பருப்ப	கரு0
திருக்கள்ளில்	கருஉ
ஸ்ரீ ராகம்.	
திருவையாறு ...	கரு௩
திருவிடைமரு	கருரு
திருவிடைமரு	
திருவலிவலம். ...	
திருவீழிமிழலை ...	க
திருச்சிவபுரம்.	
திருக்கழுமலம்- த்தாளச்சதி	
சீகாழி-திருவேக ம்... ...	
திருவேகம்பத் வுள்ளக்கருத்து	
திருவெழுகூற்றி க ...	
க்ஷேத்திருவுள்ளக்க து ...	
பண்-மேகராகக்குறிஞ்	
திருக்கழுமலம்	
திருவையாறு... ...	
திருமுதுகுன்றம்.. ...	
திருவீழிமிழலை... ...	
திருவேகம்பம்... ...	
திருப்பறியலூர்-வி ட்டம் ...	
திருப்பராய்த்துறை ..	
பண்-யாழ்மூரி.	
திருத்தருமபுரம் ...	

ரச்சிற்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்
அருளிச்செய்த
அடங்கன்முறைத்
தேவாரப்பதிகங்கள்.

திருப்பிரமபுரம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபுரமாபிரமேவியபெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

விண்மகிழ்ந்தம்மதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூருமிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலமிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

மறைகலந்தவொலிபாடலொடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழில்நீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழிசூழ்குளிர்கானல்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௮)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளிர்முதலாகியவையத்தவரேததப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெமமானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧௦)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பிரமபுரீசர் - தேவியார் - திருநிலை நாயகியம்மை.
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

திருப்புகலூர், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசைபாடலினானசையாலிவ்வுலகெல்லா
நெறிகலந்ததொருநீர்மையனாயெருதேறும்பலிபேணி
முறிகலந்ததொருதோலரைமேலுடையானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில்சூழ்ந்தயலேபுனலாரும்புகலூரே. (௧)

காதிலங்குகுழையன்னிழைசேர்திருமார்பனொருபாகம்
மாதிலங்குதிருமேனியினான்கருமானினுரியாடை

மீதிலங்கவணிந்தானிமையோர்தொழமேவுமிடஞ்சோலைப்
போதிலங்குநசையால்வரிவண்டிசைபாடும்புகலூரே. (௨

பண்ணிலாவுமறைபாடலினானிறைசேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடையான்பெரியார்கழலென்றுந்தொழுதேத்த
வுண்ணிலாவியவர்சிந்தையுணீங்காவொருவற்கிடமென்பர்
மண்ணிலாவும்மடியார்குடிமைத்தொழில்மல்கும்புகலூரே. (௩

நீரின்மல்குசடையன்விடையன்னடையார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலையேசிலையாகமுனிந்தன்றுலகுய்யக்
காரின்மல்குகடனஞ்சமதுண்டகடவுள்ளிடமென்ப
ரூரின்மல்கிவளர்செம்மையினாலுயர்வெய்தும்புகலூரே. (௪

செய்யமேனிவெளியபொடிப்பூசுவர்சேரும்மடியார்மேற்
பையநின்றவினைபாற்றுவர்போற்றிசைத்தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெருமானுறையுமிடமென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத்தார்பிரியாதுபொருந்தும்புகலூரே. (௫

கழலினோசைசிலம்பின்னொலியோசைகலிக்கப்பயில்கானிற்
குழலினோசைகுறட்பாரிடம்போற்றக்குனித்தாரிடமென்பர்
விழவினோசையடியார்மிடைவுற்றுவிரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந்நீரயர்வெய்தமுழங்கும்புகலூரே. (௬

வெள்ளமார்ந்துமிளிர்செஞ்சடைதன்மேல்விளங்குமதிசூடி
யுள்ளமார்ந்தவடியார்தொழுதேத்தவுகக்குமருள்தந்தெங்
கள்ளமார்ந்துகழியப்பழிதீர்த்தகடவுட்கிடமென்பர்
புள்ளையார்ந்தவயலின்விளைவால்வளமல்கும்புகலூரே. (௭

தென்னிலங்கையரையன்வரைபற்றியெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிரலானெரிவித்திசைகேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடையான்மடமாதொடுமேவுமிடமென்பர்
பொன்னிலங்குமணிமாளிகைமேன்மதிதோயும்புகலூரே. (௮

நாகம்வைத்தமுடியானடிகைதொழுதேத்துமடியார்க
ளாகம்வைத்தபெருமான்பிரமனொடுமாலுந்தொழுதேத்த
வேகம்வைத்தவெரியாய்மிகவோங்கியவெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழிலின்னிழலான்மதுவாரும்புகலூரே. (௯

செய்தவத்தர்மிகுதேரர்கள்சாக்கியர்செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழியைத்தவிர்வார்கள்கடவுள்ளிடம்போலுங்
கொய்துபத்தர்மலரும்புனலுங்கொடுதூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல்வாருயர்வானகமெய்தும்புகலூரே.

புற்றில்வாழு[illegible]வமரையார்த்தவன்மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்மாலை

பற்றியென்றும்மிசைபாடியமாந்தர்பரமனடிசேர்ந்து
குற்றமின்றிக்குறைபாடொழியாப்புகழோங்கிப்பொலிவாரே.

திருச்சிற்றம்ப

இதுவுஞ் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அக்கினீசுவரர் - தேவியார் - கருந்தார்க்குழலியம்மை.

திருவலிதாயம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே.

படையிலங்குகரமெட்டுடையான்படிறாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வனுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாய
மடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே.

ஐயனொய்யனணியன்பிணியில்லவரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான்றிருமாதோடுறைகோயில்
வையம்வந்துபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாய
முய்யும்வண்ணநினைமின்னினைந்தால்வினைதீருநலமாமே.

ஒற்றையேறதுடையானடமாடியோர்பூதப்படைசூழப்
புற்றினாகமரையார்த்துழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுலகத்தொளிமல்கிடவுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மதுவேசரணாவதுபாடும்மடியார்க்கே.

புந்தியொன்றிநினைவார்வினையாயினதீரப்பொருளாய
வந்தியன்னதொருபேரொளியானமர்கோயிலயலெங்கு
மந்திவந்துகடுவனொடுகூடிவணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதவவர்தம்மடும்வெந்துயர்தீர்தலெளிதன்றே.

ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்துழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறைவைத்தவெம்மாதிமகிழும்வலிதாயந்
தேனியன்றநறுமாமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே.

கண்ணிறைந்தவிழியின்னழலால்வருகாமனுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொருபால்மகிழ்வெய்தியபெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள்வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே.

கடலினஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தநடமாடி
யடலிலங்கையரையன்வலிசெற்றருளம்மானமர்கோயில்
மடலிலங்குகமுகின்பலவின்மதுவிம்மும்வலிதாய
முடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (௮

பெரியமேருவரையேசிலையாமலைவுற்றரெயின்மூன்று
மெரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணாவடிவாகு
மெரியதாகியுறவோங்கியவன்வலிதாயந்தொழுதேத்த
வுரியராகவுடையார்பெரியாரெனவுள்கும்முலகோரே. (௯

ஆசியார்மொழியாரமண்சாக்கியரல்லாதவர்கூடி
யேசியீரமிலராய்மொழிசெய்தவர்சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியோரே. (௧௦

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுள்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே. (௧௧

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டில் பாடியென வழங்கப்பட்டிருக்கின்றது.

சுவாமிபெயர் - வலிதாயநாதர், தேவியார் - தாயம்மை.

ஸ்ரீபுகலியும், திருவீழிமிழலையும் - வினாவுரை

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைமருபூங்குழற்கற்றைதுற்றவாணுதல்மான்விழிமங்கையோடும்
பொய்யம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
மெய[illegible] றையேயிமையாதமுக்கணீசவெனேசவிதென்கொல்சொல்லாய்
மெய்[illegible] மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

கழன்[illegible]ல்குபந்தோடம்மானைமுற்றில்கற்றவர்சிற்றிடைக்கன்னிமார்கள்
பொ[illegible]ன்மல்குகிள்ளையைச்சொற்பயிற்றும்புகலிநிலாவியபுண்ணியனே
யெழி[illegible]ற்மலரோன்சிரமேந்தியுண்டோரின்புறுசெல்வமிதென்கொல்சொல்லாய்
மிழ[illegible]யுள்வேதியரேத்திவாழ்த்தவிண்ணிழிகோயில்விரும்பியதே. (௨)

கன்னியராடல்கலந்துமிக்ககந்துகவாடைகலந்துதுங்கப்
பொன்னியல்மாடநெருங்குசெல்வப்புகலிநிலாவியபுண்ணியனே
இன்னிசையாழ்மொழியாளோர்பாகத்தெம்மிறையேயிதுவெனகொல்சொல்லா[ய்]
மின்னியல்நுண்ணிடையார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (௩)

நாகபணந்திகழல்குல்மல்குநன்னுதல்மான்விழிமங்கையோடும்
பூகவனம்பொழில்சூழ்ந்தவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
ஏகபெருந்தகையாயபெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மேகமுரிஞ்செயில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

சந்தளறேறுதடங்கொள்கொங்கைத்தையலோடுந்தளராதவாய்மைப்
புந்தியினார்மறையோர்களேத்தும்புகலிநிலாவியபுண்ணியனே
எந்தமையாளுடையீசவெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
வெந்தவெண்ணீறணிவார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

சங்கொளியிப்பிசுறாமகரந்தாங்கிநிரந்துதரங்கமேன்மேற்
பொங்கொலிநீர்சுமந்தோங்குசெம்மைப்புகலிநிலாவியபுண்ணியனே
எங்கள்பிரானிமையோர்கள்பெம்மானெம்மிறையேயிதுவென் கொல்சொல்
வெங்கதிர்தோய்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
ஈமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
வீமருதண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

இலங்கையர்வேந்தெழில்வாய்த்ததிண்டோளிற்றலறவ்விரலொற்றியைந்து
புலங்களைக்கட்டவர்போற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
இலங்கெரியேந்திநின்றெல்லியாடுமெம்மிறையேயிதுவென்கொல்சொல்லா
விலங்கலொண்மாளிகைசூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

செறிமுளரித்தவிசேறியாறுஞ்சேர்ந்ததில்வீற்றிருந்தானுமற்றைப்
பொறியரவத்தணையானுங்காணப்புகலிநிலாவியபுண்ணியனே
எறிமழுவோடிளமான்கையின்றியிருந்தபிரானிதுவென்கொல்சொல்லா
வெறிகமழ்பூம்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

பத்தர்கணம்பணிந்தேத்தவாய்த்தபான்மையதன்றியும்பல்சமணும்
புத்தருநின்றலர்தூற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
எத்தவத்தோர்க்குமிலக்காய்நின்றவெம்பெருமானிதுவென்கொல்சொ
வித்தகர்வாழ்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென்றுசொல்லிட
புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானைப்போற்றி
நண்ணியகீர்த்திநலங்கொள்கேள்விநான்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியல்பாடல்வல்லார்களிந்தப்பாரொடுவிண்பரிபாலகரே.

திருச்சிற்றம்பலம்

இவ்விரண்டூரு சோழநாட்டிலுள்ளவை, புகலி என்பது சீகாழிக்கொருபெயர்
வீழிமிழலையில் - சுவாமிபெயர் - வீழியழகர், தேவியார் - சுந்தரகுசாம்பிகை.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

மாலுங்காணுவாதியினுனுறைகாட்டுப்பள்ளி
கொன்றைமாலைவார்சடையான்கழல்வாழ்த்துவோமே. (க0)

நைநீலநெய்தல்போதுகளாற்பொலிவெய்துபொய்கைக்
டகாட்டுப்பள்ளிக்காதலனைக்கடற்காழியர்கோன்
யாற்றுறைதந்துசொல்லியஞானசம்பந்தனல்ல
ன்னமாலைபத்துந்தாங்கவல்லார்புகழ்தாங்குவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இதுவுஞ் சோழநாட்டிலுள்ளது.
ர் - ஆரணியசுந்தரர், தேவியார் - அகிலாண்டநாயகியம்மை.

லும், திருச்செங்காட்டங்குடியும்-வினவுரை

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குல்மதிதவழ்மாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல்விளங்கெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (க)

நெய்தவழ்மூவெரிகாவலோம்புநேர்புரிநூல்மறையாளரேத்த
மைதவழ்மாடமலிந்தவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செய்தவநான்மறையோர்களேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கைதவழ்கூரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (உ)

தோலொடுநூலிழைசேர்ந்தமார்பர்தொகுமறையோர்கள்வளர்த்தசெந்தீ
மால்புகைபோய்விம்முமாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேல்புல்குதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கால்புல்குபைங்கழலார்க்கவாடுங்கணபதீச்சரங்காமுறவே.

நாமருகேள்வியர்வேள்வியோவாநான்மறையோர்வழிபாடுசெய்ய
மாமருவும்மணிக்கோயில்மேயமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
தேமருவும்பொழிற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காமருசீர்மகிழ்ந்தெல்லியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ச

பாடல்முழவும்விழவுமோவாப்பன்மறையோரவர்தாம்பரவு
மாடநெடுங்கொடி விண்தடவுமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சேடகமாமலர்சசோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
காடகமேயிடமாகவாடுங்கணபதீச்சரங்காமுறவே. (ரு

புனையழலோம்புகையந்தணாளர்பொன்னடிநாடொறும்போற்றிசைப்ப
மனைகெழுமாடமலிந்தவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
சினைகெழுதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கனைவளர்கூரெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே. (சு-6

தேவாரப்பதிகங்கள்.

திருக்காட்டுப்பள்ளி, பண் - நட்டபா

திருச்சிற்றம்பலம்.

செய்யருகேபுனல்பாயவோங்கிச்செங்கயல்பாயச்சிலமலர்த்
கையருகேகனிவாழையீன்றுகானலெல்லாங்கமழ்காட்டுப்பள்
பையருகேயழல்வாய்வைவாயப்பாம்பணையான்பணைத்தோ
மெய்யருகேயுடையானையுள்கிவிண்டவரேறுவர்மேலுலகே

திரைகளெல்லாமலருஞ்சுமந்துசெழுமணிமுத்தொடுபொ
கரைகளெல்லாமணிசேர்ந்துரிஞ்சிக்காவிரிகால்பொருகாட்
யுரைகளெல்லாமுணர்வெய்திநல்கவுத்தமராயுயர்ந்தாருலகி
லரவமெல்லாமரையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறுக்க

தோலுடையான்வண்ணப்போர்வையினான்சுண்ணவெண்
நூலுடையானிமையோர்பெருமானுண்ணறிவால்வழிபாடு
காலுடையான்கரிதாயகண்டன்காதலிக்கப்படுங்காட்டுப்ப
மேலுடையானிமையாதமுக்கண்மின்னிடையாளொடும்வே

சலசலசந்தகிலோடுமுந்திச்சந்தனமேகரைசார்த்தியெங்கும்
பலபலவாய்த்தலையார்த்துமண்டிப்பாய்ந்திழிகாவிரிப்பாங்க
கலகலநின்றதிருங்கழலான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளிச்
சொலவல்லதொண்டர்களைத்தநின்றசூலமவல்லான்கழல்சொல்லுவோமே. (௫)

தளையவிழ்தண்ணிறநீலநெய்தல்தாமரைசெங்கழுநீருமெல்லாங்
களையவிழுங்குழலார்கடியக்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளித்
துளைபயிலுங்குழல்யாழ்முரலத்துன்னியவின்னிசையாற்றுதைந்து
அளைபயில்பாம்பரையார்த்தசெல்வர்க்காட்செய்யவல்லலறுக்கலமே. (௬)

முடி[illegible]ன்றொடுமோட்டுழவர்முன்கைத்தருகைக்கரு[illegible]
கடிகையினாலெறிகாட்டுப்பள்ளிகாதல்செய்தான்கரிதாயகண்டன்
பொடியணிமேனியினானையுள்கிப்போதொடுநீர்சுமந்தேத்திமுன்னின்
றடிகையினாற்றொழவல்லதொண்டரருவினையைத்துரந்தாட்செய்வாரோ. (௭)

பிறையுடையான்பெரியோர்கள்பெம்மான்பெய்கழனாடொறும்பேணியேத்த
மறையுடையான்மழுவாளுடையான்வார்தருமால்கடனஞ்சமுண்ட
கறையுடையான்கனலாடுகண்ணாற்காமனைக்காய்ந்தவன்காட்டுப்பள்ளி
குறையுடையான்குறட்பூதச்செல்வன்குரைகழலேகைகள்கூப்பினோமே. (௮)

செற்றவர்தம்மரணம்மவற்றைச்செவ்வழல்வாயெரியூட்டிநன்றுங்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
யுற்றவர்தாமுணர்வெய்திநல்லவும்பருள்ளார்தொழுதேத்தநின்ற
பெற்றமரும்பெருமானையல்லால்பேசுவதும்மற்றோர்பேச்சிலோமே. (௯)

உண்டுவரார்துகிலாடைமெய்போர்த்துச்சிகொளாமையுண்டேயுரைக்குங்
குண்டர்களோடரைக்கூறையில்லார்கூறுவதாங்குணமல்லகண்ட

திரு ஆவூர்ப்பசுபதீச்சரம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூதநாதர்புடைபடுவார்தம்மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்
விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசுலாவியெங்கும்
பண்ணியல்பாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௧)

முத்தியர்மூப்பிலராப்பிலுள்ளார்முக்கணர்தக்கன்றன்வேள்விசாடு
மத்தியரென்றென்றடியரேத்துமையனணங்கொடிருந்தவூராந்
தொத்தியலும்பொழில்மாடுவண்டுதுதைந்தெங்குந்தூமதுப்பாயக்கோயிற்
பத்திசைபாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௨)

பொங்கிவரும்புனல்சென்னிவைத்தார்போம்வழிவந்திழிவேற்றமானு
ரிங்குயர்ஞானத்தர்வானோரேத்துமிறையவரின்றுமிருந்தவூராந்
தெங்குயர்சோலைசேராலைசாலிதிளைக்கும்விளைவயல்சேரும்பொய்கைப்
பங்கயமங்கைவிரும்புமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௩)

தேவியோர்கூறினரேறதேறுஞ்செலவினர்நல்குரவென்னைநீக்கு
மாவியரந்தணரல்லல்தீர்க்குமப்பனாரங்கேயமர்ந்தவூராம
பூவியலும்பொழில்வாசம்வீசப்புரிகுழலார்சுவடொற்றிமுற்றப்
பாவியல்பாடலறாதவாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௪)

இந்தணையுஞ்சடையார்விடையாரிப்பிறப்பென்னையறுக்கவல்லார்
வந்தணைந்தின்னிசைபாடுவார்பால்மன்னினர்மன்னியிருந்தவூராங்
கொந்தணையுங்குழலார்விழவிற்கூட்டமிடையிடைசேரும்வீதிப்
பந்தணையும்விரலார்தமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௫)

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார்கும்பிடுவார்தமக்கன்புசெய்வா
ரொற்றைவிடையினர்நெற்றிக்கண்ணருறைபதியாகுஞ்செறிகொள்மாடஞ்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடநிதானநல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௬)

நீறுடையார்நெடுமால்வணங்குநிமிர்சடையார்நினைவார்தமுள்ளங்
கூறுடையாருடைக்கோவணத்தார்குவலயமேத்தவிருந்தவூராந்
தாறுடைவாழையிற்கூழைமந்திதகுகனியுண்டுமீண்டிட்டினத்தைப்
பாரிடப்பாய்ந்துபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௭)

வெண்டலைமாலைவிரவிப்பூண்டமெய்யுடையார்விறலாரரக்கன்
வண்டமர்பூமுடிசெற்றுகந்தமைந்தரிடம்வளமோங்கியெங்குங்
கண்டலாசிந்தைக்கருத்தின்மிக்கார்கதியருளென்றுகையாரக்கூப்பிப்
பண்டலர்கொண்டுபயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௮)

மாலுமயனும்வணங்கிநேடமற்றவருக்கெரியாகிநீண்ட
சீலமறிவரிதாகிநின்றசெம்மையினாரவர்சேருமூராம்

கோலவிழாவினரங்கத்தேறிக்கொடியிடைமாதர்கள்மைந்தரோடும்
பாலெனவேமொழிந்தேத்துமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௯)
பின்னியதாழ்சடையார்பிதற்றும்பேதையராஞ்சமண்சாக்கியர்கள்
தன்னியலுமுரைகொள்ளகில்லாச்சைவரிடந்தளவேறுசோலைத்
துன்னியமாதருமைந்தர்தாமுஞ்சுனையிடைமூழ்கித்தொடர்ந்தசிந்தைப்
பன்னியபாடல்பயிலுமாவூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே. (௧௦)
எண்டிசையாரும்வணங்கியேத்துமெம்பெருமானையெழில்கொளாவூர்ப்
பண்டெரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதீச்சரத்தாதிதன்மேற்
கண்டல்கண்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தனசொன்ன
கொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர் - பசுபதீசுரர் தேவியார் - மங்களநாயகியம்மை.

திருவேணுபுரம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்

வண்டார்குழலரிவையொடும்பிரியாவகைபாகம்
பெண்டான்மிகவானானபிறைச்சென்னிபெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளந்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே (௧)
படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூதப்படையானூர்
குடைப்பாளையின்கமுகின்னொடுபுன்னைமலர்நாற்றம்
விடைத்தேவருதென்றல்மிகுவேணுபுரமதுவே. (௨)
கடந்தாங்கியகரியையவர்வெருவவுரிபோர்த்துப்
படந்தாங்கியவரவக்குழைப்பரமேட்டிதனபழவூர்
நடந்தாங்கியநடையார்நல்பவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணார்பயில்வேணுபுரமதுவே. (௩)

தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிககவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானூர்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதுவண்டார்பொழில்வேணுபுரமதுவே. (௪)

நானாவிதவுருவாய்நமையாள்வானணுகாதார்
வானார்திரிபுரமூன்றெரியுண்ணச்சிலைதொட்டான்
தேனார்ந்தெழுகதலிக்கனியுண்பான்றிகழ்மந்தி
மேனோக்கிநின்றிரங்கும்பொழில்வேணுபுரமதுவே. (௫)

மண்ணோர்களும்விண்ணோர்களும்வெருவிமிகவஞ்சக்
கண்ணார்சலமூடிக்கடலோங்கவ்வுயர்ந்தானூர்

தண்ணார்நறுங்கமலம்மலர்சாயவிளவாளை
விண்ணோர்துதிகொள்ளும்வியன்வேணுபுரமதுவே. (சு-எ)

மலையான்மகளஞ்சவ்வரையெடுத்தவ்வலியரக்கன்
றலைதோளவைநெரியச்சரணுகிர்வைத்தவன்றன்னூர்
கலையாறொடுசுருதித்தொகைகற்றோர்மிகுகூட்டம்
விலையாயினசொற்றேர்தருவேணுபுரமதுவே. (அ)

வயமுண்டவமாலும்மடிகாணாதலமாக்கும்
பயனாகியபிரமன்படுதலையேந்தியபரனூர்
கயமேவியசங்கந்தருகழிவிட்டுயர்செந்நெல்
வயன்மேவிவந்துறங்கும்பொழில்வேணுபுரமதுவே. (கூ)

மாசேறியவுடலாரமண்கழுக்களொடுதேரர்
தேசேறியபாதம்வணங்காமைத்தெரியானூர்
தூசேறியவல்குற்றுடியிடையார்துணைமுலையார்
வீசேறியபுருவத்தவர்வேணுபுரமதுவே. (க0)

வேதத்தொலியானம்மிகுவேணுபுரந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றன்பாட
லேதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லார்சிவகெதியைப்பெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேணுபுரம் - என்பது சீகாழிக்கொருபெயர்.

திருஅண்ணாமலை, பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (க)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (உ)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விருசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (ஈ)

உதிரும்மயிரிடுவெண்டலைகலனாவுளெகெல்லா
மெதிரும்பலியுணலாகவுமெருதேறுவதல்லால்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிட மண்ணாமலையதுவே. (ச)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செயமுரவம்படுமண்ணாமலையண்ணா
லுரவஞ்சடையுலவும்புனலுடனாவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (கூ)

பெருகும்புனலண்ணாமலைபிறைசேர்கடல்நஞ்சைப்
பருகுந்தனதுணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (சு)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டி
னரியாடியகுவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணாளொடுமண்ணாமலையதுவே. (எ)

ஒளிறூபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறுகுரல்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறுபடவிளையாடியவிகிர்தனனிராவணனை
யளறுபடவடர்த்தானிடமண்ணாமலையதுவே. (அ)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாவணமழலாகியவண்ணாமலையண்ணல்
தளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே (கூ)

வேர்வந்துறமாசூர்தரவெயில்நின்றுழல்வாரு
மார்வம்புதைமலிசீவரமறையாலுருவாரு
மாரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணாமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானலகழல்சேர்வதுகுணமே. (க0)

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசார
லம்புந்திமூவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தனதமிழ்வல்லவரடிபேணுதல்தவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அருணாசலேசுவரர் - தேவியார் - உண்ணாமுலையம்மை.

சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே.

தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடியர்
மழமால்விடைமிகவேறியமறையோனுறைகோயில்
விழவோடொலிமிகுமங்கையர்தகுமாடகசாலை
முழவோடிசைநடமுஞ்செயுமுதுகுன்றடைவோமே. (எ)

செதுவாய்மைகள்கருதிவ்வரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயில்
மதுவாயசெங்காந்தண்மலர்நிறையக்குறைவில்லா
முதுவேய்கண்முத்தந்திரும்பொழில்முதுகுன்றடைவோமே. (அ)

இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாடுவண்பொழில்சூழ்புனற்படப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாயுமுதுகுன்றடைவோமே. (௯)

அருகரொடுபுத்தரவரறியாவரனமலையான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலர்சூழ்
கருகுகுழன்மடவார்கடிகுறிஞ்சியதுபாடி
முருகன்னதுபெருமைபகர்முதுகுன்றடைவோமே. (க0)

முகில்சேர்தருமுதுகுன்றுடையானைம்மிகுதொல்சீர்ப்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தன்னுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகருமடியவர்கட்கிடர்பாவமடையாவே திருச்சிற்றம்பலம். (கக)

நடுநாட்டிலுள்ளது - இதுவே விருத்தாசலம்.
சுவாமிபெயர் - பழமலைநாதர், தேவியார் - பெரியநாயகியம்மை.

திருவியலூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனுரிவையுடலணிவோ
னரவும்மலைபுனலும்மிளமதியுந்நகுதலையும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே (க)

ஏறார்தருமொருவன்பலவுருவன்னிலையானா
னாறார்தருசடையன்னனலுருவன்புரியுடையான்
மாறார்புரமெரியச்சிலைவளைவித்தவன்மடவாள்
வீறார்தரநின்றானிடம்விரிநீர்வியலூரே (உ)

[illegible]ன்சடையவைதாழ்வுறமடவார்மனைதோறும்
[illegible]ன்பலியெனநின்றிசைபகர்வார்வரிடம்

ழும்மென்றெழுமருவித்திரள்வரைபற்றிடவுரைமேல்
விம்மும்பொழில்கெழுவும்வயல்விரிநீர்வியலூரே. (௩)

அடைவாகியவடியார்தொழவலரோன்றலையதனின்
மடவாரிடுபலிவந்துணலுடையானவனிடமாங்
கடையார்தரவகிலார்கழைமுத்தந்திரைசிந்தி
மிடையார்பொழில்புடைசூழ்தருவிரிநீர்வியலூரே. (௪)

எண்ணார்தருபயனாயயனவனாய்மிகுகலையாய்ப்
பண்ணார்தருமறையாயுயர்பொருளாயிறையவனாய்க்
கண்ணார்தருமுருவாகியகடவுள்ளிடமெனலாம்
விண்ணோரொடுமண்ணோர்தொழும்விரிநீர்வியலூரே. (௫)

வசைவிற்கொடுவருவேடுவனவனாய்நிலையறிவான்
றிசையுற்றவர்காணச்செருமலைவானிலையவனை
யசையப்பொருதசையாவணமவனுக்குயர்படைகள
விசையற்கருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (௬)

மானாரரவுடையானிரவுடையான்பகல்நட்ட
ஊனார்தருமுயிரானுயர்விசையான்விளைபொருள்கள
தானாகியதலைவன்னெனநினைவாரவரிடமா
மேனாடியர்விண்ணோர்தொழும்விரிநீர்வியலூரே. (௭)

பொருவாரெனக்கெதிராரெனப்பொருப்பையெடுத்தான்றன
கருமால்வரைகரந்தோளுரங்கதிர்நீண்முடிநெரிந்து
சிரமாயினகதறச்செறிகழல்சேர்திருவடியின
விரலாலடர்வித்தானிடம்விரிநீர்வியலூரே. (௮)

வளம்பட்டலர்மலர்மேலயன்மாலுமொருவகையா
லளம்பட்டறிவொண்ணாவகையழலாகியவண்ண
லொளம்பட்டெழுதழல்தூணதனடுவேயொருவுருவம
விளம்பட்டருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (௯)

தடுக்காலுடன்மறைப்பாரவர்தவர்சீவரமூடிப்
பிடகேயுரைசெய்வாரொடுபேணாநமர்பெரியோர
கடற்சேர்தருவிடமுண்டமுதம்மரர்க்கருள்செய்த
விடைச்சேர்தருகொடியானிடம்விரிநீர்வியலூரே. (௧௦)

விளங்கும்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன
றுளங்கில்தமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனோடுயர்விண்ணும்முடையாரே. திருச்சிற்றம்பலம். (௧௧)

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - யோகாநந்தேசுவரர், தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

திருக்கொடுங்குன்றம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்தும்மழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்தும்மமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்திருநகரே. (௧)

மயில்புல்குதண்பெடையோடுடனாடும்வளர்சாரற்
குயிலின்னிசைபாடுங்குளிர்சோலைக்கொடுங்குன்றம்
அயில்வேல்மலிநெடுவெஞ்சுடரனலேந்திநின்றாடி
யெயின்முன்படவெய்தானவன்மேயவ்வெழினகரே. (௨)

மிளிரும்மணிபைம்பொன்னொடுவிரைமாமலருந்திக்
குளிரும்புனல்பாயுங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
இளர்கங்கையொடிளவெண்மதிகெழுவுஞ்சடைதன்மேல்
வளர்கொன்றையுமதமத்தமும்வைத்தான்வளநகரே. (௩)

பருமாமதகரியோடரியிழியும்விரிசாரற்
குருமாமணிபொன்னோடிழியருவிக்கொடுங்குன்றம்
பொருமாவெயில்வரைவிற்றருகணையிற்பொடிசெய்த
பெருமானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (௪)

மேகத்திடிகுரல்வந்தெழவெருவிவ்வரையிழியுங்
கூகைக்குலமோடித்திரிசாரற்கொடுங்குன்றந்
நாகத்தொடிளவெண்பிறைசூடிந்நலமங்கை
பாகத்தவனிமையோர்தொழமேவும்பழநகரே. (௫)

கைம்மாமதகரியின்னினமிடியின்குரலதிரக்
கொய்ம்மாமலர்ச்சோலைபுகமண்டுங்கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித்தொழுவார்கட்கருள்செய்யும்
பெம்மானவனிமையோர்தொழமேவும்பெருநகரே. (௬)

மரவத்தொடுமணமாதவிமவ்வல்லதுவிண்ட
குரவத்தொடுவிரவும்பொழில்சூழ்தண்கொடுங்குன்றம்
அரவத்தொடிளவெண்பிறைவிரவும்மலர்க்கொன்றை
நிரவச்சடைமுடிமேலுடன்வைத்தானெடுநகரே. (௭)

முட்டாமுதுகரியின்னினமுதுவேய்களைமுனிந்து
குட்டாச்சுனையவைமண்டிநின்றாடுங்கொடுங்குன்றம்
ஒட்டாவரக்கன்றன்முடியொருபஃதவையுடனே
பிட்டானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (௮)

அறையும்மரிகுரலோசையையஞ்சியடுமானை
குறையும்மனமாகிம்முழைவைகுங்கொடுங்குன்றம்

மறையும்மலையுடையானெனநெடியானெனவிவர்க
ளிறையும்மறிவொண்ணாதவன்மேயவெழிநகரே. (௯)

மத்தக்களிறுரிவ்வரவஞ்சிம்மலைதன்னைக்
குத்திப்பெருமுழைதன்னிடைவைகுங்கொடுங்குணறம்
புத்தரொடுபொல்லாமனச்சமணர்புறங்கூறப்
பத்தர்க்கருள்செய்தானவன்மேயபழநகரே. (௧0)

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றை
கானற்கழுமலமாநகர்த்தலைவனலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனநலங்கொள்தமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்தமெழிலோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுங்குன்றேசுவரர், தேவியார் - அமுதவல்லியம்மை.

திருநெய்த்தானம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடிற்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடு
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (௧)

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூ
ரறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயில்நெய்த்தானமெனீரே. (௨)

பேயாயினபாடப்பெருநடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகமிகவுடையான்
தாயாகியவுலகங்களைநிலைபேறுசெய்தலைவன்
நேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (௩)

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருணடமாடியநம்பனுறையிடமாங்
கடுவாளிளவரவாடுமிழ்கடனஞ்சமதுண்டா
னெடுவாளைகள்குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே (௪)

நுகராரமொடேலம்மணிசெம்பொன்னுரையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்துந்
நிகரான்மணலிடுதண்கரைநிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தந்நமைநடலையடையாவே.

விடையார்கொடியுடையவ்வணல்வீந்தார்வெளையெலும்பும்
உடையார்நறுமாலைச்சடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்தணெய்த்தானம்
மடையாதவரென்றும்மமருலகம்மடையாரே. (௬)

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. (௭)

அறையார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாய
மிறையாரமுனெடுத்தானிருபதுதோளுறவூன்றி
நிறையார்புனனெய்த்தானநன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. (௮)

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானுஞ்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானங்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே. (௯)

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னமமொழிபொருளாநினையேன்மி
னித்தம்பயினிமலன்னுறைநெய்த்தானமதேத்துஞ்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. (௧௦)

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - நெய்யாடியப்பர், தேவியார் - வாலாம்பிகையம்மை.

திருப்புள்ளமங்கை திரு ஆலந்துறை, பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயினபரமன்பிரமன்றான்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்திறலறச்சாடியகடவுள்ளிடங்கருதி
லாலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. (௧)

லையான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருமண்மைப்
லையாயினகளைவானிடமபொழில்சூழ்புளமங்கைக்

கலையால்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலையார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. (௨)

கறையார்மிடறுடையானகமழ்கொன்றைச்சடைமுடிமேற்
பொறையார்தருகங்கைப்புனலுடையான்புளமங்கை
சிறையார்தருகளிவண்டறைபொழில்சூழ்திருவாலந்
துறையானவனறையார்கழல்தொழுமின்றுதிசெய்தே. (௩)

தணியார்மதியரவின்னொடுவைத்தானிடமொய்தெம்
பணியாயவனடியார்தொழுதேத்தும்புளமங்கை
மணியார்தருகனகம்மவைவயிரத்திரளோடும்
மணியார்மணலணைகாவிரியாலந்துறையதுவே. (௪)

மெத்தன்னுரும்வினைதீர்வகைதொழுமின்செழுமலரின்
கொத்தினனொடுசந்தாரகில்கொணர்காவிரிக்கரைமேற்
பொத்தின்னிடையாந்தைபலபாடும்புளமங்கை
யத்தன்னமையாள்வானிடமாலந்துறையதுவே. (௫)

மன்னானவனுலகிற்கொருமழையானவன்பிழையில்
பொன்னானவன்முதலானவன்பொழில்சூழ்புளமங்கை
யென்னானவனிசையானவனிளநாயிறின்சோதி
யன்னானவனுறையும்மிடமாலந்துறையதுவே. (௬)

முடியார்தருசடைமேன்முளையிளவெண்மதிசூடிப்
பொடியாடியதிருமேனியர்பொழில்சூழ்புளமங்கைக்
கடியார்மலர்புனல்கொண்டுதன்கழலேதொழுதேத்தும்
மடியார்தமக்கினியானிடமாலந்துறையதுவே. (௭)

இலங்கைம்மன்னன்முடிதோளிறவெழிலார்திருவிரலால்
விலங்கல்லிடையடர்த்தானிடம்வேதம்பயின்றேத்திப்
புலன்கள்தமைவென்றார்புகழவர்வாழ்புளமங்கை
யலங்கன்மலிசடையானிடமாலந்துறையதுவே. (௮)

செறியார்தருவெள்ளைத்திருநீற்றின்றிருமுண்டப்
பொறியார்தருபுரிநூல்வரைமார்பன்புளமங்கை
வெறியார்தருகமலத்தயன்மாலுந்தனைநாடி
யறியாவகைநின்றானிடமாலந்துறையதுவே. (௯)

நீதியறியாதாரமண்கையரொடுமண்டைப்
போதியவரோதும்முரைகொள்ளார்புளமங்கை
யாதியவர்கோயில்திருவாலந்துறைதொழுமின்
சாதிம்மிகுவானோர்தொழுதன்மைபெறலாமே.

பொந்தின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
யந்தண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்

கந்தம்மலிகமழ்காழியுட்கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலியாடத்தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதிநாயகர், தேவியார் - பால்வளைநாயகியம்மை.

திரு இடும்பாவனம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மணமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிகுகுன்றி
லினமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (௧)

மலையார்தருமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
நிலையார்தருநிமலன்வலிநிலவும்புகழொளிசேர்
கலையார்தருபுலவோரவர்காவன்மிகுகுன்றில்
இலையார்தருபொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (௨)

சீலம்மிகுசித்தத்தவர்சிந்தித்தெழுமெந்தை
ஞாலம்மிகுகடல்சூழ்தருமுலகத்தவர்நலமார்
கோலம்மிகுமலர்மென்முலைமடவார்மிகுகுன்றில்
ஏலங்கமழ்பொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (௩)

பொழிலார்தருகுலைவாழைகளெழிலார்திகழ்போழ்தின்
தொழிலான்மிகுதொண்டரவர்தொழுதாடியமுன்றிற்
குழலார்தருமலர்மென்முலைமடவாமிகுகுன்றில்
எழிலார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (௪)

பந்தார்விரலுமையாளொருபங்கர்கங்கைமுடிமேற்
செந்தாமரைமலர்மலகியசெழுநீர்வயற்கரைமேற்
கொந்தார்மலர்புன்னைமகிழ்குரவங்கமழ்குன்றில்
எந்தாயெனவிருந்தானிடமிடும்பாவனமிதுவே. (௫)

நெறிநீர்மையர்நீள்வானவர்நினையுந்நினைவாகி
யறிநீர்மையிலெய்தும்மவர்க்கறியும்மறிவருளிக்
குறிநீர்மையர்குளமார்தருமணமார்தருகுன்றில்
எறிநீர்வயல்புடைசூழ்தருமிடும்பாவனமிதுவே. (௬)

நீறேறியதிருமேனியர்நிலவும்முலகெல்லாம்
பாறேறியபடுவெண்டலைகையிற்பலிவாங்காக்
கூறேறியமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
ஏறேறியவிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (௭)

மத... ரார்தருதிகழ்வாளெயிற்றரக்கனசிவன்மலையை
யோராதெடுத்தார்த்தான்முடியொருபஃதவைநெரித்துக்
கூரார்தருகொலைவாளொடுகுணநாமமுங்கொடுத்த
வேரார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (அ)

பொருளார்தருமறையோர்புகழ்விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தருசிந்தையொடுசெந்தம்மலர்பலதூய்
மருளார்தருமாயன்னயன்காணார்மயலெய்த
விருளார்தருகண்டர்க்கிடமிடும்பாவனமிதுவே. (கூ)

தடுக்கையுடனிடுக்கித்தலைபறித்துச்சமண்டப்பர்
உடுக்கைபலதுவராக்கூறைகளுடம்பிட்டுழல்வாரும்
மடுக்கண்மலர்வயல்சேர்செந்நெல்மலிநீர்மலர்க்கரைமேல்
இடுக்கண்பலகளைவானிடமிடும்பாவனமிதுவே. (க0)

கொடியார்நெடுமாடக்குன்றளூரிற்கரைக்கோல
விடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை
யடியாருமந்தணர்காழியுள்ளணிஞானசம்பந்தன
படியார்சொன்னபாடல்சொலப்பறையும்வினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - சற்குணநாதர், தேவியார் - மங்களநாயகியம்மை.

திருநின்றியூர், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்

சூலம்படைசுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு
பாலம்மதிபவளச்சடைமுடிமேலதுபண்டங்
காலன்வலிகாலின்னொடுபோக்கிக்கடிகமழு
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரினிலையோர்க்கே. (க)

அச்சம்மிலர்பாவம்மிலர்கேடும்மிலரடியார்
நிச்சம்முறுநோயும்மிலர்தாமுந்நின்றியூரில்
நச்சம்மிடறுடையாநறுங்கொன்றைநயந்தாளும்
பச்சம்முடையடிகள்திருப்பாதம்பணிவாரே. (உ)

பறையின்னொலிசங்கின்னொலிபாங்காரவுமார
அறையும்மொலியெங்கும்மவைபறிவாரவர்தம்மை
நிறையும்புனல்சடைமேலுடையடிகணின்றியூரில்
உறையும்மிறையல்லதெனதுள்ளம்முணராதே. (௩)

பூண்டவ்வரைமார்பிற்புரிநூலன்விரிகொன்றை
யீண்டவ்வதனோடும்மொருபாலம்மதியதனைத்

ஈண்டும்பொழில்சூழ்ந்ததிருநின்றியதுதன்னில்
ஆண்டகழல்தொழிலல்லதுவறியாரவர்றிவே. (௪)

குழலின்னிசைவண்டின்னிசைகண்டுகுயில்கூவுந்
நிழலின்னெழில்தாழ்ந்தபொழில்சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வலனங்கையதுவெய்தியனலாடுங்
கழலின்னொலியாடும்புரிகடவுள்களைகண்ணே. (௫)

மூரல்முறுவல்வெண்ணகையுடையாளொருபாகஞ்
சாரன்மதிபதனோடுடன்சலவஞ்சடைவைத்த
வீரன்மலியழகார்பொழின்மிடையுந்திருநின்றி
யூரன்கழலல்லாதெனதுள்ளமுணராதே. (௬)

பற்றியொருதலைகையினிலேந்திப்பலிதேரும்
பெற்றியதுவாகித்திரிதேவர்பெருமானார்
சுற்றியொருவேங்கையதளோடும்பிறைசூடும்
நெற்றியொருகண்ணார்நின்றியூரின்னிலையாரே. (எ-அ)

நல்லமலர்மேலானொடுஞாலம்மதுவுண்டான்
அல்லரெனவாவாரெனநின்றும்மறிவரிய
நெல்லின்பொழில்சூழ்ந்தநின்றியூரினனிலையாரெஞ்
செல்வரடியல்லாதெனசிந்தையுணராதே. (௯)

நெறியில்வருபேராவகைநினையாநினைவொன்றை
யறிவில்சமணாதருரைகேட்டுமயராதே
நெறியிலலவர்குறிகண்ணினையாதேநின்றியூரின்
மறியேந்தியகையானடிவாழ்த்தும்மதுவாழ்த்தே. (௧௦)

குன்றமதுவெடுத்தானுடல்தோளுந்நெரிவாக
நின்றங்கொருவிரலாலுறவைததானின்றியூரை
நன்றார்தருபுகலித்தமிழ்ஞானமிகுபந்தன்
குன்றாத்தமிழ்சொல்லக்குறைவின்றிநிறைபுகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர், லட்சுமியீசுவரர், தேவியார், உலகநாயகியம்மை.

திருக்கழுமலம், திருவிராகம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிபடர்சடைமுடியிடைபெருகியபுனலுடையவனிறை
யிறையணிவளையிணைமுலையவளிணைவனதெழிலுடையிடவகை
கறையணிபொழினிறைவயலணிகழுமலமமர்கனலுருவின
னறையணிமலர்நறுவிரைபுல்குநலமலிகழல்தொழுமருவுமே. (௧)

பிணிபடுகடல்பிறவிகளறலெளிதுளததுபெருகியதிரை
அணிபடுகழுமலமினிதமரனலுருவினனவிர்சடைமிசை
தணிபடுகதிர்வளரிளமதிபுனைவனையுமைதலைவனைநிற
மணிபடுகறைமிடறனைநலமலிகழலிணைதொழன்மருவுமே. (உ)

வரியுறுபுலியதளுடையினன்வளர்பிறையொளிகிளர்கதிர்பொதி
விரியுறுசடைவிரைபுரைபொழில்விழவொலிமலிகழுமலமம
ரெரியுறுநிறவிறைவனதடியிரவொடுபகல்பரவுவர்தம
தெரியுறுவினைசெறிகதிர்முனையிருள்கெடநனிநினைவெய்துமதே. (ங)

வினைகெடமனநினைவதுமுடிபெறினனிதொழுதெழுகுலமதி
புனைகொடியிடைபொருடகுபடுகளிறினதுரிபுதையுடலினன
மனைகுடவயிறுடையனசிலவருகுறள்படையுடையவன்மலி
கனைகடலடைகழுமலமமர்கதிர்மதியினனதிகழ்கழல்களே. (ச)

தலைமதிபுனல்விடவரவிவைதலைமையதொருசடையிடையுட
னிலைமருவவோரிடமருளினனிழன்மழுவினொடழல்கணையினன
மலைமருவியசிலைதனின்மதிளெரியுணமனமருவினனல
கலைமருவியபுறவணிதருகழுமலமினிதமர்தலைவனே. (ரு)

வரைபொருதிழியருவிகள்பலபருகொருகடல்வரிமணலிடை
கரைபொருதிரையொலிகெழுமியகழுமலமமர்கனலுருவின
னரைபொருபுலியதளுடையினனடியிணைதொழவருவினையெனு
முரைபொடிபடவுறுதுயர்கெடவுயருலகெய்தலொருதலைமையே. (சு)

முதிருறுகதிர்வளரிளமதிசடையனைநறநிறைதலைதனி
லுதிருறுமயிர்பிணைதவிர்தசையுடைபுலியதளிடையிருள்கடி
கதிருறுசுடரொளிகெழுமியகழுமலமமர்மழுமலிபடை
யதிருறுகழலடிகளதடிதொழுமறிவலதறிவறியமே. (எ)

கடலெனநிறநெடுமுடியவனடுதிறல்தெறவடிசரணென
வடனிறைபடையருளியபுகழரவரையினனணிகிளர்பிறை
விடநிறைமிடறுடையவன்விரிசடையவன்விடையுடையவனுமை
யுடனுறைபதிகடன்மறுகுடையுயர்கழுமலவியனகரதே. (அ)

கொழுமலருறைபதியுடையவனெடியவனெனவிவர்களுமவ
னெழுமையையளவறிகிலரிறைவிரைபுணர்பொழிலணிவிழவமர்
கழுமலமமர்கனலுருவினனடியிணைதொழுமவருவினை
யெழுமையுமிலநிலவகைதனிலெளிதிமையவர்வியனுலகமே. (கூ)

அமையனதுவரிழுகியதுகிலணியுடையினரமணுருவர்கள்
சமையமுமொருபொருளெனுமவைசலநெறியனவறவுரைகளு
மிமையவர்தொழுகழுமலமமரிறைவனதடிபரவுவர்தமை
நமையலவினைநலனடைதலிலுயர்நெறிநனிநணுகுவர்களே. (க0)

பெருகியதமிழ்விரகினன்மலிபெயரவனுறைபிணர்திரையொடு
கருகியநிறவிரிகடலடைகழுமலமுறைவிடமெனநனி
பெருகியசிவனடிபரவியபிணைமொழியனவொருபதுமுடன்
மருவியமனமுடையவர்மதியுடையவர்விதியுடையவர்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கழுமலம் என்பதும், சீகாழிக்கொருபெயர்.

திருவீழிமிழலை - திருவிராகம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தடநிலவியமலைநிறுவியோர்தழலுமிழ்தருபடவரவுகோ
டடலசுரரோடமரர்களலைகடல்கடைவுழியெழுமிகுசின
விடமடைதருமிடறுடையவன்விடைமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. (௧)

தரையொடுதிவிதலநலிதருதகுதிறலுறுசலதரனது
வரையனதலைவிசையொடுவருதிகிரியையரிபெறவருளின
னுரைமலிதருசுரநதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
திரைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே. (௨)

மலைமகடனையிகழ்வதுசெய்தமதியறுசிறுமனவனதுயர்
தலையினொடழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதில்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே. (௩)

மருவலர்புரமெரியினின்மடிதரவொருகணைசெலநிறுவிய
பெருவலியினனலமலிதருகரனுரமிகுபிணமமர்வன
விருளிடையடையுறவொடுநடவிசையுறுபரனினிதுறைபதி
தெருவினில்வருபெருவிழவொலிமலிதரவளர்திருமிழலையே. (௪)

அணிபெறுவடமரநிழலினிலமர்வொடுமடியிணையிருவர்கள்
பணிதரவறநெறிமறையொடுமருளியபரனுறைவிடமொளி
மணிபொருவருமரகதநிலமலிபுனலணைதருவயலணி
திணிபொழில்தருமணமதுநுகரறுபதமுரல்திருமிழலையே. (௫)

வசையறுவலிவனசரவுருவதுகொடுநினைவருதவமுயல்
விசையனதிறன்மலைமகளறிவுறுதிறலமர்மிடல்கொடுசெய்து
அசைவிலபடையருள்புரிதருமவனுறைபதியதுமிகுதரு
திசையினின்மலர்குலவியசெறிபொழின்மலிதருதிருமிழலையே. (௬)

நலமலிதருமறைமொழியொடுநதியுறுபுனல்புகையொளிமுதன்
மலரவைகொடுவழிபடுதிறன்மறையவனுயிரதுகொளவரு
சலமலிதருமறலிதனுயிர்கெடவுதைசெய்தவரனுறைபதி
திலதமிதெனவுலகுகள்புகழ்தருபொழிலணிதிருமிழலையே. (௭)

அரனுறைதிருகயிலையைநிலைகுலைவதுசெய்ததசமுகனது
கரமிருபதுநெரிதரவிரல்நிறுவியகழலடியுடையவன்
வரன்முறையுலகவைதருமலர்வளர்மறையவனவழிவழுவிய
சிரமதுகொடுபலிதிரிதருசிவனுறைபதிதிருமிழலையே. (அ)

அயனொடுமெழிலமர்மலர்மகள்மகிழ்கணனளவிடவொளியவோர்
பயமுறுவகைதழல்நிகழ்வதோர்படியுருவதுவரவரன்முறை
சயசயவெனமிகுதுதிசெயவெளியுருவியவவனுறைபதி
செயநிலவியமதின்மதியதுதவழ்தரவுயர்திருமிழலையே. (௯)

இகழுருவொடுபறிதலைகொடுமிழிதொழின்மலிசமண்விரகினர்
திகழ்துவருடையுடல்பொதிபவர்கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறையுறைபதிபுனலணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகழ்கொடையினர்செறிவொடுதிகழ்திருமிழலையே. (௧௦)

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபது
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம் - திருவிராகம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவிகலையுரைமறைதிரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுநினைவொடுபதுமநன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரநினைபவர்செழுநிலனினில்நிலைபெறுவரே. (௧)

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைநினைவொடுமிகு
மலைகடனடுவெறிதுயிலமரரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதிள்சிவபுரநினைபவர்திருமகளொடுதிகழ்வரே. (௨)

பழுதிலகடல்புடைதழுவியபடிமுதலியவுலகுகண்மலி
குழுவியசுரர்பிறர்மனிதர்கள்குலமலிதருமுயிரவையவை
முழுவதுமழிவகைநினைவொடுமுதலுருவியவரனுறைபதி
செழுமணியணிசிவபுரநகர்தொழுமவர்புகழ்மிகுமுலகிலே. (௩)

நறைமலிதருமளறொடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலைவரே. (௪)

சினமலியறுபகைமிகுபொறிசிதைதருவகைவளிநிறுவிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதகுபரனுறைவதுநகர்மதில்
கனமருவியசிவபுரநினைபவர்கலைமகடரநிகழ்வரே. (௫)

சுருதிகள்பலநலமுதல்கலைதுகளறுவகைபயில்வொடுமிகு
உருவியலுலகவைபுகழ்தரவழியொழுகுமெய்யுறுபொறியொழி
யருதவமுயல்பவர்தனதடியடைவகைநினையரனுறைபதி
திருவருள்சிவபுரநினைபவர்திகழ்குலநிலனிடைநிகழுமே. (௬)

கதமிகுகருவுருவொடுவுகிரிடைவடவரைகணகணவென
மதமிகுநெடுமுகனமர்வளைமதிதிகழெயிறதனுதிமிசை
யிதமமர்புவியதுநிறுவியவெழிலரிவழிபடவருள்செய்த
பதமுடையவனமர்சிவபுரநினைபவர்நிலவுவர்படியிலே. (௭)

அசைவுறுதவமுயல்வினிலயனருளினில்வருவலிகொடுசிவ
னிசைகயிலையையெழுதருவகையிருபதுகரமவைநிறுவிய
நிசிசரன்முடியுடைதரவொருவிரல்பணிகொளுமவனுறைபதி
திசைமலிசிவபுரநினைபவர்செழுநிலனினினிகழ்வுடையரே. (௮)

அடன்மலிபடையரியயனொடுமறிவரியதோரழன்மலிதரு
சுடருருவொடுநிகழ்தரவவர்வெருவொடுதுதியதுசெயவெதிர்
விடமலிகளநுதலமர்கணதுடையுருவெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில்சிவபுரநினைபவர்வழிபுவிதிகழுமே. (௯)

குணமறிவுகணிலையிலபொருளுரைமருவியபொருள்களுமில
திணமெனுமவரொடுசெதுமதிமிகுசமணருமலிதமதுகை
யுணலுடையவருணர்வருபரனுறைதருபதியுலகினில்நல
கணமருவியசிவபுரநினைபவரெழிலுருவுடையவர்களே. (௧௦)

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியிணைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகனதுரைநலமலியொருபதுநவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவுருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புவிவளர்வழியடிமையின்மிகைபுணர்தரநலமிகுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரிநாயகர், தேவியார் - பெரியநாயகியம்மை.

திருமறைக்காடு - திருவிராகம், பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைதனைநடுவிடைநிறுவியோர்சினமலியரவதுகொடுதிவி
தலமலிசுரரசுரர்களொலிசலசலகடல்கடைவுழிமிகு

கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுநுகர்பவனெழின்
மலைமலிமதிள்புடைதழுவியமறைவனமமர்தருபரமனே. (க)

காமுதலியவவயவமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைநினையிமையவர்புரமெழில்பெறவளா
மரநிகர்கொடைமனிதர்கள்பயின்மறைவனமமர்தருபரமனே. (உ)

இழைவளர்தருமுலைமலைமகளினிதுறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுறுமரிமுசிவொடுமெழமுளரியொடெழு
கழைநுகர்தருகரியிரிதருகயிலையின்மலிபவனிருளுறு
மழைதவழ்தருபொழினிலவியமறைவனமமர்தருபரமனே. (௩)

நலமிகுதிருவிதழியினமலர்நகுதலையொடுகனகியின்முகை
பலசுரநதிபடவரவொடுமதிபொதிசடைமுடியினன்மிகு
தலநிலவியமனிதர்களொடுதவமுயல்தருமுனிவர்கடம
மலமறுவகைமனநினைதருமறைவனமமர்தருபரமனே. (௪)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிகுணனுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணா
விதியறிதருநெறியமர்முனிகணனொடுமிகுதவமுயல்தரு
மதிநிபுணர்கள்வழிபடவளாமறைவனமமர்தருபரமனே. (௫)

கறைமலிதிரிசிகைபடையடல்கனமழுவெழுதரவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணிவடமுக
முறைதருகரனுலகினிலுயரொளிபெருவகைநினைவொடுமலா
மறையவன்மறைவழிவழிபடுமறைவனமமர்தருபரமனே. (௬)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலா
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே. (௭)

சனம்வெருவுறவருதசமுகனொருபதுமுடியொடுமிருபது
கனமருவியபுயநெரிவகைகழலடியிலோர்விரனிறுவின
னினமலிகணநிசிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவனமமர்தருபரமனே. (௮)

அணிமலர்மகடலைமகனயனறிவரியதோர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுதுதிசெய்து
பணியுறவெளியுருவியபரனவனுரைமலிகடல்திரளெழு
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (௯)

இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழையொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகயர்தலைபறிசெய்துதவ

முயல்பவர்துவர்படமுடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளைவளமருவியமறைவனமமர்தருபரமனே. (௧௦)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனைநினை
பசைவொடுமிகுகலைபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
விசையமர்கழுமலநகரிறைதமிழ்விரகனதுரையியல்வல
விசைமலிதமிழொருபதும்வலவவருலகினிலெழில்பெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மறைக்காட்டீசுவரர், தேவியார் - யாழைப்பழித்தமொழியம்மை.

திருக்கோலக்கா, பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீ
ழுடையுங்கொண்டவுருவமென்கொலோ. (௧)

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னிக்
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
யுண்டானஞ்சையுலகமுய்யவே. (௨)

பூணற்பொறிகொளரவம்புன்சடைக்
கோணற்பிறையன்குழகன்கோலக்கா
மாணப்பாடிமறைவல்லானையே
பேணப்பறையும்பிணிகளானவே. (௩)

தழுக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மழுக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குழுக்கொள்பூதப்படையான்கோலக்கா
விழுக்காவண்ணமேத்திவாழ்மினே. (௪)

மயிலார்சாயன்மாதோர்பாகமா
வெயிலார்சாயவெரித்தவெந்தைதன்
குயிலார்சோலைக்கோலக்காவையே
பயிலாநிற்கப்பறையும்பாவமே. (௫)

வெடிகொள்வினையைவீட்டவேண்டுவீர்
கடிகொள்கொன்றைகலந்தசென்னியான்
கொடிகொள்விழவார்கோலக்காவுளெம்
மடிகள்பாதமடைந்துவாழ்மினே. (௬)

நிழலார்சோலைநீலவண்டினங்
குழலார்பண்செய்கோலக்காவுளான்
கழலான்மொய்த்தபாதங்கைகளாற்
றொழலார்பக்கற்றுயரமில்லையே. (எ)

எறியார்கடல்சூழிலங்கைக்கோன்றன்னை
முறியார்தடக்கையடர்த்தமூர்த்திதன்
குறியார்பண்செய்கோலக்காவையே
நெறியாற்றொழுவார்வினைகணீங்குமே. (அ)

நாற்றமலர்மேலயனுநாகத்தி
லாற்றலணைமேலவனுங்காண்கிலாக்
கூற்றமுதைத்தகுழகன்கோலக்கா
வேற்றான்பாதமேத்திவாழ்மினே. (௯)

பெற்றமாசுபிறக்குஞ்சமணரு
முற்றதுவர்தோயுருவிலாளருங்
குற்றநெறியார்கொள்ளார்கோலக்காப்
பற்றிப்பரவப்பறையும்பாவமே. (௧௦)

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா
ருலங்கொள்வினைபோயோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சத்தபுரீசர், தேவியார் - ஓசைகொடுத்தநாயகியம்மை.

சீகாழி, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர்
காவாயெனநின்றேத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம்
பாவாரின்சொற்பயிலும்பரமரே. (௧)

எந்தையென்றங்கிமையோர்புகுந்தீண்டிக
கந்தமாலைகொடுசேர்காழியார்
வெந்தநீற்றர்விமலரவர்போலா
மந்திநட்டமாடுமடிகளே. (௨)

தேனைவென்றமொழியாளொருபாகங்
கானமான்கைக்கொண்டகாழியார்

வானமோங்குகோயிலவர்போலா
மானவின்பமாமடிகளே. (௩)

மாணுவென்றிக்காலன்மடியவே
காணுமாணிக்களித்தகாழியார்
நாணுர்வாளிதொட்டாரவர்போலாம்
பேணுர்புரங்களட்டபெருமானே. (௪)

நாடேயோதமெறியவயற்செந்நெற்
காடேறிச்சங்கீனுங்காழியார்
வாடாமலராள்பங்கரவர்போலா
மேடார்புரமூன்றெரித்தவிறைவரே. (௫)

கொங்குசெருந்திகொன்றைமலர்கூடக்
கங்கைபுனைந்தசடையார்காழியா
ரங்கணரவமாட்டுமவர்போலாஞ்
செங்கணரக்கர்புரத்தையெரித்தாரே. (௬)

கொல்லைவிடைமுன்பூதங்குனித்தாடுங்
கல்லவடத்தையுகப்பார்காழியா
ரல்லவிடத்துநடந்தாரவர்போலாம்
பல்லவிடத்தும்பயிலும்பரமரே. (௭)

எடுத்தவரக்கனெரியவிரலூன்றிக்
கடுத்துமுரியவடர்த்தார்காழியா
ரெடுத்தபாடற்கிரங்குமவர்போலாம்
பொடிக்கொணீறுபூசும்புனிதரே. (௮)

ஆற்றலுடையவரியும்பிரமனுந்
தோற்றங்காணுவென்றிக்காழியா
ரேற்றமேறங்கேறுமவர்போலாங்
கூற்றமறுகக்குமைத்தகுழகரே. (௯)

பெருக்கப்பிதற்றுஞ்சமணர்சாக்கியர்
கரக்குமுரையைவிட்டார்காழியா
ரிருக்கின்மலிந்தவிறைவரவர்போலா
மருப்பினமுலையாள்பங்கத்தையரே. (௰)

காரார்வயல்சூழ்காழிக்கோன்றனைச்
சீரார்ஞானசம்பந்தன்சொன்ன
பாரார்புகழப்பரவவல்லவ
பேரார்வானத்தினிதாவிருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்செம்பொன்பள்ளி, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களை
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. (௧)

வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய
வேரார்புரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. (௨)

வரையார்சந்தோடகிலும்வருபொன்னித்
திரையார்செம்பொன்பள்ளிமேவிய
நரையார்விடையொன்றூரும்நம்பனை
யுரையாதவர்மேலொழியாவூனமே. (௩)

மழுவாளேந்திமாதோர்பாகமாய்ச்
செழுவார்செம்பொன்பள்ளிமேவிய
வெழிலார்புரிபுன்சடையெம்மிறைவனைத்
தொழுவார்தம்மேற்றுயரமில்லையே. (௪)

மலையார்மகளோடுடனாய்மதிலெய்த
சிலையார்செம்பொன்பள்ளியானையே
யிலையார்மலர்கொண்டெல்லிநண்பகல்
நிலையாவணங்கநில்லாவினைகளே. (௫)

அறையார்புனலோடகிலும்வருபொன்னிச்
சிறையார்செம்பொன்பள்ளிமேவிய
கறையார்கண்டத்தீசன்கழல்களை
நிறையால்வணங்கநில்லாவினைகளே. (௬)

பையாரரவேரல்குலாளொடுஞ்
செய்யார்செம்பொன்பள்ளிமேவிய
கையார்சூலமேந்துங்கடவுளை
மெய்யால்வணங்கமேவாவினைகளே. (௭)

வானார்திங்கள்வளர்புன்சடைவைத்துத்
தேனார்செம்பொன்பள்ளிமேவிய
வூனார்தலையிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானைக்கழலேயடைந்துவாழ்மினே. (௮)

காரார்வண்ணன்கனகமனையானுந்
தேரார்செம்பொன்பள்ளிமேவிய

நீரார்நிமிர்புன்சடையெந்நிமலனை
யோராதவர்மேலொழியாவூனமே. (௯)

மாசாருடம்பர்மண்டைத்தேரரும்
பேசாவண்ணம்பேசித்திரியவே
தேசார்செம்பொன்பள்ளிமேவிய
வீசாவென்னநில்லாவிடர்களே. (௧௦)

நறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்
துறுமாசொல்லவோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சொர்ணபுரீசர், தேவியார் - சுகந்தவனநாயகியம்மை.

திருப்புத்தூர், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலைத்
திங்களோடுதிளைக்குந்திருப்புகதூர்
கங்கைதங்குமுடியாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (௧)

வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூ
ரூனமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளுமெயிறும்புனைவாரே. (௨)

பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதிளைக்குந்திருப்புத்தூ
ரோங்குகோயிலுறைவாரவர்போலுந்
தாங்குதிங்கடவழ்புன்சடையாரே. (௩)

நாறவிண்டநறுமாமலர்கவ்வித்
தேறல்வண்டுதிளைக்குந்திருப்புத்தூ
ரூறல்வாழ்க்கையுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (௪)

இசைவிளங்குமெழில்சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்குபொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்நுதலாரே. (௫)

வெண்ணிறத்தவிரையோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (௬)

நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கள்மல்குசிவனார்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (௭)

கருக்கமெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்லவிறைவரவர்போலு
மரக்கனொல்கவிரலாலடர்த்தாரே. (௮)

பருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுந்திளைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (௯)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூறல்
தேறல்வேண்டாதெளிமின்திருப்புத்தூ
ராறுநான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (௧௦)

நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லல்தீருமவலமடையாவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - புத்தூரீசர், தேவியார் - சிவகாமியம்மை.

திருப்புன்கூர், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனார்திருப்புன்கூ
ரந்தமில்லாவடிகளவர்போலுங்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. (௧)

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூ

ராவரென்னுமடிகளவர்போலு
மேவினல்லாரெயில்மூன்றெரித்தாரே. (௨)

பங்கயங்கள்மலரும்பழனத்துச்
செங்கயல்கள்இளைக்குந்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (௩)

கரையுலாவுகதிர்மாமணிமுத்தம்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூ
ருரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (௪)

பவளவண்ணபருசர்திருமே
திகழும்வண்ணமுறையுந்திருபபுனகூ
ரழகரென்னுமடிகளவர்போலும
புகழநின்றபுரிபுன்சடையாரே (௫)

தெரிந்திலங்குகழுநீர்வயற்செந்நெல்
திருந்தநின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்திநின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (௬)

பாரும்விண்ணும்பரவித்தொழுதேத்துந்
தேர்கொள்வீதிவிழவார்திருப்புன்கூ
ராரநின்றவடிகளவர்போலுங்
கூரநின்றவெயின்மூன்றெரித்தாரே. (௭)

மலையதனாருடையமதின்மூன்றுஞ்
சிலையதனாலெரித்தார்திருப்புன்கூர்த்
தலைவர்வல்லவரக்கன்றருக்கினை
மலையதனாலடர்த்துமகிழ்ந்தாரே. (௮)

நாடவல்லமலரானுமாலுமாய்த்
தேடநின்றாருறையுந்திருப்புன்கூ
ராடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (௯)

குண்டுமுற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிராந்தர்சொற்கொளேல்
வண்டுபாடமலரார்திருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்கபாலிவேடமே. (௧௦)

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்

நாடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சிவலோகநாதர், தேவியார் - சொக்கநாயகியம்மை.

திருச்சோற்றுத்துறை, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்பநெஞ்சேநெறிகொள்சிற்றின்பந்
துப்பனென்னாதருளேதுணையாக
வொப்பரொப்பர்பெருமானொளிவெண்ணீற
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௧)

பாலுநெய்யுந்தயிரும்பயின்றாடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்
மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
யாலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௨)

செய்யர்செய்யசடையார்விடையூர்வர்
கைகொள்வேலர்கழலர்கரிகாடர்
தையலாளோர்பாகமாயவெம்
மையர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௩)

பிணிகொளாக்கையொழியப்பிறப்புளீர்
துணிகொள்போரார்துளங்குமழுவாளர்
மணிகொள்கண்டர்மேயவார்பொழி
லணிகொள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௪)

பிறையும்மரவும்புனலுஞ்சடைவைத்து
மறையுமோதிமயானமிடமாக
வுறையுஞ்செல்வமுடையார்காவிரி
யறையுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௫)

துடிகளோடுமுழவம்விம்மவே
பொடிகொள்பூசிப்புறங்காடரங்காகப்
படிகொள்பாணிபாடல்பயின்றாடு
மடிகள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௬)

சாடிக்காலன்மாளத்தலைமாலை
சூடிமிக்குச்சுவண்டாய்வருவார்தாம்
பாடியாடிப்பரவுவாருள்ளத்
தாடிசோற்றுத்துறைசென்றடைவோமே.

பெண்ணோர்பாகமுடையார்பிறைச்சென்னிக்
கண்ணோர்பாகங்கலந்தநுதலினு
ரெண்ணாதாரக்கனெடுக்கவூன்றிய
வண்ணல்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௮)

தொழுவாரிருவர்துயரநீங்கவே
யழலாயோங்கியருள்கள்செய்தவன
விழவார்மறுகில்விதியால்மிகக
வெழிலார்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௯)

கோதுசாற்றித்திரிவாரமண்குண்ட
ரோதுமோத்தையுணராதெழுநெஞ்சே
நீதிநின்றுநினைவாரவேடமா
மாதிசோற்றுத்துறைசென்றடைவோமே (௰)

அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச
சிந்தைசெய்மினடியிராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன
வந்தவாறேபுனைதல்வழிபாடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - தொலையாச்செல்வர், தேவியார் - ஒப்பிலாம்பிகையம்மை.

திருநறையூர்ச்சித்தீச்சரம், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரிற்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (௧)

காடுநாடுங்கலக்கப்பலிநண்ணி
யோடுங்கங்கையொளிர்புன்சடைதாழ
வீடமாகமறையோர்நறையூரில
நீடுஞ்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (௨)

கல்வியாளர்கனகமழன்மேனி
புல்குகங்கைபுரிபுன்சடையானூர்
மல்குதிங்கட்பொழில்சூழ்நறையூரிற்
செல்வர்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (௩)

நீடவல்லவிமிர்புன்சடைதாழ
வாடவல்லவடிகளிடமாகும்
பாடல்வண்டுபயிலுநறையூரிற்
சேடர்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ச)

உம்பராலுமுலகினவராலுந்
தம்பெருமையளத்தற்கரியானூர்
நண்புலாவுமறையோர்நறையூரிற்
செம்பொன்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ரு)

கூருலாவுபடையான்விடையேறிப்
போருலாவுமழுவானனலாடி
பேருலாவுபெருமானறையூரிற்
சேருஞ்சித்தீச்சரமேயிடமாமே. (சு)

* அன்றிநின்றவவுணர்புரமெய்த
வென்றிவில்லிவிமலன்விரும்புமூர்
மன்றில்வாசமணமார்நறையூரிற்
சென்றுசித்தீச்சரமேதெளிநெஞ்சே. (எ)

அரக்கனாண்மையழியவரைதன்னால்
நெருக்கவூன்றுமவிரலான்விரும்புமூர்
பரக்குநீர்த்தியுடையார்நறையூரிற்
றிருக்கொள்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

ஆழியானுமலரினுறைவானு
மூழிநாடியுணரார்திரிந்துமேற்
சூழுநேடவெரியாமொருவன்சீர்
நீழல்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (௯)

மெய்யின்மாசர்விரிநுண்டுகிலினார்
கையிலுண்டுகழறுமுறைகொள்ளே
லுய்யவேண்டிலிறைவனறையூரிற்
செய்யுஞ்சித்தீச்சரமேதவமாமே. (௧0)

மெத்துலாவுமறையோர்நறையூரிற்
சித்தன்சித்தீச்சரத்தையுயர்காழி
யத்தன்பாதமணிஞானசம்பந்தன
பத்தும்பாடப்பறையும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சித்தநாதேசர், தேவியார் - அழகாம்பிகையம்மை.

*அன்றிநின்ற - பகைத்துநின்ற.

ஸ்ரீபுகலி, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விதியாய்விளையாய்விளைவின்பயனாகிக்
கொதியாவருகூற்றுதைத்தவர்சேரும்
பதிபாவதுபங்கயநின்றலரத்தேன்
பொதியார்பொழில்சூழ்புகலிந்நகர்தானே. (௧)

ஒன்னார்புரமூன்றுமெரித்தவொருவன்
மின்னாரிடையாளொடுங்கூடியவேடம்
தன்னாலுறைவாவதுதண்கடல்சூழ்ந்த
பொன்னார்வயற்பூம்புகலிந்நகர்தானே. (௨)

வலியின்மதிசெஞ்சடைவைத்தமணாளன்
புலியின்னதள்கொண்டரையார்த்தபுனிதன்
மலியும்பதிமாமறையோர்நிறைந்தீண்டிப்
பொலியும்புனற்பூம்புகலிந்நகர்தானே. (௩)

கயலார்தடங்கண்ணியொடும்மெருதேறி
யயலார்கடையிற்பலிகொண்டவழக
னியலாலுறையும்மிடமெண்டிசையோர்க்கும்
புயலார்கடற்பூம்புகலிந்நகர்தானே. (௪)

காதார்கனபொற்குழைதோடதிலங்கத்
தாதார்மலர்தண்சடையேறமுடித்து
* நாதானுறையும்மிடமாவதுநாளும்
போதார்பொழிற்பூம்புகலிந்நகர்தானே. (௫)

வலமார்படைமான்மழுவேந்தியமைந்தன்
கலமார்கடனஞ்சமுண்டகருத்தன்
குலமார்பதிகொன்றைகள்பொன்சொரியத்தேன்
புலமார்வயற்பூம்புகலிந்நகர்தானே. (௬)

கறுத்தான்கனலால்மதின்மூன்றையும்வேவச்
செறுத்தான்றிகழுங்கடனஞ்சமுதாக
வறுத்தானயன்றன்சிரமைந்திலுமொன்றைப்
பொறுத்தானிடம்பூம்புகலிந்நகர்தானே. (௭)

தொழிலான்மிகுதொண்டர்கள்தோத்திரஞ்சொல்ல
வெழிலார்வரையாலன்றரக்கனைச்செற்ற
கழலானுறையும்மிடங்கண்டல்கண்மிண்டிப்
பொழிலான்மலிபூம்புகலிந்நகர்தானே. (௮)

மாண்டார்சுடலைப்பொடிப்பூசிமயானத்
தீண்டாநடமாடியவேந்தன்றன்மேனி
நீண்டானிருவர்க்கெரியாயரவாரம்
பூண்டானகர்பூம்புகலிந்நகர்தானே. (௯)

உடையார்துகில்போர்த்துழல்வார்சமண்கைய
ரடையாதனசொல்லுவராதர்களோத்தைக்
கிடையாதவன்றன்னகர்நன்மணிபூகம்
புடையார்தருபூம்புகலிந்நகர்தானே. (௧௦)

இரைக்கும்புனல்செஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிந்நகர்தன்மே
லுரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனொண்மாலை
வரைக்குந்தொழில்வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்குரங்கணின்முட்டம், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்குங்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயுங்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. (௧)

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குளத்தோங்கியகாட்டிற்
குடையார்புனல்மல்குகுரங்கணின்முட்ட
முடையானெனையாளுடையெந்தைபிரானே. (௨)

சூலப்படையானவிடையான்சுடுநீற்றான்
காலன்றனையாருயிர்வவ்வியகாலன்
கோலப்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டத்
தேலங்கமழ்புன்சடையெந்தைபிரானே. (௩)

வாடாவிரிகொன்றைவலத்தொருகாதிற்
றோடார்குழையானலபாலனைநோக்கி
கூடாதனசெய்தகுரங்கணின்முட்ட
மாடாவருவாரவரன்புடையாரே. (௪)

இறையார்வளையாளையோர்பாகத்தடக்கிக்
கறையார்மிடற்றான்கரிகீறியகையான்
குறையார்மதிசூடிகுரங்கணின்முட்டத்
துறைவானெமையாளுடையொண்சுடரானே. (௫)

பலவும்பயனுள்ளனபற்றுமொழிந்தோங்
கலவம்மயில்காமுறுபேடையோடாடிக்
குலவும்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
நிலவும்பெருமானடிநித்தல்நினைந்தே. (௬)

மாடார்மலர்க்கொன்றைவளர்சடைவைத்துத்
தோடார்குழைதானொருகாதிலிலங்கக்
கூடார்மதிலெய்துகுரங்கணின்முட்டத்
தாடாரரவம்மரையார்த்தமர்வானே. (௭)

மையார்நிறமேனியரக்கர்தங்கோனை
யுய்யாவகையாலடர்த்தின்னருள்செய்த
கொய்யார்மலர்சூடிகுரங்கணின்முட்டங்
கையாற்றொழுவார்வினைகாண்டலரிதே. (௮)

வெறியார்மலர்த்தாமரையானொடுமாலு
மறியாதசைந்தேத்தவோராரழலாகுங்
குறியாநிமிர்ந்தான்றன்குரங்கணின்முட்டந்
நெறியாற்றொழுவார்வினைநிற்கிலவே. (௯)

கழுவார்துவராடைகலந்துமெய்போர்க்கும்
வழுவாச்சமண்சாக்கியர்வாக்கவைகொள்ளேல்
குழுமின்சடையண்ணல்குரங்கணின்முட்டத்
தொழில்வெண்பிறையானடிசேர்வதியல்வே. (௧௦)

கல்லாமதிட்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லாமழுவேந்திகுரங்கணின்முட்டஞ்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வாலீசுவரர், தேவியார் - இறையார்வளையம்மை.

திருஇடைமருது, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை
காடேயிடமாவதுகல்லானிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்து
ஈடாவுறைகின்றவிடைமருதீதோ. (௧)

தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்

படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (௨)

வெண்கோவணங்கொண்டொருவெண்டலையேந்தி
யங்கோல்வளையாளையோர்பாகமமர்ந்து
பொங்காவருகாவிரிக்கோலக்கரைமே
லெங்கோனுறைகின்றவிடைமருதீதோ. (௩)

அந்தம்மறியாதவருங்கலமுந்திக்
கந்தங்கமழ்காவிரிக்கோலக்கரைமேல்
வெந்தபொடிப்பூசியவேதமுதல்வ
னெந்தையுறைகின்றவிடைமருதீதோ. (௪)

வாசங்கமழ்மாமலர்ச்சோலையில்வண்டே
தேசம்புகுந்தீண்டியோர்செம்மையுடைத்தாய்ப்
பூசம்புகுந்தாடிப்பொலிந்தழகாய
வீசனுறைகின்றவிடைமருதீதோ. (௫)

வன்புற்றிளநாகமசைத்தழகாக
வென்பிற்பலமாலையும்பூண்டெருதேறி
யன்பிற்பிரியாதவளோடுமுடனா
யின்புற்றிருந்தான்றனிடைமருதீதோ. (௬)

தேக்குந்திமிலும்பலவுஞ்சுமந்துந்திப்
போக்கிப்புறம்பூசலடிப்பவருமா
லார்க்குந்திரைக்காவிரிக்கோலக்கரைமே
லேற்கவிருந்தான்றனிடைமருதீதோ. (௭)

பூவார்குழலாரகில்கொண்டுபுகைப்ப
வோவாதடியாரடியுள்குளிர்ந்தேத்த
வாவாவரக்கன்றனையாற்றலழித்த
வேவார்சிலையான்றனிடைமருதீதோ. (௮)

முற்றாததோர்பான்மதிசூடுமுதல்வ
னற்றாமரையானொடுமால்நயந்தேத்தப்
பொற்றோளியுந்தானும்பொலிந்தழகாக
வெற்றேயுறைகின்றவிடைமருதீதோ. (௯)

சிறுதேரருஞ்சிலசமணும்புறங்கூற
நெறியேபலபத்தர்கள்கைதொழுதேத்த
வெறியாவருகாவிரிக்கோலக்கரைமே
லெறியார்மழுவாளனிடைமருதீதோ. (௧0)

கண்ணார்கமழ்காழியுண்ஞானசம்பந்த
னெண்ணார்புகழெந்தையிடைமருதின்மேற்

பண்ணோடிசைபாடியபத்தும்வல்லார்கள்
விண்ணோருலகத்தினில்வீற்றிருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருதீசர், தேவியார் - நலமுலைநாயகியம்மை.

திரு அன்பிலாலந்துறை, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
இணையாவெயில்மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. (௧)

சடையார்சதிரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைகிளை
யடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. (௨)

ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே. (௩)

பிறையும்மரவும்முறவைத்தமுடிமேல்
நறையுண்டெழுவன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோதவொலிசென்
றறையும்புனலன்பிலாலந்துறையாரே. (௪)

நீடும்புனற்கங்கையுந்தங்கமுடிமேற்
கூடும்மலையாளொருபாகமமர்ந்தார்
மாடும்முழவம்மதிரம்மடமாத
ராடும்பதியன்பிலாலந்துறையாரே. (௫)

நீறார்திருமேனியருணமிலார்பா
லூறார்சுவையாகியவும்பர்பெருமான்
வேறாரகிலும்மிகுசந்தனமுந்தி
யாறாவயலன்பிலாலந்துறையாரே. (௬)

செடியார்தலையிற்பலிகொண்டினிதுண்ட
படியார்பரமன்பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல்தூவிநின்றேத்து
மடியார்தொழுமன்பிலாலந்துறையாரே. (௭)

விடத்தார்திகழுமிடற்றன்னடமாடி
படத்தாரரவம்விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக்கோன்வரையார
வடர்த்தாரருளன்பிலாலந்துறையாரே. (௮)

வணங்கிம்மலர்மேலயனுநெடுமாலும்
பிணங்கியறிகின்றிலாமற்றும்பெருமை
சுணங்கும்முகத்தம்முலையாளொருபாக
மணங்குந்திகழன்பிலாலந்துறையாரே. (௯)

தறியார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
நெறியாவுணராநிலைகேடினர்நித்தல்
வெறியார்மலர்கொண்டடிவீழுமவரை
யறிவாரவரன்பிலாலந்துறையாரே. (௧௦)

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேல்
கரவாதவர்காழியுள்ஞானசம்பந்தன
பரவார்தமிழ்ப்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சத்திவாகீசர், தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

சீகாழி, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அடலேறமருங்கொடியண்ணல், மடலார்குழலாளொடுமன்னுங்
கடலார்புடைசூழ்தருகாழி, தொடர்வாரவர்தூநெறியாரே. (௧)

திரையார்புனல்சூடியசெல்வன், வரையார்மகளோடுமகிழ்ந்தான்
கரையார்புனல்சூழ்தருகாழி, நிரையார்மலர்தூவுமினன்றே. (௨)

இடியார்குரலேறுடையெந்தை, துடியாரிடையாளொடுதுன்னுங்
கடியார்பொழில்சூழ்தருகாழி, யடியாரறியாரவலம்மே. (௩)

ஒளியார்விடமுண்டவொருவன், அளியார்குழன்மங்கையொடன்பாய்
களியார்பொழில்சூழ்தருகாழி, யெளிதாமதுகண்டவரின்பே. (௪)

பனியார்மலரார்தருபாதன், முனிதானுமையோடுமுயங்கிக்
கனியார்பொழில்சூழ்தருகாழி, யினிதாமதுகண்டவரீடே. (௫)

கொலையார்தருகூற்றமுதைத்து, மலையான்மகளோடுமகிழ்ந்தான்
கலையார்தொழுதேத்தியகாழி, தலையாற்றொழுவார்தலையாரே. (௬)

திருவார்சிலையாலெயிலெய்து, உருவாருமையோடுடனானான்
கருவார்பொழில்சூழ்தருகாழி, மருவாதவர்வான்மருவாரே.

அரக்கன்வலியொல்கவடர்த்து, வரைக்குமகளோடுமகிழ்ந்தான்
சுரக்கும்புனல்சூழ்தருகாழி, நிரக்குமலர்தூவுநினைந்தே, (அ)

இருவர்க்கெரியாகிநிமிர்ந்தா, னுருவிற்பெரியாளொடுசேருங்
கருநற்பரவைகமழ்காழி, மருவப்பிரியும்வினைமாய்ந்தே. (கூ)

சமண்சாக்கியர்தாமலர்தூற்ற, வமைந்தானுமையோடுடனன்பாய்க்
கமழ்ந்தார்பொழில்சூழ்தருகாழி, சுமந்தார்மலர்தூவுதல்தொண்டே. (க0)

நலமாகியஞானசம்பந்தன், கலமார்கடல்சூழ்தருகாழி
நிலையாகநினைந்தவர்பாடல், வலரானவர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார்விரிகோவணவாடை, நரையார்விடையூர்தியுகந்தான்
விரையார்பொழில்வீழிம்மிழலை, யுரையாலுணர்வாருயர்வாரே. (க)

புனைதல்புரிபுன்சடைதன்மேற், கனைதல்லொருகங்கைகரந்தான
வினையில்லவர்வீழிம்மிழலை, நினைவில்லவர்நெஞ்சமுநெஞ்சே. (உ)

அழவல்லவராடியும்பாடி, யெழவல்லவரெந்தையடிமேல்
விழவல்லவர்வீழிம்மிழலை, தொழவல்லவர்நல்லவர்தொண்டே. (௩)

உரவம்புரிபுன்சடைதன்மே, லரவம்மரையார்த்தவழகன்
விரவும்பொழில்வீழிம்மிழலை, பரவும்மடியாரடியாரே. (ச)

கரிதாகியநஞ்சணிகண்டன், வரிதாகியவண்டறைகொன்றை
விரிதார்பொழில்வீழிம்மிழலை, யுரிதாநினைவாருயர்வாரே. (ரு)

சடையார்பிறையான்சரிபூதப், படையான்கொடிமேலதோர்பைங்கண்
விடையானுறைவீழிம்மிழலை, யடைவாரடியாரவர்தாமே. (சா)

செறியார்கழலுஞ்சிலம்பார்க்க, நெறியார்குழலாளொடுநின்றான்
வெறியார்பொழில்வீழிம்மிழலை, யறிவாரவலம்மறியாரே. (எ)

உளையாவலியொல்கவரக்கன, வளையாவிரலூன்றியமைந்தன்
விளையார்வயல்வீழிம்மிழலை, யளையாவருவாரடியாரே. (அ)

மருள்செய்திருவர்மயலாக, வருள்செய்தவனாரழலாகி
வெருள்செய்தவன்வீழிம்மிழலை, தெருள்செய்தவர்தீவினைதேய்வே. (கூ)

துளங்கும்நெறியாரவர்தொன்மை, வளங்கொள்ளன்மின்புல்லமண்டேரை
விளங்கும்பொழில்வீழிம்மிழலை, யுளங்கொள்பவர்தம்வினையோய்வே. (க0)

நளிர்காழியுண்ஞானசம்பந்தன், குளிரார்சடையானடிகூற
ார்பொழில்வீழிம்மிழலை, கிளர்பாடல்வல்லார்க்கில்லைகேடே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருவையாறு, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடுரநீருந், நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசந்தோ, டலையார்புனல்சேருமையாறே. (௧)

மதியொன்றியகொன்றைவடத்தன், மதியொன்றவுதைத்தவர்வாழ்வும்
மதியின்னொடுசேர்கொடிமாடம், மதியம்பயில்கின்றவையாறே. (௨)

கொக்கின்னிறகின்னொடுவன்னி, புக்கசடையார்க்கிடமாகுந்
திக்கின்னிசைதேவர்வணங்கும், அக்கின்னரையாரதையாறே. (௩)

சிறைகொண்டபுரம்மவைசிந்தக், கறைகொண்டவர்காதல்செய்கோயில்
மறைகொண்டநல்வானவர்தம்மி, லறையும்மொலிசேருமையாறே. (௪)

உமையாளொருபாகமதாகச், சமைவாரவர்சார்விடமாகும்
அமையாருடல்சோர்தரமுத்தம், அமையாவருமந்தணையாறே. (௫)

தலையின்றொடைமாலையணிந்து, கலைகொண்டதோர்கையினர்சேர்வாம்
நிலைகொண்டமனத்தவர்நித்தம், மலர்கொண்டுவணங்குமையாறே. (௬)

வரமொன்றியமாமலரோன்றன், சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரைநின்றிழிவார்தருபொன்னி, யரவங்கொடுசேருமையாறே. (௭)

வரையொன்றதெடுத்தவரக்கன், சிரமங்கநெரித்தவர்சேர்வு
விரையின்மலர்மேதகுபொன்னித், திரைதன்னொடுசேருமையாறே. (௮)

சங்கத்தயனுமறியாமைப், பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு, அங்கிக்கெதிர்காட்டுமையாறே. (௯)

துவராடையர்தோலுடையார்கள், கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையானோ, டவர்தாமணையந்தணையாறே. (௧௦)

கலையார்கலிக்காழியர்மன்னன், நலமாகியஞானசம்பந்தன
னலையார்புனல்சூழுமையாற்றைச், சொல்லுமாலைவல்லார்துயர்வீடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்பொன்சோதீசுவரர், தேவியார் - அறம்வளர்த்தநாயகியம்மை.

திருப்பனையூர், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேல்மதிமத்தம், விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்களோடும், பரவிப்பொலியும்பனையூரே. (௧)

எண்ணொன்றிநினைந்தவர்தம்பா, லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு, பண்ணின்றொலிசெய்பனையூரே. (௨)

அலரும்மெறிசெஞ்சடைதன்மேல், மலரும்பிறையொன்றுடையானூர்
சிலரென்றுமிருந்தடிபேணப், பலரும்பரவும்பனையூரே. (௩)

இடியார்கடனஞ்சமுதுண்டு, பொடியாடியமேனியினானூ
ரடியார்தொழமன்னவரேத்தப், படியார்பணியும்பனையூரே. (௪)

அறையார்கழல்மேலரவாட, விறையார்பலிதேர்ந்தவனூராம்
பொறையார்மிகுசீர்விழமல்கப், பறையாரொலிசெய்பனையூரே. (௫)

அணியார்தொழவல்லவரேத்த, மணியார்மிடறொன்றுடையானூர்
தணியார்மலர்கொண்டிருபோதும், பணிவார்பயிலும்பனையூரே. (௬)

அடையாதவர்மூவெயில்சீறும், விடையான்விறலார்கரியின்றோ
லுடையானவனெண்பலபூதப், படையானவனூர்பனையூரே. (௭)

இலகும்முடிபத்துடையானை, யலல்கண்டருள்செய்தவெம்மண்ண
லுலகில்லுயிர்நீர்நிலமற்றும், பலகண்டவனூர்பனையூரே. (௮)

வரமுன்னிமகிழ்ந்தெழுவீர்காள், சிரமுன்னடிதாழவணங்கும்
பிரமன்னொடுமாலறியாத, பரமன்னுறையும்பனையூரே. (௯)

அழிவல்லமணரொடுதேரர், மொழிவல்லனசொல்லியபோதும்
மிழிவில்லதோர்செம்மையினானூர், பழியில்லவர்சேர்பனையூரே. (௧௦)

பாராரவிடையான்பனையூர்மேற், சீராரதமிழ்ஞானசம்பந்த
னாராதசொன்மாலைகள்பத்தும், மூரூர்நினைவாருயர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சவுந்தரேசர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருமயிலாடுதுறை, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன்மாமலர்கொண்டே, யிரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையான்வாழ், வரமாமயிலாடுதுறையே. (௧)

உரவெங்கரியினுரிபோர்த்த, பரமன்னுறையும்பதியென்பர்
குரவஞ்சுரபுன்னையும்வன்னி, மருவும்மயிலாடுதுறையே. (௨)

ஊனத்திருணீங்கிடவேண்டில், ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தேனொத்தினியானமருஞ்சேர், வானம்மயிலாடுதுறையே. (௩)

அஞ்சொண்புலனும்மவைசெற்ற, மைஞ்சன்மயிலாடுதுறையை
நெஞ்சொன்றிநினைந்தெழுவார்மேற், றுஞ்சும்பிணியாயினதானே. (௪)

தணியார்மதிசெஞ்சடையான்றன், னணியாகவருக்கருளென்றும்
பிணியாயினதீர்த்தருள்செய்யும், மணியான்மயிலாடுதுறையே. (௫)

தொண்டரிசைபாடியுங்கூடிக், கண்டுதுதிசெய்யவனூராம்
பண்டும்பலவேதியரோத, வண்டார்மயிலாடுதுறையே. (௬)

அணங்கோடொருபாகமமர்ந்து, இணங்கியருள்செய்தவனூராம
நுணங்கும்புரிநூலர்கள்கூடி, வணங்கும்மயிலாடுதுறையே. (௭)

சிரங்கையினிலேந்தியிரந்து, பரங்கொள்பரமேட்டிவரையா
லரங்கவ்வரக்கன்வலிசெற்ற, வரங்கொண்மயிலாடுதுறையே (௮)

ஞாலத்தைநுகர்ந்தவனோடும், கோலத்தயனுமறியாத
சீலத்தவனூர்சிலர்கூடி, மாலைத்தீர்மயிலாடுதுறையே. (௯)

நின்றுண்சமணுநெடுந்தேரர், ஒன்றுமமறியாமையுயர்ந்த
வென்றியருளாளவனூராம, மன்றன்மயிலாடுதுறையே. (௧0)

நயர்காழியுள்ஞானசம்பந்தன, மயல்தீர்மயிலாடுதுறைமேற்
செயலாலுரைசெய்தனபத்தும், உயர்வாமிவையுற்றுணர்வார்க்கே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர் - மாயூரநாதர், தேவியார் - அருசகாயகியம்மை.

திருவேட்களம், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமலைமகள்காணநின்றாடிச்
சந்தமிலங்குநகுதலைகங்கைதண்மதியமயலேததும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசும்வேட்களநன்னகராரே. (௧)

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்கவெண்டோடுசரிந்திலங்கப்
புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாறிவர்போல்வா
ருடைதனில்நால்விரற்கோவணவாடையுண்பதுமூரிடுபிச்சைவெள்ளை
விடைதனையூர்திநயந்தார்வேட்களநன்னகராரே. (௨)

பூதமும்பல்கணமும்புடைசூழப்பூமியும்விண்ணுமுடன்பொருந்தச்
சீதமும்வெம்மையுமாகிச்சீரொடுநின்றவெஞ்செல்வ
ரோதமுங்கானலுஞ்சூழ்தருவேலையுள்ளங்கலந்திசையாலெழுந்த
வேதமும்வேள்வியுமோவாவேட்களநன்னகராரே. (௩)

அரைபுல்குமைந்தலையாடலரவமமையவெண்கோவணத்தோடசைத்து
வரைபுல்குமார்பிலோராமைவாங்கியணிந்தவர்தாம்
திரைபுல்குதெண்கடற்றண்கழியோதந்தேனலங்கானலில்வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழிற்சூழ்ந்தவேட்களநன்னகராரே. (௪)

பண்ணுறுவண்டறைகொன்றையலங்கல்பால்புரைநீறுவெண்ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர்பேணார்மும்மதிளெய்தபெருமான்

கண்ணுறுநெற்றிகலந்தவெண்டிங்கட்கண்ணியர்விண்ணவர்கைதொழுதேத்தும்
வெண்ணிறமால்விடையண்ணல்வேட்களநன்னகராரே. (ரு)

கறிவளர்குன்றமெடுத்தவன்காதற்கண்கவரைங்கணையோனுடலம்
பொறிவளராரழலுண்ணப்பொங்கியபூதபுராணா
மறிவளரங்கையர்மங்கையோர்பங்கர் மைஞ்ஞிறமானுரித்தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந்தாராரவேட்களநன்னகராரே. (சு)

மண்பொடிக்கொண்டெரித்தோர்சுடலைமாமலைவேந்தன்மகள்மகிழ
நுண்பொடிச்சேரநின்றாடிநொய்யனசெய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலையோடுகையேந்திக்காலனைக்காலாற்கடந்துகந்தார்
வெண்பொடிச்சேர்திருமார்பர்வேட்களநன்னகராரே. (எ)

ஆழ்தருமால்கடனஞ்சினையுண்டாரமுதமமரர்க்கருளிச்
சூழ்தருபாம்பரையார்த்துச்சூலமோடொண்மழுவேந்தித்
தாழ்தருபுன்சடையொன்றினைவாங்கித்தண்மதியம்மயலேததும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்களநன்னகராரே. (அ)

திருவொளிகாணியபேதுறுகின்றதிசைமுகனுந்திசைமேலளந்த
கருவரையேந்தியமாலுங்கைதொழநின்றதுமல்லா
லருவரையொல்கவெடுத்தவரக்கனடெழிற்றோள்களாழத்தழுந்த
வெருவுறவூன்றியபெம்மான்வேட்களநன்னகராரே. (கூ)

புத்தமண்டோய்துவராரமண்குண்டர்யாதுமல்லாவுரையேயுரைத்துப்
பொய்த்தவம்பேசுவதல்லாற்புறனுரையாதொன்றுங்கொளேல்
முத்தனவெண்முறுவல்லுமையஞ்சமூரிவல்லானையினீருரிபோர்த்த
பித்தகவேதமுதல்வாவேட்களநன்னகராரே. (கo)

விண்ணியல்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்க
நண்ணியசீரவர்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட்களமேனமொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடுபாவமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாசுபதேசுவரர், தேவியார் - நலலநாயகியம்மை.

திருவாழ்கொளிபுத்தூர், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
க்கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம். (க)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவமசைத்தையம்
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வாம. (௨)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாளிணைசார்வோம் (௩)

தாரிடுகொன்றையோர்வெண்மதிக்கண்ணியன்தாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றானடிகாண்போம. (௪)

கனமலர்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (௫)

அளைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சி
களைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்னா
வளைபொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தளையவிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம. (௬)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்துப்புன்றலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபலகூறி
மடல்நெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாளிணைசார்வோம். (௭)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கண்ணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (௮)

கரியவனான்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியூரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம. (௯)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினார்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கள்மாமலர்தூவத்தோன்றிநின்றானடிசேர்வோம். (௧௦)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குமகரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளுமவல்லவன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணவீசுரர், தேவியார் - வண்டார்பூங்குழலம்மை.

திருப்பாம்புரம், பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கைபோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடற்றுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (௧)

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடைய
ரக்கினொடாமைபூண்டழகாகவனலதுவாடுமெம்மடிகண்
மிக்கநல்வேதவேள்வியுளெங்குமவிண்ணவர்விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (௨)

துன்னலினுடையுடுத்ததன்மேலோர்சூறைநல்லரவதுசுற்றிப்
பின்னுவார்சடைகடாழவிட்டாடிப்பித்தராய்த்திரியுமெம்பெருமான்
மன்னுமாமலர்கடுவிடநாளுமாமலையாட்டியுந்தாமும
பன்னுநான்மறைகள்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (௩)

துஞ்சுநாடுறந்துதோற்றமுமில்லாச்சுடர்விடுசோதியெம்பெருமா
னஞ்சுசேர்கண்டமுடையவென்னாதர்நள்ளிருணடஞ்செயுநம்பர்
மஞ்சுதோய்சோலைமாமயிலாடமாடமாளிகைதன்மேலேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப்பாவையர்பயிலும்பாம்புரநன்னகராரே. (௪)

நதியதனயலேநகுதலைமாலைநாண்மதிசடைமிசையணிந்து
கதியதுவாகக்காளிமுன்காணக்கானிடைநடஞ்செய்தகருத்தர்
விதியதுவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவாப்
பதியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (௫)

ஓதிநன்குணர்வார்க்குணர்வுடையொருவரொளிதிகழுருவஞ்சேரொருவர்
மாதினையிடமாவைத்தவெம்வள்ளலமானமறியேந்தியமைந்தர்
ஆதிநீயருளென்றமரர்கள்பணியவலைகடல்கடையவன்றெழுந்த
பாதிவெண்பிறைசடைவைத்தவெம்பரமர்பாம்புரநன்னகராரே. (௬)

மாலினுக்கன்றுசக்கரமீந்துமலரவற்கொருமுகமொழித்தே
ஆலின்கீழறமோர்நால்வருக்கருளியனலதுவாடுமெம்மடிகள்

காலனைக்காய்ந்துதங்கழலடியாற்காமனைப்பொடிபடநோக்கிப்
பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரநன்னகராரே. (௭)

விடைத்தவல்லரக்கன்வெற்பினையெடுக்கமெல்லியதிருவிரலூன்றி
யடர்த்தவன்றனக்கன்றருள்செய்தவடிகளனலதுவாடுமெம்மண்ணல்
மடக்கொடியவர்கள்வருபுனலரவமவந்திழியரிசிலின்கரைமேற்
படப்பையிற்கொணர்ந்துபருமணிசிதறும்பாம்புரநன்னகராரே. (௮)

கடிபடுகமலத்தயனொடுமாலுங்காதலோடடிமுடிதேடச்
செடிபடுவினைகள்தீர்த்தருளசெய்யுந்தீவணரெம்முடைச்செல்வர்
முடியுடையமரர்முனிகணத்தவர்கள்முறைமுறையடிபணிந்தேத்தப்
படியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (௯)

குண்டர்சாக்கியருங்குணமிலாதாருங்குற்றுவிட்டுடுக்கையர்தாமுங்
கண்டவாறுரைததுக்கால்நிமிர்த்துண்ணுங்கையர்தாமுள்ளவாறறியார்
வண்டுசேர்குழலிமலைமகணடுங்கவாரணமுரிசெய்துபோர்த்தார்
பண்டுநான்செய்தபாவங்கள்தீர்படார்பாமபுரநன்னகராரே. (௧௦)

பார்மலிந்தோங்கிப்பருமதில்சூழ்ந்தபாம்புரநன்னகராரைக்
கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்கவுணி
நாமலிந்தோங்குநான்மறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார்செல்வமதோங்கிச்சிவனடிநண்ணுவாதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - பாமபுரேசர், தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பேணுபெருந்துறை, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பைமமாநாகம்பன்மலர்க்கொன்றைபன்றிவெண்கொம்பொன்றுபூண்டு
செம்மாந்தையம்பெய்கென்றுசொல்லிச்செய்தொழில்பேணியோர்செல்வ
ரம்மானேக்கியந்தளிர்மேனியரிவையோர்பாகமமர்ந்த
பெம்மானல்கியதொல்புகழாளர்பேணுபெருந்துறையாரே. (௧)

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி
பாவங்கடீர்தரநல்வினைநல்கிப்பல்கணநின்றுபணியச்
சாவமதாகியமால்வரைகொண்டுதண்மதில்மூன்றுமெரித்த
தேவர்கள்தேவரெம்பெருமானார்தீதில்பெருந்துறையாரே. (௨)

செய்பூங்கொன்றைகூவிளமாலைசென்னியுட்சேர்புனல்சேர்த்திக்
கொய்பூங்கோதைமாதுமைபாகங்கூடியோர்பீடுடைவேடர்
கைபோனாற்கனிகுலைவாழைக்காய்குலையிற்கமுகீனப்
பெய்பூம்பாளைபாய்ந்திழிதேறல்பில்குபெருந்துறையாரே. (௩)

நிலனொடுவானுநீரொடுதீயும்வாயுவுமாகியோரைந்து
புலனொடுவென்றுபொய்ம்மைகடீர்த்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
நலனொடுதீங்குந்தானலதின்றிநன்கெழுசிந்தையராகி
மலனொடுமாசுமில்லவர்வாழுமல்குபெருந்துறையாரே. (௪)

பணிவாயுள்ளநன்கெழுநாவின்பத்தர்கள்பத்திமைசெய்யத்
துணியார்தங்களுள்ளமிலாதசுமடர்கள்சோதிப்பரியா
ரணியார்நீலமாகியகண்டரரிசிலுறுஞ்சுகரைமேல்
மணிவாய்நீலம்வாய்கமழ்தேறல்மல்குபெருந்துறையாரே. (௫)

எண்ணார்தங்கள்மும்மதில்வேவவேவலங்காட்டியவெந்தை
விண்ணோர்சாரத்தன்னருள்செய்தவித்தகர்வேதமுதல்வர்
பண்ணார்பாடலாடலறாதபசுபதியீசனோர்பாகம்
பெண்ணாணயவார்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே. (௬)

விழையாருள்ளநன்கெழுநாவில்வினைகெடவேதமாறங்கம்
பிழையாவண்ணம்பண்ணியவாற்றற்பெரியோரேத்தும்பெருமான
றழையார்மாவின்றாழ்கனியுந்தித்தண * அரிசில்புடைசூழ்ந்த
குழையார்சோலைமென்னடையன்னங்கூடுபெருந்துறையாரே. (௭)

பொன்னங்கானல்வெண்டிரைசூழ்ந்தபொருகடல்வேலியிலங்கை
மன்னனொல்கமால்வரையூன்றிமாமுரணாகமுந்தோளு
முன்னைவைவாட்டிப்பின்னருள்செய்தமூவிலைவேலுடைமூர்த்தி
யன்னங்கன்னிப்பேடையோடாடியணவுபெருந்துறையாரே. (௮)

புள்வாயபோழ்ந்துமாநிலங்கீண்டபொருசடல்கண்ணனும்பூவி
னுள்ளவாயல்லிமேலுறைவானுமுணராவரியானுமைகேள்வன
முள்வாய்தாளினறுமரைமொட்டினமுகமலரக்கயல்பாயக்
கள்வாய்நீலங்கண்மலரேய்க்குங்காமர்பெருந்துறையாரே. (௯)

குண்டுந்தேருங்கூறைகளைந்துங்கூப்பிலர்செப்பிலராகி
மிண்டும்மிண்டர்மிண்டவைகண்டுமிண்டுசெயாதுவிரும்புந்
தண்டும்பாம்புமவெண்டலைசூலந்தாங்கியதேவர்தலைவா
வண்டுந்தேனும்வாழ்பொழிற்சோலைமல்குபெருந்துறையாரே. (௧௦)

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்து
நடையாரின்சொல்ஞானசம்பந்தனல்லபெருந்துறைமேய
படையார்சூலம்வல்லவன்பாதம்பரவியபதிகம்வல்லா
ருடையாராகியுள்ளமுமொன்றியுலகினில்மன்னுவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர், சிவானந்தநாதர், தேவியார், மலையரசியம்மை.

---

* அரிசில் என்பது - ஓருநதி, அது அரிசொல வந்ததினால் அரிசொல் நதியென்று கும்பகோணபுராணத்திற் சொல்லப்படுகின்றது.

திருக்கற்குடி, பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (௧)

அங்கமோராறுடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறா
சங்கம்தார்குறமாதர்தங்கையின்மைந்தர்கள்தாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. (௨)

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னொளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. (௩)

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசா
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. (௪)

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தா
ரேர்மலிகேழற்கிளைத்தவின்னொளிமாமணியெங்கும்
காமலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. (௫)

உலந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
நலந்தருசிந்தையராகிநாமலிமாலையினாலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (௬)

மானிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தா
ரூனிடையார்தலையோட்டிலுண்கலனாவுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையால்தினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. (௭)

வாளமர்வீரநினைந்தவிராவணனைமாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. (௮)

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணுக்கொள்கையர்வெள்விடையூர்வர்

வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. (௯)

மூத்துவராடையினாருமூசுகருப்பொடியாரு
நாத்துவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தா
ரேத்துயர்பத்தர்கள்சித்தரிறைஞ்சவவரிடரெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. (௧௦)

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முத்தீசர், தேவியார் - அஞ்சனாக்ஷியம்மை.

திருப்பாச்சிலாச்சிராமம், முயலகன்றீர்த்தது - பண், தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வ
ரணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (௧)

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
விலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (௨)

வெஞ்சுடராடுவர்துஞ்சிருண்மாலைவேண்டுவர்பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர்நெஞ்சிடமாகநண்ணுவர்நம்மைநயந்து
மஞ்சடைமாளிகைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோபைந்தொடிவாடசிதைசெய்வதோவிவர்சீரே. (௩)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்கனல்தருதூமதிக்கண்ணி
புனமலர்மாலையணிந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
வனமலிவண்பொழில்சூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மனமலிமைந்தரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (௪)

மாந்தர்தம்பால்நறுநெய்மகிழ்ந்தாடிவளர்சடைமேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல்தாளமோர்வீணைமுதிரவோர்வாய்மூரிபாடி
யாந்தைவிழிச்சிறுபூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோதையலைவாடச்சதுர்செய்வதோவிவர்சார்வே. (௫)

நீறுமெய்பூசிநிறைசடைதாழநெற்றிக்கண்ணாலுற்றுநோக்கி
யாறதுசூடியாடரவாட்டியைவிரற்கோவணவாடை
பாறருமேனியர்பூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
வேறதுவேறியரேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (௬)

பொங்கிளநாகமொரேகவடத்தோடாமைவெண்ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலைபுனைந்தழகாயகுழகர்கொலாமிவரென்ன
வங்கிளமங்கையோர்பங்கினர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோதாழ்குழல்வாடச்சதிர்செய்வதோவிவர்சார்வே. (எ)

ஏவலத்தால்விசயற்கருள்செய்தேயிராவணனையீடழித்து
மூவரிலும்முதலாய்நடுவாயமூர்த்தியையன்றிமொழியாள்
யாவர்களும்பரவும்மெழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள்தேவரோசேயிழைவாடச்சிதைசெய்வதோவிவர்சார்வே. (அ)

மேலதுநான்முகனெய்தியதில்லைக்கீழதுசேவடிதன்னை
நீலதுவண்ணனுமெய்தியதில்லையெனவிவர்நின்றதுமல்லா
லாலதுமாமதிதோய்பொழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பாலதுவண்ணரோபைந்தொடிவாடப்பழிசெய்வதோவிவர்பண்பே. (௯)

நாணொடுகூடியசாயினரேனுநகுவரவரிருபோது
மூணொடுகூடியவுட்குந்தகையாருரைகளவைகொளவேண்டா
வாணொடுபெண்வடிவாயினபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பூணெடுமார்பரோபூங்கொடிவாடப்புனைசெய்வதோவிவர்பொற்பே. (௧௦)

அகமலியன்பொடுதொண்டர்வணங்கப்பாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
றகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

முயலகன்-என்பது ஒருவிதவலிநோய், இது ஒருராசன்மகளுக்குக்கண்டிருந்து இந்தத் திருப்பதிகமோதி யருளினவளவில் தீர்ந்தது.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாற்றறிவரதர், தேவியார் - பாலசுந்தரநாயகியம்மை.

திருப்பழையனூர், திரு ஆலங்காடு-பண், தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னைநினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்திவாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௧)

கேடும்பிறவியுமாக்கினாருங்கேடிலா
வீடுமாநெறிவிளம்பினாரெம்விகிர்தனார்
காடுஞ்சுடலையுங்கைக்கொண்டல்விற்கணப்பேயோ
டாடும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (உ)

கந்தங்கமழ்கொன்றைக்கண்ணிசூடிகனலாடி
வெந்தபொடிநீற்றைவிளங்கப்பூசும்விகிர்தனார்
கொந்தண்பொழிற்சோலையரவிற்றோன்றிக்கோடல்பூத்
தந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ங)

பாலவெண்மதிசென்னிபடரச்சூடிப்பழியோராக்
காலனுயிர்செற்றகாலனாயகருத்தனார்
கோலம்பொழிற்சோலைப்பெடையோடாடிமடமஞ்ஞை
யாலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ச)

ஈர்க்கும்புனல்சூடியிளவெண்டிங்கள்முதிரவே
பார்க்குமரவம்பூண்டாடிவேடம்பயின்றாருங்
கார்க்கொள்கொடிமுல்லைகுருந்தமேறிக்கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ரு)

பறையுஞ்சிறுகுழலும்யாழும்பூதம்பயிற்றவே
மறையும்பலபாடிமயானத்துறையுமைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர்சடையினாரும்பேடைவண்
டறையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (சா)

நுணங்குமறைபாடியாடிவேடம்பயின்றாரு
மிணங்குமலைமகளோடிருகூறொன்றாயிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர்வைகலேத்தும்வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூராலங் காட்டெம்மடிகளே. (எ)

கணையும்வரிசிலையுமெரியுங்கூடிக்கவர்ந்துண்ண
விணையிலெயில்மூன்றுமெரித்திட்டாரெம்மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங்கலையுமெல்லாங்கங்குல்சேர்ந்
தணையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (அ)

கவிழமலைதளரக்கடக்கையாலெடுத்தான்றோள்
பவழநுனைவிரலாற்பையவூன்றிப்பரிந்தாரும்
தவழுங்கொடிமுல்லைபுறவஞ்சேரநறவம்பூத்
தவிழும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (சு)

பகலுமிரவுஞ்சேர்பண்பினாருநண்போரா
திகலுமிருவர்க்குமெரியாய்த்தோன்றிநிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடுவல்லார்க்கென்றுந்தீயபோ
பகலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கo)

போழம்பலபேசிப்போதுசாத்தித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதுற்றித்திரிவாரும்
கேழல்வினைபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
வாழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௧௧)

சாந்தங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்த
னேந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாலேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே. (௧௨)

திருச்சிற்றம்பலம்

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஊர்த்ததாண்டவேசுரர், தேவியார் - வண்டார்குழலியம்மை.

திரு அதிகை, வீரட்டானம்-பண், தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம
வண்டுமருள்பாடவளர்பொனவிரிகொன்றை
விண்டதொடையலானாடும்வீரட்டானத்தே. (௧)

அரும்புங்குரும்பையுமலைத்தமென்கொங்கைக்
கரும்பின்மொழியாளோடுடன்கையனல்வீசிச்
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே. (௨)

ஆடலழனாகமரைக்கிட்டசைத்தாடப்
பாடல்மறைவல்லான்படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின்மேல்மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானாடும்வீரட்டானத்தே. (௩)

எண்ணாரெயிலெய்தானிறைவனனலேந்தி
மண்ணார்முழவதிரமுதிராமதிசூடிப்
பண்ணார்மறைபாடப்பரமனதிகையுள்
விண்ணோர்பரவநின்றாடும்வீரட்டானத்தே. (௪)

கரிபுன்புறமாயகழிந்தாரிடுகாட்டிற்
றிருநின்றொருகையாற்றிருவாமதிகையு
ளெரியேந்தியபெருமானெரிபுன்சடைதாழ
விரியும்புனல்சூடியாடும்வீரட்டானத்தே. (௫)

துளங்குஞ்சுடரங்கைத்துதையவிளையாடி
இளங்கொம்பனசாயலுமையோடிசைபாடி

வளங்கொள்புனல்சூழ்ந்தவயலாரதிகையுள்
விளங்கும்பிறைசூடியாடும்வீரட்டானத்தே. (௬)

பாதம்பலரேத்தப்பரமன்பரமேட்டி
பூதம்புடைசூழப்புலித்தோலுடையாகக்
கீதமுமைபாடக்கெடிலவடபக்கம்
வேதமுதல்வனின்றாடும்வீரட்டானத்தே. (௭)

கல்லார்வரையரக்கன்றடந்தோள்கவின்வாட
வொல்லையடர்த்தவனுக்கருள்செய்ததிகையுட்
பல்லார்பகுவாயநகுவெண்டலைசூடி
வில்லாலெயிலெய்தானாடும்வீரட்டானத்தே. (௮)

நெடியானான்முகனுநிமிர்ந்தானைக்காண்கிலார்
பொடியாடுமார்பானைப்புரிநூலுடையானைக்
கடியார்கழுநீலமலருமதிகையுள்
வெடியார்தலையேந்தியாடும்வீரட்டானத்தே. (௯)

அரையோடலர்பிண்டிமருவிக்குண்டிகை
சுரையோடுடனேந்தியுடைவிட்டுழல்வார்க
ளுரையோடுரையொவ்வாதுமையோடுடனாகி
விரைதோயலர்தாரானாடும்வீரட்டானத்தே. (௧௦)

ஞாழல்கமழ்காழிஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைசொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டில்-கெடிலநதிக்கு வடபக்கத்தி லிருக்கின்றது.

திரிபுரவிசயஞ்செய்த வீரட்டானம்.

சுவாமிபெயர் - அதிகைநாதர்-வீரட்டானேசுவரர், தேவியார் - திருவதிகைநாயகி.

திருச்சிரபுரம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்தவெண்டலையிற்பலிகொள்வதன்றியும்போய்
வில்லடைந்தபுருவநல்லாள்மேனியில்வைத்தலென்னே
சொல்லடைந்ததொன்மறையோடங்கங்கலைகளெல்லாம்
செல்லடைந்தசெல்வர்வாழுஞ்சிரபுரமேயவனே. (௧)

கொல்லைமுல்லைநகையினாளோர்கூறதுவன்றியும்போ
யல்லல்வாழ்க்கைப்பலிகொண்டுண்ணுமாதரவென்னைகொலாஞ்

சொல்லநீண்டபெருமையாளர்தொல்கலைகற்றுவல்லார்
செல்லநீண்டசெல்வமல்குசிரபுரமேயவனே. (௨)

நீரடைந்தசடையின்மேலோர்நிகழ்மதியன்றியும்போ
யூரடைந்தவேறதேறியுண்பலிகொள்வதென்னே
காரடைந்தசோலைசூழ்ந்துகாமரம்வண்டிசைப்பச்
சீரடைந்தசெல்வமோங்குசிரபுரமேயவனே. (௩)

கையடைந்தமானினோடுகாரரவன்றியும்போய்
மெய்யடைந்தவேட்கையோடுமெல்லியல்வைத்ததென்னே
கையடைந்தகளைகளாகச்செங்கழுநீர்மலர்கள்
செய்யடைந்தவயல்கள்சூழ்ந்தசிரபுரமேயவனே. (௪)

புரமெரித்தபெற்றியோடும்போர்மதயானைதன்னைக்
கரமெடுத்துத்தோலுரித்தகாரணமாவதென்னே
மரமுரித்ததோலுடுத்தமாதவர்தேவரோடுஞ்
சிரமெடுத்தகைகள்கூப்புஞ்சிரபுரமேயவனே. (௫)

கண்ணுமூன்றுமுடையதன்றிக்கையினில்வெம்மழுவும்
பண்ணுமூன்றுவீணையோடுபாம்புடன்வைத்ததென்னே
எண்ணுமூன்றுகனலுமோம்பியெழுமையும்விழுமியராய்த்
திண்ணமூன்றுவேள்வியாளர்சிரபுரமேயவனே. (௬)

குறைபடாதவேட்கையோடுகோல்வளையாளொருபாற்
பொறைபடாதவின்பமோடுபுணர்தருமெய்ம்மையென்னே
இறைபடாதமென்முலைமாளிகைமேலிருந்து
சிறைபடாதபாடலோங்குசிரபுரமேயவனே. (௭)

மலையெடுத்தவாளரக்கனஞ்சவொருவிரலால்
நிலையெடுத்தகொள்கையானேநின்மலனேநினைவார்
துலையெடுத்தசொற்பயில்வார்மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்ததோளினானேசிரபுரமேயவனே. (௮)

மாலினோடுமலரினானும்வந்தவர்காணாது
சாலுமஞ்சப்பண்ணிநீண்டதத்துவமேயதென்னே
நாலுவேதமோதலார்கணந்துணையென்றிறைஞ்சச்
சேலுமேயுங்கழனிசூழ்ந்தசிரபுரமேயவனே. (௯)

புத்தரோடுசமணர்சொற்கள்புறனுரையென்றிருக்கும்
பத்தர்வந்துபணியவைத்தபான்மையதென்னைகொலாம்
மத்தயானையுரியும்போர்த்துமங்கையொடும்முடனே
சித்தர்வந்துபணியுஞ்செல்வச்சிரபுரமேயவனே. (௧0)

தெங்குநீண்டசோலைசூழ்ந்தசிரபுரமேயவனை
யங்கநீண்டமறைகள்வல்லவணிகொள்சம்பந்தனுரை

பங்கரீங்கப்பாடவல்லபத்தர்கள்பாரிதன்மேற்
சங்கமோடுநீடிவாழ்வர்தன்மையிஞலவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சிரபுரமென்பதுஞ் சீகாழிக்கொருபெயர்.

திருச்சேய்ஞலூர், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்[illegible]

நூலடைந்தகொள்கையாலே[illegible]டுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கந[illegible]லறத்தை
யாலடைந்தநீழல்மேவியரு[illegible]சொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்[illegible]ஞலூர்மேயவனே. (௧)

நீறடைந்தமேனியின்க[illegible]ழையாளொருபாற்
கூறடைந்தகொள்கை[illegible]க்கோலவளர்சடைமே
லாறடைந்ததிங்கள்[illegible]வமணிந்ததென்னே
சேறடைந்ததண்க[illegible]சேய்ஞலூர்மேயவனே. (௨)

ஊனடைந்தவெ[illegible]லயிஞேடுபலிதிரிந்து
கானடைந்தபே[illegible]ாடுபூதங்கலந்துடனே
மானடைந்த[illegible]காணமகிழ்ந்தெரியாடலென்னே
தேனடை[illegible]லைமல்குசேய்ஞலூர்மேயவனே. (௩)

[illegible]ணடை[illegible]மதிளும்வின்மலையாவரவி
யண்ணல[illegible]வஞ்சரத்தால்நல்லெரியூட்டலென்னே
மெண்ண[illegible]வண்டுபாடும்பைம்பொழில்சூழ்ந்தழகார்
நண்ண[illegible]தமாடமல்குசேய்ஞலூர்மேயவனே. (௪)

மாசு[illegible]ந்தகாடிடமாப்பேணுவதன்றியும்போய்
பேசு[illegible]டந்தோளியஞ்சவேழமுரித்ததென்னே
மூச[illegible]டந்தநான்மறையாறங்கமோடைவேள்வி
ந[illegible]டைந்தநான்மறையாளர்சேய்ஞலூர்மேயவனே. (௫)

[illegible]டைந்தசெங்கையாளர்சேய்ஞலூர்மேயவனே.

[illegible]டைந்தசெங்கையாளாரணமாகிவந்து
[illegible]டைந்தவேனமொன்றின்காரணமாகிவந்து
[illegible]வேடடைந்தவேடஞகிவிசயஞெடெய்ததென்னே
[illegible]ருள்[illegible]டைந்தமால்களிற்றுக்கோச்செங்கணுற்கருளசெய்
[illegible]டைந்தசெல்வர்வாழுஞ்சேய்ஞலூர்மேயவனே. (௧௧)

[illegible]ந்தபாலதாட்டப்பேணுதவன்றுதை
[illegible]ந்துபாய்ந்ததாளைவேர்தடிந்தான்றனக்குத்
[illegible]ந்தமாலைசூட்டித்தலைமைவகுத்ததென்னே
[illegible]ந்தகோயில்மல்குசேய்ஞலூர்மேயவனே.

[illegible]றம்பலம்.

பெய[illegible]

[illegible]லையம்மை.

மாவடைந்ததேரரக்கன்வலிதொலைவித்தவன்ற
னாவடைந்தபாடல்கேட்டுநயந்தருள்செய்ததென்னே
பூவடைந்தநான்முகன்போற்பூசுரர்போற்றிசெய்யுஞ்
சேவடைந்தவூர்தியானேசேய்ஞலூர்மேயவனே. (௮)

காரடைந்தவண்ணனோடுகனகமனையானும்
பாரிடந்தும்விண்பறந்தும்பாதமுடிகாணா
ரீரடைந்துவந்துபோற்றச்செ [illegible] ருள்செய்ததென்னே
தேரடைந்தமாமறுகி [illegible] ர்மேயவனே. (௯)

மாசடை [illegible] தமேனியாருமன [illegible] சகஞ்சி
நேசடைந்தவூணினாருநேசமி [illegible] தன்னே
[illegible] சடைந்ததோகையாடவிரை [illegible] பொழில்வாய்
தேசடைந்தவண்டுபாடுஞ்சேய்ஞ [illegible] மயவனே. (௧0)

சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வன [illegible] வித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணி [illegible] லைவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின் [illegible]
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்ப [illegible] ள் (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டில் - சுப்பிரமணியசுவாமியினு [illegible] ானதலம்.
சுவாமிபெயர் - சத்தகிரீசுவரர், தேவியார் - சகி [illegible] பகியம்மை.

திருநள்ளாறு, பண் - பழந்தக்க [illegible]

பச்சைத்திருப்பதிகம். (எ)

இது - சமணர்கள் வாதின்பொருட்டுத் தீயிலிட்டபோது வே [illegible]

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையனகோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௮)

தோடுடையகாதுடையன்றோலுடையன்தொலையாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
னேடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௯)

மத்தயுன்முறையாலாற்றவெண்ணீறுடியணியிழையோர்
சித்தர்வான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிந்தேத்த
தெங்கநீண்டியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
யங்கநீண்ட [illegible] பானம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧0)

புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடுடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௪)

ஏறுதாங்கியூர்திபேணியேர்கொளிளமதிய
மாறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிநூல்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௫)

திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்க
ளெங்களுச்சியெம்மிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லா
நங்களுச்சிநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௬)

வெஞ்சுடர்த்தீயங்கையேந்திவிண்கொண்முழவதிர
வஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைந்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௭)

சிட்டமார்ந்தமும்மதிலுஞ்சிலைவரைத்தீயம்பினாற்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறாடுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமாடுநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௮)

உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டுடனேயொடுக்கி
யண்ணலாகாவண்ணனீழலாரழல்போலுருவ
மெண்ணலாகாவுள்வினையென்றெள்கவலித்திருவர்
நண்ணலாகாநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௯)

மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியந்நெறிசெல்லன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிலும்முடனே
நாசஞ்செய்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧௰)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லார்
நண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ள சப்ததியாகர் தலங்களிலொன்று.

பெயர் - தெர்ப்பாரணியார், தேவியார் - போகமார்த்தபூண்முலையம்மை.

திருவலிவலம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒல்லையாறியுள்ளமொன்றிக்கள்ளமொழிந்துவெய்ய
சொல்லையாறித்தூய்மைசெய்துகாமவினையகற்றி
நல்லவாறேயுன்றனாமநாவினவின்றேத்த
வல்லவாறேவந்துநல்காய்வலிவலமேயவனே. (௧)

இயங்குகின்றவிரவிதிங்கள்மற்றுநற்றேவரெல்லாம
பயங்களாலேபற்றிநின்பாற்சிந்தந்தெளிகின்றிலர்
தயங்குசோதிசாமவேதாகாமனைக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துநல்காய்வலிவலமேயவனே. (௨)

பெண்டிர்மக்கள்சுற்றமென்னும்பேதைப்பெருங்கடலை
விண்டுபண்டேவாழமாட்டேன்வேதனைநோய்நலியக்
கண்டுகண்டேயுன்றனாமங்காதலிக்கின்றதுள்ளம்
வண்டுகிண்டிப்பாடுஞ்சோலைவலிவலமேயவனே. (௩)

மெய்யராகிப்பொய்மைநீக்கிவேதனையைத்துறந்து
செய்யராணார்சிந்தையானேதேவர்குலக்கொழுந்தே
நைவனாயேனுன்றனாமநாளுநவிற்றுகின்றேன்
வையமுன்னேவந்துநல்காய்வலிவலமேயவனே. (௪)

துஞ்சும்போதுந்துற்றும்போதுஞ்சொல்லுவனுன்றிறமே
தஞ்சமில்லாத்தேவர்வந்துன்றாளிணைக்கீழ்ப்பணிய
நஞ்சையுண்டாய்க்கென்செய்கேனோநாளுநினைந்தடியேன்
வஞ்சமுண்டென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (௫)

புரிசடையாய்புண்ணியனேநண்ணலார்மூவெயிலு
மெரியவெய்தாயெம்பெருமானென்றிமையோர்பரவுங்
கரியுரியாய்காலகாலாநீலமணிமிடற்று
வரியரவாவந்துநல்காய்வலிவலமேயவனே. (௬)

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியே
னாயுநின்பாலன்புசெய்வானாதரிக்கின்றதுள்ள
மாயமாயகாயந்தன்னுளைவர்நின்றொன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (௭)

நீரொடுங்குஞ்செஞ்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடும்பீழ்ந்தேந்தலுற்றவேந்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்காவலிவலமேயவனே. (௮)

ஆதியாயநான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியில்லேன்சொல்லுவதுன்றிறமே

யோதினாருமுன்னையேத்துமென்னைவினையல்லம்
வாதியாமேவந்துநல்காய்வலிவலமேயவனே. (கூ)

* பொதியிலானேபூவணத்தாய்பொன்றிகழுங்கயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
விதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கள்
மதியிலாதாரென்செய்வாரோவலிவலமேயவனே. (கo)

வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிநாடன்புகலிவேந்தன்ஞானசம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பு
மன்னுஞ்சோதியீசனோடேமன்னியிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மனத்துணைநாதர், தேவியார் - வாளையங்கண்ணியம்மை.

திருச்சோபுரம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகம்வைத்துகந்தமாண்பதுவென்னைகொலாம்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானேதூயநீற்றாய்சோபுரமேயவனே. (க)

விடையமர்ந்துவெம்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தண்புனலைத்தாங்கியதென்னைகொலாம்
கடையுயர்ந்தமும்மதிலுங்காய்ந்தனலுள்ளழுந்தத்
தொடைநிகழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே. (உ)

தீயராயவல்லரக்கர்செந்தழலுள்ளழுந்தச்
சாயவெய்துவானவரைத்தாங்கியதென்னைசொலாம்
பாயும்வெள்ளையேற்றையேறிப்பாய்புலித்தோலுடுத்த
தூயவெள்ளைநீற்றினானேசோபுரமேயவனே. (௩)

பல்லிலோடுகையிலேந்திப்பல்கடையும்பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கைமேலதானவாறதென்னைகொலாம்
வில்லைவென்றநுண்புருவவேனெடுங்கண்ணியொடுந்
தொல்லையூழியாகிநின்றாய்சோபுரமேயவனே. (௪)

நாற்றமிக்ககொன்றைதுன்றுசெஞ்சடைமேன்மதிய
மேற்றமாகவைத்துகந்தகாரணமென்னைகொலா

---

* பொதியில்-என்பது பொதிகைமலை, அது வைப்புத்தலங்களிலொன்று. இங்கனூர் இடையூர், கோவந்தபுத்தூர், குருக்கேத்திரம், பொதியமலை, தேனூர் என்னுஞ், செய்யுளா

முற்றமிக்ககாலன்றன்னையொல்கவுதைத்தருளித்
தோற்றமீறுமாகிநின்றாய்சோபுரமேயவனே. (௫)

கொன்னவின்றமூவிலைவேற்சூர்மழுவாட்படையன்
பொன்னைவென்றகொன்றைமாலைசூடும்பொற்பென்னைகொலா
மன்னமன்னமென்னடையாள்பாகமமர்ந்தரைசேர்
துன்னவண்ணவாடையினாய்சோபுரமேயவனே. (௬)

குற்றமின்மையுண்மைநீயென்றுன்னடியார்பணிவார்
கற்றல்கேள்விஞானமானகாரணமென்னைகொலாம்
வற்றலாமைவாளரவம்பூண்டயன்வெண்டலையிற்
றுற்றலானகொள்கையானேசோபுரமேயவனே. (எ)

விலங்கலொன்றுவெஞ்சிலையாக்கொண்டுவிறலரக்கர்
குலங்கள்வாழூரெரித்தகொள்கையிதென்னைகொலா
மிலங்கைமன்னுவாளவுணர்கோனையெழில்விரலாற்
றுலங்கவூன்றிவைத்துகந்தாய்சோபுரமேயவனே. (அ)

விடங்கொளாகமால்வரையைச்சுற்றிவிரிதிரைநீர்
கடைந்தநஞ்சையுண்டுகந்தகாரணமென்னைகொலா
மிடந்துமண்ணையுண்டமாலுமின்மலர்மேலயனுந்
தொடர்ந்துமுன்னங்காணமாட்டாச்சோபுரமேயவனே. (௯)

புத்தரோடுபுன்சமணர்பொய்யுரையேயுரைத்துப்
பித்தராகக்கண்டுகந்தபெற்றிமையென்னைகொலா
மத்தயானையீருரிவைபோர்த்துவளர்சடைமேற்
றுத்திநாகஞ்சூடினானேசோபுரமேயவனே. (௧௦)

சோலைமிக்கதண்வயல்சூழ்சோபுரமேயவனைச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனலத்தால்
ஞாலமிக்கதண்டமிழால்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலைவல்லார்கூடுவர்வானுலகே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-சோபுரநாதர், தேவியார்-சோபுரநாயகியம்மை.

திருநெடுங்களம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௧)

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னை
தினைத்தனையாமிடற்றில்வைத்ததிருந்தியதேவநின்னை
மனத்தகத்தோர்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௨)

நின்னடியேவழிபடுவானிமலாநினைக்கருத
வென்னடியானுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௩)

மலைபுரிந்தமன்னவன்றன்மகளையோர்பால்மகிழ்ந்தா
யலைபுரிந்தகங்கைதங்குமவிர்சடையாரூரா
தலைபுரிந்தபலிமகிழ்வாய்தலைவநின்றாணிழற்கீழ்
நிலைபுரிந்தாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௪)

பாங்கினல்லார்படிமஞ்செய்வார்பாரிடமும்பலிசேரத்
தூங்கிநல்லார்பாடலோடுதொழுகழலேவணங்கித
தாங்கிநில்லாவன்பினோடுந்தலைவநின்றாணிழற்கீழ்
நீங்கிநில்லாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௫)

விருத்தனாகிப்பாலனாகிவேதமோர்நான்குணர்ந்து
கருத்தனாகிக்கங்கையாளைக்கமழ்சடைமேற்கரந்தாய்
அருத்தனாயவாதிதேவனடியிணையேபரவு
நிருத்தர்கீதரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௬)

கூறுகொண்டாய்மூன்றுமொன்றாக்கூட்டியோர்வெங்கணையால்
மாறுகொண்டார்புரமெரித்தமன்னவனேகொடிமே
லேறுகொண்டாய்சாந்தமீதென்றெம்பெருமானணிந்த
நீறுகொண்டாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௭)

குன்றினுச்சிமேல்விளங்குங்கொடிமதில்சூழிலங்கை
யன்றிநின்றவரக்கர்கோனையருவரைக்கீழடர்த்தாய்
யென்றுநல்லவாய்மொழியாலேத்தியிராப்பகலு
நின்றுநைவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௮)

வேழவெண்கொம்பொசித்தமாலும்விளங்கியநான்முகனுஞ்
சூழவெங்குநேடவாங்கோர்சோதியுளாகிநின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான்கேடிலாப்பொன்னடியி
னீழல்வாழ்வாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௯)

வெஞ்சொற்றஞ்சொலாக்கிநின்றவேடமிலாச்சமணுந்
தஞ்சமில்லாச்சாக்கியருந்தத்துவமொன்றறியார்
துஞ்சலில்லாவாய்மொழியாற்றோத்திரநின்னடியே
நெஞ்சில்வைப்பாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௧௦)

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-நித்தியசுந்தரர், தேவியார்-ஒப்பிலாநாயகியம்மை.

திருமுதுகுன்றம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகால்நீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (௧)

பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
ரெற்றுநீர்தீக்காலுமேலைவிண்ணியமானனொடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகள்
முற்றுமாகிவேறுமானான்மேயதுமுதுகுன்றே. (௨)

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாகநயந்துபூமேல்நான்முகன்றன்றலையிற்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதோர்
மூரிநாகத்துரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (௩)

பாடுவாருக்கருளுமெந்தைபனிமுதுபௌவமுந்நீர்
நீடுபாருமுழுதுமோடியண்டர்நிலைகெடலும்
நாடுதானுமூடுமோடிஞாலமுநான்முகனு
மூடுகாணமூடும்வெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே. (௪)

வழங்குதிங்கள்வன்னிமத்தமாசுணமீசனவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவர்திசைவணங்கத்
தழங்குமொந்தைதக்கைமிக்கபேய்க்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுமுதுகுன்றே. (௫)

சுழிந்தகங்கைதோய்ந்ததிங்கட்டொல்லார்நல்லிதழி
சழிந்தசென்னிச்சைவவேடந்தானினைந்தைம்புலனும்
அழிந்தசிந்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழிந்தவாயான்முக்கணாதிமேயதுமுதுகுன்றே. (௬-௭)

மயங்குமாயம்வல்லராகிவானினொடுநீரு
மியங்குவோருக்கிறைவனாயவிராவணன்றோணெரித்த

புயங்கராகமாநடத்தன்புணர்முலைமாதுமையாள்
முயங்குமார்பன்முனிவரேத்தமேயதுமுதுகுன்றே. (௮)

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனும்மறியாக்
கோலமுண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலரா
லேலவிண்டைகட்டிநாமமிசையவெப்போதுமேத்து
மூலமுண்டநீற்றர்வாயான்மேயதுமுதுகுன்றே. (௯)

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழல்மிண்டர்சொல்லை
நெறிகளென்னநினைவுறாதேநித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்பொங்குவிடத்தையுண்ட
முறிகொள்மேனிமங்கைபங்கன்மேயமுதுகுன்றே. (௧௦)

மொய்த்துவானோர்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரமபுரத்தலைவன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது திருமுறையைக் கண்டெடுக்கும்போது செல்லெறிச் சிதலமாகிய
பதிகங்களிலொன்று. திருமுறைகண்டபுராணத்திற் காண்க.

திருஒத்தூராணபனை பெண்பனையானது, பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி, யேத்தாதாரில்லையெண்ணுங்கா
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கை, கூத்தீரும்மகுணங்களே. (௧)

இடையீர்போகாவிளமுலையாளையோர், புடையீரேபுள்ளிமானுரி
யுடையீரேயும்மையேத்துதுமோத்தூர்ச், சடையீரேயுமதாளே. (௨)

உள்வேர்போலநொடிமையினார்திறங், கொள்வீரல்குலோர்கோவண
மொள்வாழைக்கனிதேன்சொரியோத்தூர்க், கள்வீரேயுமகாதலே. (௩)

தோட்டீரேதுத்தியைந்தலைநாகத்தை, யாட்டீரேயடியார்வினை
யோட்டீரேயும்மையேத்துதுமோத்தூர், நாட்டீரேவருணல்குமே. (௪)

குழையார்காதீர்கொடுமழுவாட்படை, யுழையாள்வீர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள்பாடிநின்றுவா, ரழையாமேயருணல்குமே. (௫)

மிக்கார்வந்துவிரும்பிப்பலியிடத், தக்கார்தம்மடியீர்களென்
றட்காதாருளரோதிருவோத்தூர், நக்கீரேயருணல்குமே. (௬)

தாதார்கொன்றைதயங்குமுடியுடை, நாதாவென்றுநலம்புகழ்ந்
தோதாதாருளரோதிருவோத்தூர், ராதீரேயருணல்குமே. (௭)

என்றானிம்மலையென்றவரக்கனை, வென்றார்போலும்விரலினா
லொன்றார்மும்மதிலெய்தவனோத்தூ, ரென்றார்மேல்வினையேகுமே. (௮)

நன்றுநான்மறையானொடுமாலுமாய்ச், சென்றார்போலுந்திசையெலா
மொன்றுமொள்ளெரியாய்மிகவோத்தூர், நின்றீரேயுமைநேடியே. (௯)

காரமண்கலிங்கத்துவராடையர், தேரர்சொல்லவைதேறன்மி
னோரம்பாலெயிலெய்தவனோத்தூர்ச், சீரவன்கழல்சேர்மினே. (௧௦)

குரும்பையாண்பனையின்குலையோத்தூ, ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுள்ஞானசம்பந்தன்சொல், விரும்புவார்வினைவீடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதநாதர், தேவியார் - இளமுலைநாயகியம்மை.

திருமாற்பேறு, பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறியார்தருநஞ்சினையுண்டுமை, நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின, மாறிலாமணிகண்டரே. (௧)

தொடையார்மாமலர்கொண்டிருபோதும்மை, யடைவாராமடிகள்ளென
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே, றுடையீரேயுமையுள்கியே. (௨)

பையாருமரவங்கொடுவாட்டிய, ங்கையானென்றுவணங்குவர்
மையார்நஞ்சுண்டுமாற்பேற்றிருக்கின்ற, வையாநின்னடியார்களே. (௩)

சாலமாமலர்கொண்டுசரணென்று, மேலையார்கள்விரும்புவர்
மாலினார்வழிபாடுசெய்மாற்பேற்று, நீலமார்கண்டநின்னையே. (௪)

மாறிலாமணியேயென்றுவானவ, ரேறவேமிகவேத்துவர்
கூறனேகுலவுந்திருமாற்பேற்றி, னீறனேயென்றுநின்னையே. (௫)

உரையாதாரில்லையொன்றுநின்றன்மையைப், பரவாதாரில்லைநாள்களும்
திரையார்பாலியின்றென்கரைமாற்பேற், றரையானேயருணல்கிடே. (௬)

அரசளிக்குமரக்கனவன்றனை, யுரைகெடுத்தவனொல்கிட
வரமிகுத்தவெமமாற்பேற்றடிகளைப், பரவிடக்கெடும்பாவமே. (௭)

இருவர்தேவருந்தேடித்திரிந்தினி, லொருவராலறிவொண்டிலன்
மருவுநீள்கழன்மாற்பேற்றடிகளைப், பரவுவார்வினைபாறுமே. (௯)

தூசுபோர்த்துழல்வார்கையிற்றுற்றுணு, நீசர்தம்முரைகொள்ளேலும்
தேசமல்கியதென்றிருமாற்பேற், றீசனென்றெடுத்தேத்துமே. (௧௦

மன்னிமாலொடுசோமன்பணிசெயு, மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொற், பன்னவேவினைபாறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மால்வணங்குமீசர், தேவியார்-கருணைநாயகியம்மை.

திருப்பாற்றுறை, பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர், சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை, யாராராதிமுதல்வரே. (க)

நல்லாருமவர்தீயரெனப்படுஞ், சொல்லார்நன்மலர்சூடினார்
பல்லார்வெண்டலைச்செல்வரெம்பாற்றுறை, யெல்லாருந்தொழுமீசரே. (உ)

விண்ணார்திங்கள்விளங்குநுதலினர், ரெண்ணார்வந்தெனெழில்கொண்டார்
பண்ணார்வண்டினம்பாடல்செய்பாற்றுறை, யுண்ணாளுமுறைவரே. (ஙு)

பூவுந்திங்கள்புனைந்தமுடியினர், ரேவினல்லாரெயிலெய்தார்
பாவந்தீர்புனன்மல்கியபாற்றுறை, யோவென்சிந்தையொருவரே. (ச)

மாகந்தோய்மதிசூடிமகிழ்ந்தெனை, தாகம்பொன்னிறமாக்கினார்
பாகம்பெண்ணுமுடையவர்பாற்றுறை, நாகம்பூணநயவரே. (ரு)

போதுபொன்றிகழ்கொன்றைபுனைமுடி, நாதர்வந்தெனலங்கொண்டார்
பாதந்தொண்டர்பரவியபாற்றுறை, வேதமோதுமவிகிர்தரே. (சா)

வாடல்வெண்டலைசூடினர்மால்விடை, கோடல்செய்தகுறிப்பினார்
பாடல்வண்டினம்பண்செயும்பாற்றுறை, யாடல்நாகமசைத்தரே. (எ)

வெவ்வமேனியராய்வெள்ளைநீற்றினர், ரெவ்வஞ்செய்தெனெழில்கொண்டார்
பவ்வநஞ்சடைகண்டரெம்பாற்றுறை, மவ்வல்சூடியமைந்தரே. (அ)

ஏனமன்னுமுமானவருக்கெரி, யானவண்ணத்தெம்மண்ணலார்
பானலம்மலர்விம்மியபாற்றுறை, வானவெண்பிறைமைந்தரே. (கூ)

வெந்தநீற்றினர்வேலினர்நூலினர், வந்தெனனலமவ்வினார்
பைந்தண்மாதவிசூழ்தருபாற்றுறை, மைந்தர்தாமோர்மணாளரே. (க0)

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய, பத்துநூறுபெயரனைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ், பத்தும்பாடிப்பரவுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருமூலநாதர், தேவியார் - மோகாம்பிகையம்மை.

திருவேற்காடு, பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி, வெள்ளியானுறைவேற்காடு
டுள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற், றெள்ளியாரவர்தேவரே. (க)

ஆடல்நாகமசைத்தளவில்லதோர், வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற், சேடராகியசெல்வரே. (உ)

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி, வேதவித்தகன்வேற்காடு
போதுசாந்தும்புகையுங்கொடுத்தவர்க், கேதமெய்துதலில்லையே. (௩)

ஆழ்கடலெனக்கங்கைகரந்தவன், வீழ்சடையினன்வேற்காடு
தாழ்வுடைமனத்தாற்பணிந்தேத்திடப், பாழ்படும்மவர்பாவமே. (௪)

காட்டினாலுமயர்த்திடக்காலனை, வீட்டினானுறைவேற்காடு
பாட்டினாற்பணிந்தேத்திடவல்லவ, ரோட்டினார்வினையொல்லையே. (௫)

தோலினாலுடைமேவவல்லான்சுடர், வேலினானுறைவேற்காடு
நாலினாற்பணிந்தேத்திடவல்லவர், மாலினார்வினைமாயுமே. (௬)

மல்லன்மும்மதின்மாய்தரவெய்ததோர், வில்லினானுறைவேற்காடு
சொல்லவல்லசுருங்காமனத்தவர், செல்லவல்லவரிக்கமே. (௭)

மூரல்வெண்மதிசூடுமுடியுடை, வீரன்மேவியவேற்காடு
வாரமாய்வழிபாடுநினைந்தவர், சேர்வர்செய்கழறிண்ணமே. (௮)

பரக்கினார்படுவெண்டலையிற்பலி, யிரக்கினானுறைவேற்காட்டூ
ரரக்கனாண்மையடரப்பட்டானிறை, நெருக்கினானைநினைமினே. (௯)

மாறிலாமலரானொடுமாலவன், வேறலானுறைவேற்காடு
ஈறிலாமொழியேமொழியாவெழில், கூறினார்க்கில்லைகுற்றமே. (௧௦)

விண்டமாம்பொழில்சூழ்தருவேற்காடு, கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்டைஞானசம்பந்தன்செந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேற்காட்டீசுவரர், தேவியார் - வேற்கண்ணியம்மை.

திருக்கரவீரம், பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியுநம்வினையுள்ளனவாசற், வரிகொள்மாமணிபோற்கண்டங்
கரியவன்றிகழுங்கரவீரத்தெம், பெரியவன்கழல்பேணவே. (௧)

தங்குமோவினைதாழ்சடைமேலவன், திங்களோடுடன்சூடிய
கங்கையான்றிகழுங்கரவீரத்தெஞ், சங்கரன்கழல்சாரவே. (௨)

ஏதம்வந்தடையாவினிநல்லன, பூதம்பல்படையாக்கிய
காதலான்றிகழுங்கரவீரத்தெம், நாதன்பாதநணுகவே. (௩)

பறையுநம்வினையுள்ளனபாழ்பட, மறையுமாமணிபோல்கண்டங்
கறையவன்றிகழுங்கரவீரத்தெம், மிறையவன்கழலேத்தவே. (௪)

பண்ணினார்மறைபாடலனாடலன், விண்ணினார்மதிளெய்தமுக்
கண்ணினானுறையுங்கரவீரத்தை, நண்ணுவார்வினைநாசமே. (௫)

நிழலினார்மதிசூடினனீள்சடை, யழலினாரனலேந்திய
கழலினானுறையுங்கரவீரத்தைத், தொழவல்லார்க்கில்லைதுக்கமே. (௬)

வண்டார்மும்மதின்மாய்தரவெய்தவ, னண்டனாரழல்போலொளி
கண்டனாருறையுங்கரவீரத்துத், தொண்டர்மேற்றுயர்தூரமே. (௭)

புனலிலங்கையர்கோன்முடிபத்திறச், சினவலாண்மைசெகுத்தவன்
கனலவனுறைகின்றகரவீர, மெனவல்லார்க்கிடரில்லையே. (௮)

வெள்ளத்தாமரையானொடுமாலுமாய்த், தெள்ளத்தீத்திரளாகிய
கள்ளத்தானுறையுங்கரவீரத்தை, யுள்ளத்தான்வினையோயுமே. (௯)

செடியமண்ணொடுசீவரத்தாரவர், கொடியவெவ்வுரைகொள்ளன்மின்
கடியவன்னுறைகின்றகரவீரத், தடியவர்க்கில்லையல்லலே. (௧௰)

வீடிலான்விளங்குங்கரவீரத்தெந், சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தன்சொல்லிவை, பாடுவார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கரவீரேசுவரர், தேவியார் - பிரத்தியக்ஷமின்னாளம்மை.

திருத்தூங்கானைமாடம்-பண், பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மடங்குமிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணங்
கிடங்குமதிளுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடோறுமறையின்னொலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர் தூங்கானைமாடந்தொழுமின்களே (௧)

பிணிநீரசாதல்பிறத்தலிவைபிரியப்பிரியாதபேரின்பத்தோ
டணிநீரமேலுலகமெய்தலுறிலறிமின்குறைவில்லையானேறுடை
மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழுந்
துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர் தூங்கானைமாடந்தொழுமின்களே. (௨)

சாநாளும்வாழ்நாளுந்தோற்றமிவைசலிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மாமாறறியாதலமந்துநீரயர்ந்துங்குறைவில்லையானேறுடைப்
பூமாணலங்கலிலங்குகொன்றைபுனல்பொதிந்தபுன்சடையினானுறையுந்
தூமாண்கடந்தைத்தடங்கோயில்சேர் தூங்கானைமாடந்தொழுமின்களே. (௩)

ஊன்றும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மான்றுமனங்கருதிநின்றீரெல்லாமனந்திரிந்துமண்ணின்மயங்காதுநீர்
மூன்றுமதிலெய்தமூவாச்சிலைமுதல்வர்க்கிடம்போலுமுகிறோய்கொடி
தோன்றுங்கடந்தைத்தடங்கோயில்சேர் தூங்கானைமாடந்தொழுமின்களே. (௪)

மயறீர்மையில்லாததோற்றம்மிவைமரணத்தொடொத்தழியுமாறுதலால்
வியறீரமேலுகமெய்தலுறின்மிக்கொன்றும்வேண்டாவிமலனிட
முயர்தீரவோங்கியநாமங்களாலோவாதுநாளுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௫)

பன்னீர்மைகுன்றிச்செவிகேட்பில்படர்நோக்கிற்கண்பவளநிற
நன்னீர்மைகுன்றித்திரைதோலொடுநரைதோன்றுங்காலநமக்காதன்முன்
பொன்னீர்மைதுன்றப்புறந்தோன்றுநற்புனல்பொதிந்தபுன்சடையினானுறையுந்
தொன்னீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௬)

இறையூண்டுகளோடுடுக்கையெய்தியிழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
நிறையூணெறிகருதிநின்றீரெல்லாநீள்கழலேநாளுநினைமின்சென்னிப்
பிறைசூழலங்கலிலங்குகொன்றைபிணையும்பெருமான்பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௭)

பல்வீழ்ந்துநாத்தளர்ந்துமெய்யில்வாடிப்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மில்சூழிடங்கருதிநின்றீரெல்லாமிறையேபிரியாதெழுந்துபோதுங்
கல்சூழரக்கன்கதறச்செய்தான்காதலியுந்தானுங்கருதிவாழுந்
தொல்சீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௮)

நோயும்பிணியுமருந்துயரமுநுகருடையவாழ்க்கையொழியத்தவம்
வாயுமனங்கருதிநின்றீரெல்லாமலர்மிசையநான்முகனுமண்ணும்விண்ணுந்
தாயவடியளந்தான்காணமாட்டாத்தலைவர்க்கிடமபோலுந்தண்சோலைவிண்
டோயுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௯)

பகடூர்பசிநலியநோய்வருதலாற்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
முகடூர்மயிர்கடிந்தசெய்கையாருமூடுதுவராடையருநாடிச்சொன்ன
திகடூர்ந்தபொய்மொழிகடேறவேண்டாதிருந்திழையுந்தானும்பொருந்திவாழுந்
துகடீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௰)

மண்ணார்முழவதிருமாடவீதிவயற்காழிஞானசம்பந்தனல்ல
பெண்ணாகடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சுந்தூங்கானைமாடமேபான்
கண்ணார்கழல்பரவுபாடல்பத்துங்கருத்துணரக்கற்றாருங்கேட்டாரும்போய்
விண்ணோருலகத்துமேவிவாழும்விதியதுவேயாகுமவினைமாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுடர்க்கொழுந்தீசர், தேவியார் - கடந்தைநாயகியம்மை.

திருத்தோணிபுரம்-பண், பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டரங்கப்புனற்கமலமதுமாந்திப்பெடையினொடு
மொண்டரங்கவிசைபாடுமளியரசேயொளிமதியத்
துண்டரங்கப்பூண்மார்பர்திருத்தோணிபுரத்துறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகால்பகராயே. (க)

எறிசுறவங்கழிக்கானலிளங்குருகேயென்பயலை
யறிவுறாதொழிவதுவுமருவினையேன்பயனன்றே
செறிசிறார்பதமோதுந்திருத்தோணிபுரத்துறையும்
வெறிநிறார்மலர்க்கண்ணிவேதியர்க்குவிளம்பாயே. (உ)

பண்பழனக்கோட்டகத்துவாட்டமிலாச்செஞ்சூட்டுக்
கண்பகத்தின்வாரணமேகவினையேனுறுபயலை
செண்பகஞ்சேர்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்துறையும்
பண்பனுக்கென்பரிசுரைத்தாற்பழியாமோமொழியாயே. (ங)

காண்டகையசெங்காலொண்கழிநாராய்காதலாற்
பூண்டகையமுலைமெலிந்துபொன்பயந்தாளென்றுவளர்
சேண்டகையமணிமாடத்திருத்தோணிபுரத்துறையு
மாண்டகையாற்கின்றேசென்றடியறியவுணர்த்தாயே. (ச)

பாராரேயெனையொருகாற்றொழுகின்றேன்பாங்கமைந்த
காராருஞ்செழுநிறத்துப்பவளக்காற்கபோதங்காள
தேராருநெடுவீதித்திருத்தோணிபுரத்துறையும்
நீராருஞ்சடையாருக்கென்னிலைமைநிகழ்த்தீரே. (ரு)

சேற்றெழுந்தமலர்க்கமலச்செஞ்சாலிகதிர்வீச
வீற்றிருந்தவன்னங்காள்விண்ணோடுமண்மறைகள்
தேற்றுவித்ததிருத்தோணிபுரத்தீசன்றுளங்காத
கூற்றுதைத்ததிருவடியேகூடுமாகூறீரே. (சு)

முன்றில்வாழ்மடற்பெண்ணைக்குரம்பைவாழ்முயங்குசிறை
யன்றில்காள்பிரிவுறுநோயறியாதீர்மிகவல்லீர்
தென்றலார்புகுந்துலவுதிருத்தோணிபுரத்துறையுங்
கொன்றைவார்சடையார்க்கென்கூர்பயலைகூறீரே. (எ)

பானாறுமலர்ச்சூதப்பல்லவங்களவைகோதி
யேனோர்க்குமினிதாகமொழியுமெழிலிளங்குயிலே
தேனாரும்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்தமரர்
கோனாரையென்னிடத்தேவரவொருகாற்கூவாயே. (அ)

நற்பதங்கள்மிகவறிவாய்நானுன்னைவேண்டுகின்றேன்
பொற்பமைந்தவாயலகிற்பூவைநல்லாய்போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர்மறையாளர்திருத்தோணிபுரத்துறையும்
விற்பொலிதோள்விகிர்தனுக்கென்மெய்ப்பயலைவிளம்பாயே. (௯)

சிறையாருமடக்கிளியேயிங்கேவாதேனொடுபால்
முறையாலேயுணத்தருவேன்மொய்பவளத்தொடுதரளந்
துறையாருங்கடற்றோணிபுரத்தீசன்றுளங்குமிளம்
பிறையாளன்றிருநாமமெனக்கொருகாற்பேசாயே. (௧௦)

போர்மிகுத்தவயற்றோணிபுரத்துறையும்புரிசடையெங்
கார்மிகுத்தகறைக்கண்டத்திறையவனைவண்கமலத்
தார்மிகுத்தவரைமார்பனசம்பந்தனுரைசெய்த
சீர்மிகுத்ததமிழ்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்செங்காட்டங்குடி, பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நறைகொண்டமலர்தூவிவிரையளிப்பநாடோறு
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறையுஞ்செங்காட்டங்குடியதனுட்
கறைகொண்டகண்டத்தான்கணபதீச்சரத்தானே. (௧)

வாரேற்றபறையொலியுஞ்சங்கொலியும்வந்தியம்ப
வூரேற்றசெல்வத்தோடோங்கியசீர்விழவோவாச்
சீரேற்றமுடைத்தாயசெங்காட்டங்குடியதனுட்
காரேற்றகொன்றையான்கணபதீச்சரத்தானே. (௨)

வரந்தையான்சோபுரத்தான்மந்திரத்தான்றந்திரத்தான்
கிரந்தையான்கோவணத்தான்கிங்கிணியான்கையதோர்
சிரந்தையான்செங்காட்டங்குடியான்செஞ்சடைசேருங்
கரந்தையான்வெண்ணீற்றான்கணபதீச்சரத்தானே. (௩)

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே. (௪)

பாலினானறுநெய்யாற்பழத்தினாற்பயின்றாட்டி
நூலினான்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (௫)

நுண்ணியானமிகப்பெரியானோவுளார்வாயுளான்
தண்ணியான்வெய்யானந்தலைமேலான்மனத்துளான்
றிண்ணியான்செங்காட்டங்குடியான்செஞ்சடைமதியக்
கண்ணியான்கண்ணுதலான்கணபதீச்சரத்தானே. (௬)

மையினார்மலர்நெடுங்கண்மலைமகளோர்பாகமா
மெய்யினான்பையரவமரைக்கசைத்தான்மீன்பிறழச்
செய்யினார்தண்கழனிச்செங்காட்டங்குடியதனுட்
கையினார்கூரெரியான்கணபதீச்சரத்தானே. (எ)

தோடுடையான்குழையுடையானரக்கன்றன்றோளடர்த்த
பீடுடையான்போர்விடையான்பெண்பாகமிகப்பெரியான்
சேடுடையான்செங்காட்டங்குடியுடையான்சேர்ந்தாடுங்
காடுடையானாடுடையான்கணபதீச்சரத்தானே. (அ)

ஆனூராவுழிதருவானன்றிருவர்தேர்ந்துணரா
வானூரான்வையகத்தான்வாழ்த்துவார்மனத்துளான்
தேனூரான்செங்காட்டங்குடியான்சிற்றம்பலத்தான்
கானூரான்கழுமலத்தான்கணபதீச்சரத்தானே. (கூ)

செடிநுகருஞ்சமணர்களுஞ்சீவரச்சாக்கியரும்
படிநுகராதயருழப்பார்க்கருளாதபண்பினன்
பொடிநுகருஞ்சிறுத்தொண்டர்க்கருள்செய்யும்பொருட்டாகக்
கடிநகராய்வீற்றிருந்தான்கணபதீச்சரத்தானே. (க0)

கறையிலங்குமலர்க்குவளைகண்காட்டக்கடிபொழிலின்
னறையிலங்குவயற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
சிறையிலங்குபுனற்படப்பைச்செங்காட்டங்குடிசேர்த்து
மறையிலங்குதமிழ்வல்லார்வானுலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கணபதீசுவரர், தேவியார் - திருக்குழல்மாதம்மை.

திருக்கோளிலி, பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளானபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
யாளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரனாமங்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளி
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (க)

ஆடரவத்தழகாமையணிகேழற்கொம்பார்த்த
தோடரவத்தொருகாதன்றுணைமலர்நற்சேவடிக்கே

பாடரவத்திசைபயின்றுபணிந்தெழுவார்தம்மனத்திற்
கோடரவந்தீர்க்குமவன்கோளிலியெம்பெருமானே. (௨)

நன்றுநகுநாண்மலரால்நல்லிருக்குமந்திரங்கொண்
டொன்றிவழிபாடுசெயலுற்றவன்றனோங்குயிர்மேற்
கன்றிவருகாலனுயிர்கண்டவனுக்கன்றளித்தான்
கொன்றைமலர்பொன்றிகழுங்கோளிலியெம்பெருமானே. (௩)

வந்தமணலாலிலிங்கமண்ணியின்கட்பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன்றன்கருமந்தேர்ந்துசிதைப்பான்வருமத்
தந்தைதனைச்சாடுதலுந்தண்டீசனென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தானகோளிலியெம்பெருமானே. (௪)

வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருணம்பியெனவேநினையும
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே. (௫)

தாவியவனுடனிருந்துங்காணாததற்பரனை
யாவிதனிலஞ்சொடுக்கியங்கணனென்றுதரிக்கு
நாவியல்சீர்நமிநந்தியடிகளுக்குநல்குமவன்
கோவியலும்பூவெழுகோற்கோளிலியெம்பெருமானே. (௬)

கன்னவிலுமால்வரையான்கார்திகழுமாமிடற்றான்
சொன்னவிலுமாமறையான்றோத்திரஞ்சேர்வாயினுளான்
மின்னவிலுஞ்செஞ்சடையான்வெண்பொடியானங்கையினிற்
கொன்னவிலுஞ்சூலத்தான்கோளிலியெம்பெருமானே. (௭)

அந்தரத்திற்றேரூருமரக்கன்மலையன்றெடுப்பச்
சுந்தரத்தன்றிருவிரலாலூன்றவவனுடல்நெரிந்து
மந்திரத்தமறைபாடவாளவனுக்கீந்தானுங்
கொந்தரத்தமதிச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (௮)

நாணமுடைவேதியனுநாரணனுநண்ணவொணாத்
தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை
பாணனிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
கோணவிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (௯)

தடுக்கமருஞ்சமணரொடுதக்கசாத்திரத்தவர்சொல்
விடுக்கண்வருமொழிகேளாதீசனையேயேத்துமின்க
ணடுக்கமிலாவமருலகநண்ணலுமாமண்ணல்கழல்
கொடுக்ககிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே. (௧௦)

நம்பனைநல்லடியார்கணாமுடைமாடென்றிருக்குங்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை

வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களீசனையே. (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-கோளிலியப்பர், தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பிரமபுரம், பல்பெயர்ப்பத்து - பண், தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

எரியார்மழுவொன்றேந்தியங்கையிடுதலையேகலனு
வரியார்வளையாரையம்வவ்வாய்மாநலம்வவ்வுதியே
சரியாநாவின்வேதகீதனன்றுமறைநான்முகத்தன்
பெரியான்பிரமன்பேணியாண்டபிரமபுரத்தானே. (க)

பெயலார்சடைக்கோர்திங்கள்சூடிபெய்பலிக்கென்றயலே
கயலார்தடங்கணஞ்சொல்நல்லார்கண்டுயில்வவ்வுதியே
இயலானடாவியின்பமெய்தியிந்திரனாள்மண்மேல்
வியலார்முரைசமோங்குசெம்மைவேணுபுரத்தானே. (உ)

நகலார்தலையும்வெண்பிறையுநளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்பாய்கலைவவ்வுதியே
யகலாதுறையுமாநிலத்திலயலின்மையாலமரர்
புகலால்மலிந்தபூம்புகலிமேவியபுண்ணியனே. (ங)

சங்கோடிலங்கத்தோடுபெய்துகாதிலோர்தாழ்குழைய
னங்கோல்வளையாரையம்வவ்வாயானலம்வவ்வுதியே
செங்கோல்நடாவிப்பல்லுயிர்கட்குஞ்செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன்மேவியாண்டவெங்குருமேயவனே. (ச)

தணிநீர்மதியஞ்சூடிநீடுதாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவாரையம்வவ்வாய்பெய்கலைவவ்வுதியே
யணிநீருலகமாகியெங்குமாழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத்தான்மிதந்ததோணிபுரத்தானே. (ரு)

கவர்பூம்புனலுந்தண்மதியுங்கமழ்சடைமாட்டயலே
யவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே
யவர்பூணரையர்க்காதியாயவடன்மன்னனாள்மண்மேற்
றவர்பூம்பதிகளெங்குமெங்குந்தங்குதராயவனே. (சு)

மூலையாள்கெழுமமொந்தைகொட்டமுன்கடைமாட்டயலே
நிலையாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்நீநலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ்வையமெல்லாந்தன்னதோராணைநடாய்ச்
சிலையால்மலிந்தசீர்ச்சிலம்பன்சிரபுரமேயவனே. (எ)

எருதேகொணர்கென்றேறியங்கையிடுதலையேகலனாக்
கருதேர்மடவாரையம்வவ்வாய்கண்டுயில்வவ்வுதியே
யொருதேர்கடாவியாரமருளொருபதுதோளுலையப்
பொருதேர்வலவன்மேவியாண்டபுறவமர்புண்ணியனே. (அ)

துவர்சேர்கலிங்கப்போர்வையாருந்தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக்கண்டவண்ணங்காரிகைவார்குழலா
ரவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற்சண்டனாளச்சண்பையமர்ந்தவனே. (கூ)

நிழலால்மலிந்தகொன்றைசூடிநீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவாரையம்வவ்வாய்கோல்வளைவவ்வுதியே
யழலாயுலகங்கவ்வைதீரவைந்தலைநீண்முடிய
கழல்நாகரையன்காவலாகக்காழியமர்ந்தவனே. (க0)

கட்டார்துளாயன்தாமரையானென்றிவர்காண்பரிய
சிட்டார்பலிதேர்ந்தையம்வவ்வாய்செய்கலைவவ்வுதியே
நட்டார்நடுவேநந்தனாளநல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடுத்ததண்வயல்சூழ்கொச்சையமர்ந்தவனே. (கக)

கடையார்கொடிநன்மாடவீதிக்கழுமலவூர்க்கவுணி
நடையார்பனுவன்மாலையாகஞானசம்பந்தனல்ல
படையார்மழுவன்றன்மேல்மொழிந்தபல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகளுலகில்நாளுமமருலகாள்பவரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணம், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையானிடமா
முறையால்முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்றிருப்பூவணமே. (க)

மருவார்மதிள்மூன்றொன்றவெய்துமாமலையானமடந்தை
யொருபால்பாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சாலியாலைமல்கிக்கழல்மன்னர்காத்தளித்த
திருவால்மலிந்தசேடர்வாழுந்தென்றிருப்பூவணமே. (உ)

போரார்மதமாவுரிவைபோர்த்துப்பொடியணிமேனியனுங்
காரார்கடனஞ்சமுண்டகண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப்புனல்வாய்ப்பரப்பிப்பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரிசேரநின்றதென்றிருப்பூவணமே. (ங)

கடியாரலங்கற்கொன்றைசூடிக்காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளையேறுகந்தகோவணவனிடமாம்
படியார்கூடிநீடியோங்குபல்புகழாற்பரவச்
செடியார்வைகைசூழநின்றதென்றிருப்பூவணமே. (௪)

கூரார்வாளிசிலையிற்கோத்துக்கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லிமெல்லியலாளோர்பால்மகிழ்ந்தானிடமா
மாராவன்பிற்றென்னர்சேரர்சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதிமாடநீடுதென்றிருப்பூவணமே. (௫)

நன்றுதீதென்றொன்றிலாதநான்மறையோன்கழலே
சென்றுபேணியேத்தநின்றதேவர்பிரானிடமாங்
குன்றிலொன்றியோங்கமல்குகுளிர்பொழில்சூழ்மலர்மேற்
றென்றலொன்றிமுன்றிலாருந்தென்றிருப்பூவணமே. (௬)

பைவாயரவமரையிற்சாத்திப்பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனிநீறுபூசியேறுகந்தானிடமாங்
கைவாழ்வளையார்மைந்தரோடுங்கலவியினால்நெருங்கிச்
செய்வார்தொழிலின்பாடலோவாத்தென்றிருப்பூவணமே. (௭)

மாடவீதிமன்னிலங்கைமன்னனைமாண்பழித்துக்
கூடவென்றிவாள்கொடுத்தாள்கொள்கையினார்க்கிடமாம்
பாடலோடுமாடலோங்கிப்பன்மணிபொன்கொழித்து
ஓடநீரால்வைகைசூழுமுயர்திருப்பூவணமே. (௮)

பொய்யாவேதநாவினானும்பூமகள்காதலனும்
கையாற்றொழுதுகழல்கள்போற்றக்கனலெரியானவனார்
மையார்பொழிலின்வண்டுபாடவைகைமணிகொழித்துச்
செய்யார்கமலந்தேனரும்புந்தென்றிருப்பூவணமே. (௯)

அலையார்புனலைநீத்தவருந்தேரருமன்புசெய்யா
நிலையாவண்ணமாயம்வைத்தநின்மலன்றன்னிடமா
மலைபோற்றுன்னிவென்றியோங்குமாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசைபரிசுபண்ணுந்தென்றிருப்பூவணமே. (௰)

திண்ணார்புரிசைமாடமோங்குதென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பேரியலின்றமிழால்
நண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது,

சுவாமிபெயர்-பூவணநாதர், தேவியார் - மின்னாம்பிகையம்மை.

காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம், பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அடையாதார்தம்புரங்கள்மூன்றுமாரழலில்லழுந்த
விடையார்மேனியராய்ச்சீறும்வித்தகர்மேயவிடம்
கடையார்மாடநீடியெங்குங்கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப்பட்டினஞ்சேர்பல்லவனீச்சரமே. (௧)

எண்ணாரெயில்கள்மூன்றுஞ்சீறுமெந்தைபிரானிமையோர்
கண்ணாயுலகங்காக்கநின்றகண்ணுதனண்ணுமிடம்
மண்ணார்சோலைக்கோலவண்டுவைகலுந்தேனருந்திப்
பண்ணார்செய்யும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௨)

மங்கையங்கோர்பாகமாகவாணிலவார்சடைமேற்
கங்கையங்கேவாழவைத்தகள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர்புணரியோதமீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௩)

தாரார்கொன்றைபொன்றயங்கச்சாத்தியமார்பகலம்
நீரார்நீறுசாந்தம்வைத்தநின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண்மாதர்மைந்தர்புக்கிசைபாடலினாற்
பாரார்கின்றபட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௪)

மைசேர்கண்டரண்டவாணர்வானவருந்துதிப்ப
மெய்சேர்கொடியரடியாரேத்தமேவியிருந்தவிடம்
கைசேர்வளையார்விழைவினொடுகாதன்மையாற்கழலே
பைசேரரவாரல்குலார்சேர்பல்லவனீச்சரமே. (௫)

குழலினோசைவீணைமொந்தைகொட்டமுழவதிரக்
கழலினோசையார்க்கவாடுங்கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங்கடலிலோதந்தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௬)

வெந்தலாயவேந்தன்வேள்விவேரறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன்பேணநின்றமைந்தன்மகிழ்ந்தவிடம்
மந்தலாயமல்லிகையும்புன்னைவளர்குரவின்
பந்தலாரும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௭)

தேரரக்கன்மால்வரையைத்தெற்றியெடுக்கவவன
ருரரக்குந்திண்முடிகளூன்றியசங்கரனூர்
காரரக்குங்கடல்கிளர்ந்தகாலமெலாமுணரப்
பாரரக்கம்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௮)

அங்கமாறும்வேதநான்குமோதுமயனெடுமாற்
றங்கணாலுநேடநின்றசங்கரன்றங்குமிடம்

வங்கமாருமுத்தமிப்பிவார்கடலூடலைப்பப்
பங்கமில்லார்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௯)

உண்டுடுக்கையின்றியேநின்றார்நகவேதிரிவார்
கண்டுடுக்கைமெய்யிற்போர்த்தார்கண்டறியாதவிடந்
தண்டுடுக்கைதாளந்தக்கைசாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண்டீரநல்கும்பல்லவனீச்சரமே. (௧௦)

பத்தரேத்தும்பட்டினத்துப்பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னையணிகொள்காழிஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச்செப்புமாந்தர்தீவினைநோயிலராா
யொத்தமைந்தவும்பர்வானிலுயர்வினோடோங்குவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பல்லவனேசர், தேவியார்-சவுந்தராம்பிகையம்மை.

திருச்சண்பைநகர், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பங்கமேறுமதிசேர்சடையார்விடையார்பலவேத
மங்கமாறுமறைநான்கவையுமானார்மீனுரும்
வங்கமேவுங்கடல்வாழ்பரதர்மனைக்கேநுனைமூக்கின்
சங்கமேறிமுத்தமீனுஞ்சண்பைநகராரே. (௧)

சூதகஞ்சேர்கொங்கையாளோர்பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர்புண்ணணியனார்பூதகணநாதர்
மேதகஞ்சேர்மேகமந்தன்சோலையில்விண்ணார்ந்த
சாதகஞ்சேர்பாளைநீர்சேர்சண்பைநகராரே. (௨)

மகரத்தாடுகொடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத்தேவிக்கருள்செய்நீலகண்டனார்
பகரத்தாராவன்னம்புகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகராரே. (௩)

மொய்வல்லசுரர்தேவர்கடைந்தமுழுநஞ்சதுவுண்ட
தெய்வர்செய்யவுருவாகரியகண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங்கத்தர்கரியினுரியர்காதலாற்
சைவர்பாசுபதர்கள்வணங்குஞ்சண்பைநகராரே. (௪)

கலமார்கடலுள்விடமுண்டமரர்க்கமுதமருள்செய்த
குலமார்கயிலைக்குன்றதுடையகொல்லையெருதேறி
நலமார்வெள்ளைநாவரிகேரம்விரியாநறும்பாளை
சலமார்கரியின்மருப்புக்காட்டுஞ்சண்பைநகராரே.

மாகரஞ்சேரத்தியின்றோல்போர்த்துமெய்ம்மாலான்
சூகரஞ்சேரெயிறுபூண்டசோதியன்மேதக்க
வாகரஞ்சேரிப்பிமுத்தையந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர்திரைகளுந்துஞ்சண்பைநகராரே. (௬-௭)

இருளைப்புரையுநிறத்திலரக்கன்றன்னையீடழித்
தருளைச்செய்யுமம்மானேராரந்தண்கநத்தின்
மருளைச்சுரும்புபாடியளக்கர்வரையார்திரைக்கையாற்
றாளத்தோடுபவளமீனுஞ்சண்பைநகராரே. (௮)

மண்டான்முழுதுமுண்டமாலுமலர்மிசைமேலயனு
மெண்டானறியாவண்ணநின்றவிறைவன்மறையோதி
தண்டார்குவளைக்கள்ளருந்தித்தாமரைத்தாதின்மேற்
பண்டான்கொண்டுவண்டுபாடுஞ்சண்பைநகராரே. (௯)

போதியாரும்பிண்டியாரும்புகழலசொன்னாலு
நீதியாகக்கொண்டங்கருளுநிமலனிருநான்கின்
மாதிசித்தர்மாமறையின்மன்னியதொன்னூலர்
சாதிகீதர்வர்த்தமானர்சண்பைநகராரே. (௧௦)

வந்தியோடுபூசையல்லாப்போழ்தினமறைபேசிச்
சந்திபோதிற்சமாதிசெய்யுஞ்சண்பைநகர்மேய
வந்திவண்ணன்றன்னையழகார்ஞானசம்பந்தனசொற்
சிந்தைசெய்துபாடவல்லார்சிவகதிசேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (௧)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராறோடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (௨)

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பறைபோல்விழிகட்பே
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக
னறையுமலர்கொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. (௩)

உரமன்னுயர்கோட்டுலேறுகூகையலறுமயாநத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. (ச)

குலவெஞ்சிலையால்மதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலுமபயிலுங்கடல்போற்காவேரி
நலமஞ்சுடையநறுமாங்கனிகள்குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனநகராரே. (ரு)

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவின்னொலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிளெய்தா
ரீளைப்படுகிலிலையார்தெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகினபழம்வீழ்சோலைப்பழனநகராரே. (சு)

பொய்யாமொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றார்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
கையாடலினார்புனலால்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. (எ)

ஞ்சோங்குயரமுடையான்மலையைமாறுயெடுத்தான்றோ
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. (அ)

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலைகமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
நெடியானீடாமரைமேலயனுநேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே (கூ)

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கலவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோராரார்பாராட்ட
வண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. (க0)

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ளுவுய்த்தனையதிறலால்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (கக)

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் — ஆபத்சகாயர், தேவியார் — பெரியநாயகியம்மை.

ஸ்ரீகயிலாயம், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொலிகொளுருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பிற்
கடிகொள்கொன்றைகலந்தநீற்றர்கறைசேர்கண்டத்த
ரிடியகுரலாலிரியுமடங்கறொடங்குமுனைச்சாரற்
கடியவிடைமேற்கொடியொன்றுடையார்கயிலைமலையாரே. (க)

புரிகொள்சடையாரடியர்க்கெளியார்கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில்வைத்துகந்ததேவர்பெருமானார்
பரியகளிற்றையரவுவிழுங்கிமழுங்கவிருள்கூர்ந்த
கரியமிடற்றர்செய்யமேனிக்கயிலைமலையாரே. (உ)

மாவினுரிவைமங்கைவெருவமூடிமுடிதன்மேல்
மேவுமதியுநதியும்வைத்தவிறைவர்கழலுன்னுந்
தேவதேவர்திரிசூலத்தர்திரங்கன்முகவன்சேர்
காவும்பொழிலுங்கடுங்கற்சுனைசூழ்கயிலைமலையாரே. (௩)

முந்நீர்சூழ்ந்தநஞ்சமுண்டமுதல்வர்மதனன்றன்
றென்னீருருவமழியத்திருக்கண்சிவந்தநுதலினார்
மன்னீர்மடுவும்படுகல்லறையினுழுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமேலிரைமுன்றேடுங்கயிலைமலையாரே. (௪)

ஒன்றும்பலவுமாயவேடத்தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்துநாடற்குரியார்கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளிற்றிகைத்தகரிதண்சாரல்நெறியோடிக்
கன்றும்பிடியுமடிவாரஞ்சேர்கயிலைமலையாரே. (௫)

தாதார்கொன்றைதயங்குமுடியர்முயங்குமடவாளைப்
போதார்பாகமாகவைத்தபுனிதர்பனிமல்கு
மூதாருலகில்முனிவருடனாயறநான்கருள்செய்த
காதார்குழையர்வேதத்திரளர்கயிலைமலையாரே. (௬-௭)

தொடுத்தார்புரமூன்றெரியச்சிலைமேலெரியொண்பகழியா
லெடுத்தான்றிரடோள்முடிகள்பத்துமிடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள்கொண்டாராளாக்குறுகிவருங்கூற்றைக்
கடுத்தாங்கவனைக்கழலாலுதைத்தார்கயிலைமலையாரே. (௮)

ஊணாப்பலிகொண்டுலகிலேற்றாரிலகுமணிநாகம்
பூணாணாரமாகப்பூண்டார்புகழுமிருவர்தாம்
பேணாவோடிநேடவெங்கும்பிறங்குமெரியாகிக்
காணாவண்ணமுயர்ந்தார்போலுங்கயிலைமலையாரே. (௯)

விருதுபகரும்வெஞ்சொற்சமணர்வஞ்சச்சாக்கியர்
பொருதுபகருமொழியைக்கொள்ளார்புகழ்வார்க்கணியரா
யெருதொன்றுகைத்திங்கிடுவார்தம்பாலிரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ணமுடையார்போலுங்கயிலைமலையாரே. (௧௦)

போரார்கடலிற்புனல்சூழ்காழிப்புகழார்சம்பந்தன்
காரார்மேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேற்
றேராதுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானோருலகின்மருவுமனத்தாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கயிலாயநாதர், தேவியார் - பார்வதியம்மை.

திரு அண்ணாமலை, பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (௨)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௩)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (௪)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளைவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (௫)

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்

கனைத்தமேதிகாணாதாயன்கைமேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (௬)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகள்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௭)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ணிறந்தான்முறியநெரியவூன்றிநிறையவருள்செய்தா
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (௮)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றாடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. (௯)

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. (௧0)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு ஈங்கோய்மலை - பண், தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனொத்தனமென்மொழிமான்விழியாள்தேவிபாகமாக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௧)

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாக
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனா
ரேலத்தொடுநல்லிலவங்கமழுமீங்கோய்மலையாரே. (௨)

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றார்கரியினுரிதோலார்
விண்கொள்மதிசேர்சடையார்விடையார்கொடியார்வெண்ணீறு

பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெமையாள்வா
ரெண்குமரியுந்திரியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௩)

மறையின்னிசையார்நெறிமென்கூந்தன்மலையான்மகளோடுங்
குறைவெண்பிறையும்புனலுந்நிலவுங்குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடு
மிறைவர்சிறைவண்டறைபூஞ்சாரலீங்கோய்மலையாரே. (௪)

நொந்தசுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள்பலவுநிலவுகமழ்புன்சடைதாழப்
பந்தொண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடு
மெந்தமடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. (௫)

நீறாரகலமுடையார்நிரையார்கொன்றையரவோடு
மாறார்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றுஞ்
சீறாவெரிசெய்தேவர்பெருமான்செங்கணடல்வெள்ளை
யேறார்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (௬)

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல்மதியஞ்சூடுநம்பர்நலமல்கு
தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்து
மெனையாளுடையானுமையாளோடுமீங்கோய்மலையாரே. (௭)

பரக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
வரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரல்தன்னா
னெருக்கியடர்த்துநிமலாபோற்றியென்றுநின்றேத்த
விரக்கம்புரிந்தாருமையாளோடுமீங்கோயமலையாரே. (௮)

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதுடனாயாடல்பேணும்பெம்மான்றிருமேனி
யரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே. (௯)

பிண்டியென்றுபெயராநிற்கும்பிணங்குஞ்சமணரு
மண்டைகலனாக்கொண்டுதிரியுமதியில்தேரரு
முண்டிவயிறாருரைகள்கொள்ளாதுமையோடுடனாகி
இண்டைச்சடையானிமையோர்பெருமானீங்கோய்மலையாரே. (௧௦)

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநறையூர்ச்சித்தீச்சரம், பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பிறைகொள்சடையர்புலியினுரியர்பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர்கபாலமேந்துங்கையர்கங்காளர்
மறைகொள்கீதம்பாடச்சேடர்மனையில்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டுதேனார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (க)

பொங்கார்சடையர்புனலரனலர்பூதம்பாடவே
தங்காதலியுந்தாமுமுடனாய்த்தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றைவன்னிமத்தஞ்சூடிகுளிர்பொய்கைச்
செங்காலன்னம்பெடையுஞ்சேருஞ்சித்தீச்சரத்தாரே. (உ)

முடிகொள்சடையர்முளைவெண்மதியர்மூவர்மேனிமேற்
பொடிகொணூலர்புலியினதளர்புரிபுன்சடைதாழக்
கடிகொள்சோலைவயல்சூழ்மடுவிற்கயலாரினம்பாயக்
கொடிகொள்மாடக்குழாமார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ங)

பின்றாழ்சடைமேனகுவெண்டலையர்பிரமனறலையேந்தி
மின்றாழுருவிற்சங்கார்குழைதான்மிளிருமொருகாதர்
பொன்றாழ்கொன்றைசெருந்திபுன்னைபொருந்துசெண்பகஞ்
சென்றார்செல்வத்திருவார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ச)

நீரார்முடியர்கறைகொள்கண்டர்மறைகணிறைநாவர்
பாரார்புகழாற்பத்தர்சித்தர்பாடியாடவே.
தேரார்வீதிமுழவார்விழவினொலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம்பொலியுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ரு)

நீண்டசடையர்நிரைகொள்கொன்றைவிரைகொள்மலர்மாலை
தூண்டுசுடர்பொன்னொளிகொள்மேனிப்பவளத்தெழிலார்வந்
தீண்டுமாடமெழிலார்சோலையிலங்குங்கோபுரந்
தீண்டுமதியந்திகழுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (சா)

குழலார்சடையர்கொக்கினிறகர்கோலநிறமத்தந்
தழலார்மேனித்தவளநீற்றர்சரிகோவணக்கீள
ரெழிலார்நாகம்புலியினுடைமேலிசைத்துவிடையேறிக்
கழலார்சிலம்புபுலம்பவருவார்சித்தீச்சரத்தாரே. (எ)

கரையார்கடல்சூழிலங்கைமன்னன்கயிலைமலைதன்னை
வரையார்தோளாலெடுக்கமுடிகணெரிந்துமனமொன்றி
யுரையார்கீதம்பாடநல்லவுலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ்செல்வநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (அ)

நெடியான்பிரமனேடிக்காணார்நினைப்பார்மனத்தாரா
யடியாரவருமருமாமறையுமண்டத்தமரரு

முடியால்வணங்கிக்குணங்களேத்திமுதல்வாவருளென்னச்
செடியார்செங்நெற்றிகழுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (கூ)

நின்றுண்சமணரிருந்துண்டேரநீண்டபோர்வையா
ரொன்றுமுணராவூமர்வாயிலுரைகேட்டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பாலுண்ணமுலையிற்கபாலமயல்பொழியச்
சென்றுண்டார்ந்துசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (க0)

குயிலார்கோலமாதவிகள்குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கைசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலைசூழ்ந்தகாழிமல்குசம்பந்தன்
பயில்வார்க்கினியபாடல்வல்லார்பாவநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடந்தைக் காரோணம்-பண், தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கிற்
காரார்கண்டத்தெண்டோளெந்தைகாரோணத்தாரே. (க)

முடியார்மன்னர்மடமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பவளவாயார்பலரும்பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாரும்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. (உ)

மலையார்மங்கைபங்கரங்கையனலர்மடலாரும்
குலையார்தெங்குகுளிர்கொள்வாழையழகார்குடமூக்கின்
முலையாரணிபொன்முளைவெண்ணகையார்மூவாமதியினார்
கலையார்மொழியார்காதல்செய்யுங்காரோணத்தாரே. (ங)

போதார்புனல்சேர்கந்தமுந்திப்பொலியவழகாரும்
தாதார்பொழில்சூழ்ந்தெழிலார்புறவிலந்தண்குடமூக்கில்
மாதார்மங்கைபாகமாகமனைகள்பலிதேர்வார்
காதார்குழையர்காளகண்டர்காரோணத்தாரே. (ச)

பூவார்பொய்கையலர்தாமரைசெங்கழுநீர்புறவெல்லாந்
தேவார்சிந்தையந்தணாளர்சீராலடிபோற்றக்
கூவார்குயில்களாலுமயில்களின்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந்தழகார்குடந்தைக்காரோணத்தாரே. (ரு)

மூப்பூர்நலியநெதியார்விதியாய்முன்னேயனல்வாளி
கோப்பார்பார்த்தனிலைகண்டருளுங்குழகர்குடமூக்கிற்

நீர்ப்பாருடலிலடுனேயவலம்வினைகணலியாமைக்
காப்பார்காலனடையாவண்ணங்காரோணத்தாரே. (௬)

ஊனார்தலைகையேந்தியுலகம்பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானார்தோலார்புலியினுடையார்கரியினுரிபோர்வை
தேனார்மொழியார்திளைத்தங்காடித்திகழுங்குடமூக்கிற்
கானார்நட்டமுடையார்செல்வக்காரோணத்தாரே. (௭)

வரையார்திரடோள்மதவாளரக்கனெடுப்பமலைசேரும்
விரையார்பாதநுதியாலூன்றநெரிந்துசிரம்பத்து
முரையார்கீதம்பாடக்கேட்டங்கொளிவாள்கொடுத்தாருங்
கரையார்பொன்னிசூழ்தண்குடந்தைக்காரோணத்தாரே. (௮)

கரியமாலுஞ்செய்யபூமேலயனுங்கழறிப்போ
யரியவண்டந்தேடிப்புக்குமளக்கவொண்கிலார்
தெரியவரியதேவர்செல்வந்திகழுங்குடமூக்கிற்
கரியகண்டர்காலகாலர்காரோணத்தாரே. (௯)

நாணாரமணர்நல்லதறியார்நாளுங்குரத்திகள்
பேணார்தூமெய்மாசுகழியார்பேசேலவரோடுஞ்
சேணார்மதிதோய்மாடமல்குசெல்வநெடுவீதிக்
கோணாகரமென்றுடையார்குடந்தைக்காரோணத்தாரே. (௧0)

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தாரைத்
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்த
னுருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்துக்
கருவாரிடும்பைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சோமநாதர், தேவியார்-தேனார்மொழியம்மை.

திருக்கானூர், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனார்போதுதானார்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
கானூர்மேயகண்ணார்நெற்றியானூர்செல்வரே. (௧)

தீந்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோ
ரேய்ந்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாரப்
போந்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாங்
காந்தள்விம்முகானூர்மேயகாந்கணீ்மரே. (௨)

சிறையார்வண்டுந்தேனும்விம்முசெய்யமலர்க்கொன்றை
மறையார்பாடலாடலோடுமால்விடைமேல்வருவார்
இறையார்வந்தெனில்புகுந்தென்னெழில்நலமுங்கொண்டார்
கறையார்சோலைக்கானூர்மேயபிறையார்சடையாரே. (௩)

விண்ணார்திங்கட்கண்ணிவெள்ளைமாலையதுசூடித்
தண்ணாரக்கோடாமைபூண்டுதழைபுன்சடைதாழ
வெண்ணாவந்தெனில்புகுந்தங்கெவ்வநோய்செய்தான்
கண்ணார்சோலைக்கானூர்மேயவிண்ணோர்பெருமானே. (௪)

தார்கொள்கொன்றைக்கண்ணியோடுந்தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடலாடலோடுசேடராய்வந்து
ஊர்கடோறுமையமேற்றென்னுள்ளேவெவ்வநோய்செய்தார்
கார்கொள்சோலைக்கானூர்மேயகறைக்கண்டத்தாரே. (௫)

முளிவெள்ளெலும்புநீறுநூலுமூழ்குமார்பரா
யெளிவந்தார்போலையமென்றெனில்லேபுகுந்துள்ளத்
தெளிவுநாணுங்கொண்டகள்வர்தேறலார்பூவிம்
களிவண்டியாழ்செய்கானூர்மேயவொளிவெண்பிறையாரே. (௬)

மூவாவண்ணர்முளைவெண்பிறையர்முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றைபுனைந்துவந்தார்பொக்கம்பலபேசிப்
போவார்போலமால்செய்துள்ளம்புக்கபுரிநூலர்
தேவார்சோலைக்கானூர்மேயதேவதேவரே. (௭)

தமிழினீர்மைபேசித்தாளம்வீணைபண்ணிநல்ல
முழவமொந்தைமல்குபாடல்செய்கையிடமோவார்
குமிழின்மேனிதந்துகோலநீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக்கானூர்மேயபவளவண்ணரே. (௮)

அந்தமாதியயனுமாலுமார்க்குமறிவரியான்
சிந்தையுள்ளுநாவின்மேலுஞ்சென்னியுமன்னினான்
வந்தெனுள்ளம்புகுந்துமாலைகாலையாடுவான்
கந்தமல்குகானூர்மேயவெந்தைபெம்மானே. (௯)

ஆமையரவோடேனவெண்கொம்பக்குமாலைபூண்
டாமோர்கள்வர்வெள்ளர்போலவுள்வெந்நோய்செய்தா
ரோமவேதநான்முகனுங்கோணுகண்ணையானுஞ்
சேமமாயசெல்வர்கானூர்மேயசேடரே. (௰)

கழுதுதுஞ்சுங்கங்குலாடுங்கானூர்மேயானைப்
பழுதில்ஞானசம்பந்தன்சொற்பத்தும்பாடியே

தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துநின்
றழுதுநக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்மேனிநாயகர், தேவியார் - சிவயோகநாயகியம்மை.

திருப்புறவம், பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நறவநிறைவண்டறைதார்க்கொன்றைநயந்துநயநத்தாற்
சுறவஞ்செறிவண்கொடியோனுடலம்பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண்பதியாமதியார்புரமூன்றெரிசெய்த
விறைவனறவனிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௧)

உரவன்புலியினுரிதோலாடையுடைமேற்படநாகம்
விரவிவிரிபூங்கச்சாவசைத்தவிகிர்தனுகிர்தன்னாற்
பொருவெங்களிறுபிளிறவுரித்துப்புறவம்பதியாக
விரவும்பகலுமிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௨)

பந்தமுடையபூதம்பாடப்பாதஞ்சிலம்பார்க்க
கந்தமல்குகுழலிகாணக்கரிகாட்டெரியாடி
யந்தண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாவமர்வெய்தி
யெந்தம்பெருமானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௩)

நினைவார்நினையவினியான்பனியார்மலர்தூய்நித்தலுங்
கனையார்விடையொன்றுடையான்கங்கைதிங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின்முடியான்கடல்சூழ்புறவம்பதியாக
வெனையாளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௪)

செங்கணரவுநகுவெண்டலையுமுகிழ்வெண்டிங்களுந்
தங்குசடையன்விடையனுடையன்சரிகோவணவாடை
பொங்குதிரைவண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
வெங்கும்பரவியிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௫)

பின்னுசடைகடாழக்கேழலெயிறுபிறழப்போ
யன்னநடையார்மனைகடோறுமழகார்பலிதேர்ந்து
புன்னைமடலின்பொழில்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
வென்னையுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௬)

உண்ணற்கரியநஞ்சையுண்டொருதோழந்தேவர் *
விண்ணிற்பொலியவமுதமளித்தவிடைசேர்கொடியண்ணல்

பண்ணிற்சிறைவண்டறைபூஞ்சோலைப்புறவம்பதியாக
வெண்ணிற்சிறந்தவிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௭)

விண்டானதிரவியனார்கயிலைவேரோடெடுத்தான்றன்
றிண்டோளுடலுமுடியுநெரியச்சிறிதேயூன்றிய
புண்டானொழியவருள்செய்பெருமான்புறவம்பதியாக
வெண்டோளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௮)

நெடியானீடாமரைமேலயனுநேடிக்காண்கிலாப்
படியாமேனியுடையான்பவளவரைபோற்றிருமார்பிற்
பொடியார்கோலமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
விடியார்முழவாரிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௯)

ஆலுமயிலின்பீலியமணரறிவில்சிறுதேரர்
கோலுமொழிகளொழியக்குழுவுந்தழலுமெழில்வானும்
போலும்வடிவுமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
வேலும்வகையாலிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௧௦)

பொன்னார்மாடநீடுஞ்செல்வப்புறவம்பதியாக
மின்னாரிடையாளுமையாளோடுமிருந்தவிமலனைத்
தன்னார்வஞ்செய்தமிழின்விரகனுரைத்ததமிழ்மாலை
பன்னாள்பாடியாடப்பிரியார்பரலோகந்தானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவெங்குரு, பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காலைநன்மாமலர்கொண்டடிபரவிக்கைதொழுமாணியைக்கறுத்தவெங்கால
னோலமிடமுன்னுயிரொடுமாளவுதைத்தவ னுமையவள்விருப்பனெம்பெருமா
மாலைவந்தணுகவோதம்வந்துலவிமறிதிரைசங்கொடுபவளமுந்தி [ன்
வேலைவந்தணையுஞ்சோலைகள்சூழ்ந்தவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௧)

பெண்ணினைப்பாகமமர்ந்துசெஞ்சடைமேற் பிறையொடுமரவினையணிந்தழகாக
பண்ணினைப்பாடியாடிமுன்பலிகொள்பரமரெம்மடிகளார்பரிசுகள்பே ணி [
மண்ணினைமூடிவான்முகடேறிமறிதிரைகடன்முகந்தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கிவந்திழிகோயில்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௨

ஓரியல்பில்லாவுருவமதாகியொண்டிறல்வேடனதுருவதுகொண்டு
காரிகைகாணத்தனஞ்சயன்றன்னைக்கறுத்தவர்களித்துடன்காதல்செய்பெருமா
னேரிசையாகவறுபதமுரன்றுநறுமலர்த்தாதுகள்மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும்விம்மியசோலைவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௩)

வண்டணைகொன்றைவன்னியுமத்தமருவியகூவிளமெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர்விடையினர்பூதங்கொடுகொட்டிகுடமுழாக்கூடியுமுழவட்
பண்டிகழ்வாகப்பாடியோர்வேதம்பயில்வர் முன்பாய்புனற்கங்கையைச்சடைமே
ல், வெண்பிறைசூடியுமையவளோடும்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௫)

சடையினர்மேனிநீறதுபூசித்தக்கைகொள்பொக்கணமிட்டுடனாகக்
கடைதொறும்வந்துபலியதுகொண்டுகண்டவர்மனமவைகவர்ந்தழகாகப்
படையதுவேந்திப்பங்கயக்கண்ணியுமையவள்பாகமுமமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ்சூழ்தரச்சென்றுவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௬)

கரைபொருகடலிற்றிரையதுமோதக்கங்குல்வந்தேறியசங்கமுமிப்பி
புரையுடைமுத்தமணலிடைவைகிப்போய்குவானிருளறத்துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம்போற்றுபூசுரர்கள்புரிந்தவர்நலங்கொளாகுதியினில்நிறைந்த
விரைமலிதூபம்விசும்பினைமறைக்குமவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௭

வல்லிநுண்ணிடையாளுமையவடன்னைமறுகிடவருமதகளிற்றினைமயங்க
வொல்லையிற்பிடித்தங்குரித்தவள்வெருவல்கெடுத்தவர்விரிபொழின்மிகுதிருவா
னல்லறமுரைத்துஞானமோடிருப்பநலிந்திடலுற்றுவந்தவக்கருப்பு [வி
வில்லியைப்பொடிபடவிழித்தவாவிரும்பிவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (

பாங்கிலாவரக்கன்கயிலையன்றெடுப்பப்பலதலைமுடியொடுதோளவைநெரிய
வோங்கியவிரலாலூன்றியன்றவற்கேயொளிதிகழ்வாளதுகொடுத்தழகாய
கோங்கொடுசெருந்திகூவிளமத்தங்கொன்றையுங்குலாவியசெஞ்சடைச்செல்வா
வேங்கைபொன்மலரார்விரைதருகோயில்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே.(

ஆறுடைச்சடையெம்மடிகளைக்காணவரியொடுபிரமனுமளப்பதற்காகிச் [ண்
சேறிடைதிகழ்வானத்திடைபுக்குச்செலவறத்தவிர்ந்தனரெழிலுடைத்திகழ்வெ
ணீறுடைக்கோலமேனியர்நெற்றிக்கண்ணினர்விண்ணவர்கைதொழுதேத்த
வேறெமையாளவிரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௯

பாடுடைக்குண்டர்சாக்கியர்சமணர்பயிறருமறவுரைவிட்டழகாக [செய்து
வேடுடைமலராள்பொருட்டுவன்றக்கனெல்லையிலவேள்வியைத்தகர்த்தருள்
காடிடைக்கடிநாய்கலந்துடன்சூழக்கண்டவர்வெருவுறவிளித்துவெய்தாய
வேடுடைக்கோலம்விரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௧௦

விண்ணியல்விமானம்விரும்பியபெருமானவெங்குருமேவியுள்வீற்றிருந்தானை
நண்ணியநூலன்ஞானசம்பந்தனவின்றவிவ்வாய்மொழிநலமிகுபத்தும்
பண்ணியல்பாகப்பத்திமையாலேபாடியுமாடியும்பயிலவல்லார்கள்
விண்ணவர்விமானங்கொடுவரவேறிவியனுலகாண்டுவீற்றிருப்பவர்தாமே. (௧௧

திருச்சிற்றம்பலம்.

திரு இலம்பையங்கோட்டூர், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறுமாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தானநிலையினானெனதுரைதனதுரையாகநீறணிந்தேறுகந்தேறியநிமலன், கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக்கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலு,மிலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே.* (௧)

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்றேவர்கடலைமகன்றிருக்கழிப்பாலை, நிருபமனெனதுரைதனதுரையாகநீறணிந்தேறுகந்தேறியநிமலன், கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளைகதிர்முலையிளையவர்மதிமுகத்துலவு, மிருமலர்த்தண்பொய்கையிலம்பையங்கோட்டூரிருக்கையாப் பேணியெனனெழில்கொள்வதியல்பே. (௨)

பாலனும்விருத்தனும்பசுபதிதானும்பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளுங், காலனுமெனதுரைதனதுரையாகக்கனலெரியங்கையிலேந்தியகடவுள், நீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்யநீர்மலர்க்குவளைகடாதுவிண்டெங்கு, மேலநாறும்பொழிலிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. (௩)

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்ப னொற்றியூருறையுமண்ணுமலையண்ணல், விளம்புவானெனதுரைதனதுரையாகவெள்ளநீர்விரிசடைதாங்கியவிமலன், குளம்புறக்கலைதுளமலைகளுஞ்சிலம்பக்கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள, விளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௪)

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானாய்த்தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில், வானுமாமெனதுரைதனதுரையாகவரியராவரைக் கசைத்துழிதருமைந்தன், கானமான்வெருவுறக்கருவிரலூகங்கடுவனொடுகளுமூர்கற்கடுஞ்சார, லேனமானுழிதருமிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணி யென்னெழில்கொள்வதியல்பே. (௫)

மனமுலாமடியவர்க்கருள்புரிகின்ற வகையலாற்பலிதிரிந்துண்பிலான்மற்றோர், தனமிலானெனதுரைதனதுரையாகத் தாழ்சடையிளமதிதாங்கியதலைவன், புனமெலாமருவிகளிருவிசேர்முத்தம் பொன்னொடுமணிகொழித்தீண்டிவந்தெங்கு, மினமெலாமடைகரையிலம்பையங் கோட்டூரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௬)

நீருளான்றீயுளானந்தரத்துள்ளானினைப் பவர்மனத்துளானித்த மாமேவத்தூருளானெனதுரைதன்துரையாகவொற்றை வெள்ளேறுகந்தேறியவொருவன், பாருளார்பாடலொடாடலறாதபண்முரன்றஞ்சிறைவண்டினம்பாடு, மேருளார்

பைம்பொழிலிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதிய ல்பே. (எ)

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கைவேந்தனதடக்கைகளடர்த்தவனுலகி, லாருலாமெனதுரைதனதுரையாகவாகமோரரவணிந்துழிதருமண்ணல், வாரு லாநல்லனமாக்களுஞ்சாரவாரணமுழிதருமல்லலங்கான, லேருலாம்பொழிலணி யிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (அ)

கிளர்மழைதாங்கினானும்முகமுடையோன் கீழடிமேன்முடிதேர்ந்தளக்கில் லா, வுளமழையெனதுரைதனதுரையாகவொள்ளழ லங்கையிலேந்தியவொருவ ன், வளமழையெனக்கழைவளர் துளிசோரமாசுணமுழிதருமணியணிமாலை,இள மழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ ரிருக்கையாப்பேணியென்னெழில்கொ ள்வதியல்பே. (கூ)

உரிஞ்சனகூறைகளுடம்பினராகி யுழிதருஞ்சமணருஞ்சாக்கியப்பேய்கள், பெருஞ்செல்வனெனதுரைதனதுரையாகப் பெய்பலிக்கென்றுழல்பெரியவர்பெ ருமான், கருஞ்சுனைமுல்லைநன்பொன்னடைவேங்கைகளிமுக வண்டொடுதேனி னமுரலு,மிருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டூரிருக்கையாப்பேணியென்னெ ழில்கொள்வதியல்பே. (கo)

கந்தனைமலிகனைகடலொலியோதங்கானலங்கழிவளரகழுமலமென்னு,நகரி யாருறைபதிநான்மறைநாவனற்றமிழ்க்கினதுணைஞானசம்பந்த, னெந்தையார்வ ளநகரிலம்பையங்கோட்டூ ரிசையொடுகூடியபத்துமவல்லாரபோய், வெந்துயர் கெடுகிடவிண்ணவரோடும்வீடுபெறினமையின்வீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சந்திரசேகரர், தேவியார்-கோடேந்துமுலையம்மை.

திருஅச்சிறுபாக்கம், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப்பொருகடற்பவளமொடழனிறம்புரை யக், குன்றிரண்டன்னதோளுடையகலங்குலாய வெண்ணூலொடுகொழும்பொ டியணிபவர், மின்றிரண்டன்னநுண்ணிடையரிவைமெல்லியலாளையோர்பாகமா ப்பேணி, யன்றிரண்டுருவமாயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.(க)

தேனினுமினியர்பாலனநீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடிதொழுவா, ரூன யந்துருகவுவகைகடருவாருச்சிமேலுறைபவரொன்றலாதூரார், வானகமிறந்து வையகம் ...ங்கவயங்கொளநிற்பதோர்வடிவினையுடையா,ரானையினுரிவைபோ ர்த்த... டிக ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (உ)

காரிருளுருவமால்வரைபுரையக்களிற்றினதுரிவை கொண்டரிவைமேலோ ம . நீரரமகளைநிமிர்சடைத்தாங்கிநீறணிந்தேறுகந்தேறியமலர், பேரருளாள

பிறவியிற்சேரார்பிணியிலர் கேடிலாப்பேய்க்கணஞ்சூழ, வாரிருண்மாலையாடு மெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௩)

மைம்மலர்க்கோதைமார்பினரெனவுமலைமகளவளொடுமருவினரெனவுஞ் செம்மலர்ப்பிறையுஞ்சிறையணிபுனலுஞ்சென்னிமேலுடையரெஞ் சென்னிமேலுறைவார், தம்மலரடியென்றடியவர்பரவத்தமிழ்ச்சொலும்வடசொலுந்தாணிழற்சேர, வம்மலர்க்கொன்றையணிந்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௪)

விண்ணுலாமதியஞ்சூடினரெனவும் விரிசடையுள்ளதுவெள்ளநீரெனவும், பண்ணுலாமறைகள்பாடினரெனவும்பலபுகழல்லதுபழியிலரெனவு, மெண்ணலாகாதவிமையவர்நாளுமேத்தரவங்களோடெழில்பெறநின்ற, வண்ணலாரூர்தியேறுமெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௫)

நீடிருஞ்சடைமேலிளம்பிறைதுளங்க நிழறிகழ்மழுவொடுநீறுமெய்பூசித், தோடொருகாதினிற்பெய்துவெய்தாயசுடலையிலாடுவர்தோலுடையாகக், காடரங்காகக்கங்குலும்பகலுங்கழுதொடுபாரிடங்கைதொழுதேத்த, வாடரவாடவாடுமெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௬)

ஏறுமொன்றேறிநீறுமெய்பூசியிளங்கிளையரிவையோடொருங்குடனாகிக், கூறுமொன்றருளிக்கொன்றையந்தாருங்குளிரிளமதியமுங்கூவிளமலரு, நாறுமல்லிகையுமெருக்கொடுமுருக்குமகிழிளவன்னியுமிவைநலம்பகர, வாறுமோர்சடைமேலணிந்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௭)

கச்சுமொள்வாளுங்கட்டியவுடையாகதிர்முடிசுடர்விடக்கவரியுங்குடையும் பிச்சமும்பிறவும்பெண்ணணங்காயபிறைநுதலவர்தமைப்பெரியவர்பேணப், பச்சமும்வலியுங்கருதியவரக்கன்பருவரையெடுத்ததிண்டோள்களையடர்வித், தச்சமுமருளுங்கொடுத்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௮)

நோற்றலாரேனும்வேட்டலாரேனுநுகர்புகர்சாந்தமோடேந்தியமாலைக், கூற்றலாரேனுமின்னவாரென்றுமெய்தலாகாததோரியல்பினையுடையார், தோற்றலார்மாலுநான்முகமுடையதோன்றலுமடியொடுமுடியுறத்தங்க, ளாற்றலாற்காணாராயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௯)

வாதுசெய்சமணுஞ்சாக்கியப்பேய்கணல்வினைநீக்கியவல்வினையாள, ரோதியுங்கேட்டுமுணர்வினையிலாதாருள்கலாகாததோரியல்பினையுடையார், வேதமும்வேதநெறிகளுமாகிவிமலவேடத்தொடுகமலமாமதிபோ, லாதியுமீறுமாயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௧௦)

மைச்செறிகுவளைதவளைவாய்நிறையமதுமலர்ப் பொய்கையிற்புதுமலர்கிழியப், பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்பதியவரதிபதிகவுணியர்பெருமான்,கை

ச்சிறுமறியவன்கழலலாற்பேணுக்கருத்துடைஞானசம்பந்தனதமிழ்கொண், டச்சிறுபாக்கத்தடிகளையேத்துமன்புடையடியவரருவினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டை நாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாக்கபுரேசர், தேவியார் - சுந்தரமாதம்மை.

திரு இடைச்சுரம், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவளரவிரொளியரவரைதாழவார்சடைமுடிமிசைவளர்மதிசூடிக், கரிவளர்தருகழல்கால்வலனேந்திக்கனலெரியாடுவர்காடரங்காக, விரிவளர்தருபொழிலிளமயிலாலவெண்ணிறத்தருவிகடிண்ணென வீழு, மெரிவளரினமணிபுனமணிசாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (க)

ஆற்றையுமேற்றதோரவிர்சடையுடையரழகினை யருளுவர்குழகலதறியார், கூற்றுயிர்செகுப்பதோர்கொடுமையையுடையர்நடுவிருளாடுவர்கொன்றையந்தாரார், சேற்றயல்மிளிர்வனகயலிளவாளைசெருச்செயவோர்ப்பனசெம்முகமந்தி, யேற்றையொடுழிதருமெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (உ)

கானமுஞ்சுடலையுங்கற்படுநிலனுங்காதலர்தீதிலர்கனன்மழுவாளர், வானமுகிலைமையுமிருமையுமானார்வணங்கவுமிணங்கவும்வாழ்த்தவும்படுவார், ஞானமும்புகையொளிவிரையொடுகமழநளிர்பொழிலிளமஞ்ஞைமன்னியபாங்க, ரேனமும்பிணையலுமெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (ங)

கடமணிமார்பினாகடறனிலுறைவார்காதலர்தீதிலர்கனன்மழுவாளர், விடமணிமிடறினர்மிளிர்வதோரரவர்வேறுமோர்சரிதையர்வேடமுமுடையர். வடமுலையயலனகருங்குருந்தேறிவாழையின்றீங்கனியார்ந்துதேனட்டு, மிடமுலையரிவையரெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (ச)

கார்கொண்டகடிகமழ்விரிமலர்க்கொன்றைக்கண்ணியர்வளர்மதிகதிர்விடக்கங்கை, நீர்கொண்டசடையினர்விடையுயர்கொடியர்நிழறிகழ்மழுவினரழறிகழ்நிறத்தர், சீர்கொண்டமென்சிறைவண்டுபண்செய்யுஞ்செழும்புனலனையனசெங்குலைவாழை, யேர்கொண்டபலவினொடெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (ரு)

தோடணிகுழையினர்சுண்ணவெண்ணீற்றர்சுடலையினாடுவர்தோலுடையாகப், பீடுயர்செய்ததோர்பெருமையையுடையர்பேயுடனாடுவர்பெரியவர்பெருமா

ன், கோடல்களொழுகுவழுழுகுவதும்பிகுரவமுமரவமுமன்னியபாங்க, ரேடவி ழ்புதுமலர்கடிகமழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௬)

கழன்மல்குகாலினர்வேலினர்நூலர்கவர்தலையரவொடுகண்டியும்பூண்ப, ர ழுன்மல்குமெரியொடுமெணிமழுவேந்தியாடுவர்பாடுவராரணங்குடையர், பொழி ன்மல்குநீடியவரவமுமரவமன்னியகவட்டிடைப்புணர்குயிலாலு, மெழின்மல் குசோலையில்வண்டிசைபாடுமிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௭)

தேங்கமழ்கொன்றையந்திருமலர்புனைவார் திகழ்தருசடைமிசைத்திங்களு ஞ்சூடி, வீந்தவர்சுடலைவெண்ணீறுமெய்பூசிவேறுமோர்சரிதையர்வேடமுமு டையர், சாந்தமுமகிலொடுமுகில்பொதிந்தலம்பித்தவழ்கனமணியொடுமிகுபளி ங்கிடறி, யேந்துவெள்ளருவிகளெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமெ ன்னே. (அ)

பலவிலமிடுபலிகையிலொன்றேற்பர்பலபுகழல்லதுபழியிலர்தாமுந், தலை யிலங்கவிரொளிநெடுமுடியரக்கன்றடக்கைகளடர்த்ததோர் தன்மையையுடைய ர், மலையிலங்கருவிகள்மணமுழவதிரமழைதவழிளமஞ்ஞைமல்கியசார, லிலையி லவங்கமுமேலமுங்கமழுமிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௯)

பெருமைகடருக்கியோர்பேதுருகின்றபெருங்கடல்வண்ணனும்பிரமனுமோ ரா, வருமையரடிநிழல்பரவிநின்றேத்துமன்புடையடியவர்க்கணியருமாவர், கரு மைகொள்வடிவொடுசுனைவளர் குவளைக்கயலினம்வயலிளவாளைகளிரிய, வெரு மைகள்படிதரவிளவனமாலுமிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௧0)

மடைச்சுரமறிவனவாளையுங்கயலுமருவியவயறனில்வருபுனற்காழிச், சடை ச்சுரத்துறைவதோர்பிறையுடையண்ணல்சரிதைகள் பரவிநின்றுருகுசம்பந்தன் புடைச்சுரத்தருவரைப்பூக்கமழ்சாரற்புணர் மடநடையவர்புடையிடையார்ந்த விடைச்சுரமேதியவிசையொடுபாடலிவைசொலவல்லவர்பிணியிலர்தாமே

திருச்சிற் (உ)

தொண்டை நாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - இடைச்சுரநாதர், தேவியார் - இமையமடக்கொடி

(௩)

திருக்கழுமலம் - பண், குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம். (௪)

அயிலுறுபடையினர்விடையினர்முடிமேலரவமுமதி மயிலுறுசாயல்வனமுலையொருபான்மகிழ்பவர்வானிடை(

யில்வுறுசரிதையரேறுகந்தேறிப்பாடியுமாடியும்பலிகொள்வர்வலிசேர், கயிலையும்பொதியிலுமிடமெனவுடையார்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (க)

கொண்டலுநீலமும்புரைதிருமிடறர்கொடுமுடியுறைபவர்படுதலைக்கையர், பண்டலரயன்சிரமரிந்தவர்பொருந்தும்படர்சடையடிகளார்பதியதனயலே, வண்டலம்வங்கமுஞ்சங்கமுஞ்சுறவுமறிகடற்றிரைகொணர்ந்தெற்றியகரைமேற், கண்டலுங்கைதலுநெய்தலுங்குலவுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (உ)

எண்ணிடையொன்றினரிரண்டினருருவ மெரியிடைமூன்றினர்நான்மறையாளர், மண்ணிடையைந்தினராறினரங்கம்வகுத்தனரேழிசை யெட்டிருங்கலைசேர், பண்ணிடையொன்பதுமுணர்ந்தவர்பத்தர்பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட, கண்ணிடைக்கனலினர்கருதியகோயில்கழுமலநினைய நம்வினை கரிசறுமே. (௩)

எரியொருகரத்தினரிமையவர்க்கிறைவரேறுகந்தேறுவர்நீறுமெய்பூசித், திரிதருமியல்பினரயலவர்புரங்கடெயெழவிழித்தனர்வேய்புரைதோளி, வரிதருகண்ணிணைமடவரலஞ்சமஞ்சுறநிமிர்ந்ததோர்வடிவொடும்வந்த, கரியுரிமருவியவடிகளுக்கிடமாங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (௪)

ஊரெதிர்ந்திடுபலிதலைகலனாகவுண்பவர்விண்பொலிந்திலங்கியவுருவர், பாரெதிர்ந்தடிதொழவிரைதருமார்பிற்படவரவாமையக்கணிந்தவர்க்கிடமா, நீரெதிர்ந்திழிமணிநித்திலமுத்தநிரைசொரிசங்கமொடொண்மணிவரன்றிக், காரெதிர்ந்தோதம்வன்றிரைகரைக்கெற்றுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (௫)

முன்னுயிர்த்தோற்றமுமிறுதியுமாகிமுடியுடையமரர்களடிபணிந்தேத்தப், பொன்னியசடைமிசைப்பிறைநிறைவித்தபேரருளாளனார்பேணியகோயில், பொன்[illegible]றுமலர்புனலொடுதூபஞ்சாந்தமுமேந்தியகையினராகிக், கன்னியர்நாடொறும[illegible]மேபரவுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (௬)

கொலைக்கணித்தாவருகூற்றுதைசெய்தார்குரைகழல் பணிந்தவர்க்கருளியபொருளி, நிலைக்கணித்தாவரநினையவல்லார்தங்கெடுந்துயர்தவிர்த்தவெந்நிமலருக்கிடமா, மலைக்கணித்தாவரவன்றிரைமூரன்மதுவிரிபுன்னைகள்முத்தெனவரும்பக், கலைக்கணங்கானலினீழலில்வாழுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (௭)

புயம்பல[illegible]டையதென்னிலங்கையர்வேந்தன்பொருவரையெடுத்தவன்பொன்முடிதிண்டோள், பயம்பலபடவடர்த்தருளியபெருமான்பரிவொடுமினிதுறைகோயிலதாகும், [illegible]யன்பலவிண்ணினுமண்ணினுமெங்கும்வேறுவேறுகங்களிற்பெயருளதென்னக், கயம்பலபடக்கடறிரைகரைக்கெற்றுங்கழுமல நினையநம்வினைகரிசறுமே. (அ)

விலங்கலொன்றேந்திவன்மழைதடுத்தோனும் வெறிகமழ்தாமரையோனு மென்றிவர்தம், பலங்களானேடியுமறிவரிதாயபரிசினன்மருவிநின் றினிதுறை கோயில், மலங்கிவன்றிரைவரையெனப்பரந்தெங்குமறிகடலோங்கிவெள்ளிப்பி யுஞ்சுமந்து, கலங்கடன்சரக்கொடுநிரக்கவந்தேறுங்கழுமல நினையநம்வினைகரிச றுமே. (௯)

ஆம்பலதவமுயன்றறவுரைசொல்லுமறிவிலாச் சமணருந்தேரருங் கனி சேர், நோம்பலதவமறியாதவர்நொடிந்தமூதுரைகொள்கிலாமுதல்வர்தம்மேனி ச், சாம்பலும்பூசிவெண்டலைகலனுகத்தையலாரிடுபலிவையகத்தேற்றுக், காம்ப னதோளியோடினிதுறைகோயில்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (௧0)

கலிகெழுபாரிடையூரெனவுளதாங்கழுமலம் விரும்பியகோயில்கொண்டவ ர்மேல், வலிகெழுமனமிகவைத்தவன்மறைசேர்வருங்கலைஞானசம்பந்தன்தமிழி, ஞெலிகெழுமாலையென்றுரைசெய்தபத்துமுண்மையினால்நினைந்தேத்தவல்லார் மேல், மெலிகெழுதுயரடையாவினைசிந்துமவிண்ணவராற்றலின் மிகப்பெறுவா ரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கோயில், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. (௧)

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையலதீர்வாரே. (௨)

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (௩)

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
விறைவன்கழலேத்துமின்பமின்பமே. (௪)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற

செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (௫)

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. (௬)

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. (௭)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. (௮)

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. (௯)

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாரும்
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே (௧௦)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமூலத்தானநாயகர், சபாநாதர் - தேவியார்-சிவகாமியம்மை.

சீகாழி, பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நல்லார்தீமேவுந்தொழிலார்நால்வேதஞ்
சொல்லார்கேண்மையார்சுடர்பொற்கழலேத்த
வில்லாற்புரஞ்செற்றான்மேவும்பதிபோலுங்
கல்லார்மதில்சூழ்ந்தகாழிநகர்தானே. (௧)

துளிவண்டேன்பாயுமிதழிதாமத்தன்
தெளிவண்டிங்கள்மாசுணநீர்திகழ்சென்னி
யொளிவெண்டலைமாலையுகந்தானூர்போலுங்
களிவண்டியாழ்செய்யுங்காழிநகர்தானே. (௨)

பக்கோலத்தினஞ்சுண்டமுதத்தைச்
சாலத்தேவர்க்கீந்தளித்தானறன்மைபாற்
பாலற்காய்நன்றும்பரிந்துபாதத்தாற்
காலற்காய்ந்தானூர்காழிநகர்தானே. (௯-௪-௫-௬-௭)

இரவிற்றிரிவோர்கட்கிறைதோளிணைபத்து
நிரவிக்கரவாளைநேர்ந்தானிடம்போலும்
பரவித்திரிவோர்க்கும்பானீறணிவோர்க்குங்
கரவிற்றடைக்கையார்காழிநகர்தானே. (௮)

மாலும்பிரமனுமறியாமாட்சியான்
றோலும்புரிநூலுந்துதைந்தவரைமார்ப
னேலும்பதிபோலுமிரந்தோர்க்கென்னாளுங்
காலம்பகராதார்காழிநகர்தானே. (௯)

தங்கையிடவுண்பார்தாழ்சீவரத்தார்கள்
பெங்கையுணராதேபேணித்தொழுமின்கள்
மங்கையொருபாகமகிழ்ந்தான்மலர்ச்சென்னிக்
கங்கைதரித்தானூர்காழிநகர்தானே. (௧௦)

வாசங்கமழ்காழிமதிசெஞ்சடைவைத்த
வீசனகர்தன்னையிணையில்சம்பந்தன்
பேசுந்தமிழ்வல்லோர்பெருநீருலகத்துப்
பாசந்தனையற்றுப்பழியில்புகழாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு வீழிமிழலை, பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இரும்பொன்மலைவில்லாவெரியம்பாநாணிற்
றிரிந்தபுரமூன்றுஞ்செற்றானுறைகோயில்
தெரிந்தவடியார்கள்சென்றதிசைதோறும்
விரும்பியெதிர்கொள்வார்வீழிமிழலையே. (௧)

வாதைப்படுகின்றவானோர்துயர்தீர
வோதக்கடனஞ்சையுண்டானுறைகோயில்
கீதத்திசையோடுங்கேள்விக்கிடையோடும்
வேதத்தொலியோவாவீழிமிழலையே. (௨)

பயிலுமறையாளன்றலையிற்பலிகொண்டு
துயிலும்பொழுதாடுஞ்சோதியுறைகோயில்
மயிலுமடமானும்மதியும்மிளவேயும்
வெயிலும்போன்மாதர்வீழிமிழலையே. (௩)

இரவன்பகலோனுமெச்சத்திமையோரை
நிரவிட்டருள்செய்தநிமலனுறைகோயில்
குரவஞ்சுரபுன்னைகுளிர்கோங்கிளவேங்கை
விரவும்பொழிலந்தண்வீழிம்மிழலையே. (௪)

கண்ணிற்கனலாலேகாமன்பொடியாகப்
பெண்ணுக்கருள்செய்தபெருமானுறைகோயில்
மண்ணிற்பெருவேள்விவளர்தீப்புகைநாளும்
விண்ணிற்புயல்காட்டும்வீழிமிழலையே. (௫)

மாலாயிரங்கொண்டுமலர்க்கண்ணிடவாழி
யேலார்வலயத்தோடீந்தானுறைகோயில்
சேலாகியபொய்கைச்செழுநீர்க்கமலங்கண்
மேலாலெரிகாட்டும்வீழிமிழலையே. (௬)

மதியால்வழிபட்டானைவாணாள்கொடுபோவான்
கொதியால்வருகூற்றைக்குறைத்தானுறைகோயில்
நிதியான்மிகுசெல்வர்நித்தநியமங்கள்
விதியானிற்கின்றார்வீழிமிழலையே (௭)

எடுத்தானருக்கினையிழித்தானைவிரலூன்றிக்
கொடுத்தான்வாளாளாக்கொண்டானுறைகோயில்
படித்தார்மறைவேள்விபயின்றார்பாவத்தை
விடுத்தார்மிகவாழும்வீழிமிழலையே. (௮)

கிடந்தானிருந்தானுங்கீழ்மேல்காணாது
தொடர்ந்தாங்கவரேத்தச்சுடராயவன்கோயில்
படந்தாங்கரவல்குற்பவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணார்வீழிமிழலையே. (௯)

சிக்கார்துவராடைச்சிறுதட்டுடையாரு
நக்காங்கலர்தூற்றுநம்பனுறைகோயில்
தக்கார்மறைவேள்வித்தலையாயுலகுக்கு
மிக்காரவர்வாழும்வீழிமிழலையே (௧0)

மேனின்றிழிகோயில்வீழிமிழலையு
ளேனத்தெயிற்றானையெழிலார்பொழிற்காழி
ஞானத்துயர்கின்றநலங்கொள்சம்பந்தன்
வாய்மைத்திவைசொல்லவல்லோர்நல்லோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்மாகாளம், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அடையார்புரமூன்றுமனலாய்விழவெய்து
மடையார்புனலம்பர்மாகாளம்மேய
விடையார்கொடியெந்தைவெள்ளைப்பிறைசூடுஞ்
சடையான்கழலேத்தச்சாராவினைதானே. (௧)

தேனார்மதமத்தந்திங்கள்புனல்சூடி
வானார்பொழிலம்பர்மாகாளம்மேய
வூனார்தலைதன்னிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானான்கழலேத்தவல்லலடையாவே. (௨)

திரையார்புனலோடுசெல்வமதிசூடி
விரையார்பொழிலம்பர்மாகாளம்மேய
நரையார்விடையூருநம்பான்கழல்நாளு
முரையாதவர்கள்மேலொழியாவூனமே. (௩)

கொந்தண்பொழிற்சோலைக்கோலவரிவண்டு
மந்தம்மலியம்பர்மாகாளம்மேய
கந்தங்கமழ்கொன்றைகமழ்புன்சடைவைத்த
வெந்தைகழலேத்தவிடர்வந்தடையாவே. (௪)

அணியார்மலைமங்கையாகம்பாகமாய்
மணியார்புனலம்பர்மாகாளம்மேய
துணியாருடையினான்றுதைபொற்கழனாளும்
பணியாதவர்தம்மேற்பறையாபாவமே. (௫)

பண்டாழ்கடனஞ்சையுண்டுகளிமாந்தி
வண்டார்பொழிலம்பர்மாகாளம்மேய
விண்டார்புரம்வேவமேருச்சிலையாகக்
கொண்டான்கழலேத்தக்குறுகாகுற்றமே. (௬)

மிளிருமரவோடுவெள்ளைப்பிறைசூடி
வளரும்பொழிலம்பர்மாகாளம்மேய
கிளருஞ்சடையண்ணல்கேடில்கழலேத்தத்
தளருமுறுநோய்கள்சாருந்தவந்தானே. (௭)

கொலையார்மழுவோடுகோலச்சிலையேந்தி
மலையார்புனலம்பர்மாகாளம்மேய
விலையார்திரிசூலப்படையான்கழல்நாளும்
நிலையாநினைவார்மேல்நில்லாவினைதானே. (௮)

சிறையார்வரிவண்டுதேனுண்டிசைபாட
மறையார்நிறையம்பர்மாகாளம்மேய

நறையார்மலரானுமாலுங்காண்பொண்ணு
விறையான்கழலேத்தவெய்துமின்பமே. (௯)

மாசூர்வடிவினர்மண்டையுணல்கொள்வார்
கூசாதுரைக்குஞ்சொற்கொள்கைகுணமல்ல
வாசார்பொழிலம்பர்மாகாளம்மேய
வீசாவென்பார்கட்கில்லையிடர்தானே. (கo)

வெருநீர்கொளவோங்குவேணுபுரந்தன்னுட்
டிருமாமறைஞானசம்பந்தன்சேணுர்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி
யுருகாவுரைசெய்வாருயாவனடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காளகண்டேசுவரர், தேவியார்-பக்ஷநாயகியம்மை.

திருக்கடவூர்க்காரோணம், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புனையும்விரிகொன்றைக்கடவுள்புனல்பாய
நனையுஞ்சடைமேலோர்நகுவெண்டலைசூடி
வினையில்லடியார்கள்விதியால்வழிபடக்
கனையுங்கடனாகைக்காரோணத்தானே. (க)

பெண்ணுணெனநின்றபெம்மான்பிறைச்சென்னி
யண்ணுமலைநாடனாருருறையம்மான
மண்ணுர்முழவோவாமாடநெடுவீதிக்
கண்ணுர்கடனாகைக்காரோணத்தானே. (உ)

பாரோர்தொழவிண்ணோர்பணியமதின்மூன்று
மாரரழலூட்டியடியார்க்கருள்செய்தான
தேரார்விழவோவாச்செல்வன்றிரைசூழ்ந்த
காரார்கடனாகைக்காரோணத்தானே. (௩)

மொழிசூழ்மறைபாடிமுதிருஞ்சடைதன்மே
லழிசூழ்புனலேற்றவண்ணலணியாய
பழிசூழ்விலராயபத்தர்பணிந்தேத்தக்
கழிசூழ்கடனாகைக்காரோணத்தானே. (௪)

ஆணும்பெண்ணுமாயடியார்க்கருணல்கிச்
சேணின்றவர்க்கின்னஞ்சிந்தைசெயவல்லான்
பேணிவழிபாடுபிரியாதெழுந்தொண்டர்
காணுங்கடனாகைக்காரோணத்தானே. (௫)

ஏனத்தெயிறோடரவமெய்பூண்டு
வானத்திளந்திங்கள்வளருஞ்சடையண்ணல்
ஞானத்துரைவல்லார்நாளும்பணிந்தேத்த
கானக்கடனாகைக்காரோணத்தானே. (௬)

அரையாரழனாகமக்கோடசைத்திட்டு
விரையார்வரைமார்பின்வெண்ணீறணியண்ணல்
வரையார்வனபோலவளரும்வங்கங்கள்
கரையார்கடனாகைக்காரோணத்தானே. (௭)

வலங்கொள்புகழ்பேணிவரையாலுயர்திண்டோ
ளிலங்கைக்கிறைவாடவடர்த்தங்கருள்செய்தான்
பலங்கொள்புகழ்மண்ணிற்பத்தர்பணிந்தேத்தக்
கலங்கொள்கடனாகைக்காரோணத்தானே. (அ)

திருமாலடிவீழத்திசைநான்முகனேத்தப்
பெருமானெனநின்றவெம்மான்பிறைச்சென்னிச்
செருமால்விடையூருஞ்செல்வன்றிரைசூழ்ந்த
கருமால்கடனாகைக்காரோணத்தானே. (௯)

நல்லாரறஞ்சொல்லப்பொல்லாபுறங்கூற
வல்லாரலர்தூற்றவடியார்க்கருள்செய்வான்
பல்லார்தலைமாலையணிவான்பணிந்தேத்தக்
கல்லார்கடனாகைக்காரோணத்தானே. (௧0)

கரையார்கடனாகைக்காரோணம்மேய
நரையார்விடையானைநவிலுஞ்சம்பந்த
னுரையார்தமிழ்மாலைபாடுமவரெல்லாங்
கரையாவுருவாகிக்கவிவானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காயாரோகணேசுவரர், தேவியார் - நீலாயதாக்ஷியம்மை.

திருநல்லம் - பண், குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லானிழல்மேயகறைசேர்கண்டாவென்
றெல்லாமொழியாலுமிமையோர்தொழுதேத்த
வில்லாவரண்மூன்றும்வெந்துவிழவெய்த
நல்லானமையாள்வானல்லநகரானே. (௧)

தக்கன்பெருவேள்வி தன்னிலமரரைத்
துக்கம்பலசெய்து சுடர்பொற்சடைதாழக்
கொக்கின்னிறகோடு குளிர்வெண்பிறைசூடி
நக்கனமையாள்வானல்லங்கரானே. (௨)

அந்திமதியோடு மரவச்சடைதாழ
முந்தியனலேந்தி முதுகாட்டெரியாடிச்
சிந்தித்தெழவல்லார் தீராவினைதீர்க்கு
நந்திநமையாள்வானல்லங்கரானே. (௩)

குளிரும்மதிசூடிக் கொன்றைச்சடைதாழ
மிளிரும்மரவோடு வெண்ணூல்திகழ்மார்பிற்
றளிருந்திகழ்மேனித் தையல்பாகமாய்
நளிரும்வயல்சூழ்ந்த நல்லங்கரானே. (௪)

மணியார்திகழ்கண்டம் முடையான்மலர்மல்கு
பிணிவார்சடையெந்தை பெருமான்கழல்பேணித்
துணிவார்மலர்கொண்டு தொண்டாதொழுதேத்த
நணியானமையாள்வானல்லங்கரானே. (௫)

வாசம்மலர்மல்கு மலையானமகளோடு
பூசுஞ்சுடுநீறு புனை ந்தான்விரிகொன்றை
யீசனெனவுள்கி யெழுவார்வினைகட்கு
நாசனமையாள்வானல்லங்கரானே. (௬)

அங்கோல்வளைமங்கை காணவனலேந்திக்
கொங்கார்நறுங்கொன்றை சூடிக்குழகாக
வெங்காடிடமாக வெந்தீவினையாடு
நங்கோனமையாள்வானல்லங்கரானே. (௭)

பெண்ணார்திருமேனிப் பெருமானபிறைமல்கு
கண்ணார்நுதலினான் கயிலைகருத்தினு
லெண்ணாதெடுத்தானை யிறையேவிரலூன்றி
நண்ணார்புரமெய்தானல்லங்கரானே. (௮)

நாகத்தணையானு நளிர்மாமலரானும
போகத்தியல்பினார் பொலியவழகாகு
மாகத்தவளோடு மமர்ந்தங்கழகாரு
நாகம்மரையார்த்தானல்லங்கரானே. (௯)

குறியில்சமணோடு குண்டர்வண்டேர
ரறிவில்லுரைகேட்டங் கவமேகழியாதே
பொறிகொள்ளரவார்த்தான் பொல்லாவினைதீர்க்கு
நறைகொள்பொழில்சூழ்ந்த நல்லங்கரானே. (௧௦)

நலமார்மறையோர்வாழ்நல்லநகர்மேய
கொலைசேர்மழுவானைக்கொச்சையமர்ந்தோங்கு
தலமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கவலைகழிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-உமாமகேசுவரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

திருநல்லூர் - பண், குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கொட்டும்பறைசீராற்குழுமவனலேந்தி
நட்டம்பயின்றாடுநல்லூர்ப்பெருமானை
முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு
பட்டமனத்தார்களறியாபாவமே. (௧)

ஏறிலெருதேறுமெழிலாயிழையோடும்
வேறுமுடனுமாம்விகிர்தரவரென்ன
நாறுமலர்ப்பொய்கைநல்லூர்ப்பெருமானைக்
கூறுமடியார்கட்கடையாகுற்றமே. (௨)

சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதாழ
வோடுங்கலனாகவூரூரிடுபிச்சை
நாடுநெறியானைநல்லூர்ப்பெருமானைப்
பாடுமடியார்கட்கடையாபாவமே. (௩)

நீத்தநெறியானைநீங்காத்தவத்தானை
நாத்தநெறியானைநல்லூர்ப்பெருமானைக்
காத்தநெறியானைக்கைகூப்பித்தொழு
தேத்துமடியார்கட்கில்லையிடர்தானே. (௪)

ஆகத்துமைகேள்வனரவச்சடைதாழ
நாகமசைத்தானைநல்லூர்ப்பெருமானைத்
தாகம்புகுந்தண்மித்தாள்கள்தொழுந்தொண்டர்
போகமனத்தராய்ப்புகழத்திரிவாரே. (௫)

கொல்லுங்களியானையுரிபோர்த்துமையஞ்ச
நல்லநெறியானைநல்லூர்ப்பெருமானைச்
செல்லுநெறியானைச்சேர்ந்தாரிடர்தீரச்
சொல்லுமடியார்களறியார்துக்கமே. (௬)

எங்கள்பெருமானையிமையோர்தொழுதேத்து
நங்கள்பெருமானைநல்லூர்பிரிவில்லா

தங்கைதலைக்கேற்றியாளென்றடிநீழற்
றங்குமனத்தார்கள்தமைமாற்றறுப்பாரே. (எ)

காமனெழில்வாட்டிக்கடல்சூழிலங்கைக்கோ
னாகமிறுத்தானைநல்லூர்ப்பெருமானை
யேமமநத்தராயிகழாதெழுந்தொண்டர்
தீபமநத்தார்களறியார்தீயவே. (அ)

வண்ணமலரானும்வையமளந்தானு
நண்ணலரியானைநல்லூர்ப்பெருமானைத்
தண்ணமலர்தூவித்தாள்கள்தொழுதேத்த
வெண்ணுமடியார்கட்கில்லையிடுக்கணே. (கூ)

பிச்சைக்குடைநீழற்சமணர்சாக்கியர்
நிச்சமலர்தூற்றநின்றபெருமானை
நச்சுமிடற்றானைநல்லூர்ப்பெருமானை
யெச்சுமடியார்கட்கில்லையிடர்தானே. (௧௦)

தண்ணம்புனற்காழிஞானசம்பந்த
னண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனைமாலைவைகலேத்துவார்
விண்ணுநிலனுமாய்விளங்கும்புகழாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பெரியாண்டேசுவரர், தேவியார்-திரிபுரசுந்தரியம்மை.

திருவடுகூர், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலையணிவர்சுடர்வேலர்
கொடுகூர்மழுவாளொன்றுடையர்விடையூர்வர்
கடுகூர்பசிகாமங்கவலைபிணியில்லார்
வடுகூர்புனல்சூழ்ந்தவடுகூரடிகளே. (க)

பாலுநறுநெய்யுந்தயிரும்பயின்றாடி
யேலுஞ்சுடுநீறுமென்புமொளிமல்கக்
கோலம்பொழிற்சோலைகூடிமடவன்ன
மாலும்வடுகூரிலாடுமடிகளே. (உ)

சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதன்மே
லோடுங்களியானையுரிபோர்த்துமையஞ்ச
வேடுமலர்மோந்தங்கெழிலார்வரிவண்டு
பாடும்வடுகூரிலாடுமடிகளே. (ங)

துவரும்புரிசையுந்துதைந்தமணிமாடங்
கவரவெரியோட்டிக்கடிமதிளெய்தார்
கவருபாணிகொல்லைக்கடியமுல்லைநல்லார்
பவரும்வடுகூரிலாடுமடிகளே. (௪)

துணியாருடையாடைதுன்னியரைதன்மேற்
றணியாவழலுகந்தரியாவகைவைத்தார்
பணியாரடியார்கள்பலரும்பயின்றேத்த
வணியார்வடுகூரிலாடுமடிகளே. (௫)

தளருங்கொடியன்னாடன்னோடுடனாகிக்
கிளருமரவாட்டிக்கிளருமுடிமேலோர்
வளரும்பிறைசூடிவரிவண்டிசைபாட
வொளிரும்வடுகூரிலாடுமடிகளே. (௬)

நெடியர்சிறிதாயவிரம்பாமதிசூடு
முடியர்விடையூர்வர்கொடியர்மொழிகொள்ளார்
கடியதொழிற்காலனமடியவுதைகொண்ட
வடியர்வடுகூரிலாடுமடிகளே. (௭)

பிறையுநெடுநீரும்பிரியாமுடியினார்
மறையும்பலபாடிமயானத்துறைவாரும்
பறையுமதிர்குழலும்போலப்பலவண்டாங்
கறையும்வடுகூரிலாடுமடிகளே. (௮)

சந்தமலர்வேய்ந்தசடையினனிடைவிம்மு
கந்தமிகுதிங்கட்சிந்துகதிர்மாலை
வந்துநயந்தெம்மைநன்றுமருள்செய்வா
ரந்தண்வடுகூரிலாடுமடிகளே. (௯)

திருமாலடிவீழத்திசைநான்முகனாய
பெருமானுணர்கில்லாப்பெருமானெடுமுடிசேர்
செருமால்விடையூருஞ்செம்மான்றிசைவில்லா
வருமாவடுகூரிலாடுமடிகளே. (௧௦)

படிநோன்பவையாவர்பழியில்புகழான
கடிநாணிகழ்சோலைகமழும்வடுகூரைப்
படியானசிந்தைமொழியார்சம்பந்த
னடிஞானம்வல்லாரடிசேர்வார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வடுகேசுவரர், தேவியார்-வடுவகிர்க்கண்ணியம்மை.

திரு ஆப்பனூர், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறைய
னொற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமில்சீரானைத்திருவாப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (க)

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுநின் றவிண்ணோர்
விரவுந்திருமேனிவிளங்கும்வளையெயிற்றி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (உ)

முருகுவிரிகுழலார்மனங்கொளநங்கைமுன்
பெரிதுமுனிந்துகந்தான்பெருமான்பெருங்காட்டி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ங)

பிணியும்பிறப்பறுப்பான்பெருமான்பெருங்காட்டிற்
றுணியினுடைதாழச்சுடரேந்தியாடுவா
னணியும்புனலானையணியாப்பனூரானைப்
பணியுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ச)

தகரமணியருவித்தடமால்வரைசிலையா
னகரமொருமூன்றுநலங்குன்றவென்றுகந்தான
அகரமுதலானையணியாப்பனூரானைப்
பகருமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ரு)

ஓடுந்திரிபுரங்களுடனேயுலந்தவியக்
காடிடமாகக்கனல்கொண்டுநின்றிரவி
லாடுந்தொழிலானையணியாப்பனூரானைப்
பாடுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (சு)

இயலும்விடையேறியெரிகொண்மழுவீசிக்
கயலினிணைக்கண்ணாளொருபால்கலந்தாட
வியலுமிசையானையெழிலாப்பனூரானைப்
பயிலுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (எ)

கருக்குமணிமிடறன்கதநாகக்கச்சையினு
னுருக்குமடியவரையொளிவெண்பிறைசூடி
யரக்கன்றிறலழித்தானணியாப்பனூரானைப்
பருக்குமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (அ)

கண்ணன்கடிக்கமலமலர்மேலினிதுறையு
மண்ணற்களப்பரிதாய்நின்றங்கடியார்மே

லெண்ணில்வினைகளைவானெழிலாப்பனூரானைப்
பண்ணின்னிசைபகர்வார்வினைபற்றறுப்பாரே. (௯)

செய்யகலிங்கத்தார்சிறுதட்டுடையார்கள்
பொய்யர்புறங்கூறப்புரிந்தவடியாரை
யையமகற்றுவானணியாப்பனூரானைப்
பையநினைந்தெழுவார்வினைபற்றறுப்பாரே. (௧௦)

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தமொற்றறுப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆப்பனூரீசுவரர், தேவியார் - அம்பிகையம்மை.

திரு எருக்கத்தம்புலியூர், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

படையார்தருபூதப்பகடாருரிபோர்வை
யுடையானுமையோடுமுடனாயிடுகங்கைச்
சடையானெருக்கத்தம்புலியூர்த்தகுகோயில்
விடையானடியேத்தமேவாவினைதானே. (௧)

இலையார்தருசூலப்படையெம்பெருமானாய்
நிலையார்மதின்மூன்றுநீறாய்விழவெய்த
சிலையானெருக்கத்தம்புலியூர்த்திகழ்கோயிற்
கலையானடியேத்தக்கருதாவினைதானே. (௨)

விண்ணோர்பெருமானேவிகிர்தாவிடையூர்தி
பெண்ணாணலியாகும்பித்தாபிறைசூடி
யெண்ணாரெருக்கத்தம்புலியூருறைகின்ற
வண்ணாவெனவல்லார்க்கடையாவினைதானே. (௩)

அரையார்தருநாகமணிவாளலர்மாலை
விரையார்தருகொன்றையுடையான்விடையேறி
வரையானெருக்கத்தம்புலியூர்மகிழ்கின்ற
திரையார்சடையானைச்சேரத்திருவாமே. (௪)

வீறார்முலையாளைப்பாகமிகவைத்துச்
சீறார்வருகாலன்சினத்தையழிவித்தா
னேறானெருக்கத்தம்புலியூரிறையானை
வேறாநினைவாரைவிரும்பாவினைதானே. (௫)

நகுவெண்டலையேந்திநானுவிதம்பாடிப்
புகுவானையம்பெய்யப்புலித்தோல்பியற்கிட்டுத்
தகுவானெருக்கத்தம்புலியூர்த்தகைந்தங்கே
தொகுவான்கழலேத்தத்தொடராவினைதானே. (சு-எ)

ஆவாவெனவரக்கனலறவடர்த்திட்டுத்
தேவாவெனவருளாற்செல்வங்கொடுத்திட்ட
கோவேயெருக்கத்தம்புலியூர்மிகுகோயிற்
றேவேயெனவல்லல்தீர்தல்திடமாமே. (அ)

மறையானெடுமால்காண்பரியான்மழுவேந்தி
நிறையாமதிசூடிநிகழ்முத்தின்றொத்தே
யிறையானெருக்கத்தம்புலியூரிடங்கொண்ட
கறையார்மிடற்றானைக்கருதக்கெடும்வினையே. (சு)

புத்தரருகர்தம்பொய்கள்புறம்போக்கிச்
சுத்திதரித்துறையுஞ்சோதியுமையோடு
நித்தனெருக்கத்தம்புலியூர்நிகழ்வாய
வத்தனறவன்றனடியேயடைவோமே. (க0)

ஏராரெருக்கத்தம்புலியூருறைவானைச்
சீரார்திகழ்காழித்திருவார்சம்பந்த
ஞானவருந்தமிழ்மாலையிவைவல்லார்
பாராரவரேத்தப்பதிவானுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நீலகண்டேசுவரர், தேவியார்-நீலமலர்க்கண்ணம்மை.

திருப்பிரமபுரம்-திருவிருக்குக்குறள், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அரனையுள்குவீர், பிரமனூருளெம்
பரனையேமனம், பரவியுய்ம்மினே, (க)

காணவுள்குவீர், வேணுநற்புரத்
தாணுவின்கழல், பேணியுய்ம்மினே. (உ)

நாதனென்பிர்காள், காதலொண்புக
லாதிபாதமே, யோதியுய்ம்மினே. (௩)

அங்கமாதுசேர், பங்கமாயவன்
வெங்குருமன்னு, மெங்களீசனே. (௪)

வாணிலாச்சடைத், தோணிவண்புரத்
தாணிநற்பொனைக், காணுமின்களே. (ரு)

பாந்தளார்சடைப், பூந்தராய்மன்
னேந்துகொங்கையாள், வேந்தனென்பரே. (அ)

கரியகண்டனைச், சிரபுரத்துளெம்
மரசைநாடொறும், பரவியுய்ம்மினே. (எ)

நறவமார்பொழிற், புறவநற்பதி
யிறைவனும்மமே, மறவனெஞ்சமே. (அ)

தென்றிலரக்கனைக், குன்றிச்சண்பைம
னன்றுநெரித்தவா, நின்றுநினைமினே. (கூ)

அயனுமாலுமாய், முயலுங்காழியான்
பெயல்வையெய்திநின், றியலுமுள்ளமே. (க0)

தேரமணரைச், சேர்வில்கொச்சைமன
னேரில்கழனினைந், தோருமுள்ளமே. (கக)

தொழுமனத்தவர், கழுமலத்துறை
பழுதில்சம்பந்தன, மொழிகள்பத்துமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திரு ஆரூர்-திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சித்தந்தெளிவீர்கா, ளத்தனாரூரைப்
பத்திமலர்தூவ, முத்தியாகுமே. (க)

பிறவியறுப்பீர்கா, ளறவனாரூரை
மறவாதேத்துமின், றுறவியாகுமே. (உ)

துன்பந்துடைப்பீர்கா, ளன்பனணியாரூர்
நனபொன்மலர்தூவ, வின்பமாகுமே. (ங)

உய்யலுறுவீர்கா, ளையனாரூரைக்
கையினாற்றொழ, நையும்வினைதானே. (ச)

பிண்டமறுப்பீர்கா, ளண்டனாரூரைக்
கண்டுமலர்தூவ, விண்டுவினைபோமே. (ரு)

பாசமறுப்பீர்கா, ளீசனணியாரூர்
வாசமலர்தூவ, நேசமாகுமே. (சா)

வெய்யவினைதீர, வையனணியாரூர்
செய்யமலர்தூவ, வையமுமதாமே. (எ)

அரக்கனுண்மையை, நெருக்கினனாரூர்
கரத்தினாற்றொழத், திருத்தமாகுமே. (அ)

துள்ளுமிருவர்க்கும், வள்ளலாருரை
யுள்ளுமவர்தம்மேல், விள்ளும்வினைதானே. (கூ)

கடுக்கொள்சீவரை, யடக்கினாரு
ரெடுத்துவாழ்த்துவார், விடுப்பர்வேட்கையே. (க0)

சீரூர்சம்பந்த, னாரூரைச்சொன்ன
பாரூர்பாடலார், பேராரின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீழிநாதர், தேவியார் - அல்லியங்கோதையம்மை.

திருவீழிமிழலை - திருவிருக்குக்குறள், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ, ரேசலில்லையே. (க)

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே. (உ)

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீ
பைகொளரவினீ, ருய்யநல்குமே. (௩)

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே. (ச)

காமன்வேவவோ, ரூமக்கண்ணினீர்
நாமமிழலையீர், சேமநல்குமே. (ரு)

பிணிகொள்சடையினீர், மணிகொண்மிடற்றினீ
ரணிகொண்மிழலையீர், பணிகொடுத்தருளுமே. (சா)

மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே. (எ)

அரக்கனெரிதர; விரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே. (அ)

அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலுமிழலையீர், பயனுமருளுமே. (கூ)

பறிகொள்தலையினா, ரறிவதறிகிலா
வெறிகொண்மிழலையீர், பிறிவதரியதே. (க0)

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், றாழுமொழிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது-படிக்காசு சுவாமியருளியபோது வட்டந்தீர ஓதியது.

திருமுதுகுன்றம்-திருவிருக்குக்குறள், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நின்றுமலர் தூவி, யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க், கென்றுமின்பமே. (க)

அத்தன்முதுகுன்றைப், பத்தியாகிநீ
ரித்தமேத்துவீர்க், குய்த்தல்செல்வமே. (உ)

ஐயன்முதுகுன்றைப், பொய்கள்கெடநின்று
கைகள்கூப்புவீர், வையமுமதாமே. (ங)

ஈசன்முதுகுன்றை, நேசமாகிநீர்
வாசமலர்தூவப், பாசவினைபோமே. (ச)

மணியார்முதுகுன்றைப், பணிவாரவர்கண்டீர்
பிணியாயினகெட்டுத், தணிவாருலகிலே. (ரு)

மொய்யார்முதுகுன்றி, லையாவெனவல்லா
ரொய்யாரிரவோர்க்குச, செய்யாளணியாளே. (சா)

விடையானமுதுகுன்றை, யிடையாதேத்துவார்
படையாயினசூழ, வுடையாருலகமே. (எ)

பத்துத்தலையானைக், கத்தவிரலூன்று
மத்தன்முதுகுன்றை, மொய்த்துப்பணிமினே. (அ)

இருவரறியாத, வொருவன்முதுகுன்றை
யுருகிநினைவார்கள், பெருகிநிகழ்வோரே. (கூ)

தேரரமணருஞ், சேருமவகையில்லா
நேரின்முதுகுன்றை, நீர்நின்றுள்குமே. (க0)

நின்றுமுதுகுன்றை, நன்றுசம்பந்த
னொன்றுமுரைவல்லா, ரென்றுமுயர்வோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ரு ஆலவாய்-திருவிருக்குக்குறள், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற், றாலவாயிலான்
பாலதாயினார், ஞாலமாள்வரே. (க)

ஞாலமேழுமா, மாலவாயிலார்
சீலமேசொலீர், காலன்வீடவே. (உ)

ஆலநீழலா, ராலவாயிலார்
காலகாலனார், பாலதாமினே. (ங)

அந்தமில்புக, ழெந்தையாலவாய்
பந்தியார்கழல், சிந்தைசெய்ம்மினே. (௪)

ஆடலேற்றினான், கூடலாலவாய்
பாடியேமனம், நாடிவாழ்மினே. (௫)

அண்ணலாலவாய், நண்ணினான்றனை
யெண்ணியேதொழத், திண்ணமின்பமே. (௬)

அம்பொனாலவாய், நம்பனார்கழல்
நம்பிவாழ்பவர், துன்பம்வீடுமே. (௭)

அரக்கனாவலி, நெருக்கனாலவா
யுரைக்குமுள்ளத்தார்க், கிரக்கமுண்மையே. (௮)

அருவனாலவாய், மருவினான்றனை
யிருவரேத்தநின், றுருவமோங்குமே. (௯)

ஆரநாகமாஞ், சீரனாலவாய்த்
தேரமண்செற்ற, வீரனென்பரே. (௧௦)

அடிகளாலவாய்ப், படிகொள்சம்பந்தன்
முடியிலின்றமிழ், செடிகளீக்குமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சொக்கநாதசுவாமி, தேவியார்-மீனாட்சியம்மை.

திரு இடைமருது-திருவிருக்குக்குறள், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடொர்காதினன், பாடுமறையினன்
காடுபேணிநின், றாடுமருதனே. (௧)

கருதார்புரமெய்வ, ரெருதேயினிதூர்வர்
மருதேயிடமாகும், விருதாமவினைதீர்ப்பே (௨)

எண்ணுமடியார்கள், எண்ணன்மருதரைப்
பண்ணின்மொழிசொல்ல, விண்ணுந்தமதாமே. (௩)

விரியார்சடைமேனி, யெரியார்மருதரைத்
தரியாதேத்துவார், பெரியாருலகிலே. (௪)

பந்தவிடையேறு, மெந்தைமருதரைச்
சிந்தைசெய்பவர், புந்திநல்லோரே. (௫)

கழலுஞ்சிலம்பார்க்கு, மெழிலார்மருதரைத்
தொழலேபேணுவார்க், குழலும்வினைபோமே. (௬)

பிறையார்சடையண்ணன், மறைபார்மருதரை
நிறையால்நினைபவர், குறையாரின்பமே. (எ)

எடுத்தான்புயந்தன்னை, யடுத்தார்மருதரைத்
தொடுத்தார்மலர்சூட்ட, விடுத்தார்வேட்கையே. (அ)

இருவர்க்கெரியாய, வுருவமருதரைப்
பரவியேத்துவார், மருவிவாழ்வரே. (கூ)

நின்றுண்சமண்டேர, ரென்றுமருதரை
யன்றியுரைசொல்ல, னன்றுமொழியாரே. (க0)

கருதுசம்பந்தன், மருதரடிபாடிப்
பெரிதுந்தமிழ்சொல்லப், பொருதவினைபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு அன்னியூர்-திருவிருக்குக்குறள், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மன்னியூருறை, சென்னியார்பிறை
யன்னியூரமர், மன்னுசோதியே. (க)

பழகுந்தொண்டர்வம், மழகனன்னியூர்க்
குழகன்சேவடி, தொழுதுவாழ்மினே. (உ)

நீதிபேணுவீ, ராதியன்னியூர்ச்
சோதிநாமமே, யோதியுய்மினே. (ரு)

பத்தராயினீ, ரத்தனன்னியூர்ச்
சித்தர்தாடொழு, முத்தராவரே. (ச)

நிறைவுவேண்டுவீ, ரறவனன்னியூர்
மறையுளான்கழற், குறவுசெய்மினே. (ரு)

இன்பம்வேண்டுவீ, ரன்பனன்னியூர்
நன்பொனென்னுமி, னும்பராகவே. (சு)

அந்தணாளர்தந், தந்தையன்னியூ
ரெந்தையேயெனப், பந்தநீங்குமே. (எ)

தார்த்தனைச்செற்ற, தீர்த்தனன்னியூ
ராத்தமாவடைந், தேத்தியுய்மினே. (அ)

இருவர்நாடிய, வரவனன்னியூர்
பரவுவார்விண்ணுக், கொருவராவரே. (கூ)

குண்டர்தேரருக், கண்டனன்னியூர்த்
தொண்டுளோர்வினை, விண்டுபோகுமே. (க0)

பூந்தாராய்ப்பந்த, னாய்ந்தபாடலால்
வேந்தனன்னியூர், சேர்ந்துவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபத்சகாயர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருப்புறவம், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எய்யாவென்றித்தானவரூர்மூன்றெரிசெய்த
மையார்கண்டன்மாதுமைவைகுந்திருமேனிச்
செய்யானவெண்ணீறணிவான்றிகழ்பொற்பதிபோலும்
பொய்யாநாவினந்தணர்வாழும்புறவம்மே. (க)

மாதொருபாலும்மாலொருபாலும்மகிழ்கின்ற
நாதனென்றேத்துநம்பான்வைகுநகர்போலு
மாதவிமேயவண்டிசைபாடமயிலாடப்
போதலர்செம்பொன்புன்னைகொடுக்கும்புறவம்மே. (உ)

வற்றாநதியுமதியும்பொதியுஞ்சடைமேலே
புற்றாடரவின்படமாடவுமிப்புவனிக்கோர்
பற்றாயிடுமின்பலியென்றடைவார்பதிபோலும்
பொற்றாமரையின்பொய்கைநிலாவும்புறவம்மே. (ங)

துன்னார்புரமும்பிரமன்சிரமுந்துணிசெய்து
மின்னார்சடைமேலரவும்மதியும்விளையாடப்
பன்னாளிடுமின்பலியென்றடைவார்பதிபோலும்
பொன்னார்புரிநூலந்தணர்வாழும்புறவம்மே. (ச)

தேவாவரனேசரணென்றிமையோர்திசைதோறுங்
காவாயென்றுவந்தடையக்காவிடமுண்டு
பாவார்மறையும்பயில்வோருறையும்பதிபோலும்
பூவார்கோலச்சோலைசுலாவும்புறவம்மே. (ரு)

கற்றறிவெய்திக்காமன்முன்னாகமுகவெல்லா
மற்றரனேநின்னடிசரணென்னுமடியோர்க்குப்
பற்றதுவாயபாசுபதன்சேர்பதியென்பர்
பொற்றிகழ்மாடத்தொளிநிலாவும்புறவம்மே. (சா)

எண்டிசையோரஞ்சிடுவகைகார்சேர்வரையென்னக்
கொண்டெழுகோலமுகில்போற்பெரியகரிதன்னைப்
பண்டுரிசெய்தோன்பாவனைசெய்யும்பதியென்பர்
பண்டரிகத்தோன்போன்மறையோர்சேர்புறவம்மே. (எ)

பரக்குந்தொல்சீர்த்தேவர்கள்சேனைபௌவத்தைத்
துரக்குஞ்செந்தீப்போலமர்செய்யுந்தொழின்மேவு
மரக்கன்றிண்டோளழிவித்தானக்காலத்திற்
புரக்கும்வேந்தன்சேர்தருமூதூர்புறவம்மே (அ)

மீத்திகழண்டந்தந்தயனோடுமிகுமாலு
மூர்த்தியைநாடிக்காணவொண்ணாதுமுயல்விட்டாங்
கேத்தவெளிப்பாடெய்தியவன்றனிடமென்பர்
பூத்திகழ்சோலைத்தென்றலுலாவும்புறவம்மே. (௯)

வையகநீர்தீவாயுவும்விண்ணுமுதலானான்
மெய்யலதேரருண்டிலையென்றேநின்றேதங்
கையினிலுண்போர்காணவொண்ணாதானகரென்பர்
பொய்யகமில்லாப்பூசுரர்வாழும்புறவம்மே (க0)

பொன்னியன்மாடப்புரிசைநிலாவும்புறவத்து
மன்னியவீசன்சேவடிநாளும்பணிகின்ற
தன்னியல்பில்லாச்சண்பையர்கோன்சீர்ச்சம்பந்த
னின்னிசையீரைந்தேத்தவல்லோர்கட்கிடர்போமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி, பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே. (க)

கைம்மகவேந்திக்கடுவனொடூடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. (உ)

மந்தமுழவம்மழலைததும்பவரைநீழற்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரு
மெந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. (௩)

துறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுளெம்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள்பெருமானே. (௪)

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்செற்றனரேனுஞ்சிராப்பள்ளித்

தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்கா
ணிலவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே. (௫)

வெய்யதண்சாரல்விரிநிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
தையலோர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டி
லையமுங்கொள்வராரிவர்செய்கையறிவாரே. (௬)

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடுஞ்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேவியசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடறிருக்குறிப்பாயிற்றாகாதே (எ)

மலையல்குதோளான்வலிகெடவூன்றிமலரோன்றன்
றலைகலனாகப்பலிதிருந்துண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொலவல்கீதஞ்சொல்லுங்காற்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. (அ)

அரப்பள்ளியானுமலருறைவானுமறியாமைக்
கரப்புள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மனைதோறு
மிரப்புள்ளீருமையேதிலர்கண்டாலிகழாரே. (௯)

நாணாதுடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலை
யூணாப்பகலுண்டோதுவோர்களுமுரைக்குஞ்சொற்
பேணாதுறுசீர்பெறுதுமென்பீரெம்பெருமானா
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. (௧௦)

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தாயுமானேசுவரர், தேவியார்-மட்டுவார்குழலம்மை.

திருக்குற்றாலம் - பண், குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றால
மம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமரங்காள். (௧)

பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளோடுநாள்விழமல்குகுற்றாலங்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
யடிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (௨)

செல்வமல்குசெண்பகம்வேங்கைசென்றேறிக்
கொல்லைமுல்லைமெல்லரும்பீனுங்குற்றால
மில்லினொல்கமும்மதிலெய்துவினைபோக
நல்குநம்பானன்னகர்போலுநமரங்காள். (௩)

பக்கம்வாழைப்பாய்கனியோடுபலவின்றேன்
கொக்கின்கோட்டுப்பைங்கனிதூங்குங்குற்றால
மக்கும்பாம்புமாமையும்பூண்டோரனலேந்தி
நக்கன்மேயநன்னகர்போலுநமரங்காள். (௪)

மலையார்சாரன்மகவுடன்வந்தமடமந்தி
குலையார்வாழைத்தீங்கனிமாந்துங்குற்றால
மிலையார்சூலமேந்தியகையானெயிலெய்த
சிலையான்மேயநன்னகர்போலுஞ்சிறுதொண்டீர். (௫)

மைம்மாநீலக்கண்ணியர்சாரன்மணிவாரிக்
கொய்ம்மாவேனலுண்கிளியோப்புங்குற்றாலங்
கைம்மாவேழத்தீருரிபோர்த்தகடவுளெம்
பெம்மான்மேயநன்னகர்போலும்பெரியீர்காள். (௬)

நீலநெய்தறண்சுனைசூழ்ந்தநீள்சோலைக்
கோலமஞ்ஞைபேடையொடாடுங்குற்றாலங்
காலன்றன்னைக்காலாற்காய்ந்தகடவுளெஞ்
சூலபாணிநன்னகர்போலுந்தொழுவீர்காள். (௭)

போதும்பொன்னுமுந்தியருவிபுடைசூழக்
கூதன்மாரிநுண்டுளிதூங்குங்குற்றால
மூதூரிலங்கைமுட்டியகோனைமிறைசெய்த
நாதன்மேயநன்னகர்போலுநமரங்காள். (௮)

அரவின்வாயின்முள்ளெயிறேய்ப்பவரும்பீன்று
குரவம்பாவைமுருகமர்சோலைக்குற்றாலம்
பிரமனோடுமாலறியாதபெருமையெம்
பரமன்மேயநன்னகர்போலும்பணிவீர்காள். (௯)

பெருந்தண்சாரல்வாழ்சிறைவண்டுபெடைபுல்கிக்
குருந்தமேறிச்செவ்வழிபாடுங்குற்றால
மிருந்துண்டேருநின்றுண்சமணுமெடுத்தார்ப்ப
வருந்தண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (௰)

மாடவீதிவருபுனற்காழியார்மன்னனை
கோடலீன்றுகொழுமுனைகூம்புங்குற்றால
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-குறும்பலாவீசுவரர், தேவியார்-குழல்வாய்மொழியம்மை.

திருப்பரங்குன்றம், பண்- குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிறைகொன்றைச்
சூடலனந்திச்சுடரெரியேந்திச்சுடுகானி
லாடலனஞ்சொலணியிழையாளையொருபாகம்
பாடலன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே (க)

அங்கமோராறுமருமறைநான்குமருள்செய்து
பொங்குவெண்ணூலும்பொடியணிமார்பிற்பொலிவித்துத்
திங்களும்பாம்புந்திகழ்சடைவைத்தோர்தேன்மொழி
பங்கினன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. (உ)

நீரிடங்கொண்டநிமிர்சடைதன்மேனிரைகொன்றைச்
சீரிடங்கொண்டவெம்மிறைபோலுஞ்சேய்தாய
வோருடம்புள்ளேயுமையொருபாகமுடனாகிப்
பாரிடம்பாடவினிதுறைகோயில்பரங்குன்றே. (ங)

வளர்பூங்கோங்கமாதவியோடுமல்லிகைக்
குளிர்பூஞ்சாரல்வண்டறைசோலைப்பரங்குன்றந்
தளிர்போன்மேனித்தையனல்லாளொடொருபாகங்
நளிர்பூங்கொன்றைசூடினன்மேயநகர்தானே. (ச)

பொன்னியல்கொன்றைப்பொறிகிளர்நாகம்புரிசடைத்
துன்னியசோதியாகியவீசன்றொன்மறை
பன்னிபாடலாடலன்மேயபரங்குன்றை
யுன்னியசிந்தையுடையவர்க்கில்லையுறுநோயே. (ரு)

கடைநெடுமாடக்கடியரண்மூன்றுங்கனன்மூழ்கத்
தொடைநவில்கின்றவில்லினனந்திச்சுடுகானிற்
புடைநவில்பூதம்பாடநின்றாடும்பொருசூலப்
படைநவில்வான்றனன்னகர்போலும்பரங்குன்றே. (சா)

அயிலுடைவேலோரனல்புல்குகையினம்பொன்றா
லெயில்படவெய்தவெம்மிறைமேயவிடம்போலு

மயில்பெடைபுல்கிமாநடமாடும்வளர்சோலைப்
பயில்பெடைவண்டுபாடலறுதபரங்குன்றே. (எ)

மைத்தகுமேனிவாளரக்கன்றன்மகுடங்கள்
பத்தினதிண்டோளிருபதுஞ்செற்றான்பரங்குன்றைச்
சித்தமதொன்றிச்செய்கழலுன்னிச்சிவனென்று
நித்தலுமேத்தத்தொல்வினைநம்மேனில்லாவே. (அ)

முந்தியவையந்தாவியமாலுமொய்யொளி
யுந்தியிலவந்திங்கருமறையீந்தவுரவோனுந்
சிந்தையினாலுந்தெரிவரிதாகிததிகழ்சோதி
பந்தியலுங்கைமங்கையோர்பங்கன்பரங்குன்றே. (கூ)

குண்டாய்முற்றுந்திரிவார்கூறைமெய்போர்த்து
மிண்டாய்மிண்டாபேசியபேச்சுமெய்யல்ல
பண்டாணீழன்மேவியவீசன்பரங்குன்றைத்
தொண்டாயேத்தத்தொல்வினைநம்மேனிலலாவே. (க0)

தடமலிபொய்கைசசணபைமன்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றனபரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்தும்வல்லார்தந்துயர்போகி
விடமலிகண்டனருள்பெறுந்தன்மைமிக்கோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பரங்கிரிநாதர், தேவியார் - ஆவுடைநாயகியம்மை.

திருக்கண்ணார்கோயில், பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடிப்
பெண்ணாணாயபேரருளாளன்பிரியாத
கண்ணார்கோயில்கைதொழுவோர்கட்கிடர்பாவம்
நண்ணாவாகுநல்வினையாயநணுகும்மே. (க)

கந்தமார்சந்துங்காரகிலுந்தண்கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர்மண்ணிவளஞ்சேர்வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக்கோகிலமாடக்குளிர்வண்டு
செந்திசைபாடுஞ்சீர்திகழ்கண்ணார்கோயிலே. (உ)

பல்லியல்பாணிப்பாரிடமேத்தப்படுகானி
னெல்லிநடஞ்செய்யீசனெம்மான்றனிடமென்பர்
கொல்லையின்முல்லைமல்லிகைமவ்வற்கொடிபின்னிக்
கல்லியலிஞ்சிமஞ்சமர்கண்ணார்கோயிலே. (ங)

தருவளர்கானந்தங்கியதுங்கப்பெருவேழ
மருவளர்கோதையஞ்சவுரித்துமறைநால்வர்க்
குருவளராலநீழலமர்ந்தீங்குரைசெய்தார்
கருவளர்கண்ணார்கோயிலடைந்தோர்கற்றோரே. (ச)

மறுமாணுருவாய்மற்றிணையின்றிவானோரைச்
செறுமாவலிபாற்சென்றுலகெல்லாமளவிட்ட
குறுமாணுருவன்றற்குறியாகக்கொண்டாடுங்
கறுமாகண்டன்மேயதுகண்ணார்கோயிலே. (ரு)

விண்ணவருக்காவேலையுணஞ்சம்விருப்பாக
வுண்ணவனைத்தேவர்க்கமுதீந்தெவ்வுலகிற்குங்
கண்ணவனைக்கண்ணார்திகழ்கோயிற்கனிதன்னை
நண்ணவல்லோர்கட்கில்லைநமன்பாலடலையே. (சு)

முன்னொருகாலத்திந்திரனுற்றமுனிசாபம்
பின்னொருநாளவ்விண்ணவரேத்தப்பெயர்வெய்தித்
தன்னருளாற்கண்ணாயிரமீந்தோன்சார்வென்பர்
கன்னியர்நாளுந்துன்னமர்கண்ணார்கோயிலே. (எ)

பெருக்கெண்ணாதபேதையரக்கன்வரைக்கீழா
னெருக்குண்ணத்தன்னீள்கழனெஞ்சினினைந்தேத்த
முருக்குண்ணாதோர்மொய்கதிர்வாள்தேர்முன்னீந்த
திருக்கண்ணாரென்பார்சிவலோகஞ்சேர்வாரே. (அ)

செங்கமலப்போதிற்றிகழ்செல்வன்றிருமாலு
மங்கமலக்கண்ணனுக்கரும்வண்ணத்தழலானா
னங்கமலக்கண்ணார்திகழ்கோயில்தமதுள்ளத்
தங்கமலத்தோடேத்திடவண்டாதமர்வாரே. (கூ)

தாறிடுபெண்ணைத்தட்டுடையாருந்தாமுண்ணுஞ்
சோறுடையார்சொற்றேறன்மின்வெண்ணூல்சேர்மார்ப
னேறுடையானபரனெனபணிவானீள்சடைமேலோ
ராறுடையண்ணல்சேர்வதுகண்ணார்கோயிலே. (க0)

காமருகண்ணார்கோயிலுளானைக்கடல்சூழ்ந்த
பூமருசோலைப்பொன்னியல்மாடப்புகலிக்கோ
னாமருதொன்மைத்தன்மையுள்ஞானசம்பந்தன்
பாமருபாடல்பத்தும்வல்லார்மேற்பழிபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் கண்ணாயிரேசுவரர், தேவியார், முருகுவளர்கோதையம்மை.

சீகாழி, பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உரவார்கலையின்கவிதைப்புலவர்க்கொருநாளுங்
கரவாவண்மைக்கற்றவர்சேருங்கலிக்காழி
யரவாரரையாவவுணர்புரமூன்றெரிசெய்த
சரவாவென்பார்தத்துவஞானத்தலையாரே. (௧)

மொய்சேர்வண்டுண்மும்மதநால்வாய்முரண்வேழக்
கைபோல்வாழைக்காய்குலையீனுங்கலிக்காழி
மைசேர்கண்டத்தெண்டோண்முக்கண்மறையோனே
யையாவென்பார்க்கல்லல்களானவடையாவே. (௨)

இளகக்கமலத்தினகளியங்குங்கழிசூழக்
களகப்புரிசைக்கவினார்சாருங்கலிக்காழி
யளகத்திருநன்னுதலிபங்காவரனேயென்
றுளகப்பாடுமடியார்க்குறுநோயடையாவே. (௩)

எண்ணார்முத்தமீனுமரகதம்போல்காய்த்துக்
கண்ணார்கமுகுபவளம்பழுக்குங்கலிக்காழிப்
பெண்ணோர்பாகாபித்தாபிரானேயென்பார்க்கு
நண்ணாவினைகணாடொறுமின்பநணுகும்மே. (௪)

மழையார்சாரற்செம்புனல்வந்தங்கடிவருடக்
கழையார்கரும்புகண்வளர்சோலைக்கலிக்காழி
யுழையார்கரவாவுமையாள்கணவாவொளிர்சங்கக்
குழையாவென்றுகூறவல்லார்கள்குணவோரே. (௫)

குறியார்திரைகள்வரைகணின்றுங்கோட்டாறு
கறியார்கழிசம்பிரசங்கொடுக்குங்கலிக்காழி
வெறியார்கொன்றைச்சடையாவிடையாவென்பாரை
யறியாவினைகளருநோய்பாவமடையாவே. (௬-௭)

உலங்கொள்சங்கத்தார்கலியோதத்துதையுண்டு
கலங்கள்வந்துகார்வயலேறுங்கலிக்காழி
யிலங்கைமன்னன்றன்னையிடர்கண்டருள்செய்த
சலங்கொள்சென்னிமன்னாவென்னத்தவமாமே. (௮)

ஆவிக்கமலத்தன்னமியங்குங்கழிசூழ்
காவிக்கண்ணார்மங்கலமோவாக்கலிக்காழிப்
பூவிற்றோன்றும்புத்தேளொடுமாலவன்றானு
மேவிப்பரவுமரசேயென்னவினைபோமே. (௯)

மலையார்மாடநீடுயரிஞ்சிமஞ்சாரும்
கலையார்மதியஞ்சேர்தருமந்தண்கலிக்காழித்

தலைவாசமணர்சாக்கியர்க்கென்றுமறிவொண்ணா
நிலையாவென்னத்தொல்வினையாயநில்லாவே. (௧௦)

வடிகொள்வாவிச்செங்கழுநீரிற்கொங்காடிக்
கடிகொடென்றன்முன்றினில்வைகுங்கலிக்காழி
யடிகடம்மையந்தமில்ஞானசம்பந்தன்
படிகொள்பாடல்வல்லவர்தம்மேற்பழிபோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றம், பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
ஏடுடையான்றலைகலனாகவிரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேமநடமாடுங்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௧)

கேணவல்லான்கேழல்வெண்கொம்புகுறளாமை
பூணவல்லான்புரிசடைமேலோர்புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னையொருபாகங்
காணவல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௨)

தேனகத்தார்வண்டதுவுண்டதிகழ்கொன்றை
தானகத்தார்தண்மதிசூடித்தலைமேலோர்
வானகத்தார்வையகத்தார்கடொழுதேத்துங்
கானகத்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௩)

துணையல்செய்தான்றூயவண்டியாழ்செய்சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான்பெண்ணினல்லாளையொருபாக
மிணையல்செய்யாவிலங்கெயின்மூன்றுமெரியுண்ணக்
கணையல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௪)

பையுடையபாம்பொடுநீறுபயில்கின்ற
மெய்யுடையான்வெண்பிறைசூடிவிரிகொன்றை
மையுடையமாமிடற்றண்ணன்மறிசேர்ந்த
கையுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௫)

வெள்ளமெல்லாம்விரிசடைமேலோர்விரிகொன்றை
கொள்ளவல்லான்குரைகழலேத்துஞ்சிறுத்தொண்ட
ருள்ளமெல்லாமுள்கிநின்றாங்கேயுடனாடுங்
கள்ளம்வல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௬-௭)

ஆதல்செய்தானரக்கர்தங்கோனையருவரையி
னோதல்செய்தானொடிவரையின்கண்விரலூன்றிப்

பேர்தல்செய்தான்பெண்மகடன்னோடொருபாகங்
காதல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (அ)

இடந்தபெம்மானேனமதாயுமனமாயுந்
தொடர்ந்தபெம்மான்றூமதிசூடிவரையார்தம
மடந்தைபெம்மான்வார்கழலோச்சிக்காலனைக்
கடந்தபெம்மான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௯)

தேயநின்றான்றிரிபுரங்கங்கைசடைமேலே
பாயநின்றான்பலர்புகழ்ந்தேத்தவுலகெல்லாஞ்
சாயநின்றான்வன்சமண்குண்டர்சாக்கியர்
காயநின்றான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௰)

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பண்ணியல்பாடியபத்துமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடுமேபுகுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டை நாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதகிரீசுவரர், தேவியார்-பெண்ணினல்லாளம்மை.

ஸ்ரீபுகலி, பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஆடலரவசைத்தானருமாமறைதான்விரித்தான்கொன்றை
சூடியசெஞ்சடையான்சுடுகாடமர்ந்தபிரா
னேடவிழ்மாமலையாளொருபாகமமர்ந்தடியாரேத்த
வாடியவெம்மிறையூர்புகலிப்பதியாமே. (க)

ஏலமலிகுழலாரிசைபாடியெழுந்தருளாற்சென்று
சோலைமலிசுனையிற்குடைந்தாடித்துதிசெய்ய
வாலைமலிபுகைபோயண்டர்வானத்தைமூடிநின்றுநல்ல
மாலையதுசெய்யும்புகலிப்பதியாமே. (உ)

ஆறணிசெஞ்சடையானழகார்புரமூன்றுமன்றுவேவ
நீறணியாகவைத்தநிமிர்புன்சடையெம்மிறைவன்
பாறணிவெண்டலையிற்பகலேபலியென்றுவந்துநின்ற
வேறணிகோலத்தினான்விரும்பும்புகலியதே. (ங)

வெள்ளமதுசடைமேற்கரந்தான்விரவார்புரங்கள்மூன்றுங்
கொள்ளவெரிமடுத்தான்குறைவின்றியுறைகோயி
லள்ளல்விளைகழனியழகார்விரைத்தாமரைமேலன்னம்
புள்ளினம்வைகியெழும்புகலிப்பதிதானே. (௪)

சூடுமதிசடைமேற்சுரும்பார்மலர்க்கொன்றைதுன்றநட்ட
மாடுமமரர்பிரானழகாருமையோடுமுடன்
வேடுபடநடந்தவிகிர்தன்குணம்பரவித்தொண்டர்
பாடவினிதுறையும்புகலிப்பதியாமே. (ரு)

மைந்தணிசோலையினவாய்மதுப்பாயவரிவண்டினங்கள்வந்து
சந்திசைபாடநடம்பயில்கின்றநம்பனிட
மந்திசெய்மந்திரத்தாலடியார்கள்பரவியெழவிரும்பு
புந்திசெய்நான்மறையோர்புகலிப்பதிதானே. (சு)

மங்கையோர்கூறுகந்தமழுவாளன்வார்சடைமேற்றிங்கள்
கங்கைதனைக்கரந்தகறைக்கண்டனகருதுமிடஞ்
செங்கயல்வார்கழனிதிகழும்புகலிதனைச்சென்றுத
மங்கையினாற்றொழுவாரவலமறியாரே. (எ)

வல்லியநுண்ணிடையாளுமையாள்விருப்பனவனண்ணு
நல்லிடமென்றறியானலியும்விறலரக்கன
பல்லொடுதோணெரியவிரலூன்றிப்பாடலுமேகைவா
ளொல்லையருள்புரிந்தானுறையும்புகலியதே. (அ)

தாதலர்தாமரைமேலயனுந்திருமாலுந்தேடி
யோதியுங்காண்பரியவுமைகோனுறையுமிடம்
மாதவிவான்வகுளமலர்ந்தெங்குமவிரைதோயவாய்ந்த
போதலர்சோலைகள்சூழ்புகலிப்பதிதானே. (கூ)

வெந்துவர்மேனியினார்விரிகோவணநீத்தார்சொல்லும
மந்தரஞானமெல்லாமவையோர்பொருளென்னேல்
வந்தெதிரும்புரமூன்றெரித்தானுறைகோயில்வாய்ந்த
புந்தியினார்பயிலும்புகலிப்பதிதானே. (க0)

வேதமோர்கீதமுணர்வாணர்தொழுதேத்தமிகுவாசப
போதனைப்போன்மறையோர்பயிலும்புகலிதன்னுள்
நாதனைஞானமிகுசம்பந்தனதமிழ்மாலைநாவி
லோதவல்லாருலகிலுறுநோய்களைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு ஆரூர், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாடலனான்மறையன்படிபட்டகோலத்தன்றிங்கள்
சூடலன்மூவிலையசூலம்வலனேந்திக
கூடலர்மூவெயிலுமெரியுண்ணக்கூரெரிகொண்டெல்லி
யாடலனாதிரையனாரூரமர்ந்தானே. (க)

சோலையில்வண்டினங்கள்சுரும்போடிசைமுரலச்சூழ்ந்த
வாலையின்வெம்புகைபோய்முகிறோயுமாரூரிற்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடும்பரமேட்டிபாதங்
காலையுமாலையும்போய்ப்பணிதல்கருமமே. (௨)

உள்ளமோரிச்சையினாலுகந்தேத்தித்தொழுமின்றொண்டீர்மெய்யே
கள்ளமொழிந்திடுமின்கரவாதிருபொழுதும்
வெள்ளமோர்வார்சடைமேற்கரந்திட்டவெள்ளேற்றான்மேய
வள்ளலகன்கழனியாரூரடைவோமே. (௩)

வெந்துறுவெண்மழுவாட்படையான்மணிமிடற்றானரையி
னைந்தலையாடரவமசைத்தானணியாரூர்ப்
பைந்தளிர்க்கொன்றையந்தார்ப்பரமன்னடிபரவப்பாவ
நைந்தறும்வந்தணையுநாடொறுநல்லனவே. (௪)

வீடுபெறப்பெளிதாமதனைவினவுதிரேல்வெய்ய
காடிடமாகநின்றுகனலேந்திக்கைவீசி
யாடுமவிர்சடையானவன்மேயவாரூரைச்சென்று
பாடுதல்கைதொழுதல்பணிதல்கருமமே. (௫)

கங்கையோர்வார்சடைமேற்கரந்தான்கிளிமழலைக்கேடில்
மங்கையோர்கூறுடையான்மறையான்மழுவேந்து
மங்கையினானடியேபரவியவன்மேயவாரூர்
தங்கையினாற்றொழுவார்தடுமாற்றறுப்பாரே. (௬)

நீறணிமேனியனாய்நிரம்பாமதிசூடிநீண்ட
வாறணிவார்சடையானாரூரினிதமர்ந்தான
சேறணிமாமலர்மேற்பிரமன்சிரமரிந்தசெங்க
ணேறணிவெல்கொடியானவனெம்பெருமானே. (௭-௮)

வல்லியந்தோலுடையான்வளர்திங்கட்கண்ணியினான்வாய்ந்த
நல்லியனான்முகத்தோன்றலையினறவேற்றா
னல்லியங்கோதைதன்னையாகத்தமர்ந்தருளியாரூர்ப்
புல்லியபுண்ணியனைத்தொழுவாரும்புண்ணியரே. (௯)

செந்துவராடையினாருடைவிட்டுநின்றுழல்வார்சொன்ன
விந்திரஞாலமொழிந்தின்புறவேண்டுதிரே
லந்தரமூவெயிலுமரணம்மெரியூட்டியாரூர்த்
தந்திரமாவுடையானவனெந்தலைமையனே. (௧௦)

நல்லபுனற்புகலித்தமிழ்ஞானசம்பந்தனல்ல
வல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிச்சையினால்வழிபாடிவைபத்தும்வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லோர்துன்பந்துடைப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு ஊறல், பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணையாலன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவிற்
றேறலிரும்பொழிலுந்திகழ்செங்கயல்பாய்வயலுஞ்சூழ்ந்த
ஊறலமர்ந்தபிரானொலியார்கழலுள்குதுமே. (௧)

மத்தமதக்கரியைமலையான்மகளஞ்சவன்றுகையான்
மெத்தவுரித்தவெங்கள்விமலன்விரும்புமிடந்
தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேர்ந்தொளிநீலநாளுந்நயன
மொத்தலருங்கழனித்திருவூறலையுள்குதுமே. (௨)

ஏனமருப்பினொடெழிலாமையும்பூண்டழகார்நன்றுங்
கானமர்மான்மறிக்கைக்கடவுள்கருதுமிடம்
வானமதிதடவும்வளர்சோலைகள்சூழ்ந்தழகார்நம்மை
யூனமறுத்தபிரான்றிருவூறலையுள்குதுமே. (௩)

நெய்யணிமூவிலைவேனிறைவெண்மழுவும்மனலுமன்று
கையணிகொள்கையினன்கடவுள்ளிடம்வினவின்
மையணிகண்மடவாரவர்தாம்பலர்வந்திறைஞ்சமன்னிநம்மை
யுய்யும்வகைபுரிந்தான்றிருவூறலையுள்குதுமே. (௪)

எண்டிசையோர்மகிழவெழின்மாலையும்போனகமும்பண்டு
தண்டிதொழவளித்தானவன்றாழுமிடம்வினவிற்
கொண்டல்கடங்குபொழிற்குளிர்பொய்கைகள்சூழ்ந்துநஞ்சை
யுண்டபிரானமருந்திருவூறலையுள்குதுமே (௫-௬-௭)

கறுத்தமனத்தினொடுங்கடுங்காலன்வந்தெய்துதலுங்கலங்கி
மறுக்குறுமாணிக்கருளமகிழ்ந்தானிடம்வினவிற்
செறுத்தெழுவாளரக்கன்சிரந்தோளுமெய்யுநெரியவன்று
ஒறுத்தருள்செய்தபிரான்றிருவூறலையுள்குதுமே. (௮)

நீரின்மிசைத்துயின்றோனிறைநான்முகனுமறியாதன்று
தேரும்வகைநிமிர்ந்தானவன்சேருமிடம்வினவிற்
பாரின்மிசையடியார்பலர்வந்திறைஞ்சமகிழ்ந்தாக
மூருமரவசைத்தான்றிருவூறலையுள்குதுமே. (௯)

பொன்னியல்சீவரத்தார்புளித்தட்டையர்மோட்டமணர்குண்ட
ரென்னுமிவர்க்கருளாவீசனிடம்வினவிற்
றென்னெனவண்டினங்கள்செறியார்பொழில்சூழ்ந்தழகார்தன்னை
யுன்னவினைகெடுப்பான்றிருவூறலையுள்குதுமே. ((௧௦)

கோடலிரும்புறவிற்கொடிமாடக்கொச்சையர்மனமெச்ச
வோடுபுனல்சடைமேற்கரந்தான்றிருவூறல்
நாடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்னநல்ல
பாடல்கள்பத்துமவல்லார்பரலோகதிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது தக்கோலமென வழங்குகின்றது. தொண்டை நாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-உமாபதீசுவரர், தேவியார்-உமையம்மை.

திருக்கொடிமாடச்செங்குன்றூர், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வந்தணனைத்தொழுவாரவலமறுப்பாரே. (க)

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாக
மலைமகள்கூறுடையானமலையாரிளவாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
தலைமகனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (உ)

பாலனநீறுபுனைதிகழ்மார்பிற்பல்வளைக்கைநல்ல
ஏலமலர்க்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்ப்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மல்கு
நீலநன்மாமிடற்றானகழலேத்தல்நீதியே (௩)

வாருறுகொங்கைநல்லமடவாள்திகழ்மார்பினண்ணு
காருறுகொன்றையொடுங்கதநாகம்பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
நீருறுசெஞ்சடையான்கழலேத்தல்நீதியே. (௪)

பொன்றிகழாமையொடுபுரிநூறிகழ்மார்பினல்ல
பன்றியின்கொம்பணிந்துபணைத்தோளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர்வானின்
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தல்மெய்ப்பொருளே. (௫)

ஓங்கியமூவிலைநற்சூலமொருகையன்சென்னி
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்வாய்ந்த
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே.

நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழவெள்ளை
வாடலுடைதலையிற்பலிகொள்ளும்வாழ்க்கையனைக்

கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
சேடனதாள்தொழுவார்வினையாயதேயுமே. (எ)

மத்தநன்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன்றுன்று
தொத்தலர்செஞ்சடைமேற்றுதையவுடனசூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
தத்துவனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (அ)

செம்பொனின்மேனியனும்பிரமன்றிருமாலுந்தேடநின்ற
வம்பவளத்திரள்போலொளியாயவாதிபிரானை
கொம்பணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (கூ)

போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கூறும்பொய்ந்நூ
லோதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வேதியனைத்தொழநும்வினையானவீடுமே. (க0)

அலைமலிதண்புனல்சூழ்ந்தழகார்புகலிந்நகர்பேணுந்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன
கொலைமலிமூவிலையானகொடிமாடச்செங்குன்றூரேத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது-திருச்செங்கோடு என வழங்குகிறது

திருப்பாதாளீச்சுரம், பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைமேல்விளங்குமதிமத்தமொடுநல்ல
பொன்னியல்கொன்றையினன்புனல்சூடிப்பொற்பமரு
மன்னமனநடையாளொருபாகத்தமர்ந்தருளிநாளும்
பன்னியபாடலினானுறைகோயில்பாதாளே. (க)

நீடலர்கொன்றையொடுநிரம்பாமதிசூடிவெள்ளைத்
தோடமர்காதினல்லகுழையான்சுடுநீற்
றாடரவம்பெருகவனலேந்திக்கைவீசிவேதம்
பாடலினாலினியானுறைகோயில்பாதாளே. (உ)

நாகமும்வான்மதியுநலமல்குசெஞ்சடையான்சாமம்
போகநல்வில்வரையாற்புரமூன்றெரித்துகந்தான்
றோகைநன்மாமயில்போல்வளர்சாயற்றூமொழியைக்கூடப்
பாகமும்வைத்துகந்தானுறைகோயில்பாதாளே. (ங)

அங்கமுநான்மறையுமருள்செய்தழகார்ந்தவஞ்சொன்
[illegible]மோர்கூறுடையான்மறையானுறைகோயில்

செங்கயனின்றுகளுஞ்செறுவிற்றிகழ்கின்றசோதிப்
பங்கயநின்றலரும்வயல்சூழ்ந்தபாதாளே.. (ரு)

பேய்பலவுந்நிலவப்பெருங்காடரங்காகவுன்னிநின்று
தீயொடுமான்மறியுமழுவுந்திகழ்வித்துத்
தேய்பிறையும்மரவும்பொலிகொன்றைச்சடைதன்மேற்சேரப்
பாய்புனலுமுடையானுறைகோயில்பாதாளே. (௬)

கண்ணமர்நெற்றியினன்கமழ்கொன்றைச்சடைதன்மேனின்றும்
விண்ணியன்மாமதியுமுடன்வைத்தவன்விரும்பும்
பெண்ணமர்மேனியினன்பெருங்காடரங்காகவாடும்
பண்ணியல்பாடலினனுறைகோயில்பாதாளே. (௭)

விண்டலர்மத்தமொடுமிளிரும்மிளநாகமவன்னிதிகழ்
வண்டலர்கொன்றைநகுமதிபுல்குவார்சடையான்
விண்டவர்தமபுரமூன்றெரிசெய்துரைவேதநான்குமவை
பண்டிசைபாடலினனுறைகோயில்பாதாளே. (௮)

மல்கியநுண்ணிடையாளுமைநங்கைமறுகவன்றுகையாற்
றொல்லைமலையெடுத்தவரக்கன்றலைதோணெரித்தான்
கொல்லைவிடையுகந்தானகுளிர்திங்கள்சடைக்கணிந்தோனவி
பல்லிசைபாடலினனுறைகோயில்பாதாளே. (௯)

தாமரைமேலயனுமரியுந்தமதாள்வினையாற்றேடிக்
காமனைவீடுவித்தான்கழல்காண்பிலராயகன்றூர்
பூமருவுங்குழலாளுமைநங்கைபொருந்தியிட்டநல்ல
பாமருவுங்குணத்தானுறைகோயில்பாதாளே. (௯)

காலையிலுண்பவருஞ்சமண்கையருங்கட்டுரைவிட்டன்
றாலவிடநுகர்ந்தானவனதன்னடியேபரவி
மாலையில்வண்டினங்கண்மதுவுண்டிசைமுரலவாய்த்த
பாலையாழ்ப்பாட்டுகந்தானுறைகோயில்பாதாளே. (க0)

பணமலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாதாளைச்சேரப்
பொன்னியன்மாடமல்குபுகலிந்நகர்மன்னன்
றன்னெளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
வின்னிசைபத்துமவல்லாரெழில்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிரபுரம், பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாருறுவனமுலைமங்கைபங்க, னீருறுசடைமுடிநிமலனிடங்
காருறுகடிபொழில்சூழ்ந்தழகார், சீருறுவளவயற்சிரபுரமே. (க)

அங்கமொடருமறையருள்புரிந்தான், திங்களொடரவணிதிகழ்முடியன்
மங்கையொடினிதுறைவளநகரஞ், செங்கயன்மிளிர்வயற்சிரபுரமே (உ)

பரிந்தவன்பன்முடியமரர்க்காகித், திரிந்தவர்புரமவைதீயின்வேவ
வரிந்தவெஞ்சிலைபிடித்தடுசரத்தைத், தெரிந்தவன்வளநகர்சிரபுரமே. (ந)

நீறணிமேனியனீண்மதியோ, டாறணிசடையினனணியிழையோர்
கூறணிந்தினிதுறைகுளிர்நகரஞ், சேறணிவளவயற்சிரபுரமே. (ச)

அருந்திறலவுணர்களரணழியச், சரந்துரந்தெரிசெய்தசங்கரனூர்
குருந்தொடுகொடிவிடுமாதவிக, டிருந்தியபுறவணிசிரபுரமே. (ரு)

கலையவன்மறையவன்காற்றொடுதீ, மலையவன்விண்ணொடுமண்ணுமவன்
கொலையவன்கொடிமதில்கூட்டழித்த, சிலையவனவளநகர்சிரபுரமே. (சா)

வானமர்மதியொடுமத்தஞ்சூடித், தானவர்புரமெய்தசைவனிடங்
கானமர்மடமயில்பெடைபயிலுந், தேனமர்பொழிலணிசிரபுரமே. (எ)

மறுத்தவர்திரிபுரமாய்ந்தழியக், கறுத்தவனகாரரக்கன்முடிதோ
ளிறுத்தவனிருஞ்சினக்காலனைமுன், செறுத்தவன்வளநகர்சிரபுரமே. (அ)

வண்ணநன்மலருறைமறையவனுங், கண்ணனுங்கழறொழுதகனலுருவாய்
விண்ணுறவோங்கியவிமலனிடந், திண்ணநன்மதிளணிசிரபுரமே. (கூ)

வெற்றரையுழல்பவர்விரிதுகிலார், கற்றிலரறவுரைபுறனுரைக்கப்
பற்றலர்திரிபுரமூன்றும்வேவச், செற்றவன்வளநகர்சிரபுரமே. (க0)

அருமறைஞானசம்பந்தனந்தண், சிரபுரநகருறைசிவனடியைப்
பரவியசெந்தமிழ்பத்தும்வல்லார், திருவொடுபுகழ்மல்குதேசினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர், பண்-வியாழகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவன்வானவர்தானவர்க்கும
பெருந்தகைபிறவிநோயறுமா
னருந்தவமுனிவரோடாலிழற்கீ
ழிருந்தவன்வளநகரிடைமருதே. (க)

தோற்றவன்கேடவனணைமுலையாள
கூற்றவன்கொல்புலித்தோலசைத்த
நீற்றவனிறைபுனனீள்சடைமே
லேற்றவன்வளநகரிடைமருதே. (உ)

படையுடைமழுவினன்பால்வெண்ணீற்ற
னடைநவிலேற்றினன்ஞாலமெல்லா

மூடைதலையிடுபலிகொண்டுழல்வா
னிடைமருதினிதுறையெம்மிறையே. (௩)

பணைமுலையுமையொருபங்கனென்னார்
துணைமதின்மூன்றையுஞ்சுடரின்மூழ்கக்
கணைதுரந்தடுதிறற்காலற்செற்ற
வினையிலிவளநகரிடைமருதே. (௪)

பொழிலவன்புயலவன்புயலியக்குந்
தொழிலவன்றுபரவன்றுயரகற்றுங்
கழலவன்கரியுரிபோர்த்துகந்த
வெழிலவன்வளநகரிடைமருதே (௫)

நிறையவன்புனலொடுமதியும்வைத்து
பொறையவன்புகழவனபுகழநின்ற
மறையவன்மறிகடனஞ்சையுண்ட
விறையவன்வளநகரிடைமருதே. (௬)

நனிவளர்மதியொடுநாகம்வைத்த
பனிமலர்க்கொன்றையம்படர்சடையன
முனிவரோடமரர்கண்முறைவணங்க
வினிதுறைவளநகரிடைமருதே. (௭)

தருக்கினவரக்கனதாளுந்தோளு
நெரித்தவனெடுங்கைமாமதகரியன்
றுரித்தவனொன்னலர்புரங்கண்மூன்று
மெரித்தவன்வளநகரிடைமருதே. (௮)

பெரியவன்பெண்ணினோடாணுமானான்
வரியரவணைமறிகடற்றுயின்ற
கரியவனலரவன்காணபரிய
வெரியவன்வளநகரிடைமருதே. (௯)

சிந்தையிற்சமணொடுதேரர்சொன்ன
புந்தியிலுரையவைபொருள்கொளாதே
யந்தணர் * ஓத்தினொடரவமோவா
வெந்தைதன்வளநகரிடைமருதே. (௧௦)

இலமலிபொழிலிடைமருதிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
பலமிகுதமிழிவைபத்தும்வல்லா
ருலகுறுபுகழினோடோங்குவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ஓத்து என்பது - வேதம்.

திருக்கடைமுடி, பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அருத்தனையறவனையமுதனைநீர், விருத்தனைப்பாலனைவினவுதிரே
லொருத்தனையல்லதிங்குலகமேத்துங், கருத்தவன்வளநகர்கடைமுடியே. (௧)

திரைபொருதிருமுடிதிங்கள்விம்மு, மரைபொருபுலியதளடிகளிடந்
திரையொடுநுரைபொருதெண்சுனைநீர், கரைபொருவளநகர்கடைமுடியே. (௨)

ஆலிளமதியினொடரவுகங்கை, கோலவெண்ணீற்றனைத்தொழுதிறைஞ்சி
யேலநன்மலரொடுவிரைகமழுங், காலனவளநகர்கடைமுடியே. (௩)

கொய்யணிநறுமலர்க்கொன்றையந்தார், மையணிமிடறுடைமறையவனூர்
பையணியரவொடுமான்மழுவாட், கையணிபவனிடங்கடைமுடியே. (௪)

மறையவனுலகவன்மாயமவன், பிறையவன்புனலவனனலுமவ
னிறையவனெனவுலகேத்துங்கண்டங், கறையவன்வளநகர்கடைமுடியே. (௫)

படவரவேரல்குற்பல்வளைக்கை, மடவரலாளையோர்பாகம்வைத்துக்
குடதிசைமதியதுசூடுசென்னிக், கடவுடன்வளநகர்கடைமுடியே. (௬)

பொடிபுல்குமார்பினிற்புரிபுலகுநூ, லடிபுல்குபைங்கழலடிகளிடங்
கொடிபுல்குமலரொடுகுளிர்சுனைநீர், கடிபுல்குவளநகர்கடைமுடியே. (௭)

நோதல்செய்தரக்கனைநோக்கழியச், சாதல்செய்தவனடிசரணெனலு
மாதரவருள்செய்தவடிகளவர், காதல்செய்வளநகர்கடைமுடியே. (௮)

அடிமுடிகாண்கிலரோரிருவர், புடைபுல்கியருளென்றுபோற்றிசைப்பச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனிடங், கடைமுடியதனயல்காவிரியே. (௯)

மண்ணுதல்பறித்தலுமாயமிவை, யெண்ணியகாலவையின்பமல்ல
வொண்ணுதலுமையையோர்பாகம்வைத்த, கண்ணுதல்வளநகர்கடைமுடியே.

பொன்றிகழ்காவிரிப்பொருபுனல்சீர், சென்றடைகடைமுடிச்சிவனடியை
நன்றுணர்ஞானசம்பந்தனசொன்ன, வின்றமிழிவைசொலவின்பமாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கடைமுடியீசுவரர், தேவியார் - அபிராமியம்பிகை.

திருச்சிவபுரம், பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இனகுரலிசைகெழுமியாழ்முரலத்
தன்கரமருவியசதுரனகர்
பொன்கரைபொருபழங்காவிரியின்
றென்கரைமருவியசிவபுரமே. (௧)

அன்றடற்காலனைப்பாலனுக்காய்ப்
பொன்றிடவுதைசெய்தபுனிதனகர்
வென்றிகொளெயிற்றுவெண்பன்றிமுன்னாட்
சென்றடிவீழ்தருசிவபுரமே. (௨)

மலைமகண்மறுகிடமதகரியைக்
கொலைமல்கவுரிசெய்தகுழகனக
ரலைமல்கும் * அரிசிலினதனயலே
சிலைமல்குமதிலணிசிவபுரமே. (௩)

மண்புனலனலொடுமாருதமும
விண்புனைமருவியவிகிர்தனகர்
பண்புனைகுரல்வழிவண்டுகிண்டிச்
செண்பகமலர்பொழிற்சிவபுரமே. (௪)

வீறுநன்குடையவண்மேனிபாகங்
கூறுநன்குடையவன்குளிர்நகர்தா
னாறுநன்குரவிரிவண்டுகிண்டித்
தேறலுண்டெழுதருசிவபுரமே (௫)

மாறெதிர்வருதிரிபுரமெரித்து
நீறதுவாக்கியநிமலனகர்
நாறுடைநடுபவருழவரொடுஞ்
சேறுடைவயலணிசிவபுரமே. (௬)

ஆவிலைந்தமர்ந்தவனரிவையொடு
மேவிநன்கிருந்ததோர்வியனகர்தான்
பூவில்வண்டமர்தருபொய்கையன்னச்
சேவலன்பெடைபுல்குசிவபுரமே. (௭)

எழின்மலையெடுத்தவல்லிராவணன்றன்
முழுவலியடக்கியமுதல்வனகர்
விழவினிலெடுத்தவெண்கொடிமிடைந்து
செழுமுகிலடுக்கும்வண்சிவபுரமே. (௮)

சங்களவியகையன்சதுமுகனு
மங்களவறிவரியவனகர்தான்
கங்குலும்பறவைகள்கமுகுதொறுஞ்
செங்கனிநுகர்தருசிவபுரமே. (௯)

மண்டையிற்குண்டிகைமாசுதரு
மிண்டரைவிலக்கியவிமலனகர்
பண்டமர்தருபழங்காவிரியின்
றெண்டிரைபொருதெழுசிவபுரமே. (௧௦)

* அரிசில் என்பது - ஒருநதி.

சிவனுறைதருசிவபுரநகரைக்
கவுணியர்குலபதிகாழியர்கோன்
றவமல்குதமிழிவைசொல்லவல்லார்
நவமொடுசிவகதிநண்ணுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவல்லம் - பண், வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. (௧)

தாயவனுலகுக்குத்தன்னொப்பிலாத்
தூயவன்றூமதிசூடியெல்லா
மாயவனமரர்க்குமுனிவர்கட்குஞ்
சேயவனுறைவிடந்திருவல்லமே. (௨)

பார்த்தவன்காமனைப்பண்பழியப்
போர்த்தவன்போதகத்தின்னுரிவை
யார்த்தவனான்முகன்றலையையன்று
சேர்த்தவனுறைவிடந்திருவல்லமே. (௩)

கொய்தவமலரடிகூடுவார்தம்
மைதவழ்திருமகளணங்கவைத்துப்
பெய்தவன்பெருமழையுலகமுய்யச்
செய்தவனுறைவிடந்திருவல்லமே. (௪)

சார்ந்தவர்க்கின்பங்கடழைக்கும்வண்ண
நேர்ந்தவனேரிழையோடுங்கூடித்
தேர்ந்தவர்தேடுவார்தேடச்செய்தே
சேர்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (௫)

பதைத்தெழுகாலனைப்பாதமொன்றா
லுதைத்தெழுமாமுனிக்குண்மைநின்று
விதிர்த்தெழுதக்கனற்வேள்வியன்று
சிதைத்தவனுறைவிடந்திருவல்லமே. (௬-௭)

இகழ்ந்தருவரையினையெடுக்கலுற்றுங்
ககழ்ந்தவல்லரக்கனையடர்த்தபாத
நிகழ்ந்தவர்நேடுவார்நேடச்செய்தே
திகழ்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (௮)

பெரியவன்சிறியவர்சிந்தைசெய்ய
வரியவனருமறையங்கமானான்
கரியவனான்முகன்காணவொண்ணாத்
தெரியவன்வளநகர்திருவல்லமே. (கூ)

அன்றியவமணர்கள்சாக்கியர்கள்
குன்றியவறவுரைகூறுவண்ணம்
வென்றவன்புலனைந்தும்விளங்கவெங்குந்
சென்றவனுறைவிடந்திருவல்லமே. (கO)

கற்றவர்திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்.
பற்றுவர்ஈசன்பொற்பாதங்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-வல்லநாதர், தேவியார் - வல்லாம்பிகையம்மை.

திருமாற்பேறு, பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன்குருகவன்கூர்மையவன்
பெருந்தகைபெண்ணவனாணுமவன்
கருந்தடமலர்க்கண்ணிகாதல்செய்யு
மருந்தவன்வளநகர்மாற்பேறே (க)

பாறணிவெண்டலைகையிலேந்தி
வேறணிபலிகொளும்வேட்கையனாய்
நீறணிந்துமையொருபாகம்வைத்த
மாறிலிவளநகர்மாற்பேறே. (உ)

கருவுடையாருலகங்கள்வேவச்
செருவிடையேறியுஞ்சென்றுநின்
றுருவுடையாளுமையாளுந்தானும்
மருவியவளநகர்மாற்பேறே. (ங)

தலையவன்றலையணிமாலைபூண்டு
கொலைநவில்கூற்றினைக்கொன்றுகந்தான்
கலைநவின்றான்கயிலாயமென்னும்
மலையவன்வளநகர்மாற்பேறே. (ச)

துறையவன்றொழிலவன்றொல்லுயிர்க்கும்
பிறையணிசடைமுடிப்பெண்ணோர்பாகன்

கறையணிமிடற்றண்ணல்காலற்செற்ற
மறையவன்வளநகர்மாற்பேறே. (ரு)

பெண்ணினல்லாளையோர்பாகம்வைத்துக்
கண்ணினாற்காமனைக்காய்ந்தவன்றன்
விண்ணவர்தானவர்முனிவரோடு
மண்ணவர்வணங்குநன்மாற்பேறே. (சு-எ)

தீதிலாமலையெடுத்தவ்வரக்க
னீதியால்வேதகீதங்கள்பாட
வாதியாகியவண்ணலங்கண்
மாதிதன்வளநகர்மாற்பேறே. (அ)

செய்யதண்டாமரைக்கண்ணனொடுங்
கொய்யணிநறுமலர்மேலயனு
மையனன்சேவடியதனையுள்க
மையல்செய்வளநகர்மாற்பேறே. (கூ)

குளித்துணாவமணர்குண்டாக்கரென்றுங்
களித்துநன்கழலடி காணலுறார்
முளைத்தவெண்மதியினொடரவுஞ்சென்னி
வளைத்தவன்வளநகர்மாற்பேறே. (க0)

அந்தமில்ஞானசம்பந்தனல்ல
செந்திசைபாடல்செய்திருமாற்பேற்றைச்
சந்தமின்றமிழ்கள்கொண்டேத்தவல்லா
ரெந்தைதன்கழலடியெய்துவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு இராமனதீச்சரம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சங்கொளிர்முன்கையர்தம்மிடையே
யங்கிடுபலிகொளுமவன்கோபப்
பொங்கரவாடலோன்புவனியோங்க
வெங்குமனிராமனதீச்சரமே. (க)

ழசடையன்
றந்தமதத்தவன்றாதையோதா
னந்தமிழ்பாடலோனழகனல்ல
வெந்தவனிராமனதீச்சரமே. (உ)

தழைமயிலேறவன்றாதையோதான்
மழைபொழிசடையவன்மன்னுகாதிற்

குழையதுவிலங்கியகோலமார்பி
னிழையவனிராமனதீச்சரமே. (௩)

சத்தியுளாதியோர்தையல்பங்கன்
முத்தியதாகியமூர்த்தியோதா
னத்தியங்கையினிலழகுசூலம்
வைத்தவனிராமனதீச்சரமே. (௪)

தாழ்ந்தகுழற்சடைமுடியதன்மேற்
றோய்ந்தவிளம்பிறைதுளங்குசென்னிப்
பாய்ந்தகங்கையொடுபடவரவ
மேய்ந்தவனிராமனதீச்சரமே. (௫)

சரிகுழலிலங்கியதையல்காணும
பெரியவன்காளிதன்பெரியகூத்தை
யரியவனாடலோனங்கையேந்து
மெரியவனிராமனதீச்சரமே. (௬)

மாறிலாமாதொருபங்கன்மேனி
நீறதுவாடலோனீள்சடைமே
லாறதுசூடினானழகன்விடை
யேறவனிராமனதீச்சரமே. (௭)

தடவரையரக்கனைத்தலைநெரித்தோன்
படவரவாட்டியபடர்சடைய
னடமதுவாடலானான்மறைக்கு
மிடமவனிராமனதீச்சரமே. (௮)

தனமணிதையறன்பாகன்மன்னை
யனமணியயனணிமுடியுங்காணா
பனமணிவரவரிபாதங்காணு
னினமணியிராமனதீச்சரமே, (௯)

அறிபோலாஞ்சமணராசாக்கியர்சொற்கொளே
லறிவோராணுமமறிந்துரைமின்
மறிகையோனறமுடிமணியாகங்கை
யெறியவனிராமனதீச்சரமே. (௧௦)

தேன்மலர்க்கொன்றையோன்
முந்தமக்கூனமன்றே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது - சிதலமானபதிகங்களி லொன்று.
சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - இராமநாதேசுவரர், தேவியார் - கருவார்குழலியம்மை.

திருநீலகண்டம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (௧)

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்தீரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோந்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (௨)

முலைத்தடமூழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
விலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௩)

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௪)

மற்றிணையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீ
ரிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுதன்மைகொலோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துந்திருவடியேயடைந்தோஞ்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௫)

மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௬ ௭)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடுவந்துமையேத்துதுநாமடியோஞ்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௮)

நாற்றமலர்மிசைநான்முகனாரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடாவரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுநாமடியோஞ்
சீற்றமதாம்வினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௯)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றும்விட்டார்

பூக்கமழ்கொன்றைப்புரிசடையீரடிபோற்றுகின்றோந்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௧௦)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
னிறம்பிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கட்
டிறம்பயில்ஞானசம்பன்செந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது - திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்களுக்குக்கண்ட சுரப்பிணிநீங்க வோதியருளியது.

திருப்பிரமபுரம்-மொழிமாற்று, பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காடதணிகலங்காரரவம்பதிகாலதனிற்
றோடதணிகுவர்சுந்தரக்காதினிற்றூசசிலம்பர்
வேடதணிவர்விசயற்குருவம்வில்லுங்கொடுப்பர்
பீடதணிமணிமாடப்பிரமபுரத்தாரே. (௧)

கற்றைச்சடையதுகங்கணமுன்கையிற்றிங்கள்கங்கை
பற்றித்துமுப்புரம்பார்படைத்தோன்றலைசுட்டதுபண்
டெற்றித்துப்பாம்பையணிந்ததுகூற்றையெழில்விளங்கும்
வெற்றிச்சிலைமதில்வேணுபுரத்தெங்கள்வேதியரே. (௨)

கூவிளங்கையதுபேரிசைடைமுடிகூட்டத்தது
தூவிளங்கும்பொடிபூண்டதுபூசிற்றுத்துத்திநாக
மேவிளங்குநுதலாளையும்பாகமுரித்தனரின்
பூவிளஞ்சோலைப்புகலியுண்மேவியபுண்ணியரே. (௩)

உரித்ததுபாம்பையுடன்மிசையிட்டதோரொண்களிற்றை
யெரித்ததோராமையையின்புறப்பூண்டதுமுப்புரத்தைச்
செருத்ததுசூலத்தையேந்திற்றுதக்கனைவேள்விப்பன்னூல்
விரித்தவர்வாழ்தருவெங்குருவில்வீற்றிருந்தவரே. (௪)

கொட்டுவரக்கரையார்ப்பதுதக்கைகுறுந்தாளன
விட்டுவர்பூதங்கலப்பிலரின்புகழென்புலவின்
மட்டுவருந்தழல்சூடுவர்மத்தமுமேந்துவர்வான்
றொட்டுவருங்கொடித்தோணிபுரத்துறைசுந்தரரே. (௫)

சாத்துவர்பாசந்தடக்கையிலேந்துவர்கோவணந்தங்
கூத்தவர்கச்சுக்குலாவிநின்றூடுவர்கொக்கிறகும்
போர்த்தவர்பல்படைபேயவைசூடுவர்பேரெழிலார்
பூத்தவர்கைதொழுபூந்தராய்மேவியபுண்ணியரே. (௬)

காலதுகங்கைகற்றைச்சடையுள்ளாற்கழல்சிலம்பு
மாலதுவேந்தன்மழுவதுபாகம்வளர்கொழுங்கோட்

டாலதுவூர்வரட்டேறிருப்பரணிமணிநீர்ச்
சேலதுகண்ணியோர்பங்கர்சிரபுரமேயவரே. (எ)

நெருப்புறுவெள்விடைமேனியரேறுவர்நெற்றியின்கண்
மருப்புருவன்கண்ணர்தாதையைக்காட்டுவர்மாமுருகன்
விருப்புறுபாம்புக்குமெய்த்தந்தையார்விறன்மாதவர்வாழ்
பொருப்புறுமாளிகைத்தென்புறவத்தணிபுண்ணியரே. (அ)

இலங்கைத்தலைவனையேந்திற்றிறுத்ததிரலையினாட்
கலங்கியகூற்றுயிர்பெற்றதுமாணிகுமைபெற்றது
கலங்கிளர்மொந்தையினாடுவர்கொட்டுவாகாட்டகத்துச்
சலங்கிளர்வாழ்வயற்சண்பையுண்மேவியதத்துவரே. (௯)

அடியிணைகண்டிலன்றாமரையோன்மான்முடிகண்டிலன்
கொடியணியும்புலியேறுசங்தேறுவர்தோலுடுப்பர்
பிடியணியுநடையாள்வெற்றிருப்பதோர்கூறுடையார்
கடியணியும்பொழிற்காழியுண்மேயகறைக்கண்டரே. (௧௦)

கையதுவெண்குழைகாததுசூலமமணர்புத்த
ரெய்துவாதம்மையடியவரெய்தாரோரேனக்கொமபு
மெய்திகழ்கோவணம்பூண்பதுடுப்பதுமேதகைய
கொய்தலர்பூம்பொழிற்கொச்சையுண்மேவியகொற்றவரே. (௧௧)

கல்லுயர்கழுமலவிஞ்சியுண்மேவியகடவுடன்னை
நல்லுரைஞானசம்பந்தன்ஞானத்தமிழ்நன்குணர்தல்
சொல்லுதல்கேட்டல்வல்லோர்தொல்லைவானவர்தங்களோடுஞ்
செல்குவர்சீரருளாற்பெறலாஞ்சிவலோகமதே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

(மொழிமாற்றுவகை)

காடதணிகலங்காரரவம்பதி — இதனை - காடு - பதி எனவும், அணிகலங்காரரவம் எனவும்.

காலதணில்தோடதணிகுவர் சுந்தரக்காதினில் தூச்சிலம்பர்—இதனை- காலதனில் தூச்சிலம்பர் எனவும், சுந்தரக்காதினில் தோடது அணிகுவர் எனவும்,

வேடதணிகுவர் விசயற்குருவம் வில்லதுங்கொடுப்பர்—இதனை - வேடது உருவம் அணிகுவர் எனவும், விசயற்கு வில்லதுங்கொடுப்பர் எனவும் மொழிமாற்று.—இவ்வாறே மற்றத்தேவாரங்களுக்கு மொழிமாற்று

திருப்பருப்பதம், பண்-வியாழக்(

திருச்சிற்றம்பலம்.

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவரைக்கசைத்தா
னிடுமணியெழிலானையேறலன்றேறு
விடமணிமிடறுடையான்மேவியநெடுங்கோட்டுப்
படுமணிவிடுசுடரார்பருப்பதம்பரவுதுமே. (௧)

நோய்புல்குதோல்திரையநரைவருநுகருடம்பி
னீபுல்குதோற்றமெல்லாநினையுள்குமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பருப்பதம்பரவுதுமே. (௨)

துனியுறுதுயர்தீரத்தோன்றியோர்நல்வினையா
லினியுறுபயனாதலிரண்டுறமனம்வையேற்
கனியுறுமரமேறிக்கருமுசுக்கழையுகளும்
பனியுறுகதிர்மதியான்பருப்பதம்பரவுதுமே (௩)

கொங்கணிநறுங்கொன்றைத்தொங்கலர்குளிர்சடையா
னெங்கணோடுகலின்றென்னவருளீசனிட
மைங்கணைவரிசிலையானங்கனையழகழித்த
பைங்கண்வெள்ளேறுடையானபருப்பதமபரவுதுமே. (௪)

துறைபலசுனைமூழ்கித்தூமலர்சுமந்தோடி
மறையொலிவாய்மொழியால்வானவர்மகிழ்ந்தேத்தச்
சிறையொலிகிளிபயிலுந்தேனினமொலியோவாப்
பறைபடுவிளங்கருவிப்பருப்பதமபரவுதுமே. (௫)

சீர்கெழுசிறப்போவாச்செய்தவநெறிவேண்டி
லேர்கெழுமடநெஞ்சேயிரண்டுறமனம்வையேற்
கார்கெழுநறுங்கொன்றைக்கடவுளதிடம்வகையாற்
பார்கெழுபுகழோவாப்பருப்பதம்பரவுதுமே. (௬)

புடைபுல்குபடர்கமலம்புகையொடுவிரைகமழத்
தொடைபுல்குநறுமாலைதிருமுடிமிசையேற
விடைபுல்குகொடியேந்திவெந்தவெண்ணீறணிவான்
படைபுல்குமழுவாளன்பருப்பதம்பரவுதுமே. (௭)

நினைப்பெனுநெடுங்கிணற்றைநின்றுநின்றயராதே
மனத்தினைவலித்தொழிந்தெனவலம்வந்தடையாமைக்
கனைத்தெழுதிரள்கங்கைகமழ்சடைக்கரந்தான்றன்
பனைத்திரள்பாயருவிப்பருப்பதம்பரவுதுமே. (௮)

மருவியவல்வினைநோயவலம்வந்தடையாமற்
றிருவுருவமர்ந்தானுந்திசைமுகமுடையானு
மிருவருமறியாமலெழுந்ததோரெரிநடுவே
பருவரையுறநிமிர்ந்தான்பருப்பதம்பரவுதுமே. (௯)

சடங்கொண்டசாத்திரத்தார்சாக்கியர்சமண்குண்டா
மடங்கொண்டவிரும்பியராய்மயங்கியோர்பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டுநீர்க்குச்செல்வார்போதுமின்குஞ்சரத்தின
படங்கொண்டபோர்வையினான்பருப்பதம்பரவுதுமே. (௧௦)

வெண்செநெல்விளைகழனிவிழவொலிகழுமலத்தான
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
நன்சொலினாற்பரவுஞானசம்பந்தனல்ல
வொண்சொலினிவைமாலையுருவெணத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - ஸ்ரீசைலமென்றும், மல்லிகார்ச்சுனமென்றும், வழங்குகின்றது.
வடதேசத்திலுள்ளது.
சுவாமிபெயர்-பருப்பதேசுவரர், தேவியார்-பருப்பதமங்கையம்மை.

திருக்கள்ளில், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முள்ளின்மேன்முதுகூகைமுரலுஞ்சோலை
வெள்ளின்மேல்விடுகூரைக்கொடிவிளைந்த
கள்ளின்மேயவண்ணல்கழல்கணாளு
முள்ளுமேலுயர்வெய்தலொருதலையே. (க)

ஆடலான்பாடலானரவங்கள்பூண்டா
னோடலாற்கலனில்லானுறைபதியாற்
காடலாற்கருதாதகள்ளின்மேயான்
பாடலாம்பெரியார்கள்பரசுவாரே. (உ)

எண்ணார்மும்மதிலெய்தவிமையாமுக்கண்
பண்ணார்நான்மறைபாடும்பரமயோகி
கண்ணார்நீறணிமார்பன்கள்ளின்மேயான
பெண்ணாணும்பெருமானெம்பிஞ்ஞகனே. (ங)

பிறைபெற்றசடையண்ணல்பெடைவண்டாலுந்
நறைபெற்றவிரிகொன்றைத்தார்நயந்த
கறைபெற்றமிடற்றண்ணல்கள்ளின்மேயா
னிறைபெற்றவடியார்தநெஞ்சுளானே. (ச)

விரையாலுமலராலும்விழுமைகுன்றா
வுரையாலுமெதிர்கொள்ளவூராரம்மாக்
கரையார்பொன்புனல்வேலிக்கள்ளின்மேயா
னரையார்வெண்கோவணத்தவண்ணறானே. (ரு)

நலனாயபலகொள்கைநம்பானல்ல
வலனாயமழுவாளும்வேலும்வல்லான்
கலனாயதலையோட்டான்கள்ளின்மேயான்
மலனாயதீர்த்தெய்துமாதவத்தோர்க்கே. (சு)

பொடியார்மெய்பூசினும்புறவினறவங்
குடியாவூர்திரியினுங்கூப்பிடினுங்

கடியார்பூம்பொழிற்சோலைக்கள்ளினமேயா
னடியார்பண்பிகழ்வார்களாதர்களே. (எ)

திருநீலமலரொண்கண்டேவிபாகம்
புரிநூலுந்திருநீறும்புல்குமார்பிற்
கருநீலமலர்விம்முகள்ளிலென்றும்
பெருநீலமிடற்றண்ணல்பேணுவதே. (அ)

வரியாயமலரானும்வையந்தன்னை
யுரிதாயவளந்தானுணர்ந்துங்காணக்
கரியானுமறியாதகள்ளின்மேயா
பெரியானென்றறிவார்கள்பேசுவதே. (கூ)

ஆசியப்பேய்களோடமணர்குண்டர்
பேசியவைதெறியம்பேணுமின்கள்
மாச்செய்தளவயன்மல்குகள்ளி
நீச்செய்தசடையானைநினைந்தேயே. (க0)

திகைநானகுமபுகழ்காழிச்செல்வமல்கு
பகல்போலும்பெரியானைப்பந்தனல்ல
முகைமேவுமுதிர்சடையான்கள்ளின்மேய
புகழ்சேர்ந்தமேனிபாடப்புலமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டை நாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சிவானந்தேசுவரர், தேவியார்-ஆனந்தவல்லியம்மை.

திருவையாறு-திருவிராகம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவரருவினைபற்றறுத்தருள்செயத்
துணிந்தவன்றோலொடுநூலுடைமார்பினிற்
பிணிந்தவனரவொடுபேரெழிலாமைகொண்
டணிந்தவனகரந்தணையாறே. (க)

கீர்த்திமிக்கவனகர்கிளரொளியுடனடப்
பார்த்தவன்பனிமதிபடர்சடைவைத்துப்
போர்த்தவன்கரியுரிபுலியதளாவரை
யார்த்தவன்வளநகரந்தணையாறே. (உ)

வரிந்தவெஞ்சிலைபிடித்தவுணர்தம்வளநக
ரெரித்தவனெழிறிகழ்மலர்மே
லிருந்தவன்சிரமதுவிமையவர்குறைகொள
வரிந்தவன்வளநகரந்தணையாறே. (ங)

வாய்ந்தவல்லவுணர்தம்வளநகரெரியிடை
மாய்ந்தறவெய்தவன்வளர்பிறைவிரிபுன
றோய்ந்தெழுசடையினன்றொன்மறையாறங்க
மாய்ந்தவன்வளநகரந்தணையாறே. (௪)

வானமர்மதியுல்குசடையிடையரவொடு
தேனமர்கொன்றையன்றிகழ்தருமார்பினன்
மானினமனவிழிமங்கையோர்பாகமு
மானவன்வளநகரந்தணையாறே. (௫)

முன்பனைமுனிவரோடமரர்கடொழுதெழு
பின்பனையிணையிலவிறைவனையெழிறிக
ழென்பொனையேதமில்வேதியர்தாந்தொழு
மன்பனன்வளநகரந்தணையாறே. (௬)

வன்றிறலவுணர்தம்வளநகரெரியிடை
வெந்தறவெய்தவன்விளங்கியமார்பினிற்
பந்தமர்மெல்விரல்பாகமதாகித
னந்தமில்வளநகரந்தணையாறே. (௭)

விடைத்தவல்லரக்கனல்வெற்பினையெடுத்தலு
மடித்தலத்தாலிறையூன்றிமற்றவனது
முடித்தலைதோளவைநெரிதரமுறைமுறை
யடர்த்தவன்வளநகரந்தணையாறே. (௮)

விண்ணவர்தம்மொடுவெங்கதிரோனனல
வெண்ணிலிதேவர்களிந்திரன்வழிபடக்
கண்ணனும்பிரமனுங்காண்பரிதாகிய
வண்ணறன்வளநகரந்தணையாறே. (௯)

மருளுடைமனத்துவன்சமணர்கண்மாசறு
விருளுடையிணைத்துவர்ப்போர்வையினர்களுந்
தெருளுடைமனத்தவர்தேறன்மின்றிண்ணமா
வருளுடையடிகடமந்தணையாறே. (௧௦)

நலமலிஞானசம்பந்தனதின்றமி
ழலைமலிபுனன்மல்குமந்தணையாற்றினைக்
கலைமலிதமிழிவைகற்றுவல்லார்மிக
நலமலிபுகழ்மிகுநன்மையர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்-திருவிராகம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நடைமருதிரிபுரமெரியுணநகைசெய்த
படைமருதழலெழமழுவலபகவன்
புடைமருதிளமுகில்வளமமர்பொதுளிய
விடைமருதடையநமிடர்கெடலெளிதே. (௧)

மழைநுழைமதியமொடழிதலைமடமஞ்ஞை
கழைநுழைபுனல்பெய்தகமழ்சடைமுடியன
குழைநுழைதிகழ்செவியழகொடுமிளிர்வதோ
ரிழைநுழைபுரியணலிடமிடைமருதே. (௨)

அருமையனெளிமையனழலவிடமிடறினன்
கருமையினொளிபெறுகமழ்சடைமுடியன்
பெருமையன்சிறுமையன்பிணைபெணொடொருமைய
னிருமையுமுடையணலிடமிடைமருதே. (௩)

பொரிபடுமுதுகுறமுளிகளிபுடைபுல்கு
நரிவளர்சுடலையுணடமெனநவில்வோன்
வரிவளர்குளிர்மதியொளிபெறமிளிர்வதோ
ரெரிவளர்சடையணலிடமிடைமருதே. (௪)

வருநலமயிலனமடநடைமலைமகள்
பெருநலமுலையிணைபிணைசெய்தபெருமான்
செருநலமதிலெய்தசிவனுறைசெழுநக
ரிருநலபுகழ்மல்குமிடமிடைமருதே. (௫)

கலையுடைவிரிதுகில்கமழ்குழலகில்புகை
மலையுடைமடமகடனையிடமுடையோன்
விலையுடையணிகலனிலனெனமழுவினொ
டிலையுடைபடையவனிடமிடைமருதே. (௬)

வளமெனவளர்வனவரிமுரல்பறவைக
ளிளமணலணைகரையிசைசெயுமிடைமரு
துளமெனநினைபவரொலிகழலிணையடி
குளமணலுறமூழ்கிவழிபடல்குணமே. (௭)

மறையவனுலகவனமதியவன்மதிபுல்கு
துறையவனெனவலவடியவர்துயரிலர்
கறையவன்மிடறதுகனல்செய்தகமழ்சடை
யிறையவனுறைதருமிடமிடைமருதே. (௮)

மருதிடைநடவியமணிவணர்பிரமரு
மிருதுடையகலமோடிகலினரினதெனக்

கருதிடலரியதொ ருருவொடுபெரியதோ
ரெருதுடையடிகடமிடமிடைமருதே. (௯)

துவருறுவிரிதுகி லுடையருமமணரு
மவருறுசிறுசொலைநயவன்மினிடுமணங்
கவருறுபுனலிடைமருதுகைதொழுதெழு
மவருறுவினைகெடலணுகுதல்குணமே. (௧௦)

தடமலிபுகலியர்தமிழ்கெழுவிரகின
னிடமலிபொழிலிடைமருதினையிசைசெய்த
படமலிதமிழிவைபரவவல்லவர்வினை
கெடமலிபுகழொடுகிளரொளியினரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்-திருவிராகம், பண் வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியவரையினர்
திரிதருமெயிலவைபுனைகணையினிலெய்த
வெரிதருசடையினரிடைமருதடைவுறு
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (௧)

மறிதிரைபடுகடல்விடமடைமிடறின
ரெறிதிரைகரைபொருமிடைமருதெனுமவர்
செறிதிரைநரையொடுசெலவிலருலகினிற்
பிறிதிரைபெறுமுடல்பெறுகுவதரிதே. (௨)

சலசலசொரிபுனல்சடையினர்மலைமக
ணிலவியவுடலினர்நிறைமறைமொழியின
ரிலரெனவிடுபலியவரிடைமருதினை
வலமிடவுடனலிவிலதுளவினையே. (௩)

விடையினர்வெளியதொர்தலைகலனெனநனி
கடைகடைதொறுபலியிடுகெனமுடுகுவ
ரிடைவிடலரியவரிடைமருதெனுநக
ருடையவரடியிணைதொழுவதெம்முயர்வே. (௪)

உரையருமுருவினருணர்வருவகையின
ரரைபொருபுலியதளுடையினரதன்மிசை
யிரைமருமரவினரிடைமருதெனவுள
முரைகளதுடையவர்புகழ்மிகவுளதே. (௫)

ஒழுகியபுனன்மதியரவமொடுறைதரு
மழகியமுடியுடையடிகளதுறைகழ

வெறியினருநறையிடைமருதினைமலர்கொடு
தொழுதல்செய்தெழுமவர்துயருறவிலரே. (௬)

கலைமலிவிரலினர்கடியதோர்மழுவொடு
சிலையினர்சலமகளுலவியசடையினர்
மலைமகள்முலையிணைமருவியவடிவின
ரிலைமலிபடையவரிடமிடைமருதே. (௭)

செருவடையிலங்கைப்பசெயல்செய்திறலொடு
மருவரையிலொருபதுமுடிநெரிதர
திருவரைசரணியவரிடைமருதது
பரவுவாரருவினையொருவுதல்பெரிதே. (௮)

அரியொடுமலரவனெனவிவர்களுமடி
தெரிவகையரியவர்திருவடிதொழுதெழ
வெரிதருமுருவர்தமிடைமருதடைவுறல்
புரிதருமனமவர்புகழ்மிகவுளதே. (௯)

குடைமயிலினத்தொழுமருவியவுருவின
ருடைமருதுவரினர்பலசொல்வுமவிலை
யடைமருதிருவினர்தொழுதெழுகலைவ
ரிடைமருதெனமனநினைவதுமெய்மிகவே. (௧0)

பொருகடலடைதருபுகலியர்பதிமொடு
விரகினனெனிவருபொழிலிடைமருதினை
பரவியவொருபதுபயில்வலவரிடர்
விரவிலர்வினையொடுவியனுலகுறவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலம்-திருவிராகம், பண், வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைநிகர்நுதல்
ஏவியல்கணைபிணையெதிர்விழியுமையவள்
மேவியதிருவுருவுடையவன்விரைமலி
மாவியல்பொழில்வலிவலமுறையிறையே. (௧)

இட்டமதமர்பொடியிசைதலினசைபெறு
பட்டவிர்பவளநன்மணியெனவணிபெறு
விட்டொளிர்திருவுருவுடையவன்விரைமலர்
மட்டமர்பொழில்வலிவலமுறையிறையே. (௨)

உருமலிகடல்கடைவுழியுலகமுமரி
வெருவுறுவகையெழுவிடம்வெளிமலியணி

கருமணிநிகர்களமுடையவன்மிடைதரு
மருமலிபொழில்வலிவலமுறையிறையே. (௩)

அணனிகர்சடையழலவியுறவெனவரு
புனனிகழ்வதுமதிநனைபொறியரவமு
மெனநினைவொடுவருமிதுமெலமுடிமிசை
மனமுடையவர்வலிவலமுறையிறையே. (௪)

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே. (௫)

தரைமுதலுலகினிலுயிர்புணர்தகைமிக
விரைமலிகுழலுமையொடுவிரவதுசெய்து
நரைதிரைகெடுதகவதுவருளினனெழில்
வரைதிகழ்மதில்வலிவலமுறையிறையே. (௬)

நலிதருதரைவரநடைவருமிடையவர்
பொலிதருமடவரலியாமனையதுபுகு
பலிகொளவருபவனெழின்மிகுதொழில்வளர்
வலிவருமதில்வலிவலமுறையிறையே. (௭)

இரவணனிருபதுகரமெழின்மலைதனி
னிரவணநினைதரவவன்முடிபொடிசெய்து
விரவணமமர்பெயரருளினனகநெதி
யிரவணநிகர்வலிவலமுறையிறையே. (௮)

தேனமர்தருமலரணையவன்வலிமிகு
மேனமதாய்நிலமகழரியடிமுடி
தானணையாவுருவுடையவனமிடைகொடி
வானணைமதில்வலிவலமுறையிறையே. (௯)

இலைமலிதரமிகுதுவருடையவர்களு
நிலைமயிலுணலுடையவர்களுநினைவது
தொலைவலிநெடுமறைதொடர்வகையுருவினன
மலைமலிமதில்வலிவலமுறையிறையே. (௧௦)

மன்னியவலிவலநகருறையிறைவனை
யினனியல்கழுமலநகரிறையெழின்மறை
தனனியல்கலைவலதமிழ்விரகனதுரை
யுன்னியவொருபதுமுயர்பொருடருமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருவிராகம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அலர்மகண்மலிதரவவனியினிகழ்பவர்
மலர்மலிகுழலுமைதனையிடமகிழ்பவர்
நலமலியுருவுடையவர்நகர்மிகுபுகழ்
நிலமலிமிழலையைநினையவல்லவரே. (௧)

இருநிலமிதன்மிசையெழில்பெறுமுருவினர்
கருமலிதருமிகுபுவிமுதலுலகினி
லிருளறுமதியினரிமையவர்தொழுதெழு
நிருபமன்மிழலையைநினையவல்லவரே. (௨)

கலைமகடலைமகனிவனெனவருபவ
ரலைமலிதருபுனலரவொடுநகுதலை
யிலைமலியிதழியுமிசைதருசடையினர்
நிலைமலிமிழலையைநினையவல்லவரே. (௩)

மாடமர்சனமகிழ்தரமனமுடையவர்
காடமர்கழுதுகளவைமுழவொடுமிசை
பாடலினவில்பவர்மிகுதருமுலகினி
னீடமர்மிழலையைநினையவல்லவரே. (௪)

புகழ்மகடுணையினர்புரிகுழலுமைதனை
யிகழ்வுசெய்தவனுடையெழின்மறைவழிவளர்
முகமதுசிதைதரமுனிவுசெய்தவன்மிகு
நிகழ்தருமிழலையைநினையவல்லவரே. (௫)

அன்றினரெரியெனவருபவரரிதினி
லொன்றியதிரிபுரமொருநொடியினிலெரி
சென்றுகொள்வகைசிறுமுறுவல்கொடொளிபெற
நின்றவர்மிழலையைநினையவல்லவரே. (௬)

கரம்பயில்கொடையினர்கடிமலரயனதோர்
சிரம்பயில்வறவெறிசிவனுறைசெழுநகர்
வரம்பயில்கலைபலமறைமுறையறநெறி
நிரம்பினர்மிழலையைநினையவல்லவரே. (௭)

ஒருக்கியவுணர்வினொடொளிநெறிசெலுமவ
ரரக்கனன்மணிமுடியொருபதுமிருபது
கரக்கனனெரிதரமலரடிவிரல்கொடு
நெருக்கினன்மிழலையைநினையவல்லவரே. (௮)

அடியவர்குழுமிடவவனியினிகழ்பவர்
கடிமலரயனரிகருதருவகைதழல்

வடிவுருவியல்பினொடுலகுகணிறைதரு
நெடியவன்மிழலையைநினையவல்லவரே. (௯)

மன்மதனெனவொளிபெறுமவர்மருதமர்
வன்மலர்துவருடையவர்களுமதியிலர்
துன்மதியமணர்கடொடர்வருமிகுபுகழ்
நின்மலன்மிழலையைநினையவல்லவரே. (௧0)

நித்திலன்மிழலையைநிகரில்புகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகனமொழி
பத்தியில்வருவனபத்திவையயில்வொடு
கற்றுவல்லவருலகினிலடியவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம்-திருவிராகம், பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கலைமலியகலல்குலரிவைதனுருவினன்
முலைமலிதருதிருவுருவமதுடையவன்
சிலைமலிமதில்பொதிசிவபுரநகர்தொழ
விலைநலிவினையிருமையுமிடர்கெடுமே. (௧)

படரொளிசடையினனவிடையினன்மதிலவை
சுடரெரிகொளுவியசிவனவனுறைபதி
திடலிடுபுனல்வயல்சிவபுரமடையநம்
மிடர்கெடுமுயர்கதிபெறுவதுதிடனே. (௨)

வரைதிரிதரவரவகடழலெழவரு
நுரைதருகடல்விடநுகர்பவனெழில்திகழ்
திரைபொருபுனலரிசிலநனைசிவபுர
முரைதருமடியவருயர்கதியினரே. (௩)

துணிவுடையவர்சுடுபொடியினருடலடு
பிணியடையிலர்பிறவியுமறவிசுறுவர்
தணிவுடையவர்பயில்சிவபுரமருவிய
மணிமிடறனதடியிணைதொழுமவரே. (௪)

மறையவன்மதியவன்மலையவனிலையவ
னிறையவனுமையவன்மகிழ்நடநவில்பவ
னிறையவனிமையவர்பணிகொடுசிவபுர
முறைவெனவுடையவனெமையுடையவனே. (௫)

முதிர்சடையிளமதிநதிபுனல்பதிவுசெய்
ததிர்கழலொலிசெயவருநடநவில்வோ

னெதிர்பவர்புரமெய்தவினையவிலையனைப்பதி
சதிர்பெறுமுள்ளமுடையவர்சிரபுரமே. (சு)

வடிவுடைமலைமகள்சலமகளுடனமர்
பொடிபடுமிறையதன்பொலிதிருவுருவினன்
செடிபடுபலிதிரிசிவனுறைசிவபுர
மடைதருமடியவரருவினையிலரே. (எ)

கரமிருபதுமுடியொருபதுமுடையவ
னுரநெரிதரவரையடர்வுசெய்தவனுறை
பரனெனவடியவர்பணிதருசிவபுர
நகரதுபுகுதன்முயல்கிறதுமனமே. (அ)

அன்றியலுருவுகொளரியயனெனுமவர்
சென்றளவிடலரியவனுறைசிவபுர
மென்றிருபொழுதுமுணர்பவர்துய
ரொன்றிலர்புகழொடுமுடையருலகே. ( )

புத்தரொடமணர்களறவுரைபுறவுரை
வித்தகமொழிகிலவிடையுடையடிகள்
மித்தவமுயல்வுறுமிறைவனசிவபுர
மெய்த்தகவுறுமவர்விழுமியகுணரே. (௰)

புந்தியொர்மறைநவில்புகலிமன்ஞானசம்
பந்தனதமிழ்கொடுசிவபுரநகருறை
யெந்தையையுரைசெய்தவிசைமொழிபவர்வினை
சிந்திநன்னுறவொடுகதிபெறுவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி - பண், வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால் பயின்றுநின்றவும்பரப்
பாலேசேர்வாயேனோர்கான் பயில்கணமுனிவர்களும்
சிந்தித்தேவந்திப்பச் சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாணாணீள்கயிலைத் திகழ்தருபரிசதெலாஞ்
சந்தித்தேயிந்தப்பார் சனங்கணின்றுதங்கணாந்
தாமேகாணாவாழ்வாரத் தகவுசெய்தவனதிடங்
கந்தத்தாலெண்டிக்குங் கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங் கழுமலவளநகரே. (க)

பிச்சைக்கேயிச்சித்துப் பிசைந்தணிந்தவெண்பொடிப்
பீடார்நீடார்மாடாரும் பிறைநுதலரிவையொடு

முச்சத்தால்நச்சிப்போ றொடர்ந்தடர்ந்தவெங்கணை
றாராவூராநீள்விதிப் பயில்வொடுமொலிசெயிசை
வச்சத்தானச்சுச்சேர் வடங்கொள்கொங்கைமங்கைமார்
வாராநேரேமாலாகும் வசுவலவவனிடங்
கச்சத்தான்மெச்சிப்பூக் கலந்திலங்குவண்டினங்
காரார்காரார்நீள்சோலைக் கழுமலவளநகரே. (௨)

திங்கட்கேதும்பைக்கே திகழ்ந்திலங்குமத்தையின்
சேரேசேரேநீராகச் செறிதருசுரநதியோ
டங்கைச்சேர்வின்றிக்கே யடைந்துடைந்தவெண்டலைப்
பாலேமேலேமாலேயப் படர்வுறுமவனிறகும்
பொங்கப்பேர்நஞ்சைச்சேர் புயங்கமங்களகொலைறையின
போதார்தாரேதாமேவிப் புரிதருசடையனிடங்
கங்கைக்கேயும்பொற்பார் கலந்துவந்தபொன்னனியின
காலேவாராமேலேபாய் கழுமலவளநகரே. (௩)

அண்டத்தாலெண்டிக்கு மமைந்தடங்குமண்டலத்
தாறேவேறேவானுள்வா ரவரவரிடமதெலா
மண்டிப்போய்வென்றிபபோர் மலைந்தலைந்தவும்பரு
மாறேலாதார்தாமேவும் வலிமிகுபுரமெரிய
முண்டத்தேவெந்திட்டே முடிந்திடிந்தவிஞ்சிசூழ்
மூவாமூதூர்மூதூரா முனிவுசெய்தவனிடங்
கண்டிட்டேசெஞ்சொற்சேர் கவின்சிறந்தமந்திரக்
காலேயோவாதார்மேவுங் கழுமலவளநகரே. (௪)

இக்கிற்றேவற்றற்றே திகழ்ந்திலங்குமண்டலச்
சீறூர்வீறூர்போரார் தாருகனுடலவனெதிரே
புக்கிட்டேவெட்டிட்டே புகைந்தெழுந்தசண்டத்தீப
போலேபூநீர்தீகான்மீப் புணர்தருமுயிர்கடிறந்
சொக்கத்தேநிர்த்தத்தே தொடர்ந்தமங்கைசெங்கதத்
தோடேயாமேமாலோகத் துயர்களைபவனிடங்
கைக்கப்போயுக்கத்தே கனன்றுமிண்டுதண்டலைக்
காடேயோடாவூரேசேர் கழுமலவளநகரே. (௫)

செற்றிட்டேவெற்றிச்சேர் திகழ்ந்ததம்பிமொய்ம்புருஞ்
சேரேவாரார்நீள்கோதைத் தெரியிழைபிடியதுவா
யொற்றைச்சேர்முற்றற்கொம் புடைத்தடக்கைமுக்கண்மிக்
சோவாதேபாய்மாதானத் துறுபுகர்முகவிறையைப்
பெற்றிட்டேமற்றிப்பார் பெருத்துமிக்கதுக்கமும்
பேராநோய்தாமேயாமை பிரிவுசெய்தவனிடங்

கற்றிட்டேயெட்டெட்டுக் கலைத்துறைக்கரைச்செலக்
காணாதாரேசேராமெய்க் கழுமலவளநகரே. (௬)

பத்திப்போர்வித்திட்டே பரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப் பகையறுவகைநினையா
முத்திக்கேவிக்கத்தே முடிக்குமுககுணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக் கரணமொருநெறியாய்ச்
சித்திக்கேயுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதானாகச் செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங் கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதாரமேவுங் கழுமலவளநகரே. (௭)

செமைச்சேரிஞ்சிச்சூழ் செறிந்திலங்குபைம்பொழிற்
சேரேவாராவாரீசத் திரையெறிநகரிறைவ
னிம்பாக்கேதஞ்செய்திட் டிருந்தரணபயின்றவெற்
பேரார்பூநேரோர்பாதத் தெழில்விரலவணிறுவிட்
டம்பொற்பூண்வென்றித்தோ ளழிந்துவந்தனஞ்செய்தாற்
காரார்கூர்வாள்வாணாளன் றருள்புரிபவனிடங்
கம்பத்தார்தும்பித்தின் கவுட்சொரிந்தமும்மதக்
காரார்சேறாமாவீதிக் கழுமலவளநகரே. (௮)

பன்றிக்கோலங்கொண்டிப் படித்தடம்பயின்றிடப்
பானுமாறானுமேயப் பறவையினுருவுகொள
வொன்றிட்டேயம்புச்சே ருயர்ந்தபங்கயத்தவ
னோதானோதானஃதுணரா துருவினதடிமுடியுஞ்
சென்றிட்டேவந்திப்பத் திருக்களங்கொள்பைங்கணை
றேசால்வேறோராகாரந் தெரிவுசெய்தவனிடங்
கன்றுக்கேமுன்றிற்கே கலந்திலன்னிறைக்கவுங்
காலேவாராமேலேபாய் கழுமலவளநகரே. (௯)

தட்டிட்டேமுட்டிக்கைத் தடுக்கிடுக்கிநின்றுணாத்
தாமேபேணாதேநாணுஞ் சமணொடுமுழல்பவரும்
மிட்டத்தாலத்தந்தா னிதனறதென்றுநின்றவர்க்
கேயாமேவாயேதுச்சொல் லிலைமலிமருதம்பூப்
புட்டத்தேயட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள்புத்தரும்
போல்வார்தாமோராமேபோய்ப் புணர்வுசெய்தவனிடங்
கட்டிக்கால்வெட்டித்தீங் கரும்புதந்தபைம்புனற்
காலேவாராமேலேபாய் கழுமலவளநகரே. (௰)

கஞ்சத்தேனுண்டிட்டே களித்துவண்டுசெண்பகச்
கானேதேனேபோராருங் கழுமலநகரிறையைத்

தஞ்சச்சார்சண்பைக்கோன் சமைத்தநற்கலைத்துறை
தாமேபோல்வார்தேனோரார் தமிழ்விரகன்மொழிகள்
எஞ்சத்தேய்வின்றிக்கே யிமைத்திசைத்தமைத்தகொண்
டேழேயேழேநாலேமூன் றியலிசையிசையியல்வா
வஞ்சத்தேய்வின்றிக்கே மனங்கொளப்பயிற்றுவோர்
மார்பேசேர்வாள்வானோரார் மதிநுதன்மடவரலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - திருஏகபாதம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான். (௧)

விண்டலர்பொழிலணிவேணுபுரத்தரன்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தரன்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தரன்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தரன். (௨)

புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே (௩)

விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன். (௪)

சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன். (௫)

பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி. (௬)

செருக்குவாய்ப்புடையான்சிரபுரமெண்ணிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமெண்ணிற்

செருக்குவாய்ப்புடையானசிரபுரமெனனிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில். (எ)

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சோபுறவகதவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன. (அ)

நசமுகனெரிதரவூன்றுசண்பையான
றசமுகனெரிதரவூனறுசன்பையான
றசமுகனெரிதரவூனறுசண்பையான
றசமுகனெரிதரவூன்றுசண்பையான. (கூ)

காழியானயனுள்ளவாகாணபரே
காழியானயனுள்ளவாகாண்பரே
காழியானயனுள்ளவாகாண்பரே
காழியானயனுள்ளவாகாண்பரே. (கO)

கொச்சையண்ணலைக்கூடகிலாருடனமூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடனமூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடனமூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடனமூடரே. (கக)

கழுமலமுதுபதிக்கவுணியனகட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனகட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனகட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனகட்டுரை (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திரு ஏகபாதத் திருவுள்ளக் கருத்து.

(க) பிரமபுரத்துறை பெமமானெமமான.

(இ ன பதபொருள்.)

பிரமம்-ஞானகாசமாகிய பராசத்தியை, புரத்துறை-அந்தப்பரிபூரணத்தை மிகுதியாக விழுக்கப்பட்டது, பெமமான்-பெருமான, எம்மான-எந்தபெரியோன்எனக.

(பொழிப்பு.)

ஞான காசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாகவியந்து அந்தப்பராசத திக் கதீதமாகிய சுகமே வடிவாய் முதலைவிறுதி காணப்படாதவஸ்து எந்தப்பெரியோன பிரமபுரத்துறை பெமமானெம்மான.

(பதப்பொருள்.) பிரமபுரத்து-மேல்நிலத்து, உறை-தணணீர், பெம்-விருப்பம், மான் மான்போலும் விழியையுடையபெண், எம்-எம்முடைய, ஆன்-ஆன்மா எனக-

(பொழிப்பு.) மேல்நிலமாகிய ஆகாசத்தினகண்ணே யோராநின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமதுயிர்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்.) பிரமம்-பிரமத்துவம், புரம்-சரீரம், உறை-எண்ணுதல், பெம்-ஆசை ஆன்-அமையாமை, எம்மான்-என்னை யொக்கவந்தவன் என்க.

(பொழிப்பு.) பிரமரூபத்திலே யெண்ணப்பட்ட என்னை முத்தியிலே விழைக்கு அமையாத விருப்பமுள்ளவனு யென்னை யொக்கவந்தவன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்.) பிரமபுரத்துறை-பிரமபுரமென்கின்ற சீகாழிப்பதியிலே வீற்றிராநின்ற, பெம்மான்-கர்த்தாவானவன், எம்மான்-என்னுடையசுவாமி என்க.

(பொழிப்பு.) பிரமபுரமென்கிற சீகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவானவன் என்னுடையசுவாமி. பெரியோனும் எனக்குயிரானவனும் எனை யொக்கவந்தவனும் சீகாழிப்பதியில் வீற்றிருக்கும் கடவுளெனக்கூட்டிப் பொருள்கொள்க.

(௨) விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டு-மலை, அலர்-ஒலி, பொழில்-உலகம், அணிவு - அகப்படுத்தல், ஏண்-பெருமை, நுபுரம்-சிலம்பு, தரன்-தரித்துள்ளவன என்க.

(பொழிப்பு) அஷ்டகுலபர்வதங்களும ஒலிசிறந்த தரிசுமணியாகவும், அகிலலோகங்களையும் உள்ளேயகப்படுத்தும் தன்மயவாயும், பெரிதாயுமுள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன்.— நூபுரம் என்பாலது-நுபுரம் எனக்குறுகிநின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டு-விஷ்ணு, அலா-புறனுரை, பொழில அரசினிழல், அணி-பொருந்தி, வேணு-விருப்பம், புரத்து அரன்-புரததையரிததவன் எனக.

(பொழிப்பு.) விஷ்ணுவின புறனுரையாகிய சிவதூஷணத்தை அரசமரத்தினிழலில் அவனுடனிருந்து விரும்பியுள்ள முபபுரஙகளைச சங்கரித்துளளவன.— அனணியெனற்பாலது-அணியென இடைக்குறையாய் நின்றது.

விண்டலாபொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்) விண்டலர்-தேவர்கள், பொழில்-கற்பகப்பூஞ்சோலை, அணிவு- சூடுதல், ஏனுள-ன்னும், புரத்தரன-தேவேந்திரன என்க.

(பொழிப்பு) தேவர்கள் கற்பகப்பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப்படுகின்ற தேவேந்திரனுடைய ஏனு எனற்பாலது-ஏனு என நீணடது. புரந்தரன் எனற்பாலது-புரநதரனென வலித்துநினறது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்) விண்டு-இதழ்கள்விண்டு, அலர்-மலர்கினற, பொழில் அணி - சோலை சூழநத, வேணுபுரத்து அரன-வேணுபுரமெனறு மொருபெயருள்ள சீகாழிப்பதிக்குக் கத்தா என்க.

(பொழிப்பு.) இதழ்கள் விண்டுமலாகினற சோலைசூழ்ந்த சீகாழிப்பதிக்குக்கத்தாவாயுள்ளவன.—தேவேந்திரன் மூஙகிலவழியாகவநதுபூசித்ததால வேணுபுரமெனனும் பெயர் பெறறது.—சிலம்பினைத் தரிததுள்ளவரும், மூபபுரத்தையெரித்தவரும், தேவேந்திரனுடையசோலைசூழ்ந்த வேணுபுரத்தில வீற்றிருக்கும் இறைவரெனக கூட்டியுரைததுக்கொள்க.

(௩) புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகத்தவன்- இதய கமலத்திலுள்ளவன், மேவியபுகலியே-எனக் கின்பந்தருவானுமாய மீளாவழியாகிய புகலிடமாயு முள்ளவன் என்க.

(பொழிப்பு.) இதயகமலத்திலிருந் திடையறாத வானந்தம்பொழியப்பட் டென்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக்கடைக்கலப் பொருளாயுள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகம்-திரிபுண்டரம், தவன் மிக்க பெருமையை யுடையவன், மேவிய-பொருந்திய, புகலி-சொல்லப்பட்டவன், ஏ-என்பதீற்றசை யென்க.

(பொழிப்பு.) ஆன்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம்போலிருந்த திருநீற்றை யணியப்பட்ட மிக்க கருணையானவனே யான்பாடும் பாடலை யுவந்துள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகம்-புலி, தவன்-தவமுனி, மே-கூத்து, வியம்-பொன், பு-பொது, கலி-கற்றவன் என்க.

(பொழிப்பு.) புலிக்காலும், புலிக்கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்குஞானந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடல்செய்யும் பரதவித்தையைக் கற்றுள்ளான். வியம் எனற்பாலது வியவெனச் சடைகுறைந்து நின்றது.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகத்தவன்-பிரமதேவன், மேவிய-தனது போதத்தாலே பணியலுற்ற, புகலியே-புகலியென்னுஞ் சீகாழிப்பதியே யென்க.

(பொழிப்பு.) கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாஞ்செய்கின்ற சிவன் தனதிச்சையால்பொருந்தியிருக்குமூர் பிர்மாவானவன் பூசித்த புகலியென்னுந் திருப்பதி.

(ச) விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விள-விளாம்பழத்தை, கொளி-கன்றுகுணிலாக எறிந்து கொண்டவனாகிய விஷ்ணு, தி-விட்டு விளங்காநின்ற, கழ்தரு-நின்மலமீடிய, எங்கு-எவ்விடத்தில்,உரு மேவினன்-தனது திருமேனியிலே மேவினன் என்க.

(பொழிப்பு.) கன்றுகுணிலாக எறிந்து விளவின் கனியைக்கொண்ட நாரணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருந்துள்ள தனது பெரியதிருமேனியிலே ஒன்றுபாதியாக வைத்துள்ளான் என்க.—தீ எனற்பாலது-தி எனக்குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது-கழ்தரு எனநின்றது.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விலங்கு எனற்பாலது-விளங்கு எனவும். ஒலி எனற்பாலது-ஒளி எனவுந் திரிந்துநின்றது. விலங்கு-மாறுபாடாய், ஒலி-கதறப்பட்ட பௌத்தனது தலையிலே, தி-அக்கினியைச்சொரிந்து, சுழ்தரு-மிகபயத்தோடும் விழுகின்ற, எங்கு-ஒலிக்கும், உரும-இடியை, ஏவினன்-விழும்படியேவினன் என்க.

(பொழிப்பு.) மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைச்சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி யேவிப் பௌத்தரை வேரறுத்தானுந் தானேயனறி யானன்றும்.

தீ எனற்பாலது-தி எனவும், —காழ்தரு எனற்பாலது-சுழ்தரு எனவும்,— ஏங்கு எனற்பாலது-எங்கு எனவுங் குறுகிநின்றன.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்

(பதப்பொருள்.) விள்-நீங்குதல், அங்கு-அவ்விடத்தில், ஒளிது-ஒள்ளியது, இகழ்தரு-இகழப்படும், எங்குரு-எம்முடையகுரு, மேவினன்-கலந்தனன் என்க.

(பொழிப்பு.) தனதுபரிபூரணத்திலே தன்னையிழந்து இரண்டாய்விசுவமுருகித்தான்விஷமாகத்தூஷணப்பட்டு நிற்கின்ற எனக்கும் குருமூர்த்தியாய்வந்து என்பிறவியையொழித்துத்தனதுபேரின்பமாகியபரிபூரணத்திலே எனதடிமை குலையாமலிரண்டறவைத்தவன்.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விளங்கு ஒளி-எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தி, திகழ்தரு-சிறத்தல், வெங்குரு-இயமனாற்பூசிக்கப்பட்டதிருப்பதி, மேவினன்-விரும்பினன் என்க.

(பொழிப்பு.) கீழ்ச்சொல்லிப்போந்த செய்திகளெல்லாமுடைய னெத்தன்மையனே வென்னில், எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தியினாற் சிறக்கப்பட்டுள்ள இயமனாற்பூசிக்கப் பட்ட வெங்குருவென்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். வெங்குரு என்பதும்-சீகாழி.

(ரு) சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்மண்-சூடார்மண், இம்-ஈடம், ஆளி-ஆளப்பட்டவன், கைத்தோணி-போர்தொலைத்த தும்பைமாலை, புரதது-திரிபுரஙகளையும், அவன்-அவம் பண்ணினவன் என்க.

(பொழிப்பு.) சுடுநிலமாகிய மயானத்தை நடமாடு மிடமாகக்கொண்டும், முப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெறறிபபோரையுடைய தும்பைமாலைக்கடவுள்.—சூடார் எனற்பாலது-சுடரெனவும், ஈமம் எனற்பாலது-இம் எனவும் குறுகினறன.—தோணை மெனற்பாலது-தோணியெனமருவிற்று.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன

(பதப்பொருள்.) சுடர்மணி-சூடாமணி, மாளி-மாலி, கைத்தோள் - துதிக்கையினையுடைய யானையை, நிபுரத்தவன்-வடிவிலலாமற் செய்தோன் என்க.

(பொழிப்பு.) என்னுச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல்வைத்த மாலினையுடையனுமாய் யாகத்தின்கண்வந்த யானையை வடிவொழித்துப் போர்த்துத்தன்மையை யுடையவன் சூடாமணியெனற்பாலது-சுடர்மணியெனவும், மாலியெனற்பாலது- மாளி எனவும், தோல் எனற்பாலது-தோள எனவும் நின்றன.—மாலையுடையவன-மாலி-தோல்-யானை.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்-சூரியன், மணி-கழுவி, மாளி-கெட்டவன், கைத்தோணி-தெய்வம், புரத்தவன-புரர்தவன என்க.

(பொழிப்பு.) சூரியனுடைய களங்கத்தைக் கழுவபபட்ட சமுத்திரம்போன்ற சென்னக்கடலிலே கீழ்ப்பட்டமூர்த்திகெடாநின்ற ஆனமாக்களுக்குக் கைப்பறறிக் கரையேறுந்தெப்பமாகப் பிரணவமென்கிற மந்திரத்தை அவரது செவியினகணணே யுண்டாக்கா நின்றவன்.

மண்ணி என்பது-மணியென இடைகுறைந்து நின்றது.—புரநதவன் எனற்பாலது-புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்-விளக்கத்தையுடைய, மணி-நவரத்தினங்களாலே அலங்கரிககப்பட்ட, மாளிகை-மாளிகைகள்சூழ்ந்த, தோணிபுரத்தவன்-திருத்தோணி புரத்தின்கணணே வாழ்கின்றவன் என்க.

(பொழிப்பு.) விளககத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்குஞ் சிவன் இத்தன்மையன்.

(சு) பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(பதப்பொருள்.) பூ-பூமியிலுள்ளோர்—சுரர்-தேவர்கள், சேர்-தோன்றுதல், பூ-இதய கமலம், தராயவன-தரித்தவன், பொன்-பொலிவு, அடி-கண்ணாடி என்க.

(பொழிப்பு.) பூமியிலுள்ளாரையுந் தேவகணங்களாயுள்ளாரையுந் தனது நாபிக்கமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிர்மா விஷ்ணுவினது போதத்திலே கண்ணாடியும் நிழலும் போலப் பிரதிவிம்பியா நின்றவன்.—ஆடி என்பது-அடியெனக் குறுகின்றது.

பூசுரர்சேர்பூந்தராயவன் பொன்னடி.

(பதப்பொருள்.) பூசுரர்-மலத்தைக்கழுவிய சிவஞானிகள், சேர்-திரட்சி, பூ-பொலிவு, தராய்-பெறப்பட்ட, அவன்-அக்கடவுள், பொன்-வனப்பு, நடி-நாடகமாடப்பட்டவன்-எனக.

(பொழிப்பு.) மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம பொலிவு பெற த்தக்க வனபபையுடைய ஆனந்ததிருததஞ் செய்தருள்பவன.

பூசுரர்சேர்பூந்தராயவன் பொன்னடி.

(பதப்பொருள்.) பூசு-திருநீற்றை யுத்தூளிக்கப்பட்ட, உரர்-மார்பையுடையவர், சேர்பு-அரிதல், ஊந்தராய்-தள்ளுதல், யவன-யௌவனம, பொன்-அழகு, அடி-மூலம்-எனக.

(பொழிப்பு.) சர்வாங்கமு முத்தூளனம்பண்ணின மார்பையுடைய சிவஞானிகளும், புண்ணியபாவக கட்டையரிந்து விசுவத்தைத தள்ளப்பட்ட சிறப்பையுடையருமா யிராநின்றவர்களுக்கு மிகுதியான மூலமாயுள்ளவன.—ஊதராய் எனபது ஊந்தராயென நீண்டது.

பூசுரர்சேர்பூந்தராயவன பொன்னடி.

(பதப்பொருள்) பூசுரர்-மறையோர், சேர்-திரட்சி, பூந்தராயவன்-பூந்தராயென்னுந் திருப்பதியிலேயுள்ளவன், பொனனடி-அழகிய திருவடித்தாமரை எனக

(பொழிப்பு.) மறுவிலா மறையோர்வாழுகின்ற திருப்பூந்தராயென்னுந் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகியதிருவடித்தாமரை யெனனை யாண்டிவதாக.—பூந்தராயென்பதுஞ் சீகாழி

(எ) செருக்குவாயப் புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-மயககம், வாய்பபு-மேன்மை, உடையான்-கேடுசெய்யான், சிரபுரம்-மேலாகிய இருபபு, எனனில் எனனுடையபோதமே எனக.

(பொழிப்பு.) தனது திருவடிபபிரசாத மிலலாதார்கரு மலமயக்கத்தின் மேலீட்டைக்கெடாத சிவனுககு விசுவாதீதமான இருபபிடம் எனது சைதனியமே.

செருக்குவாய்ப்புடையான சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செர்-சததாதிக ளாலுசுருசேரப்பட்ட, உககு-அந்தப்பூமி, வாய்ப்புடையான்-தன் வாயினிடமாகவுள்ள விஷ்ணு, சிர்-சிறப்பு, அபுரம்-உயிர்போனகளேபரம்; என்னில்-மேனியிலே எனக.

(பொழிப்பு.) சத்தாதிக ளாலுசுருசேரபபட்ட உலகத்தைத் தன்வாயினிடமாகவுடைய விஷ்ணுவின களேபரத்தைத திருமேனியிலே தரித்துள்ளான்.—சேர் எனறபாலது - செர் எனவும், சீர் எனறபாலது-சிர் எனவுங் குறுகின்றன.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-ஆத்துமவிகாரமாகிய கர்வம், வாய்-இந்திரியம், புடையான்-இடத்தான், சிரம்-மேல், புரம்-சரீரம், எனனில்-சத்தியம் எனக.

(பொழிப்பு.) ஆத்துமவிகாரமாகிய கர்மத்தினாலே இந்திரியங்களுக்கு விடயமாகியசுவர்க்கத்தி லிச்சையையுடையானுககு அந்தச்சுவர்க்கம்மெய்யாக விசேஷித்திருக்குமன்றே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-இந்திரியயுத்தத்திற்கு, ஆய்ப்பு-இளைப்பு, உள்தையான்-உள் தைக்கப்படான், சிரபுரமென்னில்-சிரபுரமென்றுரைக்கில் எனக.

(பொழிப்பு.) இந்திரியவன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகி யபாணங்கள் தனதறிவுக்குள் தைக்கப்படான்.— (தாற்பரியம்.)ஒருகாற்சிரபுரமென்றுசொ ன்னவிடத்துப் பஞ்சேந்திரியங்களையும் அவியப்பொருது சிவனுடையதிருவடியிலே அடை யாநிற்பன் என்பதாம்.

(அ) பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-பொலிவு, நடி-கூத்துடையான், மாது-பத்திரகாளி, அவர்-பூ தகணங்கள், சேர்-தங்குதல், புறவத்தவன்-சுடுகாட்டிலுள்ளவன் என்க.

(பொழிப்பு.) பொலிவினையுடைய மாயாநிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும், பூதபசா சும்பொருந்திய மயானமே திருக்கோயிலாக வுள்ளவன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-தூய்மை, அடி-வழி, மாதவர்-தபோதனர், சேர்-திரட்சி, புற வம்-முல்லைநிலம், தவன்-தவம்புரிந்துள்ளான் என்க.

(பொழிப்பு.) சுத்தமான வழியைத்தரப்பட்ட மகா இருஷிகள் திரண்டு தவம்பண்ணு கிற்கும் ஆரணியத்தில தனித்துத் தவம்புரியாநிற்குந் தபோதனன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-இலக்குமி, அடி-ஆபரணத்தொகுதி, மாது அவர்-இருடிபத்தி னிகள், சேர்புஉறு-பிச்சையிடவந் தணைதல், அவத்தவன்-கலைசோர்தலைச்செய்த திருவாணி என்க.

(பொழிப்பு.) அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியையொத்த இருடிபத்தினிகள் பிச்சையிடவந் தணையுமிடத்துந் தனக்குள்ள திருவாணத்தை அவர்களு க்குக் கொடுத்தவன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-பொன்னாற்செய்யப்பட்ட பாடகநூபுர காலாழிகள் முதலிய வுடுப்பட்ட, அடி-பாதம், மாதவர்-கன்னியர், சேர்-இணமாய்விளையாடுதல்,புறவத்தவன்-திருப்புறவமென்கின்ற திருப்பதியில்வாழ்கின்றவன் என்க.

(பொழிப்பு) பொன்னாற்செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களிலே யணிந்து ள்ள கன்னியர்திரண்டு விளையாடும் புறவமெனனுந் திருப்பதியில் வாழுகின்ற சிவன்.பு— றவம் என்பதுஞ் சீகாழி.

(ஆ) தசமுகனெரிதர வூன்றுசணையயான்.

(பதப்பொருள்.) தசமுகன்-தயவையுடையான், எரிதர-எரிவீச, ஊன்று-அழுந்து,க ண்-வேகம், பையான்-படம்பொருந்திய பாமபையுடையான் என்க.

(பொழிப்பு.) ஆத்துமாக்களிடத்துக் கருணைமிறக்குமிடமாயுள்ளவன். அக்கினிவீசப்ப ட்டுத் திருவரையிலே அழுந்தச சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடையபாம்பை அரைஞா ணாக வுடையான்.

தசமுகனெரிதர வூன்றுசண்ணையயான்.

(பதப்பொருள்.) த-அது, சமுகம்-திரட்சி, நெரி-நேரானவன், தர-புலி, ஊன்-மாமிச ம், துசு-தூசு, அண்ணையான்-விரித்துடுத்தான் என்க.

(பொழிப்பு.) எல்லாமிறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுமாய்ப் புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவரையிலே விரித்துடுத்தவன்—நேரி எனற்பாலது-நெரி எனக்குறுகி நின்றது. தாக்கு எனற்பாலது-தர எனக்குறைந்தது. அசு எனற்பாலது-அசு எனக்குறுகி நின்றது. பாயான் எனற்பாலது-பையானெனக் குறுகிப் போலியாயிற்று.

தசமுகனெரிதர வூன்றுசண்பையயான்.

(பதப்பொருள்.) தசம்-தைசதம், உக-கெட, நெரி-எதிர்ப்பட்டவன், தரம்-மலை, ஊன்-திருவுளந்தடைத்தல், து-விசேஷஞானமுள்ளவன், சண்-சட்சமயம், பையான்-பயனுயுள்ளவன் என்க.

(பொழிப்பு.) ஆத்துமவிகாரமான அகங்காரம் போம்படி என்னறிவி லெதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத் தடைத்தெழுந் தருளியிருந்து ஆத்துமாக்களை யிரட்சியாநின்ற விசேஷத்தை யுடையவனென்றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர்கொண்ட பயனுயுள்ளவன. நேரி எனற்பாலது-நெரியெனக் குறுகிநின்றது.

தசமுகனெரிதர வூன்றுசண்பையயான்.

(பதப்பொருள்.) தசமுகன்-பத்துத்தலைகளையுடைய இராவணன், நெரிதர-முறிய, ஊன்று-அமுக்கிய, சண்பையான்-சண்பையென்னுந் திருப்பதியில் வீற்றிருப்பவன் என்க.

(பொழிப்பு.) பத்துத்தலையுள்ள இராவணன் முறியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரென்னில் சண்பையெனனுந் திருப்பதியிலே வீற்றிருக்குங் கடவுள்.

(கo) காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான-நிலைபெற்று நின்மலமான சித்தத்தையுடைய, யன்-பத்தரிடத்து, உள்ளவா-சத்தியம், காணபரே-நோக்குவர் என்க.

(பொழிப்பு.) நிலைபெற்றுநின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள் விளையும்பொருட்டு ஞானநாட்டத்தினுலே அவர்களைக் கடாட்சிக்கின்றவன்.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-களங்கமுள்ளவன், நயனுள்ளவா - ஞானக்கண்ணுள்ளவாறு, காண்பரே-நிலைமையாக நினைப்பரே என்க.

(பொழிப்பு.) திருமிடற்றிற் களங்கமுடையானது கருணையை நினைத்து ஞானநாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத்தடுக்கு மதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர்.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-விஷ்ணு, அயன்-பிர்மா, உள்ள-நினைக்க, ஆ-அதிசயம், கண்-கருதுதல், பரே-அன்னியம் என்க.

(பொழிப்பு.) விஷ்ணுவும்-பிர்மாவும் திருமுடியுந் திருவடியுங் காணும்பொருட்டு வராகமும் அன்னமுமாகக்கருதி வடிவுகொண்டார், ஐயோ உள்ளபடிகருதிச் சிவனைப்பெறுமல் அவர் கருதியதேதென்னில், அன்னியமேகண்டனர். கண் எனற்பாலது-காண் எனநீண்டது.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-காழுப்பதியிலுள்ளான், அயன்-ஐயன், உள்-என்னறிவிலுண்டான, அவா-ஆசை, காண்பரே-தரிசிப்பரே என்க.

(பொழிப்பு.) என்பொருட்டாற் காழியென்னுந் திருப்பதியைப் படைத்தானை, என்னையனை, எனதாசையை, கீழ்ச்சொன்ன விருவர்களும் தாங்கள்தேடுந் தேட்டப்பிறிவின் மயக்கத்திலே தேட்டமழித்துத் தோன்றா நிற்பவனை, தேடி மறத்தலொழிந் தெவ்வாறுகாண்பர்.

(௧௧) கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சை-அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவமலம், அண்ணலை-பொருந்துதலை, கூடகிலார்-மாறுபட்டார், உடல்-உடலாலே, மூடரே-மூடாரேஎன்க.

(பொழிப்பு) ஆணவமலத்தோடுகூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயா தனுவாலு மாதிரதனுவாலு மறைக்கப்பட்டார்கள். மூடார் என்றபாலது-மூடர் எனக்குறுகிநின்றது.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சை-புலால்நாற்றம், அண்ணல-அணுகுதல், கூடகிலார்-மனம் பொருந்தமாட்டாதார், உடல்மூடரே-சரீரத்தைப் புதைப்பரே என்க.

(பொழிப்பு.) புலால்நாற்றத்தைப் பொருந்திய அழுக்கு மெய்யைப்பொய்யென்று மனங்கொள்ளமாட்டாமல் அதுவே தமதுநிலை பெறறவுருவாக நினைத்துந் துவராடையாலே யுடம்பைச் சூழப்பட்டபௌத்தரும்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சையள்-பேதைத்தன்மையையுடைய மச்சியகந்தி, நலை-புலப்படாநின்ற அவளது நலத்தைக்கருதி, கூடு-சரீரம், அகில்ஆர்-அகில்மணம்பொருந்திய, உடன்-அத்தன்மையாளுடன், மூடரே-மொய்க்குமாறுபண்ணினது அது பொருந்துதல்எனக.

(பொழிப்பு) பேதைத்தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய நலத்தைக்கொள்ளும்பொருட்டு அவளது சரீரமெல்லாஞ் சுகந்தமொய்க்கும்படி யவளுடனே பொருந்திய பராசரனாகிய மகாவிருடிவந்து சிவனைப்பொருந்தி யருச்சிக்கப்படுதலால்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடனமூடரே.

(பதப்பொருள்.) கொச்சை-கொச்சையாகிய பராசரன் பேராலுள்ள கொச்சையென்னுந் திருப்பதி, அண்ணலை-கர்த்தாவை, கூடகிலார்-சேர்படமாட்டார், உள்தல்-உள்ளுதல், மூடரே-அந்தகாரநிறைந்த போகத்தை யுடையவரே என்க.

(பொழிப்பு.) பராசரமுனிவனாற் பூசிக்கப்பட்டு அவனபெயரால் பெயர்பெற்றுள்ள கொச்சைவயமென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிராநின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம்பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறிருக்குமென்னில், மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவபோதமாயிருக்கும்.

(௧௨) கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழுமல்-மிகுதிப்பட்டகுற்றம், அமுது-சலம், பதிக்க-விளைவிக்க, உள்நீ-உள்ளநீ, கட்டு-வடிவாகக் கட்டுண்டல், உரை-தேய்தல் என்க.

(பொழிப்பு.) மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண்பதிந்து விளைதற்குள்ள நீயுமாயந்தக் கருப்பாசைய நீரின்கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத்தோற்றிப் பூமியின்கண்ணேசெனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்துமரிக்கின்ற சென்மத்தையும். பரிணமித்தல்-வேறுபடுதல்.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழு-கழுவப்படும், மலம்உது-ஆணவமலமு மற்றதனுடன் சுட்டிச் சொல்லப்பட்ட மாயாமலத்தையுங் கன்மமலத்தையும், பதி-பாதி, கவுணி-உள்ளே அகப்படுத்திக் கவுளிகரித்துக்கொள்ளுதல், அனகன்-ஆத்துமாவினிடத்து, துரை-இறைவர் என்க.

(பொழிப்பு.) கீழ்ச்சொல்லிப்போந்த சென்மத்தையுங்கழுவி மலத்திரயங்களையுங் கழுவாநிற்கும். (என்றபதம்சிறக. இனிச்சிவனது நாமமுரைக்கற்பாற்று.) தனதுபாதியாகிய திருவருளிலே என்னையகப்படுத்திக கவுளிகரித்துக்கொண்டந்த அருள்வழியாக எனதிடத்தி லிடையறுமல்வாழுக் தன்னை யெனக்குத்தந் தடிமைகுலையாம லெக்கணனும்விட்டு விளங்குங்கர்த்தர். பாதி எனற்பாலது-பதியெனக் குறுகிநின்றது.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழும்-மயக்கம், அலம்-அலக்கண்படுதல், அமுது-அமுதம், பதி-கர்த்தர், க-சிரசு, உணியன்-உண்ணப்பட்டவர், கட்டு-விளக்கம், உரை-பொன்-என்க.

(பொழிப்பு) மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெற்றமூர்த்தி யிரண்டுந்தெரியாமல் நிண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம்போன்று அரிதாயுள்ளவனுமாய் விட்டு விளங்கப்படாநின்ற பொன்னுருவை யுடையவனுய்ச் சிருஷ்டிக்குக கர்த்தாவாகிய பிரமனது சிரக்கபாலத்திலே பிச்சைகொண்டு, ணுகரும் கருணையாளனே.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழுமலமுதுபதி-கீழ்ச்சொன்ன பதியின்கண், கவுணியன்-கவுணியகோத்திரத்துவந்த மறையோனுகியயான், கட்டு காட்டு, உரை-உரைப்பீராக என்க.

(பொழிப்பு) திருககழுமலமென்னும் மூவாப்பழநகிழமைப் பன்னிருபெயர்பெற்ற அனுதிமூலமாகிய பதியிடத்துக் கவுணியகோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச்சொன்னவற்றினு மலத்திரயங்களினும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும உரைசெய்வார் உயர்ந்தாரே யாதலா லிப்பாடலை யிடைவிடாம லுரைசெய்வீராக. காட்டு என்பது-கட்டெனக் குறுகிநின்றது.

திருச்சிற்றம்பலம்.

உரை-முற்றியது.

திருவெழுகூற்றிருக்கை.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினை மானுங்காரத்-தீரியல்பாயொரு விண்முதல்பூதல-மொன்றிய விருசுட ரும்பர்கள்பிறவும்-படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை - யிருவரோடொருவ னுகிநின்றனை-யோரா னீழ லுனகழலிரண்டு- முப்பொழுதேத்திய நால்வர்க் கொளிநெறிகாட்டினை-நாட்டமூன்றுகக் கோட்டினை-யிருநதி' வமோ டொருமதிசூடினை-யொருதாரீரயின் மூவிலைச்சூல - நாற்கான்மான் ...யந்த

லையரவ-மேந்தினை காய்ந்தநால்வாய் மும்மதத்திருகோட்-டொருகரியீடழித்துரி த்தனை-யொருதனுவிருகால்வளையவாங்கி-முப்புரத்தோடு நானிலமஞ்சக் - கொன்றுதலத்துற வவுணரையறுத்தனை-யைம்புலனுலா மந்தக்கரண-முக்குணமிரு வளியொருங்கியவாறே ரேத்தநின்றனை யொருங்கியமநத்தோ-டிருபிறப்போர்ந் துமுப் பொழுதுகுறைமுடித்து-நான்மறையோதி யைவகைவேள்வி-யமைத்தா றங்க முதலெழுத்தோதி-வரன்முறைபயின்றெழு வான்றனைவளர்க்கும் பிரமபு ரம்பேணினை-யறுபதமுரலும் வேணுபுரம்விரும்பினை யிகலியமைந்துணர்புகலி யமர்ந்தனை-பொங்குநாற்கடல்சூழ் வெங்குருவிளங்கினை-பாணிமூவுலகும் புதை யமேன்மிதந்த-தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருநிதி - வாய்ந்தபூந்தரா யேய்ந்தனை-வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை-யொருமலையெடுத்த விரு திறலரக்கன்-விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை-முந்நீர்த்துயின்றோ னுன் முகனறியாப்-பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை - யையுறுமமணருமறுவ கைத்தேரரு-மூழியுமுணராக் காழியமர்ந்தனை - யெச்சனேழிசையோன் கொச் சையைமெச்சினை-யாறுபதமு மைந்தமர்கல்வியு-மறைமுதனான்குமூன்றுகாலமு ந்-தோன்றநின்றனை யிருமையினொருமையு - மொருமைதன்பெருமையு மறுவி லாமறையோர்-கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை-கழுமலமுதுபதிக் கவுணி யனறியு-மனையதன்மையை யாதலினினனை-நினையவல்லவ ரில்லைநீணிலத்தே.

திருவெழுகூற்றிருக்கைக்கு மொய்சுருக்கமான திருவுள்ளக்கருத்து.

ஒருருவாயினை-என்றது, எல்லாம் சுகாதமெனையுங் கடந்து வாக்குமனாதிகளுக்கு மெட்டாமலிருந்துள்ள தற் வந்து சிவ ப்பொருந்தியங்களையும் நிகழ்த்தவேண்டி நினதிச் சையா லெடுத்துக்கொண் ... சையண்ணலைக் கூ ... யை-எ-று.

மானுங்காரத்திரியல்பா ... னன்பது-சத்தி, யாங்காரத்திரியல்பாய்-தற் சத்தியைக்கொண்டு சர்வானுக்ச-கொச்சையா ... நச கிருத்தியங்களை நடத்தவேண்டிச் சத்திசி வமாகிய விரண்டுருவாயினை-எ-றவை, கூடி

ஒரு-என்றது, அந்தச்சத்தி யைனைகூடி யொன்றாகி நின்றனை-எ-று.

விண்முதல்பூதல மொன்றி ... யிலே ... ரும்பர்களை பிறவும் படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை-என்றது, ஆகா ... ர்கள் லாகப பூமியீறாகவுள்ள பஞ்சபூதங்களையுஞ், சந்தி ராதித்தர்களையுந்,தேவர்களையு,மற் ... ள ஆத்மாக்களையும், படைக்கைக்கும், காக்கைக்கு ம், அழிக்கைக்கும், பிர்மா, விஷ்ணு-ரு ... திரரென்கின்ற திரிமூர்த்திகளுமாயினை-எ-று.

இருவரோ டொருவனாகி நின்றனை-என்றது, பிர்மாவையும் விஷ்ணுவையு மிடத்திலு ம்வலத்திலும் அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாகி நின்றனை-எ-று.

ஓராலீழலுன் கழலிரண்டு முப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறிகாட்டினை-என் றது, விருக்ஷங்களுக்கெல்லாந் தலைமையா யிருப்பதொரு வடவிருக்ஷத்தினீழலிலே யெழு ந்தருளியிருந்து நின்னழகாகிய ஸ்ரீபாதங்களையுதய-மத்தியான-மத்தமனமென்கின்ற மூன் றுகாலமுந் தோத்திரஞ்செய்யாநின்ற அகஸ்தியன்-புலஸ்தியன்-ஜனகன்- சனற்குமாரனெ ன்னும் செல்வ ... கை யிருடிகளுக்குந் தற்சுரூபமான திருமேனியைக்காட்டி யருளினை-எ-று.

காட்டமூன்றாகக்கோட்டினை-என்றது, பிர்மா முதலாயிருந்துள்ள ஆத்மாக்கள் ரூபமென்னும் புலனாலே சர்வ பதார்த்தங்களையுங் காணுதபடியாலே சந்திராதித்தர்களையு மக்கினியையு மூன்றுகண்ணாகக் கொண்டருளி அந்தகாரமான விருளையோட்டினை-எ-று.

இருநதியரவமோடொருமதிசூடினை - என்றது. பெரிதாகிய கங்கையையு மொப்பில்லாதபாம்பினையு மொருகாலத்திலுமுதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடியருளினை-எ-று.

ஒருதாளீரயின்மூவிலைச்சூல நாற்கான்மான்மறியைந்தலை யரவமேந்தினை - என்றது, பிரணவமாயிருந்துள்ள ஒருகாம்பினையும், ஈருகின்ற கூர்மையினையும், பிர்மா-விஷ்ணு-ருத்திரனென்கின்ற மூன்றிலையினையுமுடையதொரு சூலத்தினையும், இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையும், நாலுகாலாயிருந்துள்ளதொரு மான்கன்றினையும், ஸ்ரீபஞ்சாக்ஷரங்களையும், அஞ்சுதலையாக வுடையதொரு மகாநாகத்தினையும் அஸ்தங்களிலே தரித்தருளினை-எ-று.

காய்ந்தநால்வாய் மும்மதத்திருகோட் டொருகரியீடழித்துரித்தனை-என்றது, தன்னிழலைக்காயத்தக்க கோபத்தினையும் தொங்கும்வாயினையு மிரண்டு கொம்பினையுமுடையதொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பெலங்களையெல்லாங்கெடுத்து உரிதுப்போர்த்தனை.

ஒருதனுவிருகால்வளையவாங்கி முப்புரத்தோடு நானிலமஞ்சக்கொன்று தலத்துற மவுணரையறுத்தனை-என்றது, ஒப்பில்லாத பொனமலையாகிய விலலையிருதலையும் வளையவாங்கி அஸ்திரத்தைத்தொடுத்து, மூனறுபுராதிகளாகிய அவுணரையறுத்தனை-எ-று.

ஐம்புலநாலா மந்தக்கரண முக்குணமிருவளி யொருங்கியவானோரேத்த நின்றனை-என்றது, சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னப்பட்ட ஐம்புலங்களையு, மனம-புத்தி-யாங்கார-சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத-தாமத - சாத்துவிதமென்கின்ற மூன்றுகுணங்களையும், பிராணன்-அபானனென்கின்ற விரண்டுவாயுவையும், மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு ஏகாக்கிரசித்தராயிருந்துள்ள தேவர்களேத்தநின்றனை-எ-று.

ஒருங்கிய மனத்தோடிருபிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து நான்மறையோதி ஐவகைவேள்வியமைத்தாறங்க முதலெழுத்தோதி வரன்முறைப்பயின்றெழு வான்றனைவளர்க்கும் பிரமபுரம்பேணினை-என்றது, ஆகாரம்-நித்திரை-பயம்-மைதுன மிவற்றில்செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களிலே யொருக்கி முன்பு தாம் மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும், உபநயநத்தின பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்துமூன்றுசந்தியும், செபதர்ப்பண-அனுட்டான-ஓமங்களையுமுடித்து இருக்கு-யசுர்-சாம-அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையுமோதி, சிவபூசை-குருபூசை-மகேசுரபூசை-பிராமணபோசனம்-அதிதி-புசிப்பு-என்கின்ற வைந்துவேள்வியுமுடித்து, ஓதல்-ஓதுவித்தல்-வேட்டல்-வேட்பித்தல்-ஈதல்-ஏற்றல் - என்னு மாறங்கங்களையும் நடத்தி இவைகளுக்கு முதலாயிருந்துள்ள பிரணவத்தையு முச்சரித்துத் தேவலோகத்திலுள்ளதேவர்களுக்கு மவிகொடுத்து மழையைப்பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.—ஆறங்கமாவன - மந்திரம்-வியாகரணம்-நிகண்டு-சந்தோபிதம்-நிருத்தம்-சோதிடம்-இவ்வாறு வழங்கப்படுகின்ற முறைமையான்று.

கிருஷ்ணவதா

மூாலும்வேணுபுரம் விரும்பினை-என்றது, அறுகாலுடைய வ
நிழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளி

வேணுபுரமென்பதற்குக் காரணம்-வேணுஎன்பானொரு இந்திரனுடன் கெசமுகனென்பா னொருவசுரன்வந்து யுத்தம்பண்ண வவனுடனே பொருது அபசெயப்பட்டுப் பிரமபுரமெ ன்று முன்சொன்ன பதியிலேவந்து பரமேசுவரன் திருவடிகளிலே தம்பிரானே! யடியே னுக்கமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன் சங்கரிக்க அவனுடன்யுத்தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே தம்பிரானுங் கணேசுரனைத்திருவுளத்தடைத்து வாராய்கணேசுரனே! கசமுகன வரப்பிரசாதமுடைய வன், ஒருவராலு மவனைச் செயிக்கப்போகாது நீயு மவன வடிவாகச்சென்று உன் வலக் கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவெனநின்ற இந்திரனைச் சுவர்க்கலோ கத்திலே குடிபுகவிட்டுவாவென்று திருவுளம்பற்றக கணேசுரனு மவன்வடிவாகச்சென்று தன்வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங்கொன்று வேணுவென்கின்ற இந்திரனை யும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட உண்டானதென்க.

இசலியமைந்துணர் புகலியமர்ந்தனை-என்றது, தேவர்கள் முன்பு புகலிடமென்று புகுதலால் திருப்புகலியென்பதே திருப்பதியாக எழுந்தருளி யிருந்தனை என்றவாறு.— தேவலோகமான வமராபதியைச் சூரபத்மா என்பானொரு வசுரன்வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன முதலாயுள்ளார்பொருது அபசெயப்பட்டு யுத்தத்தையொழி ந்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீபாதமொழிய, புகலிடமில்லையென்று வேணுபுரத் திலேவந்து பரமேசுவரனைந் தெண்டம்பண்ணியவனுமுண்டான கலிகையை விண்ணப் பஞ்செய்து எங்களை யிரக்ஷித்தருளவேண்டுமென்னப் பரமேசுவரனும்-சுப்பிரமணியரைத் திருவுளத்தடைத்து வாராய் சுபரமணியனே ? நீ-ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகப் போய்ச் சூரபத்மாவையுஞ் செயித்துந் தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுதவிட்டு வாவென வருகைகாரணம்.

பொங்குநீர்க்கடல்சூழ் வெங்குருவினங்கினை-என்றது, மிகவும் கோபிக்கப்பட்ட கட ல்சூழ்ந்த வெங்குருவென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.—லோக ங்களுக்கெல்லாந் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான என்னையொழிந்து கர்த்தாவுண்டோ வென்று மனதுகொள்ளுஞ் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன மகாகெர்வியாயிருந் தா னிவனுடைய கெர்வத்தை யடக்கவேண்டுமென்று திருவுளத்தடைத்தருளித் தேவர்க்கு க்குருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புகலியென்கின்ற திருப்பதியிலே போய்ப் பரமேசுவரனைத் தெண்டமபண்ணி அடியேன்செய்த அபராதங்களைப் பொறுத் தருளியடியேனையிரக்ஷித்தருளவேணடுமென்று விணணப்பஞ்செய்யத்தம்பிரானும் நீமகா வேகியாயிருந்தாயென்று திருவுள்ளமாய் முனபுபோலே தேவர்களுக் குருவாகிய வதிகா ரத்தையுங் கொடுத்தகாரணத்தால் வெங்குரு எனகின்ற பெயருண்டாயது.

பாணிமூவுலகும் புதையமேல்மிதந்த தோணிபுரத்துறைந்தனை-என்றது, பாணியென் கின்ற செலம் பிரளயமாய்ப் பூமி-அந்தர-சுவர்க்க-மூன்று லோகங்களையும் புதைப்ப அ தைச் சங்காரம்பண்ணி யருளியதினமேலே தோணிபோல மிதந்த வெங்குருவாகிய தோ ணிபுரமென்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை-எ-று.

தொலையா விருநிதிவாய்ந்த பூந்தாராயேய்ந்தனை-என்றது, வேண்டினுர் வேண்டிய நல்காநிற்குந் தொலைவறச் சங்கநிதி - பத்மநிதியென்று சொல்லப்பட்ட இரண்டுநிதிக் த்தருளியிருந்தாராயும் பூசிக்கையாலே திருப்பூந்தரா யென்னப்பட்ட திருப்பதியிலே என் றுகாலமும் தோய்ந்தனை-என்றவாறு.— ஒருகாலத்துத் தொலையாதவரத்தைப் பெறுவது னை னும் செல்வக் த்தோணி புரத்திலே வந்து தம்பிரானைப் பூசித்தது.

னுங்களுக்குவேண்டுவதென்னென்று கேட்டருள,தம்பிரானே ? அடியோங்களுக்கு எல்லாக்காலங்களுந் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தை பிரசாதித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவ்வாறே தொலையாத வரத்தையுங் கொடுத்தருளி மகாசங்காரத்தினுந் தம்முடைய ஸ்ரீ அஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங் கொடுத்தருளினதால் பூந்தராயெனப் பெயருண்டாயது.

வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை - என்றது. வரத்தைத்தருவதான புரமென்றுணரத்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை எ-று. தேவர்களும், பிர்மா, விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தையுண்டாக்கித் தேவர்களையிருத்தி விஷ்ணுபகவான அமிர்தம்படைத்துக்கொண்டு வருகிறவேளையில், ராகு கேதுவென்கின்ற இரண்டு பாம்புங்கூடிக் காத்திருந்து அமிர்தபானம்பண்ணுவதாக இருப்பதுகண்டு, விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துவருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலையறவெட்டுகையாலுடலிழந்துநாகமிரண்டும் நம்முடல்தரகடவான பரமேசுரனொழிய வேறேயில்லையென்று திருப்பூந்தராயிலேவந்து பரமேசுவரனைநோக்கி யிரண்டுசிரங்களும் பூசித்ததலால் சிரபுரமெனறுபெயருண்டாயது.

ஒருமலையெடுத்த விருதிறலரக்கன விறலகெடுத்தருளினை-என்றது. பெருமையுள்ள கயிலாயமெனனும் பேரையுடைத்தாய் உனக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளிமலையையெடுத்த பெரிய புசபலங்கொண்ட ராவணனுடைய கர்வத்தைக்கெடுத்தருளினை எ-று.

புறவம்புரிந்தனை-என்றது. பிரசாபதியென்கின்ற பிர்மவிருஷி - கவுதமரிஷியைநோக்கி நீ ஸ்திரீபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லோவென்று தூஷிக்கையாலே கவுதமரிஷியும் பிரசாபதி பகவானைப்பார்த்து நீ புறவெனனும் ஒரு பக்ஷியாய்நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்கப் பிரசாபதியும் ஒரு புறவாய்ப்போய் பலவிடத்தினும் நரமாமிசம் புசிக்கையிலே யொருநாள் மாமிசந்தேடிச் சோழவமிசத்திலே யொருராசா தினசரிதனுயிருக்கிறவிடத்திலே யிந்தப்புறவாகிய ரிஷியும்போய் ராசாவைப்பார்த்து எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது சற்று நரமாமிசம் இட வல்லையோவென்ன, ராசாவுமுனக்கு எவ்வளவுமாமிசம வேண்டுமென்னப் புறவு முன்சரீரத்திலே ஒன்று பாதிதரவேண்டுமென்ன, ராசாவுந் தன்சரீரத்திலே யொன்று பாதி யரிந்திடப் புறவுக்கு நிறையப்போதாமல் சர்வ மாமிசத்தையு மரிந்திட்டு ராசாவுஞ் சோர்ந்துவிழ, இந்தப் புறவாகியபட்சியும் நமக்குத் தன்சரீரத்தை யரிந்திட்டுப் பிழைப்பித்த ராசா சரீரம் பெறும்படி யெங்ஙனேயென்று விசாரிக்குமளவில் பரமேசுவரனொழிய வேறில்லையென்று சிரபுரத்திலேவந்து பரமேசுவரனைநோக்கி, அர்ச்சிக்கப் பரமேசுவரனுந் திருவுளத்தடைத்தருளித் தம்பிரானே ? அடியேன் தாகந்தீரத் தன் சரீரத்தை யரிந்திட்ட ராசாவுக்கு முன்புபோலே யுடலும் பிரசாதித்து அடியேனுக்கு மிந்தச் சாபதோஷம் நீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய,ராசாவுக்குச் சரீரமுங்கொடுத்துப் புறவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமு மாற்றியருளிப் புறவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாகவெழுந்தருளி யிருந்தனை-எ-று.

முந்நீர்த்துயின்றோ னான்முகனறியாப் பண்பொடு[illegible]ரனை-என்றது. ஆற்றுநீர், ஊற்றுநீர், ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட முந்நீராகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயணனும், நாலுமுகத்தினையுடைய பிர்மாவு மடியு முடியுந் தேடற்கரிதாய் நின்ற பண்பினையுடையையா யெழுந்தருளி யிருந்தனை-எ-று.

சண்பையமர்ந்தனை என்றது. துர்வாச மகாரிஷியாசிர்மத்தே கிருஷ்ணாவதாரத்திலுள்ள கோபாலப்பிள்ளைகளெல்லா மிந்த இருஷியை அசங்கதித்துத் தங்களிலே யொரு

ளைக் கெர்ப்பிணியாகப் பாவித்துச்சென்று இவள் பெறுவது ஆணோபெண்ணோவென்று அந்த இருஷியைக் கேட்கையாலே, அவர் கோபித்து இவள்பெறுவது ஆணுமல்ல பெண்ணுமல்ல வுங்கள் வமிசத்தாரையெல்லாஞ் சங்கரிக்கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக்கடவதென்று சபிக்கையாலே, அவன்வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்கைவிழ, அந்தச்சேதியைக் கிருஷ்ணன்கேட்டுத் துர்வாசமகாரிஷி சாபங் கேவலமல்லவென்று அந்த இருப்புலக்கையைப் பொடியாக அராவி அந்தப்பொடியைச் சமுத்திரத்திலேபோட, அராவுதலுக்குப் பிடிபடாத ஒரு வேப்பம்விதைப் பிரமாணமுள்ள விரும்பை ஒருமீன் விழுங்கி ஒரு வலைக்காரன்கையிலே யகப்பட்டது. அதின் வயிற்றிலகிடந்த இரும்பைத்தன் னம்புத்தலையிலேவைத்தான், மற்றுஞ் சமுத்திரத்திற்போட்ட இரும்புப் பொடிகளெல்லாம் அலையுடனே வந்து கரைசேர்ந்து சண்பையாக முளைத்துக் கதிராய் நிறைந்தவிடத்திலே கோபாலகுமாரர்கள் விளையாடி வருவோமென்று இரண்டுவகையாகப்பிரிந்து சென்று அந்தச் சண்பைக்கதிரைப் பிடுங்கி யெறிந்துகொண்டு அதனாலே பட்டுவிழுந்தார்கள். இதைக்கிருஷ்ணன்கேட்டு இதனாலே நமக்கு மரணமாயிருக்குமென்று விசாரித்து ஆலினமேலே யொரு இலையிலேயே காசனனாக வொரு பாதத்தைமடித்து ஒருபாதத்தைத் தூக்கி யமர்ந்திருக்கிற விடத்திலே அந்த மீன்வேடன பக்ஷிசாலகைளத்தேடி வருகிறபோது தூக்கியபாதத்தை யொரு செம்பருந்திருக்கிறதாகப் பாவித்து அந்த அம்பைத் தொடுத்தெய்யக் கிருஷ்ணனும் பட்டுப் பரமபதத்தை யடைந்தா னிந்தச்சாபதோஷம் துர்வாசமகாரிஷியைச்சென்று சவிக்கையாலே யிந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனும் திருவுளத் தடைத்தருள இருஷியுந் தெண்டம்பண்ணித் தம்பிரானே? அடியேனுடைய சாபத்தாலே கிருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபாலரெல்லாருஞ் சண்பைக்கதிர்களால் சங்காரப்படுகையாலே அந்தத்தோஷ மடியேனைவந்து கலியாதபடி திருவுளத் தடைத்தருளி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் துர்வாசமகாரிஷிக்குச் சண்பைச்சாபத்தினாலுள்ள தோஷத்தை நீக்கிச் சண்பைமுனியென்கின்ற நாமத்தையுந் தரித்தருளிச் சண்பையென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை-எ-று.

ஐயுறுமமணரு மறுவகைத்தேரரு மூழியுமுணராக் காழியமர்ந்தனை-என்றது. வேதாகம புராணசாத்திரங்களிலுள்ள பலத்தை யில்லையென்று ஐயமுற்றிருக்கின்ற அமணருங் கைப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கூர்ப்பு, தித்திப்புஎன்கின்ற அறுவகை ரசங்களையு முச்சிக்குமுன்னே புசிக்கிறதே பொருளென்றிருக்கிற புத்தரு மூழிகாலத்து மறியாமல் மிகவுங் காளிதமான விஷத்தையுடைய காளியென்கின்ற நாகம் புசிக்கையாலே சீகாழியென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை-எ-று.

எச்சனேழிசையோன் கொச்சையை மெச்சினை-என்றது. குரல், துத்தம், கைக்கிளை, உழை-இளி-விளரி-தாரம் என்பகேழிசை.—குரலாவது-சங்கத்தொனி, துத்தமாவது-ஆனையின்பிளிறு, கைக்கிளையாவது-குதிரையின்குரல், உழையாவது-மானின்குரல், இளியாவது மயிலின்குரல், விளரியாவது-கடலோசை, தாரமாவது-காடையின்குரல் என்னும் நாதங்களையு மெச்சினை, மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராயுள்ள பராசரப்பிரமரிஷியானவர் மற்ற ரிஷிகளெல்லாரையும் நோக்கி நீங்கள சமுசாரிகளொழிய விரதத்தை யனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களைத் தூஷிக்க, அவர்களும் நீ மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமு முன்னைப்பற்றி விடாமலனுபவிப்பாயென்று சபிக்கையாலே அந்தச் சாபத்தின்படிபோய் மச்சகந்தியைப் புணர்ந்து அந்தத் துர்க்கந்த மிவரைப்பற்றி யொருயோசனைதூரம் துர்க்கந்தித்தபடியாலே யிது போக்கவல்லவர் பரமேசுவரனையொழிய வேறில்லையென்று சீகாழியிலேவந்து பரமேசுவரனை அர்ச்சிக்கப் பரமேசுவரன் உனக்குவேண்டியதென்னென்றுகேட்கத் தம்பிரானே? அடியேனைப்பற்றின துர்க்கந்தத்தை விடுவிக்கவேண்

மென்று விண்ணப்பஞ்செய்ய, தம்பிரானு மிவனென்ன கொச்சை முனியோவென்று திருவுளமா யிவன்மேற்பற்றின தர்க்கந்தத்தையும்போகஇச் சுகந்தத்தையும் பிரசாதித்த ருளிக் கொச்சையென்கின்ற சந்தர்ணாமத்தையுந் தரித்தருளிக் கொச்சையென்கின்ற தே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை-எ-று.

ஆறுபதமு மைந்தவர்வேள்வியு மறைமுதல்நான்கு மூன்றுகாலமுந் தோன்ற நின்ற னை-என்றது. பிரத்தி, பிரத்திபாகாரம், துல்லியம், அலலியாதீதம்,வித்தை, அவித்தையெ ன்கின்ற ஆறுபதங்களும், ஆசு, மதுரஞ், சித்திரம், வித்தாரம், விரையம்-என்கின்ற வைந் தும்,இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்கின்ற நாலுவேதங்களுஞ், செல்காலம், வரு காலம், நிகழ்காலமென்கின்ற மூன்றுகாலமுந் தோன்றநின்ற மூர்த்தியாயினை-எ-று.

இருமையி னொருமையும்-என்றது. சத்திசிவங்களா யிருந்துள்ள இரண்டுமொன்றாய் அர்த்தநாரீசுவரனாயிருந் துள்ளதை-எ-று.

ஒருமையின் பெருமை - என்றது. தானேயொரு எல்லையில்லாத சிவமாயிருந்துள்ள தை-எ-று.

மறுவிலாமறையோர் கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை கழுமலமுதுபதிக கவு ணியனறியும்-என்றது. மறுவற்ற பிர்மவமிசத்தில் தோன்றித் தீக்கைகளாலே மலத்தைக கழுவப்பட்ட கவுணியர் கோத்திரத்திலேவந்த சீகாழிப்பிள்ளை கட்டுரையை விரும்பிக்கழு மலமென்கின்ற முதுபதியிலே யெழுந்தருளினை. கம்மெனகின்ற பிரயசிரசிலே உன்கின றவனே அறியும்-எ-று.

அனையதன்மையையாதலை என்றது. அத்தன்மையாகிய வியல்பினையுடையை யா தலின்-எ-று.

நின்னை நினையவல்லவரில்லை நீணிலத்தே-என்றது. நின்னை நினைக்க வல்லார்களுக்கு ப் பிறப்பில்லை-என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

௨௰ - முற்றது.

திருக்கழுமலம், பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சேவுயருந்திண்கொடியானதிருவடியேசரணென்றுசிறந்தவன்பா
ருவியுலுமங்கையொடுநான்முகனறுன்வழிபட்டநலங்கொள்கோயில்
வாவிதொறும்வண்கமலமுகங்காட்டச்செங்குமுதம்வாய்கள்காட்டக்
காவியிருங்கருங்குவளைகருநெய்தல்கண்காட்டுங்கழுமலமே.

பெருந்தடங்கண்செந்துவர்வாய்ப்பிடுடையமலைச்செல்விபிரியாமேனி
யருந்தகையசுண்ணவெண்ணீறலங்கரித்தானமரர்தொழவமருங்கோயி

றருந்தடக்கைமுத்தழலோர்மனைகடொறுமிறைவனதுதன்மைபாடிக்
கருந்தடங்கண்ணார்கழல்பந்தம்மானைப்பாட்டயருங்கழுமலமே. (௨)

அலங்கன்மலிவானவருந்தானவருமலைகடலைக்கடையப்பூதங்
கலங்கவெழுகடுவிடமுண்டிருண்டமணிகண்டத்தோன்கருதுங்கோயில்
விலங்கலமர்புயன்மறந்துமீன்சனிபுக்கூனசலிக்குங்காலந்தானுங்
கலங்கலிலாமனப்பெருவண்மையுடையமெய்யாவாழ்கழுமலமே. (௩)

பாரிதனைநலிந்தமரர்பயமெய்தச்சயமெய்தும்பரிசுவெம்மைப்
போரிசையும்புரமூன்றும்பொன்றவொருசிலைவளைத்தோன்பொருந்துங்கோயில்
வாரிசைமென்முலைவடவார்மாளிகையின்சூளிகைமேன்மகப்பாராட்டக்
காரிகையும்விசும்பியங்குங்கணங்கேட்டுமகிழ்வெய்துங்கழுமலமே. (௪)

ஊர்கின்றவரவமொளிவிடுதிங்களொடுவன்னிமத்தமன்னு
நீர்நின்றகங்கைநகுவெண்டலைசேர்செஞ்சடையோனிகழுங்கோயி
லேர்தங்குமலர்நிலவியிசைவெள்ளிமலையெனநிலவிநின்ற
கார்வண்டின்கணங்களாற்கவின்பெருகுசுதைமாடக்கழுமலமே. (௫)

தருஞ்சாதந்தந்தருளென்றடிநினைந்துதழலணைந்துதவங்கள்செய்த
பெருஞ்சதுரர்பெயலாக்கும்பீடார்தோழமையளித்தபெருமான்கோயி
லரிந்தவயலரவிந்தமதுவுகுப்பவதுகுடித்துக்களித்துவாளை
கருஞ்சகடமிளகவளர்கரும்பிரியவகம்பாயுங்கழுமலமே. (௬)

புவிமுதலைம்பூதமாய்ப்புலனைந்தாய்நிலனைந்தாய்க்கரணநான்கா
யவையவைசேர்பயனுருவாயல்லவுருவாய்நின்றானமருங்கோயி
றவமுயல்வோர்மலர்பறிப்பத்தாழவிடுகொம்புதைப்பக்கொக்கின்காய்கள்
கவணெறிகற்போற்சுனையிற்கரைசேரப்புள்ளிரியுங்கழுமலமே. (௭)

அடல்வந்தவானவரையழித்துலகுதெழித்துழலுமரக்கர்கோமான்
மிடல்வந்தவிருபதுதோணெரியவிரற்பணிகொண்டோன்மேவுங்கோயில்
நடவந்தவுழவரிதுநடவொணாவகைபரலாய்த்தென்றுதுன்று
கடல்வந்தசங்கீன்றமுத்துவயற்கரைகுவிக்குங்கழுமலமே. (௮)

பூமகடன்கோனயனும்புள்ளினொடுகேழலுருவாகிப்புக்கிட்
டாமளவுஞ்சென்றுமுடியடிகாணாவகைநின்றானமருங்கோயில்
பாமருவுங்கலைப்புலவோர்பனமலர்கள்கொண்டணிந்துபரிசினாலே
காமனைகள்பூரித்துக்களிகூர்ந்துநின்றேத்துங்கழுமலமே. (௯)

குணமின்றிப்புத்தர்களும்பொய்த்தவத்தைமெய்த்தவமாநின்றுகையி
லுண்ணன்மருவுஞ்சமணர்களுமுணராதவகைநின்றானுறையுங்கோயின்
மணமருவும்வதுவையொலிவிழவினொலியிவையிசையமண்மேற்றேவர்
கணமருவுமறையினொலிகீழ்ப்படுக்கமேற்படுக்குங்கழுமலமே. (௰)

கற்றவர்கள்பணிந்தேத்துங்கழுமலத்துளீசன்றன்கழன்மேனல்லோர்
நற்றுணையாம்பெருந்தன்மைஞானசம்பந்தன்றானயந்துசொன்ன
சொற்றுணையோரைந்திரண்டிவைவல்லார்தூமலராடுணைவராகி
முற்றுலகமதுவாண்டுமுக்கணனடிசேரமுயல்கின்றாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு, பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்கணடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (க)

விடலேறுபடநாகமரைக்கசைத்துவெற்பரையன்பாவையோடு
மடலேறொன்றதுவேறியஞ்சொலீரபலியென்னுமடிகள்கோயில்
கடலேறித்திரைமோதிக்காவிரியினுடன்வந்துகங்குல்வைகித்
திடலேறிச்சுரிசங்கஞ்செழுமுத்தங்கீன்றலைக்குந்திருவையாறே. (உ)

கங்காளர்கயிலாயமலையாளர்கானப்பேராளர்மங்கை
பங்காளர்திரிசூலப்படையாளர்விடையாளர்பயிலுங்கோயில்
கொங்காளப்பொழினுழைந்துகூர்வாயாலிறகுலர்த்திக்கூதனீங்கிச்
செங்கானல்வெண்குருகுபைங்கானலிரைதேருந்திருவையாறே. (௩)

ஊன்பாயுமுடைதலைகொண்டேரூரின்பலிக்குழல்வாருமையாள்பங்கர்
தான்பாயும்விடையேறுசங்கரனார்தழலுருவர்தங்குங்கோயில்
மான்பாயவயலருகேமரமேறிமந்திபாய்மடுக்கடோறுந்
தேன்பாயமீன்பாயச்செங்கமலமொட்டலருந்திருவையாறே. (௪)

நீரோடுகூவிளமுநிலாமதியும்வெள்ளெருக்குநிறைந்தகொன்றைத்
தாரோடுதண்கரந்தைசடைக்கணிந்ததத்துவனார்தங்குங்கோயில்
காரோடிவிசும்பளந்துகடிநாறும்பொழிலணைந்தகமழ்தார்வீதித்
தேரோடுமரங்கேறிச்சேயிழையார்நடம்பயிலுந்திருவையாறே. (௫)

வேந்தாகிவிண்ணவர்க்குமண்ணவர்க்குநெறிகாட்டும்விகிர்தனாகிப்
பூந்தாமநறுங்கொன்றைச்சடைக்கணிந்தபுண்ணியனார்நண்ணுங்கோயில்
காந்தாரமிசையமைத்துக்காரிகையார்பண்பாடக்கவினார்வீதித்
தேந்தாமென்றரங்கேறிச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௬)

நின்றுலாநெடுவிசும்பினெருக்கிவருபுரமூன்றுநீள்வாயம்பு
சென்றுலாம்படிதொட்டசிலையாளிமலையாளிசேருங்கோயில்
குன்றெலாங்குயில்கூவக்கொழும்பிரசமலர்பாய்ந்துவாசமல்கு
தென்றலாரடிவருடச்செழுங்கரும்புகண்வளருந்திருவையாறே. (௭)

அஞ்சாதேகயிலாயமலையெடுத்தவரக்கர்கோன்றலைகள்பத்து
மைஞ்சாடுதோணெரியவடர்த்தவனுக்கருள்புரிந்தமைந்தர்கோயி
லிஞ்சாயலிளந்தெங்கின்பழம்வீழவிளமேதியிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக்கதிருழக்கிச்செங்கமலவயல்படியுந்திருவையாறே. (௮)

மேலோடிவிசும்பணவிவியனிலத்தைமிகவகழ்ந்துமிக்குநாடு
மாலோடுநான்முகனுமறியாதவகைநின்றான்மன்னுங்கோயில்
கோலோடக்கோல்வளையார்கூத்தாடக்குவிமுலையார்முகத்தினின்று
சேலோடச்சிலையாடச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௯)

குண்டாடுகுற்றுடுக்கைச்சமணரொடுசாக்கியருங்குணமொன்றில்லா
மிண்டாடுமிண்டருரைகேளாதேயாளாமின்மேவித்தொண்ட
ரெண்டோளர்முக்கண்ணரெம்பீசரிறைவரினிதமருங்கோயில்
செண்டாடுபுனற்பொன்னிச்செழுமணிகள்வந்தலைக்குந்திருவையாறே. (௧௦)

அன்னமலிபொழில்புடைசூழையாற்றெம்பெருமானையந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாட
லின்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்க
டன்னிசையோடமருலகிற்றவநெறிசென்றெய்துவாரதாழாதன்றே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம், பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விரும்புநால்வே
தத்தாலுமறிவொண்ணாநடைதெளியப்பளிங்கேபோலரிவைபாக
மொத்தாறுசமயங்கட்கொருதலைவனகருதுமூருலவுதெண்ணீர்
முத்தாறுவெதிருதிரநித்திலம்வாரிக்கொழிக்குமுதுகுன்றமே. (௧)

வரிமிகுகுழலியொடுவேடுவனாய்வெங்கானில்விசையன்மேவு
பாரின்மிகுபொறையளந்துபாசுபதம்புரிந்தளித்தபுராணர்கோயில்
ாரின்மலிகடிபொழில்கள்கனிகள்பலமலருதிர்த்துக்கயமுயங்கி
ுரிவளங்கிளர்தென்றற்றிருமுன்றிற்புகுந்துலவுமுதுகுன்றமே. (௨)

க்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி
க்கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில்
காக்கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குவைகொள்சோலை
றக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே. (௩)

வம்மைமிகுபுரவாணர்மிகைசெய்யவிறலழிந்துவிண்ணுளோர்கள்
சம்மலரோனிந்திரன்மால்சென்றிரப்பத்தேவர்களேதேரதாக
மமருவுமேருவில்லுமாசுணநாணரியெரிகால்வாளியாக
ம்மதிலுநொடியளவிற்பொடிசெய்தமுதல்வனிடமுதுகுன்றமே. (௪)

இழைமேவுகலையல்குலேந்திழையாளொருபாலாயொருபால்வெள்ளை
யுழைமேவுமுரியுடுத்தவொருவனிருப்பிடமென்பரும்பரோங்கு
கழைமேவுமடமந்திமழைகண்டுமகவினொடுபுகவொண்கல்லின்
முழைமேவுமாலானையிரைதேரும்வளர்சாரன்முதுகுன்றமே. (ரு)

நகையார்வெண்டலைமாலைமுடிக்கணிந்தநாதனிடநன்முத்தாறு
வகையாரும்வரைப்பண்டங்கொண்டிரண்டுகரையருகுமறியமோதித்
தகையாரும்வரம்பிடறிச்சாலிகழுநீர்குவளைசாயப்பாய்ந்து
முகையார்செந்தாமரைகண்முகமலரவயறழுவுமுதுகுன்றமே. (சா)

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்திலொன்றறுத்தநிமலர்கோயில்
திறங்கொண்மணித்தரளங்கள்வரத்திரண்டங்கெழிற்குறவர்சிறுமிமார்கண்
முறங்களினாற்கொழித்துமணிசெலவிலக்கிமுத்துலைப்பெய்முதுகுன்றமே. (எ)

கதிரொளியநெடுமுடிபத்துடையகடலிலங்கையர்கோன்கண்ணும்வாயும்
பிதிரொளியகனல்பிறங்கப்பெருங்கயிலைமலையைநிலைபெயர்த்தஞான்று
மதிலளகைக்கிறைமுரலமலரடியொன்றூன்றிமறைபாடவாங்கே
முதிரொளியசுடர்நெடுவாண்முன்னீந்தானவாய்ந்தபதிமுதுகுன்றமே. (அ)

பூவார்பொற்றவிசினமிசையிருந்தவனும்பூந்துழாய்புனைந்தமாலு
மோவாதுகழுகேனமாயுயர்ந்தாழ்ந்துறநாடியுண்மைகாணாத்
தேவாருந்திருவுருவன்சேருமலைசெழுநிலத்தைமூடவந்த
மூவாதமுழங்கொலிநீர்கீழ்தாழமேலுயர்ந்தமுதுகுன்றமே. (கூ)

மேனியிற்சீவரத்தாரும்விரிதருகட்டுடையாரும்விரவலாகா
வூனிகளாயுள்ளார்சொற்கொள்ளாதுமுள்ளுணர்ந்தங்குய்யின்றொண்டீர்
ஞானிகளாயுள்ளார்களான்மறையைமுழுதுணர்ந்தைம்புலன்கள்செற்று
மோனிகளாய்முனிச்செல்வர்தனித்திருந்துதவம்புரியுமுதுகுன்றமே. (க0)

முழங்கொலிநீர்முத்தாறுவலஞ்செய்யுமுதுகுன்றத்திறையைமூவாப்
பழங்கிழமைப்பன்னிருபேர்படைத்துடையகழுமலமேபதியாக்கொண்டு
தழங்கெரிமூன்றோம்புதொழிற்றமிழ்ஞானசம்பந்தனசமைத்தபாடல்
வழங்குமிசைகூடும்வகைபாடுமவர்நீடுலகமாள்வர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை, பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஏரிசையும்வடவாலின்கீழிருந்தங்கோரிருவர்க்கிறங்கிநின்று
நேரியனான்மறைப்பொருளையுரைத்தொளிசேர்நெறியளித்தோனின்றகோயில்
பாரிசையும்பண்டிதர்கள்பன்னாளும்பயின்றோதுமோசைகேட்டு
வேரிமலிபொழிற்கிள்ளைவேதங்கள்பொருட்சொல்லுமிழலையாமே. (க)

பொறியரவமதுசுற்றிப்பொருப்பேமத்தாகப்புத்தேளிர்கூடி
மறிகடலைக்கடைந்திட்டவிடமுண்டகண்டத்தோன்மன்னுங்கோயில் [செல்
செறியிதழ்த்தாமரைத்தவிசிற்றிகழ்ந்தோங்கு மிலைக்குடைக்கீழ்ச்செய்யார்செங்
வெறிகதிர்ச்சாமரையிரட்டவிளவன்னம்வீற்றிருக்குமிழலையாமே. (௨)

எழுந்துலகைநலிந்துழலுமவுணர்கடம்புரமூன்றுமெழிற்கணுடி [ல்
யுழுந்துருளுமளவையினொள்ளெரிகொளவெஞ்சிலைவளைத்தோனுறையுங்கோயி
கொழுந்தரளநகைகாட்டக்கோகநகமுகங்காட்டக்குதித்துநீர்மேல்
விழுந்தகயல்விழிகாட்டவிற்பவளம்வாய்காட்டுமிழலையாமே. (௩)

உரைச்சேருமெண்பத்துநான்குநூறாயிரமாம்யோனிபேத
நிரைச்சேரப்படைத்தவற்றினுயிர்க்குயிராயங்கங்கேநின்றான்கோயில்
வரைச்சேருமுகின்முழவமயில்கள்பலநடமாடவண்டுபாட
விரைச்சேர்பொன்னிதழிதரமெனகாந்தள்கையேற்குமிழலையாமே. (௪)

காணுமாறரியபெருமானாகிக்காலமாய்க்குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன்றுருவாகிப்பேருலகம்படைத்தளிக்கும்பெருமான்கோயி
றாணுவாய்நின்றபரத்துவனையுத்தமனையிறைஞ்சீரென்று
வேணுவார்கொடிவிண்ணோர்தமைவிளிப்பபோலோங்குமிழலையாமே. (௫)

அகனமர்ந்தவன்பினராயறுபகைசெற்றைம்புலனுமடக்கிஞானப்
புகலுடையோர்தம்முள்ளப்புண்டரிகத்துள்ளிருக்கும்புராணர்கோயி
றகவுடைநீர்மணித்தலத்துச்சங்குளவர்க்கந்திகழச்சலசத்தீயுண்
மிகவுடையபுன்குமலர்ப்பொரியட்டமணஞ்செய்யுமிழலையாமே. (௬)

ஆறுசடைமுடியனனலாடுமலர்க்கையனிமயப்பாவை
கூறுதிருவுருவன்கூத்தாடுகுணமுடையோன்குளிருங்கோயில்
சேறுசெங்கழுநீர்த்தாதாடிமதுவுண்டுசிவந்தவண்டு
வேறாயவுருவாகிச்செவ்வழிநற்பண்பாடுமிழலையாமே. (௭)

கருப்பமிகுமுடலடர்த்துக்காலூன்றிக்கைமறித்துக்கயிலையென்னும்
பொருப்பெடுக்கலுறுமரக்கன்பொன்முடிதோணெரித்தவிரற்புனிதர்கோயி
றருப்பமிகுசலந்தரன்றனுடறடிந்தசக்கரத்தைவேண்டியீண்டு
விருப்பொடுமால்வழிபாடுசெய்யவிழிவிமானஞ்சேர்மிழலையாமே. (௮)

செந்தளிர்மாமலரோனுந்திருமாலுமேனமோடன்னமாகி
யந்தமடிகாணாதேயவரேத்தவெளிப்பட்டோனமருங்கோயில்
புந்தியினான்மறைவழியேபுற்பரப்பிநெய்சமிதைகையிற்கொண்டு
வெந்தழலின்வேட்டுலகின்மிகவளிப்போர்சேருமூர்மிழலையாமே. (௯)

எண்ணிறந்தவமணர்களுமிழிதொழில்சேர்சாக்கியருமென்றுந்தன்னை
நண்ணரியவகைமயக்கித்தன்னடியார்க்கருள்புரியுநாதன்கோயில்
பண்ணமருமென்மொழியார்பாலர்களைப்பாராட்டுமோசைகேட்டு
விண்ணவர்கள்வியப்பெய்திவிமானத்தோடும்மிழியுமிழலையாமே. (௧௦)

மின்னியலுமணிமாடமிடைவீழிமிழலையான்விரையார்பாதஞ்
சென்னிமிசைகொண்டொழுகுஞ்சிரபுரக்கோன்செழுமறைகள்பயிலுநாவன்
பன்னியசீர்மிகுஞானசம்பந்தன்பரிந்துரைத்தபத்துமேத்தி
யின்னிசையாற்பாடவல்லாரிருநிலத்திலீசனெனுமியல்பினோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம், பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்பொடிப்பூசுமார்பினவிரிநூலொருபால்பொருந்தக்
கந்தமல்குகுழலியொடுங்கடிபொழிற்கச்சிதன்னு
ளந்தமில்குணத்தாரவர்போற்றவணங்கினோடாடல்புரி
யெந்தைமேவியவேகம்பந்தொழுதேத்தவிடர்கெடுமே. (க)

வரந்திகழுமவுணர்மாநகர்மூன்றுடன்மாய்ந்தவியச்சரந்
துரந்தெரிசெய்ததாழ்சடைச்சங்கரன்மேயவிடங்
குருந்தமல்லிகைகோங்குமாதவிநல்லகுராமரவந்
திருந்துபைம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (உ)

வண்ணவெண்பொடிப்பூசிமார்பின்வரியரவம்புனைந்து
பெண்ணமர்ந்தெரியாடல்பேணியபிஞ்ஞகனமேயவிடம்
விண்ணமர்நெடுமாடமோங்கிவிளங்கியகச்சிதன்னுட்
டிண்ணமாம்பொழிற்சூழ்ந்தவேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (ங)

தோலுநூலுந்துதைந்தவரைமார்பிற்சுடலைவெண்ணீறணிந்து
காலன்மாள்வுறக்காலாற்காய்ந்தகடவுள்கருதுமிட
மாலைவெண்மதிதோயுமாமதிற்கச்சிமாநகரு
ளேலநாறியசோலைசூழேகம்பமேத்தவிடர்கெடுமே. (ச)

தோடணிமலர்க்கொன்றைசேர்சடைதூமதியம்புனைந்து
பாடலான்மறையாகப்பல்கணப்பேய்களவைசூழ
வாடல்வெண்டலையோடனலேந்திமகிழ்ந்துடனாடல்புரி
சேடர்சேர்கலிக்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (ரு)

சாகம்பொன்வரையாகத்தானவர்மும்மதில்சாயவெய்
தாகம்பெண்ணொருபாகமாகவரவொடுநூலணிந்து
மாகந்தோய்மணிமாடமாமதிற்கச்சிமாநகரு
ளேகம்பத்துறையீசன்சேவடியேத்தவிடர்கெடுமே. (சா-எ)

வாணிலாமதிபுல்குசெஞ்சடைவாளரவம்மணிந்து
நாணிடத்தினில்வாழ்க்கைபேணிநகுதலையிற்பலிதேர்ந்
தேணிலாவரக்கன்றனீண்முடிபத்துமிறுத்தவனூர்
சேணுலாம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (அ)

பிரமனுந்திருமாலுங்கைதொழப்பேரழலாயபெம்மா
னரவஞ்சேர்சடையந்தணனணங்கினோடமருமிடங்
கரவில்வண்கையினார்கள்வாழ்கலிக்கச்சிமாநகருண்
மரவஞ்சூழ்பொழிலேகம்பந்தொழவல்வினைமாய்ந்தறுமே. (௯)

குண்டுபட்டமணாயவரொடுங்கூறைதம்மெய்போர்க்கு
மிண்டர்கட்டியகட்டுரையவைகொண்டுவிரும்பேன்மின்
விண்டவர்புரமூன்றும்வெங்கணையொன்றினாலவியக்
கண்டவன்கலிக்கச்சியேகம்பங்காணவிடர்கெடுமே. (௧௦)

ஏரினார்பொழில்சூழ்ந்தகச்சியேகம்பமேயவனைக்
காரினார்மணிமாடமோங்குகழுமலநன்னகருட்
பாரினார்தமிழ்ஞானசம்பந்தன்பரவியபத்தும்வல்லார்
சீரினார்புகழோங்கிவிண்ணவரொடுஞ்சேர்பவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பறியலூர்-திருவீரட்டம், பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனலேந்தியாடு
நிருத்தன்சடைமேனிரம்பாமதியன்
றிருத்தமுடையார்திருப்பறியலூரில்
விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே. (௧)

மருந்தனமுதன்மயானத்துண்மைந்தன
பெருந்தண்புனற்சென்னிவைத்தபெருமான
றிருந்துமறையோர்திருப்பறியலூரில்
விரிந்தமலாச்சோலைவீரட்டத்தானே. (௨)

குளிர்ந்தார்சடையன்கொடுஞ்சிலைவிற்காமன்
விளிந்தானடங்கவீந்தெய்தசெற்றான்
றெளிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
மிளிர்ந்தார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (௩)

பிறப்பாதியில்லான்பிறப்பார்பிறப்புச்
செறப்பாதியந்தஞ்செலச்செய்யுந்தேசன்
சிறப்பாடுடையார்திருப்பறியலூரில்
விறற்பாரிடஞ்சூழ்ந்தவீரட்டத்தானே. (௪)

கரிந்தாரிடுகாட்டிலாடுங்கபாலி
புரிந்தார்படுதம்புறங்காட்டிலாடுந்
தெரிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
விரிந்தார்பொழிற்சோலைவீரட்டத்தானே. (௫)

அரவூற்றநாணலனலம்பதாகச்
செருவுற்றவர்புரந்தீயெழச்செற்றான்
றெருவிற்கொடிசூழ்திருப்பறியலூரில்
வெருவுற்றவர்தொழும்வீரட்டத்தானே. (௬)

நரையார்விடையானலங்கொள்பெருமா
னரையாரரவம்மழகாவசைத்தான்
றிரையார்புனல்சூழ்திருப்பறியலூரில்
விரையார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (௭)

வளைக்குமெயிற்றினரக்கன்வரைக்கீ
ழிளைக்கும்படிதானிருந்தேழையன்னக்
கிளைக்கும்படுகற்றிருப்பறியலூரில்
விளைக்கும்வயல்சூழ்ந்தவீரட்டத்தானே. (௮)

வளங்கொண்மலர்மேலயனோதவண்ணன்
றுளங்குமனத்தார்தொழத்தழலாய்நின்று
ளிளங்கொம்பனாளோடிணைந்தும்பிணைந்தும்
விளங்குந்திருப்பறியல்வீரட்டத்தானே. (௯)

சடையன்பிறையன்சமண்சாக்கியரோ
டடையன்பிலாதானடியார்பெருமா
னுடையன்புலியினுரிதோலரைமேல்
விடையன்றிருப்பறியல்வீரட்டத்தானே. (௰)

கறுநீருகுங்காழிஞானசம்பந்தன்
வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானைப்
பொறிநீடரவன்புனைபாடல்வல்லார்க்
கறுநீடவலமறும்பிறப்புத்தானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பராய்த்துறை, பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை, கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை, யாறுசேர்சடையண்ணலே. (௧)

கந்தமாமலர்க்கொன்றைகமழ்சடை, வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை,யந்தமில்லவடிகளே. (௨)

வேதர்வேதமெல்லாமுறையால்விரித், தோதநின்றவொருவனார்
பாதிபெண்ணுருவாவர்பராய்த்துறை, யாதியாயவடிகளே. (௩)

தோலுந்தம்மரையாடைசுடர்விடு, நூலுந்தாமணிமார்பினர்
பாலுநெய்பயின்றாடுபராய்த்துறை, யாலநீழலடிகளே. (௪)

விரவிநீறுமெய்பூசுவர்மேனிமே, லிரவினின்றெரியாடுவர்
பரவினாரவர்வேதம்பராய்த்துறை, யரவமார்த்தவடிகளே. (௬)

மறையுமோதுவர்மான்மறிக்கையினர், கறைகொள்கண்டமுடையவர்
பறையுஞ்சங்குமொலிசெய்பராய்த்துறை, யறையநின்றவடிகளே. (௭)

விடையுமேறுவர்வெண்பொடிப்பூசுவர், சடையிற்கங்கைதரித்தவர்
படைகொள்வெண்மழுவாளர்பராய்த்துறை, யடையநின்றவடிகளே. (௮)

தருக்கின்மிக்கதசக்கிரீவன்றனை, நெருக்கினார்விரலொன்றினாற்
பருக்கினாரவர்போலும்பராய்த்துறை, யருக்கனாற்றனையடிகளே. (௯)

நாற்றமாமலரானொடுமாலுமாய்த், தோற்றமுமறியாதவர்
பாற்றினார்வினையானபராய்த்துறை, யாற்றனமிக்கவடிகளே. (௧௦)

திருவிலிச்சிலதேரமணாதர்க, ளுருவிலாவுரைகொள்ளேலும்
பருவிலாலெயிலெய்துபராய்த்துறை, மருவினானறனைவாழ்த்துமே. (௧௦)

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறை, செல்வமேற்சிதையாதனா
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ், செல்வமாமிவைசெப்பவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பராய்த்துறைநாதவீசுவரர், தேவியார்-பொன்மயிலாம்பிகையம்மை.

திருத்தருமபுரம், பண்-யாழ்மூரி.

திருச்சிற்றம்பலம்

மாதர்மடப்பிடியு-மட- வன்னமுமன்னதோர - நடையுடைம்மலைமகடுணை யெனமகிழ்வர், பூதவினப்படைநின-றிசை-பாடவுமாடுவ ரவாபடர்சடைநெடு-முடியதோர்புனலர், வேதமோடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை யிரைந் நுரைகரைபொருது-விம்மிநின்றயலே, தாதவிழ்புன்னைதயங்-கும-லர்ச்சிறைவ ண்டறை-யெழில்பொழில்குயில்பயில்-தருமபுரமபதியே. (௧)

பொங்குநடைப்புகலில்-விடை-யாமவருாதிவெண் - பொடியணிதடங்கொ ண்மார்பு-பூணநூல்புரள, மங்குலிடைத்தவழு-மதி-சூடுவராடுவர்-வளங்கிளர்பு னலரவம்-வைகியசடையர், சங்குகடற்றிரையா-லுதை-யுண்டுசரிந்திரிந்-தொசிந் தசைந்திசைந்துசேரும்-வெண்மணற்குவைமேற், றங்குசதிர்ம்மணிநித்-தில-மெ ல்லிருளொல்கநின்-றிலங்கொளிநலங்கெழிற்-றருமபுரம்பதியே. (௨)

விண்ணுறுமால்வரைபோல்-விடை-யேறுவராறுகூ - டேர்விரிசுரியொளி கொள்-தோடுநின்றிலங்கக், கண்ணுறநின்றொளிரும்-கதிர்-வெண்மதிக்கண்ணிய ர்-கழிந்தவர்ழிந்தம்-முடைதலைகலனாப், பெண்ணுறநின்றவர்தம்-முரு - வம்மய ன்மால்தொழ-வரிவையைப்பிணைந்திணைந்-தணைந்ததும்பிரியார், தண்ணுதிழ்பூ

ல்லையொடெண் - ணிதழ்-மவ்வன்மருங்கலர்-கருங்கழிந்நெருக்குறும் -றருமபுரம் பதியே. (௩)

வாருறுமென்முலைநன்-னுத லேழையோடாடுவர் - வளங்கிளர்விளங்குதிங்கள்-வைகியசடையர், காருறநின்றலரும்-மலர்க்-கொன்றையங்கண்ணியர்-கடுவிடைகொடிவெடிகொள்-காடுறைபதியர், பாருறவிண்ணுலகம-பர-வப்படுவோரவர்-படுதலைப்பலிகொளல்-பரிபவந்நினையார், தாருறுநல்லரவம்-மலர்-துன்னியதாதுதிர்-தழைபொழில்மழைந்துழை-தருமபுரம்பதியே. (௪)

நேருமவர்க்குணரப்-புகி-லில்லைநெடுஞ்சடைக்- கடும்புனல்படர்ந்திடப்-படுவதோர்நிலையர், பேருமவர்க்கெனையா-யிர-முன்னைப்பிறப்பிறப்- பிலாதவருடற்றடாத-பெற்றியராரறிவா, ராரமவர்க்கழல்வா - யதோர்-நாகமழ்குற - வெழும்கொளுமலர்கொள்பொன-னிதழிநல்லலங்கல், தாரமவர்க்கிமவான்-மக ளூர்வதுபோர்விடை-கடிபடுசெடிபொழிற்-றருமபுரம்பதியே. (௫)

கூழையங்கோதைகுலா-யவ-டம்பிணைபுல்கமல்- குமென்முலைப்பொதிகொள்பொற்-கொடியிடைதுவர்வாய், மாழையொண்கண்மடவா - ளையோர்-பாகமகிழ்ந்தவர்-வலம்மலிபடைவிடை-கொடிகொடும்மழுவாள், யாழையுமெள்கிடவே-ழிசை-வண்டுமுரன்றினங்-துவன்றிமென்சிறகறை-யுறந்நறவ்விரியுநற், குழையுஞாழலுநீ-டிய-கானலிலள்ளலி-சைபுள்ளினந்துயில்பயில்-தருமபுரம்பதியே.(௬)

தேமருவார்குழ-லன்ன-நடைப்பெடைமான்விழித்-திருந்திழை பொருந்துமேனி-செங்கதிர்விரியத், தூமருசெஞ்சடையிற்-றுதை-வெண்மதிதுன்றுகொன்றை-தொலைபுனல்கிரங்கரந-திரிந்ததோலுடையர், காமருதண்கழிநீ-டிய-கானல்கண்டகங்-கடல்லடைகழியிழிய முண்டகத்தயலே, தாமரைசேர்குவளைப்-படு-கிற்கழுநீர்மலர்-வெறிகமழ்செறிவயற்-றருமபுரம்பதியே. (௭)

தூவணநீறகலம்-பொலி-யவ்விரைபுல்கமல்-குமென்மலர்விரைபுரை-திரள்புயம்மணிவர், கோவணமும்முழையின-னத-ளும்முடையாடையர்-கொலைமலிபடையோர்சூல-மேந்தியகுழகர், பாவணமாவலறத் தலை - பத்துடையவ்வரக்க-னவ்வலியோர்கவ்வைசெய்-தருள்புரிதலைவர், தாவணவேறுடையெம்-மடி-கட்கிடம்வன்றடங்-கடல்லிடுந்தடங்கரைத்-தருமபுரமபதியே (௮)

வார்மலிமென்முலைமா-தொரு-பாகமதாகுவர்-வளங்கிளர்மதியரவம்-வைகியசடையர், கூர்மலிசூலமும்வெண்-மழு-வும்மவர்வெல்படை-குனிசிலைதனிமலைய-தேந்தியகுழகர், ஆர்மலியாழிகொள்செல்-வனு-மல்லிகொடாமரைம்- மிசையவனடிம்முடி-யளவுதாமறியார், தார்மலிகொன்றையலங்-கலு - கந்தவர்தங்கிடங்-தடங்கடல்லிடுந்திரைத்-தருமபுரம்பதியே (௯)

புத்தர்கடத்துவர்மொய்த்-துறி-புல்கியகையர்பொய்- மொழிந்தழிவில்பெற்றியுற்ற, நற்றவர்புலவோர், பத்தர்களத்தவமெய்ப்-பய-னுகவுகந்தவர்-நிகழ்ந்தவ

ர்சவந்தவர்-சுடலைப்பொடியணிவர், முத்தனவெண்ணகையொண் - மலைமாது
மைபொன்னணி-புணர்முலையிணை துணை-யணைவதும்பிரியார், தத்தருவித்திரளு
ந்-திய-மால்கடலோதம்வந்-தடர்ந்திடுந்தடம்பொழிற்-றருமபுரம்பதியே. (௧௦)

பொன்னெடுநன்மணிமா-ளிகை-சூழ்விழவம்மலி-பொருபுனல்திருவமர்-புக
லியென்றுலகிற், றன்னொடுநேர்பிறவில்-பதி-ஞானசம்பந்தனஃ - துசெந்தமிழ்த்த
டங்கடற்-றருமபுரம்பதியைப், பின்னெடுவார்சடையிற்-பிறை-யும்மரவும்முடை
யவன்பிணை துணைகழல்கள்-பேணுத லுரியார், ரின்னெடுஞானுலகெய்-துவ- ரெய்
தியபோகமு-முறுவர்களிடர்பிணி-துயரணைவிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

முத்தமிழ்விரகர்-முதற்றிருமுறைபோற்றி.

ஆக - திருக்கடைக்காப்பு - ௱௩௬.

முதற்றிருமுறை முற்றிற்று.

திருவெழு கூற்றிருக்கையில் - வெங்குருவுளங்கினை எனபதற்கு தேவகுருவினால் பூசிக்கப்பட்டதென்று உரையிலிருக்கின்றது. சீகாழிப்புராணத்தில்-வெங்குருவான அத்தியாயத்தில், அசுரகுருபூசித்ததாக சொல்லப்படுகின்றது. இங்ஙன மிருக்கின்றமையால் உரைகாரர் புராணத்தின்படி யெழுதியிருந்தது, பிற்கால மொன்றைப்பார்த் தொன்றெழுதினவர்களால் பிறழ்ந்துவிட்டதோ யாதோ தெரியவில்லை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாந்திருமுறையின்

பதிக அட்டவணை.

...ப்பெயர்.	பக்கம்.
பண்-இந்தளம்.	
...ப்பூந்தராய் ...	கசுக
...வலஞ்சுழி ...	கசுஉ
...த்தெளிச்சேரி ...	கசுச
...வான்மியூர் ...	கசுரு
...வனேகதங்காபதம் ...	கசுசு
...வையாறு ...	...கசுஅ
...வாஞ்சியம் ...	கசு[illegible]
...ச்சிக்கல் ...	...உ[illegible]
...மழபாடி ...	...உ[illegible]
...மங்கலக்குடி	...0ங
...ழி ...	...உ0ரு
...வகம்பம் ...	உ0சு
...றமபம ...	உ0எ
...வண்ணி ...	உ0கூ
...காறாயில் ...	...உக0
...மணஞ்சேரி ...	உகக
...வேணுபுரம ...	உகங
...ருகல்-விடந்தீர்த்த திருப்பதிகம்	உகங
...நல்லிக்கா ...	உகரு
...ழுந்தூர் ...	...உகசு
...கழிப்பாலை ...	உகஎ
...டவாயில் ...	உகஅ
...ரக்கா ...	உஉ0
...மீகச்சரம் ...	...உஉக
...புகலி ...	...உஉஉ
...நல்வாயில் ...	உஉஉ
...ந்திரநீலபருப்பதம் ...	உஉங
...ருவூர்த்திருஆனிலை ...	உஉச
...கலி-திருவிராகம் ...	உஉரு
...பயம்-திருவிராகம் ...	உஉசு
...யலூர்-திருவி...	

பதிகப்பெயர்	பக்கம்.
திருவையாறு-திருவிராகம் ...	உஉகூ
திருநள்ளாறு-திருவிராகம் ...	உங0
திருப்பழுவூர்-திருவிராகம் ...	உஙஉ
திருக்குரங்காடுதுறை ...	உஙங
திருஇரும்பூளை-வினாவுரை ...	உஙச
திருமறைக்காடு-கதவடைக்கப்பாடியது	உஙரு
திருச்சாய்க்காடு ...	உஙஎ
திருக்ஷேத்திரக்கோவை ...	உஙஅ
பண்-சீகாமரம்.	
திருப்பிரமபுரம் ...	உச0
திருச்சாய்க்காடு ...	உசக
திருஆக்கூர் ...	உசங
திருப்புள்ளிருக்குவேளூர் ...	உசச
திருஆமாத்தூர் ...	உசரு
திருக்கைச்சினம் ...	உசஎ
திருநாலூர்த்திருமயானம் ...	உசஅ
திருமயிலாப்பூர்-பூம்பாவைத் திருப்பதிகம்	உசகூ
திருவெண்காடு ...	உருக
சீகாழி ...	...உருஉ
திருஆமாத்தூர் ...	உருங
திருககளர் ...	...உருரு
திருக்கோட்டாறு ...	...உருசு
திருப்புறவார்-பனங்காட்டூர் ...	உருஅ
பண்-காந்தாரம்.	
ஸ்ரீபுகலி ...	...உருகூ
திருத்தலைச்சங்காடு ...	...உசு0
திருவிடைமருதூர் ...	...உசுஉ
திருநல்லூர் ...	...உசுங
திருக்குடவாயில் ...	...உசுச
சீகாழி ...	...உசுரு
திருப்பாசூர் ...	

பதிக அட்டவணை.

	பக்கம்.
..	௨௬௯
...ந்தூர் ...	௨௭௧
....	௨௭௨
...ம... ...	௨௭௩
...லவாய் - திருநீற்றுப்பதிகம்	௨௭௫
திருப்பெரும்புலியூர்... ...	௨௭௬
திருக்கடம்பூர்.. ...	௨௭௮
திருப்பாண்டிக்கொடுமுடி ...	௨௭௯
திருப்பிரமபுரம்-திருச்சக்கரமாற்று	௨௮0
திருக்குறும்பலா... ...	௨௮௨
திருநணா	௨௮௩
திருச்சக்கரமாற்று	௨௮௫
திருக்கோழம்பம்... ...	௨௮௬
சீகாழி...	௨௮௮
திருவகத்தியான்பள்ளி ...	௨௮௯
திருஅறையணிநல்லூர் ...	௨௯௧
திருவிளநகர்	௨௯௨
திருவாரூர்... ...	௨௯௩
திருக்கடவூர்மயானம்... ...	௨௯௫
திருவேணுபுரம்... ...	௨௯௬
திருத்தேவூர்...	௨௯௭

பண்-பியந்தைக்காந்தாரம்

திருக்கொசசைவயம்... ...	௨௯௯
திருநணிபள்ளி - பாலைநெய்தல் பாடியருளியது	௩00
வேயுறுதோளி	௩0௧
திருநாரையூர்...	௩0௩
திருநறையூர்...	௩0௪
திருமுல்லைவாயில்	௩0௬
திருக்கொச்சைவயம்... ...	௩0௭
திருநெல்வாயில்திருவரத்துறை	௩0௮
திருமறைக்காடு	௩௧0
திருபபுகலூர்-வர்த்தமானீச்சரம்	௩௧௧

பதிகப்பெயர்.	பக்க
திருச்செங்கூர்... ...	௩௧
திருவாழ்கொளிபுத்தூர் ...	௩௧
திருஅரைசிலி... ...	௩௧
ஸ்ரீசீகாழி...	௩௧

பண்-நட்டராகம்.

ஸ்ரீசீகாழி-திருவிராகம் ...	௩௧
திருத்துருத்தி... ...	௩௧
திருக்கோடிகாத்திருவிராகம் ...	௩௨
திருக்கோவலூர்வீரட்டம்-திருவிராகம்	௩௨
திருவா...த்-திருவிராகம ...	௩௨
திருச்சிரபுரம	௩௨
திருஅம்பர்த்திருமாகாளம் ...	௩௨
திருக்க குளம்... ...	௩௨
திருக்கீழ்வேளூர்	௩௨
திரு...லந்துறி... ...	௩
திருக்கேதீச்சரம்... ...	௩
திருவிற்குடிவீரட்டானம் ...	௩௩
திருக்கோட்டூ... ...	௩
திரு...மாந்துறை	௩௩
திருவாய்மூர்...	௩
திருஆடானை...	௩

பண்-செவ்வழி.

சீகாழி	௩
திருக்கேதார	௩
திருப்புகலூர்	௩
திருக்கடனாகைக்காரோணம் ...	௩
திருஇரும்பைமாகாளம் ...	௩
திருத்திலதைப்பதி-மதிமுத்தம	௩
திருநாகேச்சரம்.	௩
திருமூக்கீச்சரம்	௩
திருப்பாதிரிப்புலியூர்... ...	௩
ஸ்ரீபுகலி...	

திருச்சிற்றம்ப

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

அடங்கன்முறைத்

தேவாரப்பதிகங்கள்.

இரண்டாந்திருமுறை.

திருப்பூந்தராய் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

செங்கலங்கழனிப்பழனத்தயலேசெழும
புன்னைவெண்கிழியிற்பவளம்புரைபூந்தராய
துன்னிநல்லிமையோர்முடிதோய்கழலீர்சொலீர்
பின்னுசெஞ்சடையிற்பிறைபாம்புடன்வைத்ததே. (௧)

எற்றுதெண்டிரையேறியசங்கினொடிப்பிகள்
பொற்றிகழ்கமலப்பழனம்புகுபூந்தராய்
சுற்றிநல்லிமையோர்தொழுபொற்கழலீர்சொலீர்
பெற்றமேறுதல்பெற்றிமையோபெருமானிரே (௨)

சங்குசெம்பவளத்திரண்முத்தவைதாங்கொடு
பொங்குதெண்டிரைவந்தலைக்கும்புனற்பூந்தராய்
துங்கமால்களிற்றின்னுரிபோர்த்துகந்தீர்சொலீர்
மங்கைபங்கமுமங்கத்தொடொன்றியமாண்பதே. (௩)

சேமவன்மதிற்பொன்னணிமாளிகைசேணுயர்
பூமணங்கமழும்பொழில்சூழ்தருபூந்தராய்
சோமனும்மரவுந்தொடர்செஞ்சடையீர்சொலீர்
காமன்வெண்பொடியாகக்கடைக்கண்சிவந்ததே. (௪)

பள்ளமீனிரைதேர்ந்துழலும்பகுவாயன
புள்ளினங்கடொறுஞ்சேர்பொழில்சூழ்தருபூந்தராய்த்
துள்ளுமான்மறியேந்தியசெங்கையினீர்சொலீர்
வெள்ளநீரொருசெஞ்சடைவைத்தவியப்பதே (௫)

மாதிலங்கியமங்கையராடமருங்கெலாம்
போதிலங்கமலமதுவார்புனற்பூந்தராய்ச்

சோதியஞ்சுடர்மேனிவெண்ணீறணிவீர்சொலீர்
காதிலங்குழைசங்கவெண்டோடுடன்வைத்ததே. (கூ-எ)

வருக்கமார்தருவான்கடுவன்னொடுமந்திகள்
தருக்கொன்சோலைதருங்கனிமாந்தியபூந்தராய்
துரக்குமால்விடைமேல்வருவீரடிகேள்சொலீ
ரரக்கனூற்றலழித்தருளாக்கியவாக்கமே (அ)

வரிகொள்செங்கயல்பாய்புனல்சூழ்ந்தமருங்கெலாம்
புரிசைநீடுயர்மாடநிலாவியபூந்தராய்ச்
சுருதிபாடியபாணியறாமொழியீர்சொலீர்
கரியமாலயனேடியுமைக்கண்டிலாமையே. (கூ)

வண்டலங்கழனிம்மடவாளைகள்பாய்புனற்
புண்டரீகமலர்ந்துமதுத்தருபூந்தராய்த்
தொண்டர்வந்தடிபோற்றிசெய்தொல்கழலீர்சொலீர்
குண்டர்சாக்கியர்கூறியநாவகுறியின்மையே. (க0)

மகரவார்கடல்வந்தணவும்மணற்கானல்வாய்
புகலிஞானசம்பந்தனெழின்மிகுபூந்தராய்ப
பகவனாரைப்பரவுசொன்மாலைபத்துமவல்லா
ரகல்வார்தீவினைநல்வினையோடுடனாவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவலஞ்சுழி, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

விண்டெலாமலரவ்விரைநாறுதண்டேனவிம்மி
வண்டெலாநசையாலிசைபாடும்வலஞ்சுழி
தொண்டெலாம்பரவுஞ்சுடர்போலொளியீர்சொலீர
பண்டெலாம்பலிதேர்ந்தொலிபாடல்பயின்றதே. (க)

பாரல்வெண்குருகும்பகுவாயனநாரையும்
வாரல்வெண்டிரைவாரிநிரைதேருமவலஞ்சுழி
மூரல்வெண்முறுவன்னகுமொய்யொளியீர்சொலீ
ரூரல்வெண்டலைகொண்டுலகொக்கவுழன்றதே. (உ)

கிண்ணவண்ணமலருங்கிளர்தாமரைத்தாதளாய்
வண்ணநுண்மணன்மேலன்னம்வைகும்வலஞ்சுழிச்
சுண்ணவெண்பொடிக்கொண்டுமெய்பூசவல்லீர்சொலீர்
விண்ணவர்தொழவெண்டலையிற்பலிகொண்டதே. (ங)

கோடெலாநிறையக்குவளைம்மலருங்குழி
மாடெலாமலிநீர்மணநாறும்வலஞ்சுழிச்

சேடெலாமுடையீர்சிறுமான்மறியீர்சொலீர்
நாடெலாமறியத்தலையின்னறவேற்றதே. (௪)

கொல்லைவேனற்புனத்திற்குருமாமணிகொண்டுபோய்
வல்லைநுண்மணன்மேலன்னம்வைகும்வலஞ்சுழி
முல்லைவெண்முறுவன்னகையாளொளியீர்சொலீர்
சில்லைவெண்டலையிற்பலிகொண்டுழல்செல்வமே. (௫)

பூசநீர்பொழியும்புனற்பொன்னியிற்பன்மலர்
வாசநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழித்
தேசநீர்திருநீர்சிறுமான்மறியீர்சொலீர்
ஏசவெண்டலையிற்பலிகொள்வதிலாமையே. (௬)

கந்தமாமலர்ச்சந்தொடுகாரகிலுந்தழீ
வந்தநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழி
யந்தநீர்முதனீர்நடுவாமடிகேள்சொலீர்
பந்தநீர்கருதாதுலகிற்பலிகொள்வதே. (௭)

தேனுற்றநறுமாமலர்ச்சோலையில்வண்டினம்
வானுற்றநசையாலிசைபாடும்வலஞ்சுழிச்
சானுற்றகளிறன்னுரிபோர்க்கவல்லீர்சொலீர்
ஊனுற்றதலைகொண்டுலகொக்கவுழன்றதே. (௮)

தீர்த்தநீர்வந்திழிபுனற்பொன்னியிற்பன்மலர்
வார்த்தநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழி
யார்த்துவந்தவரக்கனையன்றடர்த்தீர்சொலீர்
சீர்த்தவெண்டலையிற்பலிகொள்வதுஞ்சீர்மையே. (௯)

உரமனுஞ்சடையீர்விடையீருமதின்னருள்
வரமனும்பெறலாவதுமெந்தைவலஞ்சுழிப்
பிரமனுந்திருமாலுமளப்பரியீர்சொலீர்
சிரமெனுங்கலனிற்பலிவேண்டியசெல்வமே. (௧௦)

வீடுஞானமும்வேண்டுதிரேல்விரதங்களால்
வாடிஞானமென்னாவதுமெந்தைவலஞ்சுழி
நாடிஞானசம்பந்தனசெந்தமிழ்கொண்டிசை
பாடுஞானம்வல்லாரடிசேர்வதுஞானமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கற்பகத்தீசுவரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

திருத்தெளிச்சேரி, பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதும்பொற்கழ
றேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனாம்
பாவகங்கொடுநின்றதுபோலுநம்பாண்மையே. (௧)

விளக்கும்பத்திக்குவிண்ணவர்மண்ணவரேத்தவே
துளக்குந்தீர்த்தமருதிகழ்தெளிச்சேரியீர்
வளைக்குந்திண்சிலைமேலைந்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனையெங்ஙனநீர்கண்ணிற்காய்ந்ததே. (௨)

வம்படுத்தமலர்ப்பொழில்சூழமதிதவழ்
செம்படுத்தசெழும்புரிசைத்தெளிச்சேரியீர்
கொம்படுத்ததோர்கோலவிடைமிசைக்கூர்மையோ
டம்படுத்தகண்ணாளொடுமேவலழகிதே. (௩)

காருலாங்கடலிப்பிகண்முத்தங்கரைப்பெயுந்
தேருலாநெடுவீதியதார்தெளிச்சேரியீ
ரேருலாம்பலிக்கேகிடைவைப்பிடமின்றியே
வாருலாமுலையாளையோர்பாகத்துவைத்ததே. (௪)

பக்கலுந்தமைப்பார்ப்பதியேத்திமுன்பாவிக்குஞ்
செக்கர்மாமதிசேர்மதில்சூழ்தெளிச்சேரியீர்
மைக்கொள்கண்ணியர்கைவளைமால்செய்துவௌவவே
நக்காயுலகெங்கும்பலிக்குழல்பதே. (௫)

தவளவெண்பிறைதோய்தருதாழ்பொழில்சூழநந்
திவளமாமணிமாடந்திகழ்தெளிச்சேரியீர்
குவளைபோற்கண்ணிதுண்ணெனவந்துகுறுகிய
கவளமால்கரியெங்ஙனநீர்கையிற்காய்ந்ததே. (௬)

கோடடுத்தபொழிலின்மிசைக்குயில்கூவிடுஞ்
சேடடுத்ததொழிலின்மிகுதெளிச்சேரியீர்
மாடடுத்தமலர்க்கண்ணினாள்கங்கைநங்கையைத்
தோடடுத்தமலர்ச்சடையென்கொனீர்சூடிற்றே. (௭)

கொத்திரைத்தமலர்க்குழலாள்குயில்கோலஞ்சேர்
சித்திரக்கொடிமாளிகைசூழ்தெளிச்சேரியீர்
வித்தகப்படைவல்லவரக்கன்விறற்றலை
பத்திரட்டிக்கரநெரித்திட்டதும்பாதமே. (௮)

காலெடுத்ததிரைக்கைகரைக்கெறிகானல்சூழ்
சேலடுத்தவயற்பழனத்தெளிச்சேரியீர்

மாலடிக்தலமாமலரான்முடிதேடியே
யோலமிட்டிடவெங்ஙனமோருருக்கொண்டதே. (௯)

மந்திரந்தருமாமறையோர்கடவத்தவர்
செந்திலங்குமொழியவர்சேர்தெளிச்சேரியீர்
வெந்தலாகியசாக்கியரோடுசமணர்கள்
தந்திறத்தனநீக்குவித்தீரோர்சதிரரே. (௧௦)

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
மிக்ககாழியுள்ஞானசம்பந்தன்விளம்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கடமுடி
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பார்வதீசுவரர், தேவியார்-சத்தியம்மாளம்மை.

திருவான்மியூர், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுலாங்கடலிற்பொலிசங்கம்வெள்ளிப்பிவன்
றிரையுலாங்கழிமீனுகளுந்திருவான்மியூ
ருரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனாகியமாண்பதே. (௧)

சந்துயர்ந்தெழுகாரகிறண்புனல்கொண்டுதந்
சிந்தைசெய்தடியார்பரவுந்திருவான்மியூர்ச்
சுந்தரக்கழன்மேற்சிலம்பார்க்கவல்லீர்சொலீ
ரந்தியின்னொளியின்னிறமாக்கியவண்ணமே. (௨)

கானயங்கியதண்கழிசூழ்கடலினபுறந்
தேனயங்கியபைம்பொழில்சூழ்திருவான்மியூர்த்
தோனயங்கமராடையினீரடிகேள்சொலீ
ரானயங்கவ்வுரிபோர்த்தனலாடவுகந்ததே. (௩)

மஞ்சுலாவியமாடமதிற்பொலிமாளிகைச்
செஞ்சொலாளர்கடாம்பயிலுந்திருவான்மியூர்த்
துஞ்சுவஞ்சிருளாடலுகக்கவல்லீர்சொலீர்
வஞ்சநஞ்சுணடுவானவர்க்கின்னருள்வைத்ததே. (௪)

மண்ணினிற்புகழ்பெற்றவர்மங்கையர்தாம்பயி
றிண்ணெனப்புரிசைத்தொழிலார்திருவான்மியூர்த்
துண்ணெனத்திரியுஞ்சரிதைத்தொழிலீர்சொலீர்
விண்ணினிற்பிறைசெஞ்சடைவைத்தவியப்பதே. (௫)

போதுலாவியதண்பொழில்சூழ்புரிசைப்புறந்
தீதிலந்தணரோத்தொழியாத்திருவான்மியூர்ச்
சூதுலாவியகொங்கையோர்பங்குடையீர்சொலீர்
மூதெயில்லொருமூன்றெரியூட்டியமொய்ம்பதே. (௬)

வண்டிரைத்தடம்பொழிலின்னிழற்கானல்வாய்த்
தெண்டிரைக்கடலோதமல்குந்திருவான்மியூர்த்
தொண்டிரைத்தெழுந்தேத்தியகொலகழலீர்சொலீர்
பண்டிருக்கொருநால்வர்க்குநீருரைசெய்ததே. (௭)

தக்கில்வந்ததசக்கிரீவன்றலைபத்திறத்
திக்கில்வந்தலறவ்வடர்த்தீர்திருவான்மியூர்த்
தொக்கமாதொடும்வீற்றிருந்தீரருளெனசொலீர்
பக்கமேபலபாரிடம்பேய்கள்பயின்றதே. (௮)

பொருதுவார்கடலெண்டிசையுந்தருவாரியாற்
றிரிதரும்புகழ்செல்வமல்குந்திருவான்மியூர்ச்
சுருதிமாரிருவர்க்குமறிவறியீர்சொலீர்
எருதுமேல்கொடுமன்றுகந்திப்பலியேற்றதே. (௯)

மைதழைத்தெழுசோலையின்மாலைசேர்வண்டினஞ்
செய்தவத்தொழிலாரிசைசேர்திருவான்மியூர்
மெய்தவப்பொடிபூசியமேனியினீர்சொலீர்
கைதவச்சமண்சாக்கியர்கட்டுரைக்கின்றதே. (௧0)

மாதொர்கூறுடைநற்றவனைத்திருவான்மியூ
ராதியெம்பெருமானருள்செய்யவினாவுரை
யோதியன்றெழுகாழியுள்ஞானசம்பந்தன்சொன்
னீதியானினைவார்நெடுவானுலகாள்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மருந்தீசுவரர், தேவியார்-சுந்தரமாது, அல்லது-சொக்கநாயகியம்மை.

திருவனேகதங்காபதம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீடன்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை
சூடன்மேவுமறையின்முறையாலோர்சுலாவழ
லாடன்மேவுமவர்மேயவனேகதங்காபதம்
பாடன்மேவுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. (௧)

சூலமுண்டுமழுவுண்டவர்தொல்படைசூழ்கட
லாலமுண்டபெருமான்றனனேகதங்காபத

நீலமுண்டதடங்கண்ணுமைபாகநிலாயதோர்
கோலமுண்டளவில்லைகுலாவியகொள்கையே. (உ)

செம்பினாருமதின்மூன்றெரியச்சினவாயதோ
ரம்பினாலெய்தருள்வில்லியனேகதங்காபதங்
கொம்பினேரிடையாளொடுங்கூடிக்கொல்லேறுடை
நம்பனாமநவிலாதனநாவெனலாகுமே. (௩)

தந்தத்திந்தத்தடமென்றருவித்திரள்பாய்ந்துபோய்ச்
சிந்தவெந்தகதிரோனொடுமாசறுதிங்களா
ரந்தமில்லவளவில்லவனேகதங்காபத
மெந்தைவெந்தபொடிநீறணிவார்க்கிடமாவதே. (௪)

பிறையுமாசில்கதிரோனறியாமைப்பெயர்ந்துபோ
யுறையுங்கோயில்பசும்பொன்னணியாரசும்பார்புன
லறையுமோசைபறைபோலுமனேகதங்காபத
மிறையெம்மீசனெம்மானிடமாகவுகந்ததே. (௫)

தேனையேறுநறுமாமலர்கொண்டடிசேர்த்துவீ
ரானையேறுமணிசாரலனேகதங்காபதம்
வானையேறுநெறிசென்றுணருந்தனைவல்லீரே
லானையேறுமுடியானருள்செய்வதும்வானையே. (௬)

வெருவிவேழமிரியக்கதிர்முத்தொடுவெண்பளிங்
குருவிவீழவயிரங்கொழியாவகிலுந்திவெள்
ளருவிபாயுமணிசாரலனேகதங்காபத
மருவிவாழும்பெருமான்கழல்சேர்வதுவாய்மையே. (௭)

ஈரமேதுமிலனாகியெழுந்தவிராவணன்
வீரமேதுமிலனாகவிளைத்தவிலங்கலா
னாரம்பாம்பதணிவானுறனேகதங்காபதம
வாரமாகிநினைவார்வினையாயினமாயுமே. (௮)

கண்ணன்வண்ணமலரானொடுங்கூடியோர்க்கையமா
யெண்ணும்வண்ணமறியாமையெழுந்ததோராரழ
லண்ணனண்ணுமணிசாரலனேகதங்காபத
நண்ணுமவண்ணமுடையார்வினையாயினநாசமே. (௯)

மாபதம்மறியாதவர்சாவகர்சாக்கிய
ரேபதம்படநின்றிறுமாந்துழல்வார்கடா
மாபதம்மறிவீருளிராகிலனேகதங்
காபதமமர்ந்தான்கழல்சேர்தல்கருமமே. (௧௦)

தொல்லையூழிப்பெயர்தோன்றியதோணிபுரத்திறை
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்மு
னல்லதீரவுரைசெய்தவனேகதங்காபதஞ்
சொல்லநல்லவடையும்மடையாசுடுதுன்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.

சுவாமிபெயர்-அருள்மன்னர், தேவியார்-மனோன்மணியம்மை.

திருவையாறு, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீ
ரோடுகங்கையொளிவெண்பிறைசூடுமொருவனார்
பாடல்வீணைமுழவங்குழன்மொந்தைபண்ணாகவே
யாடுமாறுவல்லானுமையாறுடையையனே. (க)

தன்மையாருமறிவாரில்லைதாம்பிறரெள்கவே
பின்னுமுன்னுஞ்சிலபேய்க்கணஞ்சூழத்திரிதர்வர்
துன்னவாடையுடுப்பர்சுடலைப்பொடிபூசுவ
ரன்னமாலுந்துறையானுமையாறுடையையனே. (உ)

கூறுபெண்ணுடைகோவணமுண்பதும்வெண்டலை
மாறிலாருங்கொள்வாரில்லைமார்பிலணிகல
மேறுமேறித்திரிவரிமையோர்தொழுதேத்தவே
யாறுநான்குஞ்சொன்னானுமையாறுடையையனே. (௩)

பண்ணினல்லமொழியார்பவளத்துவர்வாயினு
ரெண்ணினல்லகுணத்தாரிணைவேல்வென்றகண்ணினார்
வண்ணம்பாடிவலிபாடித்தம்வாய்மொழிபாடவே
யண்ணல்கேட்டுகந்தானுமையாறுடையையனே. (௪)

வேனலானைவெருவவுரிபோர்த்துமையஞ்சவே
வானையூடறுக்கும்மதிசூடியமைந்தனார்
தேனெய்பாலயிர்தெங்கிளநீர்கரும்பின்றெளி
யானஞ்சாடுமுடியானுமையாறுடையையனே. (௫)

எங்குமாகிநின்றானுமியல்வறியப்படா
மங்கைபாகங்கொண்டானுமதிசூடுமைந்தனும்
பங்கமில்பதினெட்டொடுநான்குக்குணர்வுமா
யங்கமாறுஞ்சொன்னானுமையாறுடையையனே. (௬)

ஓதியாருமறிவாரில்லையோதியுலகெலாஞ்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்

வேதியாகிவிண்ணாகிமண்ணோடெரிகாற்றுமா
யாதியாகினின்றானுமையாறுடையையனே. (எ)

குரவநாண்மலர்கொண்டடியார்வழிபாடுசெய்
விரவுநீறணிவார்சிலதொண்டர்வியப்பவே
பரவிநாடொறும்பாடநம்பாவம்பறைதலா
லரவமார்த்துகந்தானுமையாறுடையையனே. (அ)

உரைசெய்தொல்வழிசெய்தறியாவிலங்கைக்குமன்
வரைசெய்தோளடர்த்துமதிசூடியமைந்தனூர்
கரைசெய்காவிரியின்வடபாலதுகாதலா
னரைசெய்மேகலையானுமையாறுடையையனே. (கூ)

மாலுஞ்சோதிமலரானுமறிகிலாவாய்மையான்
காலங்காம்புவயிரங்கடிகையன்பொற்கழல்
கோலமாய்க்கொழுந்தீனறுபவளந்திரண்டதோ
ராலநீழலுளானுமையாறுடையையனே. (க0)

கையிலுண்டுழலவாருங்கமழ்துவராடையான்
மெய்மைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யல
மைகொள்கண்டத்தெண்டோண்முக்கணான்கழல்வாழ்த்தவே
யையந்தேர்ந்தளிப்பானுமையாறுடையையனே. (கக)

பலிதிரிந்துழல்பண்டங்கன்மேயவையாற்றினைக்
கலிகடந்தகையான்கடற்காழியர்காவல
ஞெலிகொள்சம்பந்தனொண்டமிழ்பத்தும்வல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீர்பெறுவார்களே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவாஞ்சியம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம
பொன்னியனற்சடையிற்பொலிவித்தபுராணனார்
தென்னவெனறுவரிவண்டிசைசெய்திருவாஞ்சிய
மென்னையாள்வுடையானிடமாகவுகந்ததே. (க)

காலகாலர்கரிகானிடைமாநடமாடுவர்
மேலர்வேலைவிடமுண்டிருள்கின்றமிடற்றினர்
மாலைகோலமதிமாடமன்னுந்திருவாஞ்சிய
ஞாலம்வந்துபணியப்பொலிகோயிலமர்ந்ததே. (உ)

மேவிலொன்றர்விரிவுற்றவிரண்டினர்மூன்றுமாய்
நாவிலாலருடலஞ்சினராறரேழோசையர்

தேவிலெட்டார்திருவாஞ்சியமேவியசெல்வனார்
பாவந்தீர்ப்பர்பழிபோக்குவர்தம்மடியார்கட்கே. (௩)

சூலமேந்திவளர்கையினர்மெய்சுவண்டாகவே
சாலநல்லபொடிப்பூசுவர்பேசுவர்மாமறை
சீலமேவுபுகழாற்பெருகுந்திருவாஞ்சிய
மாலமுண்டவடிகள்ளிடமாகவமர்ந்ததே. (௪)

கையிலங்குமறியேந்துவர்காந்தளம்மெல்விரற்
றையல்பாகமுடையாரடையார்புரஞ்செற்றவர்
செய்யமேனிக்கரியமிடற்றார்திருவாஞ்சியத்
தையர்பாதமடைவார்க்கடையாவருநோய்களே. (௫)

அரவம்பூண்பரணியுஞ்சிலம்பார்க்கவகந்தொறு
மிரவினல்லபலிபேணுவர்நாணிலர்நாமமே
பரவுவார்வினைதீர்க்கநின்றார்திருவாஞ்சிய
மருவியேத்தமடமாதொடுநின்றவெம்மைந்தரே. (௬)

விண்ணிலானபிறைசூடுவர்தாழ்ந்துவிளங்கவே
கண்ணினாலனங்கன்னுடலம்பொடியாக்கினார்
பண்ணிலானவிசைபாடன்மல்குந்திருவாஞ்சியத்
தண்ணலார்தம்மடிபோற்றவல்லார்க்கில்லையல்லலே. (௭)

மாடநீடுகொடிமன்னியதென்னிலங்கைக்குமன்
வாடியூடவரையாலடர்த்தன்றருள்செய்தவர்
வேடவேடர்திருவாஞ்சியமேவியவேந்தரைப்
பாடநீடுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. (௮)

செடிகொணோயினடையார்திறம்பார்செறுதீவினை
கடியகூற்றமுங்கண்டகலும்புகழ்நின்றரு
நெடியமாலோடயனேத்தநின்றார்திருவாஞ்சியத்
தடிகள்பாதமடைந்தாரடியாரடியார்கட்கே. (௯)

பிண்டமுண்டுதிரிவார்பிரியுந்துவராடையார்
மிண்டர்மிண்டுமொழிமெய்யலபொய்யிலையெம்மிறை
வண்டுகெண்டிமருவும்பொழில்சூழ்திருவாஞ்சியத்
தண்டவாணனடிகைதொழுவார்க்கில்லையல்லலே. (௧0)

தென்றறுன்றுபொழில்சென்றணையுந்திருவாஞ்சியத்
தென்றுநின்றவிறையானையுணர்ந்தடியேத்தலா
னன்றுகாழிமறைஞானசம்பந்தனசெந்தமி
ழொன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாஞ்சியநாதர், தேவியார்-வாழவந்தநாயகியம்மை.

திருச்சிக்கல், பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவுமதிவந்துலவுமதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. (௧)

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
இடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. (௨)

நீலநெய்தனிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலொண்கண்ணியினாளையோர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவமறையுமே. (௩)

கந்தமுந்தக்கைதைப்பூத்துக்கமழ்ந்துசேரும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடனமல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல்
சிந்தைசெய்வார்வினையாயினதேய்வதுதிண்ணமே. (௪)

மங்குறங்குமறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழிற்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேற்சரதந்திருநாளுந்தகையுமே. (௫)

வண்டிரைத்துமதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்ப்பிரானடி
கண்டிரைத்துமனமேமதியாய்கதியாகவே. (௬)

முன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுன்னிநீடமனமேநினையாய்வினையோயவே. (௭)

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கணெரியவே
செற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுற்றுநீநினையாய்வினையாயினவோயவே. (௮)

மாலினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியுந்

சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. (௯)

பட்டைநற்றுவராடையினரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. (௧௦)

கந்தமார்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நவநீதநாதர், தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை.

திருமழபாடி, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

களையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதாபுர
முளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்
டளையுங்கொன்றையந்தாமழபாடியுளண்ணலே. (௧)

காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திர
ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமுன்னாடினன
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. (௨)

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. (௩)

பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை
யுள்ளமாதரிமின்வினையாயினவோயவே. (௪)

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பானெய்யஞ்சுடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்
கோனையோடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. (௫)

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினன்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையானமழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே.

கந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை
யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச்
சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. (எ)

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை
யுரக்கையாலெடுத்தான்றனதோண்முடிபத்திற
விரற்றலைந்திறுவியுமையாளொடுமேயவன்
வரத்தையேகொடுக்குமமழபாடியுள்வள்ளலே. (அ)

ஆலமுண்டமுதமமரர்க்கருளண்ணலார
காலனாருயிர்வீட்டியமாமணிகண்டனா
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட
மாலயன்வணங்குமழபாடியெமைந்தனே. (௯)

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களு
நலியுநாள்கெடுத்தாண்டவெனாதனூர்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையு
மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. (க0)

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-வச்சிரதம்பேசுவரர், தேவியார்-அழகாம்பிகையம்மை.

திருமங்கலக்குடி, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினார்மணியும்மகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரினமாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. (க)

பணங்கொளாடரவல்குனல்லார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலும்பொழில்சூழ்மங்கலக்குடி
யிணங்கிலாமறையோனிமையோர்தொழுதேத்திட
வணங்கினேடிருந்தானடியேசரணாகுமே. (உ)

கருங்கையானையினீருரிபோர்த்திடுகள்வனூர்
மருங்கெலாமணமார்பொழில்சூழ்மங்கலக்குடி

யரும்புசேர்மலர்க்கொன்றையினானடியன்பொடு
விரும்பியேத்தவல்லார்வினையாயினவீடுமே. (௩)

பறையினோடொலிபாடலுமாடலும்பாரிட
மறையினோடியன்மல்கிடுவார்மங்கலக்குடிக்
குறைவிலாநிறைவேகுணமில்குணமேயென்று
முறையினால்வணங்கும்மவர்முன்னெறிகாண்பரே. (௪)

ஆனிலங்கிளரைந்துமவிர்முடியாடியோர்
மாநிலங்கையினான்மணமார்மங்கலக்குடி
யூனில்வெண்டலைக்கையுடையானுயர்பாதமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. (௫)

தேனுமாயமுதாகிநின்றான்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறுமுய்யும்வகையதே. (௬)

வேள்படுத்திடுகண்ணினன்மேருவில்லாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
யாளுமாதிப்பிரானடிகளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. (௭)

பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினாடையினானடியேத்திடும்புண்ணியர்
மலியும்வானுலகம்புகவல்லவர்காண்மினே. (௮)

ஞாலமுன்படைத்தானளிர்மாமலர்மேலயன்
மாலுங்காணவொணாவெரியான்மங்கலக்குடி
யேலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்றான்குணங்கூறுங்குணமதே. (௯)

மெய்யின்மாசினர்மேனிவிரிதுகிலாடையர்
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
யையன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. (௧0)

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
வெந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொன்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதல்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிராணவரதேசுவரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

சீகாழி, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லானைநான்மறையோடியலாறங்கம்
வல்லானைவல்லவர்பான்மலிந்தோங்கிய
சொல்லானைத்தொண்மதிற்காழியேகோயிலா
யில்லானையேத்தநின்றார்க்குளதின்பமே. (௧)

நம்மானமாற்றிநமக்கருளாய்நின்ற
பெம்மானைப்பேயுடனாடல்புரிந்தானை
யம்மானையந்தணர்சேருமணிகாழி
யெம்மானையேத்தவல்லார்க்கிடரில்லையே (௨)

அருந்தானையன்புசெய்தேத்தகிற்பார்பாற்
பொருந்தானைப்பொய்யடிமைத்தொழில்செய்வாருள்
விருந்தானைவேதியரோதிமிடைகாழி
யிருந்தானையேத்துமினும்வினையேகவே (௩)

புற்றானைப்புற்றரவம்மரையின்மிசை
சுற்றானைத்தொண்டுசெய்வாரவர்தம்மொடு
மற்றானையந்தணர்காழியமர்கோயில்
பற்றானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. (௪)

நெதியானைநெஞ்சிடங்கொள்ளநினைவார்தம்
விதியானைவிண்ணவர்தாம்வியந்தேத்திய
கதியானைக்காருலவும்பொழிற்காழியாம்
பதியானைப்பாடுமினும்வினைபாறவே. (௫)

செப்பானமென்முலையாளைத்திகழ்மேனி
வைப்பானைவார்கழலேத்திநினைவார்த
மொப்பானையோதமுலாவுகடற்காழிமே
யப்பானைமேவியமாந்தரேவியந்தாரே. (௬)

துன்பானைத்துன்பமழித்தருளாக்கிய
வின்பானையேழிசையின்னிலைபேணுவா
ரன்பானையணிபொழிற்காழிநகர்மேய
நம்பானைநண்ணவல்லார்வினைநாசமே. (௭)

குன்றானைக்குன்றெடுத்தான்புயநாலைந்தும்
வென்றானைமென்மலரானொடுமாலோடு
நின்றானைநேரிழையாளொடுங்காழியு
ணன்றானைநம்பெருமானைநணுகுமே. (௮)

சாவாயும்வாதுசெய்சாவகசாக்கியர்
மேவாதசொல்லவைகேட்டுவெகுளேன்மின்

பூவாயகொன்றையினானைப்புனற்காழிக்
கோவாயகொள்கையினானடிகூறுமே. (க-க0)

கழியார்சீரோதமல்குங்கடற்காழியு
ளொழியாதுகோயில்கொண்டானையுகந்துள்கித்
தழியார்சொல்ஞானசம்பந்தன்றமிழ்ஞான
மொழிவார்கண்மூவுலகும்பெறுவார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணோடாணாகியபெம்மானை
யிறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. (க)

நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிள
முச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே. (உ)

பாராருமுழவமொந்தைகுழலியாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோ
ரேரார்பூங்கச்சியேகம்பனையெம்மானைச்
சேராதாரின்பமாயநெறிசேராரே. (ந)

குன்றேய்க்குநெடுவெணமாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கடோயுமவியன்கச்சியுண்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பஞ்
சென்றேய்க்குஞ்சிந்தையார்மேல்வினைசேராவே. (ச)

சடையானைத்தலைகையேந்திப்பலிதருவார்தங்
கடையேபோய்மூன்றுங்கொண்டான்கலிக்கச்சியுட்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்ப
முடையானையல்லதுள்காதெனதுள்ளமே. (ரு)

மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தங்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேமலகுசீரால்வளரேகம்பந்
தொழுவாரேவிழுமியார்மேல்வினைதுன்னாவே. (சா)

விண்ணுளார்மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார்கழலின்வெல்வார்கரிகாலனை

கண்ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலாராடுகின்றவலங்காரமே. (எ)

தூயானைத்தூயவாயம்மறையோதிய
வாயானைவாளரக்கன்வலிவாட்டிய
தீயானைத்தீதில்கச்சித்திருவேகம்ப
மேயானைமேவுவாரெனதலைமேலாரே. (அ)

நாகம்பூணேறதேறனறுங்கொன்றைத்தார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவ
ரேகம்பமேவியாடுமிறையிருவர்க்கு
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. (௯)

போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூலை
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியு
ளாதியார்மேவியாடுந்திருவேகம்ப
நீதியாற்றொழுமினும்மேல்வினைநில்லாவே. (௧௦)

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையாற்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழம்பம், பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானைநீள்சடைமேனிறைவுள்ளதோ
ராற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
வேற்றானையேத்துமினும்மிடர்கெடவே. (௧)

மையானகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானைத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. (௨)

ஏதனையேதமிலாவிமையோர்தொழும்
வேதனைவெண்குழைதோடுவிளங்கிய
காதனைக்கடிபொழிற்கோழம்பமேவிய
நாதனையேத்துமினும்வினைநையவே.

சடையானைத்தண்மலரான்சிரமேந்திய
விடையானைவேதமும்வேள்வியுமாயநன்

குடையானைக்குளிர்பொழில்சூழ்திருக்கோழம்ப
முடையானையுள்குமினுள்ளங்குளிரவே. (ச)

காரானைக்கடிகமழ்கொன்றையம்போதணி
தாரானைத்தையலோர்பான்மகிழ்ந்தோங்கிய
சீரானைச்செறிபொழிற்கோழம்பமேவிய
ஆரானையேத்துமினும்மிடரொல்கவே. (ரு)

பண்டாலினிழலானைப்பரஞ்சோதியை
விண்டார்கடம்புரமூன்றுடனேவேவக்
கண்டானைக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (சு)

சொல்லானைச்சுடுகணையாற்புரமூன்றெய்த
வில்லானைவேதமும்வேள்வியுமானானைக்
கொல்லானையுரியானைக்கோழம்பமேவிய
நல்லானையேத்துமினும்மிடர்நையவே. (எ)

விற்றானைவல்லரக்கர்விறல்வேந்தனைக்
குற்றானைத்திருவிரலாற்கொடுங்காலனைச்
செற்றானைச்சீர்திகழுந்திருக்கோழம்பம்
பற்றானைப்பற்றுவார்மேல்வினைபற்றாவே. (அ)

நெடியானோடயனறியாவகைநின்றதோர்
படியானைப்பண்டரங்கவேடம்பயின்றானைக்
கடியாருங்கோழம்பமேவியவெள்ளேற்றின்
கொடியானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (கூ)

புத்தருந்தோகையம்பீலிகொள்பொய்ம்மொழிப்
பித்தரும்பேசுவபேச்சல்லபீடுடைக்
கொத்தலர்தண்பொழிற்கோழம்பமேவிய
அத்தனையேத்துமினல்லலறுக்கவே. (க0)

தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைப்பாவமே. (கக)

சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோகுலேசுவரர், தேவியார்-சவுந்தரியம்மை.

திருவெண்ணி, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையானைச்சந்திரனோடுசெங்கண்ணரா
வுடையானையுடைதலையிற்பலிகொண்டூரும்
விடையானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
யுடையானையல்லதுள்காதெனதுள்ளமே. (க)

சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
மாதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியி
னீதியைநினையவல்லார்வினைநில்லாவே. (உ)

கனிதனைக்கனிந்தவரைக்கலந்தாட்கொளு
முனிதனைமூவுலகுக்கொருமூர்த்தியை
நனிதனைநல்லவர்தாந்தொழும்வெண்ணியி
லினிதனையேத்துவரேதமிலாதாரே. (ங)

மூத்தானைமூவுலகுக்கொருமூர்த்தியாய்க்
காத்தானைக்கனிந்தவரைக்கலந்தாளாக
யார்த்தானையழகமர்வெண்ணியம்மான்றன்னை
யேத்தாதாரெனசெய்வாரேழையபேய்களே. (ச)

நீரானைநிறைபுனல்சூழ்தருநீள்கொன்றைத்
தாரானைத்தையலோர்பாகமுடையானைச்
சீரானைத்திகழ்தருவெண்ணியமர்ந்துறை
யூரானையுள்கவல்லார்வினையோயுமே. (ரு)

முத்தினைமுழுவயிரத்திரண்மாணிக்கத்
தொத்தினைத்துளக்கமில்லாதவிளக்காய
வித்தினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
லத்தனையடையவல்லார்க்கில்லையல்லலே. (சா)

காய்ந்தானைக்காமனையுஞ்செறுகாலனைப்
பாய்ந்தானைப்பரியகைமாவுரிதோன்மெய்யின்
மேய்ந்தானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
னீய்ந்தானைநினையவல்லார்வினைநில்லாவே. (எ)

மறுத்தானைமாமலையைமதியாதோடிச்
செறுத்தானைத்தேசழியத்திகழ்தோண்முடி
யிறுத்தானையெழிலமர்வெண்ணியெம்மானைப்
பொறுத்தானைப்போற்றுவாராற்றலுடையாரே. (அ)

மண்ணினைவானவரோடுமனிதர்க்குங்
கண்ணினைக்கண்ணனுநான்முகனுங்காணா

விண்ணினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
லண்ணலையடையவல்லார்க்கில்லையல்லலே. (௯)

குண்டருங்குணமிலாச்சமண்சாக்கிய
மிண்டர்கண்மிண்டவைகேட்டுவெருளன்மின்
விண்டவர்தம்புரமெய்தவன்வெண்ணியிற்
றொண்டராயேத்தவல்லார்துயர்தோன்றாவே. (௧௦)

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
றிருவாருந்திகழ்தருவெண்ணியமர்ந்தானை
யுருவாருமொண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெண்ணிநாயகர், தேவியார்-அழகியநாயகியம்மை.

திருக்காறாயில், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானேநீள்சடைமேலொருநிரைகொன்றைத்
தாரானேதாமரைமேலயன்றான்றொழுஞ்
சீரானேசீர்திகழுந்திருக்காறாயி
லூரானேயென்பவரூனமிலாதாரே. (௧)

மதியானேவரியரவோடுடன்மத்தஞ்சேர்
விதியானேவிதியுடைவேதியர்தாந்தொழு
நெதியானேநீர்வயல்சூழ்திருக்காறாயிற்
பதியானேயென்பவர்பாவமிலாதாரே. (௨)

விண்ணானேவிண்ணவரேத்திவிரும்புஞ்சீர்
மண்ணானேமண்ணிடைவாழுமுயிர்க்கெல்லாங்
கண்ணானேகடிபொழில்சூழ்திருக்காறாயி
லெண்ணானேயென்பவரேதமிலாதாரே. (௩)

தாயானேதந்தையுமாகியதன்மைக
ளாயானேயாயநலம்பர்க்கணியானே
சேயானேசீர்திகழுந்திருக்காறாயின்
மேயானேயென்பவர்மேல்வினைமேவாவே. (௪)

கலையானேகலைமலிசெம்பொற்கயிலாய
மலையானேமலைபவர்மும்மதின்மாய்வித்த
சிலையானேசீர்திகழுதிருக்காறாயி
னிலையானேயென்பவர்மேல்வினைநில்லாவே.

ஆற்றானையாறணிசெஞ்சடையானடர
வேற்றானையேழுலகும்மிமையோர்களும்
போற்றானைபொழில்திகழுந்திருக்காறாயி
னீற்றானையென்பவர்மேல்வினைநில்லாவே. (௬)

சேர்த்தானைதீவினைதேய்ந்தறத்தேவர்க
ளேத்தானையேத்துநன்மாமுனிவர்க்கிடர்
காத்தானைகார்வயல்சூழ்திருக்காறாயி
லார்த்தானையென்பவர்மேல்வினையாடாவே.

கடுத்தானைகாலனைக்காலாற்கயிலாய
மெடுத்தானையேதமாகம்முனிவர்க்கிடர்
கெடுத்தானைகேழ்கிளருந்திருக்காறாயி
லடுத்தானையென்பவர்மேல்வினையாடாவே. (௮)

பிறையானைப்பேணியபாடலோடின்னிசை
மறையானைமாலொடுநான்முகன்காணாத
விறையானையெழில்திகழுந்திருக்காறாயி
லுறைவானையென்பவர்மேல்வினையோடுமே. (௯)

செடியாரும்புன்சமண்சீவரத்தார்களும்
படியாருமபாவிகள்பேச்சுப்பயனில்லை
கடியாரும்பூம்பொழில்சூழ்திருக்காறாயில்
குடியாருங்கொள்கையினோர்க்கில்லைகுற்றமே. (௧௦)

ஏய்ந்தசீரெழில்திகழுந்திருக்காறாயி
லாய்ந்தசீரானடியேத்தியருள்பெற்ற
பாய்ந்தநீர்க்காழியுள்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கண்ணாயிரநாதர், தேவியார்-கயிலாயநாயகியம்மை.

திருமணஞ்சேரி, பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறாகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி
பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. (௧)

விதியானைவிண்ணவர்தாந்தொழுதேத்திய
நெதியானைநீள்சடைமேலிகழ்வித்தவான்
மதியானைவண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானைப்பாடவல்லார்வினைபாறுமே. (௨)

எய்ப்பானார்க்கின்புறுதேனளித்தூறிய
விப்பாலாயென்னையுமாளவுரியானை
வைப்பானமாடங்கள்சூழ்ந்தமணஞ்சேரி
மெய்ப்பானைமேவிநின்றார்வினைவீடுமே. (௩)

விடையானைமேலுலகேழுமிப்பாரெலா
முடையானையூழிதோறூழியுளதாய
படையானைப்பண்ணிசைபாடுமணஞ்சேரி
யடைவானையடையவல்லார்க்கில்லையல்லலே. (௪)

எறியார்பூங்கொன்றையினோடுமிளமத்தம
வெறியாருஞ்செஞ்சடையாரமிலைத்தானை
மறியாருங்கையுடையானைமணஞ்சேரிச்
செறிவானைச்செப்பவல்லார்க்கிடர்சேராவே. (௫)

மொழியானைமுன்னொருநான்மறையாறங்கம்
பழியாமைப்பண்ணிசையானபகர்வானை
வழியானைவானவரேத்துமணஞ்சேரி
யிழியாமையேத்தவல்லார்க்கெய்துமின்பமே. (௬)

எண்ணானையெண்ணமர்சீரிமையோர்கட்குக்
கண்ணானைக்கண்ணொருமூன்றுமுடையானை
மண்ணானைமாவயல்சூழ்ந்தமணஞ்சேரிப்
பெண்ணானைப்பேசநின்றார்பெரியோர்களே. (௭)

எடுத்தானையெழின்முடியெட்டுமிரண்டுந்தோள
கெடுத்தானைக்கேடிலாச்செம்மையுடையானை
மடுத்தாரவண்டிசைபாடுமணஞ்சேரி
பிடித்தாரப்பேணவல்லார்பெரியோர்களே. (௮)

சொல்லானைத்தோற்றங்கண்டானுநெடுமாலுங்
கல்லானைக்கற்றனசொல்லித்தொழுதோங்க
வல்லார்நன்மாதவரேத்துமணஞ்சேரி
யெல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே. (௯)

சற்றேயுந்தாமறிவில்சமண்சாக்கியர்
சொற்றேயும்வண்ணமோர்செம்மையுடையானை
வற்றாதவாவிகள்சூழ்ந்தமணஞ்சேரி
பற்றாகவாழ்பவர்மேல்வினைபற்றாவே. (௧௦)

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்தகமணஞ்சேரி
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மணவாளநாயகர், தேவியார் - யாழ்மொழியம்மை.

திருவேணுபுரம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நிலவும்புனலுந்நிறைவாளரவு, மிலகுஞ்சடையார்க்கிடமாமெழிலா
ருலவும்வயலுக்கொளியார்முத்தம், விலகுங்கடலார்வேணுபுரமே. (௧)

அரவார்காலன்னமையார்திரடோட், குரவார்குழலாளொருகூறனிடங்
கரவாதகொடைக்கலந்தாரவர்க்கு, விரவாகவல்லார்வேணுபுரமே. (௨)

ஆகம்மழகாயவடானவெருவ, நாகமுரிபோர்த்தவனண்ணுமிடம்
போகந்தருசீர்வயல்சூழ்பொழில்கண், மேகந்தவழும்வேணுபுரமே. (௩)

காசக்கடலில்விடமுண்டகண்டத், தீசர்க்கிடமாவதுவின்னறவ
வாசக்கமலத்தனம்வன்றிரைகள், வீசத்துயிலும்வேணுபுரமே. (௪)

அரையார்கலைசொன்மெனனடையை, புரையாவுகந்தானுறையுமிட
நிரையார்கமுகின்னிகழ்பாளையுடை, விரையார்பொழில்சூழ்வேணுபுரமே (௫)

ஒளிரும்பிறையுமுறுகூவிளவின், றளிருஞ்சடைமேலுடையானிடமா
நளிரும்புனலினலசெய்கயல்கண், மிளிரும்வயல்சூழ்வேணுபுரமே. (௬-௭)

ஏவும்படைவேந்தனிராவணனை, யாவென்றலறவடர்த்தானிடமாந்
தாவும்மறிமானொடுதண்மதிய, மேவும்பொழில்சூழ்வேணுபுரமே. (௮)

கண்ணன்கடிமாமலரிற்றிகழு, மண்ணனையிருவரறியாவிறையூர்
வண்ணச்சுதைமாளிகைமேற்கொடிகள், விண்ணணிற்றிகழும்வேணுபுரமே. (௯)

போகம்மறியார்துவர்போர்த்துழல்வா, ராகமமறியாவடியாரிறையூர்
மூகம்மறிவார்கலைமுத்தமிழ்நூ, லீகமறிவார்வேணுபுரமே. (௧௦)

கலமார்கடல்போல்வளமார்தருநற், புலமார்தருவேணுபுரத்திறையை
நலமார்தருஞானசம்பந்தன்சொன்ன, குலமார்தமிழ்கூறுவர்கூர்மையரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமருகல்-விடந்தீர்த்த-திருப்பதிகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமாலவெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருக
லுடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (௧)

சிந்தாயெனுமால்சிவனேயெனுமான்
முந்தாயெனுமான்முதல்வாவெனுமால்
கொந்தார்குவளைகுலவும்மருக
லெந்தாய்தகுமோவிவளேசறவே. (௨)

அறையார்கழலுமழல்வாயரவும்
பிறையார்சடையுமுடையாய்பெரிய
மறையார்மருகன்மகிழ்வாயிவளை
யிறையார்வளைகொண்டெழில்வவ்வினையே. (௩)

ஒலிநீர்சடையிற்கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய்பழியில்புகழாய்
மலிநீர்மருகன்மகிழ்வாயிவளை
மெலிநீர்மையளாக்கவும்வேண்டினையே. (௪)

துணிநீலவண்ணம்முகிறோன்றியன்ன
மணிநீலகண்டமுடையாய்மருகற்
கணிநீலவண்டார்குழலாளிவடன்
னணிநீலவொண்கண்ணயர்வாக்கினையே. (௫)

பலரும்பரவப்படுவாய்சடைமேன்
மலரும்பிறையொன்றுடையாய்மருகற்
புலருந்தனையுந்துயிலாள்புடைபோந்
தலரும்படுமோவடியாளிவளே. (௬)

வழுவாள்பெருமானகழல்வாழ்கவெனா
வெழுவாணினைவாளிரவும்பகலு
மழுவாளுடையாய்மருகற்பெருமான
றொழுவாளிவளைத்துயராக்கினையே (௭)

இலங்கைக்கிறைவன்விலங்கலெடுப்பத்
துலங்கவிரலூன்றலுந்தோன்றலனாய்
வலங்கொண்மதில்சூழ்மருகற்பெருமா
னலங்கலிவளையலராக்கினையே. (௮)

எரியார்சடையுமடியுமிருவர்
தெரியாததோர்தீத்திரளாயவனே
மரியார்பிரியாமருகற்பெருமா
னரியாளிவளையயர்வாக்கினையே. (௯)

அறிவில்சமணும்மலர்சாக்கியருந்
நெறியல்லனசெய்தனர்நின்றுழல்வார்
மறியேந்துகையாய்மருகற்பெருமா
னெறியார்குழலிநிறைநீக்கினையே. (௧௦)

வயஞானம்வல்லார்மருகற்பெருமா
னுயர்ஞானமுணர்ந்தடியுள்குதலா
லியன்ஞானசம்பந்தன்பாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்லிக்கா, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தாலுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்யதீவெண்டிங்க
ணிறத்தானெல்லிக்காவுள்ளாயவனே (க)

பதிதானிடுகாடுபைங்கொன்றைதொங்கன்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கு
நெதிதானெல்லிக்காவுள்ளாயவனே. (உ)

நலந்தானவனான்முகன்றன்றலையைக்
கலந்தானதுகொண்டகபாலியுந்தான்
புலந்தான்புகழாலெரிவிண்புகழு
நிலந்தானெல்லிக்காவுள்ளாயவனே. (௩)

தலைதானதுவேந்தியதம்மடிகள்
கலைதான்றிரிகாடிடநாடிடமா
மலைதானெடுத்தான்மதின்மூன்றுடைய
நிலைதானெல்லிக்காவுள்ளாயவனே. (௪)

தவந்தான்கதிதான்மதிவார்சடைமே
லுவந்தான்சுறவேந்தனுருவழியச்
சிவந்தான்செயச்செய்துசெறுத்துலகி
னிவந்தானெல்லிக்காவுள்ளாயவனே. (௫)

வெறியார்கொன்றையந்தார்விரும்பி
மறியார்மலைமங்கைமகிழ்ந்தவன்றான்
குறியார்குறிகொண்டவர்போய்குறுகும்
நெறியானெல்லிக்காவுள்ளாயவனே. (௬)

பிறைதான்சடைசேர்த்தியவெந்தைபெம்மா
னிறைதானிறவாக்கயிலைமலையான்
மறைதான்புனலொண்மதிமல்குசென்னி
நிறைதானெல்லிக்காவுள்ளாயவனே. (௭)

மறைத்தான்பிணிமாதொருபாகந்தன்னை
மிறைத்தான்வரையாலரக்கன்மிகையைக்
குறைத்தான்சடைமேற்குளிர்கோல்வளையை
நிறைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (௮)

தழற்றாமரையான்வையந்தாயவனுங்
கழற்றான்முடி காணியநாணொளிரு
மழற்றானடியார்க்கருளாய்ப்பயக்கு
நிழற்றானெல்லிக்காவுணிலாயவனே. (௯)

கனத்தார்திரைமாண்டழற்கான்றநஞ்சை
யெனத்தாவெனவாங்கியதுண்டகண்டன்
மனத்தாற்சமண்சாக்கியர்மாண்பழிய
நினைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (௧0)

புகரேதுமில்லாதபுத்தேளுலகி
னிகராநெல்லிக்காவுணிலாயவனை
நகரார்நலஞானசம்பந்தன்சொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர்-நெல்லிவனேசுவரர், தேவியார்-மங்களநாயகியம்மை.

திரு அழுந்தூர், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந், தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
யழுமாறுவல்லாரழுந்தைமறையோர், வழிபாடுசெய்மாமடமன்னினையே. (௧)

கடலேறியநஞ்சமுதுண்டவனே, யுடலேயுயிரேயுணர்வேயெழிலே
யடலேறுடையாயழுந்தைமறையோர், விடலேதொழுமாமடமேவினையே. (௨)

கழிகாடலனேகனலாடலினாய், பழிபாடிலனேயவையேபயிலு
மழிபாடிலராயழுந்தைமறையோர், வழிபாடுசெய்மாமடமன்னினையே. (௩)

வானேமலையேயென்மன்னுயிரே, தானேதொழுவார்தொழுதாண்மணியே
யானேசிவனேயழுந்தையவரெம், மானேயெனமாமடமன்னினையே. (௪)

அலையார்புனல்சூழழுந்தைப்பெருமா, னிலையார்மறியுந்நிறைவெண்மழுவு
மிலையார்படையுமிவையேந்துசெல்வ, நிலையாவதுகொள்கெனநீநினையே. (௫)

நறவார்தலையின்னயவாவுலகிற், பிறவாதவனேபிணியில்லவனே
யறையார்கழலாயழுந்தைமறையோர், மறவாதெழுமாமடமன்னினையே. (௬)

தடுமாறுவல்லாய்தலைவாமதியஞ், சுடுமாறுவல்லாய்சுடரார்சடையில்
லடுமாறுவல்லாயழுந்தைமறையோர், நெடுமாநகர்கைதொழநின்றனையே. (௭)

பெரியாய்சிறியாய்பிறையாய்மிடறு, கரியாய்கரிகாடுயர்வீடுடையா
யரியாயெளியாயழுந்தைமறையோர், வெரியார்தொழுமாமடமேவினையே. (௯)

மணிநீண்முடியான்மலையையரக்கன், றணியாதெடுத்தானுடலம்நெரித்த
வணியார்விரலாயழுந்தைமறையோர், மணிமாமடமன்னியிருந்தனையே. (௮)

முடியார்சடையாய்முனநாளிருவர், நெடியானமலரானிகழ்வாலிவர்க
ளடிமேலறியாரழுந்தைமறையோர், படியாற்றொழுமாமடம்பற்றினையே. (௧0)

அருஞானம்வல்லாரழுந்தைமறையோர், பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்க, ளொருஞானமுணாருணர்ந்தார்தமக்கே.(௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-வேதபுரீசுவரர், தேவியார்-சவுந்தராம்பிகையம்மை,
தேரழுந்தூரென்பதுமிதுவே.

திருக்கழிப்பாலை, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரண
மனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினாய்கழிப்பாலையுளா
யுனவார்கழல்கைதொழுதுள்குதுமே. (௧)

துணையாகவோர்தூவளமாதினையு
மிணையாகவுகந்தவனேயிறைவா
கணையாலெயிலெய்கழிப்பாலையுளா
யிணையார்கழலேத்தவிடர்கெடுமே. (௨)

நெடியாய்குறியாய்நிமிர்புன்சடையின்
முடியாய்சுடுவெண்பொடிமுற்றணிவாய்
கடியார்பொழில்சூழ்கழிப்பாலையுளா
யடியார்க்கடையாவவலம்மவையே. (௩)

எளியாயரியாய்நிலநீரொடுதீ
வளிகாயமெனவெளிமன்னியதூ
வொளியாயுனையேதொழுதுன்னுமவர்
களியாய்கழிப்பாலையமர்ந்தவனே. (௪)

நடநண்ணியோர்நாகமசைத்தவனே
விடநண்ணியதூமிடறுவிகிர்தா
கடனண்ணுகழிப்பதிகாவலனே
யுடனண்ணிவணங்குவனுன்னடியே. (௫)

பிறையார்சடையாய்பெரியாய்பெரிய
மறையார்தருவாய்மையினாயுலகிற்

கழையார்பொழில்சூழ்கழிப்பாலையுளா
னிறையார்கழலேத்தவிடர்கெடுமே. (சு)

முதிருஞ்சடையின்முடிமேல்விளங்குங்
கதிர்வெண்பிறையாய்கழிப்பாலையுளா
யெதிர்கொண்மொழியாலிரந்தேத்துமவர்க்
கதிரும்வினையாயினவாசறுமே. (எ)

எரியார்கணையாலெயிலெய்தவனே
விரியார்தருவீழ்சடையாயிரவிற்
கரிகாடலினாய்கழிப்பாலையுளா
யுரிதாகிவணங்குவனுன்னடியே. (அ)

நலநாரணனான்முகனண்ணலுறக்
கனலானவனேகழிப்பாலையுளா
யுனவார்கழலேதொழுதுன்னுமவர்க்
கிலவாம்வினைதானெயிலெய்தவனே. (கூ)

தவர்கொண்டதொழிற்சமண்வேடரொடுந்
துவர்கொண்டனநுண்டுகிலாடையரு
மவர்கொண்டனவிட்டடிகளுறையு
முவர்கொண்டகழிப்பதியுள்குதுமே. (க0)

கழியார்பதிகாவலனைப்புகலிப்
பழியாமறைஞானசம்பந்தனசொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்த்தவல்லார்
கெழியாரிமையோரொடுகேடிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-பால்வண்ணநாதர், தேவியார்-வேதநாயகியம்மை.

திருக்குடவாயில், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயின்மன்னி
நிகழும்பெருங்கோயினிலாயவனே. (க)

ஓடுந்நதியும்மதியோடுரகஞ்
சூடுஞ்சடையானவிடைதொல்கொடிமேற்
கூடுங்குழகன்குடவாயிறனி
னீடும்பெருங்கோயினிலாயவனே. (உ)

கலையான்மறையான்கனலேந்துகையான்
மலையாளவள்பாகமகிழ்ந்தபிரான்

கொலையார்சிலையான்குடவாயிறனி
னிலையார்பெருங்கோயினிலாயவனே. (௩)

சுலவுஞ்சடையான்சுடுகாடிடமா
நலமென்முலையாளைநகைசெய்யநடங்
குலவுங்குழகன்குடவாயிறனி
னிலவும்பெருங்கோயினிலாயவனே. (௪)

என்றன்னுளமேவியிருந்தபிரானைக்
கன்றன்மணிபோன்மிடறன்கயிலைக்
குன்றனகுழகன்குடவாயிறனி
னின்றபெருங்கோயினிலாயவனே. (௫)

அலைசேர்புனலன்னனலன்னமலன்
றலைசேர்பலியன்சதுரன்விதிருங்
கொலைசேர்படையன்குடவாயிறனி
னிலைசேர்பெருங்கோயினிலாயவனே. (௬)

அரையார்கழலன்னலனணியமிற்
பறையாழ்முழவும்மறைபாடநடங்
குறையாவழகன்குடவாயிறனி
னிறையார்பெருங்கோயினிலாயவனே. (௭)

வரையார்திரடோளரக்கன்மடியவ்
வரையாரவோர்கால்விரல்வைத்தபிரான்
வரையார்மதில்சூழ்குடவாயின்மன்னும்
வரையார்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (௮)

பொன்னொப்பவனும்புயலொப்பவனுந்
தன்னொப்பறியாக்கழலாய்நிமிர்ந்தான
கொன்னற்படையான்குடவாயிறனின்
மன்னும்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (௯)

வெயிலின்னிலையார்விரிபோர்வையினார்
பயிலும்முரையேபகர்பாவிகள்பாற்
குயிலன்குழகன்குடவாயிறனி
னுயரும்பெருங்கோயிலுயர்ந்தவனே. (௧௰)

கடுவாய்மலிநீர்குடவாயிறனி
னெடுமாபெருங்கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே. (௧௧

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோணேசுவரர், தேவியார்-பெரியநாயகியம்மை.

திருவானைக்கா, பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மழையார்மிடறாமழுவாளுடையா
யுழையார்கரவாவுமையாள்கணவா
விழவாரும்வெண்ணாவலின்மேவியவெம்
மழகாவெனுமாயிழையாளவளே (க)

கொலையார்கரியின்னுரிமூடியனே
மலையார்சிலையாவளைவித்தவனே
விலையாலெனையாளும்வெண்ணாவலுளாய்
நிலையாவருளாயெனுநேரிழையே. (உ)

காலாலுயிர்காலனைவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வண்ணனே
வேலோடுகையாயெமவெண்ணாவலுளாய்
யாலார்நிழலாயெனுமாயிழையே. (௩)

சுறவக்கொடிகொண்டவன்நீறதுவா
யுறவெற்றிவிழித்தவெமுத்தமனே
விறன்மிக்ககரிக்கருள்செய்தவனே
யறமிக்கதுவென்னுமெனாயிழையே. (௪)

செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோ
னங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெமவெண்ணாவலுளா
யங்கத்தயர்வாயினளாயிழையே (ரு)

குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
றன்றோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றாய்புரமூன்றைவெண்ணாவலுளே
நின்றாயருளாயெனுநேரிழையே. (௬-௭)

மலையன்றெடுத்தவரக்கன்முடிதோ
டொலையவ்விரலூன்றியதூமழுவா
விலையில்லெனையாளும்வெண்ணாவலுளா
யலசாமனல்காயெனுமாயிழையே. (அ)

திருவார்தருநாரணனான்முகனு
மருவாவெருவாவழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெண்ணாவலுண்மேவியவெம்
மரவாவெனுமாயிழையாளவளே. (௯)

புத்தர்பலரோடமண்பொய்த்தவர்க
ளொத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்

மெய்த்தேவர்வணங்கும்வெண்ணாவலுளா
யத்தாவருளாயெனுமாயிழையே. (கo)

வெண்ணாவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணோடிவைபாடியபத்தும்வல்லார்
விண்ணோரவரேத்தவிரும்புவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரம், பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர்தருமேனியனேபுரியு, மின்னேர்சடையாய்விரிகாவிரியி
னன்னீர்வயனாகேச்சரநகரின, மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே. (க)

சிறவார்புரமூன்றெரியச்சிலையிற், லுறவாக்கணையுய்த்தவனேயுயரு
நறவார்பொழினாகேச்சரநகரு, ளறவாவெனவல்வினையாசறுமே. (உ)

கல்லானிழன்மேயவனேகரும்பின், வில்லானெழில்வேவவிழித்தவனே
நல்லார்தொழுநாகேச்சரநகரிற், செல்வாவெனவல்வினைதேய்ந்தறுமே. (ங)

நகுவான்மதியோடரவும்புனலுந், தகுவார்சடையின்முடியாய்தவளந்
நகுவார்பொழினாகேசசரநகருட், பகவாவெனவல்வினைபற்றறுமே. (ச)

கலைமான்மறியுங்கனலும்மழுவு, நிலையாகியகையினனேநிகழு
நலமாகியநாகேச்சரநகருட், டலைவாவெனவல்வினைதானறுமே. (ரு)

குரையார்கழலாடநடங்குலவி, வரையான்மகள்காணமகிழ்ந்தவனே
நரையார்விடையேறுநாகேச்சரத்தெ, மரைசேயெனநீங்குமருந்துயரே. (சு)

முடையார்தருவெண்டலைகொண்டுலகிற், சடையார்பலிகொண்டுழல்காரணனே
நடையார்தருநாகேச்சரநகருட், சடையாவெனவல்வினைதானறுமே. (எ)

ஓயாதவரக்கனொடிந்தலற, நீயாரருள்செய்துநிகழ்ந்தவனே
வாயாரவழுத்துவர்நாகேச்சரத், தாயேயெனவல்வினைதானறுமே. (அ)

நெடியானொடுநான்முகனேடலுறச், சுடுமாலெரியாய்நிமிர்சோதியனே
நடுமாவயனாகேச்சரநகரே, யிடமாவுறைவாயெனவின்புறுமே. (கூ)

மலம்பாவியகையொடுமண்டையதுண், கலம்பாவியர்கட்டுரைவிட்டுலகி
னலம்பாவியநாகேச்சரநகருட், சிலம்பாவெனத்தீவினைதேய்ந்தறுமே. (கo)

கலமார்கடல்சூழ்தருகாழியர்கோன், றலமார்தருசெந்தமிழின்விரக
னலமார்தருநாகேச்சரத்தானைச், சொலன்மாலைகள்சொல்லநில்லாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரா, தேவியார்-குன்றமூலைநாயகியம்மை.

திருப்புகலி, பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கலியாழ்கடலோங்குபாருளீர், கலியாவினையல்லல்போயறுமிக்
கலியார்புரமெய்தவனுறைபு, கலியாநகர்போற்றிவாழ்மினே. (௧)

பண்ணியாள்வதோரேற்றர்பான்மதிக், கண்ணியார்கமழ்கொன்றைசேர்முடிப்
புண்ணியன்னுறையும்புகலியை, நண்ணுமின்னலமானவேண்டிலே. (௨)

வீசுமின்புரைகாதன்மேதகு, பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசநீற்றினன்பூம்புகலியைப், பேசுமின்பெரிதின்பமாகவே. (௩)

கடிகொள்கூவிளமத்தம்வைத்தவன், படிகொள்பாரிடம்பேசும்பான்மையன்
பொடிகொண்மேனியன்பூம்புகலியுள், அடிகளையடைந்தன்புசெய்யுமே. (௪)

பாதத்தாரொலிபல்சிலம்பின, ஓதத்தார்விடமுண்டவன்படை
பூதத்தான்புகலிந்நகர்தொழ, வேதத்தார்க்கிடமில்லையென்பரே. (௫)

மறையினானொலிமல்குவீணைய, னிறையினார்நிமிர்புன்சடையனெம்
பொறையினானுறையும்புகலியை, நிறையினார்தொழநேசமாகுமே. (௬)

கரவிடைமனத்தாரைக்காண்கிலா, னிரவிடைப்பலிகொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த்தான்புகலியைப், பரவிடப்பயில்பாவம்பாறுமே. (௭)

அருப்பினார்முலைமங்கைபங்கினன், விருப்பினானரக்கனுரஞ்செகும்
பொருப்பினான்பொழிலார்புகலியூ, ரிருப்பினானடியேத்திவாழ்த்துமே. (௮)

மாலுநான்முகன்றானும்வார்கழற், சீலமாமுடிதேடநீண்டெரி
போலுமேனியன்பூம்புகலியுட், பாலதாடியபண்பனல்லனே. (௯)

நின்றுதுய்ப்பவர்நீசர்தேரர்சொல், லொன்றதாகவையாவுணர்வினு
ணின்றவன்னிகழும்புகலியைச், சென்றுகைதொழச்செல்வமாகுமே. (௧௦)

புல்லமேறிதன்பூம்புகலியை, நல்லஞானசம்பந்தனாவினாற்
சொல்லுமாலையீரைந்தும்வல்லவர்க், கில்லையாம்வினையிருநிலத்துளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயில், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புடையினார்புள்ளிகால்பொருந்திய, மடையினார்மணிநீர்நெல்வாயிலார்
நடையினால்விரற்கோவணந்நயந், துடையினாரெமதுச்சியாரே. (௧)

வாங்கினார்மதின்மேற்கணைவெள்ளந், தாங்கினார்தலையாயதன்மையர்
நீங்குநீர்நெல்வாயிலார்தொழ, வோங்கினாரெமதுச்சியாரே. (௨)

நிச்சலேத்துநெல்வாயிலார்தொழ, விச்சையாலுறைவாரெம்மீசனார்
கச்சையாவதோர்பாம்பினார்கவி, னிச்சையாரெமதுச்சியாரே. (௩)

மறையினர்மழுவாளினர்மல்கு, பிறையினர்பிறையோடிலங்கிய
நிறையினர்நெல்வாயிலார்தொழு, மிறைவனாரெமதுச்சியாரே. (௪)

விருத்தனாகிவெண்ணீறுபூசிய, கருத்தனார்கனலாட்டுகந்தவர்
நிருத்தனார்நெல்வாயின்மேவிய, வொருத்தனாரெமதுச்சியாரே. (௫)

காரினார்கொன்றைக்கண்ணியார்மல்கு, பேரினார்பிறையோடிலங்கிய
சீரினார்நெல்வாயிலார்தொழு, மேரினாரெமதுச்சியாரே. (௬)

ஆதியாரந்தமாயினார்வினை, கோதியார்மதில்கூட்டழித்தவர்
நீதியார்நெல்வாயிலார்மறை, யோதியாரெமதுச்சியாரே. (௭)

பற்றினானரக்கன்கயிலையை, யொற்றினாரொருகால்விரலுற
செற்றியார்நெல்வாயிலார்தொழும், பெற்றியாரெமதுச்சியாரே. (௮)

நாடினார்மணிவண்ணனான்முகன், கூடினார்குறுகாதகொள்கையர்
நீடினார்நெல்வாயிலார்தலை, யோடினாரெமதுச்சியாரே. (௯)

குண்டமண்டுவர்க்கூறைமூடர்சொற், பண்டமாகவையாதபண்பினர்
விண்டயங்குநெல்வாயிலார்நஞ்சை, யுண்டகண்டரெம்முச்சியாரே. (௰)

நெண்பயங்குநெல்வாயிலீசனைச், சண்பைஞானசம்பந்தன்சொல்லிவை
பண்பயன்கொளப்பாடவல்லவர், விண்பயன்கொளும்வேட்கையாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு இந்திரநீலபருப்பதம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

குலவுபாரிடம்போற்றவீற்றிருந், திலகுமான்மழுவேந்துமங்கையர்
நிலவுமிந்திரநீலபர்ப்பதந், துலவினானடியுள்கநல்குமே. (௧)

குறைவிலாமதிசூடியாடல்வன், டறையுமாமலர்க்கொன்றைசென்னிசே
ரிறைவனிந்திரநீலபர்ப்பதத், துறைவினான்றனையோதியுய்ம்மினே. (௨)

என்பொனென்மணியென்னவேத்துவார், நம்பனான்மறைபாடுநாவின
னின்பனிந்திரநீலபர்ப்பதத், தன்பனபாதமேயடைந்துவாழ்மினே. (௩)

நாசமாம்வினைநன்மைதான்வரும், தேசமார்புகழாயசெம்மையெம்
மீசனிந்திரநீலபர்ப்பதங், கூசிவாழ்த்துதுங்குணமதாகவே. (௪)

மருவுமான்மடமாதொர்பாகமாய்ப், பரவுவார்வினைதீர்த்தபண்பின
னிரவனிந்திரநீலபர்ப்பதத், தருவிசூடுமடிகள்வண்ணமே. (௫)

வெண்ணிலாமதிசூடும்வேணிய, னெண்ணிலார்மதிலெய்தவில்லின
னண்ணிலிந்திரநீலபர்ப்பதத், தண்ணிலாவுமொருவனல்லனே. (௬)

கொடியவேற்றினர்கூற்றுதைத்தவர், பொடிகொண்மேனியிற்பூண்டபாம்பின
ரடிகளிந்திரநீலபர்ப்பத, முடையவாணனுகந்தகொள்கையே. (௭)

எடுத்தவல்லரக்கன்கரம்புய, மடர்த்ததோர்விரலானவனையாட்
படுத்தனிந்திரநீலபர்ப்பத, முடித்தலம்முறமுயலுமின்பமே. (௮)

பூவினானொடுமாலும்போற்றுறுந், தேவனிந்திரநீலபர்ப்பதம்
பாவியாவெழுவாரைத்தம்வினை, கோவியாவருங்கொல்லுங்கூற்றமே. (௯)

கட்டர்குண்டமண்டேரர்சீரிலர், விட்டரிந்திரநீலபர்ப்பத
மெட்டனைநினையாததென்கொலோ, சிட்டதாயுறையாதிசீர்களே. (௧௦)

கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியா, னிந்திரன்றொழுநீலபர்ப்பதத்
தந்தமில்லியையேத்துஞானசம், பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது
சுவாமிபெயர்-நீலாசலநாதர், தேவியார்-நீலாம்பிகையம்மை.

திருக்கருவூர்த்திரு ஆனிலை, பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ், சுண்டலாருயிராயதன்மையர்
கண்டனார்கருவூருளானிலை, யண்டனாரருளீயுமன்பரே. (௧)

நீதியார்நினைந்தாயநான்மறை, யோதியாரொடுங்கூடலார்குழைக்
காதினார்கருவூருளானிலை, யாதியாரடியார்தமன்பரே. (௨)

விண்ணுலாமதிசூடிவேதமே, பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை, யண்ணலாரடியார்க்குநல்லரே. (௩)

முடியர்மும்மதயானையீருரி, பொடியர்பூங்கணைவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூருளானிலை, யடிகள்யாவையுமாயவீசரே. (௪)

பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர், மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையர்கருவூருளானிலை, யங்கையோரவத்தமண்ணலே. (௫)

தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியின், மேவர்மும்மதிலெய்தவேட்கையர்
காவலர்கருவூருளானிலை, மூவராகியமொய்ம்பரல்லரே. (௬)

பண்ணினார்படியேற்றர்நீற்றர்மெய்ப், பெண்ணினார்பிறைதாங்குநெற்றியார்
கண்ணினார்கருவூருளானிலை, நண்ணினார்நமையாளுநாதரே. (௭)

கடுத்தவாளரக்கன்கயிலையை, யெடுத்தவன்றலைதோளுந்தாளினு
லடர்த்தவன்கருவூருளானிலை, கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே. (௮)

உழுதுமாநிலத்தேனமாகிமா, றொழுதுமாமலரோனுங்காண்கிலார்
எழுதினன்கருவூருளானிலை, முழுதுமாகியமூர்த்திபாதமே. (௯)

புத்தர்புன்சமணாதர்பொய்யுரைப், பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை, யத்தர்பாதமடைந்துவாழ்மினே. (௧௦)

கந்தமார்பொழிற்காழிஞானசம், பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்தும்வல்லவர், சிந்தையிற்றுயராயதீர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர், தேவியார்-கிருபாநாயகியம்மை.

திருப்புகலி-திருவிராகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னியகலைப்பொருளுமூவுலகில்வாழ்வும
பன்னியவொருத்தர்பழவூர்வினவினாலம்
துன்னியிமையோர்கடிசெய்துமுனவணங்குஞ்
சென்னியர்விருப்புறுதிருப்புகலியாமே. (௧)

வண்டிரைமதிச்சடைமிலைத்தபுனல்சூடிப்
பண்டெரிகையாடுபரமன்பதியதென்பர்
புண்டரிகவாசமதுவீசுமலர்ச்சோலைத்
தெண்டிரைகடற்பொலிதிருப்புகலியாமே. (௨)

பாவணவுசிந்தையவர்பத்தரொடுகூடி
நாவணவுமந்தணன்விருப்பிடமதென்பர்
பூவணவுசோலையிருண்மாலையெதிர்கூரத்
தேவணவிழாவளர்திருப்புகலியாமே. (௩)

மைதவழுமாமிடறன்மாநடமதாடிக்
கைவளையினாளொடுகலந்தபதியென்பர்
செய்பணிபெருத்தெழுமுருத்திரர்கள்கூடித்
தெய்வமதிணக்குறுதிருப்புகலியாமே. (௪)

முன்னமிருமூன்றுசமயங்களவையாகிப்
பின்னையருள்செய்தபிறையாளனுறைகோயில்
புன்னையமலர்ப்பொழில்களக்கினொளிகாட்டச்
செந்நெல்வயலார்தருதிருப்புகலியாமே. (௫)

வங்கமலியுங்கடல்விடத்தினைநுகர்ந்த
வங்கணனருத்திசெய்திருக்குமிடமென்பர்
கொங்கணவியன்பொழிலின்மாசுபனிமூசத்
தெங்கணவுதேன்மலிதிருப்புகலியாமே. (௬)

நல்குரவுமின்பமுநலங்களவையாகி
வல்வினைகடீர்த்தருளுமைந்தனிடமென்பர்

மல்குமடியார்கள்படியாரவிசைபாடிச்
செல்வமறையோருறைதிருப்புகலியாமே. (௭)

பரப்புறுபுகழ்ப்பெருமையாளன்வரைதன்னா
லரக்கனையடர்த்தருளுமண்ணலிடமென்பர்
நெருக்குறுகடற்றிரைகண்முத்தமணிசிந்தச்
செருக்குறுபொழிற்பொலிதிருப்புகலியாமே. (௮)

கோடலொடுகூன்மதிகுலாயசடைதன்மே
லாடரவம்வைத்தருளுமப்பனிருவர்க்கு
நேடவெரியாகியிருபாலுமடிபேணித்
தேடவுறையுந்நகர்திருப்புகலியாமே. (௯)

கற்றமணருற்றுலவுதேரருரைசெய்த
குற்றமொழிகொள்கையதிலாதபெருமானூர்
பொற்றொடிமடந்தையருமைந்தர்புலனைந்துஞ்
செற்றவர்வனப்புறுதிருப்புகலியாமே (௧௦)

செந்தமிழ்பரப்புறுதிருப்புகலிதன்மே
லந்தமுதலாகிநடுவாயபெருமானைப்
பந்தனுரைசெய்தமிழ்கள்பத்துமிசைகூர
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறம்பயம் - திருவிராகம், பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலைந்தவர்மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்துனதுநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். (௧)

விரித்தனைதிருச்சடையரித்தொழுகுவெள்ளந்
தரித்தனையதன்றியுமிகப்பெரியகாலன்
னெருத்திறவுதைத்தனையிலங்கிழையோர்பாகம்
பொருத்துதல்கருத்தினைபுறம்பயமமர்ந்தோய். (௨)

விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய். (௩)

வளங்கெழுகடும்புனலொடுஞ்சடையொடுங்கத்
துளங்கமரிளம்பிறைசுமந்ததுவிளங்க

வுளங்கொளவளர்ந்தவர்சுடுஞ்சுடலைநீறு
புளங்கொளவிளங்கினைபுறம்பயமமர்ந்தோய். (௪)

பெரும்பிணிபிறப்பினொடிறப்பிலையோர்பாகங்
கரும்பொடுபடுஞ்சொலின்மடந்தையைமகிழ்ந்தோய்
சுரும்புணவரும்பவிழ்திருந்தியெழுகொன்றை
விரும்பினைபுறம்பயமமர்ந்தவிறையோனே. (௫)

அனற்படுதடக்கையவரெத்தொழிலரேனு
நினைப்புடை மனத்தவர்வினைப்பகையுநீயே
தனற்படுசுடர்ச்சடைதனிப்பிறையொடொன்ற
புனற்படுகிடக்கையைபுறம்பயமமர்ந்தோய். (௬)

மறத்துறைமறுத்தவர்தவத்தடியருள்ளம்
மறத்துறையொறுத்துனதருட்கிழமைபெற்றோர்
திறத்துளதிறத்தினைமதித்தகலநின்றும்
புறத்துளதிறத்தினைபுறம்பயமமர்ந்தோய். (௭)

இலங்கையரிறைஞ்சிறைவிலங்கலின்முழங்க
வுலங்கெழுதடக்கைகளடர்த்திடலுமஞ்சி
வலங்கொளவெழுந்தவனலங்கவினவஞ்சு
புலன்களைவிலங்கினைபுறம்பயமமர்ந்தோய். (௮)

வடங்கெடநுடங்குணவிடந்தவிடையல்லிக்
கிடந்தவனிருந்தவனளந்துணரலாகார்
தொடர்ந்தவருடம்பொடுநிமிர்ந்துடன்வணங்கப்
புடங்கருள்செய்தொன்றினைபுறமபயமமர்ந்தோய். (௯)

விடக்கொருவர்நன்றெனவிடக்கொருவர்தீதென
வுடற்குடைகளைந்தவருடம்பினைமறைக்கும்
படக்கர்கள்பிடக்குரைபடுத்துமையோர்பாக
மடக்கினைபுறம்பயமமர்ந்தவுரவோனே. (௧௦)

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தம்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே. (௧௧

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சாட்சிவரதநாதர், தேவியார்-கரும்பன்னசொல்லம்மை.

திருக்கருப்பறியலூர்-திருவிராகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபற்றவைதுயக்கறவறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கண்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. (க)

வண்டணைசெய்கொன்றையதுவார்சடைகண்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினோடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவோரம்பாற்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே. (உ)

வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முனாடுகுழைதாழுங்
காதவனிருப்பதுகருப்பறியலூரே. (௩)

மடம்படுமலைக்கிறைவன்மங்கையொருபங்கன்
னுடம்பினைவிடக்கருதிநின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலாற்
கடந்தவனிருப்பதுகருப்பறியலூரே (௪)

ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
நிருத்தனவனீதியவனித்தநெறியாய
விருத்தனவன்வேதமெனவங்கமவையோதுங்
கருத்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௫)

விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகள்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினாளையணைவிப்பா
னெண்ணிவருகாமனுடல்வேவவெரிகாலுங்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே. (௬)

ஆதியடியைப்பணியவப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளாகவுடன்புக்குத்
தீதுசெயவந்தணையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதுகருப்பறியலூரே. (௭)

வாய்ந்தபுகழ்விண்ணவருமண்ணவருமஞ்சப்
பாய்ந்தமர்செயுந்தொழிலிலங்கைநகர்வேந்தற்
கேய்ந்தபுயமத்தனையுமிற்றுவிழமேனாட்
காய்ந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௮)

பரந்ததுநிரந்துவருபாய்திரையகங்கை
கரந்தொர்சடைமேன்மிசையுகந்தவளைவைத்து

நிரந்தரநிரந்திருவர்தேடியறியாமற்
கரந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௯)
அற்றமறைபாவமணராதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொலைவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொகுடிக்கோயில்
கற்றெனவிருப்பதுகருப்பறியலூரே. (௧௦)
நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்ளைப்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குற்றம்பொறுத்தநாதர், தேவியார்-கோல்வளையம்மை.

திருவையாறு - திருவிராகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேச
ருருத்திகழெழிற்கயிலைவெற்பிலுறைதற்கே
விருப்புடையவற்புதரிருக்குமிடமேரார்
மருத்திகழ்பொழிற்குலவுவண்டிருவையாறே. (௧)
கந்தமரவுந்துபுகையுந்தவிலவிளக்கே
ரிந்திரனுணர்ந்துபணியெந்தையிடமெங்கு
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சாரா
வந்தவனிலந்தணவுவண்டிருவையாறே. (௨)
கட்டுமவடமெட்டுமுறுவட்டமுழவத்திற்
கொட்டுகரமிட்டவொலிதட்டும்வகைநந்திக்
கிட்டமிகநட்டமவையிட்டவரிடஞ்சீர்
வட்டமதிலுட்டிகழும்வண்டிருவையாறே. (௩)
நண்ணியோர்வடத்தினிழலுல்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணின்மிசைவந்தணவுவண்டிருவையாறே. (௪)
வென்றிமிகுதாருகனதாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
நின்றுநடமாடியிடநீடுமலர்மேலான்
மன்றன்மலியும்பொழில்கொள்வண்டிருவையாறே. (௫)

பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெறுத்திக்
கோதையரிடும்பலிகொளும்பரனிடம்பூ
மாதவிமணங்கமழும்வண்டிருவையாறே. (௬)

துன்னுகுழன்மங்கையுமைநங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்துழல்பிஞ்ஞகனுமங்கே
யென்னசதியென்றுரைசெயங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில்வண்டிருவையாறே. (௭)

இரக்கமில்குணத்தொடுலகெங்குநலிவெம்போ
ரரக்கன்முடியத்தலைபுயத்தொடுமடங்கத்
துரக்கவிரலிற்சிறிதுவைத்தவரிடஞ்சீர்
வரககருணையாளர்பயில்வண்டிருவையாறே. (௮)

பருத்துருவதாகிவிணடைந்தவனொர்பன்றிப்
பெருத்துருவதாயுலகிடந்தவனுமென்றுங்
கருத்துருவொணாவகைநிமிர்ந்தவனிடங்கா
வருத்துவகைநீர்கொள்பொழில்வண்டிருவையாறே. (௯)

பாக்கியமதொன்றுமில்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பொதிந்துதிரிவார்தா
நோக்கரியதத்துவனிடம்படியின்மேலான்
மாக்கமுறநீடுபொழில்வண்டிருவையாறே. (௧0)

வாசமலியும்பொழில்கொள்வண்டிருவையாற்றி
லீசனையெழிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவல்லார்
நேசமலிபத்தரவர்நின்மலனடிக்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநள்ளாறு-திருவிராகம், பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலசெஞ்சடையெமைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. (௧)

விண்ணியல்பிறைப்பிளவறைப்புனன்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேற்
பண்ணியநடத்தொடிசைபாடுமடியார்க
[illegible]பாடுசெய்நள்ளாறே. (௨)

விளங்கிழைமடந்தைமலைமங்கையொருபாகத்
துளங்கொளவிருத்தியொருத்தனிடமென்பர்
வளங்கெழுவுதீபமொடுதூபமலர்தூவி
நளன்கெழுவிநாளும்வழிபாடுசெய்நள்ளாறே. (௩)

கொக்கரவர்கூன்மதியர்கோபர்திருமேனிச்
செக்கரவர்சேருமிடமென்பர்தடமூழ்கிப்
புக்கரவிஞ்சையரும்விண்ணவருநண்ணி
நக்கரவர்நாமநினைவெய்தியநள்ளாறே (௪)

நெஞ்சமிதுகண்டுகொளுனக்கெனநினைந்தார்
வஞ்சமதறுத்தருளுமற்றவனைவானோ
ரஞ்சமதுகாகியவர்கைதொழுதெழுந்த
நஞ்சமுதுசெய்தவனிருப்பிடநள்ளாறே. (௫)

பாலனடிபேணவவனுருயிர்குறைக்குங்
காலனுடன்மாளமுனுதைத்தவரனூராங்
கோலமலர்நீர்க்குடமெடுத்துமறையாளர்
காலின்வழிநின்றுதொழில்பேணியநள்ளாறே. (௬)

நீதியர்நெடுந்தகையர்நீணமலையர்பாவை
பாதியர்பராபரர்பரம்பரரிருக்கை
வேதியர்கள்வேள்வியொழியாதுமறைநாளு
மோதியரனுமமுழுணர்த்திடுநள்ளாறே. (௭)

தடுத்துவலரக்கன்முனெருக்கிவரைதன்னை
யெடுத்தவனமுடித்தலைகள்பத்துமிகுதோளு
மடர்த்தவர்தமக்கிடமதென்பரளிபாட
நடத்தகலவைத்திரள்கள்வைகியநள்ளாறே. (௮)

உயர்ந்தவனுருக்கொடுதிரிந்துலகமெல்லாம
பயந்தவனினைப்பரியபண்பனிடமெனபர
வியந்தமரர்மெச்சமலர்மல்குபொழிலெங்கு
நயந்தருமவேதவொலியார்திருநள்ளாறே. (௯)

சிந்தைதிருகற்சமணர்தேரர்தவமென்னும்
பந்தனையறுத்தருளுகின்றபரமன்னூர்
மந்தமுழவந்தருவிழாவொலியும்வேதச்
சந்தம்விரவிப்பொழின்முழங்கியநள்ளாறே. (௧0)

ஆடலரவார்சடையனாயிழைதனோடு
நாடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொற்
பாடலுடையாரையடையாபழிகளேயே. திருச்சிற்றம்பலம்.

திருப்பழுவூர்-திருவிராகம், பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தன்மிகுமூவிலைநல்வேலன்விரிநூல
னத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்
மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. (௧)

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மே
லாடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. (௨)

வாலியபுரத்திலவர்வேவவிழிசெய்த
போலியவொருத்தர்புரிநூலரிடமென்பர்
வேலியின்விரைக்கமலமன்னமுகமாதர்
பாலெனமிழற்றிநடமாடுபழுவூரே. (௩)

எண்ணுமோரெழுத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமதென்பர்
மண்ணின்மிசையாடிமலையாளர்தொழுதேத்திப்
பண்ணினொலிகொண்டுபயில்கின்றபழுவூரே. (௪)

சாதல்புரிவார்சுடலைதன்னினடமாடு
நாதனமையாளுடையநம்பனிடமென்பர்
வேதமொழிசொல்லிமறையாளரிறைவன்றன்
பாதமவையேத்தநிகழ்கின்றபழுவூரே. (௫)

மேவயருமும்மதிலும்வெந்தழல்விளைத்து
மாவயரவன்றுரிசெய்மைந்தனிடமென்பர்
பூவையைமடந்தையர்கள்கொண்டுபுகழ்சொல்லிப்
பாவையர்கள்கற்பொடுபொலிந்தபழுவூரே. (௬)

மந்தணமிருந்துபுரிமாமடிதன்வேள்வி
சிந்தவிளையாடுசிவலோகனிடமென்ப
ரந்தணர்களாகுதியிலிட்டவகின்மட்டார்
பைந்தொடிநன்மாதர்சுவடொற்றுபழுவூரே. (௭)

உரக்கடல்விடத்தினைமிடற்றிலுறவைத்தன்
றரக்கனையடர்த்தருளுமப்பனிடமென்பர்
குரக்கினம்விரைப்பொழிலின்மீதுகனியுண்டு
பரக்குறுபுனற்செய்விளையாடுபழுவூரே. (௮)

நின்றநெடுமாலுமொருநான்முகனுநேட
வன்றுதழலாயகிமிருமாதியிடமென்ப
ரொன்றுமிருமூன்றுமொருநாலுமுணர்வார்கண்
மன்றினிலிருந்துடன்மகிழ்ந்தபழுவூரே. (௯)

மொட்டையமணாதர்துகின்மூடுவிரிதேரர்
முட்டைகண்மொழிந்தமுனிவான்றனிடமென்பர்
மட்டைமலிதாழையிளநீரதிசைபூகம்
பட்டையொடுதாறுவிரிகின்றபழுவூரே. (௧0)

அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச்
சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவாவானமுடையாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-வடவனநாதா-தேவியார்-அருந்தவநாயகியம்மை.

திருக்குரங்காடுதுறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பரவக்கெடுமவல்வினைபாரிடஞ்சூழ
விரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
யரவச்சடையந்தணனமேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (௧)

விண்டார்புரமூன்றுமெரித்தவிமல
னிண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருமென்குழன்மங்கையோர்பாகங்
கொண்டானகர்போலகுரங்காடுதுறையே. (௨)

நிறைவில்புறங்காட்டிடைநேரிழையோடு
மிறைவில்லெரியான்மழுவேந்திநின்றாடி
மறையின்னொலிவானவர்தானவரேத்துங்
குறைவில்லவனூர்குரங்காடுதுறையே. (௩)

விழிக்குந்நுதன்மேலொருவெண்பிறைசூடித்
தெழிக்கும்புறங்காட்டிடைச்சேர்ந்தெரியாடிப்
பழிக்கும்பரிசேபலிதேர்ந்தவனூர்பொன்
கொழிக்கும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (௪)

நீறார்தருமேனியனெற்றியோர்கண்ண
னேறார்கொடியெம்மிறையீண்டெரியாடி

யாரூர்சடையந்தணனுயிழையாளோர்
கூறனகர்போல்குரங்காடுதுறையே. (ரு)

களிரும்மலர்க்கொன்றையுநாறுகரந்தைத்
துளிருஞ்சுலவிச்சுடுகாட்டெரியாடி
மிளிரும்மரவார்த்தவன்மேவியகோயில
குளிரும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (சு)

பழகும்வினைதீர்ப்பவன்பார்ப்பதியோடும்
முழவங்குழன்மொந்தைமுழங்கெரியாடும்
மழகன்னயின்மூவிலைவேலவலனோந்துங்
குழகன்னகர்போல்குரங்காடுதுறையே, (எ)

வரையார்த்தெடுத்தவ்வரக்கன்வலியொல்க
நிரையார்விரலானெரித்திட்டவனூராங்
கரையார்ந்திழிகாவிரிக்கோலக்கரைமேற
குரையார்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (அ)

நெடியானொடுநான்முகனுநினைவொண்ணுப
படியாகியபண்டங்களின்றெரியாடி
செடியார்தலையேந்தியசெங்கண்வெள்ளேற்றின்
கொடியானகர்போல்குரங்காடுதுறையே. (கூ)

துவராடையர்வேடமலாச்சமண்கையர்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதவனூரா
நவையார்மணிபொன்னகில்சந்தனமுந்திக்
குவையார்கரைசேர்குரங்காடுதுறையே. (கo)

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேற்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குலைவணங்குநாதர்-தேவியார்-அழகுசடைமுடியம்மை.

திரு இரும்பூளை - வினாவுரை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனாகி
யேராரிரும்பூளையிடங்கொண்டவீசன்
காரார்கடனஞ்சமுதுண்டகருத்தே. (க)

தொழலார்கழலேதொழுதொண்டர்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனாகி

யெழிலாரிரும்பூளையிடங்கொண்டவீசன்
கழறான்கரிகானிடையாடுகருத்தே. (௨)

அன்பாலடிகைதொழுவீரறியீரே
மின்போன்மருங்குன்மடவாளொடுமேவி
யின்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
பொன்போற்சடையிற்புனல்வைத்தபொருளே. (௩)

நச்சித்தொழுவீர்கணமக்கிதுசொல்லீர்
கச்சிப்பொலிகாமக்கொடியுடன்கூடி
யிச்சித்திரும்பூளையிடங்கொண்டவீச
னுச்சித்தலையிற்பலிகொண்டுழலூணே. (௪)

சுற்றார்ந்தடியேதொழுவீரிதுசொல்லீர்
நற்றாழ்குழனங்கையொடும்முடனாகி
யெற்றேயிரும்பூளையிடங்கொண்டவீசன்
புற்றாடரவோடென்புபூண்டபொருளே. (௫)

தோடார்மலர்தூயதொழுதொண்டர்கள்சொல்லீர்
சேடார்குழற்சேயிழையோடுடனாகி
யீடாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
காடார்கடுவேடுவனானகருத்தே. (௬-௭)

ஒருக்கும்மனத்தன்பருள்ளீரிதுசொல்லீர்
பருக்கைமதவேழமுரித்துமையோடு
மிருக்கையிரும்பூளையிடங்கொண்டவீச
னரக்கன்னுரந்தீர்த்தருளாக்கியவாறே. (௮)

துயராயினநீங்கித்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
கயலார்கருங்கண்ணியொடும்முடனாகி
யியல்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
முயல்வாரிருவர்க்கெரியாகியமொய்ம்பே. (௯)

துணைநன்மலர்தூய்த்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
பணைமென்முலைப்பார்ப்பதியோடுடனாகி
யிணையிலிரும்பூளையிடங்கொண்டவீச
னணைவில்சமண்சாக்கியமாக்கியவாறே. (௧0)

எந்தையிரும்பூளையிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தோங்குவர்பான்மையினாலே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காசியாரண்ணியேசுவரர்-தேவியார்-ஏலவார்குழலம்மை.

திருமறைக்காடு - கதவடைக்கப்பாடியது - பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
விதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (௧)

சங்கந்தரளம்மவைதான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே, (௨)

குரவங்குருக்கத்திகள்புன்னைகண்ஞாழன்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மே
லரவம்மதியோடடைவித்தவழகே. (௩)

படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்தம்
மடலம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
வுடலம்முமைபங்கமதாகியுமென்கொல
கடனஞ்சமுதாவதுவுண்டகருத்தே. (௪)

வானோர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனார்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
வேனோர்தொழுதேத்தவிருந்தநீயென்கொல
கானார்கடுவேடுவனானகருத்தே. (௫)

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
வுலகேழுடையாய்கடைதோறுமுன்னென்கொ
றலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. (௬)

வேலாவலயத்தயலேமிளிர்வெய்துஞ்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. (௭)

கலங்கொள்கடலோதமுலாவுகரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்கும்மறைக்காடா
விலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
லலங்கல்விரலூன்றியருள்செய்தவாறே. (௮)

கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றுந்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா

வேனங்கழுகானவருன்னேமுனென்கொல்
வானந்தலைமண்டியுங்கண்டிலாவாறே (௯)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
வோதம்முலவும்மறைக்காட்டிலுறைவா
யேதில்சமண்சாக்கியர்வாக்கிவையென்கொ
லாதரொடுதாமலர்தூற்றியவாறே. (௧0)

காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாயநதறிவித்த
வேழின்னிசைமாலையீரைநதிவைவல்லார
வாழியுலகோரதொழவானடைவாரே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுந்நியமஞ்செய்துநீரமலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவனகோயின்
மத்தயானையின்கோடும்வெண்பீலியுமவாரித
தத்துநீரப்பொன்னிசாகரமேவுசாயக்காடே (௧)

பண்டலைக்கொண்டுபூதங்களபாடநின்றுடும
வெண்டலைககருங்காடுறைவேதியன்கோயில
கொண்டலைத்திகழ்பேரிமுழங்ககுலாவித
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. (௨)

நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுசூடுமமரர்பிரானுறைகோயி
லூறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத
தாறுதண்கதலிப்புதன்மேவுசாய்க்காடே. (௩)

வரங்கள்வண்புகழ்மன்னியவெந்தைமருவார்
புரங்கண்மூன்றும்பொடிபடவெய்தவன்கோயி
லிரங்கலோசையுமீட்டியர்சாத்தொடுமீண்டித்
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. (௪)

ஏழைமாதர்கடைதோறுமிடுபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயின்
மாழையொண்கண்வளைக்கைநுளைச்சியர்வண்பூந்
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. (௫)

துங்கவானவர்சூழ்கடறுங்கடைபோதி
லங்கோர்நீழலளித்தவெம்மானுறைகோயில்

வங்கமங்கொளிரிப்பியுமுத்துமாமணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. (சு)

வேதநாவினர்வெண்பளிங்கின்குழைக்காத
ரோதநஞ்சணிகண்டருகந்துறைகோயின்
மாதர்வண்டுதன்காதல்வண்டாடியபுன்னைத்
தாதுகண்டுபொழிலின்மறைந்தூடுசாய்க்காடே. (எ)

இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
வரக்கனைநெரித்தருள்செய்தவன்கோயின்
மருக்குலாவியமல்லிகைசெண்பகமவண்பூந்
தருக்குலாவியதண்பொழினீடுசாய்க்காடே. (அ)

மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலையார்விடமுண்டவர்மேவியகோயில்
சேலினேர்விழியார்மயிலாலச்செருநதி
காலையேகனகம்மலர்கின்றசாய்க்காடே. (கூ)

ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்று
மாத்தமாகவறிவரிதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. (க0)

ஏனையோர்புகழ்ந்தேத்தியவெந்தைசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோனவிலபத்து
மூனமின்றியுரைசெயவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மானிலத்தோரே. (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சாயாவனேசுவரர் - தேவியார் - குயிலுநன்மொழியம்மை.

திருக்ஷேத்திரக்கோவை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லம்நல்லம்-வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி-கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூரவயனின்றியூர்குன்றியூரும்-குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்- பிதற்றாயபிறைசூடிதன்பேரிடமே. (க

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா - நகலாமுதுகுன்றங்கொடுங்குன்
றும், கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்-பயில்கற்குடிகாளத்திவாட்போ
கியும், பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்-பரங்குன்றம்பருப்பத
பேணிநின்றே,யெண்ணாவிரவும்பகலு-மிடும்பைக்கடனீந்தலாங்காரணமே(உ

அட்டானமென்றோதியநாலிரண்டு - மழகனுறைகாவனைத்துந்துறைக, ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்-குளமூன்றுங்களமஞ்சும்பாடிநா ன்கு, மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன் - மதிக்குமிடமாகியபாழிமூன்று ஞ், சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா - யரும்பாவங்களாயினதேய்ந்தறு மே. (௩)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்-பொடிப்பூசிநீறணிவானமர்கா ட்டுப்பள்ளி, சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி - திருநனிபள்ளிசீரம யேந்திரத்துப், பிறப்பில்லவன்பள்ளிவெள்ளைச்சடையான் - விரும்புமிடைப் பள்ளிவண்சக்கரமா, லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி - யுணராய்மட நெஞ்சமேயுன்னிநின்றே. (௪)

ஆறைவடமாகறலம்பரையா - றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்சேறை துலைபுகலூரகலாதிவை - காதலித்தானவன்சேர்பதியே (௫)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு - மதிகூர்திருக்கூடலிலாலவாயு மினவஞ்சொலிலாவிடைமாமருது மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங் கனமஞ்சினமால்விடையான்விரும்புங் - கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர் தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின் - றவமாமலமாயினதானறுமே ()

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராமம் - முண்டீச்சரம்வாதவூர்வாரணசி காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டு - கடலொற்றியூர்மற்றுறையூரவையுங் கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்-கொடுங்கோவலூர்திருக்குணவாயில குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதிநியமம்,

போற்றாரடியார்வழிபாடொழியாததென்-புறமபயம்பூவணம்பூழியூருங் காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோ - ளெரித்தானுறைகோயிலென்றென் றுநீகருதே. (அ)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக - னெடுவாயில்குறும்பலாநீடுதிரு நற்குன்றம்வலம்புரநாகேச்சுர-நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர் கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த - கடலவண்ணனுமாமலரோனுங்காணச் சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங் - குடமூக்கென்றுசொலலிக்குலாவு மினே. (௯)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ் - குருந்தங்குடிதேவன்குடிமருவு மத்தங்குடிதண்டிருவண்குடியு - மலம்புஞ்சலந்தண்சடைவைத்துகந்த நித்தனிமலனுமையோடுங்கூட - நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப் புத்தர்புறங்கூறியபுன்சமணர் - நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே ()

அம்மானையருந்தவமாகிநின்ற-வமரர்பெருமான்பதியானவுன்னிக் கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக் - கிறைவன்சிவஞானசம்பந்தன்

சொன்ன, விம்மாலையீரைந்துமிருநிலத்தி-லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாலெருவாவிரும்புமடியார் விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (௧௧

திருச்சிற்றம்பலம்

௫ - வதில்-இரண்டுசரணமும், ௭ - வதில்-மூன்றுசரணமும், ௮ - வதில்-இரண்டரைசரணமும் இருக்கின்றன.

குன்றியூர் - இடைப்பள்ளி - மாட்டூர் - வாதலூர் - வாரணாசி - கோட்டூர்-குணவாயில் - தெற்குன்றம் - நற்குன்றம் - நெடுவாயில்-உஞ்சேனைமாகாளம்-குத்தங்குடி - குருதேவணகுடி - மத்தங்குடி - திருவணகுடி - இவைகட்குத் தனித்தனி தேவாரமில்லாமையால் வைப்புத்தலமென்று சொலலப்படும்.

திருப்பிரமபுரம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானாவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. (௧)

தாமென்றுமனந்தளராத்தகுதியராயுலகத்துக்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையினா
னோமென்றுமறைபயில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்ந்தகண்ணானே. (௨)

நன்னெஞ்சேயுனையிரந்தேனம்பெருமான்றிருவடியே
யுன்னெஞ்செய்திருகண்டாயுய்வதனைவேண்டுதியே
லன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும
பன்னுஞ்சீர்வாயதுவேபார்க்கண்ணேபரிந்திடவே. (௩)

சாநாளின்றிம்மனமேசங்கைதனைத்தவிர்ப்பிக்குங்
கோநாளுந்திருவடிக்கேகொழுமலர்தூவெத்தனையுந்
தேனாரும்பொழிற்பிரமபுரத்துறையுந்தீவணனை
நாநாளுநன்னியமஞ்செய்தவன்சீர்நவின்றேத்தே. (௪)

கண்ணுதலான்வெண்ணீற்றான்கமழ்சடையான்விடையேறி
பெண்ணிதமாமுருவத்தான்பிஞ்ஞகன்பேர்பலவுடையான்
விண்ணுதலாய்த்தோன்றியசீர்ப்பிரமபுரந்தொழவிரும்பி
யெண்ணுதலாஞ்செல்வத்தையியல்பாகவறிந்தோமே. (௫)

எங்கேனுமியாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்றன்மைகளே. (௬)

சிலையதுவெஞ்சிலையாகத்திரிபுரமூன்றெரிசெய்த
விலைதுணைவேற்றடக்கையனேந்திழையாளொருகூற
னலைபுனல்சூழ்பிரமபுரத்தருமணியையடிபணிந்தா
னிலையுடையபெருஞ்செலவநீடுலகிற்பெறலாமே. (எ)

எரித்தமயிர்வாளரக்கன்வெற்பெடுக்கத்தோளொடுதா
ணெரித்தருளுஞ்சிவமூர்த்திநீறணிந்தமேனியனு
னுரித்தவரித்தோலுடையானுறைபிரமபுரந்தன்னைத்
தரித்தமனமெப்போதும்பெறுவார்தாந்தக்காரே (அ)

கரியானுநான்முகனுங்காணாமைக்கனலுருவா
யரியானும்பரமேட்டியரவஞ்சேர்கலத்தான
றெரியாதானிருந்துறையுந்திகழ்பிரமபுரஞ்சேர
வுரியார்தாமேழுலகுரு -ளுளவுரியாரே. (கூ)

உடையிலார்சீவரத்தார்தன்பெருமையுணர்வரியான்
முடையிலாவெண்டலைக்கைமூர்த்தியாந்திருவுருவன்
பெடையிலாவண்டாடும்பொழிற்பிரமபுரத்துறையுஞ்
சடையிலார்வெண்பிறையான்றாள்பணிவார்தக்காரே. (க0)

தன்னடைந்தார்க்கின்பங்கடருவானைத்தத்துவனைக்
கன்னடைந்தமதிற்பிரமபுரத்துறையுங்காவலனை
முன்னடைந்தான்சம்பந்தன்மொழிபத்துமிவைவல்லார்
பொன்னடைந்தார்போகங்கள்பலவடைந்தார்புண்ணியரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையாபசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (க)

போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (உ)

நீநாளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளுநவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. (ங)

கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபூஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபாதமே. (௪)

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்படரசடைமேற்பான்மதியந்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றாணிழற்கீ
ழோங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே. (௫)

சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனைமுன்
தீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்றிருமுடிமே
லோய்ந்தாரமதிசூடியொளிதிகழுமலைமகடோ
டேய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையானே. (௬)

மங்குறோய்மணிமாடமதிதவழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டானை
கொங்குலாவரிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே (௭)

தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப
படவரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனையுந
தடைவரையாற்றடைவரைத்தோளூன்றினான்சாய்க்காட்டை
யிடவகையாலடைவோமென்றெண்ணுவார்க்கிடரிலையே. (௮)

வையநீரேற்றானுமலருறையுநான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானை
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே (௯)

குறங்காட்டுநால்விரற்கோவணத்துக்கோலோவிப்போ
யறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே. (௧௦)

நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியா
ரம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தினையு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருஆக்கூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாடரவுமாமையுந்
தொக்கிருந்தமார்பினன்றோலுடையான்வெண்ணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௧)

நீராரவார்சடையானீறுடையானேறுடையான்
காரார்பூங்கொன்றையினான்காதலித்ததொல்கோயில்
கூராரல்வாய்நிறையக்கொண்டயலேகோட்டகத்திற்
றாராமாடாக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௨)

வாளார்கண்செந்துவர்வாயமாமலையான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப்புல்கினான்றொல்கோயில
வேளாளரென்றவர்கள்வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௩)

கொங்குசேர்தண்கொன்றைமாலையினான்கூற்றடரப்
பொங்கினான்பொங்கொளிசேர்வெண்ணீற்றான்பூங்கோயி
லங்கமாறோடுமருமறைகளைவேள்வி
தங்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௪)

வீக்கினானாடரவம்வீந்தழிந்தாரவெண்டலையென்
பாக்கினான்பலகலன்களாதரித்துப்பாகம்பெ
ண்ணாக்கினான்றொல்கோயிலாம்பலம்பூம்பொய்கைபுடைத்
தாக்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௫)

பண்ணொளிசேர்நான்மறையான்பாடலினோடாடலினான்
கண்ணொளிசேர்நெற்றியினான்காதலித்ததொல்கோயில்
விண்ணொளிசேர்மாமதியந்தீண்டியக்கால்வெண்மாடந்
தண்ணொளிசேராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௬)

வீங்கினார்மும்மதிலும்வில்வரையால்வெந்தவிய
வாங்கினார்வானவர்கள்வந்திறைஞ்சுந்தொல்கோயில்
பாங்கினார்நான்மறையோடாறங்கம்பலகலைக
டாங்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௭)

கன்னெடியகுன்றெடுத்தான்றோளடரக்காலூன்றி
யின்னருளாலாட்கொண்டவெம்பெருமான்றொல்கோயில்
பொன்னடிக்கேநாடோறும்பூவோடுநீர்சுமக்குந்
தன்னடியாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௮)

நன்மையராநாரணனுநான்முகனுங்காண்பரிய
தொன்மையான்றோற்றங்கேடில்லாதான்றொல்கோயி

லின்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னாதீந்துவக்குந்
தன்மையாராக்கூறிற்றன்றேன்றிமாடமே. (கூ)

நாமருவுபுன்மைநவிற்றச்சமண்டேரர்
பூமருவுகொன்றையினன்புக்சமருந்தொல்கோயில்
சேன்மருவுபங்கயத்துச்செங்கழுநீரைபங்குவளை
தாமருவுமாக்கூறிற்றன்றேன்றிமாடமே. (கo)

ஆடலமர்ந்தானையாக்கூறிற்றன்றேன்றி
மாடமமர்ந்தானைமாடஞ்சேர்தண்காழி
நாடற்கரியசீர்ஞானசம்பந்தனசொற்
பாடலிவைவல்லார்க்கில்லையாமபாவமே. (கக)

திருச்சிற்றமபலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுயம்புநாதேசுவரர் - தேவியார் - கட்கநேத்திரவம்மை.

திருப்புள்ளிருக்கும்வேளூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடமபுள்ளிருக்கும்வேளூரே. (க)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளொடு
மையந்தேர்ந்துழல்வாரோரந்தணனாருறையுமிட
மெய்சொலலாவிராவணனைமேலோடியீடழித்துப
பொய்சொல்லாதுயிர்போனான்புள்ளிருக்கும்வேளூரே (உ)

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குமவேளூரே. (ங)

மாகாயம்பெரியதொருமானுரித்தோலுடையாடை
யேகாயமிட்டுகந்தவெரியாடியுறையுமிட
மாகாயந்தேரோடுமிராவணனையமரின்கட்
போகாமேபொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (ச)

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழநின்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்கும்வேளூரே. (ரு)

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோயவாராமே
யறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிட
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்கும்வேளூரே. (சு)

அத்தியினீருரிமூடிவழகாகவனலேந்திப்
பித்தரைப்போல்பலிதிரியும்பெருமானார்பேணுமிடம்
பத்தியினாலவழிபட்டுப்பலகாலந்தவஞ்செய்து
புத்தியொன்றவைத்திருந்தான்புள்ளிருக்கும்வேளூரே· (எ)

பண்ணொன்றவிசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்குமணிகண்டன்மருவுமிட
மெண்ணின்றிமுக்கோடிவாணாளதுடையானைப்
புண்ணொன்றப்பொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே (அ)

வேதித்தார்புரமூன்றும்வெங்கணையாலவெந்தவியச
சாதித்தவில்லாளிகண்ணுளன்சாருமிட
மாதித்தன்மகனென்னவகன்ஞாலத்தவரோடும
போதித்தசடாயென்பான்புள்ளிருக்குமவேளூரே (கூ)

கடுத்துவருங்கங்கைதனைக்கமழ்சடையொன்றுடாமே
தடுத்தவரெம்பெருமானார்தாமினிதாயுறையுமிடம
விடைத்துவருமிலங்கைக்கோன்மலங்கச்சென்றிராமற்காப்
புடைத்தவனைப்பொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே (க0)

செடியாயவுடறீர்ப்பான்றீவினைக்கோமருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெயதபுள்ளிருக்குமவேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சமபந்தனசொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஆமாத்தூர் - பண் - சீகாமரம்·

திருச்சிற்றமபலம்.

துன்னம்பெய்கோவணமுந்தோலுமுடையாடை
பின்னஞ்சடைமேலோர்பிள்ளைமதிசூடி
யன்னஞ்சேர்தண்கானலாமாததூரம்மான்றன்
பொன்னங்கழல்பரவாபொக்கமும்பொக்கமே. (க)

கைமாவின்றோல்போர்த்தகாவாலிவானுலகின்
மும்மாமதிலெய்தான்முக்கணான்பேர்பாடி
யம்மாமலர்ச்சோலையாமாத்தூரம்மானெம்
பெம்மானென்றேத்தாதார்பேயரிற்பேயரே. (உ)

பாம்பரைச்சாத்தியோர்பண்டரங்கன்விண்டதோர்
தேம்பலிளமதியஞ்சூடியசென்னியா
னாம்பலம்பூம்பொய்கையாமாத்தூரம்மான்றன்
சாம்பலகலத்தார்சார்பல்லாற்சார்பிலமே. (ங)

கோணாகப்பேரல்குற்கோல்வளைக்கைமாதராள்
பூணாகம்பாகமாப்புல்கியவனோடு
மாணாகங்காதல்செயாமாத்தூரம்மானைக்
காணாதகண்ணெல்லாங்காணாதகண்களே. (ச)

பாடனெறிநின்றான்பைங்கொன்றைத்தண்டாரே
சூடனெறிநின்றான்சூலஞ்சேர்கையினா
னாடனெறிநின்றானமாத்தூரம்மான்றன்
வேடநெறிநில்லாவேடமும்வேடமே. (ரு)

சாமவரைவில்லாகச்சந்தித்தவெங்கணையாற்
காவன்மதிலெய்தான்கண்ணுடைநெற்றியான்
யாவருஞ்சென்றேத்துமாமாத்தூரம்மானைத்
தேவர்தலைவணங்குந்தேவர்க்குந்தேவனே. (சு)

மாறாதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறாகநில்லாதவேடமேகாட்டினா
னாறாதநீயாடியமாத்தூரம்மானைக்
கூறாதநாவெல்லாங்கூறாதநாக்களே. (எ)

தாளாலரக்கன்றோள்சாயத்ததலைமகன்ற
னாளாதிரையென்றேநம்பன்றனாமத்தா
லாளானார்சென்றேத்துமாமாத்தூரம்மானைக்
கேளாச்செவியெல்லாங்கேளாச்செவிகளே. (அ)

புள்ளும்கமலமுங்கைக்கொண்டார்தாமிருவ
ருள்ளுமவன்பெருமையொப்பளக்குந்தன்மையதே
யள்ளல்விளைகழனியாமாத்தூரம்மானெம்
வள்ளலகழல்பரவாவாழ்க்கையும்வாழ்க்கையே. (கூ)

பிச்சைபிறர்பெய்யப்பின்சாரக்கோசாரக்
கொச்சைபுலானாறவீருரிவைபோர்த்துகந்தா
னச்சந்தன்மாதேவிக்கீந்தான்றனமாத்தூர்
நிச்சனினையாதாரநெஞ்சமுநெஞ்சமே. (கo)

ஆடலரவசைத்தவாமாத்தூரம்மானைக்
கோடலிரும்புறவிற்கொச்சைவயத்தலைவ
னாடலரியசீர்ஞானசம்பந்தன்றன்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்

நகோட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அழகியநாதேசுவரர்-தேவியார்-அழகியநாயகியம்மை.

திருக்கைச்சினம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான
மையுலாமணிமிடற்றான்மறைவிளங்குபாடலா
னெய்யுலாமூவிலைவேலேந்திநிவந்தொளிசோ
கையுடையான்மேவியுறைகோயிலகைச்சினமே. (௧)

விடமல்குகண்டத்தான்வெள்வளையோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றாதார்புரமெரித்தா
னடமல்குமாடலினானான்மறையோர்பாடலினான்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. (௨)

பாடலார்நான்மறையான்பைங்கொன்றைபாம்பினொடு
சூடலான்வெண்மதியந்துன்றுகரந்தையொடு
மாடலானங்கையனலேந்தியாடரவக்
காடலான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௩)

பண்டமரர்கூடிக்கடைந்தபடுகடனஞ்
சுண்டபிரானென்றிறைஞ்சியும்பாதொழுதேத்த
விண்டவர்கடொன்னகரமூன்றுடனேவெந்தவியக்
கண்டபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௪)

தேய்ந்துமலிவெண்பிறையான்செய்யதிருமேனியினான்
வாய்ந்திலங்குவெண்ணீற்றான்மாதினையோர்கூறுடையான்
சாய்ந்தமரர்வேண்டத்தடங்கட * னஞ்சுண்டனங்கைக்
காய்ந்தபிரான்மேவியுறைகோயிலகைசசினமே. (௫)

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்ற
னங்கையோர்வெண்டலையானாடரவம்பூண்டுகந்தான்
றிங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினான்மேவியுறைகோயிலகைச்சினமே. (௬)

வரியரவேநாணாகமாலவரையேவில்லாக
வெரிகணையான்முப்புரங்களெய்துகந்தவெம்பெருமான்
பொருசுடலையீமப்புறங்காட்டான்போர்த்ததோர்
கரியுரியான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௭)

போதுலவுகொன்றைபுனைந்தான்றிருமுடிமேன்
மாதுமையாளஞ்சமலையெடுத்தவாளரக்க
னீதியினாலேத்தநிகழ்வித்துநின்றாடுங்
காதலினான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௮)

---

* நஞ்சுண்டு-அனங்கை எனப்பிரித்து-அனங்கை என்பதனுக்கு - அனங்கனையெனப் பொருள்கொள்க,

மண்ணினைமுன்சென்றிரந்தமாலுமறையவனு
மெண்ணறியாவண்ணமெரியுருவமாயபிரான்
பண்ணிசையாலேத்தப்படுவான்றன்னெற்றியின்மேற்
கண்ணுடையர்ன்மேவியுறைகோயில்கைச்சினமே. (௯-௰)

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாலேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கிவியனுலகமாள்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கைச்சினநாதர் - தேவியார்-வேள்வளையம்மை.

திருநாலூர்த்திருமயானம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பாலூருமலைப்பாம்புமபனிமதியுமததமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினு
னாலூர்மயானத்துநம்பான்றனடிநினைநது
மாலூருஞ்சிந்தையர்பாலவந்தூராமறுபிறப்பே. (௧)

சூடும்பிறைச்சென்னிச்சூழகாடிடமாக
வாடும்பறைசங்கொலியோடழகாக
நாடுஞ்சிறப்போவாநாலூர்மயானததைப
பாடுஞ்சிறப்போர்பாற்பற்ருவாமபாவமே. (௨)

கல்லானிழன்மேவிக்காமுறுசீர்நால்வர்க்கன்
றெல்லாவறனுரையுமின்னருளாற்சொலலினு
னலலார்தொழுதேததுநாலூர்மயானததைச்
சொல்லாதவரெல்லாஞ்சொலலாதார்தொன்னெறிக்கே (௩)

கோலத்தாரகொன்றையான்கொல்புலித்தோலாடையா
னீலத்தார்கண்டததானெற்றியோர்கண்ணினன்
ஞாலததார்சென்றேததுநாலூரமயானத்திற
சூலததானென்பார்பாற்சூழாவாநதொலவினையே. (௪)

கறையார்மணிமிடற்றன்காபாலிகட்டங்கன்
பிறையார்வளர்சடையான்பெண்பாகனண்பாய
நறையார்பொழில்புடைசூழ்நாலூர்மயானத்தெம்
மிறையானென்றேத்துவார்க்கெய்துமாமின்பமே. (௫)

கண்ணார்நுதலான்கனலாடிடமாகப்
பண்ணார்மறைபாடியாடும்பரஞ்சோதி •

நண்ணார்புரமெய்தானூர்மயானத்தை
நண்ணாதவரெல்லாநண்ணாதார்நன்னெறியே. (சு)

கண்பாவுவேகததார்காமனைமுன்காய்நதுகந்தான்
பெண்பாவுபாகத்தானுகத்தோலாகத்தா
னண்பார்குணத்தோர்கணூர்மயானத்தை
யெண்பாவுசிந்தையார்க்கேலாவிடர்தானே. (எ)

பத்துத்தலையோனைப்பாதத்தொருவிரலால்
வைத்துமலையடர்த்துவாளோடுநாள்கொடுத்தா
னத்திறனலியோவாநாலூர்மயானத்தெ
னத்தனடிநினைவார்க்கல்லலடையாவே. (அ)

மாலோடுநான்முகனுநேடவளரெரியாய்
மேலோடுகீழ்காணுமேன்மையான்வேதங்க
ளாலோடுமாறங்கநாலூர்மயானதத்தெம்
பாலோடுநெய்யாடிபாதம்பணிவோமே. (கூ)

துன்பாயமாசார்துவராயபோர்வையார
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணன்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருநதானையேததுவார்க்கின்பமே. (க0)

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்று
னாலுமறையோதுநாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறநதேததவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருபபாரே திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பலாசவனேசுவரர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

திருமயிலாப்பூர்-பூம்பாவைத்திருப்பதிகம்-பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமாநதா
னொட்டிட்டபண்பினுருததிரபலகணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய. (க)

மைப்பயநதவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்நதா
னைப்பசியோணவிழாவுமருந்தவர்க
டுய்ப்பனவுங்காணாதேபோதியோபூம்பாவாய். (உ)

வளைக்கைமடநல்லாாமாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்ரரததான்றொலகார்ததிகைநாட்

டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய். (௩)

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னார்திரைநாள்காணாதேபோதியோபூம்பாவாய். (௪)

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணாதேபோதியோபூம்பாவாய். (௫)

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணாதேபோதியோபூம்பாவாய் (௬)

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணாதேபோதியோபூம்பாவாய். (௭)

தண்ணாவரக்கன்றோள்சாய்த்துகந்ததாளினான்
கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினெண்கணங்கடம்மட்டமிநாட்
கண்ணாரக்காணாதேபோதியோபூம்பாவாய். (௮)

நற்றாமரைமலர்மேனான்முகனுநாரணனு
முற்றாங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதேபோதியோபூம்பாவாய். (௯)

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்திகாணாதேபோதியோபூம்பாவாய் (௧௦)

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே திருச்சிற்றம்பலம்

இது - எலும்புபெண்ணாகவோதியருளிய பதிகம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கபாலீசுவரர்-தேவியார்-கற்பகவல்லியம்மை.

திருவெண்காடு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (க)

பேயடையாபிரிவெய்துபிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோயவினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. (உ)

மண்ணொடுநீரனல்காலோடாகாயமதியிரவி
யெண்ணிலவருமியமானனிகபரமுமெண்டிசையும்
பெண்ணினொடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. (௩)

விடமுண்டமிடற்றண்ணலவெண்காட்டின்றண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலைக்குருகென்று
தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தநகைகாட்டுங்காட்சியதே. (௪)

வேலைமலிதண்கானலவெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தாலவழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர்விண்டபினைநமன்றூத
ராலமிடற்றானடியாரென்றடரவஞ்சுவரே. (௫)

தண்மதியும்வெய்யரவுந்தாங்கினான்சடையினுட
ணெண்மதியநுதலுமையோர்கூறுகந்தானுறைகோயில்
பண்மொழியாலவனாமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணைமேலவீற்றிருக்கும்வெண்காடே. (௬)

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானு
மக்கரைமேலசைத்தானுமடைந்தயிராப்பதம்பணிய
மிக்கதனுக்கருளசுரக்கும்வெண்காடும்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே. (௭)

பண்மொய்த்தவின்மொழியாள்பயமெய்தமலையெடுத்த
வுண்மத்தனுரநெரித்தன்றருள்செய்தானுறைகோயில்
கண்மொய்த்தகருமஞ்ஞைநடமாடக்கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண்டிசைமுரலும்வெண்காடே. (௮)

கள்ளார்செங்கமலத்தான்கடற்கிடந்தானென்னவிவர்க
ளொள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்

வெள்ளானைதவஞ்செய்யுமேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதாருணர்வுடைமையுணரோமே. (௯)

போதியர்கள்பிண்டியர்கண்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிறிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்றிருவெண்காட்டானென்
றோதியவர்யாதுமொருதீதிலரென்றுணருமினே. (௰)

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பல

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-சுவேதாரணியேசுவரர்-தேவியார்-பிரமவித்தியாநாயகியம்மை.

சீகாழி - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்பாடியாடியவோசைநாடொறுங்
கண்ணினேரயலேபொலியுங்கடற்காழிப்
பெண்ணினேரொருபங்குடைப்பெருமானையெம்பெருமானென்றென்றுன்
மண்ணலடியாரருளாலுங்குறைவிலரே. (

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதெறிசங்கவங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடிவாழ்த்தியேத்துமாந்தர்தம்வினை
விண்டலங்கெளிதாமதுநலவிதியாமே (

நாடெலாமொளியெய்தநல்லவர்நன்றுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்றுளிக்குங்கடற்காழித்
தோடுலாவியகாதுளார்சுரிசங்கவெண்குழையாயென்றென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கலுற்றாரே. (

மையினார்பொழில்சூழநீழலில்வாசமார்மதுமல்கநாடொறுங்
கையினார்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
ஐயனேயரனேயென்றாதரித்தோதிநீதியுளேநினைப்பவ
ருய்யுமாறுலகில்லுயர்ந்தாரினுள்ளாரே. (

மலிகடுந்திரைமேனிமிர்ந்தெதிர்வந்துவந்தொளிர்நித்திலம்விழக்
கலிகடிந்தகையார்மருவுங்கலிக்காழி
வலியகாலனைவீட்டிமாணிதனின்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைநோயவைமேவுவர்வீடே. (

மற்றுமிவ்வுலகத்துளோர்களும்வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிந்தையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானைநினைந்திருந்திசைபாடுவார்வினை
செற்றமாந்தரெனத்தெளிமின்கள்சிந்தையுளே (௬)

தானலம்புனைவேதியரொடுதக்கமாதவர்தாந்தொழப்பயில்
கானலின்விரைசேரவிம்முங்கலிக்காழி
யூனுளாருயிர்வாழ்க்கையாயுறவாகிநின்றவொருவனேயென்
றானலங்கொடுப்பாரருள்வேந்தராவாரே. (௭)

மைத்தவண்டெழுசோலையாலைகள்சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றுலவுங்கலிக்காழி
யத்தனேயரனேயரக்கனையன்றடர்த்துகந்தாயுன்கழல
பத்தராய்ப்பரவும்பயனீங்குநல்காயே. (௮)

பருமராமொடுதெங்குபைங்கதலிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித
திருவினாயகனாயமாலொடுசெய்யமாமலர்ச்செல்வனாகிய
விருவர்காண்பரியானெனவேத்துதலின்பமே. (௯)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரியாதுவண்டுகிலாடைபோர்த்தவர்
கண்டுசேரிலாரழகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுங்கூடியவேடனேசுடலைப்பொடியணி
யண்டவாணனென்பார்க்கடையாவல்லலன்றே. (௧௦)

பெயரெனும்மிவைபன்னிரண்டினுமுண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
நயனடன்கழலேத்திவாழ்த்தியஞானசம்பந்தன்செந்தமிழுரை
யுயருமாமொழிவாருலகத்துயர்ந்தாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஆமாத்தூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (௧)

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
காவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்து * பம்பைநீ
ராருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (௨)

* பம்பை என்பது—ஒருநதி.

நீண்டவார்சடைதாழநேரிழைபாடநீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலைநடமாடுமாண்பதுவென்
பூண்டகேழன்மருப்பராவிரிகொன்றைவாள்வரியாமைபூணென
வாண்டநாயகனேயாமாத்தூரம்மானே (௩)

சேலினேரனகண்ணிவெண்ணகைமான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேலமாதவநீமுயலகின்றவேடமிதென்
பாலினேர்மொழிமங்கைமார்நடமாடியின்னிசைபாடநீள்பதி
யாலைசூழ்கழனியாமாத்தூரம்மானே. (௪)

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவ
ருண்டியால்வருந்தலிரங்காததென்னைகொலாம்
வண்டலார்கழனிக்கலந்துமலர்ந்ததாமரைமாதர்வாண்முக
மண்டவாணாதொழுமாமாத்தூரம்மானே. (௫)

ஓதியாரணமாயநுண்பொருளன்றுநால்வர்முன்கேட்கநன்னெறி
நீதியாலநீழலுரைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசுரும்பமர்கொன்றையாய்திருநின்றியூருறை
யாதியேயரனேயாமாத்தூரம்மானே. (௬)

மங்கைவாணுதன்மான்மனத்திடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்ததாயதென்னைகொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே. (௭)

நின்றடர்த்திடுமைம்புலனிலையாதவண்ணநினைந்துளத்திடை
மென்றடர்த்தொருபானமடமாதைவிரும்புதலென்
குன்றெடுத்தநிசாசரன்றிரடோளிருபதுதானெரிதர
வன்றடர்த்துகந்தாயாமாத்தூரம்மானே. (அ

செய்யதாமரைமேலிருந்தவனோடுமாலடிதேடநீண்முடி
வெய்யவாரழலாய்நிமிர்கின்றவேற்றுமையென
றையலாளொடுபிச்சைக்கிச்சைதயங்குதோலரையார்த்தவேடங்கொண்
டையமேற்றுகந்தாயாமாத்தூரம்மானே. (௯

புத்தர்புன்சமணாதர்பொய்மொழிநூல்பிடித்தலர்தூற்றநின்னடி
பத்தர்பேணநின்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமைபங்கனென்றிமையோர்பரவிடு
மத்தனேயரியாயாமாத்தூரம்மானே. (௧0

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனுகமரும்புனைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆமாத்தூர் என்பது - பசுக்களுக்குத் தாயகமானவூர் என்றும், ஆமாதாவூர் எனற்பாலது - ஆமாத்தூர் என மருவிநின்றதென்றும் பெரியோர்களாற கேள்வி. ஆ - பசு. சமஸ்கிருதத்தில் - கோமாதுருபுரம் எனப்பெயராம.

திருக்களர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதிற்
றேரினார்மறுகில்விழாமல்குதிருக்கள
ருளாரிபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
யாரநின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க)

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசையற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியரை
யாளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (உ)

பாடவல்லநன்மைந்தரோடுபனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களரு
ணீடவல்லநிமலனேயடிநிரைகழலசிலம்பார்க்கமாநட
மாடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (ங)

அம்பினேர்தடங்கண்ணினருடனுடைவர்பயின்மாடமாளிகைச்
செம்பொனார்பொழிலசூழ்ந்தழகாயதிருக்களரு
ளென்புபூண்டதோர்மேனியெம்மிறைவாவிணையடிபோற்றிநின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. (ச)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங்கிண்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருண்
மங்கைதன்னொடுங்கூடியமணவாளனேபிணைகொண்டோர்கைத்தலத்
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. (ரு)

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களரு
ணீலமேவியகண்டனேநிமிர்புன்சடைப்பெருமானெனப்பொலி
யாலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. (சா)

தம்பலம்மறியாதவர்மதிற்றுங்குமாலவரையாலழலெழத்
திண்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்

வம்பலர்மலர்தூவிநின்னடிவானவர்தொழக்கூத்துகந்தபே
ரம்பலத்துறைவாயடைந்தார்க்கருளாயே. (௭)

குன்றடுத்தநன்மாளிகைக்கொடிமாடநீடுயர்கோபுரங்கண்மேற்
சென்றடுத்துயர்வான்மதிதோயுந்திருக்களரு
ணின்றடுத்துயர்மாலவரைத்திரடோளிருலெடுத்தான்றனீண்முடி
யன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (௮)

பண்ணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலோடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருநதிருக்களரு
ணண்ணிலாவியவொருவனேயிருவர்க்குநின்கழல்காட்சியாரழ
லண்ணலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (௯)

பாக்கியம்பலசெய்தபத்தாகள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணததார்சிறநதாருநதிருக்களருள்
வாக்கினுன்மறையோதினயமண்டேராசொல்லியசொற்களானபொய்
யாக்கிநின்றவனேயடைநதார்க்கருளாயே. (௧௦)

இநதுவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன்
* செநதுநேர்மொழியாரவாசேருநதிருக்களரு
ளந்தியன்னதோர்மேனியானையமரர்தம்பெருமானைஞானசம்
பநதன்சொல்லிவைபத்தும்பாடததவமாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - களர்முளையீசுவரர் - தேவியாா - அழகேசுவரியம்மை.

திருக்கோட்டாறு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கருநதடங்கண்ணினமாதராரிசைசெய்யக்காரதிர்கின்றபூம்பொழிற்
குருந்தமாதவியின்விரைமலகுகோட்டாற்றி
லிருந்தவெம்பெருமானையுள்கியிணையடிதொழுதேத்துமாந்தர்கள்
வருநதுமாறறியார்நெறிசேர்வர்வானூடே. (௧)

நின்றுமேய்ந்துநினைந்துமாகரிநீரொடும்மலர்வேண்டிவான்மழை
குன்றிநேர்நதுகுத்திப்பணிசெய்யுங்கோட்டாற்று
ளென்றுமன்னியவெம்பிரான்கழலேத்திவானரசாளவல்லவர்
பொன்றுமாறறியார்புகழார்ந்தபுண்ணியரே. (௨)

விரவிநாளும்விழாவிடைப்பொலிதொண்டர்வந்துவியந்துபண்செயக்
குரவமாருநிழற்பொழின்மல்குகோட்டாற்றி
லரவநீள்சடையானையுள்கிநின்றுதரித்துமுனன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. (௩)

அம்பினேர்விழிமங்கைமார்பலராடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றி
ணம்பனேநடனேநலந்திகழ்நாதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பினேர்ந்தறியார்தடுமாற்றவல்வினையே. (௪)

பழையதம்மடியார்துதிசெயப்பாருளோர்களும்விண்ணுளோர்தொழக்
குழலுமொந்தைவிழாவொலிசெயுங்கோட்டாற்றிற்
கழலும்வண்சிலம்புமொலிசெயக்கானிடைக்கணமேத்தவாடிய
வழகனென்றெழுவாரணியாவர்வானவர்க்கே. (௫)

பஞ்சின்மெல்லடிமாதராட்வர்பத்தர்சித்தர்கள்பண்புவைகலுங்
கொஞ்சியின்மொழியாற்றொழின்மல்குகோட்டாற்றின்
மஞ்சனேமணியேமணிமிடற்றண்ணலேயெனவுண்ணெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரிதன்றொல்லிலததே (௬)

கலவமாமயிலாளோர்பங்கனைக்கண்டுகண்மிசைநீர்நெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாற்றி
னிலவுமாமதிசேர்சடையுடைநின்மலாவெனவுன்னுவாரவ
ருலவுவானவரினுயர்வாகுவதுண்மையதே (௭)

வண்டலார்வயற்சாலியாலைவளம்பொலிந்திடவார்புனற்றிரை
கொண்டலார்கொணர்ந்தங்குலவுந்திகழ்கோட்டாற்றிற்
றெண்டலாந்துதிசெயநின்றதொழிலனேகழலாலரக்கனை
மிண்டெலாந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிமையே (௮)

கருதிவந்தடியார்தொழுதெழக்கண்ணனோடயன்றேடவானையின்
குருதிமெய்கலப்பவுரிகொண்டுகோட்டாற்றில
விருதினுன்மடமாதுநீயுமவியப்பொடுமுயாகோயின்மேவிவெள்
ளெருதுகந்தவனேயிரங்காயுனதின்னருளே (௯)

உடையிலாதுழல்கின்றகுண்டருமூணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலார்மனத்தார்குறையாருங்கோட்டாற்றிற்
படையிலார்மழுவேந்தியாடியபண்பனேயிவரென்கொலோநுனை
யடைகிலாதவண்ணமருளாயுனடியவர்க்கே. (௧௦)

காலனைக்கழலாலுதைத்தொருகாமனைக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலார்குடிகொண்டகோட்டாற்றின்
மூலனைமுடிவொன்றிலாதவெம்மூத்தனைப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஐராபதேசுவரர் - தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

திருப்புறவார் - பனங்காட்டூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தனமும்மதில்களைவீழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே (௧)

நீடல்கோடலலர்வெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயன்மின்றுளங்கவெண்குழைதுள்ளநள்ளிரு
ளாடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே (௨)

வாளையுங்கயலும்மிளிர்பொய்கைவார்புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுந்நறுங்கொன்றையுமதமத்தமும்புனைவாயகழலிணைத்
தாளையேபரவுந்தவத்தார்க்கருளாயே (௩)

மேய்ந்திளஞ்செந்நென்மென்கதிர்கவ்விமேற்படுகலின்மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூ
ராய்ந்தநான்மறைபாடியாடுமடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே (௪)

செங்கயல்லொடுசேல்செருச்செயசீறியாழ்முரறேனினத்தொடு
பங்கயம்மலரும்புறவார்பனங்காட்டூர்க்
கங்கையுமதியுங்கமழ்சடைக்கேண்மையாளொடுங்கூடிமான்மறி
யங்கையாடலென்னேயடியாக்கருளாயே. (௫)

நீரினார்வரைகோலிமால்கடனீடியபொழில்சூழ்ந்துவைகலும்
பாரினார்பிரியாப்புறவார்பனங்காட்டூர்க்
காரினார்மலர்க்கொன்றைதாங்குகடவுளென்றுகைகூப்பிநாடொறுஞ்
சீரினால்வணங்குந்திறத்தார்க்கருளாயே. (௬)

கையரிவையர்மெல்விரலவைகாட்டியுமமலர்க்காந்தளங்குறி
பையராவிரியும்புறவார்பனங்காட்டூ
மெய்யரிவையோர்பாகமாகவுமேவினாயகழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமைபுரிந்தார்க்கருளாயே. (௭)

தூவியஞ்சிறைமென்னடையனமல்கியொல்கியதூமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியந்நிலையாயரக்கன்றோளடர்த்தவன்பாடல்கேட்டரு
ளேவியெம்பெருமானென்பவர்க்கருளாயே. (௮)

அந்தண்மாதவிபுன்னைநல்லவசோகமுமரவிந்தமல்லிகை
பைந்தண்ஞாழல்கள்சூழ்புறவார்பனங்காட்டூ

ரெந்திளம்முகில்வண்ணனான்முகனென்றிவர்க்கரிதாய்நிமிர்ந்ததோர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. (௯)

நீணமார்முருகுண்டுவண்டினநீலமாமலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும்புறவார்பனங்காட்டூர்
நாணழிந்துழல்வார்சமணருநம்பில்சாக்கியருநகத்தலை
யூணுரியவனேயுகப்பார்க்கருளாயே. (௧௦)

மையினார்மணிபோன்மிடற்றனைமாசில்வெண்பொடிப்பூசுமார்பனைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூ
ரையனைப்புகழானகாழியுளாய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பனங்காட்டீசுவரர் - தேவியார் - திருப்புருவமின்னாளம்மை.

ஸ்ரீபுகலி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிகொடுத்தலகருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (௧)

நீரார்ந்தசெஞ்சடையீர்நிரையார்கழல்சேர்பாதத்தீ
ரூரார்ந்தசில்பலியீருழைமானுரிதோலாடையீர
போரார்ந்ததெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௨)

அழிமல்குபூம்புனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையீர்கறையார்கண்டத்தெண்டோளீர்
பொழின்மல்குவண்டினங்களறையுங்கானற்பூம்புகலி
யெழின்மல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (௩)

கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையீர்கரியகரியின்றோன்
மயிலார்ந்தசாயன்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பயிலார்ந்தவேதியர்கள்பதியாய்விளங்கும்பைம்புகலி
யெயிலார்ந்தகோயிலேகோயிலாகவிசைந்தீரே. (௪)

நாவார்ந்தபாடலீராடலரவமரைக்கார்த்தீர்
பாவார்ந்தபல்பொருளின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிற்புகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (௫)

மண்ணார்ந்தமணமுழவந்ததும்பமலையான்மகளென்னும்
பெண்ணார்ந்தமெய்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணார்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணார்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (௬)

களிபுல்குவல்லவுணரூர்மூன்றெரியக்கணைதொட்டீ
ரளிபுல்குபூமுடியீரமரரேத்தவருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்விரைசேர்திண்புகலி
யொளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. (௭)

பரந்தோங்குபலபுகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டுரந்தோன்றும்பாடல்கேட்டுகவையளித்தீருகவாதார்
புரந்தோன்றுமதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௮)

சலந்தாங்குதாமரைமேலயனுந்தரணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணாவண்ணங்கனலானீர்
புலந்தாங்கியைம்புலனுஞ்செற்றார்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயிலாகநயந்தீரே. (௯)

நெடிதாயவன்சமணுநிறைவொன்றிலாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்கழறமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீர்புகலிமறையோர்புரிந்தேத்த
வடிவாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௧0)

ஒப்பரியபூம்புகலியோங்குகோயின்மேயானை
யப்பரிசிற்பதியானவணிகொள்ஞானசம்பந்தன
செப்பரியதண்டமிழாற்றெரிந்தபாடலிவைவல்லா
ரொப்பரிசில்விடர்நீங்கியிமையோருலகத்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தலைச்செங்காடு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலச்சங்கவெண்குழையுந்தோடும்பெய்தோர்நால்வேதஞ்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
குலைச்செங்காய்ப்பைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலுந்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. (௧)

துணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெல்லாமாண்பானீர்
* பிணிமல்குநூன்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
யணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (௨)

* பிணி—பிணித்தல.

சீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்நின்றேத்தத்
தார்கொண்டநூன்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
யேர்கொண்டகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ங)

வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்க
ளோடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழமண்டபமுங்குலாயவாசற்கொடித்தோன்று
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீறாடலீர
நீலஞ்சேர்கண்டத்தீர்நீண்டசடைமேனீரேற்றீ
ராலஞ்சேர்தண்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (ரு)

நிலநீரோடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலனீர்மைபுறங்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றோவார்
சலநீதரல்லாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
நலநீரகோயிலேகோயிலாகநயந்தீரே. (சு)

அடிபுல்குபைங்கழல்களார்ப்பப்பேயர்ந்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநூன்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே (எ)

திரையார்ந்தமாகடல்சூழ்தென்னிலங்கைக்கோமானை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீ
ரரையார்ந்தமேகலையீரந்தணாளர்தலைச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே (அ)

பாயோங்குமாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
போயோங்கிக்காண்கிலார்புறநின்றோரார்போற்றோவார்
தீயோங்குமறையாளர்திகழுஞ்செல்வத்தலைச்சங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கூ)

அலையாரும்புனலுறந்தவமணர்குண்டர்சாக்கியர்
தொலையாதங்கலர்தூற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானநால்வேதந்தரித்தார்வாழுந்தலைச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநின்றீரே. (கo)

நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயின்மேயானை
யொளிரும்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செங்கணுயகேசுவரர் - தேவியார்-சௌந்தரியம்மை.

திருவிடைமருது - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குநூன்மார்பினீர்பூதப்படையினீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சாமவேதமோதினீ
ரெங்குமெழிலார்மறையோர்கண்முறையாலேத்தவிடைமருதின்
மங்குறோய்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௧)

நீரார்ந்தசெஞ்சடையீர்நெற்றித்திருக்கணிகழ்வித்தீர்
போரார்ந்தவெண்மழுவொன்றுடையீர்பூதம்பாடலீ
ரேரார்ந்தமேகலையாள்பாகங்கொண்டீரிடைமருதிற்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௨)

அழன்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சுழன்மல்குபாடலீராடுகாடல்லாற்கருதாதீ
ரொழின்மல்குநான்மறையோர்முறையாலேத்தவிடைமருதிற்
பொழின்மல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (௩)

பொல்லாப்படுதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர்
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையார்கொடியினீ
ரெல்லாக்கணங்களுமுறையாலேத்தவிடைமருதிற்
செல்வாய்கோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௪)

வருந்தியமாதவத்தோர்வானோரேனோர்வந்தீண்டிப்
பொருந்தியதைப்பூசமாடியுலகம்பொலிவெய்தத்
திருந்தியநான்மறையோர்சீராலேத்தவிடைமருதிற்
பொருந்தியகோயிலேகோயிலாகப்புக்கீரே. (௫)

சலமல்குசெஞ்சடையீர்சாந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீ
ரிலமல்குநான்மறையோரினிதாயேத்தவிடைமருதிற்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (௬)

புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீர்செய்யீர்கரியகண்டத்தீ
ரினமல்குநான்மறையோரேத்துஞ்சீர்கொளிடைமருதிற்
கனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (௭)

சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
றலைபத்துந்திண்டோளுநெரித்தீர்தையல்பாகத்தீ
ரிலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தவிடைமருதி
னலமொய்த்தகோயிலேகோயிலாகநயந்தீரே. (௮)

மறைமல்குநான்முகனும்மாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீ

ரறைமல்குவண்டினங்களாலுஞ்சோலையிடைமருதி
னிறைமல்குகோயிலேகோயிலாகமிகிழ்ந்தீரே. (கூ)

சின்போர்வைச்சாக்கியருமாசுசேருஞ்சமணருந்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லலாற்றவே
யின்பாயவந்தணர்களேத்துமேர்கொளிடைமருதி
லன்பாயகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (க0)

கல்லின்மணிமாடக்கழுமலத்தார்காவலவ
னல்லவருமறையானற்றமிழ்ஞானசம்பந்த
னெல்லியிடைமருதிலேத்துபாடலிவைபத்துஞ்
சொல்லுவார்க்குங்கேட்பார்க்குந்துயரமில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமருந்திருமேனியுடையீர்பிறங்குசடைதாழப்
பண்ணமருநான்மறையேபாடியாடல்பயிலகின்றீர்
திண்ணமரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மண்ணமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

அலைமல்குதண்புனலும்பிறையுஞ்சூடியங்கையிற்
கொலைமல்குவெண்மழுவுமனலுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திருநல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (உ)

குறைநிரம்பாவெண்மதியஞ்சூடிக்குளிர்புன்சடைதாழப்
பறைநவின்றபாடலோடாடல்பேணிப்பயிலகின்றீர்
சிறைநவின்றதண்புனலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மறைநவின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ங)

கூனமரும்வெண்பிறையும்புனலுஞ்சூடுங்கொள்கையீர்
மானமருமென்னவிழியாள்பாகமாகுமாண்பினீர்
தேனமரும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

நிணங்கவருமூவிலையுமனலுமேந்திநெறிகுழலா
ளணங்கமரும்பாடலோடாடன்மேவமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடித்திருநல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ரு)

கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புன்சடைதாழ
வார்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்

தேர்மருவுநெடுவீதிக்கொடிகளாடுந்திருநல்லூ
ரோர்மருவுகோயிலேகோயிலாகவிருந்தீரே. (௬)

ஊன்றேயும்வெண்மழுவுமனலுமேந்தியுமைகாண
மீன்றேயுந்திசைநிறையவோங்கியாடுமவேடதீர்
தேன்றேயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வான்றேயுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௭)

காதமரும்வெண்குழையீர்கறுத்தவரக்கன்மலையெடுப்ப
மாதமருமென்மொழியாண்மறுகும்வண்ணங்கண்டுகந்தீர்
தீதமராவந்தணர்கள்பரவியேத்துந்திருநலலூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௮)

போதின்மேலயன்றிருமால்போற்றியும்மைக்காணாது
நாதனேயிவனென்றுநயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
தீதிலாவந்தணர்கடீமூன்றோம்புந்திருநல்லூர்
மாதராளவளோடுமென்றுகோயின்மகிழ்ந்தீரே (௯)

பொல்லாதசமணரொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்
றல்லாதாரறவுரைவிட்டடியார்கள்போற்றேவா
நல்லார்களந்தணர்களுளுமேத்துநதிருநலலூர்
மலலார்ந்தகோயிலேகோயிலாகமகிழ்நதீரே. (௧௦)

கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுகுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்ப்
பந்தணவுமெல்விரலாளபங்கன்றனைப்பயிலபாடல்
சிந்தையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடவாயில் - பண் - காந்தாரம்

திருச்சிற்றமபலம்.

கலைவாழுமங்கையீர்கொங்கையாருங்கருங்கூந்த
லலைவாழுஞ்செஞ்சடையிலரவும்பிறையுமமாவித்தீர்
குலைவாழைகமுகம்பொன்பவளம்பழுக்குங்குடவாயி
னிலைவாழுங்கோயிலேகோயிலாகநின்றீரே. (௧)

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமாரப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயிற்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (௨)

கழலார்பூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமளவினீர்

குழலாரவண்டினங்கள்கீதத்தொலிசெய்குடவாயி
னிழலார்ந்தகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (௩)

மறியாருங்கைத்தலத்தீர்மங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியார்ந்தவண்டினங்கடேன்மிழற்றுங்குடவாயி
னெறியாருங்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (௪)

இழையார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதசூலம்பெய்தாடல்பாடலபேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில
விழவார்ந்தகோயிலேகோயிலாகமிக்கீரே. (௫)

அரவார்ந்ததிருமேனியானவெண்ணீறாடினீ
ரிரவார்ந்தபெய்பலிகொண்டிமையோரேத்தநஞ்சுண்டீர்
குரவார்ந்தபூஞ்சோலைவாசம்வீசுங்குடவாயிற்
றிருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே (௬)

பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீ
ராடலார்மாநடத்தீரரிவைபோற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைமிழற்றுங்குடவாயி
னீடலார்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே (௭)

கொங்கார்ந்தபைங்கமலத்தயனுங்குறளாய்நிமிர்ந்தானு
மங்காந்துதள்ளாடவழலாய்நிமிர்ந்தீரிலங்கைக்கோன்
றங்காதன்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயிற்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. (௮-௯)

தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரு
மேசார்ந்தபுன்மொழிநீத்தெழில்கொண்மாடக்குடவாயி
லாசாரஞ்செயமறையோரளவிற்குன்றாதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௰)

நளிர்பூந்திரைமல்குகாழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயின்மேயகோமானை
யொளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதானொழியத்தகுசீர்வானத்திருப்பாரே, திருச்சிற்றம்பலம்.

சீகாழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலங்கொண்முத்துமணியுமணியுந்திரளோதக்
கலங்கடன்னிற்கொண்டுகரைசேர்கலிக்காழி
வலங்கொண்மழுவொன்றுடையாயவிடையாயெனவேத்தி
யலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. (௧)

ஊராருவரிச்சங்கம்வங்கங்கொடுவந்து
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணாவென்றென்று
பேராயிரமும்பிதற்றத்தீரும்பிணிதானே. (௨)

வடிகொள்பொழிலின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதிற்றென்றலணையுங்கலிககாழி
முடிகொள்சடையாய்முதல்வாவென்றுமுயன்றேத்தி
யடிகைதொழுவார்க்கிலலையலலலவலமே. (௩)

மனைக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கனைக்குங்கடலுளோதமேறுங்கலிக்காழிப்
பனைக்கைப்பகட்டீருரியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லவடியார்நெஞ்சினலலாரோ. (௪)

பருதியியங்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவானைக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. (௫)

மந்தம்மருவும்பொழிலிலெழிலார்மதுவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெயகலிக்காழிப்
பந்தநீங்கவருளும்பரனேயெனவேத்திச்
சிந்தைசெய்வார்செம்மைநீங்காதிருப்பாரோ. (௬)

புயலார்பூமிநாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணார்பண்ணொலிசெயகலிக்காழிப்
பயில்வான்றன்னைப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேலவெம்மைக்கூற்றமுடுகாதே. (௭)

அரக்கன்முடிதோணெரியவடர்த்தானடியார்க்குக்
கரக்ககில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னையேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்துன்பமானபிணிபோமே (௮)

மாணாயுலகங்கொண்டமாலுமலரோனுங்
காணாவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணார்முலையாள்பங்கத்தானைப்புகழ்ந்தேத்திக்
கோணாநெஞ்சமுடையார்க்கிலலைகுற்றமே. (௯)

அஞ்சியல்லன்மொழிந்துதிரிவாரமணாதர்
கஞ்சிகாலையுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலைவன்றன்னைநினைவார்க
டுஞ்சலில்லாநல்லவுலகம்பெறுவாரே. (௧௦)

ஊழியாயபாரிலோங்குமுயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
றாழுமனத்தாலுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானோருலகின்மகிழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தாமணாளாவென்னமகிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. (க)

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றாருந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ரூருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்மிசையார்பாடலோவாப்பாசூரே. (உ)

கையாற்றொழுதுதலைசாய்த்துள்ளங்கசிவார்கண்
மெய்யார்குறையுந்துயருந்தீர்க்கும்விகிர்தனார்
நெய்யாடுதலஞ்சுடையார்நிலாவுமூர்போலும்
பைவாய்நாகங்கோடலீனும்பாசூரே. (ங)

பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியெனுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வாழுமூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பீனும்பாசூரே. (ச)

ஆடற்புரியுமைவாயரவொன்றரைச்சாத்துஞ்
சேடச்செல்வர்சிந்தையுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடக்குயில்கள்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (ரு)

கானின்றதிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையார்விடையார்தம்மைத்தொழுவார்கண்
மால்கொண்டோடமையறீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாசூரே. (சு)

கண்ணினயலேகண்ணொன்றுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுவகைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே. (எ)

தேசுகுன்றாத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசவடர்த்துக்கூர்வாள்கொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாசூரே. (௮)

நருவாய்மலர்மேலயனுநாகத்தணையானும்
புகுவாயறியார்புறநின்றோராபோற்றோவார்
செருவாயுகுபற்றலைசேர்கையாரூர்போலும்
பருவாய்நாரையாரல்வாரும்பாசூரே. (௯)

தூயவெயினின்றுழலவார்துவர்தோயாடையர்
நாவிலவெய்யசொல்லித்திரிவார்நயமில்லார்
காவல்வேவக்கணையொன்றெய்தாரூர்போலும்
பாவைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (௰)

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
றேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லா
ரூனமிலராயும்பர்வானத்துறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பாசூர்நாதர்-தேவியார்-பசுபதிநாயகியம்மை.

திருவெண்காடு - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்நஞ்சையுமையோர்பங்காவென்றுள்கித்
தொண்டாய்த்திரியுமடியார்தங்கடுயரங்க
ளண்டாவண்ணமறுப்பானெந்தையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செயவெண்காடே. (௧)

நாதனம்மையாள்வானென்றுநவின்றேத்திப்
பாதம்பன்னாள்பணியுமடியார்தங்கண்மே
லேதந்தீரவிருந்தான்வாழுமூர்போலும்
வேதத்தொலியாற்கிளிசொற்பயிலும்வெண்காடே. (௨)

தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவார்க
ளுண்முத்தரும்பவுவகைதருவானூர்போலும்
வெண்முத்தரும்பிப்புனல்வந்தலைக்கும்வெண்காடே. (௩)

நரையார்வந்துநாளுங்குறுகிநணுகாமுன்
னுரையால்வேறுவுள்குவார்களுள்ளத்தே

கரையாவண்ணங்கண்டான்மேவுமூர்போலும்
விரையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. (௪)

பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுறுநோயக
டள்ளிப்போகவருளுந்தலைவனூர்போலும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. (௫)

ஒளிகொண்மேனியுடையாயும்பராளீயென்
றளியராகியழுதுற்றூறுமடியார்கட்
கெளியானமராக்கரியானவாழுமூர்போலும்
வளியவுருவிலானைவணங்கும்வெண்காடே (௬)

கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பினான்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்தமாணிக்கா
யாள்வித்தமரருலகமளிப்பானூர்போலும்
வேள்விப்புகையாலவானமிருள்கூர்வெண்காடே. (௭)

வளையார்முன்கைமலையாள்வெருவவரையூன்றி
முளையார்மதியஞ்சூடியென்றுமுப்போது
மிளையாதேத்தவிருந்தானெந்தையூர்போலும்
விளையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே (௮)

கரியானோடுகமலமலரான்காணாமை
யெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானென்பார்கட்
குரியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடும்வெண்காடே. (௯)

பாடும்மடியார்பலருங்கூடிப்பரிந்தேத்த
வாடுமரவமசைத்தபெருமானறிவின்றி
மூடமுடையசமண்சாக்கியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. (௰)

விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியா
னடையாரின்சொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாளவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமீயச்சூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றறுத்தமைந்தன்றாதைதன்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே. (௧)

பூவார்சடையின்முடிமேற்புனலரனல்கொள்வார்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
யேவார்மலையேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (௨)

பொன்னேர்கொன்றைமாமலர்புரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானைத்
தன்னேர்பிறரில்லானைத்தலையால்வணங்குவார்க்
கன்னேரிமையோருலகமெய்தற்கரிதன்றே. (௩)

வேகமதநல்லியானைவெருவவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
நாகமரைமேலசைத்துநடமாடியநம்பன்
மேகமுரிஞ்சுபொழில்சூழ்மீயச்சூரானே. (௪)

விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
படையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டணையும்பிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையார்மீயச்சூராரே. (௫)

குளிருஞ்சடைகொண்முடிமேற்கோலமார்கொன்றை
யொளிரும்பிறையொன்றுடையானொருவன்கைகோடி
நளிரும்மணிசூழ்மாலைநட்டநவினம்பன்
மிளிரும்மரவமுடையான்மீயச்சூரானே. (௬)

நீலவடிவாமிடறுநெடியர்நிகரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவொண்ணார்
காலர்கழலர்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதியர்விதியர்மீயச்சூராரே. (௭)

புலியினுரிதோலாடைபூசும்பொடிநீற்ற
ரொலிகொள்புனலோர்சடைமேற்கரந்தாருமையஞ்ச
வலியதிரடோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவரைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. (௮)

காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனுமாலுந்தொழப்பொங்கெரியானார்
கோதிவரிவண்டறைபூம்பொய்கைப்புனன்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. (௯)

கண்டார்நாணும்படியார்கலிங்கமுடைபட்டை
கொண்டோர்சொல்லைக்குறுகாருயர்ந்தகொள்கையார்
பெண்டான்பாகமுடையார்பெரியவரைவில்லால்
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (௧௦)

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி
யாடுமடியாரகல்வானுலகமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முயற்சிநாதேசுவரர்-தேவியார்-சுந்தரநாயகியம்மை.

அரிசிற்கரைத்திருப்புத்தூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
துன்னுங்கடனஞ்சிருடோயகண்டர்தொன்மூதூ
ரன்னம்படியும்புனலாரரிசிலலைகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. (க)

மேவாவசுரர்மேவெயில்வேவமலைவில்லா
லேவாரெரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
நாவாலுதனுமமோதிநாடோறும்
பூவானீராற்பூசுரர்போற்றும்புத்தூரே. (உ)

பல்லார்தலைசேர்மாலைசூடிப்பாம்பும்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோரேறேறி
கல்லார்மங்கைபங்கரோனுங்காணுங்காற்
பொல்லாரல்லரழகியாபுத்தூர்ப்புநிதரே. (ங)

வரியேர்வளையாளரிவையஞ்சவருகின்ற
கரியேருரிவைபோர்த்தகடவுள்கருதுமூ
ரரியோகழனிபபழனஞ்சூழ்ந்தங்கழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. (ச)

என்போடரவமேனத்தெயிறோடெழிலாமை
மின்போற்புரிநூல்விரவிப்பூண்டமணிமார்ப
ரன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலர்கோங்கோங்குசோலைப்புத்தூரே. (ரு)

வள்ளிமுலைதோய்குமரன்றாதைவான்றோயும்
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரரிசிற்றென்பாற்சிறைவண்டும்
புள்ளுமலிபூம்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. (சு)

நிலநந்தணிநீரோடனல்கால்விசும்பினீர்மையான்
சிலந்திசெங்கட்சோழனாகச்செய்தானூ

கலந்தவடியானற்றைக்கன்றோர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. (எ)

இத்தேரேகவிம்மலைபேர்ப்பனென்றேந்தும்
பத்தோர்வாயான்வரைக்கீழலறப்பாதந்தான்
வைத்தாரருள்செய்வரதன்மருவுமூரான
புத்தூர்காணப்புகுவார்வினைகள்போகுமே. (அ)

முள்ளார்கமலத்தயன்மான்முடியோடடிதேட
வெள்ளாரெரியாயுணர்தற்கரியாரூர்போலுங்
கள்ளார்நெய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. (கூ)

கையார்சோறுகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்யார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியாலந்தணர்போற்றும்புத்தூரி
லையாவென்பார்க்கையுறவின்றியழகாமே. (க0)

நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானுண்டான்புத்தூர்மேற்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்கள்
அறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - படிக்காசளித்தவீசுவரர் - தேவியார் - அழகம்மை.

திருமுதுகுன்றம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுவரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (க)

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழ்வானை
மந்தியேறியினமாயமலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (உ)

நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரந்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினயலேகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறோய்கோயின்முதுகுன்றே (ங)

தெரிந்தவடியார்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேந்தி
யிருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (௪)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தநைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவும்வாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (௫)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கு
மொய்ம்பாரசோலைவண்டுபாடுமுதுகுன்றே. (௬-௭)

வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில
பூசைசெய்தவடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (௮)

அல்லிமலர்மேலயனுமரவினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லைவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. (௯)

கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றுருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயி
றிருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துநடஞ்செய்முதுகுன்றே. (௧௦)

அறையார்கடல்சூழ்ந்ததண்காழிச்சம்பந்தன்
முறையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிவேலிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலு
மறையுநவின்றிலர்போலுமாசுணமார்த்திலர்போலும்
பறையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலர்போலும்
பிறையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (௧)

கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலர்போலு
மாரமும்பூண்டிலர்போலுமாமையணிந்திலர்போலுந்
தாருஞ்சடைக்கிலர்போலுந்தண்டிக்கருளிலர்போலும்
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (௨)

சித்தவடியிலர்போலுந்தேசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கடுங்காளிகதங்கடவிர்த்திலர்போலு
மெய்த்தநயனமிடந்தார்க்காழியளித்திலர்போலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (௩)

நச்சரவாட்டிலர்போலுநஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுத்தரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலு
மொய்ச்சவன்பேயிலர்போலுமுப்புரமெய்திலர்போலும்
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (௪)

தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலு
மாடுதடக்கைவலியயானையுரித்திலர்போலு
மோடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிகுத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (௫)

விண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலு
மண்ணலயன்றலைவீழவன்றுமறுத்திலர்போலும்
வண்ணவெலும்பினொடக்குவடங்கடரித்திலர்போலும்
பெண்ணினமொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே (௬)

பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலுங்
கன்றியகாலனைவீழக்காலல்கொடுபாய்ந்திலர்போலுந்
துன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்துதைந்திலர்போலும்
பின்றியும்பீடம்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (௭)

பரசுதரித்திலர்போலும்படுதலைபூண்டிலர்போலு
மரசனிலங்கையர்கோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. (௮)

அடிமுடிமாலயன்றேடவன்றுமளப்பிலர்போலுங்
கடிமலரைங்கணைவேளைக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (௯)

வெற்றரைச்சீவரத்தார்க்குவெளிப்படநின்றிலர்போலு
மற்றவராணிழலவர்க்கறங்களுரைத்திலர்போலு
முற்றவொன்றிலர்போலுமோடுமுடிக்கிலர்போலும்
பெற்றமூர்ந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (௧௦)

பெண்ணுருவாணுருவல்லாப்பிரமபுரநகாமேய
வண்ணல்செயயாதனவெல்லாமறிந்துவகைவகையாலே
நண்ணியஞானசம்பநதனவின்றனபத்தும்வலலார்கள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவாதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - திருநீற்றுப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

மநதிரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுநதரமாவதுநீறுதுதிக்கபபடுவதுநீறு
தநதிரமாவதுநீறுசமயததிலுள்ளதுநீறு
செநதுவாவாயுமைபஙகன்றிருவாலவாயான்றிருநீறே. (க)

வேதததிலுளளதுநீறுவெந்துயர்தீர்பபதுநீறு
போதநதருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதபபுனலவயலசூழநததிருவாலவாயான்றிருநீறே. (உ)

முததிதருவதுநீறுமுனிவாணிவதுநீறு
சததியமாவதுநீறுதக்கோாபுகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபாவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௩)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்ககெல்லாமபெருமைகொடுபபதுநீறு
மாணநதகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௪)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருநதவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுபபதுநீறுவநதமதாவதுநீறு
தேசம்புகழவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௫)

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (அ)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடாக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே (௧௦)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெரும்புலியூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. (௧)

துன்னுகடற்பவளஞ்சேர்தூயனீண்டதிரடோள்கண்
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினாளொரு * கங்கைக்
கன்னிகளின்புனையோடுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௨)

கள்ளமதித்தகபாலங்கைதனிலேமிகவேந்தித்
துள்ளமிதித்துநின்றாடுந்தொழிலொழின்மிகுசெல்வர்
வெள்ளநகுதலைமாலைவிரிசடைமேன்மிளிர்கின்ற
பிள்ளைமதிப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௩)

ஆடலிலையமுடையாரருமறைதாங்கியாறங்கம்
பாடலிலையமுடையார்பன்மையொருமைசெய்தஞ்சு

---

* கங்கைக்கன்னிகளின்புனையோடு - என்பதனுக்கு - கங்கையாறுகளாகிய மாலையுடன் எனப்பொருள் தோன்றுகின்றது.

மூடவிலையமுடையார்யோகெனும்பேரொளிதாங்கிப்
பீடவிலையமுடையார்பெரும்புலியூர்பிரியாரே (௪)

தோடுடையார்குழைக்காதிற்சுடுபொடியாரனலாடக்
காடுடையாரெரிவீசுங்கையுடையார்கடல்சூழ்நத
நாடுடையார்பொருளின்பநல்லவைநாளுநயந்த
பீடுடையார்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௫)

கற்றதுறப்பணிசெய்துகாண்டுமென்பாரவர்தங்கண்
முற்றிதறிதுமென்பார்கண்முதலியர்வேதபுராணர்
மற்றிதறிதுமென்பார்கண்மனத்திடையார்பணிசெய்யப்
பெற்றிபெரிதுமுகப்பார்பெரும்புலியூர்பிரியாரே. (௬)

மறையுடையாரொலிபாடன்மாமலர்சசேவடிசேர்வார்
குறையுடையார்குறைதீர்ப்பார்குழகரழகர்நஞ்செல்வர்
கறையுடையார்திகழ்கண்டங்கங்கைசடையிற்கரந்தார்
பிறையுடையாசென்னிதன்மேற்பெரும்புலியூரபிரியாரே. (௭)

உறவியுமின்புறுசீருமோங்குதலவீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
மறவியென்சிநதனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானாபெருமபுலியூரபிரியாரே. (௮)

சீருடையாரடியாாகளசேடரொப்பார்சடைசேரு
நீருடையார்பொடிப்பூசுநினைபபுடையாாவிரிகொன்றைத்
தாருடையாாவிடையூாவாாதலைவரநூற்றுப்பத்தாய
பேருடையார்பெருமானார்பெருமபுலியூாபிரியாரே. (௯)

உரிமையுடையடியார்களுள்ளுறவுள்கவல்லாாகட்
கருமையுடையனகாட்டியருள்செயுமாதிமுதல்வா
கருமையுடைநெடுமாலுங்கடிமலரண்ணலுங்காணாப்
பெருமையுடையபெருமானார்பெரும்புலியூாபிரியாரே. (௧௦)

பிறைவளருமுடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வியாக்கிரபுரீசுவரர் - தேவியார்-சவுந்தராம்பிகையம்மை.

திருக்கடம்பூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வானமாதிங்களுநீருமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலைபயிலுங்கடம்பூரிற்
றானமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. (க)

அரவினோடாமையும்பூண்டந்துகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேலவெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாத
மிரவும்பகலும்பணியவின்பநமக்கதுவாமே (உ)

*இளிபடுமின்சொலினார்களிருங்குழன்மேலிசைநந்தேறத்
தெளிபடுகொள்கைகலந்ததீந்தொழிலார்கடம்பூரி
லொளிதருவெண்பிறைசூடியொண்ணுதலோடுடனாகிப்
புலியதளாடைபுனைந்தான்பொற்கழல்போற்றுதுநாமே. (ஙு)

பறையொடுசங்குமியம்பப்பல்கொடிசேர்நெடுமாடங்
கறையுடைவேலவரிக்கண்ணார்கலையொலிசேர்கடம்பூரின்
மறையொலிகூடியபாடன்மருவிநின்றாடன்மகிழும்
பிறையுடைவார்சடையானைப்பேணவல்லார்பெரியோரே. (ச)

தீவிரியக்கழலார்ப்பச்சேயெரிகொண்டிடுகாட்டின்
னாவிரிகூந்தனற்பேய்கணகைசெய்நட்டநவின்றோன்
காவிரிகொன்றைகலந்தகண்ணுதலான்கடம்பூரிற்
பாவிரிபாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (ரு)

தண்புனனீள்வயறோறுந்தாமரைமேலனம்வைகக்
கண்புணர்காவில்வண்டேறக்கள்ளவிழுங்கடம்பூரிற்
பெண்புனைகூறுடையானைப்பின்னுசடைப்பெருமானைப்
பண்புனைபாடல்பயில்வார்பாவமிலாதவர்தாமே. (சு)

பலிகெழுசெம்மலர்சாரப்பாடலோடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரி
லொலிதிகழ்கங்கைகரந்தானொண்ணுதலாளுமைகேள்வன்
புலியதளாடையினான்றன்புனைகழல்போற்றல்பொருளே. (எ)

பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டிற்
காம்படுதோளியர்நாளுங்கண்கவருங்கடம்பூரின்
மேம்படுதேவியோர்பாகமேவியெம்மானெனவாழ்த்தித்
தேம்படுமாமலர்தூவித்திசைதொழத்தீயகெடுமே. (அ)

---

* இளி - என்பது - ஏழிசையிலொன்று,

திருமருமார்பிலவனுந்திகழ்தருமாமலரோனு
மிருவருமாயறிவொண்ணுவெரியுருவாநயவீசன்
கருவளைகாலிலடர்த்தகண்ணுதலான்கடம்பூரின்
மருவியபாடல்பயில்வார்வானுலகம்பெறுவாரே. (௯)

ஆடைதவிர்த்தறங்காட்டுமவர்களுமந்துவராடைச்
சோடைகணன்னெறிசொல்லார்சொல்லினுஞ்சொல்லலகண்டீர்
வேடம்பலபலகாட்டும்விகிர்தனம்வேதமுதல்வன்
காடதனிணடமாடுங்கண்ணுதலான்கடம்பூரே. (௧0)

விடைநவிலுங்கொடியானைவெண்கொடிசேர்நெடுமாடங்
கடைநவிலுங்கடம்பூரிற்காதலனைக்கடறகாழி
நடைநவின்ஞானசமபந்தனன்மையாலேததியபத்தும்
படைநவிலபாடலபயிலவாராபழியொடுபாவமிலாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் -அமுதகடேசுவரர் - தேவியார - சோதிமின்னம்மை.

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - காந்தாரம்.

திருசசிறறமபலம.

பெண்ணமாமேனியினருமபிறைபுலகுசெஞசடையாருங்
கண்ணமாநெறறியினருககாதமருங்குழையாரு
மெண்ணமருங்குணததாருமிமையவரோததநின்றாரும்
பண்ணமாபாடலினருமபாண்டிக்கொடுமுடியாரே. (௧)

தனைக்கணிமாமலர்கொண்டுதாடொழுவாரவர்தங்கள்
வினைப்பகையாயினதீர்க்குமவிண்ணவர்விஞ்சையர்நெஞ்சி
னினைத்தெழுவார்துயர்தீர்ப்பாரநிரைவளைமங்கைநடுங்கப்
பனைக்கைபபகட்டுரிபோர்ததாரபாண்டிக்கொடுமுடியாரே. (௨)

சடையமர்கொன்றையினருஞ்சாநதவெண்ணீறணிந்தாரும
புடையமர்பூதத்தினரும்பொறிகிளர்பாம்பசைத்தாரும்
விடையமருங்கொடியாரும்வெண்மழுமூவிலைச்சூலப்
படையமர்கொள்கையினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௩)

நறைவளர்கொன்றையினருஞாலமெல்லாந்தொழுதேத்தக்
கறைவளர்மாமிடற்றாருங்காடரங்காக்கனலேந்தி
மறைவளாபாடலினோடுமண்முழவங்குழன்மொந்தை
பஃறவளர்பாடலினரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௪)

போகமுமின்பமுமாகிப்போற்றியென்பாரவர்தங்க
ளாகமுறைவிடமாகவமர்ந்தவர்கொன்றையினோடு

நாகமுந்திங்களுஞ்சூடினனுதன்மங்கைதன்மேனிப்
பாகமுகந்தவர்தாமும்பாண்டிக்கொடுமுடியாரே. (ரு)

கடிபடுகூவிளமத்தங்கமழ்சடைமேலுடையாரும்
பொடிபடமுப்புரஞ்செற்றபொருசிலையொன்றுடையாரும்
வடிவுடைமங்கைதன்னோடுமணம்படுகொள்கையினாரும்
படிபடுகோலத்தினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (சு)

ஊனமர்வெண்டலையேந்தியுண்பலிக்கென்றுழல்வாருந்
தேனமருமொழிமாதுசேர்திருமேனியினாருங்
கானமர்மஞ்ஞைகளாலுங்காவிரிக்கோலக்கரைமேற
பானலநீறணிவாருமபாண்டிக்கொடுமுடியாரே. (எ)

புரந்தரன்றன்னொடுவானோர்போற்றியென்றேத்தநின்றாரும்
பெருந்திறல்வாளரக்கன்னைப்பேரிடாசெய்துகந்தாருங்
கருந்திணைமாமிடற்றாருங்காரகிலபன்மணியுநதிப்
பரந்திழிகாவிரிப்பாங்கர்ப்பாண்டிக்கொடுமுடியாரே. (அ)

திருமகள்காதலினானுந்திகழ்தருமாமலர்மேலைப்
பெருமகனும்வரக்காணாப்பேரழலாகியபெம்மான்
மருமலிமென்மலர்ச்சநதுவந்திழிகாவிரிமாடே
பருமணிநீர்த்துறையாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (கூ)

புத்தரும்புநதியிலாதசமணருமபொய்மொழியலலான்
மெயத்தவம்பேசிடமாட்டாரவேடம்பலபலவற்றாற்
சித்தருந்தேவருங்கூடிசசெழுமலாநலலனகொண்டு
பத்தர்கடாம்பணிந்தேத்தும்பாண்டிக்கொடுமுடியாரே. (க0)

கலமல்குதண்கடலசூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமலகுவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பததுஞ்சொலலவலலார்துயர்தீர்ந்து
நலமலகுசிந்தையராகிநன்னெறியெயதுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-கொடுமுடிநாதேசுவரா-தேவியாா-பண்மொழியம்மை.

திருப்பிரமபுரம்-திருச்சக்கரமாற்று - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை
யரன்மன்னுதண்காழிகொச்சைவயமுள்ளிட்டங்காதியாய
பரமனூாபன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலநாம்பரவுமூரே. (க)

வேணுபுரம்பிரமனூர்புகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குந்
தோணிபுரம்பூந்தராய்தூநீர்ச்சிரபுரம்புறவங்காழி
கோணியகோட்டாற்றுக்கொச்சைவயஞ்சண்பைகூருஞ்செல்வங்
காணியவையகத்தோரோத்துங்கழுமலநாங்கருதுமூரே. (௨)

புகலிசிரபுரம்வேணுபுரஞ்சண்பைபுறவங்காழி
நிகரிலபிரமபுரங்கொச்சைவயநீர்மேனின்றமூதூ
ரகலியவெங்குருவோடந்தண்டராயமரர்பெருமாற்கின்பம்
பகருநகர்நல்லகழுமலநாங்கைதொழுதுபாடுமூரே. (௩)

வெங்குருத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரம்பூந்தராயதொகுபிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொச்சைவயந்தலைபண்டாண்டமூதூர்
கங்கைசடைமுடிமேலேற்றான்கழுமலநாங்கருதுமூரே. (௪)

தொன்னீரிற்றோணிபுரம்புகலிவெங்குருத்துயர்தீர்காழி
பின்னீரவேணுபுரந்தராயபிரமனூரெழிலார்சண்பை
நன்னீர்ப்பூம்புறவங்கொச்சைவயஞ்சிலம்பனகர்நல்ல
பொன்னீரபுன்சடையான்பூந்தண்கழுமலநாம்புகழுமூரே. (௫)

தண்ணந்தராயபுகலிதாமரையானூர்சண்பைதலைமுனண்ட
வண்ணநகர்கொச்சைவயந்தண்புறவஞ்சீரணியார்காழி
விண்ணியல்சீர்வெங்குருநல்வேணுபுரந்தோணிபுரமேலாலேந்து
கண்ணுதலோன்மேவியநற்கழுமலநாங்கைதொழுதுகருதுமூரே. (௬)

சீராசிரபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவநல்ல
வாராத்தராயபிரமனூர்புகலிவெங்குருவோடந்தண்காழி
யோராகழுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
பேரானெடியவனுநான்முகனுங்காண்பரியபெருமானூரே. (௭)

புறவஞ்சிரபுரமுந்தோணிபுரஞ்சண்பைமிகுபுகலிகாழி
நறவமிகுசேரலைக்கொச்சைவயந்தராயநான்முகன்றனூர்
விறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
திறலாலரக்கனைச்செற்றானறன்கழுமலநாஞ்சேருமூரே. (௮)

சண்பைபிரமபுரந்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயந்தராயபுறவம்பாரோ
ணண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரைவியப்பழித்தவிமலனூரே. (௯)

செழுமலியபூங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரானன்னகரந்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
விழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுங்கண்ணுதலான்கருதுமூரே.

கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழவோவாநீடார்சிரபுரநீள்சண்பைமூதூர்
நச்சினியபூந்தராய்வேணுபுரந்தோணிபுரமாகிநம்மே
லச்சங்கடாத்தருளுமம்மான்கழுமலநாமமருவூரே. (கக)

காவிமலர்புரையுங்கண்ணார்கழுமலத்தின்பெயரைநாளும்
பாவியசீர்ப்பன்னிரண்டுநன்னூர்லாப்பததிமையாற்பனுவன்மாலை
நாவினலம்புகழ்சீர்நான்மறையானஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவாரவிண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே (கஉ)

திருச்சிற்றம்பலம்.

இது - பாண்டியராஜனுடைய சுரபிணிநீக்கசசென் முசனத்திலிருந்தபோது அந்தராஜன் சுவாமிகளைநோக்கி எந்தவூரென்றுவினவ, நாமினவூரென்று திருவாயமலர்ந்தருளிய திருப்பதிகம.

திருக்குறும்பலா பண் - காந்தாரம்.

திருசசிற்றமபலம.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைகரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதலபுரிந்தசெலவ
ரிருந்தவிடமவினவிலேலங்கமழ்சோலையினவண்டியாழசெய
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (க)

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
யாட்பலவுந்தானுடையவம்மானிடமபோலுமந்தண்சாரற்
கிட்பலவுங்கீண்டுகிளைகிளையனமந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவினறீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறுமபலாவே. (உ)

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
யாடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரற்
பாடற்பெடைவண்டுபோதலாத்தாதவிழ்ந்துபசும்பொனுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (௩)

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடமபோலுங்கல்சூழ்வெற்பி
னீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டாற்றுநெடுந்தண்சாரற்
கோலமடமஞ்ஞைபேடையோடாட்டயருங்குறும்பலாவே. (௪)

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கிதேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாய்சும்புபசும்பொன்கொழித்திழியுமலகுசாரற்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே.

நீற்றேதுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணா
கூறறேர்சிதையக்கடந்தாரிடமபோலுங்குளிர்சூழவெற்பி

லேற்றேனமேனமிவைபோடவைவிரவிழிபூஞ்சாரற்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. (௬)

பொன்றொத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்றொத்தவார்சடையெம்பெருமானிடம்போலும்பிலயந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுனறதும்புங்குறும்பலாவே. (௭)

ஏந்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரவூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரற்
பூந்தணறுவேங்கைக்கொத்திறுத்துமதத்தகத்திற்பொலியவேந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. (௮)

அரவினணைபானுநான்முகனுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவிமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரன்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பாலாவே. (௯)

மூடியசீவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்ந்தாரிடம்போலுங்கலசூழ்வெற்பி
னீடுயர்வேய்குனியப்பாய்கடுவனீள்கழைமேனிருத்தஞ்செய்யக்
கூடியவேடுவர்கள்கூய்விளியாக்கைமறிக்குங்குறும்பலாவே. (௧௦)

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ண
னம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
வின்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலநல்வினைகளாளாவன்றே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - குறும்பலாநாதர் - தேவியார் - குழன்மொழியம்மை.

இதுவே - திருக்குற்றாலம்.

திருநணா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பந்தார்விரன்மடவாள்பாகமாநாகம்பூண்டேறதேறி
யந்தாரரவணிந்தவம்மானிடம்போலுமந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழில்வண்டுபாடச்
செந்தேன்றெளியொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணாவே. (௧)

நாட்டம்பொலிந்திலங்குநெற்றியினான்மற்றொருகைவீணையேந்தி
யீட்டுந்துயரறுக்குமெம்மானிடம்போலுமிலைசூழ்கானி

லோட்டந்தருமருவிவீழும்விசைகாட்டமுந்தூழோசைச்
சேட்டார்மணிகளணியுந்திரைசேர்க்குந்திருநணாவே. (௨)

நன்றாங்கிசைமொழிந்துநன்னுதலாள்பாகமாய்ஞாலமேத்த
மின்றாங்குசெஞ்சடையெம்விகிர்தர்க்கிடம்போலும்விரைசூழ்வெற்பிற்
குன்றோங்கிவன்றிரைகண்மோதமயிலாலுஞ்சாரற்செவ்வி
சென்றோங்கிவானவர்களேத்தியடிபணியுந்திருநணாவே. (௩)

கையின்மழுவேந்திக்காலிற்சிலம்பணிந்துகரித்தோல்கொண்டு
மெய்யின்முழுதணிந்தவிகிர்தர்க்கிடம்போலுமிடைந்துவாளை
ணையரவொம்பெருமானருளென்றெனவுதரிக்கச்
செயயகமலம்பொழிதேனளிததியலுந்திருநணாவே (௪)

முத்தேர்நகையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூலபூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைததாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
வத்தேனளியுண்களியாலிசைமுரலவாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநணாவே. (௫)

வில்லார்வரையாகமாநாகநாணாகவேடங்கொண்டு
புல்லார்புரமூன்றெரித்தார்க்கிடம்போலும்புலியுமானு
மல்லாதசாதிகளுமங்கழன்மேற்கைகூப்பவடியார்கூடிச்
செல்லாவருநெறிக்கேசெல்லவருளபுரியுந்திருநணாவே. (௬)

கானார்களிற்றுரிவைமேன்மூடியாடரவொன்றரைமேற்சாத்தி
யூனார்தலையோட்டிலூணுகந்தான்றானுகந்தகோயிலெங்கு
நானாவிதத்தால்விரதிகணன்னாமமேயேத்திவாழ்த்தத்
தேனார்மலர்கொண்டடியாரடிவணங்குந்திருநணாவே. (௭)

மன்னீரிலங்கையர்தங்கோமான்வலிதொலையவிரலாலூன்றி
முந்நீர்க்கடனஞ்சையுண்டார்க்கிடம்போலுமுனைசேர்சீய
மன்னீர்மைகுன்றியழலாலவலிகுறையவழியுமுனறிற்
செந்நீர்பரப்பச்சிறந்துகரியொளிக்குந்திருநணாவே. (௮)

மையார்மணிமிடற்றன்மங்கையோர்பங்குடையான்மனைகடோறுங்
கையார்பலியேற்றகள்வனிடம்போலுங்கழல்கணேடிப்
பொய்யாமறையானும்பூமியளந்தானும்போற்றமன்னிச்
செய்யாரெரியாமுருவமுறவணங்குந்திருநணாவே. (௯)

ஆடையொழித்தங்கமணேதிரிந்துண்பாரல்லல்பேசி
மூடுருவமுகந்தாருரையகற்றுமூர்த்திகோயி
லோடுநதிசேருநித்திலமுமொய்த்தகிலுங்கரையிற்சாரச்
சேடர்சிறந்தேத்தத்தோன்றியொளிபெருகுந்திருநணாவே. (௧௦)

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசீரார்
நலவித்தகத்தாலினிதுணருஞானசம்பந்தனென்று
சொல்வித்தகத்தாலிறைவன்றிருநணாவேத்துபாடல்
வலவித்தகத்தான்மொழிவார்பழியிலரிம்மண்ணின்மேலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-சங்கமுகநாதேசுவரர்-தேவியார்-வேதமங்கையம்மை.
இது - பவானியென்னும்நதி-காவிரிநதியுடனசேருமிடமாதலால், பவானிகூடலெனப்
பெயர் வழங்கப்படுகின்றது

திருச்சக்கரமாற்று - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமேற்சோலை
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேற்
களங்கமிலூர்சண்பைகமழ்காழிவயங்கொச்சைகழுமலமென்றின்ன
விளங்குமரன்றன்னைப்பெற்றிமையவர்தம்பகையெறிவித்திறைவனூரே.

திருவளருங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூரயனூர்தெய்வத்
தருவளரும்பொழிற்புறவஞ்சிலம்பனூர்காழிதகுசண்பையேண்பா
லுருவளர்வெங்குருப்புகலியோங்குதராய்தோணிபுரமுயர்ந்ததேவர்
வெருவவளர்கடல்விடமதுண்டணிகொள்கண்டத்தோன்விரும்புமூரே.

வாய்ந்தபுகழ்மறைவளருந்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்வாழூ
ரேய்ந்தபுறவந்திகழுஞ்சண்பையெழிற்காழியிறைகொச்சையம்பொன்
வேய்ந்தமதிற்கழுமலம்விண்ணோர்பணியமிக்கயனூரமரர்கோனூ
ராய்ந்தகலையார்புகலிவெங்குருவதரனுறுமமருமூரே. (௩)

மாமலையாள்கணவன்மகிழ்வெங்குருமாப்புகலிதராய்தோணிபுரம்வான்
சேமமதில்புடைதிகழுங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூர்சீர்ப்
பூமகனூர்பொலிவுடையபுறவம்விறற்சிலம்பனூர்காழிசண்பை
பாமருவுகலையெட்டெட்டுணர்ந்தவற்றின்பயனுகர்வோர்பரவுமூரே.

[illegible]தரைத்தேவர்பணிசண்பைதமிழ்க்காழிவயங்கொச்சை தயங்குபூமேல்
[illegible]ளைச்சேருங்கழுமலமெய்யுணர்ந்தயனூர்விண்ணவர்தங்கோனூர்வென்றித்
[illegible]ளைச்சேரும்புனற்புகலிவெங்குருச்செல்வம்பெருகுதோணிபுரஞ்சீ
[illegible]ளைச்சேர்பூந்தராய்சிலம்பனூர்புறவமுலகத்திலுயர்ந்தவூரே. (௫)

புண்டரிகத்தார்வயல்சூழ்புறவமிகுசிரபுரம்பூங்காழிசண்பை
யெண்டிசையோரிறைஞ்சியவெங்குருப்புகலிபூந்தராய்தோணிபுரஞ்சீர்

---

* தரைத்தேவர் - பிராமணர்.

வண்டமருமபொழின்மலகுகழுமலநறகொச்சைவானவர்தங்கோனூ
ரண்டயனூரிவையென்பாருங்கூற்றையுதைத்துகந்தவப்பனூரே. (சு)

வண்மைவளர்வரத்தயனூர்வானவர்தங்கோனூர்வண்புகலியிஞ்சி
வெண்மதிசேர்வெங்குருமிக்கோரிறைஞ்சு சண்பைவியன்காழிகொச்சை
கண்மகிழுங்கழுமலங்கற்றோர்புகழுந்தோணிபுரம்பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ்சிரபுரமபாபுகழ்புறவம்பாலவண்ணன்பயிலுமூரே. (எ)

மோடிபுறங்காக்குமூர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்காழிமூதூர்
நீடியலுஞ்சண்பைகழுமலங்கொச்சைவேணுபுரங்கமலநீடு
கூடியயனூர்வளர்வெங்குருப்புகலிதராயதோணிபுரங்கூடப்போர்
தேடியுழலவுணர்பயிறிரிபுரங்கள்செற்றமலைச்சிலையனூரே. (அ)

இரக்கமுடையிறையவனூர்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்றன்னூர்
நிரக்கவருபுனற்புறவநின்றதவத்தயனூர்சீர்தேவர்கோனூர்
வரக்கரவாப்புகலிவெங்குருமாசிலாச்சண்பைகாழிகொச்சை
யரக்கன்விறலழித்தருளிக்கழுமலமந்தணர்வேதமறாதவூரே (கூ)

மேலோதுங்கழுமலமெய்த்தவமவளருங்கொச்சையிந்திரனூர்மெய்ம்மை
நூலோதுமயனறனூர்நுண்ணறிவார்குருப்புகலிதராய்தூநீர்மேற்
சேலோடுதோணிபுரந்திகழ்புறவஞ்சிலம்பனூர்செருச்செய்தன்று
மாலோடுமயனறியான்வண்காழிசண்பைமண்ணோர்வாழ்த்துமூரே.

ஆக்கமர்சீரூர்சண்பைகாழியமர்கொச்சைகழுமலமன்பானூ
ரோக்கமுடைத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமொண்புறவநண்பார்
பூக்கமலத்தோன்மகிழூர்புரந்தரனூர்புகலிவெங்குருவுமென்பா
சாக்கியரோடமண்கையர்தாமறியாவகைநின்றான்றங்குமூரே. (கக)

அக்கரஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்கரஞ்சேர்கழுமலமேகொச்சைவயம்வேணுபுரமயனூர்மேவிச்
சக்கரஞ்சீர்த்தமிழ்விரகன்றான்சொன்னதமிழ்தரிப்போர்தவஞ்செய்தோரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோமூத்திரி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறைவிலாப்புகலிபூமேன்
மாமகளூர்வெங்குருநற்றோணிபுரம்பூந்தராய்வாய்ந்தவிஞ்சிச்
சேமமிகுசிரபுரஞ்சீர்ப்புறவநிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்தநுதற்கண்ணவனூர்கழுமலநாங்கருதுமூரே. (க)

கருத்துடையமறையவர்சேர்கழுமலமெய்த்தோணிபுரங்கனகமாட
வுருத்திகழ்வெங்குருப்புகலியோங்குதராயுலகாருங்கொச்சைகாழி

திருத்திகழுஞ்சிரபுரந்தேவேந்திரனூர்செங்கமலத்தயனூர்தெய்வத்
தருத்திகழும்பொழிற்புறவஞ்சண்பைசடைமுடியண்ணறங்குமூரே. (௨)

ஊர்மதியைக்கதுவவுயர்மதிற்சண்பையொளிமருவுகாழிகொச்சை
கார்மலியும்பொழில்புடைசூழ் கழுமலமெய்த்தோணிபுரங்கற்றோர்த்துஞ்
சீர்மருவுபூந்தராய்சிரபுரமெய்ப்புறவமயனூர்பூங்கற்பத்
தார்மருவுமிந்திரனூர்புகலிவெங்குருக்கங்கைதரித்தோனூரே. (௩)

தரித்தமறையாளர்மிகுவெங்குருச்சீர்த்தோணிபுரந்தரியாரிஞ்சி
யெரித்தவன்சேர்கழுமலமேகொச்சைபூந்தராயபுகலியிமையோர்கோனூர்
தெரித்தபுகழ்ச்சிரபுரஞ்சீர்திகழ்காழிசண்பைசெழுமறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப்புறவம்விரைக்கமலத்தோனூருலகில்விளங்குமூரே. (௪)

விளங்கயனூர்பூந்தராயமிகுசண்பைவேணுபுரமேகமேயக்கு
மிளங்கமுகம்பொழிற்றோணிபுரங்காழியெழிற்புகலிபுறவமேரார்
வளங்கவரும்வயற்கொச்சைவெங்குருமாச்சிரபுரம்வன்னஞ்சமுண்டு
களங்கமலிகளத்தவன்சீர்க்கழுமலங்காமனுடல்காய்ந்தோனூரே. (௫)

காய்ந்துவருங்காலனையன்றுதைத்தவனூர்கழுமலமாத்தோணிபுரஞ்சீ
ரேய்ந்தவெங்குருப்புகலியிந்திரனூரிருங்கமலத்தயனூரின்பம்
வாய்ந்தபுறவந்திகழுஞ்சிரபுரம்பூந்தராயகொச்சைகாழிசண்பை
சேர்ந்தனைமுன்பயந்துலகிற்றேவர்கடம்பகைகெடுத்தோன்றிகழுமூரே (௬)

திகழ்மாடமலிசண்பைபூந்தராயபிரமனூர்காழிதேசார்
மிகுதோணிபுரந்திகழும்வேணுபுரம்வயங்கொச்சைபுறவம்விண்ணோர்
புகழ்புகலிகழுமலஞ்சீர்ச்சிரபுரம்வெங்குருவெம்போர்மகிடற்செற்று
நிகழ்நீலிநின்மலன்றனடியிணைகள்பணிந்துலகினின்றவூரே (௭)

நின்றமதில்சூழ்தருவெங்குருத்தோணிபுரந்திகழும்வேணுமன்றி
லொன்றுகழுமலங்கொச்சையுயர்காழிசண்பைவளர்புறவமோடி
சென்றுபுறங்காக்குமூர்ச்சிரபுரம்பூந்தராயபுகலிதேவர்கோனூர்
வென்றிமலிபிரமபுரம்பூதங்கடாங்காக்கமிக்கவூரே. (௮)

மிக்ககமலத்தயனூர்விளங்குபுறவஞ்சண்பைகாழிகொச்சை
தொக்கபொழிற்கழுமலந்தூத்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில்வேணுபுரமதிற்புகலிவெங்குருவல்லரக்கன்றிண்டோ
ளொக்கவிருபதுமுடிகளொருபதுமீடழித்துகந்தவெம்மானூரே. (௯)

எம்மான்சேர்வெங்குருச்சீர்சிலம்பனூர்கழுமலநற்புகலியென்றும்
பொய்ம்மாண்பிலோர்புறவங்கொச்சைபுரந்தரனூர்நற்றோணிபுரம்போர்க்
கைம்மாவையுரிசெய்தோன்காழியயனூர்தராய்சண்பைகாரின்
மெய்ம்மால்பூமகனுணராவகைதழலாய்விளங்கியவெம்மிறைவனூரே. (௧௦)

இறைவனமர்சண்பையெழிற்புறவமயனூரிமையோர்க்கதிபன்சேரூர்
குறைவில்புகழ்ப்புகலிவெங்குருத்தோணிபுரங்குணமார்பூந்தராய்சீர்ச்

சிறைமலிநற்சிரபுரஞ்சீர்க்காழிவளர்கொச்சைகழுமலந்தேசின்றிப்
பறிதலையோடமண்கையர்சாக்கியர்கள்பரிசறியாவம்மானூரே. (௧௧)

அம்மான்சேர்கழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தோணிபுகலிமிகுகாழிதோணிபுரந்தேவர்கோனூ
ரம்மான்மன்னுயர்சண்பைதராயனூர்வழிமுடக்குமாவின்பாச்ச
றம்மானென்றியஞானசம்பந்தன்றமிழ்கற்போர்தக்கோர்தாமே (௧௨)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணியங்குமதிக்கண்ணியானவிரியுஞ்சடைப்
பெண்ணயங்கொடிருமேனியான்பெருமானனற
கண்ணயங்கொடிருநெற்றியான்கலிகாழியுண்
மண்ணயங்கொண்மறையாளரேத்துமலர்ப்பாதனே. (௧)

வலியகாலனுயிர்வீட்டினான்மடவாளொடும்
பலிவிரும்பியதோர்கையினான்பரமேட்டியான்
கலியைவென்றமறையாளர்தங்கலிக்காழியு
ணலியவாதவினைதீர்த்துகந்தவெந்நம்பனே (௨)

சுற்றலாநற்புலித்தோலசைத்தயன்வெண்டலை
துற்றலாயதொருகொள்கையான்சுடுநீற்றன
கற்றல்கேட்டலுடையார்கள்வாழ்கலிக்காழியுண்
மற்றயங்குதிரடோளெம்மைந்தனவனல்லனே. (௩)

புல்லயங்குதலையேந்தினனபடுகானிடை
மல்லயங்குதிரடோளகளாரநடமாடியுங்
கல்லயங்குதிரைசூழ்நீள்கலிக்காழியுட்
டொல்லயங்குபுகழ்பேணநின்றசுடர்வண்ணனே. (௪)

தூநயங்கொடிருமேனியிற்பொடிப்பூசிப்போய்
நாநயங்கொண்மறையோதிமாதொருபாகமாக்
கானயங்கொள்புனலவாசமார்கலிக்காழியுட்
டேனயங்கொண்முடியானைந்தாடியசெல்வனே (௫)

சுழியிலங்கும்புனற்கங்கையாள்சடையாகவே
மொழியிலங்குமடமங்கைபாகமுகந்தவன்
சுழியிலங்குங்கடல்சூழ்ந்ததண்கலிக்காழியுட்
பழியிலங்குந்துயரொன்றிலாப்பரமேட்டியே. (௬)

முடியிலங்குமுயர்சிந்தையான்முனிவர்தொழ
வடியிலங்குங்கழலார்க்கவேயனலேந்தியுங்

கடியிலங்கும்பொழில்சூழ்ந்தண்கலிக்காழியுட்
கொடியிலங்குமிடையாளொடுங்குடிகொண்டதே. (௭)

வல்லரக்கன்வரைபோர்க்கவந்தவன்றோண்முடி
கல்லரக்கிவ்விறல்வாட்டினான்கலிக்காழியு
ணல்லொருக்கியதோர்சிந்தையார்மலர்தூவவே
தொல்லிருக்குமறையேத்துகந்துடன்வாழுமே. (௮)

மருவுநான்மறையோனுமாமணிவண்ணனு
மிருவர்கூடியிசைந்தேத்தவேயெரியான்றனூர்
வெருவநின்றதிரையோதம்வாரிவியன்முத்தவை
கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே. (௯)

நன்றியொன்றுமுணராதவன்சமண்சாக்கிய
ரன்றியங்கவர்சொன்னசொல்லவைகொள்கிலான்
கன்றுமேதியிளங்கானல்வாழ்கலிக்காழியுள்
வென்றிசேர்வியன்கோயில்கொண்டவிடையாளனே. (௧0)

கண்ணுமூன்றுமுடையாதிவாழ்கலிக்காழியு
ளண்ணலந்தண்ணருள்பேணிஞானசம்பந்தன்சொல்
வண்ணமூன்றுந்தமிழிற்றெரிந்திசைபாடுவார்
விண்ணுமண்ணும்விரிகின்றதொல்புகழாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு அகத்தியான் பள்ளி - பண் - காந்தாரம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிரு
ணீடியகொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
யாடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினார்கட்கில்லையாம்பாவமே. (௧)

துன்னங்கொண்டவுடையான்றுதைந்தவெண்ணீற்றினான்
மன்னுங்கொன்றைமதமத்தஞ்சூடினான்மாநக
ரன்னந்தங்கும்பொழில்சூழகத்தியான்பள்ளியை
யுன்னஞ்செய்தமனத்தார்கடம்வினையோடுமே. (௨)

உடுத்ததுவும்புலித்தோல்பலிதிரிந்துண்பதுங்
கடுத்துவந்தகழற்காலன்றன்னையுங்காலினா
லடுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
றொடுத்ததுவுஞ்சரமுப்புரந்துகளாகவே. (௩)

காய்ந்ததுவுமன்றுகாமனைநெற்றிக்கண்ணினாற்
பாய்ந்ததுவுங்கழற்காலனைப்பண்ணின்மறை

யாய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னேய்ந்ததுவுமிடவான்மகளொருபாகமே. (ச)

போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேந்திக்கோளரவம்மரைக்
கார்த்ததுவும்பொழிலசூழகத்தியான் பள்ளியான்
பார்த்ததுவும்மரணம்படரெரிமூழ்கவே. (ரு)

தெரிந்ததுவுங்கணையொன்றுமுப்புரஞ்சென்றுட
னெரிந்ததுவுமுன்னெழிலார்மலருறைவானறலை
யரிந்ததுவும்பொழிலசூழகத்தியான்பள்ளியான
புரிந்ததுவும்முமையாளொாபாகம்புனைதலே. (சா)

ஓதியெல்லாமுலகுக்கோரொண்பொருளாகிமெய்ச்
சோதியென்றுதொழுவாரவாதுயாநீர்த்திடு
மாதியெஙகளபெருமானகத்தியான்பள்ளியை
நீதியினறறொழுவாரவர்வினைநீஙகுமே. (எ)

செறுத்ததுவுந்தக்கன்வேளவியைததிருந்தார்புர
மொறுத்ததுவுமொளிமாமலருறைவானசிர
மறுத்ததுவும்பொழிலசூழகத்தியான்பள்ளியா
னிறுத்ததுவுமரக்கன்றன்றோளகளிருபதே (அ)

சிரமுநல்லமதிமத்தமுநதிகழுகொன்றையு
மரவமல்குஞ்சடையானகததியானபளளியைப
பிரமனோடுதிருமாலுநதேடியபெற்றிமை
பரவவலலாரவர்தஙகணமேலவினைபாறுமே. (கூ)

செநதுவராடையினருமவெற்றரையேதிரி
புந்தியிலார்களுமபேசுமபேச்சவைபொயமமொழி
யநதணனெங்களபிரானகததியான்பள்ளியைச்
சிநதியினும்வினையானவைசிதைநதோடுமே (க0)

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பநதன்மாமயிலாலுஞ்
சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுட
சூலநல்லபடையானடிதொழுதேததிய
மாலைவலலாரவர்தஙகளமேலவினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - அகததீசுவரர் - தேவியாா - மங்கைநாயகியம்மை.

திருஅறையணிநல்லூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சுடலைநீறணிந்தாரழ
லாடினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (௧)

இலையினார்சூலமேறுகந்தேறியேயிமையோர்தொழ
நிலையினாலொருகாலுறச்சிலையினான்மதிலெய்தவ
னலையினார்புனல்சூடியவண்ணலாரறையணிநல்லூர்
தலையினாற்றொழுதோங்குவார்நீங்குவார்தடுமாற்றமே. (௨)

என்பினார்கனல்சூலத்தாரிலங்குமாமதியுச்சிய
ான்பினாற்பிறங்குஞ்சடைப்பிஞ்ஞகன்பிறப்பிலியென்று
முன்பினார்மூவாதார்தொழுமுக்கண்மூர்த்திதன்றாள்களுக்
கன்பினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (௩)

விரவுநீறுபொன்மார்பினில்விளங்கப்பூசியவேதிய
னுரவுநஞ்சமுதாகவுண்டுறுதிபேணுவதன்றியு
மரவுநீள்சடைக்கண்ணியாரண்ணலாரறையணிநல்லூர்
பரவுவார்பழிநீங்கிடப்பறையுந்தாஞ்செய்தபாவமே. (௪)

தீயினார்திகழ்மேனியாய்தேவர்தாந்தொழுதேவனி
யாயினாய்கொன்றையாயனலங்கையாயறையணிநல்லூர்
மேயினார்தம்மதொல்வினைவீட்டினாய்வெய்யகாலனைப்
பாயினாயதிர்கழலினாய்பரமனேயடிபணிவனே. (௫)

விளையினார்கொன்றைசூடியுட்வேதநாகமும்வீக்கிய
வளையினாரறையணிநல்லூரண்ணலாரழகாயதோர்
நளையினார்விடையூர்தியாநககனார்நறும்போதுசே
ருளையினாலுயர்ந்தார்களுமுளையினாலுயர்ந்தார்களே. (௬)

வீரமாகியவேதியர்வேகமாகளியானையின்
னீரமாகியவுரிவைபோர்த்தரிவைமேற்சென்றவெம்பிறை
யாரமாகியபாம்பினாரண்ணலாரறையணிநல்லூர்
வாரமாய்நினைப்பார்கடம்வல்வினையவைமாயுமே. (௭)

தக்கனார்பெருவேள்வியைத்தகர்த்துகந்தவன்றாழ்சடை
முக்கணான்மறைபாடியமுறைமையான்முனிவர்தொழ
வக்கினோடெழிலாமைபூணண்ணலாரறையணிநல்லூர்
நக்கனாரவர்சார்வலானல்குசார்விலோநாங்களே. (௮)

வெய்யநோயிலர்தீதிலார்வெறியராயப்பிறர்பின்செலார்
செய்வதேயலங்காரமாமிவையிவைதேறியின்புறி

ஐயமேற்றுணுந்தொழிலராமண்ணலாரறையணிநல்லூர்ச்
சைவனாரவர்சார்வலால்யாதுஞ்சார்விலோநாங்களே. (௯)

வாக்கியஞ்சொல்லியாரொடும்வகைபலாவகைசெய்யன்மின்
சாக்கியஞ்சமணென்றிவைசாரேலும்மரணம்பொடி
யாக்கியமழுவாட்படையண்ணலாரறையணிநல்லூர்ப்
பாக்கியங்குறையுடையீரேற்பறையுமாஞ்செய்தபாவமே. (௧௦)

கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தனல்லதோர்பண்பினர்
மொழியினாலறையணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்றாடொழக்
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அறையணிநாதேசுவரர்-தேவியார்-அருளாநாயகியம்மை.

திருவிளநகர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
குளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
நளிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைநண்ணினார்
மிளிரிளம்பொறியரவினார்மேயதுவிளநகரதே (௧)

அக்கரவ்வணிகலனெனவதனோடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளநகரவர்மேயதே. (௨)

வாளிசேரடங்கார்மதிற்றொலையநூறியவம்பின்வேய்த்
தோளிபாகமமர்ந்தவருயர்ந்ததொல்கடனஞ்சுடன்
காளமல்கியகண்டத்தர்கதிர்விரிசுடர்முடியினர்
மீளியேறுகந்தேறினார்மேயதுவிளநகரதே (௩)

கால்விளங்கெரிகழலினார்கையிலங்கியவேலினார்
நூல்விளங்கியமார்பினார்நோயிலார்பிறப்பும்மிலார்
மால்விளங்கொளிமல்கியமாசிலாமணிமிடற்றினார்
மேல்விளங்குவெண்பிறையினார்மேயதுவிளநகரதே. (௪)

பன்னினார்மறைபாடினார்பாய்சீர்ப்பழங்காவிரித்
துன்னுதண்டுறைமுன்னினார்தூநெறிபெறுவாரெனச்
சென்னிதிங்களைப்பொங்கராக்கங்கையோடுடன்சேர்த்தினார்
மின்னைபொன்புரிநூலினர்மேயதுவிளநகரதே. (௫)

தேவருமமரர்களுந்திசைகண்மேலுள்ளதெய்வமும்
யாவரும்மறியாததோர்மதியாற்றழலுருவினா
மூவரும்மவரொன்னவுமுதல்வரும்மிவரென்னவு
மேவரும்பொருளாயினார்மேயதுவ்விளநகரதே (சு)

சொற்றருமறைபாடினார்சுடர்விடுஞ்சடைமுடியினார்
கற்றருவ்வடங்கையினார்காவிரித்துறைகாட்டினார்
மற்றருதிரடோளினாமாசில்வெண்பொடிப்பூசினார்
விற்றருமணிமிடறினார்மேயதுவ்விளநகரதே. (எ)

படர்தருஞ்சடைமுடியினார்பைங்கழலடிபரவுவா
ரடர்தரும்பிணிகெடுகெனவருளுவாரரவரையினார்
விடர்தரும்மணிமிடறினாமினனுபொன்புரிநூலினார்
மிடறரும்படைமழுவினாமேயதுவவிளநகரதே. (அ)

கையிலங்கியவேலினாதோலினார்கரிகாலினா
பையிலங்கரவலகுலாள்பாகமாகியபரமனா
மையிலங்கொளிமலகியமாசிலாமணிமிடறினார்
மெய்யிலங்குவெண்ணீற்றினார்மேயதுவவிளநகரதே. (கூ)

உள்ளதன்றனைக்காண்பன்கீழென்றமாமணிவண்ணனும்
உள்ளதன்றனைக்காண்பன்மேலென்றமாமலரண்ணலும்
உள்ளதன்றனைக்கண்டிலாரொளியார்தருஞ்சடைமுடியின்மேல்
உள்ளதன்றனைக்கண்டிலாவொளியார்விளநகர்மேயதே. (க0)

மென்சிறைவண்டியாழ்முரல்விளநகர்த்துறைமேவிய
நன்பிறைநுதலண்ணலைச்சண்பைஞானசம்பந்தன்சீ
ரினபுறுதமிழாற்சொன்னவேத்துவாரவினைநீங்கிப்போய்த்
துன்புறுதுயரம்மிலர்தூநெறிபெறுவார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - துறைகாட்டும்வள்ளலார் - தேவியார் - தோழியம்மை.

திருவாரூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினையே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே (க)

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார்
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவர்

ரெந்நாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணாரூர்தொழுதுய்யலாமையலகொண்டஞ்சனெஞ்சே. (௨)

நிணங்குடர்தோனரம்பென்புசேராக்கைதானிலாயதன்றூற்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினையே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமணங்கொடேத்து
மணங்கனாரூர்தொழுதுய்யலாமையலகொண்டஞ்சனெஞ்சே(௩)

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தனோய்கள்
வாதியாவாதலானாணாளினபமேமருவினையே
சாதியார்கின்னராதருமனும்வருணர்களேத்துமுக்க
ணாதியாரூர்தொழுதுய்யலாமையலகொண்டஞ்சனெஞ்சே. (௪)

பிறவியால்வருவனகேடுளவாதலாற்பெரியவின்பத்
துறவியாக்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினையே
மறவனீமார்க்கமேநண்ணினையதீர்த்தநீர்மல்குசென்னி
யுறவனாரூர்தொழுதுய்யலாமையலகொண்டஞ்சனெஞ்சே. (௫)

செடிகொனோயாக்கையம்பாம்பின்வாயதேரைவாய்ச்சிறுபறவைக்
கடிகொளபூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினையே
முடிகளாலவானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்க
ணடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௬)

ஏறுமாலியானையேசிவிகையந்தளகமீசசேர்ப்பிவட்டில்
மாறிவாழுடம்பினாபடுவதோரடலைக்குமயங்கினையே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியமவைத்த
வாறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௭)

என்பினாற்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்ததுநம்மில்லம்
புன்புலானாறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாசலாகுரம்பையின்மூழ்கிடாதே
யன்பனாரூர்தொழுதுய்யலாமையலகொண்டஞ்சனெஞ்சே. (௮)

தந்தைதாய்தன்னுடன்தோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கிலெனப்பற்றினையே
வெந்தநீறடியாராதியாரசோதியார்வேதகீத
ரெந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௯)

நெடியமால்பிரமனுநீண்டுமண்ணிடந்தின்னநேடிக்காணாப்
படியனார்பவளம்போலுருவனார்பனிவளர்மலையாள்பாக
வடிவனார்மதிபொதிசடையனார்மணியணிகண்டத்தெண்டோ
ளடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௧௦)

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூர
னல்லவேநல்லவேசொலலியஞானசம்பநதனரு
ரெல்லியம்போதெரியாடுமெமமீசனையேததுபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலாரோதநீர்வையகததே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்மயானம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
யெரியமதிலகளெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமாநதாா
பெரியவிடைமேலவருவாரவரெமபெருமானடிகளே. (க)

மங்கைமணநதமார்பாமழுவாள்வலனொன்றேநதிக்
கங்கைசடையிறகரநதார்கடவூரமயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிசெலவஞ்செயயாவருவா
ரங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (உ)

ஈடவிடவமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்நதார்
பாடலிசைகொளகருவிபடுதமபலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரெமபெருமானடிகளே. (ஙு)

இறைநின்றிலஙகுவளையாளிளையாளொருபாலுடையாா
மறைநின்றிலங்குமொழியார்மலையாாமனததின்மிசையார்
கறைநின்றிலஙகுபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெமபெருமானடிகளே. (ச)

வெள்ளையெருததின்மிசையாாவிரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடாபொற்சடைகடுலங்கக
கள்ளநகுவெணடலையார்கடவூர்மயானமமாநதார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (ரு)

பொன்றாதுதிருமணஙகொள்புனைபூங்கொன்றைபுனைநதா
ரொன்றுவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றாவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்நதார்
பின்றாழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. (சு)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமே[illegible]வருவாா
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (எ)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையிலவலியமாசிலவெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே (௮)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. (௯)

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொலலுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (௧௦)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகா
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பிரமபுரீசுவரர் - தேவியார் - மலர்க்குழன்மின்னம்மை.

திருவேணுபுரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின்படையினீர்பூங்கொன்றைத்தாரினீர்
ஓதத்தினொலியோடுமும்பர்வானவர்புகுந்து
வேதத்தினிசைபாடிவிரைமலர்கள்சொரிந்தேத்தும்
பாதத்தீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (௧)

சுடுகாடுமேவினீர்துன்னம்பெய்கோவணந்தோ
லுடையாயவதுகொண்டீருமையாளையொருபாக
மடையாளமதுகொண்டீரங்கையினிற்பரசுவெனும்
படையாள்வீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (௨)

கங்கைசேர்சடைமுடியீர்காலனைமுன்செற்றுகந்தீர்
திங்களோடிளவரவந்திகழ்சென்னிவைத்துகந்தீர்
மங்கையோர்கூறுடையீர்மறையோர்களிறைஞ்சேத்தப்
பங்கயஞ்சேர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (௩)

நீர்கொண்டசடைமுடிமேனீண்மதியம்பாம்பினொடு
சேர்கொண்டகொன்றை [illegible] விண்மத்தமிலங்கவே

சீர்கொண்டமாளிகைமேற்சேயிழையார்வாழ்த்துரைப்பக்
கார்கொண்டவேணுபுரம்பதியாகக்கலந்தீரே. (௪)

ஆலைசேர்தண்கழனியழகாகநறவுண்டு
சோலைசேர்வண்டினங்களிசைபாடத்தூமொழியார்
காலையேபுகுந்திறைஞ்சிக்கைதொழுமெய்மாதினொடும்
பாலையாழ்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (௫)

மணிமல்குமாலவரைமேனமாதினொடுமகிழ்ந்திருந்தீர்
துணிமல்குகோவணந்தீர்சுடுகாட்டிலாட்டுகந்தீர்
பணிமல்குமறையோர்கள்பரிந்திறைஞ்சவேணுபுரத்
தணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (௬)

நீலஞ்சேர்மிடற்றினீர்நீண்டசெஞ்சடையினீர்
கோலஞ்சேர்விடையினீர்கொடுங்காலனைச்செற்றீர்
ஞாலஞ்சேர்கழனியழகார்வேணுபுரமமருங்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (௭)

இரைமண்டிச்சங்கேறுங்கடல்சூழ்தென்னிலங்கையர்கோன்
விரைமண்டுமுடிநெரியவிரல்வைத்தீரவரைதன்னிற்
கரைமண்டிப்பேரோதங்கலந்தேறுங்கடற்கவினார்
விரைமண்டுவேணுபுரமேயமர்ந்துமிக்கீரே. (௮)

தீயோம்புமறைவாணர்க்காதியாந்திசைமுகன்மால்
போயோங்கியிழிந்தாரும்போற்றரியதிருவடியீர்
பாயோங்குமரக்கலங்கள்படுதிரையான்மொத்துண்டு
சேயோங்குவேணுபுரஞ்செழும்பதியாத்திகழ்ந்தீரே (௯)

நிலையார்ந்தவுண்டியினர்நெடுங்குண்டர்சாக்கியர்கள்
புலையாளரறவுரையைப்போற்றாதுன்பொன்னடியே
நிலையாகப்பேணிநீசரணென்றாரைமையென்றும்
விலையாகவாட்கொண்டுவேணுபுரம்விரும்பினையே. (௧௦-௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தேவூர் பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணில்வானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்திருமாளிகைத்தேவூ
ரண்ணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௧)

ஓதிமண்டலத்தோர்முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன்றுதிசெயமகிழ்ந்தவன்றூநீர்க்

தீதில்பங்கயந்தெரிவையர்முகமலர்தேவூ
ராதிசேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௨)

மறைகளான்மிகவழிபடுமாணியைக்கொல்வான்
கறுவுகொண்டவக்காலனைக்காய்ந்தவெங்கடவுள்
செறுவில்வாளைகள்சேலவைபொருவயற்றேவூ
ரறவன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௩)

முத்தன்சிலபலிக்கூர்தொறுமுறைமுறைதிரியும்
பித்தன்செஞ்சடைப்பிஞ்ஞகன்றன்னடியார்கள்
சித்தமாளிகைசெழுமதிதவழ்பொழிற்றேவூ
ரத்தன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௪)

பாடுவாரிசைபலபொருட்பயனுகந்தன்பாற்
கூடுவார்துணைக்கொண்டதம்பற்றறப்பற்றித்
தேடுவார்பொருளாவனசெறிபொழிற்றேவூ
ராடுவானடியடைந்தனமல்லலொன்றிலமே. (௫)

பொங்குபூண்முலைப்புரிகுழல்வரிவளைப்பொருப்பன்
மங்கைபங்கினனகங்கையைவளர்சடைவைத்தான
றிங்கள்சூடியதீநிறக்கடவுடென்றேவூ
ரங்கணன்றனையடைந்தனமல்லலொன்றிலமே. (௬)

வன்புயத்தவத்தானவர்புரங்களையெரியத்
தன்புயத்துறத்தடவரைவளைத்தவன்றக்க
தென்றமிழ்க்கலைதெரிந்தவர்பொருந்தியதேவூ
ரன்பன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௭)

தருவுயர்ந்தவெற்பெடுத்தவத்தசமுகனெரிந்து
வெருவவூன்றியதிருவிரனெகிழ்த்துவாள்பணித்தான்
றெருவுதோறுநற்றென்றல்வந்துலவியதேவூ
ரரவுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (௮)

முந்திக்கண்ணனுநான்முகனுமவர்காணு
வெந்தைதிண்டிறலிருங்களிறுரித்தவெம்பெருமான்
செந்தினத்திசையறுபதமுரறிருத்தேவூ
ரந்திவண்ணனையடைந்தனமல்லலொன்றிலமே. (௯)

பாறுபுத்தருந்தவமணிசமணரும்பலநாள்
கூறிவைத்ததோர்குறியினைப்பிழையெனக்கொண்டு
தேறிமிக்கநஞ்செஞ்சடைக்கடவுடன்றேவூ
ராறுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (௧௦)

அல்லலின்றிவிண்ணுளவர்கள்காழியர்க்கதிப
னல்லசெந்தமிழ்வல்லவனஞானசம்பந்த
னெல்லையில்புகழ்மலிகியவெழிலவளர்தேவூர்த்
தொல்லைநம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தேவகுருநாதா-தேவியார்-மதுரபாஷணியம்மை.

திருக்கொச்சைவயம - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலநன்மாமிடற்றனிறைவன்சினததநெடுமாவுரித்தநிகரில்
சேலனகண்ணிவண்ணமொருகூறுருக்கொடிகழ்தேவன்மேவுபதிதான்
வேலனகண்ணிமார்களவிளையாடுமோசைவிழவோசைவேதவொலியின்
சாலநல்வேலையோசைதருமாடவீதிகொடியாடுகொச்சைவயமே. (க)

விடையுடையப்பனொப்பினடமாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
சடையிடைவெள்ளெருக்கமலர்கங்கைதிங்கடகவைத்தசோதிபதிதான்
மடையிடையன்னமெங்குநிறையப்பரந்துகமலத்துவைகும்வயல்சூழ்
கொடையுடைவண்கையாளர்மறையோர்களென்றும்வளர்கின்றகொச்சைவயமே.

படவரவாடுமுன்கையுடையானிடும்பைகளைவிக்குமெங்கள்பரம
னிடமுடைவெண்டலைக்கைபலிகொளளுமின்பனிடமாயவேர்கொள்பதிதா
னடமிடமஞ்ஞைவண்டுமதுவுண்டுபாடுநளிர்சோலைகோலுகனகக்
குடமிடுகூடமேறிவளர்பூவைநல்லமறையோதுகொச்சைவயமே. (ங)

எண்டிசைபாலரெங்குமிகலிப்புகுந்துமுயல்வித்தசிந்தைமுடுகிப்
பண்டொளிதீபமாலையிடுதூபமோடுபணிவுற்றபாதர்பதிதான்
மண்டியவண்டன்மிண்டிவருநீரபொன்னிவயல்பாயவாளைகுழுமிக்
குண்டகழ்பாயுமோசைபடநீடுதென்னவளர்கின்றகொச்சைவயமே. (ச)

பனிவளர்மாமலைக்குமருகன்குபேரனொடுதோழமைக்கொள்பகவ
னினியனவல்லவற்றையினிதாகநல்குமிறைவன்னிடங்கொள்பதிதான்
முனிவர்கடொக்குமிக்கமறையோர்களோமம்வளர்தூமமோடியணவிக்
குனிமதிமூடிநீடுமுயர்வான்மறைத்துநிறைகின்றகொச்சைவயமே. (ரு)

புலியதள்கோவணங்களுடையாடையரகவுடையானினைக்குமளவி
னலிதருமுப்புரங்களெரிசெய்தநாதனலைமாவிருந்தநகாதான்
கலிகெடவந்தணாளர்கலைமேவுசிந்தையுடையார்நிறைந்துவளரப்
பொலிதருமண்டபங்களுயர்மாடநீடுவுளமேவுகொச்சைவயமே. (சா)

மழைமுகில்போலுமேனியடல்வாளரக்கன்முடியோடுதோள்கணெரியப்
பிழைகெடமாமலர்ப்பொனடிவைத்தபேயோடுடனாடிமேயபதிதா

விழைவளரல்குன்மாதரிசைபாடியாடவிடுமூசலன்னகமுகின்
குழைதருகண்ணிவிண்ணிலவருவார்கடங்களடிதேடுகொச்சைவயமே. (அ)

வண்டமர்பங்கயத்துவளர்வானும்வையமுழுதுண்டமாலுமிகலிக்
கண்டிடவொண்ணுமென்றுகிளறிப்பறந்துமறியாதசோதிபதிதா
னண்டுணநாரைசெந்நெனடுவேயிருந்துவிரைதேரப்போதுமடுவிற்
புண்டரிகங்களோடுகுமுதம்மலர்ந்துவயன்மேவுகொச்சைவயமே. (கூ)

கையினிலுண்டுமேனியுதிர்மாசர்குண்டரிடுசீவரத்தினுடையார்
மெய்யுரையாதவண்ணம்விளையாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
பையுடைநாகவாயிலெயிறாரமிக்ககுரவம்பயின்றுமலரச்
செய்யினீலமொட்டுவிரியக்கமழ்ந்துமணநாறுகொச்சைவயமே. ()

இறைவனையொப்பிலாதவொளிமேனியானையுலகங்களேழுமுடனே
மறைதருவெள்ளமேறிவளர்கோயின்மன்னியினிதாவிருந்தமணியைக்
குறைவிலஞானமேவுகுளிர்பந்தன்வைத்ததமிழ்மாலைபாடுமவர்போ
யறைகழலீசனாளுநகர்மேவியென்றுமழகாவிருப்பதறிவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநனிபள்ளி - பண் - பியந்தைக்காந்தாரம்.

பாலைநெய்தல்பாடியருளியது

திருச்சிற்றம்பலம்.

காரைகள்கூகைமுல்லைகளவாகையீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூரைகள்பம்பிவிம்முசுடுகாடமர்ந்தசிவன்மேவுசோலைநகர்தான்
றேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
நாரைகளாரல்வாரவயன்மேதிவைகுநனிபள்ளிபோலுநமர்காள். (க

சடையிடைப்புக்கொடுங்கியுட்டங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
யிடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவனிடங்கொள்பதி
மடையிடைவாளைபாயமுகிழ்வாயநெரிந்துமணநாறுநீலமலருந் [தான்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள். (௨)

பெறுமலர்கொண்டுதொண்டர்வழிபாடுசெய்யலொழிபாடிலாதபெருமான்
கறுமலர்கண்டமாகவிடமுண்டகாளையிடமாயகாதனகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்டவிசைபோனகொம்பின்விடுபோதலர்ந்தவிரைசூழ்
நறுமலரல்லிபுல்லியொலிவண்டுறங்குநனிபள்ளிபோலுநமர்காள். (௩)

குளிர்தருகங்கைதங்குசடைமாடிலங்குதலைமாலையோடுகுலவி
யொளிர்தருதிங்கள்சூடியுமைபாகமாகவுடையானுகந்தநகர்தான்
குளிர்தருகொம்மலோடுகுயில்பாடல்கேட்டபெடைவண்டுதானுமுரல
நளிர்தருசோலைமாலைநரைகுருகுவைகுநனிபள்ளிபோலுநமர்காள்.

தோடொருகாதனாகியொருகாதிலங்குசுரிசங்கநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தையிடமாயகாதனகர்தான்

வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலா
னூடுடனாடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளிபோலுநமர்காள். (௫)

மேகமோடோடுதிங்கண்மலராவணிந்துமலையான்மடந்தைமணிபொன்
னாகமோர்பாகமாகவனலாடுமெந்தைபெருமானமர்ந்தநகர்தா
னாகமோடாடுமந்தியுகளுஞ்சிலம்பவகிலுந்தியொண்பொனிடறி
நாகமோடாரம்வாருபுனல்வந்தலைக்குநனிபள்ளிபோலுநமர்காள். (௬)

தகைமலிதண்டுசூலமனலுமிழுநாகங்கொடுகொட்டிவீணைமுரல
வகைமலிவன்னிகொன்றைமதமத்தம்வைத்தபெருமானுகந்தநகர்தான்
புகைமலிகந்தமாலைபுனைவார்கள்பூசலபணிவார்கள்பாடல்பெருகி
* நகைமலிமுத்திலங்குமணல்சூழ்கிடக்கைநனிபள்ளிபோலுநமாகாள் (௭)

வலமிகுவாளன்வேலன்வளைவாளெயிறுமதியாவரக்கனவலியோ
டுலமிகுதோள்களொல்கவிரலாலடர்த்தபெருமானுகந்தநகர்தா
னிலமிகுகீழுமேலுநிகராதுமில்லையெனநின்றநீதியதனை
நலமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். (௮)

நிறவுருவொன்றுதோன்றியெரியொன்றிநின்றதொருநீர்மைசீர்மைநினையா
ரறவுருவேதனாவனயனோடுமாலுமறியாதவண்ணனகர்தான்
புறவுரிமுல்லைமௌவல்குளிர்பிண்டிபுன்னைபுனைகொன்றைதுன்றுபொதுளி
நறவிரிபோதுதாதுபுதுவாசநாறுநனிபள்ளிபோலுநமர்காள் (௯)

அனமிகுசெல்குசோறுகொணாகென்றுகையிலிடவுண்டுபட்டவமணும
மனமிகுகஞ்சிமண்டையதிலுண்டுதொண்டர்குணமின்றிநின்றவடிவும்
வினைமிகுவேதநான்கும்விரிவித்தநாவினவிடையானுகந்தநகர்தா
னனமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். (௧0)

கடலவரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவ
னிடுமறையொன்றவைத்தபியனமேலிருந்திசையாலுரைத்தபனுவ
னடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினைகெடுதலாணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளி - பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனா
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௧)

---

* பாலைநெய்தல்பாடியது-இந்த நானகாவது சரணத்தால விளங்குகின்றது, எவ்வாறென்னில், முத்துகள் விளங்குமணல்சூழ்ந்த நிலமென்றதனாலென்க, பாலைநெய்தலபாடியதும்-பாம்பழியப்பாடியதும்-என்னுந் திருவெண்பாவுமுணர்க.

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா
* லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள்களவைதா
னன்பொடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௨)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
றிருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவு
மருநெதிநல்லநலலவவைநல்லநலலவடியாரவாக்குமிகவே. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்கொடுநோயகளானபலவு
மதிகுணநல்லநல்லவவைநலலநல்லவடியாரவாக்குமிகவே. (௪)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடும்விடையேறுமெங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௫)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநலலநலலவடியாரவர்க்குமிகவே. (௬)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்துமவினையானவந்துநலியா
வப்படிநல்லநலலவவைநல்லநல்லவடியாரவாக்குமிகவே. (௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடரானவந்துநலியா
வாழகடனலலநலலவவைநலலநல்லவடியாரவர்க்குமிகவே (௮)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனான்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௯)

கொத்தலர்குழலியோடும்விசயற்குநல்குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௧0)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனுதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெ
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தப்பதிகம - பாண்டிநாட்டுக்கெழுந்தருளும்போது அருளிச்செய்தது.

* இரணடாவது தேவாரம்-மூன்றாவதுசரணத்தில் - பிரயாணத்துக்காகாத ௰௨-நக்ஷத்திரங்களைக்குறிததிருக்கின்றது, விவரம் - நக்ஷத்திரங்களில் முதலுற்பத்திகிருத்திகையாம்-ஆதலாலதனை முதலாகக்கொண்டுபார்க்கில் ஒன்பதாவது நக்ஷத்திரம்-பூரம் ஒன்றென்றது - கிருத்திகை, ஏழு-ஆயிலியநக்ஷத்திரம், பதினெட்டு-பூராடம், ஆறுமூடனுயநாள்கள் என்றது-மேற்கூறிய நான்கும் அலலாத எட்டுநக்ஷத்திரங்களுமாம். பன்னிரண்டுநக்ஷத்திரங்களாவன - பூரம் - பூராடம-பூரட்டாதி-மகம்-கேட்டை-பரணி-கிருத்திகை - சுவாதி - ஆயிலியம் - விசாகம் - ஆதிரை - சித்திரை - எனபவைகளாம்.

திருநாரையூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருசசிற்றம்பலம.

உரையினில்வந்தபாவமுணர்நோய்களும்மசெயதீங்குகுற்றமுலகில்
வரையினிலாமைசெய்தவவைதீரும்வண்ணமிகவேத்திகித்தநினைமின்
வரைசிலையாகவன்றுமதின்மூன்றெரித்துவளர்கங்குனங்கைவெருவத்
திரையொலிநஞ்சமுண்டசிவன்மேயசெலவத்திருநாரையூர்கைதொழவே. (௧)

ஊனடைகின்றகுற்றமுதலாகியுற்றபிணிநோயொருங்குமுயரும்
வானடைகின்றவெள்ளைமதிசூடுசென்னிவிதியானவேதவிகிர்தன்
கானிடையாடிபூதப்படையானியங்குவிடையானிலங்குமுடிமேற்
றேனடைவண்டுபாடுசடையண்ணனண்ணுதிருநாரையூர்கைதொழவே. (௨)

ஊரிடைநின்றுவாழுமுயிர்செற்றகாலன்றுயருற்றதீங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்துபழியுற்றவார்த்தையொழியுற்றவண்ணமகலும்
போரிடையன்றுமூன்றுமதிலெயதனான்றுபுகழ்வானுளோர்கள்புணருந்
தேரிடைநின்றவெந்தைபெருமானிருந்ததிருநாரையூர்கைதொழவே (௩)

தீயுறவாயவாக்கையதுபற்றிவாழும்வினைசெற்றவுற்றவுலகின்
றாயுறுதன்மையாயதலைவன்றனுமநிலையாகநின்றுமருவும்
பேயுறவாயகானினடமாடிகோலவிடமுண்டகண்டன்முடிமேற்
றேய்பிறைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூாகைதொர்ழவே. (௪)

வசையபராதமாயவுவரோதநீங்குந்தவமாயதன்மைவருமான்
மிசையவராதியாயதிருமார்விலங்குவிரிநூலர்விண்ணுநிலனு
மிசையவராசிசொல்லவிமையோர்களேத்தியமையாதகாதலொடுசேர்
திசையவர்போற்றநின்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௫)

உறைவளருனிலாயவுயிர்நிற்கும்வண்ணமுணாவார்க்குமுண்மையுலகிற்
குறைவுளவாகிநின்றகுறைதீர்க்குநெஞ்சினிறைவாற்றுநேசம்வளரு
மறைவளாநாவன்மாலினுரிபோர்த்தமெய்யனரவாததவண்ணல்கழலே
திறைவளாதேவர்கொண்டினருளபேணநின்றதிருநாரையூர்கைதொழவே.(௬)

தனம்வருநன்மையாகுநதகுதிக்குழந்துவருதிக் தழன்றவுடலி
னினம்வளரைவர்செயயும்வினையங்களசெற்றுநினைவொனறுசிந்தைபெருகு
முனமொருகாலமூன்றுபுரமவெநதுமங்கச்சரமுன்றெரிந்தவவுணா
சினமொருகாலழித்தசிவன்மேயசெலவததிருநாரையூாகைதொழவே.

உருவணைகின்றநாளினுயிாகொள்ளுங்கூற்றநனியஞ்சுமாதலுறநீ
மருமலர்தூவியென்றும்வழிபாடுசெய்யுமதிழியாடிலாதகடலி
னருவரைசூழிலங்கையரையனறன்வீரமழியத்தடக்கைமுடிக
டிருவிரல்வைத்துகநதசிவனமேயசெலவததிருநாரையூர்கைதொழவே

வேறுயர்வாழ்வுதனமைவினைதுக்கமிக்கபகைதீாக்குமேயவுடலிற்
றேறியசிந்தைவாய்மைதெளிவிககநின்றகரவைககரநதுதிகழுஞ்
சேறுயர்பூவின்மேயபெருமானுமறறைத்திருமாலுநேடவெரியாயச்
சீறியசெம்மையாகுசிவனமேயசெலவததிருநாரையூாகைதொழவே

மிடைபடுதுன்பமின்பமுளதாக்குமுள்ளம்வெளியாககுமுன்னியுணரும்
படையொருகையிலேந்திப்பலிகொளளும்வண்ணமொலிபாடியாடிபெருமை
யுடையினைவிட்டுளோருமுடலபோர்த்துளோருமுரைமாயும்வண்ணமழியச்
செடிபடவைத்துகநதசிவன்மேயசெல்வததிருநாரையூாகைதொழவே. (௧0)

எரியொருவண்ணமாயவுருவானையெநதைபெருமானையுள்கிநினையார்
திரிபுரமன்றுசெற்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவான்
பொருபுனல்சூழநதகாழிமறைஞானபநதனுரைமாலைபத்துமொழிவார்
திருவளர்செமமையாகியருளபேறுமிக்கதுளதென்பர்செம்மையினரோ. (௧௧)

திருசசிற்றமபலம.

திருநறையூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருசசிறறமபலம்.

நேரியனாகுமலலனொருபாலுமேனியரியான்முனாயவொளியா
னீரியலகாலுமாகிநிறைவானுமாகியுறுதீயுமாயநிமல
னூரியலபிச்சைபேணியுலகங்களேததநலகணடுபணடுசுடலை
நாரியோர்பாகமாகநடமாடவல்லநறையூரினம்பனவனே. (௧)

இடமயிலன்னசாயன்மடமங்கைதன்கையெதிர்நாணிபூணவரையிற்
கடுமயிலம்புகோத்துவெயில்செற்றுகந்துவமரர்க்களித்ததலைவன்
மடமயிலூர்திதாதையெனநின்றுதொண்டர்மனநின்றமைந்தன்மருவுங்
நடமயிலாலநீடுகுயில்கூவுசோலைநறையூரினம்பனவனே. (௨)

கூடகமுன்கைமங்கையொருபாகமாகவருள்காரணங்கள்வருவா
னீடகமானநோக்கியிடுபிச்சைகொண்டுபடுபிச்சர்நின்றுபாவத்
தோடகமாயோகாதுமொருகாதிலங்குகுழைதாழவேழவுரிய
னாடகமாடவாடிமடவார்கள்பாடுநறையூரினம்பனவனே. (௩)

சாயனன்மாதோர்பாகன்விதியாயசோதிகதியாகநின்றகடவுள்
ளாயகமென்னுள்வந்தவருளாயசெல்வனிருளாயகண்டனவனித்
தாயெனநின்றுகந்ததலைவன்விரும்புமலையின்கண்வந்துதொழுவார்
நாயகனென்றிறைஞ்சிமறையோர்கள்பேணுநறையூரினம்பனவனே. (௪)

நெதிபடுமெய்யமையநிறைசோலைசுற்றிநிகழம்பலத்தினடுவே
யதிர்படவாடவல்லவமரர்க்கொருத்தனெமாசுற்றமாயவிறைவன்
மதிபடுசென்னிமன்னுசடைதாழவந்துவிடையேறியிலபலிகொள்வா
னதிபடவுந்திவந்துவயலவாளைபாயுநறையூரினமபனவனே. (௫)

கணிகையோர்சென்னிமன்னுமதுவன்னிகொன்றைமலர்துன்றுசெஞ்சடை
பணிகையின்முன்னிலங்கவருவேடமன்னுபலவாகிநின்றபரமன் [யினான்
னணுகியவேதவோசையிகலங்கமாறின்பொருளானவாதியருளா
னணுகியதொண்டர்கூடிமலர்தூவியேத்துநறையூரினமபனவனே (௬)

ஒளிர்தருகின்றமேனியுருவெங்குமங்கமவையாரவாடலரவம்
மிளிர்தருகையிலங்கவனலேந்தியாடுமெவிகிர்தன்விடங்கொண்மிடறன்
றுளிதருசோலையாலைதொழின்மேவவேதமெழிலாரவென்றியருளுந
நளிர்மதிசேருமாடமடவார்களாருநறையூரினமபனவனே. (௭)

அடலெருதேறுகந்தவதிருங்கழற்களெதிருஞ்சிலம்பொடிசையக்
கடலிடைநஞ்சமுண்டுகனிவுற்றகண்டன்முனிவுற்றிலங்கையரைய
னுடலொடுதோளனைத்துமுடிபத்திறுத்துமிசைகேட்டிரங்கியொருவா
ணடலைகடாத்துநலகிநமையாளவல்லனறையூரினம்பனவனே. (௮)

குலமலர்மேவினானுமிகுமாயனானுமெதிர்கூடிநேடிநினைவுற்
றிலபலவெய்தொணாமையெரியாயுயர்ந்தபெரியானிலங்குசடையன்
சிலபலதொண்டர்நின்றுபெருமைக்கள்பேசவருமைத்திகழ்ந்தபொழிலின்
னலமலர்சிந்தவாசமணநாறுவீதினறையூரினம்பனவனே. (௯)

துவருறுகின்றவாடையுடலபோர்த்துழன்றவவர்தாமுமல்லசமணுங்
கவருறுசிந்தையாளருணராநீத்துகந்தபெருமான்பிறங்குசடையன்
றவமலிபத்தர்சித்தர்மறையாளர்பேணமுறைமாதர்பாடிமருவுந்
நவமணிதுன்றுகோயிலொளிபொன்செய்மாடநறையூரினம்பனவனே (௧0)

கானலுலாவியோதமெதிர்மலகுகாழிமிகுபந்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தையடிவைத்துகந்தநறையூரினம்பனவனை
யீனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துநினைவார்
வானநிலாவவல்லர்நிலமெங்குநின்றுவழிபாடுசெய்யுமிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமுல்லைவாயில் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னுசுடரோ
னொளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதுவிற்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுதிருமுல்லைவாயிலிதுவே. (௧)

பருவத்தில்வந்துபயனுற்றபண்பனயனைப்படைத்தபரம
னரவத்தொடங்கமவைகட்டியெங்குமரவிக்கநின்றவரனூ
ருருவத்தின்மிக்கவொளிசங்கோடிப்பியவையோதமோதவெருவித்
தெருவத்தில்வந்துசெழுமுத்தலைக்கொடிருமுல்லைவாயிலிதுவே (௨)

வாராதநாடன்வருவார்தமவில்லினுருமெல்லிநாணுமுருகில்
லாராதவின்பனகலாதவன்பனருண்மேவிநின்றவரனூர்
பேராதசோதிபிரியாதமார்பினலர்மேவுபேதைபிரியா
தூராதகாதனெறிநேரநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (௩)

ஒன்றொன்றொடொன்றுமொருநான்கொடைந்துமிருமூன்றொடேழுமு
டனா, யன்றின்றொடென்றுமறிவானவர்க்குமறியாமைநின்றவரனூர், குன
றொன்றொடொன்றுகுலையொன்றொடொன்றுகொடியொன்றொடொன்றுகு
ழுமிச்,சென்றொன்றொடொன்றுசெறிவாய்நிறைந்ததிருமுல்லைவாயிலிதுவே.

கொம்பன்னமின்னினிடையாளொர்கூறன்விடைநாளுமேறுகுழக
னம்பன்னெமன்பன்மறைநாவன்வானின்மதியேறுசென்னியரனூ
ரம்பன்னவொண்கணவராடரங்கினணிகோபுரங்களழகார்
செம்பொன்னசெவ்விதருமாடநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (௫)

ஊனேறுவேலினுருவேறுகண்ணியொளியேறுகொண்டவொருவ
னானேறதேறியழகேறுநீறனரவேறுபூணுமவனூர்
மானேறுகொல்லைமயிலேறிவந்துகுயிலேறுசோலைமருவித்
தேனேறுமாவின்வளமேறியாடுதிருமுல்லைவாயிலிதுவே. (௬)

நெஞ்சாரநீடுநினைவாரைமூடுவினைதேயநின்றநிமல
னஞ்சாடுசென்னியரவாடுகையனனலாடுமேனியரனூர்
மஞ்சாருமாடமனைதோறுமையமுளதென்றுவைகிவரினுஞ்
செஞ்சாலிநெல்லின்வளர்சோறளிக்கொடிருமுல்லைவாயிலிதுவே. (௭)

வரைவந்தெடுத்தவலிவாளரக்கன்முடிபத்துமிற்றுநெரிய
வுரைவந்தபொன்னினுருவந்தமேனியுமைபங்கனெங்கள்பரனூர்
வரைவந்தசந்தோடகிலுந்திவந்துமிளிர்கின்றபொன்னிவடபாற்
றிரைவந்துவந்துசெறிதேறலாடுதிருமுல்லைவாயிலிதுவே. (௮)

மேலோடிநீடுவிளையாடனமேவுவிரிநூலன்வேதமுதல்வன்
பாலாடுமேனிகரியானுமுனிவியவர்தேடநின்றபரனூர்
காலாடுநீலமலர்துன்றிநின்றகதிரேறுசெந்நெல்வயலிற்
சேலோடுவாளைகுதிகொள்ளமல்குதிருமுல்லைவாயிலிதுவே. (௯)

பனைமல்குதிண்கைமதமாவுரித்தபரமன்னநம்பனடியே
நினைவன்னசிந்தையடையாததேரமணாயநின்றவரனூர்
வனமல்குகைதைவகுளங்களெங்குமுகிளங்களெங்குநெரியச்
சினைமல்குபுன்னைதிகழ்வாசநாறுதிருமுல்லைவாயிலிதுவே. (௧0)

அணிகொண்டகோதையவணன்றுமேத்தவருள்செய்ததெந்தைமருவார்
திணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லிதிருமுல்லைவாயிறன்மேற்
றணிகொண்டசிந்தையவர்காழிஞானசம்பந்தனொண்டமிழ்களி
னணிகொண்டபத்துமிசைபாடுபத்தரகல்வானமாளவமிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முல்லைவனநாதர் - தேவியார் - கோதையம்மை.

திருக்கொச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறையும்பூம்புனலோடுமாடரவச்சடைதன்மேற்
பிறையுஞ்சூடுவர்மார்பிற்பெண்ணொருபாகமமர்ந்தார்
மறையினொல்லொலியோவாமந்திரவேள்வியறாத
குறைவிலந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (௧)

சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக்
கண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குனின்றாடுவர்கேடி
லெண்ணத்தர்கேள்விநல்வேள்வியறாதவர்மாலெரியோம்பும்
வண்ணத்தவந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (௨)

பாலையன்னவெண்ணீறுபூசுவர்பலசடைதாழ
மாலையாடுவர்கீதமாமறைபாடுதன்மகிழ்வர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகரைமிசைவிளங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரே. (௩)

கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்புனைவர்நன்மங்கையோர்பங்கர்
கடிகொணீடொலிசங்கினொலியொடுகலையொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (௪)

ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடல்வெண்டலையேந்திவையகமிடுபலிக்குழல்வ

ராடன்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயமமர்ந்தாரே. (௫)

மண்டுகங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேற்
றுண்டவெண்பிறையணிவர்தொல்வரைவில்லதுவாக
விண்டதானவரரணம்வெவ்வழலெரிகொளவிடைமேற்
கொண்டகோலமதுடையார்கொச்சைவயமமர்ந்தாரே. (௬-௭)

அன்றவாணிழலமர்ந்துவறவுரைநால்வர்க்கருளிப்
பொன்றினார்தலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையொல்கவூன்றியவிரலினர்வான்றோய்
குன்றமன்னபொன்மாடகொச்சைவயமமர்ந்தாரே. (௮)

சீர்கொண்மாமலரானுஞ்செங்கண்மாலென்றிவரோதத
வேர்கொள்வெவ்வழலாகியெங்குமிறநிமிர்ந்தாரும்
பார்கொள்விண்ணழலகானீரப்பண்பினாபான்மொழியோடுங்
கூர்கொள்வேலவலனேந்திக்கொச்சைவயமமாந்தாரே. (௯)

குண்டாவண்டுவராடை போர்த்ததோர்கொள்கையினார்கண்
மிண்டர்பேசியபேச்சுமெய்யலமையணிகண்டன்
பண்டைநம்வினைதீரகரும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடகொசசைவயமமாநதாரே. (௧௦)

கொநதணிபொழிலசூழநதகொச்சைவயநகர்மேய
வந்தணனடியேதநுமருமறைஞானசம்பநதன்
சநதமார்ந்தழகாயதண்டமிழமாலைவலலோர்போய
மநதிவானவரோடும்புகவலர்முனைகெடவினையே. (௧௧)

திருச்சிறறம்பலம்.

திருநெல்வாயில் திருஅரத்துறை·பண்-பியந்தைக்காநதாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கலலால்சென்றுகைகூடுவதன்றாற்,
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧)

ாரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செலவமுமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுன்னிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௨)

* பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றான்
மணிகலந்துபொன்னுந்திவருபுனனிவாமலகுகரைமே
லணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௩)

துன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னினைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றாற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமலகுகரைமே
லன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௪)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகினைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றான்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௫)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவினைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றாற்
குரவநீடுயர்சோலைக்குளிர்புனனிவாமலகுகரைமே
லரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௬)

நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமலகுகரைமே
லாலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௭)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான்போற்றியெனப்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௮)

றுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கினைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றான்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமலகுகரைமே
லணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௯)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்றாற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லார்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧௦)

* பிணி-கட்டுதல்.

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையுமாபூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோயப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்கட்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அரத்துறைநாதர்-தேவியார்-ஆனந்தநாயகியம்மை.

நிவாவென்பது ஒருநதி—புனல்-நிவாவெனப்பதம்பிரிக்க.

இது-முத்துச்சிவிகை,முத்துச்சின்னமுதலியவைபெற்றபோதருளிச்செய்தது.

திருமறைக்காடு - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்களபிரானார்புகழலதிகள்பழியிலரே. (௧)

கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
யானிலங்கிளரைந்துமாடுவர்பூண்பதுமரவங்
கானலங்கழியோதங்கரைபொடுகதிர்மணித்தும்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (௨)

நுண்ணிதாயவெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பிற்
பண்ணியாழெனமுரலும்பணிமொழியுமையொருபாகன்
றண்ணிதாயவெள்ளருவிசலசலநுரைமணித்தும்பக்
கண்ணிதானுமோர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. (௩)

ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தா
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியி
னீழலேசரணாகநினைபவர்வினைநலிவிலரே. (௪)

அரவம்வீக்கியவரையுமதிர்கழற்றழுவியவடியும்
பரவநாஞ்செய்தபாவம்பறைதரவருளுவர்பதிதான
மரவநீடுயர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. (௫)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதே
ரல்லல்வாழ்க்கையரேனுமழகியதறிவரெம்மடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமா
மல்குவெண்டிரையோதமாமறைக்காடதுதானே (௬)

நாகந்தான்கயிறாகநளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரோடசுரர்படைக்கடலளறெழக்கடைய
வேகநஞ்செழவாங்கேவெருவொடுமிரிந்தெங்குமோட
வாகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. (௭)

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றுமலையையெடுத்தலுமலைமகணடுங்க
நக்குத்தன்றிருவிரலாலூன்றலுநடுநடுத்தரக்கன்
பக்கவாயும்விட்டலறப்பரிந்தவன்பதிமறைக்காடே. (௮)

விண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. (௯)

பெரியவாகியகுடையும்பீலியுமவைவெயிற்கரவாக
கரியமண்டைகையேந்திக்கல்லெனவுழிதருங்கழுக்க
ளரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்துநம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. (௧௦)

மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தானைக்
கையினாற்றொழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்போய்ப்
பொய்யிலவானவரோடும்புகவலார்கொள்வலார்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேதாரணியேசுவரர்-தேவியார்-யாழைப்பழித்தமொழியம்மை.

திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டம்பானிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனார்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையோடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (௧)

முயல்வளாவியதிங்கள்வாண்முகத்தரிவையிற்றெரிவை
யியல்வளாவியதுடையவின்னமிர்தெந்தையெம்பெருமான்
கயல்வளாவியகழனிக்கருநிறக்குவளைகண்மலரும்
வயல்வளாவியபுகலூர்வர்த்தமானீச்சரத்தாரே (௨)

தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையுங்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலங்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (௩)

பண்ணவண்ணத்தராகிப்பாடலோடாடலறாத
விண்ணவண்ணத்தராயவிரிபுகலூரரோர்பாகம்
பெண்ணவண்ணத்தராகும்பெற்றியோடாணினைப்பிணைந்த
வண்ணவண்ணத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (௪)

ஈசனேறமர்கடவுளின்னமிர்தெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரின்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்
வாசமாமலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே (௫)

தளிரிளங்கொடிவளரத்தண்கயமிரியவண்டேறிக்
கிளரிளம்முழைநுழையக்கிழிதருபூம்புகலூரி
லுளரிளஞ்சுனைமலருமொளிதருசடைமுடியதன்மேல
வளரிளம்பிறையுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (௬)

தென்சொல்விஞ்சமர்வடசொற்றிசைமொழியெழினரம்பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருணீங்கத்தொழுதெழுதொல்புகலூரி
லஞ்சனம்பிதிர்ந்தனையவலைகடலகடையவன்றெழுந்த
வஞ்சநஞ்சணிகண்டர்வாத்தமானீச்சரத்தாரே. (௭)

சாமவேதமோர்கீதமோதியத்தசமுகன்பரவு
நாமதேயமதுடையாநன்குணர்ந்தடிகளென்றேத்தக்
காமதேவனைவேவக்கனலெரிகொளுவியகண்ணார்
வாமதேவர்தண்புகலூர்வாந்தமானீச்சரத்தாரே. (௮)

சீரணங்குறநின்றசெருவுறுதிசைமுகனோடு
நாரணன்கருததழியநகைசெய்தசடைமுடிநம்ப
ராரணங்குறுமுமையையஞ்சுவித்தருளுதல்பொருட்டால்
வாரணத்துரிபோர்த்தாரவாத்தமானீச்சரத்தாரே (௯)

கையிலுண்டுழலவாருங்கமழ்துவராடையினாற்றம்
மெய்யைப்போர்த்துழலவாருமுரைப்பனமெய்யெனவிரும்பேற்
செய்யில்வாளைகளோடுசெங்கயலகுதிகொளும்புகலூர்
மைகொளகண்டத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரததாரே. (௰)

பொங்குதண்புனல்சூழ்ந்தபோதணிபொழிற்புகலூரின்
மங்குன்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தானைத
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்து
மெங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாத்தமானீசுவரர் - தேவியார - கருந்தார்க்குழலியம்மை.

திருத்தெங்கூர்ப் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெயமாலகடனஞ்சையுண்டவர்கருதலர்புரங்க
ளிரைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழிலசேர்
விரைசெயபூமபொழிற்றெஙகூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௧)

சித்தநதன்னடிநினைவாாசெடிபடுகொடுவினைதீர்க்குங்
கொத்தின்றாழ்சடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிநதேததும்பரம்பரன்பைம்புனலபதித்த
வித்தன்றாழ்பொழிறறெங்கூர்வெள்ளியஙகுன்றமர்நதாரே. (௨)

அடையும்வல்வினையகலவருளபவரனலுடைமழுவாட்
படையாபாயபுலிததோலர்பைம்புனறகொன்றையாபடாபுன்
சடையிலவெண்பிறைசூடித்தாரமணியணிதருதறுகண்
விடையர்வீங்கெழிறறெங்கூாவெளளியங்குன்றமர்நதாரே (௩)

பண்டுநான்செய்தவினைகள்பறையவோாநெறியருளபயப்பார்
கொண்டலவான்மதிசூடிக்குரைகடல்விடமணிகணடர்
வண்டுமாமலரூதிமதுவுணவிதழ்மறிவெயதி
விண்டவார்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௪)

சுழித்தவார்புனறகஙகைசூடியோர்காலனைக்காலாற்
றெழித்துவானவர்நடுஙகச்செற்றவர்சிறையணிபறவை
கழிததவெண்டலையேநதிக்காமனதுடல்பொடியாக
விழித்தவா திருநதெங்கூர்வெளளியங்குன்றமாநதாரே (௫)

தொல்லைவல்வினைதீர்ப்பார்சுடலைவெண்பொடியணிசுவண்ட
ொலவிசூடிநின்றுடுமிறையவரிமையவரோததச்
சிலலைமாலவிடையேறித்திரிபுரநதீப்பழச்செற்ற
விலவிறா திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்நதாரே. (௬)

நெறிகொள்சிநதையராகிநினைபவர்வினைகெடநின்றார்
முறிகொண்மேனிமுக்கண்ணர்முளைமதிநடுநடுத்திலங்கப்
பொறிகொள்வாளரவணிநதபுண்ணியர்வெண்பொடிப்பூசி
வெறிகொள்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமாநதாரே (௭)

எண்ணிலாவிறலரக்கனெழிறிகழ்மால்வரையெடுக்கக்
கண்ணெலாம்பொடிந்தலறக்கால்விரலூன்றியகருத்தர்
தண்ணுலாம்புனற்கண்ணிதயங்கியசடைமுடிச்சதுரா
விண்ணுலாம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமாநதாரே. (௮)

தேடித்தானயன்மாலுந்திருமுடியடியிணைகாணார்
பாடத்தான்பலபூதப்படையினர்சுடலையிற்பலகா

வாடத்தான்மிகவல்லராருச்சுனற்கருள்செயக்கருதும்
வேடத்தார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௯)

சடங்கொள்சீவரப்போர்வைச்சாக்கியர்சமணர்சொற்றவிர
விடங்கொள்வல்வினைதீர்க்குமேத்துமினிருமருப்பொருகைக்
கடங்கொண்மால்களிற்றுரியர்கடல்கடைந்திடக்கனன்றெழுந்த
விடங்கொள்கண்டத்தர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே (௧0)

வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்ப்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதறேறுதலபயனே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வெள்ளிமலையீஸ்வரர் - தேவியார் - பெரியாம்பிகையம்மை.

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சாகையாயிரமுடையார்சாமமுமோதுவதுடையா
ரீகையார்கடைநோக்கிரப்பதும்பலபலவுடையார்
தோகைமாமயிலனையதுடியிடைபாகமுமுடையார்
வாகைநுண்டுளிவீசும்வாழ்கொளிபுத்தூருளாரே (௧)

எண்ணிலீரமுமுடையாரொத்தனையோரிவரறங்கள்
கண்ணுமாயிரமுடையார்கையுமோராயிரமுடையார்
பெண்ணுமாயிரமுடையார்பெருமையோராயிரமுடையா
வண்ணமாயிரமுடையாவாழ்கொளிபுத்தூருளாரே. (௨)

நொடியோராயிரமுடையார்நுண்ணியராமவர்நோக்கும்
வடிவுமாயிரமுடையார்வண்ணமுமாயிரமுடையார்
முடியுமாயிரமுடையார்மொய்குழலாளையுமுடையார்
வடிவுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே (௩)

பஞ்சிநுண்டுகிலன்னபைங்கழற்சேவடியுடையார்
குஞ்சிமேகலையுடையார்கொந்தணிவேலவலனுடையா
ரஞ்சும்வென்றவர்க்கணியாரானையினீருரியுடையா
வஞ்சிநுண்ணிடையுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௪)

பரவுவாரையுமுடையார்பழித்திகழ்வாரையுமுடையார்
விரவுவாரையுமுடையார்வெண்டலைப்பலிகொள்வதுடையா
ரரவம்பூண்பதுமுடையாராயிரம்பேர்மிகவுடையார்
வரமுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௫)

தண்டுந்தாளமுங்குழலுந்தண்ணுமைக்கருவியும்புறவிற்
கொண்டபூதமுமுடையார்கோலமும்பலபலவுடையார்
கண்டுகோடலுமரியார்காட்சியுமரியதோர்கரந்தை
வண்டுவாழ்பதியுடையாராவாழ்கொளிபுத்தூருளாரே. (௬)

மானவாழ்க்கையதுடையார்மலைந்தவாமதிற்பரிசறுத்தார்
தானவாழ்க்கையதுடையார்தவத்தொடுநோம்புகழ்ந்தேத்த
ஞானவாழ்க்கையதுடையார்நள்ளிருண்மகளிர்நின்றேத்த
வானவாழ்க்கையதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௭)

ஏழுமூன்றுமோர்தலைகளுடையவனிடர்படவடர்த்து
வேழ்விசெற்றதும்விரும்பிவிருப்பவர்பலபலவுடையார்
கேழல்வெண்பிறையன்னகெழுமணிமிடறுநின்றிலங்க
வாழிசாந்தமுமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௮)

வென்றிமாமலரோனும்விரிகடற்றுயின்றவன்றானு
மென்றுமேத்துகையுடையாரிமையவர்துதிசெயவிரும்பி
முன்றின்மாமலர்வாசமுதுமதிதவழ்பொழிற்றில்லை
மன்றிலாடலதுடையாராவாழ்கொளிபுத்தூருளாரே. (௯)

மண்டைகொண்டுழறேரர்மாசுடைமேனிவன்சமணர்
குண்டர்பேசியபேச்சுக்கொள்ளன்மின்றிகழொளிநல்ல
துண்டவெண்பிறைசூடிச்சுண்ணவெண்பொடியணிந்தெங்கும்
வண்டுவாழ்பொழில்சூழ்ந்தவாழ்கொளிபுத்தூருளாரே. (௧௦)

நலங்கொள்பூம்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
வலங்கொள்வெண்மழுவாளன்வாழ்கொளிபுத்தூருளானை
யிலங்குவெண்பிறையானையேத்தியதமிழிவைவல்லார்
நலங்கொள்சிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணநாதர் - தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை

திருஅரைசிலி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறைகொன்றைபான்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியந்தோண்மே
லாடன்மாசுணமசைத்தவடிகளுக்கிடமரைசிலியே. (௧)

ஏற்றுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்கலக்கமெய்போர்த்த

ஊறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுடரா
மாறுசேர்தருசென்னியடிகளுக்கிடமரைசிலியே (௨)

கங்கைநீர்சடைமேலேகதமிகக்கதிரிளவனமென்
கொங்கையாளொருபாகமருவியகொல்லைவெள்ளேற்றன்
சங்கையாய்த்திரியாமேதன்னடியார்க்கருளசெயது
வங்கையாலனலேந்துமடிகளுக்கிடமரைசிலியே (௩)

மிக்ககாலனைவீட்டிமெய்கெடக்காமனைவிழித்துப்
புக்கவூரிற்பிச்சையுண்பதுபொன்றிகழ்கொன்றை
தக்கநூறிகழ்மார்பிறறவளவெண்ணீறணிநதாமை
யக்கினாரமும்பூண்டவடிகளுக்கிடமரைசிலியே (௪)

மானஞ்சும்மடநோக்கிமலைமகளபாகமுமருவித்
தானஞ்சாவரண்மூன்றுநதழலெழச்சரமதுதுரநது
வானஞ்சும்பெருவிடத்தையுண்டவன்மாமறையோதி
யானஞ்சாடியசென்னியடிகளுக்கிடமரைசிலியே. (௫)

பரியமாசுணங்கயிறாபபருப்பதமதற்குமத்தாகப்
பெரியவேலையைக்கலங்கபபேணியவானவர்கடையக
கரியநஞ்சதுதோன்றக்கலங்கியவவர்தமைககண்டு
வரியவாரமிதாக்குமடிகளுக்கிடமரைசிலியே (௬-௭)

வண்ணமால்வரைதன்னைமறித்திடலுறறவலலரக்கன்
கண்ணுந்தோளுநலவாயுநெரிதரக்காலவிரலூன்றிப்
பண்ணின்பாடலகைநரமபாறபாடியபாடலைககேட்டு
அண்ணலாரருள்செய்தவடிகளுக்கிடமரைசிலியே. (௮)

குறியமாணுருவாகிக்குவலயமளநதவன்றானும்
வெறிகொடாமரைமேலேவிரும்பியமெய்த்தவத்தோனுஞ்
செறிவொணாவகையெங்குநதேடியுநதிருவடிகாண
வறிவொணாவுருவத்தெம்மடிகளுககிடமரைசிலியே. (௯)

குருளையெய்தியமடவார்நிறபவேகுஞ்சியைபபறிததுந
திரளைகையிலுண்பவருநதேரருஞ்சொலலியதேறறப
பொருளைப்பொயயிலிமெயயெநாதனைப்பொன்னடிவணங்கு
மருளையார்தரநல்குமடிகளுக்கிடமரைசிலியே. (௧௦)

அல்லிநீள்வயல்சூழ்ந்தவரைசிலியடிகளைக்காழி
நலலஞானசம்பந்தனற்றமிழ்பத்திவைநாளுஞ்
சொலலவல்லவர்தம்மைச்சூழ்நதமரர்தொழுதேத்த
வல்லவானுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே. திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அரசிலிநாதர் - தேவியார் - பெரியம்மை.

ஸ்ரீசீகாழி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்புரிவளரும்பொற்புடைமார்பனெம்பெருமான்
செங்கணாடரவாட்டுஞ்செல்வனெஞ்சிவனுறைகோயில
பங்கமிலபலமறைகள்வல்லவர்பத்தர்கள்பரவுந்
தங்குவெண்டிரைக்கானற்றண்வயற்காழிநன்னகரே. (௧)

தேவர்தானவர்பரந்துதிண்வரைமால்கடனிறுவி
நாவதாயமிர்துண்ணநயந்தவரிரிந்திடக்கண்டு
ஆவவென்றருநஞ்சமுண்டவனமர்தருமூதூர்
காவலார்மதில்சூழ்ந்தகடிபொழிற்காழிநன்னகரே. (௨)

கரியின்மாமுகமுடையகணபதிதாதைபல்பூதந்
திரியவில்பலிக்கேகுஞ்செழுஞ்சுடர்சேர்தருமூதூர்
சரியின்முன்கைநன்மாதர்சதிபடமாநடமாடி
யுரியநாமங்களேத்துமொலிபுனற்காழிநன்னகரே. (௩)

சங்கவெண்குழைச்செவியன்றண்மதிசூடியசென்னி
யங்கம்பூணெனவுடையவப்பனுக்கழகியவூராந்
துங்கமாளிகையுயர்ந்ததொருகொடிவானிடைமிடைந்து
அங்கவாண்மதிதடவுமணிபொழிற்காழிநன்னகரே. (௪)

மங்கைகூறமர்மெய்யான்மான்மழுவேந்தியகையா
னெங்களீசனென்றெழுவாரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந்தாஞ்செய்துதகுதியின்மிக்க
கங்கைநாடுவர்கீர்த்திமறையவர்காழிநன்னகரே. (௫)

நாறுகூவிளமத்தநாகமுஞ்சூடியநம்ப
னேறுமேறியவீசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்சமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. (௬)

நடமதாடியநாதனந்திதன்முழவிடைககாட்டில
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூரா
மிடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. (௭)

கார்கொண்மேனியவ்வரக்கன்றன்கடுந்திறல்வினைக்கருதி
யேர்கொண்மங்கையுமஞ்சவெழின்மலையெடுத்தவனெரியச்
சீர்கொள்பாதத்தோர்விரலாற்செறுத்தவெஞ்சிவனுறைகோயி
ரூர்கொள்வண்டினஞ்சூழ்ந்ததண்வயற்காழிநன்னகரே. (௮)

மாலுமாமலரானுமருவிலின்றியலியமனத்தாற்
பாலுங்காண்பரிதாயபரஞ்சுடர்தன்பதியாகுஞ்

சேலும்வாளையுங்கயலுஞ்செறிந்துதன்கிளையொடுமேய
வாலுஞ்சாலிநற்கதிர்களணிவயற்காழிநன்னகரே. (௯)

புத்தர்பொய்மிகுசமணர்பொலிகழலடியிணைகாணுஞ்
சித்தமற்றவர்க்கிலாமைத்திகழ்ந்தநற்செழுஞ்சுடர்க்கூராஞ்
சித்தரோடுநல்லமரர்செறிந்தநன்மாமலர்கொண்டு
முத்தனேயருளென்றுமுறைமைசெய்காழிநன்னகரே. (௧௦)

ஊழியானவைபலவுமொழித்திடுங்காலத்திலோங்கு. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசீகாழி-திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பொருண்மக்களென்றுநச்சியிச்சைசெய்துநீ
ரம்பரமடைந்துசாலவல்லலுய்ப்பதன்முன
மும்பர்நாதனுத்தமனொளிம்மிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. (௧)

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலு
மேவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே (௨)

சோறுகூறையின்றியேதுவண்டுதூரமாய்நுமக்
கேறுசுற்றமெள்கவேயிடுக்கணுய்ப்பதன்முன
மாறுமோர்சடையினானாதியானைசெற்றவ
னாறுதேன்மலர்ப்பொழினலங்கொள்காழிசேர்மினே (௩)

நச்சிநீர்பிறன்கடைநடந்துசெல்லநாளையு
முச்சிமேனுமூளையுமுணர்ந்துகேட்பதன்முனம்
பிச்சர்நச்சரவரைப்பெரியசோதிபேணுவா
ரிச்சைசெய்யுமெம்பிரானெழில்கொள்காழிசேர்மினே. (௪)

கண்கள்காண்பொழிந்துமேனிகன்றியொன்றலாதநோ
யுண்கிலாதசெய்துநும்மையுய்த்தழிப்பதன்முனம்
விண்குலாவுதேவருய்யவேலைநஞ்சமுதுசெய்
கண்கண்மூன்றுடையவெங்கருத்தர்காழிசேர்மினே. (௫)

அல்லல்வாழ்க்கையுய்ப்பதற்கவத்தமேபிறந்துநீ
ரெல்லையில்பிணக்கினிற்கிடந்திடாதெழும்மினோ
பல்லில்வெண்டலையினிற்பலிக்கியங்குபான்மையான்
கொல்லையேறதேறுவான்கோலக்காழிசேர்மினே. (௬-௭)

பொய்மிகுத்தவாயராய்ப்பொறாமையோடுசொல்லுநீ
ரைமிகுத்தகண்டராயடுத்துரைப்பத

மைமிகுத்தமேனிவாளரக்கனைநெரித்தவன்
பைமிகுத்தபாம்பணைப்பரமர்காழிசேர்மினே. (௮)

காவினோடுகைகளுநதளர்ந்துகாமநோய்தனா
லேலவார்குழலினாரிகழ்ந்துரைப்பதன்முன
மாலினோடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனார்நிகழ்ந்தகாழிசேர்மினே. (௯)

நிலைவெறுத்தநெஞ்சமோடுநேசமில்புதல்வர்கண்
முலைவெறுத்தபேர்தொடங்கியேமுனிவதன்முனந்
தலைபறித்தகையர்தேரர்தாந்தரிப்பரியவன்
சிலைபிடித்துவெயிலெய்தான்றிருநதுகாழிசேர்மினே. (௧௦)

தக்கனார்தலையரிந்தசங்கரன்றனதரை
யக்கினோடரவசைத்தவந்திவண்ணர்காழியை
யொக்கஞானசம்பந்தனுரைத்தபாடலவல்லவா
மிக்கவின்பமெய்திவீற்றிருநதுவாழ்தன்மெய்மையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி - திருவிராகம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பசும்பொனோடருங்கலன்களுந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினா
யுரைத்தலைப்பொலிநதுனக்குணர்த்துமாறுவல்லமே (௧)

அடுத்தடுத்தகத்தியோடுவன்னிகொன்றைகூவிளந்
தொடுத்துடன்சடைப்பெய்தாயதுருத்தியாயோர்காலனைக்
கடுத்தடிப்புறத்தினாணிறததுதைத்தகாரண
மெடுத்தெடுத்துரைக்குமாறுவலலமாகினல்லமே. (௨)

கங்குல்கொண்டதிங்களோடுகங்கைதங்குசெஞ்சடைச்
சங்கிலங்குவெண்குழைசரிநதிலங்குகாதினாய்
பொங்கிலங்குபூணநூலுருத்திராதுருத்திபுக்
கெங்குநின்னிடங்களாவடங்கிவாழ்வதென்கொலோ. (௩)

கருத்தினாலோர்காணியில்விருத்தியில்லைதொண்டர்த
மருத்தியாற்றம்வல்லசொல்லியையமேற்பதன்றியும்
மொருத்திபால்பொருத்திவைத்துடம்புவிட்டியோகியா
யிருத்திநீதுருத்திபுக்கிதென்னமாயமென்பதே. (௪)

துறக்குமாசொலப்படாய்துருத்தியாய்திருந்தடி
மறக்குமாறிலாதவென்னைமையல்செய்திம்மண்ணின்மேற்

பிறக்குமாறுகாட்டினாய்பிணிப்படுமுடம்புவிட்
டிறக்குமாறுகாட்டினாய்க்கிழுக்குகின்றதென்னையே. (௯)

வெயிற்கெதிர்ந்திடங்கொடாதகங்குளிர்ந்தபைம்பொழிற்
றுயிற்கெதிர்ந்தபுள்ளினங்கண்மல்குதண்டுருத்தியாய்
மயிற்கெதிர்ந்தணங்குசாயன்மாதொர்பாகமாகமூ
வெயிற்கெதிர்ந்தோரம்பினாலெரித்தவில்லியல்லையே. (௬)

கணிச்சியம்படைச்செல்வர்கழிந்தவர்க்கொழிந்தசீர்
துணிச்சிரக்கிரந்தையாய்கரந்தையாய்துருத்தியா
யணிப்படுந்தனிப்பிறைப்பணிக்கதிர்க்கவாவுநன்
மணிப்படும்பைநாகநீமகிழ்ந்தவண்ணலல்லையே. (எ)

சுடப்பொடிந்துடம்பிழந்தனங்கனாயமன்மத
னிடர்ப்படக்கடந்திடந்துருத்தியாகவெண்ணினாய்
கடற்படையுடையவக்கடலிலங்கைமன்னனை
யடற்படவடுக்கலில்லடர்த்தவண்ணலல்லையே. (அ)

களங்குளிர்ந்திலங்குபோதுகாதலானுமாலுமாய
வளங்கிளம்பொனங்கழல்வணங்கிவந்துகாண்கிலா
துளங்கிளம்பிறைச்சென்னித்துருத்தியாய்திருந்தடி
யுளங்குளிர்ந்தபோதெலாமுகந்துகந்துரைப்பனே. (௯)

புத்தர்தத்துவமிலாச்சமணுரைத்தபொய்தன்னை
யுத்தமமெனக்கொளாதுகந்தெழுந்துவண்டினந்
துத்தநின்றுபண்செயுஞ்சூழ்பொழிற்றுருத்தியெம்
பித்தன்பித்தனைத்தொழப்பிறப்பறுதல்பெற்றியே. (௧0)

கற்றுமுற்றினார்தொழுங்கழுமலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினானவன்பகர்ந்தசொற்களாற்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதேசுவரர்-தேவியார்-முகிழாம்பிகையம்மை.

திருக்கோடிகாத்-திருவிராகம்- பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (௧)

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினைநாடுதுநடம்மினோ
வில்லையன்னவாணுதல்வெள்ளவளையோர்பாகமாய
கொல்லைவெள்ளையேறினான்கோடிகாவுசேர்மினே. (உ)

துக்கமிக்கவாழ்க்கையின்சோர்வினைத்துறந்துநீர்
தக்கதோர்நெறியினைச்சார்தல்செய்யப்போதுமி
னக்கணிந்தரைமிசையாறணிந்தசென்னிமேற
கொக்கிறகணிந்தவன்கோடிகாவுசேர்மினே (௩)

பண்டுசெய்தவல்வினைபற்றறக்கெடும்வகை
யுண்டுமக்குரைப்பனானொல்லைநீரெழுமினோ
மண்டுகங்கைசெஞ்சடைவைத்துமாதோர்பாகமாக
கொண்டுகந்தமாயினான்கோடிகாவுசேர்மினே. (௪)

முன்னைநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிநீரெழுமினோ
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலுமவேலினான்கோடிகாவுசேர்மினே (ரு)

ஏவமிக்கசிந்தையோடின்பமெய்தலாமெனப
பாவமெத்தனையுநீர்செய்தொருபயனில்லைக
காவன்மிக்கமாநகர்காய்ந்துவெங்கனல்படக்
கோவமிக்கநெற்றியான்கோடிகாவுசேர்மினே. (௬)

ஏணழிந்தவாழ்க்கையையின்பமென்றிருந்துநீர்
மாணழிந்தமூப்பினால்வருந்தன்முன்னம்வம்மினோ
பூணல்வெள்ளெலும்பினான்பொன்றிகழ்சடைமுடிக்
கோணல்வெண்பிறையினான்கோடிகாவுசேர்மினே. (எ)

மற்றிவாழ்க்கைமெய்யெனும்மனத்தினைத்தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின்சேவடிபணிந்துவந்தெழுமினோ
வெற்றிகொள்தசமுகன்விறல்கெடவிருந்ததோர்
குற்றமில்வரையினான்கோடிகாவுசேர்மினே. (அ)

மங்குநோயுறும்பிணிமாயும்வண்ணஞ்சொல்லுவன்
செங்கண்மாறிசைமுகன்சென்றளந்துங்காண்கிலா
வெங்கண்மால்விடையுடைவேதியன்விரும்புமூர்
கொங்குலாம்வளம்பொழிற்கோடிகாவுசேர்மினே (௯)

தட்டொடுதழைமயிற்பீலிகொள்சமணரும்
பட்டுடைவிரிதுகிலினார்கள்சொற்பயனில்லை
விட்டபுன்சடையினான்மேதகுமுழவொடு
கொட்டமைந்தவாடலான்கோடிகாவுசேர்மினே. (௧௦)

கொந்தணிகுளிரபொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோடீசுவரர் - தேவியார் - வடிவாம்பிகையம்மை.

திருக்கோவலூர்வீரட்டம் - திருவிராகம்-பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசமவிட்டபோதின்க
ணிடைகொள்வாரெமக்கிலையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள
விடையதேறுங்கொடியினான்வீரட்டானஞ்சேர்துமே. (௧)

கரவலாளர்தம்மனைக்கடைகடோறுங்கானிமிர்த்
திரவலாழிநெஞ்சமேயினியதெய்தவேண்டினீ
குரவமேறிவண்டினங்குழலோடியாழ்செய்கோவலூர
விரவினாறுகொன்றையான்வீரட்டானஞ்சேர்துமே. (௨)

உள்ளத்தீரேபோதுமின்னுறுதியானதறிதிரே
லள்ளற்சேற்றிற்காலிட்டங்கவலத்துள்ளழுந்தாதே
கொள்ளப்பாடுகீதத்தான்குழகன்கோவலூர்தனில்
வெள்ளந்தாங்குசடையினான்வீரட்டானஞ்சேர்துமே (௩)

கனைகொளிருமல்சூலைநோய்கம்பதாளிகுன்மமு
மினையபலவுமூப்பினோடெய்திவந்துநலியாமுனம்
பனைகளுலவுமைம்பொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தானவீரட்டானஞ்சேர்துமே. (௪)

உளங்கொள்போகமுய்த்திடாருடம்பிழந்தபோதின்கட்
டுளங்கிநின்றுநாடொறுந்துயரலாழிநெஞ்சமே
வளங்கொள்பெண்ணைவந்துலாவயற்களசூழ்ந்தகோவலூர
விளங்குகோவணத்தினான்வீரட்டானஞ்சேர்துமே. (௫)

கேடுமூப்புசாக்காடுகெழுமிவந்துநாடொறு
மாடுபோனனாகளாயாகைபோக்கதன்றியும்
கூடிநின்றுபைம்பொழிற்குழகன்கோவலூர்தனுள்
வீடுகாட்டுநெறியினான்வீரட்டானஞ்சேர்துமே. (௬)

உரையும்பாட்டுந்தளர்வெய்தியுடம்புமூத்தபோதின்க
ணரையுநரையுங்கண்டெள்கிநகுவர்நமர்களாதலால்
வரைகொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சேர்வெண்ணீற்றினான்வீரட்டானஞ்சேர்துமே. (௭)

ஏதமிக்கமூப்பினோடிருமலிளையென்றிவை
யூதலாகவையோம்புவீருறுதியாவதறிதிரேற்
போதில்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வேதமோதுநெறியினான்வீரட்டானஞ்சேர்துமே. (௮)

ஆறுபட்டபுன்சடையழகனாயிழைக்கொரு
கூறுபட்டமேனியான்குழகன்கோவலூர்தனி
னீறுபட்டகோலத்தானீலகண்டனிருவர்க்கும்
வேறுபட்டசிந்தையான்வீரட்டானஞ்சேர்துமே. (௯)

குறிகொளாழிநெஞ்சமேகூறைதுவரிட்டார்களும்
மறிவிலாதவமணர்சொல்லவத்தமாவதறிதிரேற்
பொறிகொள்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனில்
வெறிகொள்கங்கைதாங்கினான்வீரட்டானஞ்சேர்துமே. (௧௦)

கழியோடுலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலா
லழிவிலீர்கொண்டேத்துமின்னந்தண்கோவலூர்தனில்
விழிகொள்பூதப்படையினான்வீரட்டானஞ்சேர்துமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர் - தேவியார் - சிவானந்தவல்லியம்மை.

திருவாரூர் - திருவிராகம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிர்புகந்
நெருக்கிவாயநித்திலநிரக்குநீளபொருப்பனூர்
கருக்கொள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
யருக்கன்மண்டலத்தணவுமந்தணாரூரென்பதே. (௧)

விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமு
மிண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோ
யண்டரண்டமூடறுக்குமந்தணாரூரென்பதே. (௨)

கறுத்தநஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்தமாணிதன்றனக்குவண்மைசெய்தமைந்தனூர்
வெறித்துமேதியோடிமூசுவள்ளைவெள்ளைநீள்கொடி
யறுத்துமண்டியாவிபாயுமந்தணாரூரென்பதே. (௩)

அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசுமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னிமன்னுமூர்

பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
யஞ்சொலாரரங்கெடுக்குமந்தணாரூரொன்பதே (௪)

சங்குலாவுதிங்கள்சூடிதன்னையுன்னுவார்மனத்
தங்குலாவிநின்றவெங்களாதிதேவன்மன்னுமூர்
தெங்குலாவுசோலைநீடுதேனுலாவுசெண்பக
மங்குலாவியண்டநாறுமந்தணாரூரொன்பதே. (௫)

கள்ளநெஞ்சவஞ்சகக்கருத்தைவிட்டருத்தியோ
டுள்ளமொன்றியுள்குவாருளத்துளானுகந்தவூர்
துள்ளிவாளைபாயவயற்சுரும்புலாவுநெய்தல்வா
யள்ளனாரையாரல்வாருமந்தணாரூரொன்பதே (௬)

கங்கைபொங்குசெஞ்சடைக்கரந்தகண்டர்காமனை
மங்கவெங்கணாலெரித்தமங்கைபங்கன்மன்னுமூர்
தெங்கினூடுபோகிவாழைகொத்திறுத்துமாவின்மே
லங்கண்மந்திமுந்தியேறுமந்தணாரூரொன்பதே (௭)

வரைத்தலமெடுத்தவன்முடித்தலமுரத்தொடு
நெரித்தவன்புரத்தைமுன்னெரித்தவனிருந்தவூர்
நிரைத்தமாளிகைத்திருவின்நேரனார்கள்வெண்ணகை
யரத்தவாய்மடந்தைமார்களாடுமாரூரொன்பதே (௮)

இருந்தவன்கிடந்தவனிடந்துவிண்பறந்துமெய்
வருந்தியுமளப்பொணாதவானவன்மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல்புன்னைவன்னிசெண்பகஞ்செழுங்குரா
வரும்புசோலைவாசநாறுமந்தணாரூரொன்பதே. (௯)

பறித்தவெண்டலைக்கடுப்படுத்தமேனியாரதவம்
வெறுத்தவேடன்வேலைநஞ்சமுண்டகண்டன்மேவுமூர்
மறித்துமண்டுவண்டலவாரிமிண்டுநீர்வயற்செநெ
லறுத்துவாய்சுமப்புபாயுமந்தணாரூரொன்பதே (௧௦)

வல்லிசோலைசூழ்ந்தநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணாரூராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தனாவினானுரை
வல்லதொண்டர்வானமாளவல்லாவாயமையாகவே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிரபுரம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமென்னடையரிவையோடினிதுறையமரர்தம்பெருமானார்
மின்னுசெஞ்சடைவெள்ளெருக்கம்மலர்வைத்தவர்வேதந்தாம்
பன்னுநன்பொருள்பயந்தவர்பருமதிற்சிரபுரத்தார்சீரார்
பொன்னின்மாமலரடிதொழுமடியவர்வினையொடும்பொருந்தாரே. (௧)

கோலமாகரியுரித்தவரரவொடுமேனக்கொம்பிளவாமை
சாலப்பூண்டுதண்மதியதுசூடியசங்கரனுர்தம்மைப்
போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினையில்லாவே. (௨)

மானத்திண்புயவரிசிலைப்பார்த்தனைத்தவங்கெடமதித்தன்று
கானத்தேதிரிவேடனாயமர்செயக்கண்டருள்புரிந்தார்பூந
தேனைத்தேர்ந்துசேர்வண்டுகடிரிதருஞ்சிரபுரத்துறைமெங்கள்
கோனைக்கும்பிடுமடியரைக்கொடுவினைகுற்றநங்கள்குறுகாவே. (௩)

மாணிதன்னுயிர்மதித்துணவந்தவக்காலனையுதைசெய்தார்
பேணியுள்குமெய்யடியவர்பெருந்துயர்ப்பிணக்கருத்தருள்செய்வார்
வேணிவெண்பிறையுடையவர்வியன்புகழ்ச்சிரபுரத்தமர்கின்ற
வாணிப்பொன்னினையடிதொழுமடியவர்கருவினையடையாவே. (௪)

பாருநீரொடுபல்கதிரிரவியும்பனிமதியாகாசம்
ஓரும்வாயுவுமொண்கனலவேளவியிறறலைவனுமாய்நின்றார்
சேருஞ்சந்தனமகிலொடுவந்திழிசெழும்புனற்கோட்டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே. (௫)

ஊழியந்தத்திலொலிகடலோட்டந்திவ்வுலகங்களவைமூட
வாழியெந்தையென்றமரர்கள்சரண்புகவந்தரத்துயர்ந்தார்தாம்
யாழினேர்மொழியேழையோடினிதுறையின்பனெம்பெருமானுர்
வாழிமாநகர்ச்சிரபுரந்தொழுதெழவல்வினையடையாவே. (௬)

பேய்கள்பாடப்பல்பூதங்கடுதிசெயப்பிணாபிடுசுடுகாட்டில்
வேயகொடோளிதான்வெள்கிடமாநடமாடும்வித்தகனுரொண்
சாய்கடான்மிகவுடையதண்மறையவர்தருசிரபுரத்தார்தாந
தாய்களாயினார்பல்லுயிர்க்குந்தமைத்தொழுமவர்தளராரே. (௭)

இலங்குபூண்வரைமார்புடையிராவணனெழில்கொள்வெற்பெடுத்தன்று
கலங்கச்செய்தலுங்கண்டுதங்கழலடிநெரியவைத்தருள்செய்தார்
புலங்கொள்செங்கழுநீர்மலர்த்தென்றன்மன்றதனிடைப்புகுந்தாருங்
குலங்கொண்மாமறையவர்சிரபுரந்தொழுதெழவினைகுறுகாவே. (௮)

வண்டுசென்றணைமலர்மிசைநான்முகன்மாயனென்றிவரன்று
கண்டுகொள்ளவோரேனமோடன்னமாய்க்கிளறியும்பறந்துந்தாம
பண்டுகண்டதுகாணவேநீண்டவெம்பசுபதிபரமேட்டி
கொண்டசெல்வத்துச்சிரபுரந்தொழுதெழவினையவைகூடாவே. (௯)

பறித்தபுன்றலைக்குண்டிகைச்சமணரும்பார்மிசைத்துவர்தோய்ந்த
செறித்தசீவரத்தேரருந்தேர்கிலாத்தேவர்கள்பெருமானுர்
முறித்துமேதிகள்கரும்புதின்றூவியின்மூழ்கிடவிளவாளை
வெறித்துப்பாய்வயற்சிரபுரந்தொழவினைவிட்டிடுமிகத்தானே. (௧௦)

பரசுபாணியைபபத்தர்களத்தனைப்பையரவோடக்கு
நிரைசெய்பூண்டிருமார்புடைவிமலனைநித்திலப்பெருந்தொத்தை
விரைசெய்பூம்பொழிற்சிரபுரத்தண்ணலைவிண்ணவர்பெருமானைப்
பரவுசம்பந்தன்செந்தமிழ்வல்லவர்பரமனைப்பணிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்த்திருமாகாளம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றமபலம.

புலகுபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையுமபிணையலசெய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வடகரைவருபுனன்மாகாள
மலலுநண்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே. (௧)

அரவமாட்டுவரநதுகில்புலியதளங்கையிலனலேந்தி
யிரவுமாடுவரிவையிவர்சரிதைகளிசைவன பலபூத
மரவநதோய்பொழிலரிசிலினவடகரைவருபுனன்மாகாளம்
பரவியும்பணிநதேத்தவலலாரவர்பயன்றலைப்படுவாரே. (௨)

குணங்கள்கூறியுங்குற்றங்கள்பரவியுங்குரைகழலடிசேரக்
கணங்கள்பாடவுங்கண்டவர்பரவவுங்கருத்தறிநதவர்மேய
மணங்கள்பூம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம
வணங்குமுள்ளமோடணையவலலார்களைவலவினையடையாவே. (௩)

எங்குமேதுமோர்பிணியிலர்கேடிலரிழைவளர்நறுங்கொன்றை
தங்குதொங்கலுநதாமமுங்கண்ணியுநதாமகிழ்ந்தவர்மேய
மங்குரோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கங்குலுமபகலுநதொழுமடியவர்காதன்மையுடையாரே. (௪)

நெதியமென்னுளபோகமற்றென்னுளநிலமிசைநலமாய
கதியமென்னுளவானவரென்னுளர்கருதியபொருள்கூடின்
மதியன்தோயபொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
புதியபூவொடுசாந்தமும்புகையுநகொண்டேத்துதல்புரிநதோர்க்கே ( )

கண்ணுலாவியகதிரொளிமுடிமிசைக்கனல்விடுசுடர்நாகந்
தெண்ணிலாவொடுதிலதமுனகுதலைதிகழவைத்தவர்மேய
மண்ணுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனனமாகாள
முண்ணிலாநினைபபுடையவரியாவரிவவுலகினிலுயர்வாரே. (௬)

தூசுதானரைத்தோலுடைக்கண்ணியஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிபூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாசுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பேசுநீர்மையரியாவரிவ்வுலகினிற்பெறுமையைப்பெறுவாரே. (௭)

பௌவமாக(.)விலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழூன்றி
யெவ்வந்தீரவன்றிமையவர்க்கருள்செய்தவிறையவனுறைகோயின்
மவ்வந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கவ்வையாற்றொழுமடியவர்மேலவினைகணலிடைச்செதிளன்றே (அ)

உய்யுங்காரணமுண்டென்றுகருதுமினொளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொளண்ணலுமபரவநின்றவர்மேய
மையுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கையினாற்றொழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. (கூ)

பிண்டிபாலருமண்டைகோட்டேரும்பீலிகொண்டுழல்வாரும்
கண்டநூலறுங்கடுந்தொழிலாளருங்கழறநின்றவர்மேய
வண்டுலாமபொழிலரிசிலினவடகரைவருபுனன்மாகாளம்
பண்டுநாஞ்செயதபாவங்கள்பறறறபபரவுதலசெயவோமே. (க0)

மாறுதன்னொடுமண்மிசையிலலதுவருபுனனமாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையே..ரபெருமானை
நாறுபூம்பொழிற்காழியுண...மபந்தன்தமிழ்மாலை
கூறுவாறையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்களகுறுகாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-சாளகணடேசுவரர் - தேவியார - பக்ஷநாயகியமமை.

திருக்கடிக்குளம்-பண்ணட்டராகம்.

திருசசிற்றமபலம.

பொடிகொண்மேனிவெ..னூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகோளேற்றினாமணிகிணினெனவருகுரைகழலசிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழிற்சூழ்தருகடிக்குளததுறையுங்கறபகத்தைததம்
முடிகள்சாயததடிவீழ்தருமடியரைமுனவினைமூடாவே. (க)

விண்களார்தொழும்விளக்கினைததுளககிலாவிகிர்தனைவிழவாரு
மண்களார்துதித்தன்பராயினபுறும்வள்ளலைமருவித்தங
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளததுறைதருகறபகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்பழியிலாபுகழாமே. (உ)

பொங்குநற்கரியுரியதுபோர்ப்பதுபுலியதளுடைநாகந்
தங்கமங்கையைப்பாகமதுடையவர்தழலபுரைதிருமேனிக
கங்கைசேர்தருசடையினர்கடிக்குளத்துறைதருகற்பகத்தை
யெங்குமேத்திநின்றின்புறுமடியரையிடும்பைவந்தடையாவே. (ங)

நீர்கோணீள்சடைமுடியனைநித்திலத்தொத்தினைநிகரில்லாப்
பார்கொள்பாரிடத்தவர்தொழும்பவளத்தைப்பசும்பொனைவிசும்பாருங்
கார்கொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகந்தனைச்
சீர்கொள்செல்வங்களேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (ச)

சுரும்பிசோசடைமுடியினன்மதியொடுதுன்னியதழனுக
மரும்புதாதவிழ்ந்தலர்ந்தனமலர்பலகொண்டடியவர்போற்றக்
கருமபுகார்மலிகொடிமிடைகடிக்குளததுறைதருகற்பகததை
விரும்புவேட்கையோடுளமகிழ்ந்துணைபபவாவிதியுடையவர்தாமே. ()

மாதிலங்கியபாகத்தன்மதியமொடலைபுனலழனுகம்
போதிலங்கியகொன்றையுமததமும்புரிசடைக்கழகாகக்
காதிலங்கியகுழையினன்கடிக்குளத்துறைதருகற்பகத்தின்
பாதங்கைதொழுதேத்தவலலாவினைபற்றறக்கெடுமன்றே. (௬)

குலவுகோலத்தகொடிநெடுமாடங்கள்குழாமபலகுளிர்பொய்கை
யுலவுபுள்ளினமன்னங்களாலிடும்பூவைசேருங்கூந்தற்
கலவைசேர்தருகண்ணியன்கடிக்குளததுறையுங்கற்பகத்தைச்சீ
நிலவினின்றுநினறேததுவார்மேலவினைநிறகிலலாதானே. (௭)

மடுத்தவாளரக்கனவன்மலைதன்மேன்மதியிலாமையிலோடி
யெடுததலுமுடிதோள்கரநெறிந்திறவிறையவன்விரலூன்றக்
கடுததுவாயொடுகையெடுததலறிடக்கடிகுளந்தனினமேவிக்
கொடுத்தபேரருட்கூத்தனையேததுவார்குணமுடையவாதாமே. (௮)

நீரினார்கடற்றுயின்றவனயனொடுநிகழடிமுடிகாணார்
பாரினார்விசும்புறபபரநதெழுநததோபவளததின்படியாகிக்
காரினாரபொழில்சூழ்தருகடிககுளததுறையுநகறபகததின்றன்
சீரினார்கழலேததவலலாகளைததீவினையடையாவே. (௯)

குண்டர்தம்மொடுசாக்கியாசமணருநகுறியினினெறியில்லா
மிண்டர்மிண்டுரைகேட்டவை மெயயனககொள்ளன்மின்விடமுண்ட
கண்டர்முண்டநன்மேனியர்கடிக்குளததுறைதருமெம்மீசர்
தொண்டர்தொணடணைதொழுதடிபணிமின்கடுநெறியெளிதாமே. ()

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவாமன்னனற்சமபநதன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதாயமகிழவோடுங்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளததமாவானை
யினமலிநதிசைபாடவலலார்கள்போயிறைவனோடுறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயா-கற்பகேசுவரர்-தேவியார்-சவுந்தரநாயகியம்மை.

திருக்கீழ்வேளூர் - பண்ணட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினாமிளிர்தருமரவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளு
ருன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே, (௧)

நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிரைமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிசிலம்பவையார்க்க
வேருலாவியவிறைவனதுறைவிடமெழிறிகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தணைபவர்பிணியொடுவினைபோமே. (௨)

வெண்ணிலாமிகுவிரிசடையரவொடுவெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவியபாடலோடாடலர்பயில்வுறுகீழ்வேளூர்ப்
பெண்ணிலாவியபாகனைப்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யுண்ணிலாவிநின்றுள்கியசிந்தையாருலகினிலுள்ளாரே. (௩)

சேடிலாவியகங்கையைச்சடையிடைத்தொங்கவைத்தழகாக
நாடிலாவியபலிகொளுநாதனூர்நலமிகுகீழ்வேளூர்ப்
பீடிலாவியபெருமையர்பெருந்திருக்கோயிலுட்பிரியாது
நீடிலாவியநிமலனைப்பணிபவர்நிலைமிகப்பெறுவாரே. (௪)

துன்றுவார்சடைச்சுடர்மதிநகுதலைவடமணிசிரமாலை
மன்றுலாவியமாதவரினிதியனமணிமிகுகீழ்வேளூர்
நின்றுநீடியபெருந்திருக்கோயிலினிமலனைநினைவோடுஞ்
சென்றுலாவிநின்றேத்தவல்லார்வினைதேயவதுதிணமாமே. (௫)

கொத்துலாவியகுழறிகழ்சடையனைக்கூத்தனைமகிழ்ந்துள்கித்
தொத்துலாவியநூலணிமார்பினர்தொழுதெழுகீழ்வேளூர்ப்
பித்துலாவியபத்தர்கள்பேணியபெருந்திருக்கோயின்மன்னு
முத்துலாவியவித்தினையேத்துமின்முடுகியவிடர்போமே. (௬)

பிறைநிலாவியசடையிடைப்பின்னலும்வன்னியுந்துன்னருங்
கறைநிலாவியகண்டரொண்டோளினர்காதல்செய்கீழ்வேளூர்
மறையுலாவியவந்தணர்மலிதருபெருந்திருக்கோயின்மன்னு
நிறையுலாவியவீசனைநேசத்தானினைபவர்வினைபோமே. (௭)

மலைநிலாவியமைந்தனம்மலையினையெடுத்தலுமரக்கன்றன்
றலையெலாநெரிதரவிடவூன்றினாறுறைதருகீழ்வேளூர்க்
கலைநிலாவியநாவினர்காதல்செய்பெருந்திருக்கோயிலுண்
ணிலைநிலாவியவீசனைநேசத்தானினையவல்வினைபோமே. (௮)

மஞ்சுலாவியகடற்கிடந்தவனொடுமலரவன்காண்பொண்ணாப்
பஞ்சுலாவியமெல்லடிப்பார்ப்பதிபாகனைப்பரிவோடுஞ்
செஞ்சொலார்பலர்பரவியதொல்புகழ்மல்கியகீழ்வேளூர்
நஞ்சுலாவியகண்டனைநணுகுமின்னடலைகணணுகாவே. (௯)

சீறுலாவியதலையினர்நிலையிலாவமணர்கள்சீவரத்தார்
வீறிலாதவெஞ்சொற்பலவிரும்பன்மின்சுரும்பமர்கீழ்வேளு
ரேறுலாவியகொடியனையேதமில்பெருந்திருக்கோயின்மன்னு
பேறுலாவியபெருமையன்றிருவடிபேணுமின்றவமாமே. (௧௦)

குருண்டவார்குழற்சடையுடைக்குழகனையழகமர்கீழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யிருண்டமேதியினினமிகுவயன்மலகுபுகலிமன்சம்பந்தன்
றெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அக்ஷயலிங்கநாதா-தேவியார்-வனமுலைநாயகியம்மை.

திருவலஞ்சுழி - பண்ணட்டராகம்

திருச்சிற்றம்பலம்

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடலவையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே (க)

விண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடலவருநஞ்ச
முண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனையுலகத்தில்
வண்டுவார்குழன்மங்கையோர்பங்கனைவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதனமெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே (உ)

திருந்தலார்புரந்தீயெழச்செறுவனவிறலின்கணடியாரைப்
பரிந்துகாப்பனபத்தியிலவருவனமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனமந்திரமாவனவலஞ்சுழியிடமாக
விருந்தநாயகனிமையவரேத்தியவிணையடித்தலந்தானே. (௩)

கறைகொள்கண்டத்தர்காய்கதிர்நிறத்தினரறத்திறமுனிவர்க்கன்
றிறைவராலிடைநீழலிலிருந்துகந்தினிதருளபெருமானார்
மறைகளோதுவர்வருபுனல்வலஞ்சுழியிடமகிழ்ந்தருங்கானத்
தறைகழலசிலம்பார்க்கநின்றாடியவற்புதமறியோமே. (௪)

மண்ணர்நீரர்விண்காற்றினராற்றலாமெரியுருவொருபாகம்
பெண்ணராணெனத்தெரிவரும்வடிவினார்பெருங்கடர்பவளம்போல்
வண்ணராகிலும்வலஞ்சுழிபிரிகிலார்பரிபவர்மனம்புக்க
வெண்ணராகிலுமெனைப்பலவியம்புவரிணையடிதொழுவாரே. (௫)

ஒருவராலுவமிப்பதையரியதோர்மேனியர்மடமாத
ரிருவராதரிப்பார்பலபூதமும்பேய்களுமடையாள
மருவராததோர்வெண்டலைகைப்பிடித்தகந்தொறும்பலிக்கென்று
வருவரேலவர்வலஞ்சுழியடிகளேவரிவளைகவர்ந்தாரே. (௬)

குன்றியூர்குடமூக்கிடம்வலம்புரங்குலவியநெய்த்தான
மென்றிவ்வூர்களிலோமென்றுமியம்புவரிமையவர்பணிகேட்பா

ரன்றியூ தமக்குள்ளனாவறிகிலோம்வலஞ்சுழியரனூர்பாற்
சென்றவூர்தனிற்றலைப்படலாமென்றுசேயிழைதளர்வாமே. (௭)

குயிலினேர்மொழிக்கொடியிடைவெருவுறக்குலவரைபார்ப்பாய
கயிலையைப்பிடித்தெடுத்தவன்கதிர்முடிதோளிருபதுமூன்றி
மயிலினேரனசாயலோடமர்ந்தவன்வலஞ்சுழியெம்மானைப்
பயிலவல்லவர்பரகதிகாண்பவரல்லவர்காணாரே. (௮)

அழலதோம்பியவலர்மிசையண்ணலுமரவணைத்துயின்றானுங்
கழலுஞ்சென்னியுங்காண்பரிதாயவர்மாண்பமர்தடக்கையின்
மழலைவீணையர்மகிழ்திருவலஞ்சுழிவலங்கொடுபாதத்தாற்
சுழலுமாந்தர்கடொல்வினையதனொடுதுன்பங்கள்களைவாரே. (௯)

அறிவிலாதவன்சமணர்கள்சாக்கியர்தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதனகூறுவர்மற்றவைதேறன்மின்மாறாநீர்
மறியுலாந்திரைக்காவிரிவலஞ்சுழிமருவியபெருமானைப்
பிறிவிலாதவர்பெறுகதிபேசிடிலளவறுப்பொண்ணாதே. (௧௦)

மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதனவேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
யாதரித்திசைகற்றுவல்லார்சொல்லக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்குமவருத்தம்வந்தடையாவே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சித்தீசநாதர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

திருக்கேதீச்சரம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாற்
பொருதழுவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெந்நாளுங்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டங்
கருதிநின்றகேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே. (௧)

பாடல்வீணையர்பலபலசரிதையரெருதுகைத்தருநட்ட
மாடலபேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்த
ரீடமாவதுவிருங்கடற்கரையினிலெழில்திகழ்மாதோட்டங்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. (௨)

பெண்ணொர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல்பவருயர்தருமாதோட்டத்
தண்ணலண்ணுகேதீச்சரமடைபவர்க்கருவினையடையாவே. (௩)

பொடிகொண்மேனியர்புலியதளரையினர்விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர்நூலினர்மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேன்மொய்த்தெழும்வினைபோமே

நல்லராற்றவுஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
யல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே. (ரு)

பேழைவார்சடைப்பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாக
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினார்குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகளகளிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே (௬)

பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞைநடமிடுமாதோட்டந்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. (௭)

தென்னிலங்கையர்குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோ
ளன்னலங்கெடவடர்த்தவற்கருள்செய்ததலைவனார்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும்பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. (௮)

பூவுளானுமப்பொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநுன்னடியிணைகாண்கிலாவித்தகமெனாகு
மாவும்பூகமுங்கதலியுநெருங்குமாதோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்துகேதீச்சரத்திருந்தவெம்பெருமானே. (௯)

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணாத
ரொத்தராகிநின்றுண்பவரியம்பியவேழைமைகேளேன்மின
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே. (௧0)

மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கேதீச்சுவரர் - தேவியார் - கௌரிநாயகியம்மை.

திருவிற்குடிவீரட்டானம்-பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியாவானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்ட
மடியராகிநின்றேத்தவல்லாதமையருவினையடையாவே. (௧)

களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகமழ்சடைக்கேற்றி
யுளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து
விளங்குமேனியரெம்பெருமானுறைவிற்குடிவீரட்டம்
வளங்கொண்மாமலரானினைந்தேத்துவாரவருத்தமதறியாரே. (௨)

கரியகண்டத்தர்வெளியவெண்பொடியணிமார்பினர்வலங்கையி
லெரியர்புன்சடையிடம்பெறக்காட்டகத்தாடியவேடத்தர்
விரியுமாமலர்ப்பொய்கைசூழ்மதுமலிவிற்குடிவீரட்டம
பிரிவிலாதவர்பெருந்தவத்தோரெனப்பேணுவருலகத்தே. (௩)

பூதஞ்சேர்ந்திசைபாடலராடலர்பொலிதரநலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம்பினர்கலம்பெறுகடலெழுவிடமுண்டார்
வேதமோதியநாவுடையானிடம்விற்குடிவீரட்டஞ்
சேருநெஞ்சினர்க்கல்லதுண்டோபிணிதீவினைகெடுமாறே. (௪)

கடியவேற்றினர்கனலனமேனியரனலெழவூர்மூன்று
மிடியமால்வரைகால்வளைத்தான்றனதடியவர்மேலுள்ள
வெடியவல்வினைவீட்டுவிப்பானுறைவிற்குடிவீரட்ட
மடியதாகவேபரவுமின்பரவினாற்பற்றறுமருநோயே. (௫)

பெண்ணொர்கூறினர்பெருமையர்சிறுமறிக்கையினர்மெய்யார்ந்த
வண்ணலன்புசெய்வாரவர்க்கெளியவரரியவரல்லார்க்கு
விண்ணிலார்பொழின்மல்கியமலர்விரிவிற்குடிவீரட்ட
மெண்ணிலாவியசிந்தையினார்தமக்கிடர்களவந்தடையாவே. (௬-௭)

இடங்கொண்மால்கடலிலங்கையர்கோன்றனையிகலழிதரவூன்று
திடங்கொண்மால்வரையானுரையார்தருபொருளினனிருளார்ந்த
விடங்கொண்மாமிடறுடையவனுறைதிருவிற்குடிவீரட்டந்
தொடங்குமாறிசைபாடிநின்றார்தமைத்துன்பநோயடையாவே. (௮)

செங்கண்மாலொடுநான்முகன்றேடியுந்திருவடியறியாமை
யெங்குமாரெரியாகியவிறைவனையறைபுனன்முடியார்ந்த
வெங்கண்மால்வரைக்கரியுரித்துகந்தவன்விற்குடிவீரட்டந்
தங்கையாற்றொழுதேத்தவல்லாரவர்தவமல்குகுணத்தாரே. (௯)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரிதுவராடையரவர்வார்த்தை
பண்டுமின்றுமோர்பொருளெனக்கருதன்மின்பரிவுறுவீர்கேண்மின்
விண்டமாமலர்ச்சடையவனிடமெனில்விற்குடிவீரட்டங்
கண்டுகொண்டடிகாதலசெய்வாரவர்கருத்துறுங்குணத்தாரே. (௧0)

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமான்றனையெழிறிகழ்கழலபேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசமபந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கானமற்றதுவரமாமே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - வீரட்டானேசுவரா் - தேவியாா - மைவார்குழலியம்மை.

திருக்கோட்டூர் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம.

நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணனேயொற்றைவிடைச்
சூலமார்தருகையனேதுன்றுபைம்பொழிலகளசூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீள்தலத்திடைப்புகழ்மிகததாங்குவர்பாங்காலே. (௧)

பங்கயம்மலாசசீறடிப்பஞ்சுறுமெலவிரலரவலகுன
மங்கைமார்பலர்மயிலகுயிலகிளியெனமிழற்றியமொழியார்மென்
கொங்கையார்குழாங்குணலைசெயகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகினறசங்கரன்றிருவருள்பெறலெளிதாமே. (௨)

நம்பனூர்நலமலர்கொடுதொழுதெழுமடியவாதமக்கெல்லாஞ்
செமபொனூர்தருமெழிறிகழ்முலையவாசெல்வமல்கியநல்ல
கொம்பனூர்தொழுதாடியகோட்டூர்நறகொழுந்தேயென்றெழுவார்க
ளம்பொனூர்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. (௩)

பலவுநீள்பொழிற்றீங்கனிதேன்பலாமாங்கனிபயிலவாய
கலவமஞ்ஞைகணிலவுசொறகிள்ளைகளன்னஞ்சேர்ந்தழகாய
குலவுநீள்வயற்கயலுகள்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ணிலவுசெலவத்தராகிநீணிலத்திடைநீடியபுகழாரே. (௪)

உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையுங்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ளருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே. (௫)

துன்றுவார்சடைத்தூமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றிணர்தலைகலனொடுபரிகலம்புலியுரியுடையாடை [வாரா
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழு
யென்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலையேதம்வந்தடையாவே. (௬)

மாடமாளிகைகோபுரங்கூடங்கண்மணியரங்கணிசாலை
பாடுசூழ்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
கேடதொன்றிலராகிநலனுலகினிலகெழுவுவர்புகழாலே. (எ)

ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுநாளவர்க்கருளசெய்த
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தினைத்தொழுவார்க
டளிர்கொடாமரைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. (அ)

பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமுத்தினைப்பவளத்தைத்
தேடிமாலயன்காணவொண்ணுதவதிருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டூரநறகொழுநதேயென்றெழுவார்க
ணீடுசெல்வத்தராகியிவ்வுலகினினிகழ்தருபுகழாரே. (கூ)

கோணல்வெண்பிறைச்சடையனைகோட்டூர்நற்கொழுந்தினைச்செழுந்திரளைப்
பூணல்செயதடிபோற்றுமின்பொயயிலாமெயயநலலருளென்றுங்
காணலொன்றிலாக்காரமண்டேரர்குண்டரக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தரனைத்தொழுமடியவாபெருமையைப்பெறுவாரே. (க0)

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாருங்
கொந்துலாமலர்விரிபொழிறகோட்டூரநற்கொழுநதினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுண்ஞானசம்பாதனவாய்நதுணாசெய்த
சநதுலாந்தமிழ்மாலைகள்வலலவர்தாங்குவர்புகழாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொழுந்தீசுவரர் - தேவியாா - மதுரவசனியமமை.

திருமாந்துறை - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனூர்தருவேங்கையுஙாழலுஞ்செருந்திசெண்பகமானைக்
கொம்புமாரமுமாதவிசுரபுனைகுருந்தலாபோநதுந்தி
யம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற
வெம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோமே. (க)

விளவுதேனொடுசாதியின்பலங்களும்வேய்மணிநிரந்துநதி
யளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானத்
துளவமான்மகனேங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
யளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமறறறியோமே. (உ)

கோடுதேன்சொரிகுன்றிடைப்பூகமுங்கூந்தலின்குலைவாரி
யோடுநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைநம்பன்

வாடினார்தலையிற்பலிகொள்பவன்வானவர்மகிழ்ந்தேத்துங்
கேடிலாமணியைத்தொழலல்லதுகெழுமுதலறியோமே. (௩)

இலவஞாழலுமீஞ்சொடுசுரபுன்னையிளமருதிலவங்கங்
கலவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகண்ட
னலைகொள்வார்புனலம்புலிமத்தமுமாடரவுடன்வைத்த
மலையைவானவர்கொழுந்தினையல்லதுவணங்குதலறியோமே. (௪)

கோங்குசெண்பகங்குருந்தொடுபாதிரிகுரவிடைமலருந்தி
யோங்கிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைப்
பாங்கினாலிடுதூபமுந்தீபமும்பாடவிம்மலர்சேர்த்தித்
தாங்குவாரவர்நாமங்கணாவினிற்றலைப்படுந்தவத்தோரே. (௫)

பெருகுசந்தனங்காரகில்பீலியும்பெருமரநிமிர்ந்துந்திப்
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புனிதனெம்பெருமானைப்
பரிவினாலிருந்திரவியுமதியமும்பார்மன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே. (௬)

நறவமல்லிகைமுல்லையுமௌவலுநாண்மலரவைவாரி
யிறவிலவந்தெறிகாவிரிவடகரைமாந்துறையிறையன்றங்
கறவனாகியகூற்றினைச்சாடியவந்தணனவரைவில்லா
னிறையவாங்கிவலித்தெயிலெய்தவனிணைகழல்பணிவோமே. (௭)

மந்தமார்பொழின்மாங்கனிமாந்திடமந்திகண்மாணிக்க
முந்திநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானை
நிந்தியாவெடுத்தார்த்தவல்லரக்கனைநெரித்திடுவிரலானைச்
சிந்தியாமனத்தாரவர்சேர்வதுதீநெறியதுதானே (௮)

நீலமாமணிநித்திலத்தொத்தொடுநிரைமலர்நிறைந்துந்தி
யாலியாவருகாவிரிவடகரைமாந்துறையமர்வானை
மாலுநான்முகனேடியுங்காண்கிலாமலரடியிணைநாளுங்
கோலமேத்திநின்றாடுமின்பாடுமின்கூற்றுவனலியானே. (௯)

நின்றுணுஞ்சமண்டேரருநிலையிலர்நெடுங்கழைநறவேலம்
நன்றுமாங்கனிகதலியின்பலங்களுநாணலினுரைவாரி
யொன்றிநேர்தருகாவிரிவடகரைமாந்துறையொருகால
மன்றியுள்ளழிந்தெழும்பரிசழகிதுவதுவவர்க்கிடமாமே (௧௦)

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவ
னரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிநின்றுதொழவல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஐராவணேசுவரர் - தேவியார் - அழகாயமர்ந்தநாயகியம்மை.

திருவாய்மூர் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிவுமைபாடத்தாளமிடவோர்கழல்வீசிக்
கிளரிளமணியரவரையார்த்தாடும்வேடக்கிறிமையார்
விளரிளமுலையவர்க்கருணல்கிவெண்ணீறணிந்தோர்சென்னிமேல்
வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௧)

வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடைமேலோர்
பந்தஞ்செய்தரவசைத்தொலிபாடிப்பலபலகடைதொறும்பலிதேர்வார்
சிந்தனைபுகுந்தெனக்கருணல்கிச்செஞ்சுடர்வண்ணர்தம்மடிபரவ
வந்தனைபலசெயவிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௨)

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிலுடனாவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே (௩)

எரிகிளர்மதியமொடெழினுதன்மேலெறிபொறியரவினொடாறுமூழ்க
விரிகிளர்சடையினர்விடையேறிவெருவவந்திடர்செய்தவிகிர்தனார்
பொரிகிளர்பொடியணிதிருவகலம்பொன்செய்தவாய்மையர்பொன்மிளிரும்
வரியரவரைக்கசைத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௪)

அஞ்சனமணிவனமெழினிறமாவகமிடறணிகொளவுடறிமில
நஞ்சினையமரர்களமுதமெனநண்ணியநறுநுதலுமைநடுங்க
வெஞ்சினமால்களியானையின்றோலைவெருவுறப்போர்த்ததனிறமுமஃதே
வஞ்சனைவடிவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௫)

அல்லியமலர்புல்குவிரிகுழலார்கழலிணையடிநிழலவைபரவ [ர்
வெல்லியம்போதுகொண்டெரியேந்தியெழிலொடுதொழிலவையிசையவல்லா
சொல்லியவருமறையிசைபாடிச்சூடிளமதியினர்தோடுபெய்து
வல்லியந்தோலுடுத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே (௬)

கடிபடுகொன்றைநன்மலர்திகழுங்கண்ணியர்விண்ணவர்கணமணிசேர்
முடியிலகுபிறையவர்மறுகினலலார்முறைமுறைபலிபெய்யுமுறுவல்செய்வார்
பொடியணிவடிவொடுதிருவகலம்பொன்னெனமிளிர்வதோரரவினொடும்
வடிநுனைமழுவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௭)

கட்டிணைபுதுமலர்க்கமழ்கொன்றைக்கண்ணியர்வீணையர்தாமுமஃதே
எட்டிணைசாந்தமோடுமைதுணையாவிறைவனுறைவதோரிடம்வினவிற்
பட்டிணையகலல்குல்விரிகுழலார்பாவையர்பலியெதிர்கொணர்ந்துபெய்ய
வட்டணையாடலொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௮)

ஏனமருப்பினொடெழிலாமையிசையப்பூண்டோரேறேறிக்
கானமதிடமாவுறைகின்றகள்வர்கனவிற்றுயர்செய்து

தேனுணமலர்களுந்திவிம்மித்திகழ்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வானநன்மதியினோடிவராணீர்வாய்மூரடிகளவருவாரே. (கூ)

ஞே. ல்வெண்பிறையிணர்சுடர்முடியர்சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவர்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்பாம்பொடுநூலவைபசைந்திலங்கக்
கோடனன்முகிழ்விரல்கூப்பிநல்லார்குறையுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (க0)

திங்களோடருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூ
ரங்கமோடருமறையொலிபாடலழனிறவண்ணர்தம்மடிபரவி
நங்கடம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்றமிழ்மாலை
தங்கியமநத்தினாற்றொழுதெழுவார்தவநெறியுலகுக்கோர்தவநெறியே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வாய்மூர்சுவரர் - தேவியார் - பாலினுநன்மொழியம்மை.

திருஆடானை - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறதேறிய, வாதியானுறையாடானைப்
போதினாற்புனைந்தேத்துவார்தமை, வாதியாவினைமாயுமே. (க)

வாடல்வெண்டலையங்கையேந்திநின், றாடலானுறையாடானைத்
தோடுலாமலர்தூவிக்கைதொழ, வீடுநுங்கள்வினைகளே (உ)

மங்கைகூறினன்மான்மறியுடை, யங்கையானுறையாடானைத்
தங்கையாற்றொழுதேத்தவல்லவர், மங்குநோய்பிணிமாயுமே. (ஙூ)

சுண்ணநீறணிமார்பிற்றோல்புனை, யண்ணலானுறையாடானை
வண்ணமாமலர்தூவிக்கைதொழ, வெண்ணுவாரிடரேகுமே. (ச)

கொய்யணிம்மலர்க்கொன்றைசூடிய, மையன்மேவியவாடானை
கையணிமலரால்வணங்கிட, வெய்யவல்வினைவீடுமே. (ரு)

வானிளம்மதிமல்குவார்சடை, யானஞ்சாடலானாடானை
தேனணிம்மலர்சேர்த்தமுன்செய்த, வூனமுள்ளவொழியுமே. (சு)

துலங்குவெண்மழுவேந்திச்சூழ்சடை, யலங்கலானுறையாடானை
நலங்கொண்மாமலர்தூவிநாடொறும், வலங்கொள்வார்வினைமாயுமே.

வெந்தநீறணிமார்பிற்றோல்புனை, யந்தமில்லவனாடானை
கந்தமாமலர்தூவிக்கைதொழுஞ், சிந்தையார்வினைதேயுமே. (அ)

மறைவல்லாரொடுவானவர்தொழு, தறையுந்தண்புனலாடானை
யுறையுமீசனையேத்தத்தீவினை, பறையுநல்வினைபற்றுமே. (கூ)

மாயனும்மலரானுங்கைதொழ,வாயவந்தணனாடானை
தூயமாமலர்தூவிக்கைதொழத், தீயவல்வினைதீருமே. (க0)

வீடினார்மலிவெங்கடத்துநின், றுடலாருறையாடானை
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ், பாடநோய்பிணிபாறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆதிரத்தினேசுவரர் - தேவியார் - அம்பாயிரவல்லியம்மை.

சீகாழி - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடியிலங்குந்திருமேனியாளர்புலியதளின
ரடியிலங்குங்கழலார்க்கவாடும்மடிகள்ளிட
மிடியிலங்குங்குரலோதமல்கவ்வெறிவார்திரைக்
கடியிலங்கும்புனன்முத்தலைக்குங்கடற்காழியே. (௧)

மயலிலங்குந்துயர்மாசறுப்பானருந்தொண்டர்க
ளயலிலங்கப்பணிசெய்யநின்றவடிகள்ளிடம்
புயலிலங்குங்கொடையாளரதேத்தொலிபொலியவே வ
கயலிலங்கும்வயற்கழனிசூழுங்கடற்காழியே. (௨)

சூர்விலங்குந்திரிசூலர்வேலர்குழைக்காதினர்
மார்விலங்கும்புரிநூலுகந்தமணவாளனூர்
நேர்விலங்கல்லனதிரைகண்மோதந்நெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல்லெனக்கலநதொழுகுங்கடற்காழியே. (௩)

குற்றமில்லார்குறைபாடுசெய்வார்பழிதீர்ப்பவர்
பெற்றநல்லகொடிமுன்னுயர்த்தபெருமானிட
மற்றுநல்லார்மநத்தாரினியார்மறைகலையெலாங்
கற்றுநலலார்பிழைதெரிந்தளிக்குங்கடற்காழியே. (௪)

விருதிலங்குஞ்சரிதைததொழிலார்விரிசடையினா
ரெருதிலங்கப்பொலிநதேறுமெந்தைக்கிடமாவது
பெரிதிலங்கும்மறைகிளைஞரோதப்பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக்குலந்தெரிநதுதீர்க்குங்கடற்காழியே. (௫)

தோடிலங்குங்குழைக்காதர்வேதர்சுரும்பார்மலர்ப்
பீடிலங்குஞ்சடைப்பெருமையாளர்க்கிடமாவது
கோடிலங்கும்பெரும்பொழில்கண்மல்கப்பெருஞ்செந்நெலின்
காடிலங்கும்வயல்பயிலுமந்தண்கடற்காழியே. (௬)

மலையிலங்குஞ்சிலையாகவேகம்மதின்மூன்றெரித்
தலையிலங்கும்புனற்கங்கைவைத்தவடிகட்கிட
மிலையிலங்கும்மலர்க்கைதைகண்டல்வெறிவிரவலாற்
கலையிலங்குங்கணத்தினம்பொலியுங்கடற்காழியே. (௭)

முழுதிலங்கும்பெரும்பாருள்வாழும்முரணிலங்கைக்கோ
னழுதிரங்கச்சிரமுரமொடுங்கவ்வடர்த்தாங்கவன்

றெழுதிரங்கத்துயர்தீர்த்துகந்தார்க்கிடமாவது
கழுதும்புள்ளுமதிற்புறமதாருங்கடற்காழியே. (அ)

பூவினானும்விரிபோதின்மல்குந்திருமகடனை
மேவினானும்வியந்தேத்தநீண்டாரழலாய்நிறைந்
தோவியங்கேயவர்க்கருள்புரிந்தவ்வொருவர்க்கிடங்
காவியங்கண்மடமங்கையர்சேர்கடறகாழியே. (கூ)

உடைநவின்றாருடைவிட்டுழல்வாரிருந்தவத்தார்
முடைநவின்றம்மொழியொழித்துகந்தம்முதல்வன்னிட
மடைநவின்றபுனற்கெண்டைபாயும்வயன்மலிதரக
கடைநவின்றனெடுமாடமோங்குங்கடற்காழியே. (க0)

கருகுமுந்நீர்திரையோதமாருங்கடற்காழியு
ளுரகமாருஞ்சடையடிகடம்பாலுணர்ந்துறுதலாற
பெருகமல்கும்புகழ்பேணுந்தொண்டர்க்கிசையார்தமிழ்
விரகனசொன்னவிவைபாடியாடகெடுமவினைகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதாரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுகளிறும்மடக்கிச்சுரும்பாரமல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரி
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. (க)

பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும விரித்தார்க்கிடந்
தாதுவண்டம்மதுவுண்டுமிண்டிவ்வருவண்டினங்
கீதம்பாடம்மடமந்திகேட்டுகளுங்கேதாரமே (உ)

முந்திவந்துபுரோதாயமூழ்கிம்முனிகள்பல
ரெந்தைபெம்மானெனநின்றிறைஞ்சுமிடமென்பரான்
மந்திபாயச்சரேலச்சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. (ங)

உள்ளமிக்கார்குதிரைம்முகத்தாரொருகாலர்க
ளெள்களில்லாவிமையோர்கள்சேருமிடமென்பராற்
பிள்ளைதுள்ளிக்கிளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. (ச)

ஊழியூழியுணர்வார்கள்வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சுமிடமென்பரான்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்வரைதேரிய
கேழல்பூழ்திகிளைக்கமணிசிந்துங்கேதாரமே. (ரு)

நீறுபூசிநிலத்துண்டுநீர்மூழ்கிநீள்வரைதன்மேற்
றேறுசிந்தையுடையார்கள்சேருமிடமென்பரா
லேறிமாவின்கனியும்பலாவின்னிருஞ்சுளைகளுங்
கீறிநாளுமுசுக்கிளையோடுண்டுகளுங்கேதாரமே. (௬)

மடந்தைபாகத்தடக்கிம்மறையோதிவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினைதீர்க்கநின்றார்க்கிடமென்பரா
லுடைந்தகாற்றுக்குயாவேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேற்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்யுங்கேதாரமே. (௭)

அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனால்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பராற்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிநாழல்சுரபுன்னைமேற்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. (௮)

ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்தகில்லாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றார்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுந்நிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. (௯)

கடுக்கடின்றுகழிமீன்கவர்வாரகண்மாசுடம்பின்
ரிடுக்கணுய்ப்பாரவரொய்தவொண்ணாவிடமென்பரா
லடுக்கநின்றவவறவுரைகள் கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்றபெருமானுறைகின்றகேதாரமே. (௧0)

வாய்ந்தசெந்நெல் விளைகழனிமல்கும்வயற்காழியா
னேய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
யாய்ந்துசொன்னவருந்தமிழ்களபத்துமிசைவல்லவா
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.

சுவாமிபெயர்-கேதாரேசுவரர்-தேவியார்-கௌவுரியம்மை.

திருப்புகலூர் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முகுழலிளையராடவ்வெறிவிரவுநீர்ப்
பொங்குசெங்கட்கருங்கயல்கள்பாயும்புகலூர்தனுட்
டிங்கள்சூடித்திரிபுரமோரம்பாலெரியூட்டிய
வெங்களெம்மானடிபரவநாளும்மிடர்கழியுமே. (௧)

வாழ்ந்தநாளுமினிவாழுநாளும்மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம்பெருமானையேத்தாவிதியில்லிகாள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினான்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளமுடையீர்களுங்கயர்தீருமே. (௨)

மடையினெய்தல்கருங்குவளைசெய்யமலர்த்தாமரை
புடைகொள்செந்நெல்விளைகழனிமல்கும்புகலூர்தனுட்
டொடைகொள்கொன்றைபுனைந்தானோர்பாகமதிசூடியை
யடையவல்லாரமருலகமாளப்பெறுவார்களே. (௩)

பூவுநீரும்பலியுஞ்சுமந்துபுகலூரையே
நாவினாலேநவின்றேத்தலோவார்செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன்பெருமையல்லாலடியார்கடா
மோவுநாளுமுணர்வொழிந்தநாளென்றுள்ளங்கொள்ளவே. (௪)

அன்னங்கன்னிப்பெடைபுல்கியொல்கியணிநடையவாய்ப்
பொன்னங்காஞ்சிமலர்ச்சின்னமாலும்புகலூர்தனுண்
முன்னம்மூன்றும்மதிலெரித்தமூர்த்திதிறங்கருதுங்கா
லின்னரென்னப்பெரிதரியரேத்தச்சிறிதெளியரே. (௫)

குலவராகக்குலமிலருமாகக்குணம்புகழுங்கா
லுலகினல்லகதிபெறுவரேனுமலருறுதேன்
புலவமெல்லாம்வெறிகமழுமந்தண்புகலூர்தனு
ணிலவுமலருஞ்சடையடிகள்பாதந்நினைவார்களே. (௬)

ஆணும்பெண்ணுமெனநிற்பரேனும்மரவாரமாப்
பூணுமேனும்புகலூர்தனக்கோர்பொருளாயினா
னூணுமூராரிடுபிச்சையேற்றுண்டுடைகோவணம்
பேணுமேனும்பிரானென்பராலெம்பெருமானையே. (௭)

உய்யவேண்டியெழுபோதநெஞ்சேயுயரிலங்கைக்கோன்
கைகளொல்கக்கருவரையெடுத்தானையோர்விரலினாற்
செய்கைதோன்றச்சிதைத்தருளவல்லசிவன்மேயபூம்
பொய்கைசூழ்ந்தபுகலூர்புகழப்பொருளாகுமே. (௮)

நேமியானுமுகநான்குடையநெறியண்ணலு
மாமிதென்றுதகைந்தேத்தப்போயாரழலாயினான்
சாமிதாதைசரணாகுமென்றுதலைசாய்மினோ
பூமியெல்லாம்புகழ்செல்வமல்கும்புகலூரையே. (௯)

வேர்த்தமெய்யருருவத்துடைவிட்டுழல்வார்களும்
போர்த்தகூறைப்போதிநீழலாரும்புகலூர்தனுட்
டீர்த்தமெல்லாஞ்சடைக்கரந்ததேவன்றிறங்கருதுங்கா
லோர்த்துமெய்யென்றுணராதுபாதந்தொழுதுய்மினே. (௰)

புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
யந்தமில்லாவனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடனாகைக்காரோணம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௧)

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினா
னிலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடற்
கலங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௨)

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழின்
முறிகொஞாழன்மூடப்புன்னைமுல்லைமுகைவெண்மலர்
நறைகொள்கொன்றைநயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௩)

வண்டுபாடல்வளர்கொன்றைமாலைமதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருட்குஞ்சியு
ஞாண்டுபோலுமெனவைத்துகந்தவொருவறகிடங்
கண்டல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௪)

வார்கொள்கோலமுலையங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௫)

விடையதேறிவ்விடவரவசைத்தவிகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடவாடும்பரமாயவ
ருடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௬)

பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்குமலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையா
ரெய்தவாழ்வாரெழினக்கரெம்மாற்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௭)

பத்திரட்டிதிரடோளுடையான்முடிபத்திற
வத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியவார்கடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௮)

நல்லபோதிலுறைவானுமாலுந்நடுக்கத்தினா
லல்லராவனொனநின்றவெம்மாற்கிடமாவது

மல்லலோங்கிவ்வருவெண்டிரைமல்கியமால்கடல்
கல்லலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௯)

உயர்ந்தபோதின்னுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பயர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழலவார்களுந்
நயந்துகாணாவகைநின்றநாதர்க்கிடமாவது
கயங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௧௦)

மல்குதண்பூம்புனலவாய்நந்தொழுகும்வயற்காழியா
னல்ல கேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துநகாரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஇரும்பைமாகாளம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கைசடையிற்கரந்துமதிசூடிமான்
கொண்டகையாற்புரமூன்றெரித்தகுழகன்னிட
மெண்டிசையும்புகழ்போய்விளங்குமிரும்பைதனுள்
வண்டுகீதம்முரல்பொழில்சூலாநின்றமாகாளமே. (௧)

வேதவித்தாயவெள்ளைநீறுபூசிவினையாயின
கோதுவித்தாயநீறெழக்கொடிமாமதிலாயின
வேதவித்தாயினதீர்க்குமிடமிரும்பைதனுண
மாதவத்தோர்மறையோர்தொழநின்றமாகாளமே. (௨)

வெந்தநீறுமெலும்பும்மணிந்தவ்விடையூர்தியா
லெந்தைபெம்மானிடமெழிலகொள்சோலையிரும்பைதனுட்
கந்தமாயபலவினகனிகள்கமழும்பொழின்
மந்திபேறிக்கொணர்ந்துண்டுகள்கின்றமாகாளமே. (௩)

நஞ்சுகண்டத்தடக்கிநடுங்குமலையான்மக
ளஞ்சவேழம்முரித்தபெருமானமரும்மிட
மெஞ்சவிலலாப்புகழ்போல்விளங்குமிரும்பைதனுண்
மஞ்சிலோங்கும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (௪)

பூசுமாசில்பொடியான்விடையான்பொருப்பன்மகள்
கூசவானையுரித்தபெருமான்குறைவெண்மதி
யீசனெங்கள்ளிறைவன்னிடம்போலிரும்பைதனுண்
மாசிலோர்கண்மலர்கொண்டணிகின்றமாகாளமே. (௫)

குறைவதாயகுளிர்திங்கள்சூடிக்குனித்தான்வினை
பறைவதாக்கும்பரமன்பகவன்பரந்தசடை

யிறைவனெங்கள்பெருமானிடம்போலிரும்பைதனுண்
மறைகள்வல்லார்வணங்கித்தொழுகின்றமாகாளமே. (௬)

பொங்குசெங்கண்ணரவும்மதியும்புரிபுன்சடைத்
தங்கவைத்தபெருமானெனநின்றவர்தாழ்விட
மெங்குமிச்சையமர்ந்தானிடம்போலிரும்பைதனுண்
மங்குறோயும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (எ)

நட்டத்தோடுநரியாடுகானத்தெரியாடுவா
னட்டமூர்த்தியழல்போலுருவன்னழகாகவே
யிட்டமாகவிருக்குமிடம்போலிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்துபணிவார்பிணிதீர்க்குமாகாளமே. (அ)

அட்டகாலன்றனைவவ்வினானவ்வரக்கன்முடி
யெட்டுமற்றுமிருபத்திரண்டும்மிறவூன்றினா
னிட்டமாகவிருப்பானவன்போலிரும்பைதனுண்
மட்டுவார்ந்தபொழில்சூழ்ந்தெழிலாருமாகாளமே. (௯)

அரவமார்த்தன்றனலங்கையேந்தியடியும்முடி
பிரமன்மாலும்மறியாமைநின்றபெரியோனிடங்
குரவமாரும்பொழிற்குயில்கள்சேருமிரும்பைதனுண்
மருவிவானோர்மறையோர்தொழுகின்றமாகாளமே. (௧0)

எந்தையெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுண்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தி
லந்தமில்லாவனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்ப்பாடவல்லார்பழிபோகுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - மாகாளேசுவரர் - தேவியார் - குயிலம்மை.

திருத்திலதைப்பதி-மதிமுத்தம் - பண் - செவ்வழி

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
யடிகளாரத்தொழுதேத்தநின்றவழகன்னிடங்
கொடிகளோங்கிக்குலவும்விழவார்திலதைப்பதி
வடிகொள்சோலைம்மலிமணங்கமழும்மதிமுத்தமே. (௧)

தொண்டர்மிண்டிப்புகைவிம்முசாந்துங்கமழ்துணையலுங்
கொண்டுகண்டார்குறிப்புணரநின்றகுழகன்னிடந்
தெண்டிரைப்பூம்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
வண்டுகொண்டுற்றிசைபயிலுஞ்சோலைமதிமுத்தமே. (௨)

அடலுளேறுய்த்துகந்தானடியாரமரர்தொழக்
கடலுணஞ்சமமுதாகவுண்டகடவுள்ளிடந்
திடலடங்கச்செழுங்கழனிசூழ்ந்ததிலதைப்பதி
மடலுள்வாழைக்கனிதேன்பிலிற்றுமதிமுத்தமே. (௩)

கங்கைதிங்கள்வன்னிதுன்னெருக்கினொடுகூவிளம
வெங்கணாகம்விரிசடையில்வைத்தவிகிர்தன்னிடஞ்
செங்கயல்பாய்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
மங்குறோயும்பொழில்சூழ்ந்தழகார்மதிமுத்தமே (௪)

புரவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினான்
பரவிநின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவிநாழல்விரிகோங்குவேங்கைசுரபுன்னைகண்
மரவமவ்வன்மலருந்திலதைப்பதிமுத்தமே. (௫)

விண்ணர்வேதம்விரித்தோதவல்லாரொருபாகமும்
பெண்ணரெண்ணாரெயில்செற்றுகந்தபெருமானிடந்
தெண்ணிலாவின்னொளிதீண்டுசோலைத்திலதைப்பதி
மண்ணுளார்வந்தருள்பேணிநின்றமதிமுத்தமே. (௬)

ஆறுசூடியடையார்புரஞ்செற்றவர்பொற்றொடி
கூறுசேருமுருவர்க்கிடமாவதுகூறுங்காற்
றேறலாரும்பொழில்சூழ்ந்தழகார்திலதைப்பதி
மாதிலாவண்புனலரிசிலசூழ்ந்தமதிமுத்தமே. (௭)

கடுத்துவந்தகனன்மேனியினன்கருவரைதனை
யெடுத்தவன்றன்முடிதோளடர்த்தார்க்கிடமாவது
புடைக்கொள்பூகத்திளம்பாளைபுலரும்மதுப்பாயவாய
மடுத்துமந்தியுகளுந்திலதைமதிமுத்தமே. (௮)

படங்கொணாகத்தலையானும்பைந்தாமரையின்மிசை
இடங்கொணால்வேதனுமேத்தநின்றவிறைவன்னிடந்
திடங்கொணாவின்னிசைதொண்டர்பாடுந்திலதைப்பதி
மடங்கல்வந்துவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (௯)

புத்தர்தேரர்பொறியில்சமணர்களும்வீறிலாப்
பித்தர்சொன்னம்மொழிகேட்கிலாதபெருமானிடம்
பத்தர்சித்தர்பணிவுற்றிறைஞ்சுந்திலதைப்பதி
மத்தயானைவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (௧0)

மந்தமாரும்பொழில்சூழ்திலதைமதிமுத்தமேற்
கந்தமாருங்கடற்காழியுளான்றமிழ்ஞானசம்

பந்தன்மாலைபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வாரசிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மதிமுத்தநாதேசுவரர் - தேவியார் - பொற்கொடியம்மை.

திருநாகேச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நழுவில்வானோர்தொழநலகுசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. (௧)

பெண்ணோர்பாகம்மடையச்சடையிறபுனல்பேணிய
வண்ணமானபெருமான்மருவும்மிடமண்ணுளார்
நண்ணிநாளுந்தொழுதேத்திநன்கெய்துநாகேச்சரங்
கண்ணிற்காணவல்லாரவர்கண்ணுடையார்களே. (௨)

குறவர்கொல்லைப்புனங்கொள்ளைகொண்டும்மணிகுலவுநீர்
பறவையாலப்பறக்கும்பழங்காவிரித்தென்கரை
நறவைநாறும்பொழில்சூழ்ந்தழகாயநாகேச்சரத்
திறைவர்பாதநதொழுதேத்தவலலார்க்கிடரில்லையே. (௩)

கூசநோக்காதுமுன்சொன்னபொய்கொடுவினைகுற்றமுந்
நாசமாக்குமனததார்கள்வந்தாடுநாகேச்சரந
தேசமாக்குந்திருக்கோயிலாக்கொண்டசெல்வன்கழ
னேசமாக்குந்திறத்தாரறத்தார்நெறிப்பாலரே. (௪)

வம்புநாறுமமலரும்மலைப்பண்டமுங்கொண்டுநீர்
பைம்பொன்வாரிக்கொழிக்கும்பழங்காவிரித்தென்கரை
நம்பர்நாளுமமர்கின்றநாகேச்சரநண்ணுவா
ரும்பர்வானோர்தொழச்சென்றுடனாவதுமுண்மையே. (௫)

காளமேகந்நிறக்காலனோடந்தகன்கருடனு
நீளமாய்நின்றெய்தகாமனும்பட்டனனிவைவுறி
னாளுநாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தீயவேனுநன்காங்குறிக்கொண்மினே. (௬)

வேயுதிர்முத்தொடுமத்தயானைமருப்பும்விராய்ப்
பாய்புனல்வந்தலைக்கும்பழங்காவிரித்தென்கரை
நாயிறுந்திங்களுங்கூடிவந்தாடுநாகேச்சர
மேயவன்றன்னடிபோற்றியென்பார்வினைவீடுமே. (௭)

இலங்கைவேந்தன்சிரம்பத்திரட்டியெழிற்றோள்களும்
மலங்கிவீழ்மலையாலடர்த்தானிடமல்கிய

நலங்கொள்சிந்தையவர்நாடொறுநண்ணுநாகேச்சரம்
வலங்கொள்சிந்தையுடையாரிடராயினமாயுமே. (அ)

கரியமாலும்மயனும்மடியும்முடிகாண்பொணு
வெரியதாகிந்நிமிர்ந்தானமரும்மிடமீண்டுகா
விரியினீர்வந்தலைக்குங்கரைமேவுநாகேச்சரம்
பிரிவிலாதவ்வடியார்கள்வானிற்பிரியார்களே. (கூ)

தட்டிடுகெகியுறிதூக்கியகையினர்சாக்கியர்
கட்டுரைக்கும்மொழிகொள்ளலும்வெளளிலங்காட்டிடை
நட்டிருட்கண்ணடமாடியநாதனுகேச்சர
மட்டிருக்கும்மலரிட்டடிவீழ்வதுவாய்மையே. (க0)

கந்தநாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதன்
னந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுவிற்பனுவல்லிவைபத்தும்வலலாகள்போ
யெந்தையீசன்னிருக்கும்முலகெய்தவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமூக்கீச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிறறம்பலம.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவா
காநதளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியந்நிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே. (க)

வெண்டலையோர்கலனுப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனலசேர்த்துமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செயகன்மமே. (உ)

மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
யுருவிலாரவ்வெரியூட்டியதும்முலகுண்டதாற
செருவிலாரும்புலிசெங்கயலாணையினுன்செய்த
பொருவின்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்யும்பூசலே (ங)

அன்னமன்னநடைச்சாயலாளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையான்மேவியகாரணந்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினுன்
மன்னன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மாயமே, (ச)

விடமுனாரவ்வழல்வாயதோர்பாம்பரைவீக்கியே
நடமுனாரவ்வழலாடுவர்பேயொடுநள்ளிருள்

வடமனீடுபுகழ்ப்பூழியன்றென்னவன்கோழிமன்
னடன்மன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (௫)

வெந்தநீறுமெய்யிற்பூசுவராவெர்வீங்கிருள்
வந்தொருரவ்வளைகொள்வதுமிங்கொருமாயமா
மந்தணமாதனனேரியன்செம்பியனுக்கிய
வெந்தைமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரேதமே. (௬)

அரையிலாருங்கலையில்லவனுமெண்ணுடுபெண்ணுமா
யுரையிலாரவ்வழலாடுவரொன்றலர்காண்மினோ
விரவலார்தம்மதின்மூன்றுடன்வெவ்வழலாக்கினா
னரையன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (௭)

ஈர்க்குநீர்ச்செஞ்சடைக்கேற்றதுங்கூற்றையுதைத்ததுங்
கூர்க்குநன்மூவிலைவேல்வலனேந்தியகொள்கையும்
மார்க்கும்வாயானரக்கனுரத்தைநெரித்தவ்வடன்
மூர்க்கன்மூக்கீச்சரத்தடிகள்செய்யாநின்றமொய்ம்பதே. (௮)

நீருளாரும்மலர்மேலுறைவானெடுமாலுமாய்ச்
சீருளாருங்கழறேடமெய்த்தீதிரளாயினான்
சீரினாலங்கொளிர்தென்னவன்செம்பியன்வில்லவன்
சேருமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்செம்மையே. (௯)

வெண்புலான்மார்பிடுதுகிலினர்வெற்றரையுழல்பவ
ருண்பினாலேயுரைப்பார்மொழியூனமதாக்கினா
னொண்புலால்வேன்மிகவல்லவனோங்கெழிற்கிள்ளைசேர்
பண்பின்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்பச்சையே. (௧௦)

மல்லைவார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன்
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாதிரிப்புலியூர் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடக்காலமுயற்கருள்செய்துநீள்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
றன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. (௧)

கொள்ளிநக்கபகுவாயபேய்கள்குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டுறையும்முதல்வன்னிடம்

புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
யுள்ளநம்மேல்வினையாயினவொழியுங்களே. (௨)

மருளினல்லார்வழிபாடுசெய்யும்மழுவாளர்மேற்
பொருளினல்லார்பயில்பாதிரிப்புலியூருளான்
வெருளின்மானின்பிணைநோக்கல்செய்துவெறிசெய்தபின்
னருளியாகத்திடைவைத்ததுவும்மழகாகவே. (௩)

போதினாலும்புகையாலுமுய்த்தேயடியார்கடாம்
போதினாலேவழிபாடுசெய்யப்புலியூர்தனு
ளாதிநாளும்மவலம்மிலாதவடிகண்மறை
யோதிநாளும்மிடும்பிச்சையேற்றுண்டுணப்பாலதே. (௪)

ஆகநல்லாரமுதாக்கவுண்டானழலாநதலை
நாகநல்லார்பரவந்நயந்தங்கரையார்த்தவன்
போகநல்லார்பயிலும்பாதிரிப்புலியூர்தனுட்
பாகநல்லாளொடுநின்றவெம்பரமேட்டியே. (௫)

மதியமொய்த்தகதிர்போலொளிம்மணற்கானல்வாய்ப்
புதியமுத்தந்திகழ்பாதிரிப்புலியூரெனும்
பதியில்வைக்கப்படுமெந்தைதன்பழந்தொண்டர்கள்
குதியுங்கொள்வர்விதியுஞ்செய்வர்குழகாகவே. (௬)

கொங்கரவப்படுவண்டறைகுளிர்கானல்வாய்ச்
சங்கரவப்பறையின்னொலியவைசார்ந்தெழப்
பொங்கரவம்முயர்பாதிரிப்புலியூர்தனு
ளங்கரவம்மரையிலசைத்தானையடைமினே. (௭)

வீக்கமெழுமிலங்கைக்கிறைவிலங்கல்லிடை
யூக்கமொழிந்தலறவ்விரலிறையூன்றினான்
பூக்கமழும்புனற்பாதிரிப்புலியூர்தனை
நோக்கமெலிந்தணுகாவினைநுணுகுங்களே (௮)

அன்னந்தாவுமணியார்பொழின்மணியார்புன்னை
பொன்னந்தாதுசொரிபாதிரிப்புலியூர்தனுண்
முன்னந்தாவியடிமூன்றளந்தவன்நான்முகன்
றன்னநதாளுற்றுணராததோர்தவநீதியே. (௯)

உரிந்தகூறையுருவத்தொடுதெருவத்திடைத்
திரிந்துதின்னுஞ்சிறிநோன்பரும்பெருந்தேரரு
மெரிந்துசொன்னவ்வுரைகொள்ளாதேயெடுத்தேத்துமின்
பரிந்துவெண்ணீற்றண்ணல்பாதிரிப்புலியூரையே. (௰)

அந்தணல்லாரகன்காழியுண்ஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுட்

சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கள்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தோன்றாத்துணையீசுவரர்-தேவியார்-தோகையம்பிகையம்மை.

ஸ்ரீபுகலி - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

விடையதேறிவெறியக்கரவார்த்தவிமலனார்
படையதாகப்பரசுதரித்தார்க்கிடமாவது
கொடையிலோவார்குலமும்முயர்ந்தம்மறையோர்கடாம்
புடைகொள்வேள்விப்புகையும்பருலாவும்புகலியே. (௧)

வேலைதன்னின்மிகுநஞ்சினையுண்டிருள்கண்டனார்
ஞாலமெங்கும்பலிகொண்டுழலவார்நகராவது
சாலநல்லார்பயிலும்மறைகேட்டுப்பதங்களைச்
சோலைமேவுங்கிளித்தான்சொற்பயிலும்புகலியே. (௨)

வண்டுவாழுங்குழன்மங்கையோர்கூறுகந்தார்மதித்
துண்டமேவுஞ்சுடர்த்தொல்சடையார்க்கிடமாவது
கெண்டைபாயமடுவில்லுயர்கேதகைமாதவி
புண்டரீகமலர்ப்பொய்கைநிலாவும்புகலியே. (௩)

திரியுமூன்றுபுரமும்மெரித்துத்திகழ்வானவர்க்
கரியபெம்மானரவக்குழையார்க்கிடமாவது
பெரியமாடத்துயருங்கொடியின்மிடைவால்வெயிற்
புரிவிலாததடம்பூம்பொழில்சூழ்தண்புகலியே. (௪)

ஏவிலாருஞ்சிலைப்பார்த்தனுக்கின்னருள்செய்தவர்
நாவிலுண்மூக்கரிவித்தநம்பர்க்கிடமாவது
மாவிலாருங்கனிவார்கிடங்கில்விழவாளைபோய்ப்
பூவிலாரும்புனற்பொய்கையில்வாழும்புகலியே. (௫)

தக்கன்வேள்விதகர்த்ததலைவன்றையலாளொடு
மொக்கவேயெம்முரவோனுறையும்மிடமாவது
கொக்குவாழைப்பலவின்கொழுந்தண்கனிகொன்றைகள்
புக்கவாசப்புன்னைபொன்றிரள்காட்டும்புகலியே- (௬-௭)

தொலைவிலாதவரக்கன்னுரத்தைத்தொலைவித்தவன்
றலையுந்தோளுந்நெரித்தசதுரர்க்கிடமாவது
கலையின்மேவும்மநத்தோரிரப்போர்க்குக்காப்பிலார்
பொலியுமந்தண்பொழில்சூழ்ந்தழகாரும்புகலியே. (அ)

கீண்டுபுக்கார்பறந்தாரயர்ந்தார்கேழலன்னமாய்க்
காண்டுமென்றார்கழல்பணியநின்றார்க்கிடமாவது
நீண்டநாரையிரையாரல்வாரநிறைசெறுவினிற்
பூண்டுமிக்கவ்வயலகாட்டுமந்தண்புகலியே. (௯)

தடுக்குடுத்துத்தலையைப்பறிப்பாரொடுசாக்கிய
ரிடுக்கணுய்ப்பாரிறைஞ்சாதவெம்மீசர்க்கிடமாவது
மடுப்படுக்குஞ்சுருதிப்பொருள்வல்லவர்வானுளோ
ரடுத்தடுத்துப்புகுந்தீண்டுமந்தண்புகலியே. (௧0)

எய்தவொண்ணாவிறைவனுறைகின்றபுகலியைக்
கைதவமில்லாக்கவுணியன்ஞானசம்பந்தன்சீர்
செய்தபத்துமிவைசெப்பவல்லார்சிவலோகத்தே
யெய்திநல்லவிமையோர்களேத்தவிருப்பார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இரண்டாந்திருமுறை

முற்றிற்று.

சிவமயம்.

(பகற்பண்.)

புறநீர்மை-காந்தாரம்-பியந்தைக்காந்தாரம்-கவுசிகம்-இந்தளம்-தக்கேசி-சாதாரி-நட்டபாடை-நட்டராகம்-பழம்பஞ்சுரம்-காந்தாரபஞ்சமம்.ஆக-௧௨.

(இராப்பண்.)

தக்கராகம்-பழந்தக்கராகம்-சீகாமரம்-கொல்லி-கொல்லிக்காவாணம்-வியாழக் குறிஞ்சி-மேகராகக்குறிஞ்சி-அந்தாளிக்குறிஞ்சி-குறிஞ்சி-ஆக-௯.

(பொதுப்பண்.)

செவ்வழி-செந்துருத்தி-திருத்தாண்டகம்.ஆக-௩.

ஆகப்பண்-௨௪.

மூன்றாந்திருமுறையின் - பதிக அட்டவணை.

பதிகப் பெயர்.	பக்கம்.
பண் - காந்தாரபஞ்சமம்.	
கோயில்	௩௫௩
திருப்பூந்தராய்	௩௫௪
ஸ்ரீபுகலி-நாலடிமேல்வைப்பு ...	௩௫௬
திருவாவடுதுறை-நாலடி மேல்வைப்பு ...	௩௫௭
திருப்பூந்தராய்-ஈரடி மேல்வைப்பு ...	௩௫௮
திருக்கொள்ளம்பூதூர்-ஈரடிமேல்வைப்பு ...	௩௬௦
திருப்புகலி	௩௬௧
திருக்கடவூர்த்திருவீரட்டம் ...	௩௬௨
திருவீழிமிழலை	௩௬௪
திருவிராமேச்சரம்	௩௬௫
திருப்புனவாயில்	௩௬௬
திருக்கோட்டாறு	௩௬௮
திருப்பூந்தராய் ...	௩௬௯
திருப்பஞ்ஞீலி	௩௭௦
திருவெண்காடு ...	௩௭௨
திருக்கொள்ளிக்காடு ...	௩௭௩
திருவிசயமங்கை ...	௩௭௪
திருவைகன்மாடக்கோயில் ...	௩௭௬
திருஅம்பர்ப்பெருந்திருக்கோயி ...	௩௭௭
திருப்பூவணம்	௩௭௮
திருக்கருக்குடி ...	௩௮௦
திருபஞ்சாக்கரப்பதிகம் ...	௩௮௧
திருவிற்கோலம் ...	௩௮௨
பண் - கொல்லி.	
திருக்கழுமலம் ...	௩௮௪
திருந்துதேவன்குடி ...	௩௮௫
திருக்கானப்பேர் ...	௩௮௬
திருச்சக்கரப்பள்ளி ...	௩௮௮
திருமழபாடி ...	௩௮௯
மேலைத்திருக்காட்டுப்பள்ளி ...	௩௯௦
திருஅரதைப்பெரும்பாழி ...	௩௯௨
திருமயேந்திரப்பள்ளி ...	௩௯௩
திருஏடகம் ...	௩௯௪
திருவுசாத்தானம் ...	௩௯௫
திருமுதுகுன்றம் ...	௩௯௬
திருத்தெளிகுடித்திட்டை ...	௩௯௮
திருக்காளத்தி ...	௩௬௯
திருப்பிரமபுரம் ...	௪௦௦
திருக்கண்டியூர்திருவீரட்டம் ...	௪௦௧
திருவாலவாய ...	௪௦௩
தனித்திருவிருக்குக்குறள் ...	௪௦௪
திருவேகம்பம-திருவிருக்குக்குற	௪[illegible]
பண்-கொல்லிக்கௌவாணம்.	
திருச்சிற்றேமம	௪௦௫
பண்-கௌசிகம்.	
சீகாழி	௪௦௭
திருக்கழிப்பாலை ...	௪௦௮
திருவாரூர்	௪௦௯
திருக்கருகாவூர் ...	௪௧௧
திருவாலவாய் ...	௪௧௨
திருமழபாடி	௪௧௩
நமச்சிவாயத்திருப்பதிகம் ...	௪௧௪
திருத்தண்டலைநீணெறி ...	௪௧௬
திருவாலவாய் ...	௪௧௭
திருவாலவாய்-திருவிராகம் ...	௪௧௮
திருவானைக்கா-திருவிராகம் ...	௪௧௯
திருப்பாசுரம்	௪௨௧
திருவான்மியூர் ...	௪௨௨
பண்-பஞ்சமம்.	
திருப்பிரமபுரம் ...	௪௨௩
திருவொற்றியூர் ...	௪௨௫
திருச்சாத்தமங்கை ...	௪௨௬
திருக்குடமூக்கு ...	௪௨௭
திருவக்கரை ...	௪௨௯
திருவெண்டுறை ...	௪௩௦
திருப்பனந்தாள் ...	௪௩௨
திருச்செங்காட்டங்குடி ...	௪௩௩
திருப்பெருவேளூர் ...	௪௩௪
திருக்கச்சிநெறிக்காரைக்காடு ...	௪௩௫

பதிகப்பெயர்.	பக்கம்.
திருவேட்டக்குடி ...	௪௩௭
பண் சாதாரி.	
திருப்பிரமபுரம்-வழிமொழித்திருவிராகம் ...	௪௩௮
ஸ்ரீகயிலாயம்-திருவிராகம் ...	௪௪௦
திருக்காளத்தி-திருவிராகம் ...	௪௪௧
திருமயிலாடுதுறை-திருவிராகம் ...	௪௪௨
திருவைகா-திருவிராகம் ...	௪௪௩
திருப்பாற்றுறை-திருவிராகம் ...	௪௪௫
திருப்பட்டீச்சரம்-திருவிராகம் ...	௪௪௬
திருக்கேதலூர்-திருவிராகம் ...	௪௪௮
திருச்சண்பைநகர்-திருவிராகம் ...	௪௪௯
திருவேதவனம்-திருவிராகம் ...	௪௫௦
திருவாணிகுழி-திருவிராகம் ...	௪௫௧
திருவேதிகுடி-திருவிராகம் ...	௪௫௩
திருக்கோகரணம்-திருவிராகம் ...	௪௫௪
திருவீழிமிழலை-திருவிராகம் ...	௪௫௬
திருத்தோணிபுரம்-திருவிராகம் ...	௪௫௭
திருவளிவணல்லூர்-திருவிராகம்	௪௫௮
திருநல்லூர்-திருவிராகம் ...	௪௬௦
திருப்புறவம்-திருவிராகம் ...	௪௬௧
திருவீழிமிழலை-திருவிராகம் ...	௪௬௨
திருச்சேறை-திருவிராகம் ...	௪௬௪
திருநள்ளாறு-திருவிராகம் ...	௪௬௫
திருவிளமர்-திருவிராகம் ...	௪௬௬
திருக்கொச்சைவயம் ...	௪௬௮
திருத்துருத்தியும்-திருவேள்விக்குடியும் ...	௪௬௯
திருவடகுரங்காடுதுறை ...	௪௭௦
திருநெல்வேலி ...	௪௭௨
திருஅம்பர்மாகாளம் ...	௪௭௩
திருவெங்குருத்திருமுக்கால் ...	௪௭௪
திருஇன்னம்பர்-திருமுக்கால் ...	௪௭௫
திருநெல்வெண்ணெய்-திருமுக்கால் ...	௪௭௬
திருச்சிறுகுடி-திருமுக்கால் ...	௪௭௬
திருவீழிமிழலை-திருமுக்கால் ...	௪௭௭
திருமுதுகுன்றம்-திருமுக்கால் ...	௪௭௮
பண்-பழம்பஞ்சுரம்.	
திருத்தோணிபுரம் ...	௪௭௮
திருஇராமேச்சரம் ...	௪௭௯
திருநாரையூர்	௪௮௧
திருவலம்புரம்	௪௮௨
திருப்பருப்பதம் ...	௪௮௩
திருக்கலிக்காமூர் ...	௪௮௫
திருவலஞ்சுழி ...	௪௮௬
திருநாரையூர்	௪௮௮
திருவாலவாய்-நாலடிமேல்வைப்பு ...	௪௮௯
திருக்கயிலாயமும்-திருவானைக்காவும்-திருமயேந்திரமும்-திருவாரூரும்கூடச்சதுக்கம்	௪௯௦
திருப்பிரமபுரம்-ஈரடி ...	௪௯௧
திருவீழிமிழலை-ஈரடி ...	௪௯௧
திருப்பல்லவனீச்சரம்-ஈரடி ...	௪௯௨
திருக்கழுமலம்-திருஇயமகம் ...	௪௯௩
திருவேகம்பம்-திருஇயமகம் ...	௪௯௪
திருவாலவாய்-திருஇயமகம் ...	௪௯௬
திருவீழிமிழலை-திருஇயமகம் ...	௪௯௭
ஸ்ரீகாழித்திருமாலைமாற்று ...	௪௯௮
பண்-புறநீர்மை.	
திருக்கழுமலம்	௪௯௯
திருவீழிமிழலை	௫௦௦
திருவாலவாய் ...	௫௦௨
திருப்பந்தணநல்லூர் ...	௫௦௩
திருஓமமாம்புலியூர் ...	௫௦௪
திருக்கோணமாமலை ...	௫௦௫
பண்-அந்தாளிக்குறிஞ்சி.	
திருவெள்ளடை ...	௫௦௬
திருநல்லூர்ப்பெருமணம் ...	௫௦௭

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

அடங்கன்முறைத்

தேவாரப்பதிகங்கள்.

மூன்றாந்திருமுறை.

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாயநறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும்பலசடைப்பனிகாலகதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்கவெமதொல்வினையே. (௧)

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்நுதல்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா
நட்டமேநவில்வாய்மறையோர்தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்பல
மிட்டமாயுறைவாயிவைமேவியதென்னைகொலோ. (௨)

நீலத்தார்கரியமிடற்றார்நல்லநெற்றிமேலுறைகண்ணினார்பற்று
சூலத்தார்சுடலைப்பொடிநீறணிவார்சடையார்
சீலத்தார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழக்
கோலத்தாயருளாயுனகாரணங்கூறுதுமே. (௩)

கொம்பலைத்தழகெய்தியநுண்ணிடைக்கோலவாண்மதிபோலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணாண்முலைமேவியவார்சடையான்
கம்பலைத்தெழுகாமுறுகாளையர்காதலாற்கழற்சேவடிகைதொழ
வம்பலத்துறைவானடியார்க்கடையாவினையே. (௪)

தொல்லையாரமுதுண்ணநஞ்சுண்டதோர்தூமணிமிடறாபகுவாயதோர்
பல்லையார்தலையிற்பலியேற்றுழல்பண்டரங்கா
தில்லையார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழ
வில்லையாம்வினைதானெரியம்மதிலெய்தவனே. (௫)

ஆகந்தோயணிகொன்றையாயனலங்கையாயமரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவாபலியேற்றுழல்பண்டரங்கா

மாகந்தோய்பொழின்மல்குசிற்றம்பலமன்னினையமழுவாளினையழ
னாகந்தோயரையாயடியாரைநண்ணாவினையே. (௬

சாதியார்பளிங்கினொடுவெள்ளியசங்கவார்குழையாய்திகழப்படும்
வேதியாவிகிர்தாவிழவாரணிதில்லைதன்னு
ளாதியார்க்கிடமாயசிற்றம்பலமங்கையாற்றொழவல்லடியார்களை
வாதியாதகலுநலியாமலிதீவினையே. (௭)

வேயினார்பணைத்தோளியொடாடலைவேண்டினாயவிகிர்தாவுயிர்கட்கமு
தாயினாயிடுகாட்டெரியாடலமர்ந்தவனே
தீயினார்கணையாற்புரமூன்றெய்தசெம்மையாயதிகழ்கின்றசிற்றம்பல
மேயினாய்கழலேதொழுதெய்துதுமேலுலகே. (௮)

தாரினார்விரிகொன்றையாய்மதிதாங்குநீள்சடையாயதலைவநல்ல
தேரினார்மறுகிற்றிருவாரணிதில்லைதன்னுட்
சீரினால்வழிபாடொழியாததோர்செம்மையாயழகாயசிற்றம்பல
மேரினாலமர்ந்தாயுனசீரடியேத்துதுமே. (௯)

வெற்றரையுழல்வார்துவராடையார்வேடத் தாரவர்களுரைகொள்ளன்மின்
மற்றவருலகின்னவலம்மவைமாற்றகில்லார்
கற்றவர்தொழுதேத்துசிற்றம்பலங்காதலாற்கழற்சேவடிகைதொழ
வுற்றவருலகின்னுறுதிகொள்வல்லவரே. (௧௦)

நாறுபூம்பொழினண்ணியகாழியுண்மறைவல்லஞானசம்பந்த
னூறுமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னு
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையாற்சொன்னபத்திவை
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்தராய் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினாள்பனிமாமதிபோன்முகத்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிபிரான்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. (௧)

காவியங்கருங்கண்ணினாள்கனித்தொண்டைவாய்கதிர்முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலா
டேவியுந்திருமேனியோர்பாகமாயொன்றிரண்டொருமூன்றொடுசேர்பதி
பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே. (௨)

பையராவருமல்குன்மெல்லியல் பஞ்சின்னேரடிவஞ்சிகொணுண்ணிடைத்
தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ்

செய்யெலாங்கழுநீர்கமலம்மலர்த்தேறலூறலிற்சேறுலராதநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே. (௩)

முள்ளிநாண்முகைமொட்டியல்கோங்கி னரும்புதேன்கொள்குரும்பைமூவா
துள்ளியனறபைம்பொற்கலசத்தியலொத்தமுலை [மருந்
வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின் மேவினார்பதிவீமருதண்பொழிற்
புள்ளினாதுயின்மல்கியபூந்தராயபோற்றுதுமே. (௪)

பண்ணியன்றெழுமென்மொழியாள்பகர் கோதையேர்திகழ்பைந்தளிர்மேனி
பெண்ணியன்றமொய்யம்பிற்பெருமாற்கிடம்பெய்வளையார் [யோர்
கண்ணியன்றெழுகாவிச்செழுங்கருநீலமலகியகாமருவாவிநற்
புண்ணியருறையும்பதிபூந்தராயபோற்றுதுமே. (௫)

வாணிலாமதிபோனுதலாண்மட மாழையொண்கணாள்வெண்டரளந்நகைப்
பாணிலாவியவின்னிசையார்மொழிப்பாவையொடுஞ் [சூழ்
சேணிலாத்திகழ்செஞ்சடையெம்மண்ணல சேர்வதுசிகரப்பெருங்கோயில்
போணிலாநுழையும்பொழிறபூந்தராயபோற்றுதுமே (௬)

காருலாவியவார்குழலாள்கயற்கண்ணினாள்புயற்காலொளிமின்னிடை
வாருலாவியமெனமுலையாண்மலைமாதுடனாய்
நீருலாவியசென்னியனமன்னிநிகருநாமமுநானகுநிகழ்பதி
போருலாவெயில்சூழபொழிறபூந்தராயபோற்றுதுமே. (௭)

காசைசேர்குழலாளகயலோதடங்கண்ணிகாமபணதோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலைமாதமருநதிருமார்பகலத
தீசனமேவுமிருங்கயிலையெடுத்தானையனறடர்ததாணிணைச்சேவடி.
பூசைசெயபவாசேர்பொழிறபூநதராயபோற்றுதுமே. (௮)

கொங்குசேர்குழலாணிழலவெண்ணகைக்கொவ்வைவாய்க்கொடியேரிடையா
பங்குசேர்திருமார்புடையார்படர்தீயுருவாய [ளுமை
மங்குல்வணணனுமாமலரோனுமயஙகநீண்டவர்வான்மிசைவந்தெழு
பொங்குநீரின்மிதநதநற்பூந்தராய்போறறுதுமே. (௯)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழலாளுமைகூறனைவேறுரையா
லலவைசொலலுவாாதேர மணுதர்களாக்கினுன்றனைநண்ணலுநல்குநற்
புலவர்தாமபுகழ்பொறபதிபூநதராயபோற்றுதுமே (௰)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலன கண்ணியோடண்ணல்சேர்விட
நதேனமர், பூம்பொழிறிகழபொறபதிபூந்தராயபோற்றுதுமென், றேம்புதன்
மையன்முததமிழநான்மறை ஞானசம்பந்தனெண்டமிழ்மாலைகொண், டாம்
படியிவையேத்தவலலார்க்கடையாவினையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீபுகலிநாலடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இயலிசையெனும்பொருணின்றிறமாம்புயலனமிடறுடைப்புண்ணியனே
கயலனவரிநெடுங்கண்ணியொடுமயலுலகடிதொழவமர்ந்தவனே
கலனாவதுவெண்டலைகடிபொழிற்புகலிதன்னு
ணிலனாடொறுமின்புறநிறைமதியருளினனே. (௧)

நிலையுறுமிடர்நிலையாதவண்ணமிலையுறுமலர்கள்கொண்டேத்துதும்யா
மலையினிலரிவையைவெருவவன்றோலலைவருமதகரியுரித்தவனே
யிமையோர்கணின்றுதொழவெழிறிகழ்பொழிறபுகலி
யுமையாளொடுமன்னினையுயர்திருவடியிணையே (௨)

பாடினையருமறைவரன்முறையாலாடினைகாணமுன்னருவந்ததிற
சாடினைகாலனைத்தயங்கொளிசோநீடுவன்பிறைமுடிநினமலனே
நினையேயடியார்தொழநெடுமதிறபுகலிநகர்
தனையேயிடமேவினைதவநெறியருளெமக்கே. (௩)

நிழறிகழ்மழுவினையானையின்றோலழறிகழ்மேனியிலணிந்தவனே
கழறிகழ்சிலம்பொலியலம்பநலமுழவொடுமருநடமுயற்றினனே
முடிமேன்மதிசூடினைமுருகமாபொழிற்புகலியு
ளடியாரவரேத்துறவழகொடுமிருந்தவனே. (௪)

கருமையினொளிகடனஞ்சமுண்டவுருமையினுலகுயிரளித்தநினறன
பெருமையைநிலத்தவர்பேசினலலாலருமையிலளப்பரிதாயவனே
யரவேரிடையாளொடுமலைகடன்மலிபுகலி
பொருள்சேர்தரநாடொறும்புவிமிசைபொலிந்தவனே (௫)

அடையரிமாவொடுவேங்கையின்றோல புடைபடவரைமிசைப்புனைந்தவனே
படைபுடைநெடுமதிலபரிசழித்தவிடையுடைக்கொடிமலிகுவேதியனே
விகிர்தபரமாநின்னைவிண்ணவர்தொழப்புகலித்
தகுவாய்மடமாதொடுந்தாள் பணிந்தவர்தமக்கே. (௬)

அடியவர்தொழுதெழவமரரேத்தச் செடியவல்வினைபலதீர்ப்பவனே
துடியிடையகலல்குற்றூமொழியைப்பொடியணிமார்புறப்புல்கினனே
புண்ணியாபுநிதாபுகரேறினைபுகலிந்நகர்
நண்ணினுய்கழலேத்திடநண்ணகிலாவினையே. (௭)

இரவொடுபகலதாமெம்மானின்னைப் பரவுதலொழிகிலன்வழியடியேன்
குரவிரிநறுங்கொன்றைகொண்டணிந்த வரவிரிசடைமுடியாண்டகையே
யனமென்னடையாளொடுமதிர்கடலிலங்கைமன்னனை
யினமார்தருதோளடர்த்திருந்தனைபுகலியுளே. (௮)

உருகிடவுவகைதந்துடலினுள்ளார் பருகிடுமமுதனபண்பினனே
பொருகடல்வண்ணனும்பூவுளானும்பெருகிடுமருளெனப்பிறங்கெரியா

யுயர்ந்தாயினிநீயென்னையொண்மலரடியிணைக்கீழ
வயந்தாங்குறவளர்மதிற்புகலிமனே. (௯)

கையினிலுண்பவர்கணிகைநோன்பர் செய்வனதவமலாச்செதுமதியார்
பொய்யவருரைகளைப்பொருளெனாத மெய்யவரடிதொழவிரும்பினனே
வியந்தாய்வெள்ளேற்றினைவிண்ணவர்தொழுபுகலி
யுயர்ந்தாய்பெருங்கோயிலுளொருங்குடனிருந்தவனே. (௧௦)

புண்ணியர்தொழுதெழுபுகலிந்நகர்விண்ணவரடிதொழவிளங்கினனை
நண்ணியஞானசம்பந்தன்வாய்மைபண்ணியவருந்தமிழ்பத்தும்வல்லார்
நடலையவையின்றிப்போய்நண்ணுவர்சிவனுலக
மிடராயினவின்றித்தாமெய்துவர்தவநெறியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறை-நாலடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய் தொடரினுமுனகழற்றொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சைமிடறினிலடக்கியவேதியனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௧)

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய் வீழினுமுனகழல்விடுவேனல்லேன்
றாழிளந்தடம்புனறயங்குசென்னி போழிளமதிவைத்தபுண்ணியனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௨)

நனவினுங்கனவினுநம்பாவுன்னைமனதினும்வழிபடன்மறவேனம்மான்
புனல்விரிநறுங்கொன்றைப்போதணிந்த கனலெரியனல்புல்குகையவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௩)

தும்மலோடருந்துயர்தோன்றிடினு மம்மலரடியலாலரற்றாதென்னாக்
கைமல்குவரிசிலைக்கணையொன்றினான் மும்மதிலெரியெழமுனிந்தவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே (௪)

கையதுவீழினுங்கழிவுறினுஞ் செய்கழலடியலாற்சிந்தைசெய்யேன்
கொய்யணிநறுமலர்குலாயசென்னி மையணிமிடறுடைமறையவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௫)

வெந்துயர்தோன்றியோர்வெருவுறினுமெந்தாயுன்னடியலாலேத்தாதென்னா
வைந்தலையரவுகொண்டரைக்கசைத்த சந்தவெண்பொடியணிசங்கரனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௬)

வெப்பொடுவிரவியோர்வினைவரினு மப்பாவுன்னடியலாலரற்றாதென்னா
வொப்புடையொருவனையுருவழிய வப்படியழலெழவிழித்தவனே

யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (எ)

பேரிடர்பெருகியோர்பிணிவரினுஞ் சீருடைக்கழலலரற்சிந்தைசெய்யே
னேருடையணிமுடியிராவணனை யாரிடர்படவரையார்த்தவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (அ)

உண்ணினும் பசிப்பினுமுறங்கினுநின் னொண்மலரடியலாலுரையாதென்னாக்
கண்ணனுங்கடிகமழ்தாமரைமேலண்ணலுமளப்பரிதாயவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே (கூ)

பித்தொடுமயங்கியோர்பிணிவரினு மத்தவுன்னடியலாலரற்றுதென்னாப்
புத்தருஞ்சமணரும்புறனுரைக்கப்பத்தர்கட்கருள்செயதுபயின்றவனே
யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமககில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே. (௧௦)

அலைபுனலாவடுதுறையமர்ந்த விலைநுனைவேற்படையெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போயவிண்ணவர்வியனுலகந்
நிலையாகமுன்னேறுவார்நிலமிசைநிலையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்தராய் ஈரடிமேல்வைப்பு - பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தக்கன்வேள்விதகர்த்தவன்பூந்தராய்
மிக்கசெம்மைவிமலன்வியன்கழற்
சென்றுசிந்தையில்வைக்கமெய்க்கதி
நன்றதாகியநம்பன்றானே. (௧)

புள்ளினம்புகழ்போற்றியபூந்தராய்
வெள்ளந்தாங்குவிகிர்தனடிதொழ
ஞாலத்திலுயர்வாருள்குநன்னெறி
மூலமாயமுதலவன்றானே. (௨)

வேந்தராயுலகாளவிருப்புறிற்
பூந்தராய்நகர்மேயவன்பொற்கழ

ணீதியாணினைந்தேத்தியுள்கிடச்
சாதியாவினையானதானே. (௩)

பூசுரர்தொழுதேத்தியபூந்தரா
யீசன்சேவடியேததியிறைஞ்சிடச்
சிந்தைநோயவைதீரநல்கிய
விந்துவார்சடையெம்மிறையே. (௪)

பொலிந்தவெண்பணிமேனியன்பூந்தராய்
மலிந்தபுந்தியராகிவணங்கிட
நுந்தமேலவினையோடவீடுசெ
யெந்தையாயவெம்மீசன்றானே (௫)

பூதஞ்சூழ்ப்பொலிந்தவன்பூந்தராய
நாதன்சேவடிநாளுநவின்றிட
நல்குநாடொறுமின்பநவிராபுனல
பில்குவார்சடைப்பிஞ்ஞகனே. (௬)

புற்றினாகமணிந்தவன்பூந்தராயப
பற்றிவாழும்பரமனைபபாடிடப்
பாவமாயினதீரப்பணித்திடுஞ்
சேவதேறியசெல்வன்றானே. (௭)

போதகத்துரிபோர்த்தவன்பூந்தராய
காதலித்தான்கழல்விரலொன்றினா
லரக்கனாற்றலழித்தவனுக்கருள்
பெருக்கிநின்றவெம்பிஞ்ஞகனே. (௮)

மத்தமானவிருவர்மருவொணா
வத்தனானவன்மேவியபூந்தரா
யாளதாகவடைந்துய்ம்மினும்வினை
யாளுமாறருள்செய்யுந்தானே. (௯)

பொருத்தமில்சமண்சாக்கியர்பொய்கடிந்
திருத்தல்செய்தபிரானிமையோர்தொழப்
பூந்தராயநகர்கோயில்கொண்டுகை
யேந்துமான்மறியெம்மிறையே. (௧௰)

புந்தியான்மிகநல்லவர்பூந்தரா
யந்தமில்லெம்மடிகளைஞானசம்
பந்தன்மாலைகொண்டேத்திவாழ்தும்
பந்தமார்வினைபாறிடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொள்ளம்பூதூர் ஈரடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே (க)

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே (உ)

குலையிஞர்தெங்குழுங்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (ங)

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்த்
தவளநீறணிதலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (ச)

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (ரு)

ஓடமவந்தணையுங்கொள்ளம்பூதூ
ராடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (சு)

ஆறுவந்தணையுங்கொள்ளம்பூதூ
ரேறுதாங்கியவிறைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (எ)

குரக்கினம்பயிலுங்கொள்ளம்பூதூ
ரரக்கனைச்செற்றவாதியையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (அ)

பருவராலுகளுங்கொள்ளம்பூதூ
ரிருவராகாண்பரியான்கழலுள்கச்
செலலவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௯)

நீரகக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேரமண்செற்றசெல்வனையுள்கச்
செலலவுந்துகசிந்தையார்தொழ
நலகுமாறருணம்பனே. (௧௦)

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண்ஞானசம்பந்த
னின்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வில்வவனேசுவரர் - தேவியார் - சவுந்தராம்பிகையம்மை.

இது-ஓடக்காரனில்லாமல அவ்வோடம் ஆறறிற்சென்று கரைசேரும்படி அருளிச்செயதபதிகம்.

திருப்புகலி - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிறறமபலம்.

கண்ணுதலானும்வெண்ணீற்றினானுங்கழலார்க்கவே
பண்ணிசைபாடநின்றாடினானும்பரஞ்சோதியும
புண்ணியநான்மறையோர்களேத்தும்புகலிந்நகர்ப்
பெண்ணினலலாளொடும்வீற்றிருந்தபெருமானன்றே. (௧)

சாம்பலோடுந்தழலாடினானுஞ்சடையின்மிசை
பாம்பினோடும்மதிசூடினானும்பசுவேறியும்
பூம்படுகலிளவாளைபாயும்புகலிநநகர்க்
காம்பனதோளியோடுமிருநதகடவுளன்றே. (௨)

கருப்புநலவார்சிலைக்காமன்வேவக்கடைகண்டானு
மருப்புநலலானையினீருரிபோர்ததமணாளனும்
பொருப்பனமாமணிமாடமோங்கும்புகலிந்நகர்
விருப்பினல்லாளொடும்வீற்றிருநதவிமலனன்றே. (௩)

அங்கையினங்கழலேந்தினானுமழகாகவே
கங்கையைச்செஞ்சடைசூடினானுங்கடலின்னிடைப்
பொங்கியநஞ்சமுதுண்டவனும்புகலிநகர்
மங்கைநல்லாளொடும்வீற்றிருந்தமணவாளனே. (௪)

சாமநல்வேதனுந்தக்கன்றன்வேள்விதகர்த்தானு
நாமநூறுயிரஞ்சொல்லிவானோர்தொழுநாதனும
பூமல்குதண்பொழின்மன்னுமந்தண்புகலிநகர்க்
சோமனமாதொடும்வீற்றிருந்தகுழகனன்றே (௫)

இரவிடையொள்ளெரியாடினானுமிமையோர்தொழச
செருவிடைமுப்புரந்தீயெரித்தசிவலோகனும
பொருவிடையொன்றுகந்தேறினானும்புகலிநகக
ரரவிடைமாதொடுவீற்றிருந்தவழகனன்றே. (௬)

சேர்ப்பதுதிண்சிலைமேவினானுந்திகழ்பாலன்மேல
வேர்ப்பதுசெய்தவெங்கூற்றுதைத்தானுமவேளவிப்புகை
போர்ப்பதுசெயதணிமாடமோங்கும்புகலிநகரப்
பார்ப்பதியோடுடன்வீற்றிருந்தபரமனன்றே (௭)

கன்னெடுமால்வரைக்கீழரக்கனிடர்கண்டானும
வின்னெடும்போர்விறல்வேடனாகிவிசயற்கொரு
பொன்னெடுங்கோலகொடுத்தானுமந்தண்புகலிநகக
ரன்னமன்னநடைமங்கையோடுமமர்ந்தானன்றே (௮)

பொன்னிறநான்முகன்பச்சையானென்றிவர்புகழ்ந்த
தன்னவளனாளெனகாண்பரியதழற்சோதியும
புன்னைபொன்றூதிரமலகுமந்தண்புகலிநகர்
மின்னிடைமாதொடுமவீற்றிருந்தவிமலனன்றே (௯)

பிண்டியும்போதியும்பேணுவார்பேசநின்பேணதநா
தொண்டருங்காதலசெய்சோதியாயசுடாசசோதியான்
புண்டரீகமலரப்பொய்கைசூழந்தபுகலிநகா
வண்டமர்கோதையோடிருந்தமணவாளனே. (௧0)

பூங்கமழ்கோதையோடிருந்தான்புகலிநகாப
பாங்கனஞானசம்பந்தன்சொன்னதமிழ்பதிதினை
யாங்கமர்வெய்தியவாதியாகவிசைவல்லவை
ரோங்கமரர்பதியோர்தொழச்செல்வதுமுண்மையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்த்திருவீரட்டம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிறறமபலம.

சடையுடையானுநெயயாடலானுஞ்சரிகோவண
வுடையுடையானுமையார்ந்தவொண்கண்ணுமைகேள்வனுங்
கடையுடைநன்னெடுமாடமோங்குங்கடவூர்தனுள்
விடையுடையண்ணவம்வீரட்டானத்தானலலனே (௧)

விரிதருவார்சடையானும்வெள்ளையெருதேறியும்
புரிதருமாமலர்க்கொன்றைமாலைபுனைந்தேத்தவே
கரிதருகாலனைச்சாடினானுங்கடவூர்தனுள்
விரிதருதொல்புகழ்வீரட்டானத்தானல்லனே. (௨)

நாதனுநள்ளிருளாடினானுநளிர்போதின்கட்
பாதனும்பாய்புலித்தோலினானுமபசுவேறியுங்
காதலர்தண்கடவூரினானுங்கலந்தேத்தவே
வேதமதோதியுமவீரட்டானத்தானல்லனே. (௩)

மழுவமர்செல்வனுமாசிலாதபலபூதமுன்
முழவொலியாழ்குழன்மொந்தைகொட்டம்முதுகாட்டிடைக்
கழலவளர்கால்குஞ்சித்தாடினானுங்கடவூர்தனுள்
விழவொலிமல்கியவீரட்டானத்தானல்லனே. (௪)

சுடர்மணிச்சுண்ணவெண்ணீற்றினானுஞ்சுழல்வாயதோர்
படமணிநாகமரைக்கசைத்தபரமேட்டியுங்
கடமணிமாவுரிததோலினானுங்கடவூர்தனுள்
விடமணிகண்டனுமவீரட்டானத்தானல்லனே (௫)

பண்பொலிநான்மறைபாடியாடிபபலவூர்கள்போ
யுண்பலிகொண்டுழலவானுமவானின்னொளிமல்கிய
கண்பொலிநெற்றிவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வெண்பொடிபூசியும்வீரட்டானத்தானல்லனே. (௬)

செவ்வழலாயநிலனாகிநின்றசிவமூர்த்தியு
முவ்வழலானமறையநதுமாயமுனிகேள்வனுங்
கவ்வழலவாயககதநாகமார்ததான்கடவூர்தனுள
வெவ்வழலேநதுகைவீரட்டானத்தானல்லனே (௭)

அடியிரண்டோருடம்பைஞ்ஞான்கிருபதுதோள்தச
முடியுடைவேந்தனைமூக்கழித்தமுதன்மூர்த்தியுங்
கடிகமழுமபொழில்சூழுமநதண்கடவூர்தனுள்
வெடிதலையேநதியும்வீரட்டானத்தானல்லனே (௮)

வரைகுடையாமழைதாங்கினானும்வளர்போதின்கட்
புரைகடிந்தோங்கியநான்முகத்தான்புரிந்தேத்தவே
கரைகடலசூழ்வையஙகாக்கின்றானுங்கடவூர்தனுள்
விரைகமழ்பூம்பொழில்வீரட்டானத்தானல்லனே. (௯)

தேரருமாசுகொண்மேனியாருந்தெளியாததோ
ராரருஞ்சொற்பொருளாகிநின்றவெமதாதியான்
காரிளங்கொன்றைவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வீரமுஞ்சேர்கழல்வீரட்டானத்தானல்லனே. (௧௦)

வெந்தவெண்ணீறணிவீரட்டானத்துறைவேந்தனை
யந்தணர்தங்கடலூருளானையணிகாழியான்
சந்தமெல்லாமடிசாத்தவல்லமறைஞானசம்
பந்தன்செந்தமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கேள்வியர்நாடொறுமோதுநல்வேதத்தர்கேடிலா
வேள்விசெயந்தணர்வேதியர்வீழிமிழலையார்
வாழியர்தோற்றமுங்கேடும்வைப்பாருயிர்கட்கெலா
மாழியர்தம்மடிபோற்றியென்பார்கட்கணியரே. (௧)

கல்வினற்பாவையோர்பாகத்தர்காதலித்தேத்திய
மெல்லினத்தார்பக்கன்மேவினர்வீழிமிழலையார்
நல்லினத்தார்செய்தவேள்விசெகுத்தெழுநாயிறறின
பல்லனைத்துந்தகர்த்தாரடியார்பாவநாசமே. (௨)

நஞ்சினையுண்டிருள்கண்டர்பண்டந்தகனைச்செற்ற
வெஞ்சினமூவிலைசூலத்தர்வீழிமிழலையா
ரஞ்சனக்கண்ணுமைபங்கினர்கங்கையங்காடிய
மஞ்சனச்செஞ்சடையாரென்னவல்லவினைமாயுமே. (௩)

கலையிலங்குமழுக்கட்டங்கங்கண்டிகைக்குண்டலம்
விலையிலங்கும்மணிமாடத்தர்வீழிமிழலையார்
தலையிலங்கும்பிறைதாழ்வடஞ்சூலந்தமருக
மலையிலங்கும்புனலேற்றவர்க்கும்மடியாருக்குமே. (௪)

பிறையுறுசெஞ்சடையார்விடையார்பிச்சைநச்சியே
வெறியுறுநாட்டலிதேர்ந்துழல்வீழிமிழலையார்
முறைமுறையாலிசைபாடுவாராடிமுன்றெண்டர்க
ளிறையுறைவாஞ்சியமல்லதெப்போதுமென்னுள்ளமே. (௫)

வசையறுமாதவங்கண்டுவரிசிலைவேடனாய்
விசையனுக்கன்றருள்செய்தவர்வீழிமிழலையா
ரிசைவரவிட்டியல்கேட்பித்துக்கல்லவடமிட்டுத்
திசைதொழுதாடியும்பாடுவார்சிந்தையுட்சேர்வரே. (௬)

சேடர்விண்ணோர்கட்குத்தேவர்நன்மூவிருதொன்னூலர்
வீடர்முத்தீயர்நால்வேதத்தர்வீழிமிழலையார்
காடரங்காவுமைகாணவண்டத்திமையோர்தொழ
நாடகமாடியையேத்தவல்லார்வினைநாசமே. (௭)

ஏருடைநவில்கொன்றையந்தாரினானுஞ்சுடர்வெண்மழுப்
படைவலனேந்தியபாலனெய்யாடும்பரமனன்றே. (௩)

சங்கவெண்டோடணிகாதினானுஞ்சடைதாழவே
யங்கையிலங்கழலேந்தினானுமழகாகவே
பொங்கரவம்மணிமார்பினானும்புனவாயிலிற்
பைங்கண்வெள்ளேற்றண்ணலாகிநின்றபரமேட்டியே. (௪)

கலிபடுதண்கடனஞ்சமுண்டகறைக்கண்டனும்
புலியதள்பாம்பரைச்சுற்றினானும்புனவாயிலி
னொலிதருதண்புனலோடெருக்குமதமத்தமு
மெலிதருவெண்பிறைசூடிநின்றவிடையூர்தியே. (௫)

வாருறுமென்முலைமங்கைபாடநடமாடிப்போய்க்
காருறுகொன்றைவெண்டிங்களானுங்கனலவாயதோர்
போருறுவெண்மழுவேந்தினானும்புனவாயிலிற்
சீருறுசெல்வமல்கவிருந்தசிவலோகனே (௬)

பெருங்கடனஞ்சமுதுண்டுகந்துபெருங்காட்டிடைத்
திருந்திளமென்முலைத்தேவிபாடநடமாடிப்போய்ப்
ருந்தலர்தம்புரமூன்றுமெய்துபுனவாயிலி
னிருந்தவன்றன்கழலேத்துவார்கட்கிடரிலையே. (௭)

மணமிகுவேலனவ்வாளரக்கன்வலியொல்கிட
வனமிகுமாலவரையாலடர்த்தானிடமணிய
வினமிகுதொல்புகழ்பாடலாடலெழின்மல்கிய
புனமிகுகொன்றையந்தென்றலார்ந்தபுனவாயிலே. (௮)

திருவளர்தாமரைமேவினானுந்திகழ்பாற்கடற்
கருநிறவண்ணனுங்காண்பரியகடவுளிடந்
நரலசுரிசங்கொடுமிப்பியுந்திநலமல்கிய
பொருகடல்வெண்டிரைவந்தெறியும்புனவாயிலே. (௯)

போதியெனப்பெயராயினாரும்பொறியிலசமண்
சாதியுரைப்பனகொண்டயர்ந்துதளர்வெய்தன்மின்
போதவிழ்தண்பொழின்மல்குமந்தண்புனவாயிலில்
வேதனைநாடொறுமேத்துவார்மேல்வினைவீடுமே (௧௦)

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலைக்
கற்றவர்தாந்தொழுதேத்திநின்றகடற்காழியா
னற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்நன்மையா
லற்றமிலபாடல்பத்தேத்தவல்லாரருள்சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - புனவாயிலீசுவரர் - தேவியார் - கருணையீசுவரியம்மை.

திருக்கோட்டாறு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வேதியர்விண்ணவரோத்தநின்றான்விளங்குமறை
யோதியவொண்பொருளாகிநின்றானொளியார்கிளிக்
கோதியதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளாதியையேநினைந்தேத்தவல்லார்க்கல்லலில்லையே. (க)

ஏலமலர்க்குழன்மங்கைநல்லாளிமவான்மகள்
பாலமருந்திருமேனியெங்கள்பரமேட்டியுங்
கோலமலர்ப்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ளாலநீழற்கீழிருந்தறஞ்சொன்னவழகனே (உ)

இலைமல்குசூலமொன்றேந்தினானுமிமையோர்தொழ
மலைமல்குமங்கையோர்பங்கனுமம்மணிகண்டனுங்
குலைமல்குதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளலைமல்குவார்சடையேற்றுகந்தவழகனன்றே. (௩)

ஊனமரும்முடலுள்ளிருந்தவுமைபங்கனும்
வானமரும்மதிசென்னிவைத்தமறையோதியுந்
தேனமருமலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுட்
டானமரும்விடையானுமெங்கடலைவனன்றே. (௪)

வம்பமருமலர்க்கோதைபாகமகிழ்மைந்தனுஞ்
செம்பவளத்திருமேனிவெண்ணீறணிசெல்வனுங்
கொம்பமருமலர்வண்டுகெண்டுந்திருக்கோட்டாற்றுண்
ணம்பனெனப்பணிவார்க்கருள்செய்யெங்கணாதனே. (௫)

பந்தமரும்விரன்மங்கைநல்லாளொருபாகமா
வெந்தமரும்பொடிப்பூசவல்லவிகிர்தன்மிகுங்
கொந்தமரும்மலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுள்
ளந்தணனைநினைந்தேத்தவல்லார்க்கில்லையல்லலே. (௬)

துண்டமரும்பிறைசூடிநீடுசுடர்வண்ணனும்
வண்டமருங்குழன்மங்கைநல்லாளொருபங்கனுந்
தெண்டிரைநீர்வயல்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ளண்டமுமெண்டிசையாகிநின்றவழகனன்றே. (௭)

இரவமருநிறம்பெற்றுடையவிலங்கைக்கிறை
கரவமரக்கயிலையெடுத்தான்வலிசெற்றவன்
குரவமரும்மலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுள்
ளரவமருஞ்சடையானடியார்க்கருள்செய்யுமே. (௮)

ஓங்கியநாரணனான்முகனும்முணராவகை
நீங்கியதீயுருவாகிநின்றநிமலன்னிழற்

கோங்கமரும்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ளாங்கமரும்பெருமானமரர்க்கமரனன்றே.. (௯)

கடுக்கொடுத்ததுவராடையர்காட்சியில்லாததோர்
தடுக்கிடுக்கிச்சமணே திரிவார்கட்குத்தன்னருள்
கொடுக்ககில்லாக்குழகன்னமருந்திருக்கோட்டாற்றுள்
ளிடுக்கணின்றித்தொழுவாரமரர்க்கிறையாவரே. (௧0)

கொடியுடைமால்விடையூர்தியினன்றிருக்கோட்டாற்றுள்
ளடிகழலார்க்கநின்றாடவல்லவருளாளனைக்
கடிகமழும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்சொற்
படியிவைபாடிநின்றாடவல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஐராபதேசுவரர்-தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பூந்தராய்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னனவெயிறுடைவிரவலாாகடந
துன்னியபுரமுகச்சுளிநதொனமையா
புன்னையம்பொழிலணிபூநதராயநக
ரன்னமன்னநடையரிவைபஙகரோ (௧)

மூதணிமுப்புரத்தெண்ணிலோர்களை
வேதணிசரததினலவீட்டினாரவா
போதணிபொழிலமாபூநதராயநகாத
தாதணிகுழலுமைதலைவர்காண்மினே. (௨)

தருக்கியதிரிபுரத்தவாகடாமுகப்
பெருக்கியசிலைதனைப்பிடிததபெற்றியா
பொருகடல்புடைதருபூந்தராயநகாக்
கருக்கியகுழலுமைகணவர்காண்மினே. (௩)

நாகமும்வரையுமே நாணும்வில்லுமா
மாகமார்புரங்களை மறித்தமாண்பினா
பூகமாாபொழிலணிபூந்தராய்நகர்ப்
பாகமர்மொழியுமைபங்கர்காண்மினே. (௪)

வெள்ளெயிறுடையவவ்விரவலார்களூ
ரொள்ளெரியூட்டியவொருவனாரொளிர்
புள்ளணிபுறவினிற்பூந்தராய்நகர்க்
கள்ளணிகுழலுமைகணவர்காண்மினே. (௫)

துங்கியருனவர்தோற்றமாநக
ரங்கியில்வீழ்தரவாய்ந்தவம்பினர்
பொங்கியகடலணிபூந்தராய்நக
ரங்கயலனகணியரிவைபங்கரோ. (௬)

அண்டர்களுய்ந்திடவவுணர்மாய்தரக்
கண்டவர்கடல்விடமுண்டகண்டனூர்
புண்டரீகவ்வயற்பூந்தராய்நகர்
வண்டமர்குழலிதன்மணாளர்காண்மினே. (௭)

மாசினவரக்கனைவரையின்வாட்டிய
காய்சினவெயில்களைக்கறுத்தகண்டனூர்
பூசுரர்பொலிதருபூந்தராய்நகர்க்
காசைசெய்குழலுமைகணவர்காண்மினே (௮)

தாமுகமாக்கியவசுரர்தம்பதி
வேமுகமாக்கியவிகிர்தர்கண்ணனும்
பூமகனறிகிலாப்பூந்தராய்நகர்க்
கோமகனெழில்பெறுமரிவைகூறரோ (௯)

மூத்தரவசுரர்கண்மொய்த்தமுப்புர
மத்தருமழலிடைவீட்டினூரமண்
புத்தருமறிவொணாப்பூந்தராய்நகர்க்
கொத்தணிகுழலுமைகூறர்காண்மினே. (௧0)

புரமெரிசெய்தவர்பூந்தராய்நகர்ப்
பரமலிகுழலுமைநங்கைபங்கரைப்
பரவியபந்தன்மெய்ப்பாடலவல்லவர்
சிரமலிசிவகதிசேர்தறிண்ணமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞீலி - பண் - காந்தாரபஞ்சமம.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலரடிகள்காடலா
லோரிடங்குறைவிலருடையர்கோவணந
நீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயிலபைஞ்ஞீலியே (௧)

மருவிலார்திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலா
னுருவிலான்பெருமையையுளங்கொளாதவத
திருவிலாரவர்களைத்தெருட்டலாகுமே. (௨)

அஞ்சுரும்பணிமலரமுதமாந்தித்தேன்
பஞ்சுரம்பயிற்றும்பைஞ்ஞீலிமேவலான்

வெஞ்சுரந்தனிலுமைவெருவவந்ததோர்
குஞ்சரம்படவுரிபோர்த்தகொள்கையே. (௫)

கோடல்கள்புறவணிகொல்லைமுல்லைமேற்
பாடல்வண்டிசைமுரல்பயில்பைஞ்ஞீலியார்
பேடலராணலர்பெண்ணுமல்லதோ
ராடலையுகந்தவெம்மடிகள்வல்லரே. (௬)

விழியிலாநகுதலைவிளங்கிளம்பிறை
சுழியிலார்வருபுனற்சூழுருங்கிஞன்
பழியிலார்பரவுபைஞ்ஞீலிபாடலான்
கிழியிலார்கேண்மையைக்கெடுக்கலாகுமே. (௭)

விடையுடைக்கொடிவலனேந்திவெண்மழுப்
படையுடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவலான்
றுடியிடைக்கலையல்குலாளோர்பாகமாச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனலலனே. (௮)

தூயவன்றூயவெண்ணீறுமேனிமேற்
பாயவன்பாயபைஞ்ஞீலிகோயிலா
மேயவன்வேய்புரைதோளிபாகமா
வேயவனெனைச்செயுந்தன்மையென்கொலோ. (௭)

தொத்தினதோண்முடியுடையவன்றலை
பத்தினைநெரித்தபைஞ்ஞீலிமேவலான்
முத்தினைமுறுவல்செய்தாளோர்பாகமாப்
பொத்தினன்றிருந்தடிபொருந்திவாழ்மினே. (௮)

நீருடைப்போதுறைவானுமாலுமாய்ச்
சீருடைக்கழலடிசென்னிகாண்கிலர்
பாருடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவிய
தாருடைக்கொன்றையந்தலைவர்தன்மையே. (௯)

பீலியார்பெருமையும்பிடகர்நூன்மையுஞ்
சாலியாதவர்களைச்சாதியாததோர்
கோலியாவருவரைகூட்டியெய்தபைஞ்
ஞீலியான்கழலடிநினைந்துவாழ்மினே. (௰)

கண்புனல்விளைவயற்காழிக்கற்பகந்
நண்புணருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவா
ருண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. (௧௧)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-நீலகண்டேசுவரர்-தேவியார்-விசாலாட்சியம்மை.

திருவெண்காடு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரம்மறையவைவானவரொடு
மிந்திரன்வழிபடநின்றவெம்மிறை
வெந்தவெண்ணீற்றர்வெண்காடுமேவிய
வந்தமுமுதலுமுடையடிகளல்லரோ. (௧)

படையுடைமழுவினர்பாய்புலித்தோ
லுடைவிரிகோவணமுகந்தகொள்கையர்
விடையுடைக்கொடியவெண்காடுமேவிய
சடையிடைப்புனல்வைத்தசதுரரல்லரோ. (௨)

பாலொடுநெய்தயிர்பலவுமாடுவர்
தோலொடுநூலிழைதுதைந்தமார்பினர்
மேலவர்பரவுவெண்காடுமேவிய
வாலமதமர்ந்தவெம்மடிகளல்லரோ (௩)

ஞாழலுஞ்செருந்தியுநறுமலர்ப்புன்னையுந்
தாழைவெண்குருகயறயங்குகானலில்
வேழமதுரித்தவெண்காடுமேவிய
யாழினதிசையுடையிறைவரல்லரோ (௪)

பூதங்கள்பலவுடைப்புநிதர்புண்ணிய
ரேதங்கள்பலவிடர்தீர்க்குமெம்மிறை
வேதங்கண்முதல்வர்வெண்காடுமேவிய
பாதங்கடொழநின்றபரமரல்லரோ. (௫)

மண்ணவர்விண்ணவர்வணங்கவைகலு
மெண்ணியதேவர்களிறைஞ்சுமெம்மிறை
விண்ணமர்பொழில்கொள்வெண்காடுமேவிய
வண்ணலையடிதொழவல்லலில்லையே. (௬)

நயர்தவர்க்கருள்பலநல்கியிந்திரன்
கயந்திரம்வழிபடநின்றகண்ணுதல
வியந்தவர்பரவுவெண்காடுமேவிய
பயந்தருமழுவுடைப்பரமரல்லரோ. (௭)

மலையுடனெடுத்தவல்லரக்கனீண்முடி
தலையுடனெரித்தருள்செய்தசங்கரர்
விலையுடைநீற்றர்வெண்காடுமேவிய
வலையுடைப்புனல்வைத்தவடிகளல்லரோ. (௮)

ஏடவிழ்நறுமலரயனுமாலுமாய்த்
[illegible]ங்கெரிங்கவர்கோகிற்கிலர்

வேடமதுடையவெண்காடுமேவிய
வாடலமர்ந்தவெம்மடிகளல்லரோ. (௯)

போதியர்பிண்டியர்பொருத்தமில்லிக
ணீதிகள்சொல்லியுநினையகிற்கிலர்
வேதியர்பரவுவெண்காடுமேவிய
வாதியையடிதொழவல்லலில்லையே. (௧0)

நல்லவர்புகலியுண்ஞானசம்பந்தன்
செல்வனெஞ்சிவனுறைதிருவெண்காட்டின்மேற்
சொல்லியவருந்தமிழ்பததும்வலலவ
ரல்லலோடருவினையறுதலாணையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருக்கொள்ளிக்காடு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிறறம்பலம.

நிணம்படுசுடலையினீறுபூசிநின்
றிணங்குவர்பேய்களோடிடுவர்மானட
முணங்கலவெண்டலைதனிலுண்பராயினுங்
குணம்பெரிதுடையர்நங்கொள்ளிக்காடரே. (௧)

ஆற்றனல்லடியிணையலர்கொண்டேத்துவான்
சாற்றியவந்தணன்றகுதிகண்டநாண்
மாற்றலனுகிமுன்னடர்த்துவந்தணை
கூற்றினையுதைத்தனர்கொள்ளிக்காடரே. (௨)

அத்தகுவானவர்க்காகமால்விடம்
வைத்தவர்மணிபுரைகண்டத்தினுளே
மத்தமும்வன்னியுமலிந்தசென்னிமேற
கொத்தலர்கொன்றையர்கொள்ளிக்காடரே. (௩)

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொள்கையினவின்றசெங்கைய
ராவணங்கொண்டெமையாள்வராயினுங்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே. (௪)

வாரணிவனமுலைமங்கையாளொடுஞ்
சீரணிதிருவுருத்திகழ்ந்தசென்னியர்
நாரணிசிலைதனுனனுகலாரெயில்
கூரெரிகொளுவினர்கொள்ளிக்காடரே. (௫)

பஞ்சுதோய்மெல்லடிப்பாவையாளொடு
மஞ்சுதோய்கயிலையுண்மகிழ்வர்நாடொறும்

வெஞ்சினமருப்பொடுவிரையவந்தடை
குஞ்சரமுரித்தனர்கொள்ளிக்காடரே. (சு)

இறையுறுவரிவளையிசைகள்பாடிட
வறையுறுகழலடியார்க்கவாடுவர்
சிறையுறுவிரிபுனல்சென்னியின்மிசைக்
குறையுறுமதியினர்கொள்ளிக்காடரே. (எ)

எடுத்தனன்கையிலையையியல்வலியினு
லடர்த்தனர்திருவிரலாலலறிடப்
படுத்தனரொன்றவன்பாடல்பாடலுங்
கொடுத்தனர்கொற்றவாள்கொள்ளிக்காடரே. (அ)

தேடினாயன்முடிமாலுஞ்சேவடி
நாடினாரவரொன்றுநணுககிற்றிலர்
பாடினார்பரிவொடுபத்தர்சித்தமுங்
கூடினார்க்கருள்செய்வர்கொள்ளிக்காடரே. (கூ)

நாடிநின்றறிவிலாணிலிகள்சாக்கிய
ரோடிமுன்னோதியவுரைகண்மெய்யல
பாடுவர்நான்மறைபயின்றமாதொடுங்
கூடுவர்திருவுருக்கொள்ளிக்காடரே. (க0)

நற்றவர்காழியுண்ஞானசம்பந்தன்
குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடரைச்
சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக்
கற்றவர்கழலடிகாணவல்லரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அக்கினீசுவரர் - தேவியார் - பஞ்சினுமெல்லடியம்மை.

திருவிசயமங்கை-பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
யரவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாங்
குரவமர்சுரபுன்னைகோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே. (க)

கீதமுன்னிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைப்புரிதர்பொன்னகர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. (உ)

அக்கரவணியினரரிவைபாகமாத்
தொக்கநல்விடையுடைச்சோதிதொன்னகர்

தக்கநல்வானவர்தலைவர்நாடொறு
மிக்கவர்தொழுதெழுவிசயமங்கையே. (௩)

தொடைமலியிதழியுந்துன்னெருக்கொடு
புடைமலிசடைமுடியடிகள்பொன்னகர்
படைமலிமழுவினர்பைங்கண்மூரிவெள்
விடைமலிகொடியணல்விசயமங்கையே. (௪)

தோடமர்காதினன்றுதைந்தநீற்றினா
னேடமர்கோதையோடினிதமர்விடங்
காடமர்மாகரிகதறப்போர்த்ததோர்
வேடமதுடையணல்விசயமங்கையே. (௫)

மைப்புரைகண்ணுமைபங்கன்வண்டழ
லொப்புரைமேனியெம்முடையவன்னக
ரப்பொடுமலர்கொடங்கிறைஞ்சிவானவர்
மெய்ப்படவருள்புரிவிசயமங்கையே. (௬)

இரும்பொனின்மலைவிலினெரிசரத்தினால்
வரும்புரங்களைப்பொடிசெய்தமைந்தனூர்
சுரும்பமர்கொன்றையுந்தூயமத்தமும்
விரும்பியசடையணல்விசயமங்கையே. (௭)

உளங்கையிலிருபதோடொருபதுங்கொடாங்
களந்தரும்வரையெடுத்திடுமரக்கனைத்
தளர்ந்துடனெரிதரவடர்த்ததன்மையன்
விளங்கிழையொடும்புகுவிசயமங்கையே. (௮)

மண்ணினையுண்டவன்மலரின்மேலுறை
யண்ணல்கடமக்களப்பரியவத்தனூர்
தண்ணருஞ்சாந்தமும்பூவுநீர்கொடு
விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையே. (௯)

கஞ்சியுங்கவளமுண்கவணர்கட்டுரை
நஞ்சினுங்கொடியனநமர்கடேர்கிலார்
செஞ்சடைமுடியுடைத்தேவனன்னகர்
விஞ்சையர்தொழுதெழுவிசயமங்கையே. (௧0)

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
புண்ணியர்சிவகதிபுகுதறிண்ணமே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-விசயநாதேசுவரர் - தேவியார்-மங்கைநாயகியம்மை.

திருவைகன்மாடக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமதியுடைமறிதோன்றுகையின
ரிளமதியணிசடையெந்தையாரிட
முளமதியுடையவர்வைகலோங்கிய
வளமதிதடவியமாடக்கோயிலே. (௧)

மெய்யகமிளிரும்வெண்ணூலர்வேதியர்
மையகண்மலைமகளோடும்வைகிடம்
வையகமகிழ்தரவைகன்மேற்றிசை
செய்யகண்வளவன்முன்செய்தகோயிலே (௨)

கணியணிமலர்கொடுகாலைமாலையும
பணியணிபவர்க்கருள்செய்தபான்மையா
தணியணியுமையொடுதாமுந்தங்கிட
மணியணிகிளர்வைகன்மாடக்கோயிலே (௩)

கொம்பியல்கோதைமுன்னஞ்சக்குஞ்சரத்
தும்பியதுரிசெய்ததுங்கர்தங்கிடம
வம்பியல்சோலைசூழ்வைகன்மேற்றிசைச
செம்பியன்கோச்செங்கணான்செய்கோயிலே. (௪)

விடமடைமிடற்றினர்வேதநாவின
மடமொழிமலைமகளோடும்வைகிட
மடவனநடைபயில்வைகன்மாநகர்க்
குடதிசைநிலவியமாடக்கோயிலே. (௫)

நிறைபுனல்பிறையொடுநிலவுநீள்சடை
யிறையவருறைவிடமிலங்குமூவெரி
மறையொடுவளர்வுசெயவாணர்வைகலிற
றிறையுடைநிறைசெல்வன்செயதகோயிலே (௬)

எரிசரம்வரிசிலைவளையவேவிமுன்
றிரிபுரமெரிசெயதசெல்வர்சேர்விடம்
வரிவளையவர்பயில்வைகன்மேற்றிசை
வருமுகிலணவியமாடக்கோயிலே, (௭)

மலையனவிருபதுதோளினான்வலி
தொலைவுசெய்தருள்செய்தசோதியாரிட
மலர்மலிபொழிலணிவைகல்வாழ்வர்கள்
வலம்வருமலையனமாடக்கோயிலே. (௮)

மாலவன்மலரவனேடிமால்கொள
மாலெரியாகியவரதர்வைகிட

மாலைகொடணிமறைவாணர்வைகலின்
மாலனமணியணிமாடக்கோயிலே. (கூ)

கடுவுடைவாயினர்கஞ்சிவாயினர்
பிடருரைபேணிலார்பேணுகோயிலா
மடமுடையவர்பயிலவைகன்மாநகா
வடமலையனையநன்மாடக்கோயிலே. (க0)

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமர்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பததிவை
சிந்தைசெய்பவாசிவலோகஞ்சேர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-வைகனுதேசுவரா-தேவியார்-வைகலம்பிகையம்மை.

ருஅப் பர்ப்பெருந்திருக்கோயில்-பண்-காந்தார பஞ்சமம்.

திருச்சிற்றமபலம.

எரிதர வனலகையிலேந்தியெல்லியி
னரிதிரிகானிடைநட்டமாடுவா
ரரிசிலம்பொருபுனலம்பாமாநகர்க்
குரிசிலசெங்கண்ணவன்கோயிலசேர்வரே (க)

மையகண்மலைமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவ
ரையநன்பொருபுனலம்பர்ச்செம்பியா
செய்யகணிறைசெயதகோயிலசேர்வரே. (உ)

மறைபுனைபாடலர்சுடர்கைமலகவோா
பிறைபுனைசடைமுடிபெயரவாடுவ
ரறைபுனனிறைவயலம்பாமாநக
ரிறைபுனையெழிலவளரிடமதென்பரே. (௩)

இரவுமல்கிளமதிசூடியீடுயர்
பரவமலகருமறைபாடியாடுவ
ரரவமோடுயர்செம்மலமபாக்கொம்பலர்
மரவமல்கெழினகர்மருவிவாழ்வரே. (௪)

சங்கணிகுழையினர்சாமம்பாடுவா
வெங்கனலகனறாவீசியாடுவ
ரங்கணிவிழவமரம்பர்மாநகர்ச்
செங்கணவிறைசெய்தகோயிலசேர்வரே. (௫)

கழல்வளர்காலினர்சுடர்கைமல்கவோர்
சுழல்வளர்குளிர்புனல்சூடியாடுவ
ரழல்வளர்மறையவரம்பர்பைம்பொ
னிழல்வளர்நெடுநகரிடமதென்பரே. (௬)

இகலுறுசுடரெரியிலங்கவீசியே
பகலிடம்பலிகொளப்பாடியாடுவ
ரகலிடமலிபுகழம்பர்வம்பவிழ்
புகலிடநெடுநகர்புகுவர்போலுமே (௭)

எரியனமணிமுடியிலங்கைக்கோன்றன
கரியனதடக்கைகளடர்த்தகாலின
ரரியவர்வளநகரம்பரின்பொடு
புரியவர்பிரிவிலர்பூதஞ்சூழவே (௮)

வெறிகிளர்மலர்மிசையவனும்வெந்தொழிற
பொறிகிளரரவணைப்புல்குசெல்வனு
மறிகிலரரியவரம்பர்செம்பியர்
செறிகழலிறைசெய்தகோயில்சேர்வரே. (௯)

வழிதலைபறிதலைபவர்கள்கட்டிய
மொழிதலைபயனெனமொழியலவம்மின்றே
வழிதலைபொருபுனலம்பர்மாநக
ருழிதலையொழிந்துளருமையுந்தாமுமே (௧0)

அழகரையடிகளையம்பர்மேவிய
நிழறிகழ்சடைமுடிநீலகண்டரை
யுமிழ்திரையுலகினிலோதுவீர்கொண்மின
றமிழ்கெழுவிரகினன்றமிழ்செய்மாலையே திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரம்புரிநாதேசுவரர்-தேவியார்-பூங்குழலம்மை.

திருப்பூவணம் - பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மாதமர்மேனியனாகிவண்டொடு
போதமர்பொழிலணிபூவணத்துறை
வேதனைவிரவலராணமூன்றெயத
நாதனையடிதொழநன்மையாகுமே. (௧)

வானணிமதிபுல்குசென்னிவண்டொடு
தேனணிபொழிற்றிருப்பூவணத்துறை
யானநல்லருமறையங்கமோதிய
ஞானனையடிதொழநன்மையாகுமே. (௨)

வெந்துயருறுபிணிவினைகடீர்வதோர்
புந்தியர்தொழுதெழுபூவணத்துறை
யந்திவெண்பிறையினோடாறுசூடிய
நந்தியையடிதொழநன்மையாகுமே. (௩)

வாசநன்மலர்மலிமார்பில்வெண்பொடிப்
பூசனைப்பொழிறிகழ்பூவணத்துறை
யீசனைமலர்புனைந்தேத்துவார்வினை
நாசனையடிதொழநன்மையாகுமே. (௪)

குருந்தொடுமாதவிகோங்குமல்லிகை
பொருந்தியபொழிற்றிருப்பூவணத்துறை
யருந்திறலவுணர்தமரணமூன்றெய்த
பெருந்தகையடிதொழப்பீடையில்லையே. (௫)

வெறிகமழ்புன்னைபொன்ஞாழல்விம்மிய
பொறியரவணிபொழிற்பூவணத்துறை
கிறிபடுமுடையினன்கேடில்கொள்கைய
னறுமலரடிதொழநன்மையாகுமே. (௬)

பறைமல்குமுழவொடுபாடலாடலன்
பொறைமல்குபொழிலணிபூவணத்துறை
மறைமல்குபாடலன்மாதோர்கூறின
னறைமலர்கழறொழவல்லலில்லையே. (௭)

வரைதனையெடுத்தவலவரக்கனீண்முடி
விரறனிலடர்த்தவன்வெள்ளைநீற்றினன்
பொருபுனல்புடையணிபூவணந்தனைப்
பரவியவடியவர்க்கில்லைப்பாவமே (௮)

நீர்மல்குமலருறைவானுமாலுமாய்ச்
சீர்மல்குதிருந்தடிசேரகிற்கிலா
போர்மல்குமழுவினன்மேயபூவண
மேர்மல்குமலர்புனைந்தேத்தலின்பமே. (௯)

மண்டைகொண்டுழிதருமதியிறேரருங்
குண்டருங்குணம்பலபேசுங்கோலத்தா
வண்டமர்வளர்பொழின்மல்குபூவணங்
கண்டவரடிதொழுதேத்தல்கன்மமே. (௧௦)

புண்ணியர்தொழுதெழுபூவணத்துறை
யண்ணலையடிதொழுதந்தண்காழியு
ணண்ணியவருமறைஞானசம்பந்தன்
பண்ணியதமிழ்சொலப்பறையும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருக்குடி - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நனவிலுங்கனவிலுநாளுந்தன்னொளி
நினைவிலுமெனக்குவந்தெய்துநின்மலன்
கனைகடல்வையகந்தொழுகருக்குடி
யனலெரியாடுமெம்மடிகள்காண்மினே. (க)

வேதியன்விடையுடைவிமலனொன்னலர்
மூதெயிலெரியெழமுனிந்தமுக்கணன்
காதியல்குழையினனகருக்குடியம
ராதியையடிதொழவல்லலில்லையே. (உ)

மஞ்சுறுபொழில்வளமலிகருக்குடி
நஞ்சுறுதிருமிடறுடையநாதனா
ரஞ்சுரும்பார்குழலரிவையஞ்சவே
வெஞ்சுரந்தனில்விளையாடலென்கொலோ. (ங)

ஊனுடைப்பிறவியையறுக்கவுன்னுவீர்
கானிடையாடலான்பயில்கருக்குடிக்
கோனுயர்கோயிலைவணங்கிவைகலும்
வானவர்தொழுகழல்வாழ்த்திவாழ்மினே (ச)

சூடுவர்சடையிடைக்கங்கைநங்கையைக்
கூடுவருலகிடையையங்கொண்டொலி
பாடுவரிசைபறைகொட்டநட்டிரு
ளாடுவர்கருக்குடியண்ணல்வண்ணமே (ரு)

இன்புடையாரிசைவீணைபூணரா
வென்புடையாரொளிமேனிமேலெரி
முன்புடையார்முதலேத்துமன்பருக்
கன்புடையார்கருக்குடியெமண்ணலே (சா)

காலமுஞாயிறுந்தீயுமாயவர்
கோலமுமுடியரவணிந்தகொள்கையர்
சீலமுமுடையவர்திருக்கருக்குடிச்
சாலவுமினிதவருடையதன்மையே. (எ)

எறிகடல்புடைதழுவிலங்கைமன்னனை
முறிபடவரையிடையடர்த்தமூர்த்தியார்
கறைபடுபொழின்மதிதவழ்கருக்குடி
யறிவொடுதொழுமவராள்வர்நன்மையே. (அ)

பூமனுந்திசைமுகன்றானும்பொற்பமர்
வாமனனறிகிலாவண்ணமோங்கெரி

யாமெனவுயர்ந்தவனணிகருக்குடி
நாமனனினில்வரகினைதனன்மையே (கூ)

சாக்கியர்சமண்படுகையர்பொய்ம்மொழி
யாக்கியவுரைகொளேலருந்திருநமக்
காக்கியவரனுறையணிகருக்குடிப்
பூக்கமழ்கோயிலேபுடைபட்டுய்ம்மினே. (கo)

நகாழியான
வானவன்கருக்குடிமைநதனறன்ஞெளி
யானமெய்ஞ்ஞானசம்பநதன்சொலலிய
ஊனமின்மொழிவலாக்குயருமின்பமே (கக)

திருசசிற்றம்பலம.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-சற்குணலிங்கேசுவரா-தேவியார்-சர்வாலஙகிரதமின்னம்மை.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிறறம்பலம.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினுநாடொறும
வஞ்சகமற்றடிவாழ்த்தவநதகூற
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே (க)

மந்திரநான்மறையாகிவானவா
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியாக
கந்தியுண்மநதிரமஞ்செழுத்துமே. (உ)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடா
ஞானவிளக்கினையேற்றிநனபுலத
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிட
ரானகெடுப்பனவைந்தெழுத்துமே, (ங)

நல்லவர்தீயரொனுதுநச்சினர்
செல்லல்கெடச்சிவமுததிகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (ச)

கொங்கலர்வனமதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழிற்
றங்கரவின்படமஞ்சுந்தம்முடைய
யங்கையிலைவிரலஞ்செழுத்துமே. (ரு)

தும்மலிருமறொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (௬)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே, (௭)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனான்முகன்காணுதற்கொணாச
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (௯)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே (க௦)

நற்றமிழ்ஞானசம்பந்தன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிற்கோலம்: பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினான்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினானுறைவிடந்திருவிற்கோலமே, (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினனொருசரத்தினால்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (௨)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனார்வண்ணம்வண்ணவான்
பையரவல்குலாள்பாகமாகமுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (௫)

விதைத்தவன்முனிவருக்கறமுனகாலனை
யுதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (௬)

முந்தினான்மூவருண்முதல்வனாயினான்
கொந்துலாமலர்ப்பொழிற்கூகமேவினா
னந்திவான்பிறையினனடியர்மேலவினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே (௭)

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினன
மிகுத்தவன்மிகுதவாபுரங்களவெந்தறச
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே (௮)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந
தரித்தவன்றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே (எ-அ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையிலவைததவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே (௯)

சீர்மையில்சமணொடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்துநல்கிடுஞ்
சீரமையினனிடந்திருவிற்கோலமே, (௧௦)

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஂதமிழ்ஞானசம்பந்தன்
பாடலவல்லார்களுக்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

தொண்டைநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-புராந்தகேசுவரர்-தேவியார்-புராந்தரியம்மை.

இந்தத்தலம்-கூவமென வழங்கப்படுகின்றது.

திருக்கழுமலம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலைக்
கண்ணினல்லஃதுறுங்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. (௧)

போதையார்பொற்கிண்ணத்தடிசில்பொல்லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. (௨)

தொண்டணைசெய்தொழிற்றுயரறுத்துய்யலாம
வண்டணைகொன்றையான்மதுமலர்ச்சடைமுடிக
கண்டுணைநெற்றியான்கழுமலவளநகர்ப்
பெண்டுணையாகவோர்பெருந்தகையிருந்ததே. (௩)

அயர்வுளோமென்றுநீயசைவொழிநெஞ்சமே
நியர்வளைமுன்கையாணேரிழையவளொடு
கயல்வயல்குதிகொளுங்கழுமலவளநகர்ப்
பெயர்பலதுதிசெயப்பெருந்தகையிருந்ததே. (௪)

அடைவிலோமென்றுநீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினான்விண்ணவர்தொழுதெழு
கடையுயர்மாடமார்கழுமலவளநகர்ப்
பெடையனநடையொடும்பெருந்தகையிருந்ததே. (௫)

மற்றொருபற்றிலைநெஞ்சமேமறைபல
கற்றநல்வேதியர்கழுமலவளநகர்ச்
சிற்றிடைப்பேரல்குற்றிருந்திழையவளொடும்
பெற்றெனையாளுடைப்பெருந்தகையிருந்ததே (௬)

குறைவளைவதுமொழிகுறையொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையாணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப்பெருந்தகையிருந்ததே. (௭)

அரக்கனாருருவரையெடுத்தவனலறிட
நெருக்கினார்விரலினானீடியாழ்பாடவே
கருக்குவாளருள்செய்தான்கழுமலவளநகர்ப்
பெருக்குநீரவளொடும்பெருந்தகையிருந்ததே. (௮)

நெடியவன்பிரமனுநினைப்பரிதாயவ
ரடியொடுமுடியறியாவழலுருவினன்

கடிகமழ்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிடிநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (௯)

தாருறுதட்டுடைச்சமணர்சாக்கியர்கட
மாருறுசொற்களைந்தடியிணையடைந்துய்ம்மின்
காருறுபொழில்வளர்கழுமலவளநகர்ப்
பேரறத்தாளொடும்பெருந்தகையிருந்ததே, (௧௦)

கருந்தடந்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருந்துதேவன்குடி-பண்-சொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டிலிவைமந்திரங்களிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்களிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. (௧)

வீதிபோகாவனவினையைவிட்டிய்வன
வோதியோர்க்கப்படாப்பொருளையோர்விப்பன
தீதிறேவன்குடித்தேவர்தேவெய்திய
வாதியந்தமிலாவடிகள்வேடங்களே. (௨)

மானமாக்குவ்வனமாசுநீக்குவ்வன
வானையுள்கச்செலும்வழிகள்காட்டுவ்வன
தேனும்வண்டும்மிசைபாடுந்தேவன்குடி
யானஞ்சாடும்முடியடிகள்வேடங்களே. (௩)

செவிகளார்விப்பனசிந்தையுட்சேர்வன
கவிகள்பாடுவ்வனகண்குளிர்விப்பன
புவிகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
யவிகளுய்க்கப்படுமடிகள்வேடங்களே. (௪)

விண்ணுலாவுந்நெறிவீடுகாட்டுந்நெறி
மண்ணுலாவுந்நெறிமயக்கந்தீர்க்குந்நெறி
தெண்ணிலாவெண்மதிதீண்டுதேவன்குடி
யண்ணலானேறுடையடிகள்வேடங்களே. (௫)

பங்கமென்னப்படாபழிகளென்னப்படா
புங்கமென்னப்படாபுகழ்களென்னப்படுந்

திங்கடோயும்பொழினீண்டுதேவன்குடி
யங்கமாறுஞ்சொன்னவடிகளவேடங்களே. (௬)

கறைதலொன்றும்மிலைகருதவல்லாதமக்
குறையிலூனமிலையுலகினினமன்னுவர்
திரைகள்பொங்கப்புனலபாயுந்தேவன்குடி
யறையல்வெண்கோவணத்தடிகள்வேடங்களே. (௭)

உலகமுட்குந்திறலுடையரக்கன்வலி
விலகுபூதக்கணம்வெருட்டுமவேடத்தினன்
றிலகமாருமபொழில்சூழ்ந்ததேவன்குடி
யலர்தயங்கும்முடியடிகளவேடங்களே (௮)

துளக்கமில்லாதன தூயதோற்றத்தன
விளக்கமாக்குவ்வனவெறிவண்டாருமபொழி
றிளைக்குந்தேவன்குடித்திசைமுகனேடுமா
லளக்கவொண்ணாவண்ணத்தடிகளவேடங்களே (௯)

செருமருதண்டுவர்த்தேரமணாதர்க
ளொருமருவப்படாத்தொழுமபாதமுறைகொளே
திருமருவும்பொய்கைசூழ்ந்ததேவன்குடி
யருமருந்தாவனவடிகளவேடங்களே (௧0)

சேடர்தேவன்குடித்தேவர்தேவனறனை
மாடமோங்கும்பொழின்மலகுதண்காழியா
னூடவல்லஃந்தமிழ்ஞானசம்பந்தனற்
பாடல்பத்தும்வலலாக்கிலலையாமபாவமே திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கர்க்கடகேசுவரர்-தேவியார்-அருமருந்துநாயகியம்மை.

திருக்கானப்பேர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினாலவழிபடும்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணனின்
னடியலாலடைசரணுடையரோவடியரோ. (௧)

நுண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாப்பேணினான்
கண்ணுடைநெற்றியான்கருதியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதலகருமமே, (௨)

வாவிவாய்த்தங்கியநுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலை

நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றூட்டுவார்தொண்டரே. (௩)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாறகளைகிலார்குற்றமே. (௪)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டீறிலா
ஞானப்பேராயிரம்பேரினானண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (௫)

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினான்வெண்மதிசூடினான்
கள்ளமேசெய்கிலாக்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுளகுமென்னுள்ளமே. (௬)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (௭)

வாளினான்வேலினான்மாலவரையெடுத்ததிண்
டோளினானெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினான்கானப்பேர்தலையினாலவணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (௮)

சிலையினான்முப்புரந்தீயெழச்செற்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டோங்கினான்
கலையினார்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினாலவணங்குவார்தவமுடையார்களே. (௯)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பாணிலைப்பாவிகாண்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (௰)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவராலகுதிகொளுங்காழியா
னாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே, **திருச்சிற்றம்பலம்.**

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காளையீசுவரர்-தேவியார்-மகமாயியம்மை.

இந்தத்தலம், காளையார்கோவிலென்று வழங்கப்படுகின்றது.

———*———

திருச்சக்கரப்பள்ளி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினார்வெண்மழுப்பாய்புலித்தோலரை
யுடையினாருமையொருகூறனாரூர்வதோர்
விடையினார்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினாருறைவிடஞ்சக்கரப்பள்ளியே (௧)

பாடினாருமறைபனிமதிசடையிசைச்
சூடினார்படுதலைதுன்னெருக்கத்தொடு
நாடினாரிடுபலிநண்ணியோர்காலனைச்
சாடினார்வளநகர்சக்கரப்பள்ளியே (௨)

மின்னினார்சடைமிசைவிரிகதிர்மதியமும்
பொன்னினார்கொன்றையும்பொறிகிளரரவமுந்
துன்னினாருலகெலாந்தொழுதெழநான்மறை
தன்னினார்வளநகர்சக்கரப்பள்ளியே (௩)

நலமலிகொள்கையார்நான்மறைப்பாடலார்
வலமலிமழுவினார்மகிழுமூர்வண்டறை
மலர்மலிசலமொடுவந்திழிகாவிரி
சலசலமணிகொழிசக்கரப்பள்ளியே (௪)

வெந்தவெண்பொடியணிவேதியர்விரிபுன
லந்தியிலணிமலைமங்கையோடமருமூர்
கந்தமார்மலரொடுகாரகில்பன்மணி
சந்திநேரணைபுனற்சக்கரப்பள்ளியே (௫)

பாங்கினான்முப்புரம்பாழ்படவெஞ்சிலை
வாங்கினார்வானவர்தானவர்வணங்கிட
வோங்கினாருமையொருகூறொடுமொலிபுன
றாங்கினாருறைவிடஞ்சக்கரப்பள்ளியே (௬)

பாரினார்தொழுதெழுபரவுபல்லாயிரம்
பேரினார்பெண்ணொருகூறனார்பேரொலி
நீரினார்சடைமுடிநிறைமலர்க்கொன்றையந்
தாரினார்வளநகர்சக்கரப்பள்ளியே, (௭)

முதிரிலாவோர்பிறைசூடினார்முன்னநா
ளெதிரிலாமுப்புரமெரிசெய்தார்வரைதனா
லதிரிலாவல்லரக்கன்வலிவாட்டிய
சதிரினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (௮)

துணிபடுகோவணஞ்சுண்ணவெண்பொடியினர்
பணிபடுமார்பினர்பனிமதிச்சடையினர்

மணிவண்ணனவனொடு மலர்மிசையானையுந்
தணிவினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (௯)

உடம்புபோர்சீவரருண்டொழிற்சமணர்கள்
விடம்படுமுரையவைமெய்யலவிரிபுனல்
வடம்படுமலர்கொடுவணங்குமின்வைகலுந்
தடம்புனல்சூழ்தருசக்கரப்பள்ளியே. (௧௦)

தண்வயலுடையணிசக்கரப்பள்ளியெங்
கண்ணுதலவனடிகழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற
பண்ணியவிவைசொலப்பறையுமெய்யபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆலந்துறையீசுவரர் - தேவியார் - அல்லியங்கோதையம்மை.

சக்கரப்பள்ளியினிற்சார்ந்த அல்லியங்கோதை, சொற்கிரங்குமாலந்துறையானே என்னுஞ் சிவநாமம்பரித்துடையானு முணர்க.

திருமழபாடி - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டியகாருறு
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. (௧)

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்துமலர்துதையவே
மறையணிநாவினன்மாமழபாடியே. (௨)

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியுஞ்
செந்தமிழ்க்கீதமுஞ்சீரினால்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட
மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. (௩)

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன்
முத்தியாய்மூவரின்முதல்வனாய்நின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயு
மத்தனுறைவிடமணிமழபாடியே. (௪)

கங்கையார்சடையிடைக்கதிர்மதியணிந்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியனீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (௫)

பாலனாராருயிர்பாங்கினாலுணவருங்
காலனாருயிர்செகக்காலினாற்சாடினான்
சேலினார்கண்ணினாடன்னொடுஞ்சேர்விட
மாலினார்வழிபடுமாமழபாடியே. (௬)

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
யெண்ணிலார்முப்புரமெரியுணநகைசெய்தார்
கண்ணினாற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம்
மண்ணலாருறைவிடமணிமழபாடியே. (௭)

கரத்தினாற்கயிலையையெடுத்தகாரரக்கன
சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணெனா
விரத்தினாறைந்நரம்பெடுத்திசைபாடலும்
வரத்தினன்மருவிடமாமழபாடியே. (௮)

ஏடிலாமலர்மிசையயனெழின்மாலுமாய
நாடினார்க்கரியசீர்நாதனாருறைவிடம்
பாடெலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின்
மாடெலாமலகுசேர்மாமழபாடியே. (௯)

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணொடுசாக்கியர்
நெறிபிடித்தறிவிலாநீசர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாமழபாடியே (௧0)

ஞாலத்தாராதிரைநாளினானாடொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. திருச்சிற்றம்பலம்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கின
னூருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைநிமலர்தந்நீர்மையே (௧)

திருத்தனார்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யருத்தனாரழகமர்மங்கையோர்பாகமாப்
பொருத்தனார்கழலிணைபோற்றுதல்பொருளதே. (௨)

பண்ணினாருமறைபாடினார்நெற்றியோர்
கண்ணினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி

விண்ணினார்விரிபுனன்மேவினார்சடைமுடி
யண்ணலாரெம்மையாளுடையவெமமடிகளே. (௩)

பணங்கொளாகம்மரைக்கார்ப்பதுபலபலி
யுணங்கலோடுண்கலனுறைவதுகாட்டிடை
கணங்கள்கூடித்தொழுதேத்துகாட்டுப்பள்ளி
நிணங்கொள்சூலப்படைநிமலர்தநீர்மையே, (௪)

வரையுலாஞ்சந்தொடுவந்திழிகாவிரிக்
கரையுலாமிடுமணல்சூழ்ந்தகாட்டுப்பள்ளித
திரையுலாங்கங்கையுந்திங்களுஞ்சூடியங்
கரையுலாங்கோவணத்தடிகளவேடங்களே. (௫)

வேதனார்வெண்மழுவேந்தினாரங்கமுன்
னோதினாருமையொருகூறனாரொண்குழைக
காதினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுபபளளி
நாதனார்திருவடிநாளுநின்றேத்துமே. (௬)

மையினார்மிடறனார்மான்மழுவேந்திய
கையினார்கடிபொழிலசூழ்ந்தகாட்டுபபளளித
தையலோர்பாகமாததண்மதிசூடிய
வையனாரடிதொழவலலலொனறிலலையே (௭)

சிலைதனான்முப்புரஞ்செறறவனசீரினார்
மலைதனாலவல்லரக்கன்வலிவாட்டினான
கலைதனார்புறவணிமல்குகாடடுபபளளி
தலைதனால்வணங்கிடத்தவமதுவாகுமே. (௮)

செங்கண்மாறிகழ்தருமலருறைதிசைமுகன்
றங்கையாற்றொழுதெழத்தழலுருவாயினான
கங்கையார்சடையினன்கருதுகாட்டுப்பள்ளி
யங்கையாற்றொழுமவர்க்கலலலொன்றிலலையே. (௯)

போதியார்பிண்டியாரென்றவப்பொயயர்கள்
வாதினாலுரையவைமெய்யலவைகலுங
காரினார்கடிபொழிலசூழ்ந்தகாட்டுப்பள்ளி
யேரினார்தொழுதெழவின்பம்வந்தெய்துமே. (௧௦)

பொருபுனல்புடையணிபுறவநன்னகாமனன்
னருமறையவைவலலவணிகொள்சம்பந்தன்சொற
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்சொலப்பறையுமெயப்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தீயாடியப்பர்-தேவியார்-வார்கொண்டமுலையம்மை.

திருஅரதைப்பெரும்பாழி-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண்முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகநடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயிலலரதைப்பெரும்பாழியே, (௧)

கயல்சேல்கருங்கண்ணியர்நாடொறும்
பயலைகொள்ளப்பலிதேர்ந்துழல்பாண்மையா
ரியலைவானோர்நினைந்தோர்களுக்கெண்ணரும
பெயரர்கோயிலலரதைப்பெரும்பாழியே. (௨)

கோடல்சாலவ்வுடையார்கொலையானையின்
மூடல்சாலவ்வுடையார்முளிகானிடை
யாடல்சாலவ்வுடையாரழகாகிய
பீடர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௩)

மண்ணர்நீராரழலார்மலிகாலினார்
விண்ணர்வேதம்விரித்தோதுவார்மெய்ப்பொருள்
பண்ணர்பாடலுடையாரொருபாகமும
பெண்ணர்கோயிலலரதைபபெருமபாழியே. (௪)

மறையர்வாயின்மொழிமானொடுவெண்மழுக்
கறைகொள்சூலமுடைக்கையர்காரார்தருந
நறைகொள்கொன்றைநயந்தார்தருஞ்சென்னிமேற்
பிறையர்கோயிலலரதைப்பெருமபாழியே. (௫)

புற்றரவமபுலித்தோலரைககோவணந
தற்றிரவின்னடமாடுவர்தாழ்தரு
சுற்றமர்பாரிடந்தொலகொடியின்மிசைப
பெற்றர்கோயிலலரதைப்பெருமபாழியே. (௬)

துணையிறுத்தஞ்சுரிசங்கமர்வெண்பொடி
யிணையிலேற்றையுகந்தேறுவருமெரி
கணையினான்முப்புரஞ்செற்றவர்கையினிற்
பிணையர்கோயிலலரதைப்பெரும்பாழியே. (௭)

சரிவிலாவல்லரக்கன்றடந்தோளை
நெரிவிலாரவ்வடர்த்தார்நெறிமென்குழ
லரிவைபாகமமர்ந்தாரடியாரொடும்
பிரிவிலகோயில்லரதைப்பெரும்பாழியே. (௮)

வரியராவென்பணிமார்பினர்நீர்மல்கு
மெரியராவுஞ்சடைமேற்பிறையேற்றவர்

கரியமாலொடயன்காண்பரிதாகிய
பெரியர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௯)

நாணிலாதசமண்சாக்கியர்நாடொறு
மேணிலாதம்மொழியவ்வெழிலாயவர்
சேணுலாமும்மதிறீயெழச்செற்றவர்
பேணுகோயில்லரதைப்பெரும்பாழியே. (௧௦)

நீரினார்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினார்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினார்காழியுண்ஞானசம்பந்தன்செய்
யேரினார்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பரதேசுவரர்-தேவியார்-அலங்காரநாயகியம்மை.

திருமயேந்திரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

திரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமுங்
கரைதருமகிலொடுகனவளைபுகுதரும்
வரைவிலாலெயிலெய்த மயேந்திரப்பள்ளியு
ளரவரையழகனையடியிணைபணிமினே. (௧)

கொண்டல்சேர்கோபுரங்கோலமார்மாளிகை
கண்டலுங்கைதையுங்கமலமார்வாவியும்
வண்டுலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியிற்
செண்டுசேர்விடையினான்றிருந்தடிபணிமினே. (௨)

கோங்கிளவேங்கையுங்கொழுமலர்ப்புன்னையுந்
தாங்குதேன்கொன்றையுந்தகுமலர்க்குரவமு
மாங்கரும்பும்வயன்மயேந்திரப்பள்ளியு
ளாங்கிருந்தவன்கழலடியிணைபணிமினே. (௩)

வங்கமார்சேணுயர்வருகுறியான்மிகு
சங்கமாரொலியகிற்றருபுகைகமழ்தரும்
மங்கையோர்பங்கினன்மயேந்திரப்பள்ளியு
ளெங்களுய்யகன்றனதிணையடிபணிமினே. (௪)

நித்திலத்தொகைபலநிரைதருமலரெனச்
சித்திரப்புணரிசேர்த்திடத்திகழ்ந்திருந்தவன்
மைத்திகழ்கண்டனன்மயேந்திரப்பள்ளியுட்
கைத்தலமழுவனைக்கண்டடிபணிமினே. (௫)

சந்திரன்கதிரவன்றகுபுகழயனொடு
மிந்திரன்வழிபடவிருந்தவெம்மிறையவன்
மந்திரம்மறைவளர்மயேந்திரப்பள்ளியு
ளந்தமில்லழகனையடிபணிந்துய்ம்மினே. (௬)

சடைமுடிமுனிவர்கள்சமைவொடும்வழிபட
நடநவில்புரிவினனறவணிமலரொடு
படர்சடைமதியினன்மயேந்திரப்பள்ளியு
ளடல்விடையுடையவனடிபணிந்துய்ம்மினே. (௭)

சிரமொருபதுமுடைச்செருவலியரக்கனைக்
கரமிருபதுமிறக்கனவரையடர்த்தவன்
மரவமர்பூம்பொழின்மயேந்திரப்பள்ளியு
ளரவமர்சடையனையடிபணிந்துய்ம்மினே. (௮)

நாகணைத்துயில்பவன்னலமிகுமலரவ
னாகணைந்தவர்கழலணையவும்பெறுகிலா
மாகணைந்தலர்பொழின்மயேந்திரப்பள்ளியு
ளேயோகணைந்தவன்கழலுணர்ந்திருந்துய்ம்மினே (௯)

உடைதுறந்தவர்களுமுடைதுவருடையரும்
படுபழியுடையவர்பகர்வனவிடுமினீர்
மடைவளர்வயலணிமயேந்திரப்பள்ளியு
ளிடமுடையீசனையிணையடிபணிமினே (௰)

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியு
ணம்பனைக்கழலடிஞானசம்பந்தன்சொ
னம்பரமிதுவெனநாவினனவில்பவ
ரும்பராரெதிர்கொளவுயர்பதியணைவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-திருமேனியழகர்-தேவியார் வடிவாம்பிகையம்மை.

திருவேடகம் பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

வண்ணியுமத்தமுமதிபொதிசடையினன்
பொன்னியறிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ
ரின்னிசைப்பாடலாரேடகத்தொருவனே. (௧)

கொடிநெடுமாளிகைக்கோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதரமருவியவேடகத்
தடிகளையடிபணிந்தாற்றுமினன்பினா
லிடிபடும்வினைகள்போயில்லையதாகுமே. (௨)

குண்டலந்திகழ்தருகாதுடைக்குழகனை
வண்டலம்பும்மலர்க்கொன்றைவாண்மதியணி
செண்டலம்பும்விடைச்சேடனூரேடகங்
கண்டுகைதொழுதலுங்கவலைநோயகலுமே. (௩)

ஏலமார்தருகுழலேழையோடெழில்பெறுங்
கோலமார்தருவிடைக்குழகனுறைவிடஞ்
சாலமாதவிகளுஞ்சந்தனஞ்சண்பகஞ்
சீலமாரேடகஞ்சேர்தலாஞ்செல்வமே. (௪)

வரியணிநயனிநன்மலைமகண்மறுகிடக்
கரியினையுரிசெய்தகறையணிமிடறினன்
பெரியவனபெண்ணினோடாணலியாகிய
வெரியவனுறைவிடமேடககோயிலே. (௫)

பொய்கையின்பொழிலுறுபுதுமலர்த்தென்றலார்
வைகையின்வடகரைமருவியவேடகத்
தையனையடிபணிந்தரறுமின்னடர்தரு
வெய்யவன்பிணிகெடவீடெளிதாகுமே. (௬-௭)

தடவரையெடுத்தவன்றருக்கிறத்தோளடர்ப்
படவிரலூன்றியேபரிந்தவாக்கருள்செய்தான்
மடவரலெருக்கொடுவன்னியுமத்தமு
மிடமுடைச்சடையினனேடகத்திறைவனே. (௮)

பொன்னுமாமணிகளும்பொருதிரைச்சந்தகி
றனனுளார்வைகையினகரைதனிற்சமைவுற
வன்னமாமயனுமாலடிமுடிதேடியு
மின்னவாறெனவொணாவேடகத்தொருவனே, (௯)

குண்டிகைக்கையினார்குணமிலாத்தேரர்கள்
பண்டியைப்பெருக்கிடும்பளகர்கள்பணிவிலர்
வண்டிரைக்கும்மலர்க்கொன்றையும்வன்னியும்
மிண்டைசேராக்குஞ்சடையேடகத்தெந்தையே. (௧0)

கோடுசந்தனமகில்கொண்டிழிவைகைநீ
ரேடுசென்றணைதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன
பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

—— (*) ——

திருஉசாத்தானம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின்றவன்றம்பிநீள்சாம்புவான்
பேருடைச்சுக்கிரீவன்னனுமனறொழக்

காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெஞ்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (௧)

கொல்லையேறுடையவன்கோவணவாடையன்
பல்லையார்படுதலைப்பலிகொளும்பரமனூர்
முல்லையார்புறவணிமுதுபதிநறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே (௨)

தாமலார்போலவேதக்கனார்வேள்வியை
யூமனார்தங்கணாவாக்கினானொருநொடிக்
காமனாருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுத
லேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (௩)

மறிதருகரத்தினான்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினாரடிதொழ
நெறிதருவேதியர்நித்தலுநியமஞ்செய
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (௪-௫-௬)

பண்டிரைத்தயனுமாலும்பலபத்தர்கள்
தொண்டிரைத்தூமலர்தூவிதோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடுகுருகினமல்லினந்
தெண்டிரைக்கழனிசூழ்திருவுசாத்தானமே. (௭)

மடவரல்பங்கினன்மலைதனைமதியாது
சடசடவெடுத்தவன்றலைபத்துநெறிதர
வடர்தரவூன்றியங்கேயவற்கருள்செய்தான
திடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே. (௮)

ஆணலார்பெண்ணலாரயனொடுமாலுக்குங்
காணொணாவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணிகெடும்பிறப்பறுப்பானிடஞ்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (௯)

கானமார்வாழ்க்கையான்காரமண்டேரர்சொல
றானமாக்கொண்டுநீருரைமினுய்யவெனில
வானமாமதிலணிமாளிகைவளர்பொழிற்
றேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே (௧௦)

வரைதிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
றிரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானனை
யுரைதெரிந்துணருஞ்சம்பந்தனொண்டமிழ்வல்லார்
நரைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மந்திரபுரீசுவரர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

———(✽)———

திருமுதுகுன்றம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாராயிழையாளொடுமேமாவிடம்
விண்ணின்மாமழைபொழிந்திழியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணிதிருமுதுகுன்றமே. (௧)

வெறியுலாங்கொன்றையந்தாரினான்மேதகு
பொறியுலாமரவசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையினானமங்கையோடமாவிடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே (௨)

ஏறனார்விடைமிசையிமையவர்தொழவுமை
கூறனார்கொல்புலித்தோலினார்மேனிமே
னீறனார்நிரைபுனாசடையனார்நிகழ்விடந்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே (௩)

உரையினாருறுபொருளாயினானுமையொடும்
விரையினார்கொன்றைசேர்சடையினான்மேவிடம்
முரையினாரொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினாரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (௪)

கடியவாயினகுரற்களிற்றினைப்பிளிறவோ
ரிடியவெங்குரலினோடாளிசென்றிடுநெறி
வடியவாயமழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (௫)

கானமார்கரியினீருரிவையார்பெரியதோர
வானமார்மதியினோடரவர்தாமருவிட
மூனமாயினபிணியவைகெடுத்துமையொடுந்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (௬)

மஞ்சாதாமலர்கொடுவானவாவணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே
யஞ்சொலாளுமையொடுமேமாவிடமணிகலைச
செஞ்சொலாாபயிறருந்திருமுதுகுன்றமே. (௭)

காரினாரமர்தருங்கயிலைநன்மலையினை
யேரினார்முடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடும்மன்னினார்மருவிடஞ்
சீரினார்திகழ்தருந்திருமுதுகுன்றமே. (௮)

ஆடினார்கானகத்தருமறையின்பொருள்
பாடினார்பலபுகழ்பரமனாரிணையடி

யேடினார்மலர்மிசையயனுமாலிருவருந்
தேடினாரறிவொணார்திருமுதுகுன்றமே. (௯)

மாசுமெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்யுளவல்லபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (௧௦)

திண்ணினார்புறவணிதிருமுதுகுன்றரை
நண்ணினான்காழியுண்ஞானசம்பந்தன்சொல
லெண்ணினானீரைந்துமாலையுமியலுமாப்
பண்ணினாற்பாடுவாரகிலலையாமபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித்திட்டை - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

முன்னைநான்மறையவைமுறைமுறைகுறையொடுந்
தன்னதாடொழுதெழநின்றவன்றன்னிட
மன்னுமாகாவிரிவந்தடிவருடநற்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே. (௧)

மகரமாடுங்கொடிமன்மதவேடனை
நிகரலாகாநெருப்பெழவிழித்தானிடம்
பகரபாணித்தலம்பன்மகரத்தொடுஞ்
சிகரமாளிகைதொகுந்தென்குடித்திட்டையே. (௨)

கருவினாலன்றியேகருவெலாமாயவ
னுருவினாலன்றியேயுருவுசெய்தானிடம்
பருவநாள்விழவொடும்பாடலோடாடலுந்
திருவினான்மிகுபுகழ்த்தென்குடித்திட்டையே. (௩)

உண்ணிலாவாவியாயோங்குதன்றன்மையை
விண்ணிலாரறிகிலாவேதவேதாந்தனூ
லெண்ணிலாரெழின்மணிக்கனகமாளிகையிளந்
தெண்ணிலாவிரிதருந்தென்குடித்திட்டையே. (௪)

வருந்திவானோர்கள்வந்தடையமாநஞ்சுதா
னருந்தியாரமுதவர்க்கருள்செய்தான்மருவுமூர்
செருந்திபூமாதவிப்பந்தலவண்செண்பகந்
திருந்துநீளவளர்பொழிற்றென்குடித்திட்டையே. (௫)

ஊறினாரோசையுள்ளொன்றினாரொன்றிமால்
கூறினாரமர்தருங்குமரவேடாதையு

ராறிஞர்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேறினார்வழிபடுதென்குடித்திட்டையே. (சு)

கானலைக்கும்மவன்கண்ணிடந்தப்பநீள்
வானலைக்குந்தவத்தேவுதைத்தானிடந
தானலைத்தெள்ளமூர்தாமறைத்தண்டுறை
தேனலைக்கும்வயற்றென்குடித்திட்டையே (எ)

மாலொடும்பொருதிறலவாளரக்கன்னெரிந
தோளிடும்படிவிரலொன்றுவைத்தானிடங்
காலொரடுங்கனகமூக்குடன்வரக்கயலவரால்
சேலொடும்பாய்வயற்றென்குடித்திட்டையே. (அ)

நாரணன்றன்னொடுநான்முகன்றானுமாய்க்
காரணன்னடிமுடிகாணவொண்ணானிடம்
ஆரணங்கொண்டுபூசுரர்கள்வந்தடிதொழச்
சீரணங்கும்புகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

குண்டிகைக்கையுடைக்குண்டரும்புத்தரும்
பண்டுரைத்தேயிடும்பற்றுவிட்டீர்தொழும்
வண்டிரைக்கும்பொழிற்றண்டலைக்கொண்டலார்
தெண்டிரைத்தண்புனற்றென்குடித்திட்டையே. (கo)

தேனலார்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுண்
ஞானவார்ஞானசம்பநதனசெநதமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதீசுவரர் - தேவியார் - உலகநாயகியம்மை

திருக்காளத்தி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கம்மர
முந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்மொழிலவளர்மல்குவண்காளத்தி
யெந்தையாரிணையடியென்மனத்துள்ளவே. (க)

ஆலமாமரவமோடமைந்தசீர்ச்சந்தனஞ்
சாலமாபீலியுஞ்சண்பகமுந்தியே
காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனைநினையுமாநினைவதே. (உ)

கோங்கமேகுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினி

லாங்கமர்காளத்தியடிகளைப்படிதொழ
வீங்குவெந்துயர்கெடும்விடெளிதாகுமே. (ரு)

கரும்புதேன்கட்டியுங்கதலியின்கனிகளு
மரும்புநீர்முகலியின்கரையினிலணிமதி
யொருங்குவார்சடையினன்காளத்தியொருவனை
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. (சா)

வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவ
னிரைதருகழலிணைநித்தலுநினைமினே. (ரு-சா-எ)

முத்துமாமணிகளுமுழுமலர்த்திரளகளு
மெத்துமாமுகலியினகரையினிலெழிலதுபறக்
கத்திடவரக்கனைக்காலவிரலூன்றிய
வத்தன்றன்காளத்தியணைவதுகருமமே (அ)

மண்ணுமாவேங்கையுமருதுகள்பீழந்துந்தி
நண்ணுமாமுகலியினகரையினினமைசேர
வண்ணமாமலரயன்மாலவன்காண்கிலா
வண்ணலார்காளத்தியாநகணைகுயமினே. (கூ)

வீங்கியஉடலினர்விரிதருதுவருடைப
பாங்கிலாசொலலவிடுமபரனடிபணியுமி
னோங்குவன்காளத்தியுள்ளமோடுணாதர
வாங்கிடுமவினைகளைவானவர்கமகொருவனே. (௧0)

அட்டமாசித்திகளணைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான
சிட்டநானமறைவலஞானசமபநதன்சொ
லிட்டமாட்பாடுவார்க்கிலலையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கரமுனம்மலராறபுனன்மலர்தூவியேகலந்தேத்துமின்
பரமனூர்பலபேரினாற்பொலிபத்தர்சித்தர்கடாமபயில
வரமுன்னவருள்செய்யவல்லவெம்மையனாடொறுமேயசீர்ப்
பிரமனூர்பிரமாபுரத்துறைபிஞ்ஞகனருள்பேணியே. (௧)

விண்ணிலார்மதிசூடினான்விரும்புமமறையவன்றன்றலை
யுண்ணநன்பலிபேணினானுலகத்துளூனுயிரான்மலைப்
பெண்ணினார்திருமேனியான்பிரமாபுரத்துறைகோயிலு
ளண்ணலாரருளாளனாயமர்கின்றவெம்மடையாதியே. (௨)

எல்லையில்புகழாளனும்மிமையோர்கணத்துடன்கூடியும்
பல்லையார்தலையிற்பலியதுகொண்டுகந்தபடிறனுந்
தொல்லைவையகத்தேறுதொண்டர்கடமேலர்சொரிந்தேத்தவே
மல்லையம்பொழிறேன்மல்கும்பிரமாபுரத்துறைமைந்தனே, (௩)

அடையலார்புரஞ்சீறியந்தணரேத்தமாமடமாதொடும்
பெடையெலாங்கடற்கானல்புல்கும்பிரமாபுரத்துறைகோயிலான்
றொடையலார்நறுங்கொன்றையான்றொழிலேபரவிநின்றேத்தினு
விடையிலார்சிவலோகமெய்துதற்கீதுகாரணங்காண்மினே. (௪)

வாயிடைம்மறையோதிமங்கையர்வந்திடப்பலிகொண்டுபோய்ப்
போயிடம்மெரிகானிடைப்புரிநாடகம்மினிதாடினான்,
பேயொடுங்குடிவாழ்வினான்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்
றாயிடைப்பொருள்தந்தையாகுமென்றோதுவார்க்கருடன்மையே.

ஊடினாலினியாவதென்னுயர்நெஞ்சமேயுறுவல்வினைக்
கோடிநீயுழலன்றிநின்றதெனனழலன்றுதன்கையிலேந்தினான்
பீடுநேர்ந்ததுகொள்கையான்பிரமாபுரத்துறைவேதியன்
னேடுநேர்மதியோடராவணிமெய்ந்நதயென்றுநின்றேத்திடே. (௬)

செய்யன்வெள்ளியன்ஒள்ளியார்சிலரென்றுமேத்திநினைந்திட
வையனுண்டகையநதணனருமாமறைப்பொருளாயினான்
பெய்யுமாமழையானவன்பிரமாபுரம்மிடம்பேணிய
வெய்யவெண்மழுவேநதியைநினைநதேத்துமின்வினைவீடவே. (௭)

கன்றொருக்கையிலேந்திநலவிளவின்கனிபடநூறியுஞ்
சென்றொருக்கியமாமறைப்பொருடேர்நதசெம்மலரோனுமா
யன்றரக்கனைச்செற்றவன்னடியும்முடியவைகாண்கிலா
பின்றருக்கியதண்பொழிறபிரமாபுரததரன்பெற்றியே. (௮)

உண்டுடுக்கைவிட்டார்களும்முயர்கஞ்சிமண்டைகொடேரரும்
பண்டடக்குசொறபேசுமபபரிவொன்றிலாகள்சொற்கொள்ளன்மின்
றண்டொடக்குவன்சூலமுநதழன்மாமழுப்படைதன்கையிற்
கொண்டொடுக்கியமைநதனைமபிரமாபுரத்துறைகூத்தனே. (௯)

பித்தனைப்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்கழல்பேணியே
மெய்த்தவத்துநின்றோர்களுக்குரைசெயதுநன்பொருண்மேவிட
வைத்தசிந்தையுண்ஞானசமபநதன்வாய்நவின்றெழுமாலைகள்
பொய்த்தவம்பொறிநீங்கவின்னிசைபோற்றிசெய்யுமெய்ம்மாந்தரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்டியூர் திருவீரட்டம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனைவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்

றணமுனேதனக்கின்னையோதமராபிரண்டமாளத்தான்
வளனில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே.

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர்
கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகாதலான்
பிள்ளைவான்பிறைசெஞ்சடைம்மிசைவைத்ததும்பெருநீரொலி
வெள்ளந்தாங்கியதென்கொலோமிகுமங்கையாளுடனாகவே. (௨)

அடியராயினீர்சொல்லுமின்னறிகின்றிலேனரன்செய்கையைப்
படியெலாந்தொழுதேத்துகண்டியூர்வீரட்டத்துறைபான்மையான்
முடிவுமாய்முதலாயிவ்வையகமுழுதுமாயழகாயதோர்
பொடியதார்திருமார்பினிற்புரிநூலும்பூண்டெழுபொற்பதே. (௩)

பழையதொண்டர்கள்பகருமின்பலவாயவேதியன்பான்மையைக்
கழையுலாம்புனன்மல்குகாவிரிமன்னுகண்டியூர்வீரட்டன்
குழையொர்காதினிற்பெய்துகந்தொருகுன்றின்மங்கைவெருவுறப்
புழைநெடுங்கைநன்மாவுரித்ததுபோர்த்துகந்தபொலிவதே (௪)

விரவிலாதுமைக்கேட்கின்றேனடிவிரும்பியாட்செய்வீர்விளம்புமின்
கரவெலாந்திரைமண்டுகாவிரிக்கண்டியூருறைவீரட்டன்
முரவமொந்தைமுழாவொலிக்கமுழங்குமபேயொடுங்கூடிப்போய்
பரவுவானவர்க்காகவார்கடனஞ்சமுண்டபரிசதே. (௫)

இயலுமாறெனக்கியம்புமின்னிறைவனுமாய்நிறைசெய்கையைக்
கயனெடுங்கண்ணினார்கடாம்பொலிகண்டியூருறைவீரட்டன்
புயல்பொழிந்திழிவானுளோர்களுக்காகவன்றயன்பொய்ச்சிரம்
மயனகவவதரிந்துமற்றதிலூணுகந்தவருத்தியே. (௬)

திருந்துதொண்டர்கள்செப்புமின்மிகச்செல்வன்றன்னதுதிறமெலாங்
கருந்தடங்கண்ணினார்கடாந்தொழுகண்டியூருறைவீரட்ட
னிருந்துநால்வரோடாலநீழலலறமுரைத்ததும்மிகுவெம்மையார்
வருந்தவன்சிலையாலமாமதில்மூன்றுமாட்டியவண்ணமே. (௭)

நாவிரித்தரன்றொல்புகழ்பலபேணுவீரிறைநல்குமின்
காவிரித்தடம்புனல்செய்கண்டியூர்வீரட்டத்துறைகண்ணுதல்
கோவிரிப்பயனானைஞ்சாடியகொள்கையுங்கொடிவரைபெற
மாவரைத்தலத்தாலரக்கனைவலியைவாட்டியமாண்பதே. (௮)

பெருமையேசரணாகவாழ்வுறுமாந்தர்காளிறைபேசுமின்
கருமையார்பொழில்சூழுந்தண்வயற்கண்டியூருறைவீரட்ட
னொருமையாலுயர்மாலுமற்றைமலரவனுணர்ந்தேத்தவே
யருமையாலவருக்குயர்ந்தெரியாகிநின்றவத்தன்மையே. (௯)

நமறெழுபிறப்பறுக்குமாந்தர்கணவிலுமின்னுமைக்கேட்கின்றேன்
கமழிவயல்சூழ்ந்தண்புனற்கண்டியூருறைவீரட்டன்

றமரழிந்தெழுசாக்கியச்சமணரைதரோதுமதுகொளா
தமரானவரேத்தவந்தன்றன்னைச்சூலத்திலாய்ந்ததே. (௧0)

கருத்தனைப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனை
யருத்தனைத்திறமடியார்பால்மிகக்கேட்டுகந்தவிணாவுரை
திருத்தமாந்திகழ்காழிஞானசமபந்தன்செப்பியசெந்தமி
ழொருத்தராகிலும்பலாகளாகிலுமுரைசெயவாருயர்ந்தார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-வீரட்டேசுவரர்-தேவியார்-மங்கைநாயகியம்மை.

இறை-உத்தரவு.

திருவாலவாய்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧)

ஆகமத்தொடுமந்திரங்களமைந்தசங்கதபங்கமாப்
பாகதத்தோடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௨)

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்களவெட்குறக்கமே
சித்திராக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௩)

சந்துசேனனு மிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௪)

கூட்டினார்கிளியினவிருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௫)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுபொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௬)

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலமெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியனாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௭)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொயத்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறாபின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிறகவே. (அ)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினார்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாயசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௯)

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
யெங்களுயகனேத்தொழிந்திடுக்கேமடுததொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேனறிருவாலவாயரனிற்கவே. (௧0)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருககவேதுளங்கும்முடிதென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசமபநதன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுறைப்பவர்க்கிடரிலலையே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது-பாண்டியராஜனுடைய சுரப்பிணிதீர்ப்பதற்காகத் திருஞானசம்பந்தசுவாமிகளெழுந்தருளியிருக்கும்போது பாணடிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார்கணடு சுவாமிகளுடையதிருமேனி மிகுந்த பாலியமாயிருக்கின்றதுமன்றித, தனிமையாயுமிருக்கின்றது. சமணர்களோ சரீரதிடமுள்ளவர்களும் பலருமாயிருக்கின்றார்களென்று உட்பரிவுற்றக் குறிப்பினைத் திருஞானசம்பந்தசுவாமிகள திருவுளளந்திலுணாநதுகொணடு அனலையே யஞ்சவேண்டுவதில்லையென்று கட்டளையிட்டபதிகம்.

தனித் திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கல்லானீழ லல்லால்தேவை, நல்லார்பேணா ரல்லோநாமே (௧)
கொன்றைசூடி நின்றதேவை, யன்றியொன்று நன்றிலோமே (௨)
கல்லாநெஞ்சி னில்லானீசன், சொல்லாதாரோ டல்லோநாமே. (௩)
கூற்றுதைத்த நீற்றினானைப், போற்றுவார்க டோற்றினாரே. (௪)
காட்டுளாடும் பாட்டுளானை, நாட்டுளோருந் தேட்டுளாரே. (௫)
தக்கன்வேள்விப் பொக்கந்தீர்த்த, மிக்கதேவர் பக்கத்தோமே. (௬)
பெண்ணொருபா லாணோர்கோவை, நண்ணாதாரை யெண்ணோநாமே()

தூர்த்தன்வீரந் தீர்த்தகோவை, யார்த்தமாக வேத்தினோமே. (௮)

பூவினானுந் தாவினானு, நாவினாலு மோவினாரே. (௯)

மொட்டமணர் கட்டர்தேரர், பிட்டர்சொல்லை விட்டுளோமே. (௧௦)

அந்தண்காழிப் பந்தன்சொல்லைச், சிந்தைசெய்வோ ருய்ந்துளாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம்-திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித் திருவேகம்பத், தொருவாவென்ன மருவாவினையே (௧)

மதியார்கச்சி நதியேகம்பம், விதியாலேத்தப் பதியாவாறே. (௨)

கலியார்கச்சி மலியேகம்பம், பலியார்போற்ற நலியாவினையே. (௩)

வரமார்கச்சிப் புரமேகம்பம், பரவாவேத்த விரவாவினையே. (௪)

படமார்கச்சி யிடமேகம்பத் துடையாயென்ன வடையாவினையே (௫)

நலமார்கச்சி நிலவேகம்பங், குலவாவேத்தக் கலவாவினையே. (௬)

கரியின்னுரியன் றிருவேகம்பன், பெரியபுரமூன் றெரிசெய்தானே (௭)

இலங்கையரசைத் துலங்கவூன்று, நலங்கொள்கம்ப னிலங்குசரணே.

மறையோனரியு மறியாவனலன், னெறியேகம்பங் குறியாற்றொழுமே

பறியாத்தேரர் நெறியிலகச்சிச், செறிகொள்கம்பங் குறுகுவோமே. ( )

கொச்சைவேந்தன் கச்சிக்கம்ப, மெச்சுஞ்சொல்லை நச்சும்புகழே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றேமம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள்வாண்முகமாதாபாடநீள்சடைக்
குறைவெண்டிக்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தா
னிறைவனென்றேயுலகெல்லாமேத்தநின்றபெருமானே. (௧)

மாகத்திங்களவாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினா
னாகத்தோர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. (௨)

நெடுவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
கொடுவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
படுவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினாற்காய்ந்தகடவுளல்லனே.

கதிரார்திங்கள்வாண்முகமாதர்பாடக்கண்ணுதன்
முதிரார்திங்கள்சூடியோராடன்மேயமுக்கண
னெதிரார்புனலம்புன்சடையெழிலாருஞ்சிற்றேமத்தா
னதிரார்பைங்கணேறுடையாதிமூர்த்தியல்லனே. (௪)

வானார்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைக்
கூனார்திங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றேனார்வண்டுபண்செயுந்திருவாருஞ்சிற்றேமத்தான்
மானார்விழிநன்மாதோடுமகிழ்ந்தமைந்தனல்லனே. (௫)

பனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடப்பல்சடைக்
குனிவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றனிவெள்விடையன்புள்ளினத்தாமஞ்சூழ்சிற்றேமத்தான்
முனிவுமூப்புநீக்கியமுக்கண்மூர்த்தியல்லனே. (௬)

கிளருந்திங்கள்வாண்முகமாதர்பாடக்கேடிலா
வளருந்திங்கள்சூடியோராடன்மேயமாதவன்
றளிருங்கொம்புமதுவுமார்தாமஞ்சூழ்சிற்றேமத்தா
னொளிரும்வெண்ணூன்மார்பனென்னுள்ளத்துள்ளானல்லனே. (௭)

சூழ்ந்ததிங்கள்வாண்முகமாதர்பாடச்சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள்சூடியோராடன்மேயபுண்ணியன்
றாழ்ந்தவயற்சிற்றேமத்தான்றடவரையைத்தனருளினு
லாழ்ந்தவரக்கனுலகவன்றடாத்தவண்ணலல்லனே. (௮)

தணிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடத்தாழ்சடைத்
துணிவெண்டிங்கள்சூடியோராடன்மேயதொன்மையா
னணிவண்ணச்சிற்றேமத்தானலர்மேலந்தணாளனு
மணிவண்ணனுமுன்காண்கிலாமழுவாட்செல்வனல்லனே. (௯)

வெள்ளைத்திங்கள்வாண்முகமாதர்பாடவிரிசடைப
பிள்ளைத்திங்கள்சூடியோராடன்மேயபிஞ்ஞக
னுள்ளத்தார்சிற்றேமத்தானுருவார்புத்தரொப்பிலாக்
கள்ளத்தாரைத்தன்றடியுடகராநதுவைத்தானல்லனே. (௧0)

கல்விலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியா
னல்லவாயவின்றமிழ்நவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்நாவினால்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

தக்கண்மேமிபெயர்-பொன்வைத்தநாதர்-தேவியார்-அகிலாண்டேசுவரியம்மை.

பெண்ணுண்.

சீகாழி - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தமார்முலையாடன்கூறனார்
வெந்தவெண்பொடியாடியமெய்யனார்
கந்தமார்பொழில்சூழ்தருங்காழியு
ளெந்தையாரடியென்மனத்துள்ளவே (௧)

மானிடம்முடையார்வளர்செஞ்சடைத்
தேனிடங்கொளுங்கொன்றையந்தாரினார்
கானிடங்கொளுந்தண்வயற்காழியா
ரூனிடங்கொண்டெனுச்சியினிற்பரே. (௨)

மைகொள்கண்டத்தர்வான்மதிச்சென்னியர்
பைகொள்வாளரவாட்டும்படிறனார்
கைகொண்மான்மறியார்கடற்காழியு
ளையனந்தணர்போற்றவிருக்குமே. (௩)

புற்றினாகமும்பூளையும்வன்னியுங்
கற்றைவார்சடைவைத்தவர்காழியுட்
பொற்றொடியோடிருந்தவர்பொற்கழ
லுற்றபோதுடனேத்தியுணருமே (௪)

நலியுங்குற்றமுநம்முடனோய்வினை
மெலியுமாறதுவேண்டுதிரேலவெய்ய
கலிகடந்தகையார்கடற்காழியு
ளலைகொள்செஞ்சடையாரடிபோற்றுமே. (௫)

பெண்ணோர்கூறினர்பேயுடனாடுவர்
பண்ணுமேத்திசைபாடியவேடத்தார்
கண்ணுமூன்றுடையார்கடற்காழியு
ளண்ணலாயவடிகள்சரிதையே. (௬)

பற்றுமானுமழுவுமழகுற
முற்றுமூர்திரிந்துபலிமுன்னுவர்
கற்றமாநன்மறையவர்காழியுட்
பெற்றமேறதுகந்தார்பெருமையே. (௭)

எடுத்தவல்லரக்கன்முடிதோளிற
வடர்த்துகந்தருள்செய்தவர்காழியுட்
கொடித்தயங்குநற்கோயிலுளின்புற
விடத்துமாதொடுதாமுமிருப்பரே. (௮)

காலன்றன்னுயிர்வீட்டுகழலடி
மாலுநான்முகன்றானும்வனப்புற

வோலமிட்டுமுன்தேடியுணர்கிலாச்
சீலங்கொண்டவனூர்திகழ்காழியே. (க)

உருவநீத்தவர்தாமுமுறுதுவர்
தருவலாடையினாருந்தகவிலர்
கருமம்வேண்டுதிரேற்கடற்காழியு
ளொருவன்சேவடியேயடைந்துய்மினே. (க0)

கானல்வந்துலவுங்கடற்காழியுள்
ளீனமிலவிழிணையடியேதநிடு
ஞானசம்பநதன்சொலலியநற்றமிழ்
மானமாக்குமகிழ்நதுரைசெய்யவே. (கக)

திருச்சிற்றம்பலம

திருக்கழிப்பாலை-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வெநதகுங்கிலியப்புகைவிம்மவே
கநதநின்றுலவுங்கழிப்பாலையா
நநதமும்மளவும்மறியாததோர்
சநதமாலவர்மேவியசாநதமே. (க)

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்கலுகநததலைவனூர்
கானிலங்கவருநகழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. (உ)

கொடிகொளேற்றினர்கூற்றையுதைத்தனர்
பொடிகொண்மார்பினிற்பூண்டதோராமையா
கடிகொள்பூம்பொழில்சூழ்கழிப்பாலையு
ளடிகள்செய்வனவார்ககறிவொண்ணுமே (ங)

பண்ணலம்படவண்டறைகொன்றையின்
றண்ணலங்கலுகந்ததலைவனூர்
கண்ணலங்கவருங்கழிப்பாலையு
ளண்ணலெங்கடவுள்ளவனல்லனே. (ச)

ஏரினுருலகத்திமையோரொடும்
பாரினுருடனேபரவப்படுங்
காரினுர்பொழில்சூழ்கழிப்பாலையெஞ்
சீறினுர்கழலேசிந்தைசெய்மினே (ரு)

துளனுமான்மறியங்கையிலேந்தியூா
கொள்வனுரிடுவெண்டலையிற்பலி

கள்வனாருறையுங்கழிப்பாலையை
யுள்ளுவார்வினையாயினவோயுமே. (௬)

மண்ணினார்மலிசெல்வமும்வானமு
மெண்ணிநீரினிதேத்துமின்பாகமும்
பெண்ணினார்பிறைநெற்றியோடுற்றமுக்
கண்ணினாருறையுங்கழிப்பாலையே (௭)

இலங்கைமன்னனையீரைந்திரட்டிதோ
ளலங்கவூன்றியநாமழுவாளினார்
கலங்கள்வந்துலவுங்கழிப்பாலையை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (௮)

ஆட்சியாலலரானொடுமாலுமாய்த்
தாட்சியாலறியாதுதளர்ந்தனா
காட்சியாலறியான்கழிப்பாலையை
மாட்சியாற்றொழுவார்வினைமாயுமே. (௯)

செய்யநுண்டுவராடையினாரொடு
மெய்யின்மாசுபிறங்கியவீறிலாக்
கையர்கேண்மையனேகழிப்பாலையெம்
மையன்சேவடியேயடைந்துய்மினே. (௧0)

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாயபுனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவா
முந்திவானுலகாடன்முறைமையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினான்
வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்றிருவாரூரெம்
மெந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ (௧)

கருத்தனேகருதார்புரமூன்றெய்த
வொருத்தனேயுமையாளொருகூறனே
திருத்தனேதிருவாரூரெந்தீவண்ண
வருத்தவென்னெனையஞ்சலென்னாததே. (௨)

மறையன்மாமுனிவன்மருவார்புர
மிறையின்மாத்திரையில்லெரியூட்டினான்

சிறைவண்டாராபொழில்சூழ்திருவாரூரெம்
மிறைவன்றனெனையேன்றுகொளுங்கொலோ. (௩)

பல்லிலோடுகையேந்திப்பலிதிரிந்
தெல்லிவந்திடுகாட்டெரியாடுவான்
செல்வமல்கியதென்றிருவாரூரா
னலலறீர்த்தெனையஞ்சலெனுங்கொலோ (௪)

குருந்தமேறிக்கொடிவிடுமாதவி
விரிந்தலர்ந்தவிறைகமழ்தேனகொன்றை
திருந்துமாடங்கள்சூழ்திருவாரூரான்
வருந்தும்போழ்தெனைவாடலெனுங்கொலோ. (௫)

வார்கொண்மென்முலையாளொருபாகமா
வூர்களாரிடுபிச்சைகொளுத்தமன்
சீர்கொண்மாடங்கள்சூழ்திருவாரூரா
னார்கணாவெனையஞ்சலெனுங்கொலோ. (௬)

வளைக்கைமங்கைநல்லாளையோர்பாகமாத்
துளைக்கையானைத்துயர்படப்போர்த்தவன்
றிளைக்குந்தண்புனல்சூழ்திருவாரூரா
னிளைக்கும்போழ்தெனையேன்றுகொளுங்கொலோ. (௭)

இலங்கைமன்னனிருபதுதோளிறக்
கலங்கக்கால்விரலாற்கடைக்கண்டவன்
வலங்கொண்மாமதில்சூழ்திருவாரூரா
னலங்கறந்தெனையஞ்சலெனுங்கொலோ (௮)

நெடியமாலும்பிரமனுநேர்கிலாப்
படியவன்பனிமாமதிச்சென்னியான்
செடிகணீக்கியதென்றிருவாரூரெம்
மடிகடானெனையஞ்சலெனுங்கொலோ (௯)

மாசுமெய்யினர்வண்டுவராடைகொள்
காசைபோர்க்குங்கலதிகள்சொற்கொளேற்
றேசமல்கியதென்றிருவாரூரெம்
மீசன்றனெனையேன்றுகொளுங்கொலோ (௧௦)

வன்னிகொன்றைமதியொடுகூவிளஞ்
சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருகாவூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
மத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௧)

விமுதவல்லசடையான்றனையுளகுவார்
கமுதநீழலகலாததோர்செலவமாங்
கமுதமுல்லைகமழ்கின்றகருகாவூ
ரமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௨)

பழகவல்லசிறுத்தொண்டர்பாவின்னிசை
குழகரென்றுகுழையாவழையாவரும்
கழல்கொள்பாடலுடையார்கருகாவூரெம்
மழகர்வண்ணம்மழலுமமழல்வண்ணமே (௩)

பொடிமெய்பூசிமலர்கொய்துபுணர்ந்துடன்
செடியரல்லாவுள்ளநல்கியசெல்வத்தர்
கடிகொண்முல்லைகமழுங்கருகாவூரெம்
மடிகள்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௪)

மையலின்றிமலர்கொய்துவணங்கிடச்
செய்யவுள்ளமிகநல்கியசெலவததர்
கைதன்முல்லைகமழுங்கருகாவூரெம்
மையர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௫)

மாசிறுண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (௬)

வெந்தநீறுமெய்பூசியவேதியன்
சிந்தைநின்றவருணல்கியசெல்வத்தான்
கந்தமவ்வலகமழுங்கருகாவூரெம்
மெந்தைவண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (௭-௮)

பண்ணினேர்மொழியாளையோர்பாகனூர்
மண்ணுகோலம்முடையம்மலரானொடுங்
கண்ணனேடவரியார்கருகாவூரெம்
மண்ணல்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௯)

போர்த்தமெய்யினர்போதுழல்வார்கள்சொற்
றீர்த்தமென்றுதெளிவீர்தெளியேன்மின்

கார்த்தண் முல்லைகமழுங்கருகாவூரெம்
மார்த்தர்வண்ணம்மழலும்மழலவண்ணமே. (௧0)

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீளகழல்
குலவுஞானசம்பந்தன்செந்தமிழ்
சொலவல்லாரவர்தொலவினைதீருமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முல்லைவனேசுவரர்-தேவியார்-கருமபனையாளம்மை.

திருவாலவாய்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட
லோட்டமூன்றுடையாயுரைசெய்வனுன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (௧)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (௨)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியபேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (௩)

ஓதியோத்தறியாவமணாதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (௪)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (௫)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (௬)

பண்டடித்தவத்தார்பயில்வாற்றொழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா

யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்துழறத்திருவுள்ளமே. (எ)

அரக்கன்றன்கிரியேற்றவனறன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே (அ)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரை
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (கூ)

கழிக்கரைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (க0)

செந்தெனமுரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமன்றகறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னழகார்சடைக்
கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையானுறையும்மழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (க)

விதியுமாம்விளைவாமொழியார்த்ததோர்
கதியுமாங்கசிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாமழபாடியு
ணதியநதோய்சடைநாதனற்பாதமே. (உ)

முழவினான்முதுகாடுறைபேய்க்கணக்
குழுவினான்குலவுங்கையிலேந்திய
மழுவினானுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (ங)

கலையினான்மறையான்கதியாகிய
மலையினான்மருவார்புரமூன்றெய்த (௪)

சேர்திருமழபாடியைத
தலையினல்வணங்கத்தவமாகுமே, (௪)

நல்வினைப்பயனன்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்கியேத்துமதுபுகழாகுமே (௫)

நீடினருலகுக்குயிராய்நின்று
ஆடினனெரிகானிடைமாநடம்
பாடினரிசைமாமழபாடியை
நாடினர்க்கிலைநல்குரவானவே. (௬)

மின்னினரிடையாளொருபாகமாய்
மன்னினனுறைமாமழபாடியைப்
பன்னினரிசையால்வழிபாடுசெய்
துன்னினர்வினையாயினவோயுமே. (௭)

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
யுன்னிலங்கவுறுபிணியில்லையே. (௮)

திருவினயகனுஞ்செழுந்தாமரை
மருவினனுந்தொழத்தழன்மாண்பம
ருருவினனுறையும்மழபாடியைப்
பரவினர்வினைப்பற்றறுப்பார்களே. (௯)

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடனமேலவினையானவே. (௧0)

மந்தமுந்துபொழின்மழபாடியு
ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க்கிலைபாவமே. திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயத்திருப்பதிகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்து
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பதும்
பவதநான்கினுமெய்ப்பொருளாவது
தொண்டிநமச்சிவாயவே. (௧)

நம்புவார்நமர்நாமநவிற்றினால்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே. (௨)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந
தக்குமாலைகுடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராத்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே. (௩)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினா
னியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனாமநமச்சிவாயவே. (௪)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
லெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே. (௫)

மந்தரம்மன்னபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே. (௬)

நரகமேழ்புகநாடினராயினு
முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனாமநமச்சிவாயவே. (௭)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணாமநமச்சிவாயவே. (௮)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலர்ந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே. (௯)

கஞ்சிமண்டையர்கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்டனமச்சிவாயவே. (௰)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தண்டலைநீணெறி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கங்கையும்விம்மவே
சுரும்புந்தும்பியுஞ்சூழ்சடையார்க்கிடங்
கரும்புஞ்செந்நெலுநகாயகழுநின்வளர்
நெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே (௧)

இகழுங்காலனிதயத்துமெனனுனுந்
திகழுஞ்சேவடியானறிருந்தும்மிடம்
புகழும்பூமகளும்புணர்பூசுரர்
நிகழுந்தண்டலைநீணெறிகாண்மினே (௨)

பரந்தநீலப்படரொரிவல்விடங்
கரந்தகண்டத்தினன்கருதுமமிடஞ்
சுரந்தமேதிதுறைபடிந்தோடையி
னிரந்ததண்டலைநீணெறிகாண்மினே. (௩)

தவந்தவெண்புந்தவளப்பொடியுமே
யுவந்தமேனியினனுறையும்மிடஞ்
சிவந்தபொன்னுஞ்செழுந்தாளங்களு
நிவந்ததண்டலைநீணெறிகாண்மினே. (௪-௫-௬-௭)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கலில்லடர்த்தான்விரும்பும்மிடஞ்
சலங்கொளிப்பிதாளமுஞ்சங்கமு
நிலங்கொடண்டலைநீணெறிகாண்மினே. (௮)

கருவருந்தியினன்முகன்கண்ணனென்
றிருவருந்தெரியாவொருவன்னிடஞ்
செருவருந்தியசெம்பியன்கோச்செங்க
ணிருபாதண்டலைநீணெறிகாண்மினே. (௯)

கலவுசீவரத்தார்கையிலுண்பவர்
குலவமாட்டாக்குழகனுறைவிடஞ்
பலவுமாநதிலுஞ்சுதைமாடமு
தொண்டண்டலைநீணெறிகாண்மினே. (௧௦)

நீற்றர்தண்டலைநீணெறிநாதனைத்
தோற்றமேன்மையர்தோணிபுரத்திறை
சாற்றிஞானசம்பந்தன்றமிழ்வல்லார்
மாற்றில்செல்வர்மறப்பர்பிறப்பையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நீணெறிநாதேசுவரர்-தேவியார் ஞானாம்பிகையம்மை.

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
ஐயனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனேதிருவாலவாய்மேவிய
அத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
எத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
எக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (௩)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
அட்டமூர்த்தியனேயஞ்சலென்றருள்
துட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௪)

நண்ணலார்புரமூன்றெரியாலவா
யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (௫)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (௬)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (௭)

தூர்த்தனன்வீரந்துலைத்தருளாலவா
யார்த்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. (அ)

தாவினனயன்றானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயரு
ளேவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினன்றென்னன்பாண்டியற்காகவே. (கூ)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே (க0)

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்-திருவிராகம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (க)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
வொட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (உ)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (கூ)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்கழ
லதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரனீமணாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுர்முகன்கபாலமேந்துசம்புவே. (ச)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (௫)

பொன்றையங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதென்னியமமே. (௬)

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளோர்சோதியாய்
கீதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே. (௭)

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. (௮)

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறுங்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
நிவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
றாவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. (௯)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே. (௧0)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
யாலசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைந்
நேயநீரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

———(*)———

திருவானைக்கா-திருவிராகம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவல்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவலின்மொழித்தேவிபாகமாயினா
னானைக்காவிலண்ணலையபயமாகவாழ்பவ
ரேனைக்காவல்வேண்டுவார்க்கேதுமேதமில்லையே. (௧)

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
வாறுபட்டநுண்டுறையானைக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. (௨)

தாரமாயமாதராடானோர்பாகமாயினு
னீரமாயபுனசடையேற்றதிங்கள்சூடினு
னாரமாயமாாபுடையானைக்காவிலண்ணலை
வாரமாய்வணங்குவார்வல்வினைகண்மாயுமே. (௩)

விண்ணினண்ணுபுல்கியவீரமாயமாலவிடைச்
சுண்ணவெண்ணீறாடினான்சூலமேந்துகையினா
னண்ணலகண்ணோரழன்றினானைக்காவுகைதொழ
வெண்ணும்வண்ணம்வல்லவாகேதமொன்றுமில்லையே (௪)

வெய்யபாவங்கைவிடவேண்டுவீர்களாண்டசீர்
மைகொள்கண்டனவெய்யதீமாலையாடுகாதலான்
கொய்யவிண்டநாண்மலர்க்கொனறைதுன்றுசென்னியெம்
மையன்மெய்பொய்கைசூழானைக்காவுசேர்மினே (௫)

நாறுபோராவுசாரவுமுன்னையுமுட்குநன்மையும்
பேறுறுதசெல்வமும்பேசநின்றபெற்றியா
னாறுமபெண்ணுமாயவானைக்காவிலண்ணலார்
காறுகண்ணுமூன்றுடைக்கறைமிடற்றனல்லனே. (௬)

கூருமாலைநண்பகற்கூடிவல்லதொண்டர்கள்
பேருமூருஞ்செல்வமும்பேசநின்றபெற்றியான்
பாருமவிண்ணுங்கைதொழப்பாயுங்கங்கைசெஞ்சடை
யார்நீரோட்டந்திருவானைக்காவுசேர்மினே. (௭)

பொன்னமல்குதாமரைப்போதுதாதுவண்டினம்
மன்னமல்குதண்டுறையானைக்காவிலண்ணலை
பன்னவல்லநான்மறைபாடவல்லதன்மையோர்
முன்னவல்லர்மொய்கழற்றுன்னவல்லர்விண்ணையே. (அ)

ஊனொடுண்டனன்றெனவூனொடுண்டறீதென
வானதொண்டரன்பிறம்பசநின்றதன்மையான்
வானொடொன்றுசூடினான்வாய்மையாகமன்னிநின
றூனொடுஞ்சுமாடினானைக்காவுசேர்மினே. (௯)

கையிலுண்ணுங்கையருங்கடுக்கடின்கழுக்களு
மையப்போர்க்கும்பொய்யரும்வேதநெறியையறிகிலார்
ாகமாயினான்றழலதுருவத்தானெங்க
பொய்கைசூழானைக்காவுசேர்மினே. (௧௦)

ஊழியூழிவையகத்துயிர்கடோற்றும்வாறொடும்
ஆழியானுங்காண்கிலாவானைக்காவிலண்ணலை
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாயுமே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசுரம்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே (௧)

அரியகாட்சியராய்த்தமதங்கைசே
ரெரியரேறுகந்தேறுவர்கண்டமுங
கரியர்காடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே. (௨)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
லெந்தையாரவரெவ்வகையார்கொலோ. (௩)

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்புங்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். (௪)

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே. (௫)

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டிராகி
னாடுந்திறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே. (௬)

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி
படிசேர்க்கவண்ணம்...

வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம்
மேதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த
சூதன்னொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. (அ)

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப்
போராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப்
போராழியீந்தபுகழும்புகழுற்றதன்றே. (கூ)

மாலாயவனும்மறைவல்லநான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைநதாக்கரிதாயெழுந்த
வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. (க0)

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினானுந்
தெற்றென்றுதெய்வந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கிற்
பெற்றென்றுயர்ததபெருமான்பெருமானுமன்றே. (கக)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
வெலலாகளும்பரவுமீசனேயேத்துபாடல்
பலலார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவான்மியூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரையார்கொன்றையினாய்விடமுண்டமிடற்றினனே
யுரையார்பல்புகழாயுமைநங்கையோர்பங்குடையாய்
திரையார்தெண்கடல்சூழ்திருவான்மியூருறையும்
மரையாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (க)

இடியாரேறுடையாயிமையோர்தம்மணிமுடியாய்
கொடியார்மாமதியோடரவம்மலர்க்கொன்றையினாய்
செடியார்மாதவிசூழ்திருவான்மியூருறையும்
மடிகெளுன்னையலலாலடையாதெனதாதரவே. (உ)

கையார்வெண்மழுவர்கனல்போறிருமேனியனே
மையாரொண்கணல்லாளுமையாள்வளர்மார்பினனே
செய்யார்செங்கயல்பாய்திருவான்மியூருறையு
மையாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (ங)

பொன்போலுஞ்சடைமேற்புனருங்கியபுண்ணியனே
மின்போலும்புரிநூல்விடையேறியவேதியனே
தென்பால்வையமெலாந்திகழுந்திருவான்மிதன்னி
லன்பாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (௪)

கண்ணாருந்நுதலாய்கதிர்சூழொளிமேனியின்மே
லெண்ணார்வெண்பொடிநீறணிவாயெழில்வார்பொழில்சூழ்
திண்ணார்வண்புரிசைத்திருவான்மியூருறையு
மண்ணாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (௫)

நீதிநின்னையல்லானெறியாதுநினைந்தறியே
னோதிநான்மறைகண்மறையோன்றலையொன்றினையுஞ்
சேதிசேதமில்லாத்திருவான்மியூருறையு
மாதியுன்னையல்லாலடையாதெனதாதரவே. (௬)

வானார்மாமதிசேர்சடையாய்வரைபோலவருங்
கானாரானையின்றோலுரித்தாய்கறைமாமிடற்றாய்
தேனார்சோலைகள்சூழ்திருவான்மியூருறையும்
மானாயுன்னையல்லாலடையாதெனதாதரவே. (௭)

பொறிவாய்நாகணையானொடுபூமிசைமேயவனு
நெறியார்நீள்கழன்மேன்முடிகாண்பரிதாயவனே
செறியார்மாமதில்சூழ்திருவான்மியூருறையு
மறிவேயுன்னையல்லாலடையாதெனதாதரவே. (அ-௯)

குண்டாடுஞ்சமணர்கொடுஞ்சாக்கியரென்றிவர்கள்
கண்டார்காரணங்கள்கருதாதவர்பேசநின்றாய்
திண்டேர்வீதியதார்திருவான்மியூருறையு
மண்டாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (௧0)

கன்றாருங்கமுகின்வயல்சூழ்தருகாழிதனி
னன்றானபுகழான்மிகுஞானசம்பந்தனுரை
சென்றார்தம்மிடர்தீர்திருவான்மியூரதன்மேற்
குன்றாதேத்தவல்லார்கொடுவல்வினைபோயறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

———(*)———

திருப்பிரமபுரம்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இறையவனீசனெந்தையிமையோர்தொழுதேத்தநின்ற
கறையணிகண்டன்வெண்டோடணிகாதினன்காலத்தன்று
மறைமொழிவாய்மையினான்மலையாளொடுமன்னுசென்னிப்
பிறையணிசெஞ்சடையான்பிரமாபுரம்பேணுமினே. (௧)

சடையினன்சாமவேதன்சரிகோவணவன்மழுவாட்
படையினன்பாய்புலித்தோலுடையான்மறைபலகலைநூ
லுடையவனூனமில்லியுடனாயுமைநங்கையென்னும்
பெடையொடும்பேணுமிடம்பிரமாபுரம்பேணுமினே. (௨)

மாணியைநாடுகாலனுயிர்மாய்ந்தறச்செற்றுக்காளி
காணியவாடல்கொண்டான்கலந்தூர்வழிசென்றுபிச்சை
யூணியலாகக்கொண்டங்குடனேயுறைகங்கையோடும்
பேணியகோயின்மன்னும்பிரமாபுரம்பேணுமினே. (௩)

பாரிடம்விண்ணுமெங்கும்பயினஞ்சுபரந்துமிண்டப்
பேரிடர்த்தேவர்கணம்பெருமானிதுகாவெனலு
மோரிடத்தேகரந்தங்குமைநங்கையொடுமுடனே
பேரிடமாகக்கொண்டபிரமாபுரம்பேணுமினே. (௪)

நச்சரவச்சடைமேனளிர்திங்களுமொன்றவைத்தங்
கச்சமெழவிடைமேலழகார்மழுவேந்திநல்ல
விச்சைபகர்ந்துமிக்கவிடுமின்பலியென்றுநாளும்
பிச்சைகொளண்ணனண்ணும்பிரமாபுரம்பேணுமினே. (௫)

பெற்றவன்முப்புரங்கள்பிழையாவண்ணம்வாளியினாற்
செற்றவன்செஞ்சடையிற்றிகழ்கங்கைதனைத்தரித்திட்
டொற்றைவிடையினனாயுமைநங்கையொடுமுடனே
பெற்றிமையாலிருந்தானபிரமாபுரம்பேணுமினே. (௬)

வேதமலிந்தவொலிவிழவின்னொலிவீணையொலி
கீதமலிந்துடனேகிளரத்திகழ்பௌவமறை
யோதமலிந்துயர்வான்முகடேறவொண்மால்வரையான்
பேதையொடுமிருந்தானபிரமாபுரம்பேணுமினே (௭)

இமையவரஞ்சியோடவெதிர்வாரவர்தம்மையின்றி
யமைதருவல்லரக்கன்னடர்த்துமலையன்றெடுப்பக்
குமையதுசெய்துபாடக்கொற்றவாளொடுநாள்கொடுத்திட்
டுமையொடிருந்தபிரான்பிரமாபுரமுன்னுமினே. (௮)

ஞாலமளித்தவனும்மரியும்மடியோடுமுடி
காலம்பலசெலவுங்கண்டிலாமையினாற்கதறி
யோலமிடவருளியுமைநங்கையொடுமுடனா
யேலவிருந்தபிரான்பிரமாபுரமேத்துமினே (௯)

துவருறுமாடையினார்தொக்கபீலியர் * நக்கரைய
ரவரவர்தன்மைகள்கண்டணுகேன்மின்னருள்பெறுவீர்

---

* நக்கரையரென்பது நிருவாணமான அரையினையுடையவர்கள் ; சைனசமயத்தவர்கள்.

கவருறுசிந்தையொன்றிக்கழிகாலமெல்லாம்படைத்த
விரவவொன்றிறைஞ்சிப்பிரமாபுரமேத்துமினே. (௧௦)

உரைதருநான்மறையோர்புகழ்ந்தேத்தவொண்மாதினொடும்
வரையெனவீற்றிருந்தான்மலிகின்றபிரமாபுரத்
தரைசினையேத்தவல்லவணிசம்பந்தன்பத்துமவல்லார்
விரைதருவிண்ணுலகம்மெதிர்கொளளவிரும்புவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர் - பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சசிதங்கியசங்கவெண்டோ
டுடையவன்னூனமில்லியுறையும்மிடமொற்றியூரே. (௧)

பாரிடம்பாணிசெய்யப்பறைக்கட்செறுபல்கணப்பேய்
சீரொடும்பாடலாடலிலயஞ்சிதையாதகொள்கைத்
தாரிடும்போர்விடையன்றலைவன்றலையேகலனா
வூரிடும்பிச்சைகொள்வானுறையும்மிடமொற்றியூரே. (௨)

விளிதருநீருமண்ணுமலிசும்போடனல்காலுமாகி
யளிதருபேரருளானாகியவாதிமூர்த்தி
களிதருவண்டுபண்செய்யகமழ்கொன்றையினோடணிந்த
வொளிதருவெண்பிறையானுறையும்மிடமொற்றியூரே. (௩)

அரவமேகச்சதாகவசைத்தானலர்கொன்றையந்தார்
விரவிவெண்ணூலகிடந்தவிரையார்வரைமார்பனெந்தை
பரவுவார்பாவமெல்லாம்பறைத்துப்படர்புன்சடைமே
லுரவுநீரேற்றபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (௪)

விலகினார்வெய்யபாவம்விதியாலருள்செய்துநல்ல
பலகினாமொந்தைதாளந்தகுணிச்சமும்பாணியாலே
யலகினல்வீசிநீர்கொண்டடிமேலலரிட்டுமுட்டா
துலகினரேத்தநின்றானுறையும்மிடமொற்றியூரே. (௫)

கமையொடுநின்றசீரான்கழலுஞ்சிலம்புமொலிப்பச்
சுமையொடுமேலும்வைத்தான்விரிகொன்றையுஞ்சோமனையு
மமையொடுநீண்டதிண்டோளழகாயபொற்றோடிலங்க
வுமையொடுங்கூடநின்றானுறையும்மிடமொற்றியூரே. (௬)

நன்றியால்வாழ்வதுள்ளமுலகுக்கொருநன்மையாலே
கன்றினார்மும்மதிலுங்கருமால்வரையேசிலையாப்
பொன்றினார்வார்சுடலைப்பொடிநீறணிந்தாரழலும்
பொன்றினலெய்தபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (௭)

பெற்றியாற்பித்தனொப்பான்பெருமான் *(நமானுரிதோல்
சுற்றியான்சுத்திசூலஞ்சுடர்க்கண்ணுதனமேல்விளங்கத்
தெற்றியாற்செற்றரக்கன்னுடலைச்செழுமால்வரைக்கீ
ழொற்றியான்முற்றுமாளவானுறையுமிடமொற்றியூரே. (அ)

திருவினார்போதினானுந்திருமாலுமோர்தெய்வமுன்னித்
தெரிவினாற்காணமாட்டாதிகழ்சேவடிசிந்தைசெய்து
பரவினார்பாவமெல்லாம்பறையப்படர்பேரொளியோ
டொருவனாய்நின்றபெம்மானுறையுமிடமொற்றியூரே. (௯)

தோகையம்பீலிகொள்வார்துவர்க்கூறைகள்போர்த்துழல்வா
ராகமசெல்வனாரையலர்தூற்றுதல்காரணமாக்
கூகையம்மாக்களசொல்லைக்குறிக்கொள்ளன்மினேழுலகு
மோகைதந்தாளவல்லானுறையுமிடமொற்றியூரே. (௧0)

ஒண்பிறைமல்குசென்னியிறைவன்னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிண்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிபபணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-மாணிக்கத்தியாகர்-தேவியார்-வடிவுடையம்மை.

திருச்சாத்தமங்கை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க்கொன்றைமாலைதிளைக்குமதிசென்னிவைத்தீ
ரிருமலர்க்கண்ணிதன்னோடுடனாவதுமேற்பதொன்றே
பெருமலர்ச்சோலைமேகமுருஞ்சும்பெருஞ்சாத்தமங்கை
யருமலராதிமூர்த்தியயவந்தியமர்ந்தவனே. (௧)

பொடிதனைப்பூசுமார்பிற்புரிநூலொருபாற்பொருந்தக்
கொடியனசாயலாளோடுடனாவதுங்கூடுவதே
கடிமணமல்கிநாளுங்கமழும்பொழிற்சாத்தமங்கை
யடிகணக்கன்பரவவயவந்தியமர்ந்தவனே. (௨)

நூனலந்தங்குமார்பினுகர்நீறணிந்தேறதேறி
மானனநோக்கிதன்னோடுடனாவதுமாண்பதுவே
தானலங்கொண்டுமேகந்தவழும்பொழிற்சாத்தமங்கை
யானலந்தோய்ந்தவெம்மானயவந்தியமர்ந்தவனே. (௩)

மற்றவின்மால்வரையாமதிலெய்துவெண்ணீறுபூசிப்
புறறரவலகுலாளோடுடனாவதும்பொற்பதுவே
கற்றவர்சாததமங்கைநகர்கைதொழச்செய்தபாவம்
மற்றவர்நாளுமேத்தவயவந்தியமர்ந்தவனே. (௪)

வெந்தவெண்ணீறு சிவிடையேறியவேதகீதன்
பந்தணவும்விரலாளுடனாவதும்பாங்கதுவே
சந்தமாறங்கம்வேதநதரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
யந்தமாயாதியாகியயவந்தியமர்ந்தவனே. (௫)

வேதமாய்வேள்வியாகிவிளங்கும்பொருள்வீடதாகிச்
சோதியாய்மங்கைபாகநிலைதான்சொல்லலாவதொன்றே
சாதியான்மிக்கசீராற்றகுவார்தொழுஞ்சாத்தமங்கை
யாதியாய்நின்றபெம்மானயவந்தியமாந்தவனே. (௬)

இமையமெல்லாமிரியமதிலெய்துவெண்ணீறுபூசி
யுமையையோர்பாகம்வைத்தநிலைதானுன்னலாவதொன்றே
சமையமாறங்கம்வேதந்தரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
யமையவேறோங்குசீரானயவந்தியமர்ந்தவனே. (௭)

பண்ணுலாம்பாடல்வீணைபயிலவானோர்பரமயோகி
விண்ணுலாமாலவரையான்மகள்பாகமும்வேண்டினையே
தண்ணிலாவெண்மதியநதவழுமபொழிற்சாத்தமங்கை
யண்ணலாய்நின்றவெம்மானயவநதியமர்ந்தவனே. (௮)

பேரெழிற்றோளரக்கன்வலிசெற்றதும்பெண்ணோர்பாக
மீரெழிற்கோலமாகியுடனாவதுமேறபதொன்றே
காரெழிலவண்ணனோடுகனகம்மனையானுங்காணா
வாரழலவண்ணமங்கையயவநதியமாந்தவனே. (௯)

கங்கையோர்வார்சடைமேலடையப்புடையேகமழு
மங்கையோடொன்றிநின்றம்மதிதான்சொலலலாவதொன்றே
சங்கையிலாமறையோரவர்தாந்தொழுசாத்தமங்கை
யங்கையிற்சென்னிவைத்தாயயவந்தியமர்ந்தவனே. (௧௦)

மறையினோர்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னு
நிறையினாநீலநககனெடுமாநககொன்றுதொண்ட
ரறையுமூர்சாத்தமஙகையயவந்திமேலாய்ந்தபத்து
முறைமையாலேததவலலாரிமையோரிலுமுநதுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அயவந்தீசுவரர் - தேவியார் - மலர்க்கணம்பிகையம்மை.

சாத்தமங்கை என்பது - ஸ்தலம் — அயவந்தி என்பது - ஆலயம்.

திருக்குடமூக்கு - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியார்த்தயலே
மரவிரிபோதுமவ்வன்மணமல்லிகைகள்ளவிழுங்.

குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
யிரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே. (௧)

ஓத்தரவங்களோடுமொலிகாவிரியார்த்தயலே
பூத்தரவங்களோடும்புகைக்கொண்டடிபோற்றிநல்ல
கூத்தரவங்களோவாக்குழகன்குடமூக்கிடமா
யேத்தரவங்கள்செய்யவிருந்தானவனெம்மிறையே (௨)

மயில்பெடைபுல்கியாலமறைமேலமடவன்னமலக்கும் [க்
பயில்பெடைவண்டுபண்செய பழங்காவிரிப்பைம்பொழில்வாய்
குயில்பெடையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
யியலொடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (௩)

மிக்கரைதாழவேங்கையுரியார்த்துமையாள்வெருவ
வக்கரவாமையேனமருப்போடவைபூண்டழகார்
கொக்கரையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
மெக்கரையாருமேத்தவிருந்தானவனெம்மிறையே. (௪)

வடிவுடைவாட்டடங்கண்ணுமையஞ்சவோர்வாரணத்தைப்
பொடியணிமேனிமூடவுரிகொண்டவன்புன்சடையான்
கொடிநெடுமாடமோங்குங்குழகன்குடமூக்கிடமா
யிடிபடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (௫)

கழைவளர்கவ்வைமுத்தங்கமழ்காவிரியார்த்தயலே
தழைவளர்மாவினல்லபலவின்கனிகடயங்கு
குழைவளர்சோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
விழைவளர்மங்கையோடுமிருந்தானவனெம்மிறையே. (௬)

மலைமலிமங்கைபாகமகிழ்ந்தானெழில்வையமுய்ய
சிலைமலிவெங்கணையாற்சிதைத்தான்புரமூன்றினையுங்
குலைமலிதண்பலவின்பழம்வீழ்குடமூக்கிடமா
விலைமலிசூலமேந்தியிருந்தானவனெம்மிறையே. (௭)

நெடுமுடிபத்துடையநிகழ்வாளரக்கனுடலைப்
படுமிடர்கண்டயரப்பருமால்வரைக்கீழடர்த்தான்
கொடுமடறங்குதெங்குபழம்வீழ்குடமூக்கிடமா
விடுமணலெக்கர்சூழவிருந்தானவனெம்மிறையே. (௮)

ஆரெரியாழியானுமலரானுமளப்பரிய
நீரிரிபுன்சடைமேனிரம்பாமதிசூடிநல்ல
கூரெரியாகிநீண்டகுழகன்குடமூக்கிடமா
* வீரிருகோவணத்தோடிருந்தானவனெம்மிறையே. (௯)

* நான்குவேதங்களுங் கோவணமாதலின்ஈரிருகோவணமென்றருளிச்செய்தது

மூடியசீவரத்தாருமுட்டையர்மோட்டமணர்
நாடியதேவரெல்லாநயந்தேத்திய நன்னலத்தான்
கூடியகுன்றமெல்லாமுடையான்குடமூக்கிடமா
வேடலர்கொன்றைசூடியிருந்தானவனெம்மிறையே. (௧௦)

வெண்கொடிமாடமோங்குவிறல்வெங்குருநன்னகரா
ணண்பொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்தும்வல்லார்
விண்புடைமேனுலகம்வியப்பெய்துவார்வீடெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கும்பேசுவரர்-தேவியார்-மங்களநாயகியம்மை.

திருவக்கரை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான்கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினானொருபாகமும்பெண்ணமர்ந்தான்
மறையவன்றன்றலையிற்பலிகொள்பவன்வக்கரையி
லுறைபவனெங்களபிரானொளியார்கழலுள்குதுமே. (௧)

பாய்ந்தவன்காலனைமுன்பணைத்தோளியோர்பாகமதா
வேய்ந்தவனெண்ணிறைந்தவ்விமையோர்கடொழுதிறைஞ்ச
வாய்ந்தவன்முப்புரங்களெரிசெய்தவனவக்கரையிற
றேய்ந்திளவெண்பிறைசேர்சடையானடிசெப்புதுமே. (௨)

சந்திரசேகரனேயருளாயென்றுதண்விசும்பி
லிந்திரனுமுதலாவிமையோர்கடொழுதிறைஞ்ச
வந்தரமூவெயிலும்மனலாய்விழவோரம்பினான்
மந்தரமேருவில்லாவளைத்தானிடம்வக்கரையே. (௩)

நெய்யணிசூலமோடுநிறைவெண்மழுவும்மரவுங்
கையணிகொள்கையினான்கனன்மேவியவாடலினான்
மெய்யணிவெண்பொடியான்விரிகோவணவாடையின்மேன்
மையணிமாமிடற்றானுறையும்மிடம்வக்கரையே (௪)

ஏனவெண்கொம்பினொடும்மிளவாமையும்பூண்டுகந்து
கூனிளவெண்பிறையுங்குளிர்மத்தமுஞ்சூடிநல்ல
மானனமென்விழியாளொடும்வக்கரைமேவியவன்
றானவர்முப்புரங்களெரிசெய்ததலைமகனே. (௫)

கார்மலிகொன்றையொடுங்கதிர்மத்தமும்வாளரவு
நீர்மலியுஞ்சடைமேனிரம்பாமதிசூடிநல்ல
வார்மலிமென்முலையாளொடும்வக்கரைமேவியவன்
பார்மலிவெண்டலையிற்பலிகொண்டுழல்பான்மையனே. (௬)

கானணவும்மறிமானொருகையதோர்கைமழு வாட்
டேனணவுங்குழலாளுமைசேர்திருமேனியினான்
வானணவும்பொழில்சூழ்திருவக்கரைமேவியவ
னூனணவுந்தலையிற்பலிகொண்டுழலுத்தமனே. (எ)

இலங்கையர்மன்னனாகியெழில்பெறவிராவணனைக்
கலங்கவோர்கால்விரலாற்கதிர்பொன்முடிபத்தலற
நலங்கெழுசிந்தையனாயருள்போற்றநன்களித்த
வலங்கெழுமூவிலைவேலுடையானிடம்வக்கரையே. (அ)

காமனையீடழித்திட்டவன்காதலிசென்றிரப்பச்
சேமமேயுன்றனக்கென்றருள்செய்தவன்தேவர்பிரான்
சாமவெண்டாமரைமேலயனுந்தரணியளந்த
வாமனனும்மறியாவகையானிடம்வக்கரையே. (௯)

மூடியசீவரத்தார்முதிர்பிண்டியரென்றிவர்க
டேடியதேவாதமமாவிறைஞ்சப்படுதேவர்பிரான்
பாடியநான்மறையன்பலிக்கென்றுபல்வீதிதொறும்
வாடியவெண்டலைகொண்டுழல்வானிடம்வக்கரையே. (௧0)

தண்புனலும்மரவுஞ்சடைமேலுடையான்பிறைதோய்
வண்பொழில்சூழ்ந்தழகாரிறைவன்னுறைவக்கரையைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்வல்லாரவர்தம்பற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சந்திரசேகரேசுவரர்-தேவியார்-வடிவாம்பிகையம்மை.

திருவெண்டுறை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்றாதிரையன்னனலாடியவாரழகன்
பாதியோர்மாதினொடும்பயிலும்பரமாபரமன்
போதியலும்முடிமேற்புனலோடரவம்புனைந்த
வேதியன்மாதிமையால்விரும்புமிடம்வெண்டுறையே. (௧)

காலனையோருதையிலுயிர்வீடுசெய்வார்கழலான்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடியபண்டரங்கன்
மாலைமதியொடுநீரரவம்புனைவார்சடையான்
வேலனகண்ணியொடும்விரும்புமிடம்வெண்டுறையே. (௨)

படைநவில்வெண்மழுவாட்பலபூதப்படையுடையான்
கடைநவின்மும்மதிலும்மெரியூட்டியகண்ணுதலா
னுடைநவிலும்புலித்தோலுடையாடையினான்கடிய
விடைநவிலுங்கொடியான்விரும்புமிடம்வெண்டுறையே. (௩)

பண்ணமர்வீணையினான்பரவிப்பணிதொண்டர்கட
மெண்ணமர்சிந்தையினானிமையோர்க்குமறிவரியான்
பெண்ணமர்கூறுடையான்பிரமன்றலையிற்பலியான்
விண்ணவர்தம்பெருமான்விரும்புமிடம்வெண்டுறையே. (௪)

பாரியலும்பலியான்படியார்க்குமறிவரியான்
சீரியலும்மலையாளொருபாகமுஞ்சேரவைத்தான்
போரியலும்புரமூன்றுடன்பொன்மலைவெஞ்சிலையா
வீரியநின்றுசெய்தான்விரும்புமிடம்வெண்டுறையே. (௫)

ஊழிகளாயுலகாயொருவர்க்குமுணர்வரியான்
போழிளவெண்மதியும்புனலும்மணிபுன்சடையான்
யாழின்மொழியுமையாளவெருவவ்வெழில்வெண்மருப்பின்
வேழமுரித்தபிரான்விரும்புமிடம்வெண்டுறையே. (௬)

கன்றியகாலனையுமுருளக்கனலவாயலறிப்
பொன்றமுனிந்தபிரானபொடியாடியமேனியினான்
சென்றிமையோர்பரவுந்திகழ்சேவடியான்புலன்கள்
வென்றவனம்மிறைவனவிரும்புமிடம்வெண்டுறையே. (௭)

கரமிருபத்தினொடுங்கடுவெஞ்சினமாயெடுத்த
சிரமொருபத்துமுடையரக்கன்வலிசெற்றுகந்தான்
பரவவல்லார்வினைகளறுப்பானொருபாகமும்பெண்
விரவியவேடத்தினான்விரும்புமிடம்வெண்டுறையே. (௮)

கோலமலரயனுங்குளிர்கொண்டனிறத்தவனுஞ்
சீலமறிவரிதாத்திகழ்ந்தோங்கியசெந்தழலான்
மூலமதாகிநின்றானமுதிரபுன்சடைவெண்பிறையான்
வேலைவிடமிடற்றான்விரும்புமிடம்வெண்டுறையே. (௯)

நக்குருவாயவருந்துவராடைநயந்துடையாம்
பொக்கர்கடம்முரைகளவைபொய்யெனவெம்மிறைவன்
திக்குநிறைபுகழார்தருதேவர்பிரான்கனக
மிக்குயர்சோதியவனவிரும்புமிடம்வெண்டுறையே (௧0)

திண்ணமரும்புரிசைத்திருவெண்டுறைமேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ்தருசண்பையர்தந்தலைவ
னெண்ணமர்பல்கலையானிசைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார்வினையாயினபற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-வெண்டுறைநாதேசுவரர்- தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை.

திருப்பனந்தாள்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினான் றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்மிகுபீடுடைமால்விடையான
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே (க)

விரித்தவனான்மறையைமிக்கவிண்ணவர்வந்திறைஞ்ச
வெரித்தவன்முப்புரங்கள்ளியலேழுலகிலுயிரும்
பிரித்தவனசெஞ்சடைமேனிறைபேரொலிவெள்ளந்தன்னைத்
தரித்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (உ)

உடுத்தவன்மானுரிதோலகழலுள்கவல்லார்வினைகள்
கெடுத்தருள்செய்யவல்லானகிளர்கீதமோர்நான்மறையான்
மடுத்தவனஞ்சமுதாமிக்கமாதவர்வேள்வியைமுன்
றடுத்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (ங)

சூழ்தருவல்வினையுமுடறோன்றியபல்பிணியும்
பாழ்படவேண்டுதிரேனமிகவேத்துமின்பாய்புனலும்
போழிளவெண்மதியுமனல்பொங்கரவும்புனைந்த
தாழ்சடையானபனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (ச)

விடம்படுகண்டத்தினானிருள்வெள்வளைமங்கையொடு
நடம்புரிகொள்கையினானவனெம்மிறைசேருமிடம்
படம்புரிநாகமொடுதிரைபன்மணியுங்கொணருந்
தடம்புனல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (ரு)

விடையுயர்வெல்கொடியானடிவிண்ணொடுமண்ணுமெல்லாம்
புடைபடவாடவல்லானமிடிபூதமார்பல்படையான்
றொடைநவில்கொன்றையொடுவன்னிதுன்னெருக்கும்மணிந்த
சடையவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (சு)

மலையவன்முன்பயந்தமடமாதையோர்கூறுடையான்
சிலைமலிவெங்கணையாற்புரமூன்றவைசெற்றுகந்தா
னலைமலிதண்புனலும்மதியாடரவுமணிந்த
தலையவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (எ)

செற்றரக்கன்வலியைத்திருமெல்விரலாலடர்த்து
முற்றும்வெண்ணீறணிந்ததிருமேனியன்மும்மையினான்
புற்றரவம்புலியின்னுரிதோலொடுகோவணமுந்
தற்றவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (அ)

வின்மலைநாணரவம்மிகுவெங்கனலம்பதனாற்
புன்மைசெய்தானவர்தம்புரம்பொன்றுவித்தான்புனித

ன்மலர்மேலயனுங்கண்ணுநாரணனுமறியாத்
தன்மையனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௧௦)

ஆதர்சமணரொடும்மடையைந்துகில்போர்த்துழலும்
நீதருரைக்குமொழியவைகொள்ளன்மினின்மலனூர்
போதவிழும்பொய்கைதனுட்டிகழ்புள்ளிரியப்பொழில்வாய்த்
தாதவிழும்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௧௧)

தண்வயல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரத்துக்
கண்ணயலேபிறையானவன்றனைமுனகாழியர்கோ
னண்ணியசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடலவல்லாரவர்தம்வினைபற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சடையப்பேசுவரர்-தேவியார்-பெரியநாயகியம்மை.

திருச்செங்காட்டங்குடி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே. (௧)

பொன்னம்பூங்கழிக்கானற்புணர்துணையோடுடன்வாழு
மன்னங்காளன்றில்காளகன்றும்போய்வருவீர்காள்
கன்னவிறோட்சிறுத்தொண்டன்கணபதீச்சரமேய
வின்னமுதனிணையடிக்கீழெனதல்லலுரையீரே. (௨)

குட்டத்துங்குழிக்கரையுங்குளிர்பொய்கைக்கிடத்தகத்து
மிட்டத்தாலிரைதேருமிருஞ்சிறகின்மடநாராய்
சிட்டன்சீர்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வட்டவார்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (௩)

கானருகும்வயலருகுங்கழியருகுங்கடலருகு
மீனிரியவருபுனலிலிரைதேர்வெண்மடநாராய்
தேனமர்தார்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வானமருஞ்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (௪)

ஆரலாஞ்சுறவமேய்ந்தகன்கழனிச்சிறகுலாத்தரும்
பாரலவாய்ச்சிறுகுருகேபயிறாவிமடநாராய்
சீருலாஞ்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
நீருலாஞ்சடையார்க்கென்னிலைமைசென்றுரையீரே. (௫)

குறைக்கொண்டாரிடர்தீர்த்தல்கடனன்றேகுளிர்பொய்கைத்
துறைக்கெண்டைகவர்குருகேதுணைபிரியா... நாராய்

கறைக்கண்டன்பிறைச்சென்னிக்கணபதீச்சரமேய
சிறுத்தொண்டன்பெருமான்சீரருளொருநாள்பெறலாமே. (௬)

கருவடியபசுங்கால்வெண்குருகேயொண்கழிநாரா
யொருவடியாளிரந்தாளென்றொருநாளசென்றுரையீரே
செருவடிதோட்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
திருவடிதன்றிருவருளேபெறலாமோதிறத்தவர்க்கே. (௭)

கூராரலிரைதேர்ந்துகுளமுலவிவயல்வாழுந்
தாராவேமடநாராயதமியேற்கொன்றுரையீரே
சீராளன்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
பேராளன்பெருமான்றனருளொருநாளபெறலாமே. (௮)

நறப்பொலிபூங்கழிக்கானனவிலைக்குருகேயுலகெல்லா
மறப்பலிதோந்துழலவார்க்கெனனலாகோடலழகியதே
சிறப்புலவனசிறுதடுதாண்டனசெஙகாட்டஙகுடிமேய
பிறப்பிலிபேர்பிதற்றிநின்றிழிகோவெமபெருநலமே (௯)

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பனசிறுதடுதாண்டனவன்வேண்ட
வந்தண்பூங்கலிக்காழியடிகளையேயடிபரவுஞ்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழுரைபபோரதககோரே. (௧௦-௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருவேளூர் பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாவுங்கழுக்குன்றுமாயமலையவைவாழவார
விண்ணோருமண்ணோரும்வியந்தேத்தவருளசெயவார
கண்ணாவாருலகுக்குக்கருத்தானார்புரமெரித்த
பெண்ணாணாம்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (௧)

கருமானினுரியுடையாகரிகாடரிமவானார்
மருமானாரிவரென்றுமடவாளோடுடனாவா
பொருமானவிடையூர்வதுடையாரவெண்பொடிப்பூசும்
பெருமானார்பிஞ்ஞகனார்பெருவேளூர்பிரியாரே. (௨)

குணக்குந்தென்றிசைக்கண்ணுங்குடபாலும்வடபாலுங்
கணக்கென்னவருள்செயவார்கழிந்தோர்க்குமொழிந்தோர்க்கும்
வணக்கஞ்செய்மனத்தராயவணங்காதார்தமக்கென்றும்
பிணக்கஞ்செய்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (௩)

இறைக்கொண்டவளையாளோடிருகூறாயொருகூறு
மறைக்கண்டத்திறைநாவர்மதிலெய்தசிலைவல்லா
கறைக்கொண்டமிடறுடையர்கனல்கிளருஞ்சடைமுடிமேற்
பிறைக்கொண்டபெருமானார்பெருவேளூர்பிரியாரே. (௪)

விழையாதார்விழைவார்போல்விரதங்கள்பலபேசிக்
குழையாதார்குழைவார்போற்குணங்கலலபலகூறி
யழையாவுமலற்றாவுமடிவீழ்வார்தமக்கென்றும்
பிழையாதபெருமானார்பெருவேளூர்பிரியாரே. (ரு)

விரித்தார்நான்மறைப்பொருளையுமையஞ்சவிறல்வேழ
முரித்தாராமுரிபோர்த்துமதின்மூன்றுமொருகணையா
லெரித்தாராமிமைப்பளவிலிமையோர்கடொழுதிறைஞ்சப்
பெருத்தாரெம்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (சா)

மறப்பிலாவடிமைக்கண்மனம்வைப்பார்தமக்கெல்லாஞ்
சிறப்பிலார்மதிலெய்தசிலைவல்லாரொருகணையா
லிறப்பிலார்பிணியில்லார்தமக்கென்றுங்கேடிலார்
பிறப்பிலாப்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (எ)

எரியார்வேற்கடற்றானையிலங்கைக்கோன்றனைவீழ
முரியார்ந்ததடந்தோள்களடர்த்துகந்தமுதலாளர
வரியாரவெஞ்சிலைபிடித்துமடவாளையொருபாகம்
பிரியாதபெருமானார்பெருவேளூர்பிரியாரே. (அ)

சேணியலுநெடுமாலுந்திசைமுகனுஞ்செருவெய்திக்
காணியலவையற்றிலராயக்கனலவண்ணரடியிணைக்கீழ்
நாணியவாதொழுதேத்தநாணுமேயருள்செய்து
பேணியவெம்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (கூ)

புற்றேறியுணங்குவார்புகையார்ந்ததுகிலபோர்ப்பார்
சொற்றேறவேண்டாநீர்தொழுமின்கள்சுடர்வண்ண
மற்றேறும்பரிமாவும்மதகளிறுமிவையொழியப்
பெற்றேறும்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (க0)

பைம்பொன்சீர்மணிவாரிப்பலவுஞ்சேர்கனியுந்தி
யம்பொன்செய்மடவரலாரணிமல்குபெருவேளூர்
நம்பன்றன்கழல்பரவிநவில்கின்றமறைஞான
சம்பந்தன்றமிழ்வல்லார்க்கருவினைநோய்சாராவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரியாவீசுவரர்-தேவியார்-மின்னனையாளம்மை.

திருக்கச்சிநெறிக்காரைக்காடு-பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினிற்
போரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவர்
காரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. (க)

காருருமணிமிடற்றார்கரிகாடருடைதலைகொண்
டூரூரன்பலிக்குழலவாருழைமானினுரியதளர்
தேருருநெடுவீதிச்செழுங்கச்சிமாநகர்வாய
நீருருமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே (௨)

கூறணிந்தார்கொடியிடையைக்குளிர்சடைமேலிளமதியோ
டாறணிந்தாராடரவம்பூண்டுகந்தாரானவெள்ளை
யேறணிந்தார்கொடியதன்மேலென்பணிந்தாவரைமார்பி
னீறணிந்தார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே (௩)

பிறைநவின்றசெஞ்சடைகள்பின்றாழப்பூதங்கள்
மறைநவின்றபாடலோடாடலராயமழுவேந்திச
சிறைநவின்றவண்டினங்கடங்கனிவாயதடேனகத்து
நிறைநவின்றகலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே (௪)

அன்றாலின்கீழிருந்தங்கறம்புரிந்தவருளாளர்
குன்றாதவெஞ்சிலையிற்கோளரவநாணகொளுவி
யொன்றாதார்புரமூன்றுமோங்கெரியில்வெந்தவிய
நின்றாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே (௫)

பன்மலர்கள்கொண்டடிக்கீழ்வானோர்களபணிந்திறைஞ்ச
நன்மையிலாவல்லவுணர்நகர்மூன்றுமொருநொடியில
வின்மலையினாண்கொளுவிவெங்கணையாலெய்தழித்த
நின்மலனார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௬)

புற்றிடைவாளரவினொடுபுனைகொன்றைமதமத்த
மெற்றொழியாவலைபுனலோடிளமதியமேந்துசடைப்
பெற்றுடையாரொருபாகம்பெண்ணுடையாரகண்ணமரு
நெற்றியினார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௭)

ஏழுகடல்சூழ்தென்னிலங்கைக்கோமானையெழிலவரைவாய்ந்
தாழ்விரலாலூன்றியதோர்தன்மையினார்நன்மையினா
ராழ்கிடங்குஞ்சூழ்வயலுமதிலும்புல்கியழகமரு
நீண்மறுகிற்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே (௮)

ஊண்டானுமொலிகடனஞ்சுடைதலையிற்பலிகொள்வர்
மாண்டாதமெலும்பணிவர்வரியரவோடெழிலாமை
பூண்டாருமோரிருவரறியாமைப்பொங்கெரியாய
நீண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௯)

குண்டாடிச்சமண்படுவார்கூறைதனைமெய்போர்த்து
மிண்டாடித்திரிதருவாருரைப்பனகண்மெய்யல்ல
வண்டாருங்குழலாளைவரையாகத்தொருபாகங்
கண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௰)

கண்ணாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தி
தண்ணாருமபொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன
பண்ணாருந்தமிழ்வல்லாரபரலோகத்திருப்பாரே (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-காரைத்திருநாதேசுவரர்-தேவியார-காரார்குழலியம்மை.

திருவேட்டக்குடி - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்குமலர்க்கொன்றைவிரிசடைமேலமதியரவங்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காவாலிகணேகழல்க
டொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடாப்பவளந்
தெண்டிரைக்கண்கொணாநதெறிபுந்திருவேட்டக்குடியாரே. (க)

பாய்திமிலர்வலையோடுமீனவாரிப்பயினறெங்குங்
காசினியிற்கொணாநதட்டுங்கைதைசூழ்கழிக்கானற்
போயிரவிற்பேயோடுமேபுறங்காட்டிற்புரிநதழகார்
தீயெரிகைமகிழ்ந்தாருந்திருவேட்டக்குடியாரே (உ)

தோத்திரமாமணலிலிங்கந்தொடங்கியவானிரையிற்பால்
பாத்திரமாவாட்டுதலும்பரஞ்சோதிபரிந்தருளி
யாத்தமெனமறைநாலவர்க்கறமபுரிநூலன்றுரைத்த
தீர்த்தமல்குசடையாருந்திருவேட்டக்குடியாரே. (ங)

கலவஞ்சேர்கழிக்கானலகதிர்முத்தங்கலந்தெங்கு
மலவஞ்சேர்ணவாரிக்கொணாநதெறியுமகனறுறைவாய
நிலவஞ்சேர்நுண்ணிடையமேரிழையாளவளோடுந
திலதஞ்சேர்நெற்றியினார்திருவேட்டக்குடியாரே (ச)

வங்கமார்கடலலறப்பருவரைபோடரவுழலச்
செங்கண்மாலகடையவெழுநஞ்சருந்துசிவமூர்த்தி
யங்கநான்மறைநாலவாக்கறமபொருளின்பயனளித்த
திங்கள்சேர்சடையாருந்திருவேட்டக்குடியாரே. (ரு)

நாவாயபிறைச்சென்னிநலந்திகழுமிலங்கிப் ?
கோவாதநித்திலங்கள்கொணர்ந்தெறியுங்குளிர்கான
லேவாரும்வெஞ்சிலையாலெயின்மூன்றுமெரிசெய்த
தேவாதிதேவனார்திருவேட்டக்குடியாரே. (சா)

பானிலவும்பங்கயத்துப்பைங்கானலவெண்குருகு
கானிலவுமலர்ப்பொய்கைகைதல்சூழ்கழிக்கானன
மானின்விழிமலைமகளோடொருபாகம்பிரிவரியார்
தேனிலவுமலர்ச்சோலைத்திருவேட்டக்குடியாரே. (எ)

துறையுலவுகடலோதஞ்சுரிசங்கமிடறிப்போய்
நறையுலவும்பொழிற்புன்னைநன்னீழற்கீழமரு
மிறைபயிலுமிராவணன்றன்றலைபத்துமிருபதுதோ
டிறலழியவடர்த்தாருந்திருவேட்டககுடியாரே. (அ)

அருமறைநான்முகத்தானுமகலிடநீரேற்றானு
மிருவருமாயளப்பரியவெரியுருவாயநீண்டபிரான்
வருபுனலினமணியுந்திமறிதிரையார்சுடர்பபவளத
திருவுருவில்வெண்ணீற்றார்திருவேட்டக்குடியாரே (கூ)

இகழ்ந்துரைக்குஞ்சமணர்களுமிடுபோர்வைச்சாக்கியரும்
புகழ்ந்துரையாப்பாவிகள்சொற்கொள்ளேன்மின்பொருளென்ன
நிகழ்ந்திலங்குவெண்மணலினிறைததுண்டப்பிறைக்கற்றை
திகழ்ந்திலங்குசெஞ்சடையார்திருவேட்டக்குடியாரே. (க0)

தெண்டிரைசேர்வயலுடுத்ததிருவேட்டக்குடியானைத
தண்டலைசூழ்கலிக்காழித்தமிழ்ஞானசம்பந்த
னெண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போ
யுண்டுபெயிலவானவரோடுயர்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருமேனியழகேசுவரர் - தேவியார் - சாந்தநாயகியம்மை.

(*)

திருப்பிரமபுரம்-வழிமொழித்திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணமதின்முப்
புரமெரியவ்ரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரனிறைகொள்வருசுருதிசிரவுரையினாற்
பிரமனுயரரனெழில்கொள்சரணவிணைபரவவளர்பிரமபுரமே. (க)

தாணுமிகுவாணிசைகொடாணுவியர்பேணுமதுகாணுமளவிற்
கோணுநுதனீணயனிகோணில்பிடிமாணுமதுநாணும்வகையே
யேணுகரிபூணழியவாணியல்கொண்மாணிபதிசேணமரர்கோன்
வேணுவினையேணிநகர்காணிறிவிகாணநடுவேணுபுரமே. (உ)

பகலொளிசெய்நகமணியைமுகைமலரைநிகழ்சரணவகவுமுனிவர்க்
ககலமலிசகலகலைமிகவுரைசெய்முகமுடையபகவனிடமாம்
பகைகளையும்வகையிலறுமுகவிறையைமிகவருளநிகரிலிமையோர்
புகவுலகுழவெழிறிகழநிகழலர்பெருகுபுகலிநகரே. (ங)

அங்கண்மதிகங்கைநதிவெங்கணரவங்களெழிறங்குமிதழித்
துங்கமலர்தங்குசடையங்கிநிகரெங்களிறைதங்குமிடமாம்

வெங்கதிர்விளங்குலகமெங்குமெதிர்பொங்கெரி புலன்கள்களைவோர்
வெங்குருவிளங்கியுமைபங்கர்சரணங்கள்பணிவெங்குருவதே (ச)

ஆணியல்வுகாணவனவாணவியலபேணியெதிர்பாணமழைசேர்
தூணியறநாணியறவேணுசிலைபேணியறநாணிவிசயன்
பாணியமர்பூணவருண்மாணுபிரமாணியிடமேணுமுறையிற்
பாணியுலகாளமிகவாணினமலிதோணிநிகர்தோணிபுரமே. (ரு)

நிராமயபராபரபுராதனபராவுசிவராகவருளென்
றிராவுமெதிராயதுபராநினைபுராணனமராதிபதியா
மராமிசையிராதெழிறராயரபராயணவராகவுருவா
தராயனைவிராயெரிபராயமிகுதராயமொழிவிராயபதியே. (சா)

அரணையுறுமுரணர்பலர்மரணமவர்விரணமதிலாமலிபடைக்
கரம்விசிறுவிரகனமர்கரணனுயாபரனெறிகொள்கரனதிடமாம்
பரவமுதுவிரவவுடலபுரளமுறுமரவையறிசிரமறியவச
சிரமரனசரணமவைபரவவிருநிரகமமாசிரபுரமதே. (எ)

அறமழிவுபெறவுலகுதெறுபுபவனவிறலழியநறுவிவிரன்மா
மறையின்ஞெலிமுறைமுறைலசெயபிறையெயிறனுறவருளுமிறைவனிடமாங்
குறைவின்மிகநிறைதையுழிமறையமரநிறையருளமுறையொடும்வரும்
புறவனெதிர்நிறைநிலவுபொறையனுடலபெறவருளும்புறவமதுவே (அ)

விண்பயிலமண்பகிரிவண்பிரமனெண்பெரியபண்படைகொண்மால்
கண்பரியுமொண்பொழியநுண்பொருள்கடண்புகழகொள்கணடனிடமா
மண்பரியுமொண்பொழியநுண்புகர்புண்பயிலவிண்படரவச்
சண்பைமொழிபண்பமுனிகண்பழிசெயபண்புகளைசண்பைநகரே. (கூ)

பாழியுறைவேழநிகர்பாழமணர்சூழுமுடலாளருணரா
வேழினிசையாழினமொழியேழையவளவாழுமிறைதாழுமிடமாங்
கீழிசைகொண்மேலுலகிலவாழரைசுசூழறைசுவாழவரனுக்
காழியசிலகாழிசெயவேழுலகிலூழிவளர்காழிநகரே. (க0)

நச்சரவுகச்செனவசைச்சுமதியுச்சியின்மிலைச்சொருகையான்
மெய்ச்சிரமணைசசுலகினிச்சமிடுபிசசையமர்பிச்சனிடமா
மச்சமதநச்சிமதமசிறுமியைச்செயதவவச்சவிரகக்
கொச்சைமுரவச்சர்பணிபச்சுரர்கணச்சிமிடைகொச்சைநகரே. (கக)

ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிகுழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமனகரப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகையவே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகயிலாயம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வாளவரிகோளபுலிசீளதுரிதாளின்மிசைநாளுமகிழ்வ
ராளுமவர்வேளநகர்போளயிலகோளகளிறாளிவரவிற
லாளமராதாளமதாகூளியெழமீளிமிளிர்தூளிவளாபொற்
காளமுகின்மீளவிருள்கீளவிரிதாளகயிலாயமலையே. (க)

புற்றரவுபற்றியகைநெற்றியதுமற்றொருகணொற்றைவிடையன்
செற்றதெயிலுற்றதுமையற்றவர்கணற்றுணைவனுற்றநகர்தான்
சுற்றுமணிபெற்றதொளிசெற்றமொடுகுற்றமிலதெற்றெனவினாய்க்
கற்றவர்கள்சொற்றொகையின்முற்றுமொளிபெற்றகயிலாயமலையே. (உ)

சிங்கவரைமங்கையர்கடங்களனசெங்கைநிறைகொங்குமலர்தூ
யெங்கள்வினைசங்கையவையிங்ககலவங்கமொழியெங்குமுளவாய்த
திங்களிருளொங்கவொளிவிங்கமிருகொங்கலொடுதங்கவயலே
கங்கையொடுபொங்குசடையெங்களிறைதங்குகயிலாயமலையே (ந)

முடியசடைபிடியதொருவடியமழுவுடையசெடியுடையதலையில
வெடியவினைகொடியர்கெடவிடுசிலம்பிநொடியமகிழடிகளிடமாங
கொடியகுரலுடையவிடைகடியநடியடியிணைபிடியினதிரக
கடியகுரனெடியமுகிலமடியவதரடிகொளகயிலாயமலையே. (ச)

குடங்கையினுடங்கெரிதொடர்ந்தெழவிடங்கிளாபடங்கொளரவ
மடங்கொளிபடர்ந்திடநடந்தருவிடங்கனிடந்தண்முகில்போய்த
தடங்கடறொடர்ந்துடனுடங்குவவிடங்கொண்மிடைந்தகுரலாற்
கடுங்கலின்முடங்களைநுடங்கரவொடுங்குகயிலாயமலையே. (ரு)

ஏதமிலபூதமொடுகோதைதுணையாதிமுதல்வேதவிதிநாதன
நீதமொடுநீதிபலவோதிமறவாதுபயிறாதனகர்தான்
றாதுபொதிபோதுவிடவூதுசிறைமீதுதுளிகூதனலிபக
காதன்மிகுசோதிகிளர்மாதுபயில்கேதுகயிலாயமலையே (சு)

சென்றுபலவென்றுலவுபுன்றலையர்துன்றலொடுமொன்றியுடனே
நின்றமரரென்றுமிறைவன்றனடிசென்றுபணிகின்றநகர்தான்
துன்றுமலர்பொன்றிகழ்செயகொன்றைவிரைதென்றலொடுசென்றுகமழக்
கன்றுபிடிதுன்றுகளிறென்றிவைமுன்னின்றகயிலாயமலையே. (எ)

கருப்பிடைநெருப்பெழதருக்கொடுசெருச்செய்தபருத்தகளிறின்
பொருப்பிடைவிருப்புறவிருக்கையையொருக்குடனரக்கனுணரா
தொருத்தியைவெருக்குறவெருட்டலுநெருக்கெனநிருத்தவிரலாற்
கருத்திலவொருத்தனையெருத்திறநெரித்தகயிலாயமலையே. (அ)

பரியதிரைபெரியபுனலவலியபுலியுரியதுடைபரிசையுடையன்
வரியவளையரியகணியுருவினொடுபுரிவினவர்பிரிவினகர்தான்

பெரியவெரியுருவமதுதெரியவுருபுரிவுதருமருமையதனாற்
கரியவனுமரியமறைபுரியவனுமருவுகயிலாயமலையே (௯)

அண்டர்தொழுதண்டிபணிகண்டடிமைகொண்டவிறைதுண்டமதியோ
டுண்டைபுனைவுண்டசடைமுண்டதரசண்டவிருள்கண்டரிடமாங்
குண்டமணவண்டரவாமண்டைகையிலுண்டுழறிமிண்டுசமயங்
கண்டவர்கள்கொண்டவர்கள்பண்டுமறியாதகயிலாயமலையே. (௰)

அந்தண்வரைவந்தபுனறந்ததிரைசந்தனமொடுந்தியகிலுங்
கந்தமலர்கொந்தினொடுமுந்திபலசிந்துகயிலாயமலைமே
லெந்தையடிவந்தணுகுசந்தமொடுசெந்தமிழிசைந்தபுகலிப்
பந்தனுரைசிந்தைசெய்வந்தவினைநைந்துபரலோகமெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்காளத்தி-திருவிராகம்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவி
லேனமிளமானினொடுகிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினாற்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. (௧)

முதுசினவிலவுணர்புரமூன்றுமொருநொடிவரையின்மூளவெரிசெய்
சதுரர்மதிபொதிசடையர்சங்கரர்விரும்புமலைதன்னைவினவி
லெதிரெதிரவெதிர்பிணையவெழுபொறிகள்சிதறவெழிலேனமுழுதக்
கதிர்மணியினவளரொளிகொளிருளகலநிலவுகாளத்திமலையே. (௨)

வல்லைவருகாளியைவகுத்துவலியாகுமிதுதாருகனைநீ
கொல்லெனவிடுத்தருள்புரிந்தசிவன்மேவுமலைகூறிவினவிற்
பலபலவிருங்கனி * பருங்கிமிகவுண்டவைநெருங்கியினமாய்க்
கல்லதிரநின்றுகருமந்திவிளையாடுகாளத்திமலையே (௩)

வேயனையதோளுமையோர்பாகமதுவாகவிடையேறிசடைமேற்
றூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னைவினவில்
வாயகலசமாகவழிபாடுசெயும்வேடன்மலராகுநயனங்
காயகணையினாலிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. (௪)

மலையின்மிசைதனின்முகில்போலவருவதொருமதகரியைம்மழைபோல
கொலைசெய்துமையஞ்சவுரிபோர்த்தசிவன்மேவுமலைகூறிவினவிலறக்
லலைகொள்புனலருவிபலசுனைகள்வழியிழியவயனிலவுமுதுவேய்
கலகலெனவொளிகொள்கதிர்முத்தமவைசிந்துகாளத்திமலையே. (௫)

---

* பருகி-எனச்சொல்வது—விகாரவகையாற் பருங்கியெனநின்றது.

பாரதம்விளங்கியபகீரதனருந்தவமுயன்றபணிகண்
டாரருள்புரிந்தலைகொள்கங்கைசடையேற்றவரன்மலையைவினவில்
வாரதரிருங்குறவர்சேவலின்மடுத்தவரெரித்தவிறகிற்
காரகிலிரும்புகைவிசும்புகமழ்கின்றகாளத்திமலையே. (௬)

ஆருமெதிராதவலியாகியசலந்தரனையாழியதனா
லீரும்வகைசெய்தருள்புரிந்தவனிருந்தமலைதன்னைவினவி
லூருமரவம்மொளிகொண்மாமணியுமிழ்ந்தவையுலாவிவரலாற்
காரிருள்கடிந்துகனகம்மெனவிளங்குகாளத்திமலையே. (௭)

எரியனையசுரியமயிர்ராவணனையீடழியவெழில்கொள்விரலாற்
பெரியவரையூன்றியருள்செய்தசிவன்மேவுமலைபெற்றிவினவில்
வரியசிலைவேடுவர்களாடவர்கணீடுவரையூடுவரலாற்
கரியினொடுவரியுழுவையரியினமும்வெருவுகாளத்திமலையே. (௮)

இனதளவிலிவனதடியிணையுமுடியறிதுமெனவிகலுமிருவர்
தனதுருவமறிவரியசகலசிவன்மேவுமலைதன்னைவினவிற்
புனவர்புனமயிலனையமாதரொடுமைந்தருமணம்புணருநாட
கனகமெனமலர்களணிவேங்கைகணிலாவுகாளத்திமலையே. (௯)

நின்றுகவளம்பலகொள்கையரொடுமெய்யிலிடுபோர்வையவருந்
நன்றியறியாதவகைநின்றசிவன்மேவுமலைநாடிவினவிற்
குன்றின்மலிதுன்றுபொழினின்றகுளிர்சந்தின்முறிதின்றுகுலவக்
கன்றினொடுசென்றுபிடிநின்றுவிளையாடுகாளத்திமலையே. (௰)

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவ
னாடுமலிநீடுபுகழ்ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்கணல்லர்பரலோகமெளிதே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாடுதுறை - திருவிராகம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்.

ஏனவெயிறாடரவோடென்புவரியாமையிவைபூண்டிளையராய்க்
கானவரிநீடுழுவையதளுடைபடர்சடையர்காணியெனலா
மானபுகழ்வேதியர்களாகுதியின்மீதுபுகைபோகியழகார்
வானமுறுசோலைமிசைமாசுபடமூசுமயிலாடுதுறையே. (௧)

அந்தண்மதிசெஞ்சடையர்கங்கணெழில்கொன்றையொடணிந்தழகரா
மெந்தமடிகட்கினியதானமதுவேண்டிலெழிலார்பதியதாங்
கந்தமலிசந்திநொடுகாரகிலும்வாரிவருகாவிரியுளால்
வந்ததிரையுந்தியெதிர்மந்திமலர்சிந்துமயிலாடுதுறையே. (௨)

தோளின்மிசைவரியரவநஞ்சழலவீக்கிமிகநோக்கரியராய்
மூளைபடுவெண்டலையிலுண்டுமுதுகாடுறையுமுதல்வரிடமாம்
பாளைபடுபைங்கமுகுசெங்கனியுதிர்த்திடநிரந்துகமழ்பூ
வாளைகுதிகொள்ளமடல்விரியமணநாறுமயிலாடுதுறையே. (௩)

ஏதமிலாரியமறைமலையர்மகளாகியவிலங்குநுதலொண்
பேதைதடமார்பதிடமாகவுறைகின்றபெருமானதிடமாங்
காதன்மிகுகவ்வையொடுமவ்வலவைகூடிவருகாவிரியுளான்
மாதர்மறிதிரைகளபுகலெறியவெறிகமழுமயிலாடுதுறையே. (௪)

பூவிரிகதுப்பின்மடமங்கையரகந்தொறுநடந்துபலிதேர்
பாவிரியிசைக்குரியபாடல்பயிலும்பரமர்பழமையெனலாங்
காவிரிநுரைத்திருகரைக்குமணிசிந்தவரிவண்டுகவர
மாவிரிமதுக்கிழியமந்திகுதிகொள்ளுமயிலாடுதுறையே. (௫)

கடந்திகழ்கருங்களிறுரித்துமையுமஞ்சமிகநோக்கரியராய்
விடந்திகழுமூவிலைநலவேலுடையவேதியர்விரும்புமிடமாந் [ய்
தொடர்ந்தொளிர்கிடந்ததொருசோதிமிகுதொண்டையெழில்கொண்டதுவர்வா
மடந்தையர்குடைந்தபுனலவாசமிகநாறுமயிலாடுதுறையே. (௬)

அவ்வதிசையாருமடியாருமுளராகவருள்செய்தவர்கண்மே
லெவ்வமறவைகலுமிரங்கியெரியாமெமதீசனிடமாங்
கவ்வையொடுகாவிரிகலந்துவருதெண்கரைநிரந்துகமழ்பூ
மவ்வலொடுமாதவிமயங்கிமணநாறுமயிலாடுதுறையே. (௭)

இலங்கைநகர்மன்னன்முடியொருபதினொடிருபதுதோணெரியவிரலால்
விலங்கலிலடர்த்தருள்புரிந்தவரிருந்தவிடம்வினவுதிர்களேற்
கலங்கநுரையுந்தியெதிர்வந்தகயமூழ்கிமலர்கொண்டுமகிழ
மலங்கிவருகாவிரிநிரந்துபொழிகின்றமயிலாடுதுறையே. (௮)

ஒண்டிறலிநான்முகனுமாலுமிகநேடியுணராதவகையா
லண்டமுறவங்கியுருவாகிமிகநீண்டவரனூரதிடமாங்
கெண்டையிறைகொண்டுகெளிறுருடனிருந்துகிளர்வாயறுதல்சேர்
வண்டன்மணலகிண்டிமடநாரைவிளையாடுமயிலாடுதுறையே. (௯)

மிண்டுதிறலமணரொடுசாக்கியருமலர்தூற்றமிக்கதிறலோ [ர்
னிண்டைகுடிகொண்டசடையெங்கள்பெருமானதிடமென்பரொழிலா
தெண்டிரைபரந்தொழுகுகாவிரியதென்கரைநிரந்துகமழ்பூ
வண்டவைதிளைக்கமதுவந்தொழுகுசோலைமயிலாடுதுறையே. (௧௦)

நிணந்தருமயானநிலவானமதியாததொருசூலமொடுபேய்க்
கணந்தொழுகபாலிகழலேத்திமிகவாய்த்ததொருகாதன்மையினான்
மணந்தண்மலிகாழிமறைஞானசம்பந்தன்மயிலாடுதுறையைப்
புணர்ந்ததமிழ்பத்துமிசையாலுரைசெய்வார்பெறுவர்பொன்னுலகமே

திருச்சிற்றம்பலம்.

திருவைகா-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகையா
லேழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமாந்
தாழையிளநீர்முதியகாய்கமுகின்வீழ்நிரைதாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிகளூறிவயல்சேறுசெயும்வைகாவிலே. (௧)

அண்டமுறுமேருவரையங்கிகணைநாணரவதாகவெழிலார்
விண்டவாதமுப்புரமெரித்தவிகிர்தன்னவன்விரும்புமிடமாம்
புண்டரிகமாமலர்கள்புக்குவிளையாடுவயல்சூழ்தடமெலாம்
வண்டினிசைபாடவழகார்குயின்மிழற்றுபொழில்வைகாவிலே (௨)

ஊனமிலராகியுயர்நற்றவமெய்கற்றவைபுணர்ந்தவடியார்
ஞானமிகநின்றுதொழநாளுமருள்செய்யவல்லநாதனிடமா
மானவயல்சூழ்தருமல்குழியருகேபொழில்கடோறுமழகார்
வானமதியோடுமழைநீண்முகில்கள்வந்தணவும்வைகாவிலே. (௩)

இன்னவுருவின்னநிறமென்றறிவதேலரிதுநீதிபலவுந்
தன்னதுருவாமெனமிகுத்ததவநீதியொடுதானமர்விட
முன்னைவினைபோம்வகையினான்முழுதுணர்ந்துமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசேருமவயல்வைகாவிலே (௪)

வேதமொடுவேள்விபலவாயினமிகுத்துவிதியாறுசமய
மோதியுமுணர்ந்துமுளதேவர்தொழநின்றருள்செயொருவனிடமா
மேதகையகேதகைகள்புன்னையொடுஞாழலவைமிக்கவழகான
மாதவிமணங்கமழவண்டுபலபாடுபொழில்வைகாவிலே (௫)

நஞ்சமுதுசெய்தமணிகண்டனமையாளுடையஞானமுதல்வன்
செஞ்சடையிடைப்புனலகரந்தசிவலோகனமர்கின்றவிடமா
மஞ்சுடரொடாறுபதமேழினிசையெண்ணரியவண்ணமுளவாய்
மைந்தரொடுமாதாபலருந்தொழுதுசேருமவயல்வைகாவிலே (௬)

நாளுமிகுபாடலொடுஞானமிகுநல்லமலர்வல்லவகைதாற்
றோளினொடுகைகுளிரவேதொழுமவர்க்கருள்செய்சோதியிடமா
நீளவளர்சோலைதொறுநாளிபலதுன்றுகனிநின்றதுதிர
வாளைகுதிகொள்ளமதுநாறமலர்விரியுமவயல்வைகாவிலே. (௭)

கையிருபதோடுமெய்கலங்கிடவிலங்கலையெடுத்தகடியோ
னையிருசிரங்களையொருங்குடனெரித்தவழகன்றனிடமாங்
கையின்மலர்கொண்டுநல்லகாலையொடுமாலைகருதிப்பலவிதம்
வையகமெலாமருவிநின்றுதொழுதேத்துமெழில்வைகாவிலே. (௮)

அந்தமுதலாதிபெருமானமரர்கோனையயன்மாலுமிவர்க
ளெந்தைபெருமானிறைவனென்றுதொழநின்றருள்செயீசனிடமாஞ்

சிந்தைசெய்துபாடுமடியார்பொடிமெய்பூசியெழுதொண்டரவர்கள்
வந்துபலசந்தமலர்முந்தியணையும்பதிநல்வைகாவிலே. (௯)

நாசனெனையாளுடையவெந்தைபெருமானிறைவனென்றுதனையே
பேசுதல்செயாவமணர்புத்தரவர்சித்தமணையாவவனிடந்
தேசமதெலாமருவிநின்றுபரவித்திகழநின்றபுகழோன
வாசமலரானபலதூவியணையும்பதிநல்வைகாவிலே. (௧௦)

முற்றுநமையாளுடையமுக்கண்முதல்வன்றிருவைகாவிலதனைச்
செற்றமலிஞானசிரபுரத்தலைவனஞானசம்பந்தனுரைசெ
யுற்றதமிழ்மாலையீரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமரலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெருமபுகழோடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-வில்லவனேசர்-தேவியார்-வனசவைவல்லியம்மை.

திருமாகறல்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளைகழனிமிகுகடைசியர்கள்பாடல்விளையாடலரவ
மங்குலொடுநீள்கொடிகண்மாடமலிநீடுபொழின்மாகறலுளான்
கொங்குவிரிகொன்றையொடுகங்கைவளர்திங்களணிசெஞ்சடையினான்
செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே (௧)

கலையின்ஒலிமங்கையர்கள்பாடலொலியாடல்கவினெய்திப்ழநார்
மலையினிகர்மாடமுயர்நீள்கொடிகள்வீசுமலிமாகறலுளா
னிலையின்மலிவேலனையசூலம்வலனேந்தியெரிபுன்சடையினு
ணலைகொள்புனல்லேந்துபெருமானடியையேத்தவினைபகலுமிகவே (௨)

காலையொடுதுந்துமிகள்சங்குகுழல்யாழ்முழவுகாமருவுசீர்
மாலைவழிபாடுசெய்துமாதவர்கள்ஏத்திமகிழ்மாகறலுளான்
றோலையுடைபேணியதன்மேலோர்சுடர்நாகமசையாவழகிதாப்
பாலையனநீறுபுனைவானடியையேத்தவினைபறையுமுடனே. (௩)

இங்குகதிர்முத்தினொடுபொன்மணிகளுந்தியெழின்மெய்யுளுடனே
மங்கையருமைந்தர்களுமன்னுபுனலாடிமகிழ்மாகறலுளான
கொங்குவளர்கொன்றைகுளிர்திங்களணிசெஞ்சடையினானடியையே
நுங்கள்வினைதீரமிகவேத்திவழிபாடுநுகராவெழுமினே. (௪)

துஞ்சுநறுநீலமிருணின்றவொளிதோன்றுமதுவார்கழனிவாய்
மஞ்சுமலிபூம்பொழிலின்மயில்களணடமாடமலிமாகறலுளான
வஞ்சமதயானையுரிபோர்த்துமகிழ்வானோர்மழுவாளன்வளரு
நஞ்சமிருள்கண்டமுடைநாதனடியாரைநலியாவினைகளே. (௫)

மன்னுமறையோர்களொடுபல்படிமமாதவர்கள்கூடியுடனா
யின்னவகையாலினிதிறைஞ்சியிமையோரிலெழுமாகறலுளான்

மின்னைவிரிபுன்சடையின்மேன்மலர்கள்கங்கையொடுதிங்களெனவே
யுன்னுமவர்தொல்வினைகளொல்கவுயர்வானுலகமேறலெளிதே. (௬)

வெய்யவினைநெறிகள்செலவந்தணையுமேல்வினைகள்வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானன்மதுவார்கழனிமாகறலுளானெழிலதார்
கையகரிகாலவரையின்மேலதுரிதோலுடையமேனியழகா
ரையனடிசேர்பவரையஞ்சியடையாவினைகளகலுமிகவே. (௭)

தூசுதுகில்நீள்கொடிகண்மேகமொடுதோய்வனபொன்மாடமிசையே
மாசுபடுசெய்கைமிகமாதவர்களோதிமலிமாகறலுளான்
பாசுபதவிச்சைவரிநச்சரவுகச்சையுடைபேணியழகார்
பூசுபொடியீசனெனவேத்தவினைநிற்றலிலபோகுமுடனே (௮)

தூயவிரிதாமரைகணெய்தல்கழுநீர்குவளைதோன்றமருவுண
பாயவரிவண்டுபலபண்முரலுமோசைபயின்மாகறலுளான்
சாயவிரலூன்றியவிராவணனதன்மைகெடநின்றபெருமா
னாயபுகழேத்துமடியார்கள்வினையாயினவுமகலவெளிதே (௯)

காலினலபைங்கழலகணீண்முடியின்மேலுணர்வுகாமுறவினன்
மாலுமலரானுமறியாமையெரியாகியுயர்மாகறலுளா
னாலுமெரிதோலுமுரிமாமணியநாகமொடுகூடியுடனா
யாலும்விடையூர்தியுடையடிகளடியாரையடையாவினைகளே (௧௦)

கடைகொணெடுமாடமிகவோங்குகமழ்வீதிமலிகாழியவர்கோ
னடையும்வகையாற்பரவியரனையடிகூடுசம்பந்தனுரையான்
மடைகொள்புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே
யுடையதமிழ்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகளொல்குமுடனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அடைக்கலங்காத்தநாதர்-தேவியார்-புவனநாயகியம்மை.

திருப்பட்டீச்சரம்-திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறைசூடன்மதிபல்வளையோர்பாகமதின்மூன்றோர்கணையாற்
கூடவெரியூட்டியெழில்காட்டிநிழல்கூடுபொழில்சூழ்பழசையுண்
மாடமழபாடியுறைபட்டீச்சரமேயகடிகட்டரவினார்
வேடநிலைகொண்டவரைவீடுநெறிகாட்டிவினைவீடுமவரே. (௧)

நீரின்மலிபுன்சடையர்நீளரவுகச்சையதுநச்சிலையதோர்
கூரின்மலிசூலமதுவேந்தியுடைகோவணமுமானினுரிதோல்
காரின்மலிகொன்றைவிரிதார்கடவுள்காதல்செய்துமேயநகர்தான்
பாரின்மலிசீர்பழசைபட்டீச்சரமேத்தவினைபற்றறுமே. (௨)

காலைமடவார்கள்புனலாடுவதுகல்வைகடியார்மறுகெலா
மாலைமணநாறுபழையாறைமழபாடியழகாயமலிசீர்ப்

பாலையனநீறுபுனைமார்பனுறைபட்டீசரமேபரவுவார்
மேலையொருமால்கடல்கள்போற்பெருகிவிண்ணுலகமாளுமவரே. ()

கண்ணின்மிசைநண்ணியிழிவிப்பமுகமேத்துகமழ்செஞ்சடையினான்
பண்ணின்மிசைநின்றுபலபாணிபடவாடவலபான்மதியினான்
மண்ணின்மிசைநேரின்மழபாடிமலிபட்டீசரமேமருவுவார்
விண்ணின்மிசைவாழுமிமையோரொடுடனாதலதுமேவலெளிதே.(௪)

மருவமுழவதிரமழபாடிமலிமத்தவிழவார்க்கவளையார்
பருவமழைபண்கவர்செய்பட்டீசரமேயபடர்புன்சடையினான்
வெருவமதயானையுரிபோர்த்துமையையஞ்சவருவெள்விடையினா
னுருவமெரிகழல்கடொழவுள்ளமுடையாரையடையாவினைகளே. ()

மறையினொலிகீதமொடுபாடுவனபூதமடிமருவிவிரவார்
பறையினொலிபெருகநிகழ்நட்டமமர்பட்டீசரமேயபணிகூர்
பிறையினொடுமருவியதோர்சடையினிடையேற்றபுனறோற்றநிலையா
மிறைவனடிமுறைமுறையினேத்துமவர்தீத்தொழில்களிலலர்மிகவே

பிறவிபிணிமூப்பினொடுநீங்கியிமையோருலகுபேணலுறுவார்
துறவியெனுமுள்ளமுடையார்கள்கொடிவீதியழகாயதொருசீ
ரிறைவனுறைபட்டீசரமேத்தியெழுவாாகள்வினையேதுமிலவாய்
நறவவிரையாலுமொழியாலும்வழிபாடுமறவாதவவரே. (௭)

நேசமிகுதோள்வலவனாகியிறைவன்மலையைநீக்கியிடலுந்
நீசன்விறல்வாட்டிவரையுற்றதுணராதநிரம்பாமதியினா
னீசனுறைபடடீசரமேத்தியெழுவார்கள்வினையேதுமிலவாய்
நாசமறவேண்டுதலினண்ணலெளிதாமமர்விண்ணுலகமே (௮)

தூயமலரானுநெடியானுமறியாரவன்றோற்றநிலையின்
னேயவகையானதனையாரதறிவாரணிகொண்மார்பினகலம்
பாயநலநீறதணிவானுமைதனொடுமுறைபட்டீசரமே
மேயவனதீரடியுமேத்தவெளிதாகுநலமேலுலகமே (௯)

தடுக்கினையிடுக்கிமடவார்களிடுபிண்டமதுவுண்டுழறருங்
கடுப்பொடியுடற்கயவர்கத்துமொழிகாதல்செய்திடாதுகமழ்சேர்
மடக்கயல்வயற்கொண்மழபாடிநகர்நீடுபழையாறையதனுட
படைக்கொருகரத்தன்மிகுபட்டீசரமேத்தவினைபற்றறுதலே (௧௦)

மந்தமலிசோலைமழபாடிநகர்நீடுபழையாறையதனிற்
பந்தமுயர்வீடுநலபட்டீசரமேயபடர்புன்சடையனை
யந்தண்மறையோரினிதுவாழ்புகலிஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வினைநிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பட்டீச்சரநாதர்-தேவியார் - பல்வளைநாயகியம்மை.

திருத்தேவூர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

காடுபயில்வீடுமுடையோடுகலன்மூடுமுடையாடைபுலிதோ
றேடுபலியூணதுடைவேடமிகுவேதியர்திருந்துபதிதா
ணாடகமதாடமஞைபாடவரிகோடல்கைமறிப்பநலமார்
சேடுமிகுபேடையனமூடிமகிழமாடமிசைதேவூரதுவே (௧)

சோளரவுகொன்றைநகுவெண்டலையெருக்குவனிகொக்கிறகொடும்
வாளரவுதங்குசலமகட்குலவுசெஞ்சடைவரத்திறைவனூர்
வேளரவுகொங்கையிளமங்கையர்களகுங்குமமவிரைக்குமணமார்
தேளரவுதென்றறெருவெங்குநிறைவொன்றிவருதேவூரதுவே. (௨)

பண்டடவுசொலிமலைவல்லியுமைபங்கனெமையாளுமிறைவ
னெண்டடவுவானவரிறைஞ்சுகழலோனினிதிருந்தவிடமாம்
விண்டடவுவார்பொழிலுகுத்தநறவாடிமலர்சூடிவிரையார்
* செண்டடவுமாளிகைசெறிந்ததிருவொன்றிவளர்தேவூரதுவே. (௩)

மாசின்மனநேசர்தமதாசைவளர்சூலதரன்மேலையிமையோ
ரீசன்மறைமோதியெரியாடிமிகுபாசுபதன்மேவுபதிதான்
வாசமலர்கோதுகுயிலவாசகமுமாதரவார்பூவைமொழியுந்
தேசவொலிவீணையொடுகீதமதுவீதிநிறைதேவூரதுவே (௪)

கானமுறுமானமறியன்றனையுரிபோர்வைகனலாடல்புரிவோ
னேனவெயிறாமையிளநாகமவளாமாபிணிமையோர்தலைவனூர்
வானளவுசூதமிளவாழைமகிழ்மாதவிபலாநிலவிவார்
தேனமதுவுண்டுவரிவண்டுமருளாடிவருதேவூரதுவே (௫)

ஆறினொடுகீறுமதியேறுசடையேறனுடையார்நகர்கடான்
சீறுமவைவேறுபடநீறுசெய்தநீறனமையாளுமரனூர்
வீறுமலருறுமதுவேறிவளர்வாயவிளைகின்றகழனிச்
சேறுபடுசெங்கயல்விளிப்பவிளவாளைவருதேவூரதுவே. (௬)

கன்றியெழுவன்றிறிகழ்துன்றுபுரமன்றவியநின்றுநகைசே
யென்றனதுசென்றுநிலையெந்தைதனதந்தையமரின்பநகர்தான்
முன்றின்மிசைநின்றபலவின்கனிகடின்றுகறவைகுருளைகள்
சென்றிசையநின்றுதுளிவொன்றவிளையாடிவளர்தேவூரதுவே. (௭)

ஓதமலிகின்றதெனிலங்கையரையன்மலிபுயங்கனெரியப்
பாதமலிகின்றவிரலொன்றினிலடர்த்தபரமன்றனதிடம்
போதமலிகின்றமடவார்கணடமாடலொடுபொங்குமுரவஞ்
சேதமலிகின்றகரம்வென்றிதொழிலாளர்புரிதேவூரதுவே. (௮)

வண்ணமுகிலன்னவெழிலண்ணலொடுசுண்ணமலிவண்ணமலர்மே
னண்ணவனுமெண்ணரியவிண்ணவர்கள்கண்ணவனலங்கொள்பதிதான்

---

* சேண் - என்பது—செண - எனக்குறுகின்றது.

வண்ணவனநுண்ணிடையினெண்ணரியவண்ணநடையின்மொழியினார்
திண்ணவனமாளிகைசெறிந்தவிசையாழ்மருவுதேவூரதுவே. (௯)

பொச்சமமர்பிச்சையிலச்சமணுமெச்சமறுபோதியருமா
மொச்சைபயிலிச்சைகடிபிச்சன்மிகுநச்சரவன்மொச்சுநகர்தான்
மைச்சின்முகிலவைச்சபொழில் (௧௦)

துங்கமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதுன்றுகுழலார்
செங்கயலகண்மங்கையுமைநங்கையொருபங்கனமர்தேவூரதன்மேற்
பைங்கமலமங்கணிகொடிண்புகலிஞானசம்பந்தனுரைசெய்
சங்கமலிசெந்தமிழ்களபத்துமிசைவல்லவர்கள்சங்கையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பத்தாவதிற்குறைவு - கிலமானதிறசோந்தது.

———(*)———

திருச்சண்பைநகர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றமபலம்.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெயயவளாதீபமொடுதூபமலிவாய்மையதனு
லந்தியமாசந்திபலவாச்சனைகள்செயயவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (௧)

அங்கமவிரிதுத்தியரவாமைவிரவாரமமர்மார்பிலழகன்
பங்கயமுகத்தரிவையோடுபிரியாதுபயில்கின்றபதிதான்
பொங்குபரவைத்திரைகொணர்ந்துபவளத்திரள்பொலிந்தவயலே
சங்குபுரியிப்பிதரளத்திரளபிறங்கொளிகொள்சண்பைநகரே. (௨)

போழுமதிதாழுந்திபொங்கரவுதங்குபுரிபுன்சடையினன்
யாழின்மொழிமாழைவிழியேழையிளமாதினொடிருந்தபதிதான்
வாழைவளர்ஞாழனமகிழ்மன்னுபுனைதுன்னுபொழின்மாடுமடலார்
தாழைமுகிழ்வேழமிகுதந்தமெனவுந்துதகுசண்பைநகரே. (௩)

கொட்டமுழவிட்டவடிவட்டணைகட்டநடமாடிகுலவும்
பட்டநுதலகட்டுமலர்மட்டுமலிபாவையொடுமேவுபதிதான்
வட்டமதிதட்டுபொழிலுட்டமதுவாயமைவழுவாதமொழியாற்
சட்டகலையெட்டுமருவெட்டும்வளர்தத்தைபயில்சண்பைநகரே. (௪)

பணங்கெழுவுபாடலினொடாடல்பிரியாதபரமேட்டிபகவ
னணங்கெழுவுபாகமுடையாகமுடைபன்பர்பெருமானதிடமா
மிணங்கெழுவியாடுகொடிமாடமதினீடுவிரையார்புறவெலாந்
தணங்கெழுவியேடலர்கொடாமரையிலன்னம்வளர்சண்பைநகரே. ()

பாலனுயிர்மேலணவுகாலனுயிர்பாறவுதைசெய்தபரம
னாலுமயில்போலியலியாயிழைதனோடுமமர்வெய்துமிடமா

மேலைமலிசோலையினவண்டுமலர்கிண்டிநறவுண்டிசைசெயச்
சாலிவயல்கோலமலிசேலுகளநீலம்வளர்சண்பைநகரே. (௬)

பாயதனாலமழைவீழாமைதாழ்யினுமவிளைவுதான்மிகவுடை
மண்பொயதனாலவளமிலாதொழியினுந்தமதுவண்மைவழுவா
ருண்பகரவாருலகினூழிபலதோறுநிலையானபதிதான்
சண்பைநகரீசனடிதாழுமடியார்தமதுதன்மையதுவே. (௭)

வரைக்குலமகட்கொருமறுக்கமவருவித்தமதியிலவலியுடை
யரக்கனதுரக்கரசிரத்துறவடர்த்தருளபுரிந்தவழக
ணிருக்கையதருக்கன்முதலானவிமையோர்குழுமியெழவிழவினிற்
றருக்குலநெருக்குமலிதண்பொழில்கள்கொண்டலனசண்பைநகரே.

நீலவரைபோலநிகழ்கேழலுருநீளபறவைநேருருவமா
மாலுமலரானுமறியாமைவளர்தீயுருவமானவரதன்
சேலுமினவேலுமனகண்ணியொடுநண்ணுபதிசூழ்புறவெலாஞ்
சாலிமலிசோலைகுயிலபுள்ளினொடுகிள்ளைபயிலசண்பைநகரே. (௯)

போதியர்கள்பிண்டியர்கள்போதுவழுவாதவகையுண்டுபலபொய
யோதியவர்கொண்டுசெய்வதொன்றுமிலைநன்றதுணர்வீருரைமினோ
வாதியெமையாளுடையவரிவையொடுபிரிவிலியமர்ந்தபதிதான்
சாதிமணிதெண்டிரைகொணர்ந்துவயலபுகவெறிகொளசண்பைநகரே

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசங்கரன்மகிழ்ந்தமருவூர்
சாரின்முரறெண்கடலவிசுமபுறமுழங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிகின்றபுகழ்நின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே (௧௧)

திருச்சிற்றம்பலம்

*

திருவேதவனம்-திருவிராகம்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

கற்பொலிசுரத்தினெரிகானினிடைமாநடமதாடுமடவா
ரிற்பலிகொளப்புகுதுமெந்தைபெருமானதிடமென்பர்புவிமேன்
மற்பொலிகலிக்கடன்மலைக்குவடெனத்திரைகொழித்தமணியை
விற்பொலிநுதற்கொடியிடைக்கணிகைமார்கவரும்வேதவனமே. (௧)

பண்டிரைபௌவப்புணரியிற்கனகமாலவரையைநட்டரவினைக்
கொண்டுகயிறிற்கடையவந்தவிடமுண்டகுழகன்றனிடமாம்
வண்டிரைநிழற்பொழிலின்மாதவியின்மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே. (௨)

காரியன்மெலோதிநதிமாதைமுடிவார்சடையில்வைத்துமலையார்
நாரியொருபான்மகிழுநம்பருறைவென்பர்நெடுமாடமறுகிற்

றேரியல்விழாவிறெருவிதிண்பணிலமொண்படகநாளுமிசையால்,
வேரிமலிவார்குழன்மாதரிசைபாடலொலிவேதவனமே. (௩)

நீறுதிருமேனியின்மிசைத்தொளிபெறத்தடவிவந்திடவமே
யேறியுலகங்கடொறும்பிச்சைநுகரிச்சையரிருந்தபதியா
மூறுபொருளின்றமிழியற்கிளவிதேருமடமாதருடனார்
வேறுதிசையாடவர்கள்கூறவிசைதேருமெழில்வேதவனமே. (௪)

கத்திரிகைதுத்திரிகறங்குதுடிதக்கையொடிடக்கைபடக
மெத்தனையுலப்பிலகருவித்திரளலம்பவிமையோர்கள்பரச
வொத்தறமிதித்துநடமிட்டவொருவர்க்கிடமதென்பருலகின்
மெய்த்தகையபத்தரொடுசித்தர்கண்மிடைந்துகளும்வேதவனமே. (௫)

மாலைமதிவாளரவுகொன்றைமலர்துன்றுசடைநின்றுசுழலக்
காலையிலெழுந்தகதிர்தாரகைமடங்கவனலாடுமரனூர்
சோலையின்மடங்கடொறுமிண்டியினவண்டுமதுவுண்டிசைசெயா
வேலையொலிசங்குதிரைவங்கசுறவங்கொணரும்வேதவனமே. (௬)

வஞ்சகமனத்தவுணர்வல்லரணமன்றவியவார்சிலைவளைத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரனாதிபெருமானதிடமாங்
கிஞ்சுகவிதழ்க்கனிகளூறியசெவ்வாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவர்க்கணநிறைந்துமிடைவேதவனமே. (௭)

முடித்தலைகள்பத்துடைமுருட்டுருவரக்கனைநெருக்கிவிரலா
லடித்தலமுன்வைத்தலமரக்கருணைவைத்தவனிடம்பலதுயர்
கெடுத்தலைநினைத்தறவியற்றுதல்கிளர்ந்துபுலவாணர்வறுமை
விடுத்தலைமதித்துநிதிநல்குமவர்மல்குபதிவேதவனமே. (௮)

வாசமலர்மேவியுறைவானுநெடுமாலுமறியாதநெறியைக்
கூசுதல்செயாதவமணாதரொடுதேரர்குறுகாதவரனூர்
காசுமணிவார்கனகநீடுகடலோடுதிரைவார்துவலைமேல்
வீசுவலைவாணரவைவாரிவிலைபேசுமெழில்வேதவனமே. (௯-௰)

மந்தமுழவங்கடல்வளங்கெழுவுகாழிபதிமன்னுகவுணி
வெந்தபொடிநீறணியும்வேதவனமேவுசிவனின்னருளினாற்
சந்தமிவைதண்டமிழினின்னிசையெனப்பரவுபாடலுலகிற்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வேதவனம் என்பது வேதாரணியம்.

திருமாணிகுழி-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பரையன்மங்கையொருபங்கர்புனற்கங்குசடைமேல்
வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடங்

கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடரள்ளல்வயல்வாய்
மன்னியிளமேதிகள்படிந்துமனைசேருதவிமாணிகுழியே. (க)

சோதிமிகுநீறதுமெய்பூசியொருதோலுடைபுனைந்துதெருவே
மாதர்மனைதோறுமிசைபாடிவசிபேசுமரனூர்மகிழ்விடந்
தாதுமலிதாமரைமணங்கமழவண்டுமுரறண்பழனமிக்
கோதுமலிவேலைபுடைசூழுலகினீடுதவிமாணிகுழியே. (உ)

அம்பனையகண்ணுமைமடந்தையவளஞ்சிவெருவச்சினமுடைக்
கம்பமதயானையுரிசெய்தவரனூர்கருதிமேயவிடமாம்
வம்புமலிசோலைபுடைசூழமணிமாடமதினீடியழகா
ரும்பரவர்கோனகரமென்னமிகமன்னுதவிமாணிகுழியே. (௩)

நித்தநியமத்தொழிலனாகிநெடுமாலகுறளாகிமிகவுஞ்
சித்தமதொருக்கிவழிபாடுசெயநின்றசிவலோகனிடமாங்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதுகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே (௪)

மாசின்மதிசூடுசடைமாமுடியர்வல்லசுரர்தொன்னகரமுன்
நாசமதுசெய்துநல்வானவர்களுக்கருள்செய்நம்பனிடமாம்
வாசமலிமென்குழன்மடந்தையர்கண்மாளிகையின்மன்னியழகா
ரூசன்மிசையேறியினிதாகவிசைபாடுதவிமாணிகுழியே. (௫)

மந்தமலர்கொண்டுவழிபாடுசெயுமாணியுயிர்வவ்வமனமாய்
வந்தவொருகாலனுயிர்மாளவுதைசெய்தமணிகண்டனிடமாஞ்
சந்தினொடுகாரகில்சுமந்துதடமாமலர்கள்கொண்டுகெடில
முந்துபுனல்வந்துவயல்பாயுமணமாருதவிமாணிகுழியே. (௬)

எண்பெரியவானவர்கணின்றுதுதிசெய்யவிறையேகருணையா
யுண்பரியநஞ்சதனையுண்டுலகமுய்யவருளுத்தமனிடம்
பண்பயிலும்வண்டுபலகிண்டிமதுவுண்டுநிறைபைம்பொழிலின்வா
யொண்பலவினின்கனிசொரிந்துமணநாறுதவிமாணிகுழியே. (எ)

எண்ணமதுவின்றியெழிலார்கைலைமாமலையெடுத்ததிறலார்
திண்ணியவரக்கனைநெரித்தருள்புரிந்தசிவலோகனிடமாம்
பண்ணமருமென்மொழியினார்பணைமுலைப்பவளவாயழகதா
ரொண்ணுதன்மடந்தையர்குடைந்துபுனலாடுதவிமாணிகுழியே. (அ)

நேடுமயனோடுதிருமாலுமுணராவகைநிமிர்ந்துமுடிமே
லேடலவுதிங்கண்மதமத்தமிதழிச்சடையெமீசனிடமா
மாடலவுமல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திகுரவின்
னூடலவுபுன்னைவிரைதாதுமலிசேருதவிமாணிகுழியே. (௯)

மொட்டையமணாதர்முதுதேரர்மதியில்லிகண்முயன்றனபடும்
முட்டைகண்மொழிந்தமொழிகொண்டருள்செய்யாதமுதல்வன்றனிடமா

மட்டைமலிதாழையிளநீர்முதியவாழையில்விழுந்தவதரில்
லொட்டமலிபூகநிரைதாறுதிரவேறுதவிமாணிகுழியே. (௧௦)

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமே
லந்திமதிசூடியவெமானையடிசேருமணிகாழிநகரான
சந்தநிறைதண்டமிழ்தெரிந்துணருஞானசமபந்தனதுசொன்
முந்தியிசைசெயதுமொழிவாரகளுடையார்கணெடுவானநிலனே(௧௧)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கமேனியீசுவரா - தேவியாா - மாணிக்கவல்லியம்மை.

திருவேதிகுடி-திருவிராகம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவொடாமைமனவெனபுநிரைபூண்பரிடவ
மேறுவரியாவருமிறைஞ்சுகழலாதியரிருநதவிடமாஞ்
சாறுவிரிபூகமலிவாழைவிரைநாறவிளவாளைமடுவில்
வேறுபிரியாதுவிளையாடவளமாருமவயலவேதிகுடியே. (௧)

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலானையுரிவை
மற்புரிபுயத்தினிதுமேவுவரெநாளும்வளரவானவர்தொழத்
துற்பெரியநஞ்சமுதமாகமுனயினறவரியன்றதொருசீர்
வெற்பரையன்மங்கையொருபஙகர்நகரெனபர்திருவேதிகுடியே (௨)

போழுமதிபூணரவுகொன்றைமலாதுன்றுசடைவென்றிபுகமேல்
வாழுநதிதாழுமருளாளரிருளார்மிடறர்மாதரிமையோா
சூழுமிரவாளாதிருமார்பில்விரிநூலர்வரிதோலருடைமேல
வேழவுரிபோர்வையினர்மேவுபதியெனபர்திருவேதிகுடியே. (௩)

காடர்கரிகாலர்கனல்கையரனன்மெய்யருடலசெய்யர்செவியிற்
றோடர்தெரிகீளர்சரிகோவணவராவணவர்தொலலைநகர்தான்
பாடலுடையார்களடியார்கண்மலரோடுபுனலகொண்டுபணிவாா
வேடமொளியானபொடிபூசியிசைமேவுதிருவேதிகுடியே (௪)

சொக்கர்துணைமிக்கவெயிலுக்கறமுனிநதுதொழுமூவர்மகிழத்
தக்கவருள்பக்கமுறவைத்தவரனிடமெனிதுதநகுநகாதான்
கொக்கரவமுற்றபொழில்வெற்றிநிழல்பற்றிவரிவண்டிசைகுலா
மிக்கமரர்மெச்சியினிதச்சமிடர்போகநலகும்வேதிகுடியே. (௫)

செய்யதிருமேனிமிசைவெண்பொடியணிந்துகருமானுரிவைபோர்த்
தையமிடுமென்றுமடமங்கையொடகந்திரியுமண்ணலிடமாம்
வையம்விலைமாறிடினுமேறுபுகழ்மிக்கிழிவிலாதவகையார்
வெய்யமொழிதண்புலவருக்குரைசெயாதவவர்வேதிகுடியே. (௬)

உன்னியிருபோதுமடிபேணுமடியார்தமிடரொல்கவருளித்
துன்னியொருநால்வருடனாலிழலிருந்ததுணைவன்றனிடமாங்

ன்னியரொடாடவர்கண்மாமணம்விரும்பியருமங்கலமிக
மின்னியலுநுண்ணிடைநன்மங்கையரியற்றுபதிவேதிகுடியே. (எ)

உரக்கரநெருப்பெழநெருக்கிவரைபற்றியவொருத்தன்முடிதோ
ளரக்கனையடர்த்தவனிசைக்கினிதுநல்கியருளங்கணனிட
முருக்கிதழ்மடக்கொடிமடந்தையருமாடவருமொய்த்தகலவை
விரைக்குழன்மிகக்கமழவிண்ணிசையுலாவுதிருவேதிகுடியே. (அ)

பூவின்மிசையந்தணனொடாழிபொலியங்கையனுநேடவெரியாய்த்
தேவுமிவரல்லரினியாவரெனனின்றுதிகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல்கேள்வியதரூதகொடையாளர்பயில்வா
மேவரியசெல்வநெடுமாடம்வளர்வீதிநிகழ்வேதிகுடியே. (௯)

வஞ்சமணர்தேரர்மதிகேடர்தமனத்தறிவிலாதவர்மொழி
தஞ்சமெனவென்றுமுணராதவடியார்கருதுசைவனிடமா
மஞ்சுபுலன்வென்றறுவகைப்பொருடெரிந்தெழுவிசைக்கிளவியால்
வெஞ்சினமொழித்தவர்கண்மேவிநிகழ்கின்றதிருவேதிகுடியே (௧0)

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்கணல்லவர்களென்னநிகழ்வெய்திமிமையோ
ரந்தவுலகெய்தியரைசாளுமதுவேசரதமாணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதபுரீசுவரர்-தேவியார்-மங்கையர்க்கரசியம்மை.

திருக்கோகரணம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானயலவர்க்கியலிசைப்பொருள்களாகியெனது
ணன்றுமொளியாநெறிசிறந்தபொனமுடிககடவுணண்ணுமிடமா
மொன்றியமனத்தடியாகூடியிமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருங்கிவிரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே. (௧)

பேதைமடமங்கையொருபங்கிடமிகுத்திடவமேறியமரர்
வாதைபடவண்கடலெழுந்தவிடமுண்டசிவனவாழுமிடமா
மாதரொடுமாடவர்களவந்தடியிறைஞ்சிநிறைமாமலர்கடூய்க்
கோதைவரிவண்டிசைகொள்கீதமுரல்கின்றவளர்கோகரணமே (௨)

முறைத்திறமுறப்பொருடெரிந்துமுனிவர்க்கருளியாலநிழல்வாய்
மறைத்திறமறத்தொகுதிகண்டுசமயங்களைவகுத்தவனிடந்
துறைத்துறைமிகுத்தருவிதூமலர்சுமந்துவரையுந்திமதகைக்
குறைத்தறையிடக்கரிபுரிந்திடறுசாரன்மலிகோகரணமே. (௩)

இலைத்தலைமிகுத்தபடையெண்கரம்விளங்கவெரிவீசிமுடிமே
லலைத்தலைதொகுத்தபுனலசெஞ்சடையிலவைத்தவழகன்றனிடமா
மலைத்தலைவகுத்தமுழைதோறுமுழைவாளரிகள்கேழலகளிறு
குலைத்தலைமடப்பிடிகள்கூடிவிளையாடிநிகழ்கோகரணமே. (௪)

தொடைத்தலைமலைத்திதழிதுன்னியவெருக்கலரிவன்னிமுடியின்
சடைத்தலைமிலைச்சியதபோதனனெமாதிபயிலகின்றபதியாம்
படைத்தலைபிடிததுமறவாள்ரொடுவேடர்களபயின்றுகுழுமிக்
குடைதத்தலைநதிபபடியகினறுபழிதீரநலகுகோகரணமே. (௫)

நீறுதிருமேனிமிசையாடிநிறைவார்கழலசிலம்பொலிசெய
வேறுவிளையாடவிசைகொண்டிடுபலிக்குவருமீசனிடமா
மாறுசமயங்களும்விரும்பியடிபேணியரனுகடமிகக்
கூறுமனமவேறிரதிவநதடியாரடபம்வருகோகரணமே. (௬)

கல்லவடமொநதைகுழருளமலிகொக்கரையரக்கரைமிசை
பல்லபடநாகம்விரிகோவணவரானுநகனொனபரயலே
நல்லமடயாதரானுமமுநவிறறியதிருத்தமுழுகக்
கோல்லவிடாநோயகறரபபுகலகொடுததருளுகோகரணமே (௭)

வரைததலைநெருக்கியமுருட்டிருணிறத்தவனவாயகளலறவ்
விரற்றலையுகிர்ச்சிறிதுவைததபெருமனினிதுமேவுமிடமாம்
புரைத்தலைகெடுத்தமுனிவாணர்பொலிவாகிவினைதீரவதனமேற
குரைத்தலைகழறபணியவோமபவிலகுமபுகைசெயகோகரணமே. ()

வில்லிமையினல்விறலரக்கனுயிர்செற்றவனும்வேதமுதலோ
னில்லையுளதென்றியலிநேடவெறியாகியுயர்கின்றபரனூ
ரொல்லையில்வரைத்தகடல்வட்டமுமிறைஞ்சிநிறைவாசமுறுவக்
கொல்லையிலிருங்குறவாதம்மயிர்புலர்ததிவளாகோகரணமே (௯)

நேசமின்மனச்சமணர்தேரர்கணிரநதமொழிபொயகளகல்வித்
தாசைகொண்மனத்தையடியாரவர்தமக்கருளுமங்கணனிடம்
பாசமதறுத்தவனியறபெயாகள்பத்துடையமன்னனவனைக்
கூசவகைகண்டுபினவர்க்கருளகணலகவலகோகரணமே. (௧0)

கோடலரவீனும்விரிசாரன்முனெருங்கிவளர்கோகரணமே
யீடமினிதாகவுறைவானடிகள்பேணியணிகாழிநகரா
னுடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பநதன்மொழிகள்
பாடவலபத்தரவொததிசையுமாள்வர்பரலோகமெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

துளுவதேசத்திலிருப்பது, அந்தத்தேயத்தில் இது ஒரேதலம்.

சுவாமிபெயர்-மாபலநாதர்-தேவியார்-கோகரணநாயகியம்மை.

திருவீழிமிழலை-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சீர்மருவுதேசினொடுதேசமலிசெல்வமறையோர்கள்பணியத்
தார்மருவுகொன்றையணிதாழ்சடையினானமர்சயங்கொள்பதிதான்
பார்மருவுபங்கயமுயர்ந்தவயல்சூழ்பழனநீடவருகே
கார்மருவுவெண்கனகமாளிகைகவின்பெருகுவீழிநகரே. (௧)

பட்டமுழவிட்டபணிலத்தினொடுபன்மறைகளோதுபணிநற்
சிட்டர்கள்சயத்துதிகள்செய்யவருள்செய்தழல்கொண்மேனியவனூர்
மட்டுலவுசெங்கமலவேலிவயல்செந்நெல்வளர்மன்னுபொழில்வாய்
விட்டுலவுதென்றல்விரைநாறுபதிவேதியர்கள்வீழிநகரே. (௨)

மண்ணிழிசுரர்க்குவளமிக்கபதிமற்றுமுளமன்னுயிர்களுக்
கெண்ணிழிவிலின்பநிகழ்வெய்தவெழிலார்பொழிலிலங்கறுபதம்
பண்ணிழிவிலாதவகைபாடமடமஞ்ஞைநடமாடலழகார்
விண்ணிழிவிமானமுடைவிண்ணவர்பிரான்மருவுவீழிநகரே. (௩)

செந்தமிழர்தெய்வமறைநாவர்செழுநற்கலைதெரிந்தவவரோ
டந்தமில்குணத்தவர்களர்ச்சனைகள்செய்யவமர்கின்றவரனூர்
கொந்தலர்பொழிற்பழனவேலிகுளிர்தண்புனல்வளம்பெருகவே
வெந்திறல்விளங்கிவளர்வேதியர்விரும்புபதிவீழிநகரே. (௪)

பூதபதியாகியபுராணமுனிபுண்ணியநன்மாதைமருவிப்
பேதமதிலாதவகைபாகமிகவைத்தபெருமானதிடமா
மாதவர்களன்னமறையாளர்கள்வளர்த்தவழல்வேள்வியதனா
லேதமதிலாதவகையின்பமமர்கின்றவெழில்வீழிநகரே. (௫)

மண்ணின்மறையோர்மருவுவைதிகமுமாதவமுமற்றுமுலகத்
தெண்ணிலபொருளாயவைபடைத்தவிமையோர்களபெருமானதிடமா
நண்ணிவருநாவலர்களொடாறும்வளர்க்கநிகழ்கின்றபுகழ்சேர்
விண்ணுலவுமாளிகைநெருங்கிவளர்நீள்புரிசைவீழிநகரே. (௬)

மந்திரநன்மாமறையினோடுவளர்வேள்விமிசைமிக்கபுகைபோ
யந்தரவிசும்பணவியற்புதமெனப்படருமாழியிருள்வாய்
மந்தரநன்மாளிகைநிலாவுமணிநீடுகதிர்விட்டவொளிபோய்
வெந்தழல்விளக்கெனவிரும்பினார்திருந்துபதிவீழிநகரே (௭)

ஆனவலியிற்றசமுகனறலையறங்கவணியாழிவிரலா
லூனமருயர்ந்தகுருதிப்புனலில்வீழ்தரவுணர்ந்தபரனூர்
தேனமர்திருந்துபொழில்செங்கனகமாளிகைதிகழ்ந்தமதிலோ
டானதிருவுற்றுவளரந்தணர்நிறைந்தவணிவீழிநகரே. (௮)

ஏனவுருவாகிமண்ணிடந்தவிமையோனுமெழிலன்னவுருவ
மானவனுமாதியினொடந்தமறியாதவழன்மேனியவனூர்

வானணவுமாமதின்மருங்கலர்நெருங்கியவளங்கொள்பொழில்வாய்
வேணன்மலர்வெய்திடவிளங்கொளியின்மிக்கபுகழ்வீழிநகரே. (௯)

குண்டமணராகியொருகோலமிகுபீலியொடுகுண்டிகைபிடித்
தெண்டிசையுமில்லதொருதெய்வமுளதென்பாதுவென்னபொருளாம்
பண்டையபனன்னவர்கள்பாவனைவிரும்புபரன்மேவுபதிசீர்
வெண்டாளவாணைகநன்மாதர்கள்விளங்குமெழில்வீழிநகரே. (௧௦)

மத்தமலிகொன்றைவளர்வார்சடையிலவைத்தபரன்வீழிநகர்சேர்
வித்தகனைவெங்குருவில்வேதியன்விருப்புதமிழ்மாலைகள்வல்லார்
சித்திரவிமானமமர்செலவமலிகின்றசிவலோகமருவி
யத்தகுகுணத்தவர்களாகியனுபோகமோடியோகவரதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தோணிபுரம்-திருவிராகம்-பண்-சாதாரி·

திருச்சிற்றம்பலம.

சங்கமருமுன்கைமடமாதையொருபாலுடன்விரும்பி
யங்கமுடன்மேலுறவணிந்துபிணிதீரவருள்செய்யு
மெங்கள்பெருமானிடமெனத்தகுமுனைக்கடலின்முத்தந
துங்கமணிசிப்பிகள்கரைக்குவருதோணிபுரமாமே (௧)

சல்லரியியாழ்முழவமொநதைகுழலொமதியம்பக்
கலலரியமாமலையர்பாவையொருபாகநிலைசெய்
தல்லெரிகையேநதிநடமாடுசடையண்ணலிடமென்பர்
சொலலரியதொண்டர்துதிசெய்யவளர்தோணிபுரமாமே. (௨)

வண்டரவுகொனறைவளாபுன்சடையின்மேன்மதியம்வைத்துப்
பண்டரவுதன்னரையிலார்த்தபரமேட்டிபழிதீரத்
தண்டரவவொண்கடலினஞ்சமமுதுண்டகடவுளூர்
தொண்டரவர்மிண்டிவழிபாடுமலகுதோணிபரமாமே. (௩)

கொல்லைவிடையேறுடையகோவணவனாவணவுமாலை
யொலலையுடையானடையலாரரணமொள்ளழலவிளைத்த
வில்லையுடையான்மிகவிருமபுபதுமேவிவளர்தொண்டா
சொல்லையடைவாகவிடாதீர்த்தருளசெய்தோணிபுரமாமே. (௪)

தேயுமதியஞ்சடையிலங்கிடவிலங்கன்மலிகானற்
காயுமடுதிண்கரியினீருரிவைபோர்ததவனினைப்பாா
தாயெனநிறைந்ததொருதன்மையினாநன்மையொடுவாழ்வு
தூயமறையாளர்முறையோதிநிறைதோணிபுரமாமே (௫)

பற்றலர்தமுப்புரமெரித்தடிபணிநதவர்கண்மேலைக்
குற்றமதொழித்தருளுகொள்கையினன்வெள்ளினமுதுகானிற

பற்றவனிசைக்கிளவிபாரிடமதேத்தநடமாடுந்
துற்றசடையத்தனுறைகின்றபதிதோணிபுரமாமே (௬)

பண்ணமருநான்மறையர்நூன்முறைபயின்றதிருமார்பிற்
பெண்ணமருமேனியினர்தம்பெருமைபேசுமடியார்மெய்த்
திண்ணமரும்வல்வினைகடீரவருள்செய்தலுடையானூர்
துண்ணெனவிரும்புசரிதைத்தொழிலாதோணிபுரமாமே. (௭)

தென்றிசையிலங்கையரையன்றிசைகள்வீரம்விளைவித்து
வென்றிசைபுயங்களையடர்த்தருளுவித்தகனிடஞ்சீ
ரொன்றிசையியற்கிளவிபாடமயிலாடவளர்சோலை
துன்றுசெயவண்டுமலிதும்பிமுரறோணிபுரமாமே. (௮)

நாற்றமிகுமாமலரின்மேலயனுநாரணனுநாடி
யாற்றலதனான்மிகவளப்பரியவண்ணமெரியாகி
யூற்றமிகுகீழுலகுமேலுலகுமோங்கியெழுதன்மைத்
தோற்றமிகநாளுமறியானுறைவுதோணிபுரமாமே. (௯)

மூடுதுவராடையினர்வேடநிலைகாட்டுமமணாதர்
கேடுபலசொல்லிடுவரம்மொழிகெடுத்தடைவினைக்
காடுபதியாகநடமாடிமடமாதொடிருகாதிற்
றோடுகுழைபெய்தவர்தமக்குறைவுதோணிபுரமாமே. (௧௦)

துஞ்சிருளினின்றுநடமாடிமிகுதோணிபுரமேய
மஞ்சனைவணங்குதிருஞானசம்பந்தனசொன்மாலை
தஞ்சமெனநின்றிசைமொழிந்தவடியார்கடமாற்றம்
வஞ்சமிலர்நெஞ்சிருளுநீங்கியருள்பெற்றுவளர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஅவளிவணல்லூர் திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிநூலொடுகுலாவித
தம்பரிசினோடுசுடுநீறுதடவந்திடவமேறிக்
கம்பரியசெம்பொனெடுமாடமதில்கலவரைவிலாக
வம்பெரியவெய்தபெருமானுறைவதவளிவணலலூரே. (௧)

ஓமையனகள்ளியனவாகையனகூகைமுரலோசை
யீமமெரிசூழ்சுடலைவாசமுதுகாடுநடமாடித்
தூயமையுடையக்கொடரவம்விரவிமிக்கொளிதுளங்க
வாமையொடுபூணுமடிகள்ளுறைவதவளிவணல்லூரே (௨)

நீறுடையமார்பிலிமவான்மகளோர்பாகநிலைசெய்து
கூறுடையவேடமொடுகூடியழகாயதொருகோல

மேறுடையரேனுமிடுகாடிரவினின்றுநடமாடு
மாறுடையவார்சடையினானுறைவதவளிவணல்லூரே. (௩)

பிணியுமிலர்கேடுமிலர்தோற்றமிலரென்றுலகுபேணிப்
பணியுமடியார்களனபாவமறவின்னருள்பயந்து
துணியுடையதோலுமுடைகோவணமுநாகமுடன்றொங்க
வணியுமழகாகவுடையானுறைவதவளிவணல்லூரே. (௪)

குழலின்வரிவண்டுமுரன்மெல்லியனபொன்மலர்கள்கொண்டு
கழலின்மிசையிண்டைபுனைவார்கடவுளென்றமரர்கூடித்
தொழும்வழிபாடுமுடையார்துயருநோயுமிலராவ
ரழலுமழுவேந்துகையினானுறைவதவளிவணல்லூரே. (௫)

துஞ்சலிலராயமரர்நின்றுதொழுதேத்தவருள்செய்து
நஞ்சுமிடறுண்டுகரிதாயவெளிதாகியொருகம்பன்
மஞ்சுறநிமிர்ந்துமைநடுங்கவகலத்தொடுவளாவி
யஞ்சமதவேழவுரியானுறைவதவளிவணல்லூரே. (௬)

கூடரவமொந்தைகுழலியாழ்முழவினோடுமிசைசெய்யப்
பீடரவமாகுபடரம்புசெய்துபேரிடவமோடுங்
காடரவமாகுகனல்கொண்டிரவினின்றுநடமாடி
யாடரவமார்த்தபெருமானுறைவதவளிவணல்லூரே. (௭)

ஒருவரையுமேல்வலிகொடேனெனவெழுந்தவிறலோனிப்
பெருவரையின்மேலோர்பெருமானுமுளனோவெனவெகுண்ட
கருவரையுமாழ்கடலுமன்னதிறல்கைகளுடையோனை
யருவரையிலூன்றியடர்த்தானுறைவதவளிவணல்லூரே. (௮)

பொறிவரியநாகமுயர்பொங்கணையணைந்தபுகழோனும்
வெறிவரியவண்டறையவிண்டமலர்மேலவிழுமியோனுஞ்
செறிவரியதோற்றமொடுவாற்றன்மிகநின்றுசிறிதேயு
மறிவரியனாயபெருமானுறைவதவளிவணல்லூரே. (௯)

கழியருகுபள்ளியிடமாகவடுமீன்கள்கவர்வாரும்
வழியருகுசாரவெயினின்றடிசிலுள்கிவருவாரும்
பழியருகினோரொழிகபான்மையொடுநின்றுதொழுதேத்தும்
மழியருவிதோய்ந்தபெருமானுறைவதவளிவணல்லூரே. (௰)

ஆனமொழியானதிறலோர்பரவுமவளிவணல்லூர்மேற்
போனமொழிநன்மொழிகளாயபுகழ்தோணிபுரவூரன்
ஞானமொழிமாலைநலநாடுபுகழ்ஞானசம்பந்தன்
றேனமொழிமாலைபுகழ்வார்துயர்கடையதிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சாக்ஷிநாயகர் - தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

—— (*) ——

திருநல்லூர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரியவிண்டமலர்மல்குசடைதாழவிடையேறிப்
பண்டெரிகைகொண்டபரமன்பதியதென்பரதனயலே
கண்டிரியநாரையிரைதேரவரைமேலருவிமுத்தந்
தெண்டிரைகண்மோதவிரிபோதுகமழுந்திருநல்லூரே. (௧)

பலவளருநாகமரையார்த்தவரைமங்கையொருபாக
மல்வளர்புயத்திலணைவித்துமகிழும்பரமனிடமாஞ்
சொலவளரிசைக்கிளவிபாடிமடவார்நடமதாடச்
செல்வமறையோர்கண்முறையேத்தவளருந்திருநல்லூரே (௨)

நீடுவரைமேருவிலதாகநிகழ்நாகமழலம்பாற்
கூடலர்கணைமூவெயிலெரித்தகுழகன்குலவுசடைமே
லேடுலவுகொன்றைபுனைநின்றுநிகழ்நிமலனிடமாஞ்
சேடுலவுதாமரைகணீடுவயலார்திருநல்லூரே. (௩)

கருகுபுரிமிடறர்கரிகாடரெரிகையதனிலோடி
யருகுவருகரியினுரியதளாடைவரவரிடம்வினவின்
முருகுவிரிபொழிலின்மணநாறமயிலாலமரமேறித்
திருகுசினைமந்திகனிசிந்தமதுவார்திருநல்லூரே. (௪)

பொடிகொடிருமார்பர்புரிநூலர்புனல்பொங்கரவுதங்கு
முடிகொள்சடைதாழவிடையேறுமுதலாளரவரிடமா
மிடிகொண்முழவோசையெழிலார்செய்தொழிலாளர்விழிமல்கச்
செடிகொள்வினையகலமனமினியவர்கள்சேர்திருநல்லூரே. (௫)

புற்றரவுநெற்றியொர்கணொற்றைவிடையூர்வுடையாளஞ்
சுற்றமிருள்பற்றியபல்பூதமிசைபாடநசையாலே
கற்றமறையுற்றுணர்வர்பற்றலர்கண்முற்றுமெயின்மாளச்
செற்றவரிருப்பிடநெருக்குபுனலார்திருநல்லூரே. (௬)

பொங்கரவராங்கமுடன்மேலணிவர்ஞாலமிடுபிச்சை
தங்கரவமாகவுழிதந்துமெய்துலங்கியவெண்ணீற்றா
கங்கையரவம்விரவுதிங்கள்சடையடிகளிடம்வினவிற்
செங்கயல்வதிக்குதிகொளும்புனலதார்திருநல்லூரே. (௭)

ஏறுபுகழ்பெற்றதெனிலங்கையவர்கோனையருவரையிற்
சீறியவனுக்கருளுமெங்கள்சிவலோகனிடமாகுங்
கூறுமடியார்களிசைபாடிவலம்வந்தயருமருவிச்
சேறுகமழானவழியத்திகழ்தருந்திருநல்லூரே. (௮)

மாலுமலர்மேலயனுநேடியறியாமையெரியாய
கோலமுடையானுணர்வுகோதில்புகழானிடமதாகு

நாலுமறையங்கமுதலாறுமெரிமூன்றுந்தழலோம்புஞ்
சீலமுடையார்கணெடுமாடம்வளருந்திருநலூரே. (௯)

நீறுமுடைகோவணமிலாமையிலோலோவியதவத்தர்
பாறுமுடன்மூடுதுவராடையர்களவேடமவைபாரே
லேறுமடவாளொடினிதேறிமுனிருந்தவிடமென்பர்
தேறுமனவாரமுடையார்குடிசெயுந்திருநலூரே. (௰)

திரைகளிருகரையும்வருபொன்னிநிலவுந்திருநலூர்மேற்
பரசுதருபாணியைநலந்திகழ்செயதோணிபுரநாத
னுரைசெய்தமிழ்ஞானசம்பந்தனிசைமாலைமொழிவார்போய்
விரைசெய்மலர்தூவவிதிபேணுகதிபேறுபெறுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறவம்-திருவிராகம்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

பெண்ணியலுருவினர்பெருகியபுனல்விரவியபிறைக
ண்ணியர்கடுநடைவிடையினர்கழறொழுமடியவர்
நண்ணியபிணிகெடவருள்புரிபவர்நணுகுயர்பதி
புண்ணியர்மறையவர்நிறைபுகழொலிமலிபுறவமே. (௧)

கொக்குடையிறகொடுபிறையொடுகுளிர்சடைமுடியின
ரக்குடைவடமுமோரரவமுமலரரையிசையினிற்
றிக்குடைமருவியவுருவினர்திகழ்மலைமகளொடும
புக்குடனுறைவதுபுதுமலர்விரைகமழ்புறவமே (௨)

கொங்கியல்சுரிகுழல்வரிவளையிளமுலையுமையொரு
பங்கியறிருவுருவுடையவர்பரசுவொடிரலைமெய
தங்கியகாதலமுடையவர்விடையவருறைபதி
பொங்கியபொருகடல்கொளவதன்மிசையுயர்புறவமே (௩)

மாதவமுடைமறையவனுயிர்கொளவருமறலியை
மேதகுதிருவடியிறையுறவுயிரதுவிலகினர்
சாதகவுருவியல்கானிடையுமைவெருவுறவரு
போதகவுரியதண்மருவினருறைபதிபுறவமே. (௪)

காமனையழல்கொளவிழிசெய்துகருதலர்கடிமதி
லாமமதுறவிறல்சுடர்கொளுவியவிறைதொகுபதி
யோமமொடுயர்மறைபிறவியவகைதனொடொளிகெழு
பூமகனலரொடுபுனல்கொடுவழிபடுபுறவமே. (௫)

சொன்னயமுடையவர்சுருதிகள்கருதியதொழிலினர்
பின்னையநடுவுணர்பெருமையர்திருவடிபேணிட

முன்னையமுதல்வினையறவருளினருறைமுதுபதி
புன்னையினமுகைநிதிபொதியவிழ்பொழிலணிபுறவமே. (௬)

வரிதருபுலியதளுடையினாமழுவெறிபடையினர்
பிரிதருநகுதலைவடமுடிமிசையணிபெருமைய
ரெரிதருமுருவினரிமையவர்தொழுவதோரியல்பினர்
புரிதருகுழலுமையொடுமினிதுறைபதிபுறவமே. (௭)

வசிதருமுருவொடுமலர்தலையுலகினைவலிசெயு
நிசிசரனுடலொடுநெடுமுடியொருபதுநெரிவுற
வொசிதரவொருவிரனிறுவினரொளிவளர்வெளிபொடி
பொசிதருதிருவுருவுடையவருறைபதிபுறவமே. (௮)

தேனகமருவியசெறிதருமுளரிசெய்தவிசினி
லூனகமருவியபுலனுகர்வுணர்வுடையொருவனும்
வானகம்வரையகமறிகடனிலனெனுமெழுவகைப்
போனகமருவினனறிவரியவர்பதிபுறவமே (௯)

கோசரநுகர்பவர்கொழுகியதுவரனதுகிலினர்
பாசுரவினைதருபளகர்கள்பழிதருமொழியினர்
நீசரைவிடுமினினைவுறுநிமலர்தமுறைபதி
பூசுரர்மறைபயினிறைபுகழொலிமலிபுறவமே, (௧௦)

போதியல்பொழிலணிபுறவநன்னகருறைபுனிதனை
வேதியரதிபதிமிகுதலைதமிழ்கெழுவிரகின
ஞோதியவொருபதுமுரியதோரிசைகொளவுரைசெயு
நீதியரவரிருநிலனிடைநிகழ்தருபிறவியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மட்டொளிவிரிதருமலர்நிறைசுரிகுழன்மடவரல்
பட்டொழிமணியலகுலுமையமையுருவொருபாகமாக்
கட்டொளிர்புனலொடுகெடியறவுடனுறைமுடிமிசை
விட்டொளியுதிர்பிதிர்மதியவர்பதிவீழிமிழலையே. (௧)

எண்ணிறவரிவளைநெறிகுழலெழின்மொழியிளமுலைப்
பெண்ணுறுமுடலினர்பெருகியகடல்விடமிடறினர்
கண்ணுறுநுதலினர்கடியதோர்விடையினர்கனலினர்
விண்ணுறுபிறையணிசடையினர்பதிவீழிமிழலையே. (௨)

மைத்தகுமதர்விழிமலைமகளுருவொருபாகமா
வைத்தவர்மதகரியுரிவைசெய்தவர்தமைமருவினோர்

தெத்தெனவிசைமுரலசரிதையர்திகழ்தருமார்பினர்
வித்தகநகுதலையுடையவரிடம்வீழிமிழலையே (௩)

செவ்வழலெனநனிபெருகியவுருவினர்செறிதரு
கவ்வழலரவினர்கதிர்முதிர்மழுவினர்தொழுவிலா
முவ்வழனிசிசரர்விறலவையழிதரமுதுமதில
வெவ்வழலகொளநனிமுனிபவர்பதிவீழிமிழலையே (௪)

பைங்கணதொருபெருமழலைவெளேறினர்பலியெனு
வெங்கணுமுழிதர்வரிமையவர்தொழுதெழுமியலபின
ரங்கணரமரர்களடியிணைதொழுதெழுவாரமா
வெங்கணவரவினருறைதருபதிவீழிமிழலையே (௫)

பொன்னனபுரிதருசடையினர்பொடியணிவடிவின
ருன்னினர்வினையவைகளைதலைமருவியவொருவனார்
தென்னெனவிசைமுரலசரிதையர்திகழ்தருமார்பினின்
மின்னெனமிளிர்வதோரரவினர்பதிவீழிமிழலையே (௬)

அக்கினொடரவரையணிதிகழொளியதோராமைபூண்
டிக்குகமலிதலைகலனெனவிடுபலியேகுவர்
கொக்கரைகுழன்முழவிழவொடுமிசைவதோர்சரிதையர்
மிக்கவருறைவதுவிரைகமழ்பொழிலவீழிமிழலையே (௭)

பாதமோர்விரலுறமலையடர்பலதலைநெரிதரப்
பூதமோடடியவர்புனைகழறொழுதெ[illegible]புகழின
ரோதமோடொலிதிரைபடுகடல்விடமுடைமிடறினர்
வேதமோடுறுதொழிலமதியவர்பதிவீழிமிழலையே. (௮)

நீரணிமலர்மிசையுறைபவனிறைகடலுறுதுயி
னாரணனெனவிவரிருவருநறுமலரடிமுடி
யோருணர்வினாசெலலுறலருமுருவினொடொளிதிகழ்
வீரணருறைவதுவிரைகமழ்பொழிலவீழிமிழலையே (௯)

இச்சையரினிதெனவிடுபலிபடுதலைமகிழ்வதோர்
பிச்சையாபெருமையையிறைபொழுதறிவெனவுணர்விலா
மொச்சையவமணருமுடைபடுதுகிலருமழிவதோர்
விச்சையருறைவதுவிரைகமழ்பொழில்வீழிமிழலையே. (௧௦)

உன்னியவருமறையொலியினைமுறைமிகுபாடலசெ
யின்னிசையவருறையெழிறிகழ்பொழில்வீழிமிழலையை
மன்னியபுகலியுண்ஞானசம்பந்தனவண்டமிழ்
சொன்னவர்துயரிலர்வியனுலகுறுகதிபெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சேறை-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முறியுறுநிறமல்குமுகிழ்முலைமலைமகள்வெருவமுன்
வெறியுறுமதகரியதள்படவுரிசெய்தவிறலினர்
நறியுறுமிதழியின்மலரொடுநதிமதிநகுதலை
செறியுறுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே (க)

புனமுடைநறுமலர்பலகொடுதொழுவதோர்புரிவினர்
மனமுடையடியவர்படுதுயர்களைவதோர்வாய்மைய
ரினமுடைமணியினொடரசிலையொளிபெறமிளிர்வதோர்
சினமுதிர்விடையுடையடிகடம்வளநகர்சேறையே (உ)

புரிதருசடையினர்புலியதளரையினர்பொடிபுலகு
மெரிதருமுருவினரிடவமதேறுவரீடிலா
வரிதருவளையினரவரவர்மகிழ்தரமனைதொறுந்
திரிதருசரிதையருறைதருவளநகர்சேறையே. (௩)

துடிபடுமிடையுடைமடவரலுடனொருபாகமா
விடிபடுகுரலுடைவிடையினர்படமுடையரவினர்
பொடிபடுமுருவினர்புலியுரிபொலிதருமரையினர்
செடிபடுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (௪)

அந்தரமுழிதருதிரிபுரமொருநொடியளவினின்
மந்தரவரிசிலையதனிடையரவரிவாளியால்
வெந்தழிதரவெய்தவிடலையர்விடமணிமிடறினர்
செந்தழனிறமுடையடிகடம்வளநகர்சேறையே. (௫)

மத்தரமுறுதிறன்மறவர்தம்வடிவுகொடுருவுடைப்
பத்தொருபெயருடைவிசயனையசைவுசெய்பரிசினா
லத்திரமருளுமடிகளதணிகிளர்மணியணி
சித்திரவளநகர்செறிபொழிறழுவியசேறையே. (௬)

பாடினரருமறைமுறைமுறைபொருளெனவருநட
மாடினருலகிடையலர்கொடுமடியவர்துதிசெய
வாடினர்படுதலையிடுபலியதுகொடுமகிழ்தருஞ்
சேடர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (௭)

கட்டுரமதுகொடுகயிலைநன்மலைமலிகரமுடை
நிட்டிரனுடலொடுநெடுமுடியொருபதுநெரிசெய்தார்
மட்டுரமலரடியடியவர்தொழுதெழவருள்செயுஞ்
சிட்டர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (௮)

பன்றியர்பறவையர்பரிசுடைவடிவொடுபடர்தர
வன்றியவவரவரடியொடுமுடியவையறிகிலார்

நின்றிருபுடைபடநெடுவெரிநடுவெயோர்நிகழ்தரச்
சென்றுயர்வெளிபடவருளியவவர்நகர்சேறையே (௯)

துகடுறுவிரிதுகிலுடையவரமணெனும்வடிவினர்
விகடமதுறுசிறுமொழியவைநலமிலமெனவிடன்
முகிடருமிளமதியரவொடுமழகுறமுதுநதி
திகடருசடைமுடியடிகடமவளநகர்சேறையே. (௧௦)

கற்றநன்மறைபயிலடியவரடிதொழுகவினுறு
சிற்றிடையவளொடுமிடமெனவுறைவதோர்சேறைமேற்
குற்றமில்புகலியுளிகலறுஞானசம்பந்தன
சொற்றகவுறமொழிபவரழிவிலாதுயர்தீருமே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-சென்னெறியப்பர்-தேவியார்-ஞானவல்லியம்மை.

திருநள்ளாறு-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௧)

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலி
னாதமதெழிலுருவனையநள்ளாறர்தந்நாமமே
மீதமதெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௨)

இட்டுறுமணியணியிணர்புணர்வளரொளியெழில்வடங்
கட்டுறுகதிரிளவனமுலையிணையொடுகலவலி
னட்டுறுசெறிவயன்மருவுநள்ளாறர்தந்நாமமே
யிட்டுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே (௩)

மைச்சணிவரியரிநயனிதொன்மலைமகள்பயனுறு
கச்சணிகதிரிளவனமுலையவையொடுகலவலி
னச்சணிமிடறுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மெச்சணியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே (௪)

பண்ணியன்மலைமகள்கதிர்விடுபருமணியணிநிறக்
கண்ணியல்கலசமதனமுலையிணையொடுகலவலி
னண்ணியகுளிர்புனல்புகுதுநள்ளாறர்தந்நாமமே
யெண்ணியவெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௫)

போதுறுபுரிகுழன்மலைமகளிளவளர்பொன்னணி
சூதுறுதளிர்நிறவனமுலையவையொடுதுதைதலிற்
றாதுறுநிறமுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மீதுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௬)

கார்மலிநெறிபுரிசுரிகுழன்மலைமகள்கவினுறு
சீர்மலிதருமணியணிமுலைதிகழ்வொடுசெறிதலிற்
றார்மலிநகுதலையுடையநள்ளாறர்தந்நாமமே
யேர்மலியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௭)

மன்னியவளரொளிமலைமகடளிர்நிறமதமிகு
பொன்னியன்மணியணிகலசமதனமுலைபுணர்தலிற்
றன்னியறசமுகனெரியநள்ளாறர்தந்நாமமே
மின்னியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௮)

நான்முகமயிலியன்மலைமகள்கதிர்விடுகனமிகு
பான்முகமியல்பணையிணைமுலைதுணையொடுபயிறலி
னான்முகனரியறிவரியநள்ளாறர்தந்நாமமே
மேன்முகவெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௯)

அத்திரநயனிதொன்மலைமகள்பயனுறுமதிசயச்
சித்திரமணியணிதிகழ்முலையிணையொடுசெறிதலிற்
புத்தரொடமணர்பொய்பெயருநள்ளாறர்தந்நாமமே
மெய்த்திரளெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௧௦)

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரு
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன
கொற்றவனெதிரிடையெரியினிலிடவிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது - சமணர் வாதின்பொருட்டுத் தீயிலிடுதற்கு போகமார்த்தபூண்முலையாளென்னும் பதிகம் உதயமாக இது தீயில பழுதுபடாது என்னுந் துணிவு கொண்டு அருளிச்செய்தபதிகம்.

திருவிளமர்-திருவிராகம் பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கர
மொத்தநகமணிமிளிர்வதோரரவினரொளிகிள
ரத்தகவடிதொழவருள்பெறுகணனொடுமுமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளநகர்விளமரே. (௧)

பட்டிலகியன்முலையரிவையருலகினிலிடுபலி
யொட்டிலகிணைமறவடியினருமையுறுவடிவினர்

சிட்டிலகழகியபொடியினர்விடைமிசைசேர்வதோர்
விட்டிலகழகொளிபெயரவருறைவதுவிளமரே. (௨)

அங்கதிரொளியினரரையிடைமிளிர்வதோரரவொடு
செங்கதிரெனநிறமனையதோர்செழுமணிமார்பினர்
சங்கதிர்பறைகுழன்முழவினொடிசைதருசரிதையர்
வெங்கதிருறுமழுவுடையவரிடமெனில்விளமரே. (௩)

மாடமதெனவளர்மதிலவையெரிசெய்வர்விரவுசீர்ப்
பீடெனவருமறையுரைசெய்வர்பெரியபல்சரிதைகள்
பாடலராடியசுடலையிலிடமுறநடநவில
வேடமதுடையவர்வியனகரதுசொலில்விளமரே. (௪)

பண்டலைமழலைசெயாழெனமொழியுமைபாகமாக்
கொண்டலைகுரைகழலடிதொழுமவர்வினைகுறுகிலர்
விண்டலையமரர்கடுதிசெயவருளபுரிவிறலினர்
வெண்டலைபலிகொளுநம்விமலர்தம்வளநகர்விளமரே. (௫)

மனைகடோறிடுபலியதுகொள்வர்மதிபொதிசடையினர்
கனைகடலடுவிடமமுதுசெயகறையணிமிடறினர்
முனைகெடவருமதிலெரிசெய்தவவர்கழல்பரவுவார்
வினைகெடவருள்புரிதொழிலினர்செழுநகர்விளமரே. (௬)

நெறிகமழ்தருமுரையுணர்வினர்புணர்வுறுமடவரல்
செறிகமழ்தருமுருவுடையவர்படைபலபயில்பவர்
பொறிகமழ்தருபடவரவினாவிரவியசடைமிசை
வெறிகமழ்தருமலரடைபவரிடமெனில்விளமரே. (௭)

தெண்கடல்புடையணிநெடுமதிலிலங்கையர்தலைவனைப்
பண்படவரைதனிலடர்செய்தபைங்கழலவடிவினர்
திண்கடலடைபுனறிகழ்சடைபுகுவதோர்சேர்வினர்
விண்கடல்விடமலியடிகடம்வளநகர்விளமரே. (௮)

தொண்டசையுறவருதுயருறுகாலனைமாள்வுற
வண்டலசெய்திருவரைவெருவுறவாரழலாயினர்
கொண்டல்செய்தருதிருமிடறினரிடமெனிலளியினம்
விண்டிசைவுறுமலர்நறுமதுவிரிபொழில்விளமரே. (௯)

ஒள்ளியர்தொழுதெழுவுலகினிலுரைசெயுமொழிபல
கொள்ளியகளவினர்குண்டிகையவர்தவமறிவிலார்
பள்ளியைமெய்யெனக்கருதன்மின்பரிவொடுபேணுவீர்
வெள்ளியபிறையணிசடையினர்வளநகர்விளமரே. (௧௦)

வெந்தவெண்பொடியணியடிகளைவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுளிடைபெறவுரைசெய்ததமிழிவைசெழுவிய

வந்தணர் புகலியுள் ழகமரு மறைஞானசம்
பந்தனமொழியிவை யுரைசெயுமவர் வினைபறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது. (௯௰.
சுவாமிபெயர்-பதஞ்சலிமனோகரேசுவரர்-தேவியார் - யாழினுமென்மொழியம்

திருக்கொச்சைவயம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திருந்துமா களிற்றிள மருப்பொடு திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடைசமு மயிலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட் டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ் நெஞ்சமே புகலதாமே. (௧)

ஏலமா ரிலவமோ டினமலர்த் தொகுதியா யெங்குமுந்திக்
கோலமா மிளங்கொடு கொழுங்கனி கொன்றையுங் கொண்டுகோட்டா
றாலியா வயல்புகு மணிதரு கொச்சையே நச்சிமேவு
நீலமார் கண்டனை நினைமட நெஞ்சமே யஞ்சனீயே. (௨)

பொன்னுமா மணிகொழித் தெறிபுன றகரைகள்வாய்த் துரைகளுந்திக்
கன்னிமார் முலைநலங் கவரவந் தேறுகோட் டாறுசூழ
மன்னினார் மாதொடு மருவிடங் கொச்சையே மருவினாளு
முன்னைநோய் தொடருமா றில்லைகாண் நெஞ்சமே யஞ்சனீயே. (௩)

கந்தமார் கேதகைச் சந்தனக் காடுசூழ் கதலிமாடே
வந்துமா வள்ளையின் பவரெலாங் குவளையைச் சாடியோட
கொந்துவார் குழலினார் குதிகொள்கோட் டாறுசூழ் கொச்சைமேய
வெந்தையா ரடிநினைந் துய்யலா நெஞ்சமே யஞ்சனீயே.

மறைகொணுந் திறலினா ராகுதிப் புகைகள்வா னண்டமிண்டிச்
சிறைகொளும் புனலணி செழுமதி திகழ்மதிற் கொச்சைதன்பா
லுறைவிட மெனமன மதுகொளும் பிரமனார் சிரமறுத்த
விறைவன தடியிணை யிறைஞ்சிவாழ் நெஞ்சமே யஞ்சனீயே. (௫)

சுற்றமு மக்களுந் தொக்கவத் தக்கனைச் சாடியன்றே
யுற்றமா லவளையு மைநங்கையைப் பங்கமா யுள்கினோர்
குற்றமி லடியவர் குழுமிய வீதிசூழ் கொச்சைமேவி
நற்றவ மருள்புரி நம்பனை நம்பிடாய் நாளுநெஞ்சே (௬)

கொண்டலார் வந்திடக் கோலவார் பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா முகிறனைக் கதுவுகொச்சை
யண்டவா னவர்களு மமரரு முனிவரும் பணியவால
முண்டமா கண்டனார் தம்மையே யுள்குநீ யஞ்சனெஞ்சே. (௭)

அடலெயிற்றரக்கனார்நெருக்கிமாமலையெடுத்தார்த்தவாய்க
ளுடல்கெடத்திருவிரலூன்றினானுறைவிடமொளிகொள்வெள்ளி
மடலிடைப்பவளமுமுத்தமுந்தொத்துவண்புன்னைமாடே
பெடையொடுங்குருகினம்பெருகுதண்கொச்சையேபேணுநெஞ்சே.

அரவினிற்றுயிறருமரியுநற்பிரமனுமன்றயர்ந்து
குரைகழற்றிருமுடியளவிடவரியவர்கொங்குசெம்பொன்
விரிபொழிலிடைமிகுமலைமகண்மகிழ்தரவீற்றிருந்த
கரியநன்மிடறுடைக்கடவுளார்கொச்சையேகருதுநெஞ்சே. (௯)

கடுமலியுடலுடையமணருங்கஞ்சியுண்சாக்கியரு
மிடுமறவுரைதனையிகழ்பவர்கருதுநமரீசனானோர்
நடுவுரைநம்பனைநானமறையவர்பணிந்தேத்தஞால
முடையவனகொச்சையேயுள்கிவாழநெஞ்சமேயஞ்சனீயே (௧௦)

காய்ந்துதங்காலினாற்காலனைச்செற்றவர்கடிகொள்கொச்சை
யாய்ந்துகொண்டிடமெனவிருந்தநல்லடிகளையாதரித்தே
யேய்ந்ததொல்புகழ்மிகுமெழிலமறைஞானசம்பந்தனசொன்ன
வாய்ந்தவிம்மாலைகளவல்லவர்நல்லவானுலகின்மேலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தியுந்-திருவேள்விக்குடியும்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனர்கங்கையையொருசடைமேற்
றாங்கினாரிடுபலிதலைகலனாகக்கொண்டதம்மடிகள
பாங்கினாலுமையொடுமபகலிடமபுகலிடம்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவாவேள்விக்குடியே. (௧)

தூறுசேர்சுடலையிற்சுடரெரியாடுவர்துளங்கொளிசேர்
நீறுசாந்தெனவுகந்தணிவர்வெண்பிறைமல்குசடைமுடியார்
நாறுசாந்திளமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வீறுசோதுருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௨)

மழைவளரிளமதிமலரொடுதலைபுல்குவார்சடைமேற்
கழைவளர்புனலபுகக்கண்டவெங்கண்ணுதற்கபாலியார்தா
மிழைவளர்துகிலல்குலரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விழைவளர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௩)

கரும்பனவரிசிலைப்பெருந்தகைக்காமனைக்கவினழித்த
சுரும்பொடுதேன்மல்குதூமலர்க்கொன்றையஞ்சுடர்ச்சடையா
ரரும்பனவனமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விரும்பிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௪)

வளங்கிளர்மதியமும்பொன்மலர்க்கொன்றையும்வாளரவுங்
களங்கொளச்சடையிடைவைத்தவெங்கண்ணுதற்கபாலியார்தாங்

துளங்குநூன்மார்பினரரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விளங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௫)

பொரியுலாமடுபுலியுரிவையர்வரியராப்பூண்டிலங்கு
நெறியுலாம்பலிகொளுநீர்மையர்சீர்மையைநினைப்பரியார்
மறியுலாங்கையினர்மங்கையோடொருபகலமர்ந்தபிரான்
வெறியுலாந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௬)

புரிதருசடையினர்புலியுரியரையினர்பொடியணிந்து
திரிதருமியல்பினர்திரிபுரமூன்றையுந்தீவளைத்தார்
வரிதருவனமுலைமங்கையோடொருபகலமர்ந்தபிரான்
விரிதருதுருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௭)

தீண்டிலங்கவிரொளிநெடுமுடியரக்கனின்னீள்வரையைக்
கீண்டிடந்திடுவனென்றெழுந்தவன்றோள்வினைக்கீழ்ப்படுத்தார்
பூண்டநூன்மார்பினரரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வேண்டிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விககுடியே, (௮)

கரைகடலரவணைக்கடவுளுந்தாமரைநான்முகனுங்
குரைகழலடிதொழக்கூரெரியெனநிரங்கொண்டபிரான்
வரைகெழுமகளொடும்பகலிடம்புகலிடம்வணபொழில்சூழ்
விரைகமழ்துருததியாரிரவிடத்துறைவாவேள்விக்குடியே. (௯)

அயமுகவெயினிலையமணருங்குண்டருஞ்சாக்கியரு
நயமுகவுரையினர்நகுவனசரிதைகள்செய்துழலவார்
கயலனவரிநெடுங்கண்ணியொடொருபகலமர்ந்தபிரான்
வியனகர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (௧௦)

விண்ணுலாம்விரிபொழில்விரைமணற்றுருததிவேள்விக்குடியு
மொண்ணுலாமொலிகழலாடுவாரரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலியுளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாராடுவார்பழியிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவடகுரங்காடுதுறை-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமேகொழுமலர்ப்புன்னையேகொகுடிமுல்லை
வேங்கையேஞாழலேவிம்முபாதிரிகளேவிரவியெங்கு
மோங்குமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடியடிகளாரிடமெனவிரும்பினாரே. (௧)

மந்தமாயிழிமதக்களிற்றிளமருப்பொடுபொருப்பினல்ல
சந்தமாரகிலொடுசாதியின்பலங்களுந்தகையமோதி

யுந்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
யெந்தையாரிணையடியிமையவர்தொழுதெழுமியல்பினரே. (௨)

முத்துமாமணியொடுமுழைவளராரமுமுகந்துந்தி
யெத்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
மத்தமாமலரொடுமதிபொதிசடைமுடியடிகடம்மேற்
சித்தமாமடியவர்சிவகதிபெறுவதுதிண்ணமன்றே. (௩)

கறியுமாமிளகொடுகதலியின்பலங்களுங்கலந்துந்தி
யெறியுமாகாவிரிவடகரையடைகுறங்காடுதுறை
மறியுலாங்கையினர்மலரடிதொழுதெழமருவுமுள்ளக்
குறியினாரவர்மிகக்கூடுவார்நீடுவானுலகினூடே. (௪)

கோடிடைச்சொரிந்ததேனதனொடுங்கொண்டல்வாய் விண்டமுன்னீர்
காடுடைப்பீலியுங்கடலுடைப்பண்டமுங்கலந்துந்தி
யொடுடைக்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
பீடுடைச்சடைமுடியடிகளாரிடமெனப்பேணினாரே. (௫)

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
வாலியார்வழிபடப்பொருந்தினார்திருந்துமாங்கனிகளுந்தி
யாலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே. (௬-௭)

நீலமாமணிநிறத்தரக்கனையிருபதுகரத்தோடொல்க
வாலினாற்கட்டியவாலியார்வழிபடமன்னுகோயில்
லேலமோடிலையிலவங்கமேயிஞ்சியேமஞ்சளுந்தி
யாலியாவருபுனல்வடகரையடைகுரங்காடுதுறையே. (௮)

பொருந்திறற்பெருங்கைமாவுரித்துமையஞ்சவே யொருங்குநோக்கிப்
பெருந்திறத்தனங்கனையநங்கமாவிழித்ததும்பெருமைபோலும்
வருந்திறற்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
யருந்திறத்திருவரையல்லல்கண்டோங்கியவடிகளாரே. (௯)

கட்டமண்டேரருங்கடுக்கடின்கழுக்களுங்கசிவொன்றில்லாப்
பிட்டர்தம்மறவுரைகொள்ளலும்பெருவரைபண்டமுந்தி
வெட்டுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறைச்
சிட்டனாடிதொழச்சிவகதிபெறுவதுதிண்ணமாமே. (௧௦)

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தனகருதுபாடல்
கோழையாவழைப்பினுங்கூடுவார்நீடுவானுலகினூடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குலைவணங்குநாதர்-தேவியார்-சடைமுடியம்மை.

திருநெல்வேலி-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரமறுமைநன்னெறியவைமற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்நன்னெஞ்சமே
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்பூஞ்
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௧)

என்றுமோரியல்பினரெனநினைவரியவரேறதேறிச்
சென்றுதாஞ்செடிச்சியர்மனைதொறும்பலிகொளுமியல்பதுவே
துன்றுதண்பொழினுழைந்தெழுவியகேதகைப்போதளைந்து
தென்றல்வந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௨)

பொறிவளரரவமும்போழிளமதியமுங்கங்கையென்னு
நெறிபடுகுழலிசைச்சடைமிசைச்சுலவிவெண்ணீறுபூசி
கிரிபடநடந்துநற்கிளிமொழியவர்மனங்கவர்வர்போலுஞ்
செறிபொழிறழுவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௩)

காண்டகுமலைமகள்கதிர்நிலாமுறுவல்செய்தருளவேயும்
பூண்டநாகம்புறங்காடரங்காநடமாடல்பேணு
மீண்டுமாமாடங்கண்மாளிகைமீதெழுகொடிமதியந்
தீண்டிவந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே (௪)

ஏனவெண்கொம்பொடுமெழிறிகழ்மத்தமுமிளவரவுங்
கூனல்வெண்பிறைதவழ்சடையினார்கொல்புலித்தோலுடையா
ரானினிலைந்துகந்தாடுவர்பாடுவரருமறைக
டேனில்வண்டமர்பொழிற்றிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௫)

வெடிதருதலையினர்வேனல்வெள்ளேற்றினர்விரிசடையர்
பொடியணிமார்பினர்புலியதளாடையர்பொங்கரவர்
வடிவுடைமங்கையோர்பங்கினர்மாதரைமையல்செய்வார்
செடிபடுபொழிலணிதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே (௬)

அக்குலாமரையினர்திரைகுலாமுடியினரடிகளன்று
தக்கனார்வேள்வியைச்சாடியசதுரனார்கதிர்கொள்செம்மை
புக்கதோர்புரிவினர்வரிதருவண்டுபண்முரலுஞ்சோலைத்
திக்கெலாம்புகழுறுந்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௭)

முந்திமாவிலங்கலன்றெடுத்தவன்முடிகடோணெரிதரவே
யுந்திமாமலரடியொருவிரலுகிர்நுதியாலடர்த்தார்
கந்தமார்தருபொழின்மந்திகள்பாய்தரமதுத்திவலை
சிந்துபூந்துறைகமழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௮)

பைங்கண்வாளரவணையவனொடுபனிமலரோனுங்காணு
வங்கணாவருளெனவவரவர்முறைமுறையிறைஞ்சநின்றார்

சங்கநான்மறையவர்நிறைதரவரிவையராடல்பேணத்
திங்கணாள்விழமல்குதிருநெலவேலியுறைசெல்வர்தாமே. (௯)

துவருறுவிரிதுகிலாடையர்வேடமில்சமணரொன்று
மவருறுசிறுசொலேயவமெனநினையுமெமணலார்தாங்
கவருறுகொடிமல்குமாளிகைச்சூளிகைமயிலகளாலத்
திவருறுமதிதவழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (௧௦)

பெருந்தண்மாமலர்மிசையயனவனனையவர்பேணுகல்வித்
திருந்துமாமறையவர்திருநெலவேலியுறைசெல்வர்தம்மைப்
பொருந்துநீர்த்தடமல்குபுகலியுண்ஞானசம்பந்தன்சொன்ன
வருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்மாகாளம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

படியுளார்விடையினர்பாய்புலித்தோலினர்பாவணுசர்
பொடிகொண்மார்பினர்பூதமார்படையினர்பூணநூலர்
கடிகொண்மாமலரிடுமடியினர்பிடிநடைமங்கையோடு
மடிகளாருறைவுபுரிந்திருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௧)

கையினமாமழுவினர்கடுவிடமுண்டவெங்காளகண்டர்
செய்யமாமேனியருனமாருடைதலைபலிதிரிவார
வையமார்பொதுவினின்மறையவர்தொழுதெழநடமதாடு
மையன்மாதேவியோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௨)

பரவினவடியவர்படுதுயர்கெடுப்பவர்பரிவிலார்பாற்
கரவினர்கனலனவுருவினர்படுதலைபலிகொடேகு
மிரவினர்பகலெரிகானிடையாடியவேடர்பூணு
மரவினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௩)

நீற்றினர்நீண்டவார்சடையினர்படையினர்மலர்வெள்ளை
யேற்றினரெரிபுரிகரத்தினர்புரத்துளாருயிரைவவ்வுங்
கூற்றினர்கொடியிடைமுனிவுறநனிவருகுலவுகங்கை
யாற்றினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௪)

புறத்தினரகத்துளார்போற்றிநின்றழுதெழுமன்பர்சிந்தைத்
திறத்தினரறிவிலாச்செதுமதித்தக்கன்றன்வேள்விசெற்ற
மறத்தினர்மாதவர்நால்வருக்காலின்கீழருள்புரிந்த
வறத்தினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௫)

பழகமாமலர்பறித்திண்டைகொண்டிறைஞ்சுவார்பாற்செறிந்த
குழகனார்குணம்புகழ்ந்தேத்துவாரவர்பலர்கூடநின்ற

கழ்கணார்கரியுரித்தாடுகங்காளர்நங்காளியேத்து
மழகனாரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௬)

சங்கவார்குழையினர்தழலனவுருவினர்தமதருளே
யெங்குமாயிருந்தவரருந்தவமுனிவருக்களித்துகந்தார்
பொங்குமாபுனல்பரந்தரிசிலின்வடகரைதிருத்தம்பேணி
யங்கமாறோதுவாரிருப்பிடமம்பர்மாகாளந்தானே (௭)

பொருசிலைமதனனைப்பொடிபடவிழித்தவர்பொழிலிலங்கைக்
குரிசிலைக்குலவரைக்கீழுறவடர்த்தவர்கோயில்கூறிற்
பெருசிலைநலமணிபீலியோடேலமும்பெருகநுந்து
மரிசிலின்வடகரையழகமரம்பர்மாகாளந்தானே (௮)

வரியராவதன்மிசைத்துயின்றவன்றானுமாமலருளானு
மெரியராவணிகழலேத்தவொண்ணாவகையுயர்ந்துபின்னும்
பிரியராமடியவர்க்கணியராயப்பணியிலாதவருக்கென்று
மரியராயரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௯)

சாக்கியக்கயவர்வன்றலைபறிக்கையருமபொய்யினானு
லாக்கியமொழியவைபிழையவையாதலில்வழிபடுவீர்
வீக்கியவரவுடைக்கச்சையர்நச்சையானவர்கட்கெல்லா
மாக்கியவரனுறையம்பர்மாகாளமேயடைமினீரே. (௧௰)

செம்பொன்மாமணிகொழித்தெழுதிரைவருபுனலரிசில்சூழ்ந்த
வம்பர்மாகாளமேகோயிலாவணங்கினோடிருந்தகோனைக்
* கம்பினார்நெடுமதிற்காழியுண்ஞானசம்பந்தன்சொன்ன
நம்பினாண்மொழிபவர்க்கில்லையாம்வினைநலம்பெறுவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவெங்குரு-திருமுக்கால் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர்தொழுதெழுவெங்குருமேவிய, சுண்ணவெண்பொடியணிவீரே
சுண்ணவெண்பொடியணிவீருமதொழுகழ, லெண்ணவல்லாரிடரிலரே. (௧)

வேதியர்தொழுதெழுவெங்குருமேவிய, வாதியவருமறையீரே
யாதியவருமறையீருமையலர்கொடு, ஓதியருணர்வுடையோரே. (௨)

விளங்குதண்பொழிலணிவெங்குருமேவிய, விளம்பிறையணிசடையீரே
யிளம்பிறையணிசடையீருமதிணையடி, யுளங்கொளவுறுபிணியிலரே. (௩)

விண்டலர்பொழிலணிவெங்குருமேவிய, வண்டமர்வளர்சடையீரே
வண்டமர்வளர்சடையீருமைவாழ்த்துமத, தொண்டர்கடுயர்பிணியிலரே.

மிக்கவர்தொழுதெழுவெங்குருமேவிய, வக்கினோடரவசைத்தீரே
யக்கினோடரவசைத்தீருமதடியிணை, தக்கவருறுவதுதவமே.

* கம்பினார்நெடுமதில்-என்பது—ஆகாயம் பின்னிடும்படி மேலோங்கியமதிலெனப்பொருள்படுகின்றது. கம்-எ-து—ஆகாயம்.

வெந்தவெண்பொடியணிவெங்குருமேவிய, வந்தமில்பெருமையினீரே
யந்தமில்பெருமையினீருமையலாகொடு, சிந்தைசெய்வோர்வினைசிதைவே. ()

விழமல்குபொழிலணிவெங்குருமேவிய, வழன்மல்குமங்கையினீரே
யழன்மல்குமங்கையினீருமையலாகொடு, தொழவல்லலகெடுவது துணிவே.

வித்தகமறையவர்வெங்குருமேவிய, மத்தநன்மலர்புனைவீரே
மத்தநன்மலர்புனைவீருமதடிதொழுஞ், சித்தமதுடையவர்திருவே. (அ)

மேலவர்தொழுதெழுவெங்குருமேவிய, வாலநன்மணிமிடற்றீரே
யாலநன்மணிமிடற்றீருமதடிதொழுஞ், சீலமதுடையவர்திருவே. (கூ)

விரைமலகுபொழிலணிவெஙகுருமேவிய, வரைமலகுபுலியதளீரோ
யரைமல்குபுலியதளீருமதடியிணை, யுரைமலகுபுகழவருயர்வே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருஇன்னம்பர்-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றமபலம.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய, வண்டிசைக்குஞ்சடையீரே [ரே
வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார், தொண்டிசைக்குநதொழிலோ

யாழ்நரம்பின்னிசையின்னம்பாமேவிய, தாழகருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைசாாபவ, ராழ்துயருவினையிலரே. (உ)

இளமதிநுதலியோடின்னமபர்மேவிய, வளமதிவளர்சடையீரே
வளமதிவளர்சடையீருமைவாழததுவா, ருளமதிமிகவுடையோரே. (ங)

இடிகுரலிசைமுரலின்னமபர்மேவிய, கடிகமழ்சடைமுடியீரே
கடிகமழ்சடைமுடியீருமகழறொழு, மடியவருவினையிலரே. (ச)

இமையவர்தொழுதெழுமின்னமபாமேவிய, உமையொருகூறுடையீரே
யுமையொருகூறுடையீருமையுள்குவா, ரமைகிலராகிலரனபே. (ரு)

எண்ணரும்புகழுடையின்னம்பாமேவிய, தண்ணருஞ்சடைமுடியீரே
தண்ணருஞ்சடைமுடியீருமைசார்பவா, விண்ணவரடைவுடையோரே. (சு)

எழிறிகழும்பொழிலின்னம்பாமேவிய, நிழறிகழ்மேனியினீரே
நிழறிகழ்மேனியினீருமைநினைபவா, குழறியகொடுவினையிலரே. (எ)

ஏத்தரும்புகழணியின்னம்பாமேவிய, தூர்த்தனைத்தொலைவுசெய்தீரே [ரே
தூர்த்தனைத்தொலைவுசெயதீருமைதொழுமவா, கூாத்தநற்குணமுடையோ

இயலுளோர்தொழுதெழுமின்னம்பாமேவிய, மயனுமாலறிவரியீரே
மயனுமாலறிவரியீருமதடிதொழு, மயலுளாாமறுபிறப்பிலரே. (கூ)

ஏரமர்பொழிலணியின்னம்பர்மேவிய, தேரமண்சிதைவுசெய்தீரே
தேரமண்சிதைவுசெய்தீருமைச்சேர்பவ, ராழ்துயர்ருவினையிலரே. (க0)

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனை, நாடமர்ஞானசம்பந்த
ஞடமர்ஞானசம்பந்தனநற்றமிழ், பாடவல்லார்பழியிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - எழுத்தறிந்தவீசுவரர் - தேவியார் - கொந்தார்பூங்குழலம்மை.

திருநெல்வெண்ணெய்-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நல்வெணெய்விழுதுபெய்தாடுதிர்நாடொறு, நெல்வெணெய்மேவியநீரே
நெல்வெணெய்மேவியநீருமைநாடொறுஞ், சொல்வணமிடுவதுசொல்லே. (க)
நிச்சலுமடியவர்தொழுதெழுநெல்வெணெய்க், கச்சிளவரவசைத்தீரே
கச்சிளவரவசைத்தீருமைக்காண்பவ, ரச்சமோடருவினையிலரே. (உ)
நிரைவிரிதொல்புகழ்நெல்வெணெய்மேவிய, வரைவிரிகோவணத்தீரே
யரைவிரிகோவணத்தீருமையலர்கொடு, வுரைவிரிப்போருயர்ந்தோரே. (௩)
நீர்மல்குதொல்புகழ்நெல்வெணெய்மேவிய, வூர்மல்கியுறையவல்லீரே
யூர்மல்கியுறையவல்லீருமையுள்குதல், பார்மல்குபுகழவர்பண்பே. (ச)
நீடிளம்பொழிலணிநெல்வெணெய்மேவிய, வாடிளம்பாப்பசைத்தீரே
யாடிளம்பாப்பசைத்தீருமையன்பொடு, பாடுளமுடையவர்பண்பே. (ரு)
நெற்றியோர்கண்ணுடைநெல்வெணெய்மேவிய, பெற்றிகொள்பிறைநுதலீரே
பெற்றிகொள்பிறைநுதலீருமைப்பேணுதல், கற்றறிவோர்கடங்கடனே. (சு)
நிறையவர்தொழுதெழுநெல்வெணெய்மேவிய, கறையணிமிடறுடையீரே
கறையணிமிடறுடையீருமைக்காண்பவ, ருறைவதுமும்மடிக்கீழே. (எ)
நெருக்கியபொழிலணிநெல்வெணெய்மேவியன், றரக்கனையசைவுசெய்தீரே
யரக்கனையசைவுசெய்தீருமையன்புசெய், திருக்கவல்லாரிடரிலரே. (அ)
நிரைவிரிசடைமுடிநெல்வெணெய்மேவியன், றிருவரையிடர்கள்செய்தீரே
யிருவரையிடர்கள்செய்தீருமையிசையொடு, பரவவல்லார்பழியிலரே. (கூ)
நீக்கியபுனலணிநெல்வெணெய்மேவிய, சாக்கியசமண்கெடுத்தீரே
சாக்கியசமண்கெடுத்தீருமைச்சார்வது, பாக்கியமுடையவர்பண்பே. (க0)
நிலமல்குதொல்புகழ்நெல்வெணெயீசனை, நலமல்குஞானசம்பந்த
னலமல்குஞானசம்பந்தன்செந்தமிழ், சொல்மல்குவார்துயரிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது

சுவாமிபெயர்-வெண்ணெயப்பர்-தேவியார்-நீலமலர்க்கண்ணம்மை.

திருச்சிறுகுடி-திருமுக்கால் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திடமலிமதிலணிசிறுகுடிமேவிய, படமலியரவுடையீரே
படமலியரவுடையீருமைப்பணிபவ, ரடைவதுமமருலகதுவே. (க)

சிற்றிடையுடன்மகிழ்சிறுகுடிமேவிய, சுற்றியசடைமுடியீரே
சுற்றியசடைமுடியீருமதொழுகழ, லுறறவருறுபிணியிலரே. (உ)
தெள்ளியபுனலணிசிறுகுடிமேவிய, துள்ளியமானுடையீரே
துள்ளியமானுடையீருமதொழுகழ, லுள்ளுதலசெயநலமுறுமே. (ங)
செந்நெலவயலணிசிறுகுடிமேவிய, வொன்னலர்புரமெரித்தீரே
யொன்னலர்புரமெரித்தீருமையுள்குவா, சொனனலமுடையவர்தொண்டே.
செற்றினின்மலிபுனற்சிறுகுடிமேவிய, பெற்றிகொள்பிறைமுடியீரே
பெற்றிகொள்பிறைமுடியீருமைப்பேணிநஞ், சற்றவரருவினையிலரே. (ரு)
செங்கயல்புனலணிசிறுகுடிமேவிய, மங்கையையிடமுடையீரே
மங்கையையிடமுடையீருமைவாழ்த்துவார், சங்கையதிலர்நலர்தவமே. (சு)
செறிபொழிறழுவியசிறுகுடிமேவிய, வெறிகமழ்சடைமுடியீரே
வெறிகமழ்சடைமுடியீருமைவிருமபிமெய்ந, நெறியுணர்வோருணர்நதோரே.
திசையவாதொழுதெழுசிறுகுடிமேவிய, தசமுகனுரநெரித்தீரே
தசமுகனுரநெரிததீருமைச்சாரபவா, வசையறுமதுவழிபாடே. (அ)
செருவரைவயமலர்சிறுகுடிமேவிய, விருவரையசைவுசெய்தீரே
விருவரையசைவுசெய்தீருமையேத்துவா, ரருவினையொடுதுயரிலரே. (கூ)
செய்த்தலைபுனலணிசிறுகுடிமேவிய, புத்தரோடமண்புறத்தீரே
புத்தரோடமண்புறத்தீருமைப்போறறுதல, பத்தாகடமமுடைப்பரிசே (கo)
தேனமர்பொழிலணிசிறுகுடிமேவிய, மானமாகரமுடையீரே
மானமர்கரமுடையீருமைவாழ்ததிய, ஞானசம்பநதனதமிழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மங்களேசுவரர்-தேவியார்-மஙகளநாயகியம்மை.

திருவீழிமிழலை-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றமபலம்.

வெண்மதிதவழ்மதின்மிழலையுளீர்சடை, பொண்மதியணியுடையீரே
யொண்மதியணியுடையீருமையுணாபவா, கண்மதிமிகுவதுகடனே (க)
விதிவழிமறையவர்மிழலையுளீர்நடஞ், சதிவழிவருவதோர்சதிரே
சதிவழிவருவதோர்சதியுடையீருமை, யதிகுணாபுகழ்வதுமழகே. (உ)
விரைமலிபொழிலணிமிழலையுளீரொரு வரைமிசையுறைவதும்வலதே
வரைமிசையுறைவதோர்வலதுடையீருமை, யுரைசெயுமவைமறையொலியே
விட்டெழில்பெறுபுகழ்மிழலையுளீர்கையி, லிட்டெழிலபெறுகிறதெரியே
யிட்டெழில்பெறுகிறதெரியுடையீர்புர, மட்டதுவரைசிலையாலே. (ச)
வேனிகர்கண்ணியர்தமிழலையுளீர்நல, பானிகருருவுடையீரே
பானிகருருவுடையீருமதுடனுமை, தான்மிகவுறைவதுதலமே. (ரு)

விரைமலிபொழிலணிமிழலையுளீர்சென்னி, நிரையுறவணிவதுநெறியே
நிரையுறவணிவதோர்நெறியுடையீருமை, கரையுறவணிவனவரவே. (ரு)
விசையுறுபுனல்வயன்மிழலையுளீரர, வசைவுறவணிவுடையீரே
யசைவுறவணிவுடையீருமையணிபவர், மிசையுறுநாவினாதாமே. (எ)
விலங்கலொண்மதிலணிமிழலையுளீரன்றவ், இலங்கைமன்னிடர்கெடுத்தீரே
யிலங்கைமன்னிடர்கெடுத்தீருமையேத்துவார், புலன்களைமுனிவதுபொருளே.
வெற்பமர்பொழிலணிமிழலையுளீருமை, யற்புதனயனறியானே
யற்புதனயனறியாவகைநின்றவ, னற்பதமறிவதுநயமே. (கூ)
வித்தகமறையவர்மிழலையுளீரன்று, புத்தரோடமணழித்தீரே
புத்தரோடமணழித்தீருமைப்போற்றுவார், பத்திசெய்மனமுடையவரே,
விண்பயில்பொழிலணிமிழலையுளீசனைச், சண்பையுண்ஞானசம்பந்தன்
சண்பையுண்ஞானசம்பந்தன தமிழிவை, யொண்பொருளுணர்வதுமுணர்வே.

திருச்சிற்றம்பலம்.

———(*)———

திருமுதுகுன்றம்-திருமுக்கால்-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்

முரசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய, பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவா, ரரசர்களுலகிலாவாரே. (௧)
மொய்குழலாளொடுமுதுகுன்றமேவிய, பையரவமசைத்தீரே
பையரவமசைத்தீருமைப்பாடுவார், நைவிலாநாடொறுநலமே (௨)
முழவமர்பொழிலணிமுதுகுன்றமேவிய, மழவிடையதுவுடையீரே
மழவிடையதுவுடையீருமைவாழ்த்துவார், பழியொடுபகையிலர்தாமே. (௩)
முருகமர்பொழிலணிமுதுகுன்றமேவிய, வுருவமர்சடைமுடியீரே
யுருவமர்சடைமுடியீருமையோதுவார், திருவொடுதேசினர்தாமே (௪)
முத்திதருமுயர்முதுகுன்றமேவிய, பத்துமுடியடர்த்தீரே
பத்துமுடியடர்த்தீருமைப்பாடுவார், சித்தநல்லவடியாரே. (அ)
முயன்றவரருள்பெறுமுதுகுன்றமேவியவ, னியன்றவரறிவரியீரே
யியன்றவரறிவரியீருமையேத்துவார் பயன்றலைநிற்பவர்தாமே. ([illegible])
மொட்டலர்பொழிலணிமுதுகுன்றமேவிய, கட்டமண்டேரைக்காய்ந்தீரே
கட்டமண்டேரைக்காய்ந்தீருமைக்கருதுவார், சிட்டர்களசீர்பெறுவாரே. ([illegible])
மூடியசோலைசூழ்முதுகுன்றத்தீசனை, நாடியஞானசம்பந்த
னாடியஞானசம்பந்தன செந்தமிழ், பாடியவவர்பழியிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

———

திருத்தோணிபுரம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கரும்பமர்வில்லியைக்காய்ந்துகாதற்காரிகைமாட்டருளி
யரும்பமர்கொங்கையோர்பான்மகிழ்ந்தவற்புதஞ்செப்பரிதாற்

பெரும்பகலேவந்தென்பெண்மைகொண்டுபோந்தவர்சேர்ந்தவிடஞ்
சுரும்பமர்சோலைகள்சூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே. (௧)

கொங்கியல்பூங்குழற்கொவ்வைச்செவ்வாய்க்கோமளமாதுமையாள்
பங்கியலுந்திருமேனியெங்கும்பால்வெள்ளைநீறணிந்து
சங்கியல்வெள்வளைசோரவந்தென்சாயல்கொண்டார்தமதூர்
துங்கியன்மாளிகைசூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே. (௨)

மத்தக்களிற்றுரிபோர்க்கக்கண்டுமாதுமைபேதுறலுஞ்
சித்தந்தெளியநின்றாடியேறூர்தீவண்ணர்சில்பலிக்கென்
றொத்தபடிவந்தென்னுள்ளங்கொண்டவொருவர்க்கிடம்போலுந்
துத்தநல்லின்னிசைவண்டுபாடுந்தோணிபுரந்தானே. (௩-௪-௫-௬-௭)

வள்ளலிருந்தமலையதனைவலஞ்செய்தல்வாய்மையென
வுள்ளங்கொள்ளாதுகொதித்தெழுந்தன்றெடுத்தோனுரநெரிய
மெள்ளவிரல்வைத்தென்னுள்ளங்கொண்டார்மேவுமிடம்போலுந்
துள்ளொலிவெள்ளத்தின்மேன்மிதந்ததோணிபுரந்தானே. (௮)

வெல்பறவைக்கொடிமாலுமற்றைவிரைமலர்மேலயனும்
பல்பறவைப்படியாயுயர்ந்தும்பன்றியதாய்ப்பணிந்துஞ்
செல்வறநீண்டெஞ்சிந்தைகொண்டசெல்வரிடம்போலுந்
தொல்பாரைச்சுமந்தோங்குசெம்மைத்தோணிபுரந்தானே. (௯)

குண்டிகைபீலிதட்டோடுநின்றுகோசரங்கொள்ளியரு
மண்டைகையேந்திமனங்கொள்கஞ்சியூணரும்வாய்மடிய
விண்டைபுனைந்தெருதேறிவந்தென்னெழில்கவர்ந்தாரிடமாந்
தொண்டிசைபாடலறாததொன்மைத்தோணிபுரந்தானே. (௧௦)

தூமருமாளிகைமாடநீடுதோணிபுரத்திறையை
மாமறைநான்கினோடங்கமாறும்வல்லவன்வாய்மையினா
ஞாருகேள்விநலந்திகழுஞானசம்பந்தன்சொன்ன
பாமருபாடல்கள்பத்தும்வல்லார்பார்முழுதாள்பவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திரு இராமேச்சரம்-பண்-பழப்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருதீயழல்வாய
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வா
ரெரிகதிர்முத்தமிலங்குகானலிராமேச்சரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. (௧)

பொறிகிளர்பாம்பணையார்த்தயலேபுரிவோடுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுந்திறமேதெரிந்துணர்வ

றெறிகிளர்வெண்டிரைவந்துபேருமிராமேச்சரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மண்ணர்செயுஞ்செயலே. (௨)

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாக
மலைவளர்காதலிபாடவாடிமயக்காவருமாட்சி
யிலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. (௩)

மாதெனநேரிழையேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திறமேதெரிந்துணர்வா
ரேதமிலார்தொருதேத்திவாழ்த்துமிராமேச்சரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே,()

சூலமோடொண்மழுவின்றிலங்கச்சுடுகாடிடமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வா
ரேலநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிமலர்செயுஞ்செயலே (௫)

கணையிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தா
மிணையிணைநோக்கிநல்லாளோடாடுமியல்பினராகினல்ல
விணைமலர்மேலனம்வைகுகானலிராமேச்சரமேயா
ரணையிணைபுல்குகரநதைசூடுமடிகள்செயுஞ்செயலே. (௬)

நீரினார்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
யூரினார்துஞ்சிருள்பாடியாடுமுவகைதெரிந்துணர்வா
ரேரினார்பைம்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
காரினார்கொன்றைவெண்டிங்களசூடுங்கடவுள்செயுஞ்செயலே. ()

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
யென்றுநல்லோர்களபரவியேத்துமிராமேச்சரமேயார்
குன்றின்னன்னவரக்கன்றடந்தோளடர்த்தார்கொளுங்கொள்கையே. (௮)

கோவலனான்முகனோக்கொணாதகுழகனழகாய
மேவலனொள்ளெரியேந்தியாடுமிமையோரிறைமெய்ம்மை
யேவலனார்புகழ்ந்தேத்திவாழ்த்துமிராமேச்சரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்செயுஞ்செயலே ()

பின்றுடுமுன்னிடுதட்டைசாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
யின்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. (௧0)

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்றிறல்வாட்டி
யேவியல்வெஞ்சிலையண்ணனண்ணுமிராமேச்சரத்தாரை

நாவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது
சுவாமிபெயர்-இராமநாதேசுவரர்-தேவியார்-பர்வதவர்த்தனி—இது-மலை
வளர்காதலியென்று தமிழிற்சொல்லப்படும்.

திருநாரையூர்-பண் பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்

காம்பினைவென்றமென்றோளிபாகங்கலந்தானலந்தாங்கு
தேம்புனல்சூழ்திகழ்மாமடுவிற்றிருநாரையூர்மேய
பூம்புனல்சேர்புரிபுன்சடையான்புலியினுரிதோன்மேற்
பாம்பினை[illegible]பட[illegible]ரங்கன்பாதம்பணிவோமே (௧)

தீவினையாயினதீர்க்கநின்றான்றிருநாரையூர்மேயான்
பூவினைமேவுசடைமுடியான்புடைசூழப்பல்பூதம்
மாவினிலைந்துங்கொண்டாட்டுகந்தானடங்கார்மதின்மூன்று
மேவினையெய்தழித்தான்கழல்பரவாவெழுவோமே. (௨)

மாயவன்சேயவன்வெள்ளியவன்[illegible]மைமிடற்ற
றாயவனாகியோ[illegible]யாகத்
தீயவனீரவன்பூமியவன்றிருநாரையூர்தன்னில்
மேயவனைத்தொழுவாரவர்மேல்வினைபா[illegible]விடுமே. (௩)

துஞ்சிருளாடுவர்[illegible]னார
யஞ்சுடராரெரியாடுவர்[illegible]
னஞ்சுமிழ்[illegible]திருநாரையூ
ரெஞ்சிவனார்க்கடிமை[illegible] (௪)

பொங்கிளங்கொன்னை[illegible]டலில்[illegible]டிமையோர்க
டங்களையாரிடர்தீர[illegible]சடைமேலோர்
திங்களைவைத்தனலாட[illegible]திருநாரையூர்மேய
வெங்கனல்வெண்ணீறணியவல்லாரவரேவிழுமியோர் (௫)

பாருறுவாய்மையினார்பரவும்பரமேட்டிபைங்கொன்றைத்
தாருறுமார்புடையான்மலையின்றலைவன்மலைமகளைச்
சீருறுமாமறுகிற்சிறைவண்டறையுந்திருநாரை
யூருறையெம்மிறைவர்க்கிவைவையொன்றொடொன்றொவ்வாவே (௬)

கள்ளியிடுதலையேந்துகையர்கரிகாடர்கண்ணுதலர்
வெள்ளியகோவணவாடைதன்மேன்மிளிராடரவார்த்து
நள்ளிருணட்டமதாடுவர்நலனோங்குநாரையூ
ருள்ளியபோழ்திலெம்மேலவருவல்வினையாயினவோடுமே. (௭)

நாமமெனைப்பலவுமுடையானலனோங்குநாரையூர்
தாமொமெனப்பறையாழ்குழுழறாளர்கழலபயில
வீமவிளக்கெரிசூழ்சுடலையியம்புமிடுகாட்டிற்
சாமமுரைக்கநின்றுநடமாடுந்தழலாயசங்கரனே. (அ)

ஊனுடைவெண்டலைகொண்டுழல்வானொளிர்புன்சடைமேலோர்
வானிடைவெண்மதிவைத்துகந்தான்வரிவண்டியாழ்முரலத்
தேனுடைமாமலரன்னம்வைகுநதிருநாரையூர்மேய
வானிடையைந்துகந்தானடியேபரவாவடைவோமே. (கூ)

தூசுபுனைதுவராடைமேவுந்தொழிலாருடம்பினிலுண
மாசுபுனைந்துடைநீத்தவர்கண்மயனீர்மைகேளாதே
தேசுடையீர்கடெளிந்தடைமின்றிருநாரையூர்தன்னிற்
பூசுபொடித்தலைவரடியாரடியேபொருத்தமே. (க0)

தண்மதிதாழ்பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்த
ணெண்மதிசேர்சடையானுறைபுநதிருநாரையூர்தனமேற்
பண்மதியாற்சொன்னபாடல்பத்தும்பயின்றார்வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானோரெதிர்கொளவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சௌந்தரேசர-தேவியார்-திரிபுரசுந்தரியம்மை.

திருவலம்புரம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம.

கொடியுடைமும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைதாங்கி
யிடிபடவெயதவமரர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையோர்பாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரநன்னகரே. (க)

கோத்தகல்லாடையுங்கோவணமுங் கொடுகொட்டியுங்கொண்டொரு
கைதேய்த்தன்றனங்கனைத்தேசழித்துத்திசையார்தொழுதேத்தக்
காய்த்தகல்லாலதன்கீழிருந்தகடவுளிடம்போலும்
வாய்த்தமுத்தீத்தொழிலுன்மறையோர்வலம்புரநன்னகரே. (௨)

நொய்யதோர்மானமறிகைவிரலினுனைமேனிலையாக்கி
மெய்யெரிமேனிவெண்ணீறுபூசிவிரிபுன்சடைதாழ
மையிருஞ்சோலைமணங்கமழவிருந்தாரிடம்போலும்
வைகலுமாமுழவம்மதிரும்வலம்புரநன்னகரே. (ஙு)

ஊனமராக்கையுடம்புதன்னையுணரிற்பொருளன்று
தேனமர்கொன்றையினனடிக்கேசிறுகாலையேத்துமினோ

வானமனைந்துங்கொண்டாட்டுகந்தவடிகளிடம்போலும்
வானவர்நாடொறும்வந்திறைஞ்சும்வலம்புரநன்னகரே. (௪)

செற்றெறியுந்திரையார்கலுழிச்செழுநீர்கோலச்செஞ்சடைமே
லற்றறியாதனலாடுநட்டமணியார்தடங்கண்ணி
பெற்றறிவாரொருதேறவல்லபெருமானிடம்போலும்
வற்றறியாப்புனல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (௫)

உண்ணவண்ணத்தொளிநஞ்சமுண்டுமையோடுடனாகிச்
சுண்ணவண்ணப்பொடிமேனிபூசிச்சுடர்ச்சோதிநின்றிலங்கப்
பண்ணவண்ணத்தனபாணிசெயப்பயின்றாரிடம்போலும்
வண்ணவண்ணப்பறைபாணியறாவலம்புரநன்னகரே. (௬)

புரிதருபுன்சடைபொன்றயங்கப்புரிநூல்புரண்டிலங்க
விரைதருவேழத்தினீருரிதோன்மேன்மூடிவேய்
புரைதோளரைதருபூந்துகிலாரணங்கையமர்ந்தாரிடம்போலும்
வரைதருதொல்புகழ்வாழ்க்கையறாவலம்புரநன்னகரே. (௭)

தண்டணைதோளிருபத்தினொடுதலைபத்துடையானை
யண்டணைமாதுமைதானடுங்கவொருகால்விரலூன்றி
மிண்டதுதீர்த்தருள்செய்யவல்லவிகிர்தர்க்கிடம்போலும்
வண்டணைதன்னொடுவைகும்பொழில்வலம்புரநன்னகரே. (௮)

தாருறுதாமரைமேலயனுந்தரணியளந்தானுந்
தேர்வறியாவகையாலியலித்திகைத்துத்திரிந்தேத்தப்
பேர்வறியாவகையானிமிர்ந்தபெருமானிடம்போலும்
வாருறுசோலைமணங்கமழும்வலம்புரநன்னகரே. (௯)

காவியருந்துவராடையினாகடுநோன்புமேல்கொள்ளும்
பாவிகள்சொல்லைப்பயின்றறியாபழந்தொண்டருள்ளுருக
வாவியுணின்றருள்செய்யவல்லவழகரிடம்போலும்
வாவியினீர்வயல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (௧௦)

நல்லியனான்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாடையினான்வலம்புரநன்னகரைச்
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வனசேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வலம்புரநாதர் - தேவியார் - வடுவகிர்க்கண்ணம்மை.

திருப்பருதிநியமம்-பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழப்
பெண்கொண்டமார்பில்வெண்ணீறுபூசிப்பேணார்பலிதேர்ந்து

கண்கொண்டசாயலொடேர்கவர்ந்தகள்வர்க்கிடம்போலும்
பண்கொண்டவண்டினம்பாடியாடும்பருதிநியமமே. (௧)

அரவொலிவில்லொலியம்பினொலியடங்கார்புரமூன்றும்
நிரவவல்லார்நிமிர்புன்சடைமேனிரம்பாமதிசூடி
யிரவிற்புகுந்தென்னெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பரவவல்லார்வினைபாழ்படுக்கும்பருதிநியமமே. (௨)

வாண்முகவார்குழல்வாணெடுங்கண்வளைத்தோண்மாதஞ்ச
நீண்முகமாகியபைங்களிற்றினுரிமேனிகழ்வித்து
நாண்முகங்காட்டிநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பாண்முகவண்டினம்பாடியாடும்பருதிநியமமே (௩)

வெஞ்சுரஞ்சேர்விளையாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
துஞ்சிருண்மாலையுநண்பகலுந்துணையார்பலிதேர்வார்
வஞ்சுரும்பார்குழல்சோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும்
பஞ்சுரம்பாடிவண்டியாழ்முரலும்பருதிநியமமே (௪)

நீர்புல்குபுன்சடைநின்றிலங்கநெடுவெண்மதிசூடித்
தார்புல்குமார்பில்வெண்ணீறணிந்துதலையார்பலிதேர்வா
ரேர்புல்குசாயலெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பார்புல்குதொல்புகழால்விளங்கும்பருதிநியமமே. (௫)

வெங்கடுங்காட்டகத்தாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
திங்கடிருமுடிமேல்விளங்கத்திசையார்பலிதேர்வார்
சங்கொடுசாயலெழில்கவர்ந்தசைவர்க்கிடம்போலும்
பைங்கொடிமுல்லைபடர்புறவிற்பருதிநியமமே (௬)

பிறைவளர்செஞ்சடைபின்றயங்கப்பெரியமழுவேந்தி
மறையொலிபாடிவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வா
ரிறைவளைசோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பறையொலிசங்கொலியால்விளங்கும்பருதிநியமமே. (௭)

ஆசடைவானவர்தானவரோடடியாரமர்ந்தேத்த
மாசடையாதவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வார்
காசடைமேகலைசோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும்
பாசடைத்தாமரைவைகுபொய்கைப்பருதிநியமமே, (௮)

நாடினர்காண்கிலர்நான்முகனுந்திருமாலுநேடத்தக்
கூடலராடலராகிநாளுங்குழகர்பலிதேர்வா
ரேடலர்சோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பாடலராடலராய்வணங்கும்பருதிநியமமே. (௯)

கல்வளராடையர்கையிலுண்ணுங்கழுக்களிழுக்கான
சொல்வளமாகநினைக்கவேண்டாசுடுநீறதுவாடி

நல்வினைசேரநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பல்வளர்முல்லையங்கொல்லைவேலிப்பருதிநியமமே. (௧௦)

பையரவம்விரிகாந்தள்விம்முபருதிநியமத்துத்
தையலொர்பாகமமர்ந்தவனைத்தமிழ்ஞானசம்பந்தன்
பொய்யிலிமாலைபுனைந்தபத்தும்பரவிப்புகழ்ந்தேத்த
வையுறவில்லைப்பிறப்பறுத்தல்வலம்மடையாவே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பருதியப்பர்-தேவியார் மங்களநாயகியம்மை.

திருக்கலிக்காமூர்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மடல்வரையின்மதுவிம்முசோலைவயல்சூழ்ந்தழகாருங்
கடல்வரையோதங்கலந்துமுத்தஞ்சொரியுங்கலிக்காமூ
ருடல்வரையினுயிர்வாழ்க்கையாயவொருவனகழலேத்த
விடர்தொடராவினையானசிந்துமிறைவனருளாமே. (௧)

மைவரைபோற்றிரையோடுகூடிப்புடையேமலிந்தோதங்
கைவரையால்வளர்சங்கமெங்குமிகுக்குங்கலிக்காமூர்
மெய்வரையான்மகள்பாகன்றன்னைவிரும்பவுடல்வாழு
மைவரையாசறுத்தாளுமென்பரதுவுஞ்சரதமே. (௨)

தூவியநீர்மலரேந்திவையத்தவர்கடொழுதேத்தக்
காவியினேர்விழிமாதரென்றுங்கவின்செய்கலிக்காமூர்
மேவியவீசனையெம்பிரானைவிரும்பிவழிபட்டா
லாவியுணீங்கலனாதிமூர்த்தியமரர்பெருமானே. (௩)

குன்றுகள்போற்றிரையுந்தியந்தண்மணியார்தரமேதி
கன்றுடன்புல்கியாயமனைசூழ்கவின்றார்கலிக்காமூ
ரொன்றுணருயிரும்வாழுமெந்தைபெருமானடியேத்தி
நின்றுணர்வாரைநினையகில்லார்நீசர்நமன்றமரே. (௪)

வானிடைவாண்மதிமாடந்தீண்டமருங்கேகடலோதங்
கானிடைநீழலிற்கண்டல்வாழுங்கழிசூழ்கலிக்காமூ
ரானிடையைந்துகந்தாடினானையமரர்தொழுதேத்த
நானடைவாம்வணமின்புதந்தநலமேநினைவோமே. (௫)

துறைவளர்கேதகைமீதுவாசஞ்சூழ்வான்மலிதென்றல்
கறைவளருங்கடலோதமென்றுங்கலிக்குங்கலிக்காமூர்
மறைவளரும்பொருளாயினானைமனத்தாணினைந்தேத்த
நிறைவளரும்புகழெய்தும்வாதைநினையாவினைபோமே. (௬)

கோலநன்மேனியின்மாதர்மைந்தர்கொணர்மங்கிலியத்திற்
காலமும்பொய்க்கிலுந்தாம்வழுவாதியற்றுங்கலிக்காமூர்
ஞாலமுந்தீவளிஞாயிறாயநம்பன்கழலேத்தி
யோலமிடாதவரூழிபென்றுமுணர்வைத்துறந்தாரே. (எ)

ஊரரவந்தலைநீண்முடியாறொலிநீழல்காண்டு
காரரவக்கடல்சூழவாழும்பதியாங்கலிக்காமூர்
தேரரவக்குலம்பேணதயஞ்சத்திருந்துவரைபேர்த்தா
னாரரவம்படவைத்தபாதமுடையானிடமாமே. (அ)

அருவரையேந்தியமாலுமற்றையலர்மேலுறைவானு
மிருவருமஞ்சவெரியுருவாயெழுந்தான்கலிக்காமூ
ரொருவரையான்மகள்பாகன்றன்னையுணர்வாற்றொழுதேத்தத்
திருமருவுஞ்சிதைவில்லைச்செம்மைத்தேசுண்டவர்பாலே. (௯)

மாசுபிறக்கியமேனியாருமருவுந்துவராடை
மீசுபிறக்கியமெய்யினாருமறியாவாதோற்றங்
காசினிநீர்த்திரண்மண்டியெங்கும்வளமார்கலிக்காமூ
ரீசனையெந்தைபிரானையேத்தினினைவார்வினைபோமே. (௧0)

ஆழியுணஞ்சமுதாருண்டன்றமரர்க்கமுதுண்ண
வூழிதோறுமுணராவளித்தானுலகத்துயர்கின்ற
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழார்கலிக்காமூர்
வாழியெம்மானைவணங்கியேத்தமருவாபிணிதானே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுந்தரேசுவரர்-தேவியார்-அழகுவனமுலையம்மை.

திருவலஞ்சுழி-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பள்ளமதாயபடர்சடைமேற்பயிலுந்திரைக்கங்கை
வெள்ளமதாரவிரும்பிநின்றவிகிர்தன்விடையேறும்
வள்ளல்வலஞ்சுழிவாணனென்றுமருவிநினைந்தேத்தி
யுள்ளமுருகவுணருமின்களுறுநோயடையாவே. (௧)

காரணிவெள்ளைமதியஞ்சூடிக்கமழ்புன்சடைதன்மேற்
றாரணிகொன்றையுந்தண்ணெருக்குந்தழையுந்நுழைவித்து
வாரணிகொங்கைநல்லாடனோடும்வலஞ்சுழிமேவியவ
ரூரணிபெய்பலிகொண்டுகந்தவுவகையறியோமே. (௨)

பொன்னியலுந்திருமேனிதன்மேற்புரிநூல்பொலிவித்து
மின்னியலுஞ்சடைதாழவேழவுரிபோர்த்தரவாட

மன்னியமாமறையோர்கள்போற்றும்வலஞ்சுழிவாணர்தம்மே
லுன்னியசிந்தையினீங்ககில்லார்க்குயர்வாம்பிணிபோமே. (ந)

விடையொருபாலொருபால்விரும்புமெல்லியல்புல்கியதோர்
சடையொருபாலொருபாலிடங்கொண்டாழ்குழல்போற்றிசைப்ப
நடையொருபாலொருபாற்சிலம்பூராரும்வலஞ்சுழிசே
ரடையொருபாலடையாதசெய்யுஞ்செய்கையறியோமே. (ச)

கையமரும்மழுநாகம்வீணைகலைமான்மறியேந்தி
மெய்யமரும்பொடிப்பூசிவீசுகுழையார்தருதோடும்
பையமரும்மரவாடலாடும்படர்சடையார்க்கிடமா
மையமரும்பொழில்சூழும்வேலிவலஞ்சுழிமாநகரே. (ரு)

தண்டொடுசூலந்தழையவேந்தித்தையலொருபாகங்
கண்டிடுபெய்பலிபேணிநாணாகரியினுரிதோலர்
வண்டிடுமொய்பொழில்சூழ்ந்தமாடவலஞ்சுழிமன்னியவா
தொண்டொடுகூடித்துதைந்துநின்றதொடர்வைதொடர்வோமே ( )

கல்லியலும்மலையங்கைநீங்கவளைத்துவளையாதார்
சொல்லியலும்மதின்மூன்றுஞ்செற்றசுடரானிடர்நீங்க
மல்லியலுந்திரடோளெம்மாதிவலஞ்சுழிமாநகரே
புல்கியவேந்தனைப்புல்கியேத்தியிருப்பவர்புண்ணியரே. (எ)

வெஞ்சினவாளரக்கனவரையைவிறலாலெடுத்தான்றோ
ளஞ்சுமோராறிருநான்குமொன்றுமடர்த்தாரழகாய
நஞ்சிருள்கண்டத்துநாகரென்றுநவிலுமிடம்போலு
மஞ்சுலவும்பொழில்வண்டுகிண்டும்வலஞ்சுழிமாநகரே. (அ)

ஏடியநான்முகன்சீர்நெடுமாலெனநின்றவர்காணார்
கூடியகூரெரியாய்நிமிர்ந்தகுழகருலகேத்த
வாடியவெண்டலைகையிலேந்திவலஞ்சுழிமேயவெம்மான்
பாடியநான்மறையாளர்செய்யுஞ்சரிதைபலபலவே. (கூ)

குண்டரும்புத்தருங்கூறையின்றிக்குழுவாருரைநீத்துத
தொண்டருந்தன்றொழில்பேணநின்றகழலானழலாடி
வண்டமரும்பொழின்மல்குபொன்னிவலஞ்சுழிவாணனெம்மான்
பண்டொருவேள்விமுனிந்துசெற்றபரிசேபகர்வோமே. (கo)

வாழியெம்மானெனக்கெந்தைமேயவலஞ்சுழிமாநகர்மேற்
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னகருத்தின்றமிழ்மாலை
யாழியிவையகத்தேத்தவல்லாரவர்க்குந்தமருக்கு
மூழியொருபெருமின்பமோர்க்குமுருவுமுயர்வாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

 திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடுநஞ்சமுண்டகடவுள்விடையேறி
யுடலிடையிற்பொடிப்பூசவல்லானுமையோடொருபாக
னடலிடையிற்சிலைதாங்கியெய்தவம்மானடியார்மே
னடலைவினைத்தொகைதீர்த்துகந்தானிடநாரையூர்தானே. (க)

விண்ணின்மின்னேர்மதிதுத்திநாகம்விரிபூமலர்க்கொன்றை
பெண்ணின்முன்னேமிகவைத்துகந்தபெருமானெரியாடி
நண்ணியதன்னடியார்களோடுந்திருநாரையூரானென்
றெண்ணுமினும்வினைபோகும்வண்ணமிறைஞ்சுநிறைவாமே. (உ)

தோடொருகாதொருகாதுசேர்ந்தகுழையானிழைதோன்றும்
பீடொருகாலபிரியாதுநின்றபிறைபான்மறைபாடி
நாடொருகாலமுஞ்சேரநின்றதிருநாரையூரானைப்
பாடுமினீர்பழிபோகும்வண்ணம்பயிலுமுயர்வாமே (ங)

வெண்ணிலவஞ்சடைசேரவைத்துவிளங்குந்தலையேந்திப்
பெண்ணிலமர்ந்தொருகூறதாயபெருமானருளார்ந்த
வண்ணமனணியுறைகோயிலாகுமணிநாரையூர்தன்னை
நண்ணலுமாந்துறவாகுமின்னக்கண்ணடலைகரிசறுமே. (ச)

வானமர்தீவளிநீர்நிலனாயவழங்கும்பழிபாவ
மூனமரினுயிர்தீயகுற்றமுறைவாய்ப்பிறிநின்றி
நானமருமபொருளாகினின்றான்திருநாரையூரெந்தை
கோனவனைக்குறுகக்குறுகாகொடுவல்வினைதானே (ரு)

கொக்கிறகுங்குளிர்சென்னிமத்தங்குரவம்மலர்சூடி
யக்கரவோடரையார்த்துகந்தவழகன்குழகாக
நக்கமருந்திருமேனியாளன்றிருநாரையூர்மேவிப
பக்கமரும்மனத்தோர்கடமைப்புணரும்புகழ்ந்தேனே (சு)

ஊழியுமின்பமுங்காலமாகியுயருந்தவமாகி
மேழிசையின்பொருளாயுழவாழ்க்கைவினையின்புணர்ப்பாகி
நாழிகையும்பலஞாயிறுந்திங்களுநாரையூர்தன்னில
வாழியாமேதருமைந்தாசெய்யுமவனைநினைவினைவாமே. (எ)

கூசமிலாதரக்கன்வரையைக்குலுங்கவெடுத்தான்றோ
ளாசமதாகியிறவடர்த்தவிரலானசரவாரா
பேசவியபபொடுபேணநின்றபெரியோனிடம்போலுந்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருநாரையூர்தானே (அ)

பூமகனும்மவனைப்பயந்தபுயலார்நிறத்தானு
மாமளவுந்திரிந்தேத்தக்காண்டலறிதற்கரியானூர்

பாமருவுங்குணத்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யுந்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருநாரையூர்தானே. (௯)

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
யுற்றரையோர்களுரைக்குஞ்சொல்லையுணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான்குழகன்றொழிலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருநாரையூர்சேர்வே. (௧௦)

பாடியலுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடியலும்புகழோங்குசெம்மைத்திருநாரையூரான்மேற
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித்திரிந்தாக
வாடியசிந்தையினார்க்குநீங்குமவலக்கடறானே. (௧௧)

திருச்சிற்றம்பலம

திருவாலவாய்-நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ, லாதமிலியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. (௧)

வைதிகத்தின்வழியொழுகாதவக், கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெய்யத்திருவுள, மே, மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே (௨)

மறைவழக்கமிலாதமாபாவிகள, பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே, மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (௩)

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக், கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே, முறித்தவான்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென-னாலவாயிலுறையுமெம்மாதியே (௪)

அந்தணாளர்புரியுமருமறை, சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே, வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (௫)

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி, மூட்டுச்சிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே, காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (௬)

அழலதோம்புமருமறையோர்திறம், விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே, தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (௭)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற, காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே, யாற்றவரக்கற்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்திறத்துநின், சீலமவாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர், கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (௯)

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின், றுன்றுபொற்கழல்பேணவருகரைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே, கன்றுசாக்கியர்காணாததலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே (௧0)

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு, வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப், பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயமுந்-திருவானைக்காவுந்-திருமயேந்திரமுந்-திருவாரூருங்-கூடச்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணா, வெண்ணாவல்விரும்புமயேந்திரருங்
கண்ணதுவோங்கியகயிலையாரு, மண்ணலாரூராதியானைக்காவே. (௧)

வந்துமாலயனவர்காணரியார், வெந்தவெண்ணீறணிமயேந்திரருங்
கந்தவார்சடையுடைக்கயிலையாரு, மந்தணாரூராதியானைக்காவே. (௨)

மாலயன்றேடியமயேந்திரருங், காலனையுயிர்கொண்டகயிலையாரும்
வேலையதோங்குமவெண்ணாவலாரு, மாலையாரூராதியானைக்காவே. (௩)

கருடனையேறரியயனோர்காணார், வெருள்விடையேறியமயேந்திரருங்
கருடருகண்டத்தெங்கயிலையாரு, மருளாரூராதியானைக்காவே. (௪)

மதுசூதனனான்முகன்வணங்கரியார், மதியதுசொல்லியமயேந்திரருங்
கதிர்முலைபுல்கியகயிலையாரு, மதியணாரூராதியானைக்காவே. (௫)

சக்கரம்வேண்டுமாலபிரமன்காணா, மிக்கவாகயிலைமயேந்திரருந்
தக்கனைத்தலையரிதழலுருவ, ரக்கணியவராரூராதியானைக்காவே. (௬)

கண்ணனுநான்முகன்காண்பரியார், வெண்ணாவல்விரும்புமயேந்திரருங்
கண்ணப்பர்க்கருள்செய்கயிலையெங்க, ளண்ணலாரூராதியானைக்காவே. (௭)

கடல்வண்ணனான்முகன்காண்பரியார், தடவரையரக்கனைத்தலைநெரித்தா
விடமதுவுண்டவெம்மயேந்திரரும், மடல்விடையாரூராதியானைக்காவே. (அ)

ஆதிமாலயனவர்காண்பரியார், வேதங்கடுதிசெயுமயேந்திரரு
காதிலொருகுழையுடைக்கயிலையாரு, மாதியாரூரெந்தையானைக்காவே. (௯)

அறிவிலமண்புத்தரறிவுகொள்ளேல், வெறியுமான்கரத்தாரூர்மயேந்திரரு
மறிகடலோனயன்றேடத்தானு, மறிவரியகயிலையோனானைக்காவே. (௧0)

ஏனமாலயனவர்காண்பரியார், கானமார்கயிலைநன்மயேந்திரு
மானவாரூராதியானைககாவை, ஞானசம்பந்தனதமிழ்சொல்லுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

——(*)——

திருப்பிரமபுரம்-ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

வரமதேகொளாவுரமதேசெயும்புரமெரித்தவன்பிரமநற்புரத்
தரனன்னாமமேபரவுவார்கள்சீர்விரவுநீள்புவியே (௧)

சேணுலாமதில்வேணுமண்ணுளோர்காணமனறலார்வேணுநற்புரத்
தாணுவின்கழல்பேணுகின்றவராணியொத்தவரே. (௨)

அகலமார்தரைபுகலுநான்மறைக்கிகலியோர்கள்வாழ்புகலிமாநகர்ப்
பகலசெய்வோனெதிர்ச்சகலசேகரனகிலநாயகனே (௩)

துங்கமாகரிபங்கமாவடுஞ்செங்கையானிகழ்வெங்குருத்திக
ழங்கணனடித்தங்கையாறெழுகதங்குமோவினையே (௪)

காணியொண்பொருட்கற்றவாக்கிகையுடைமையோரவர்காதல்செயயுநற்
றோணிவண்புரத்தாணியெனபவர்தூமதியினரே. (௫)

ஏந்தராவெதிர்வாய்ந்தநுண்ணிடைபூந்தணோதியாள்சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழுமாந்தாமேனிமேறசேர்ந்திராவினையே (௬)

சுரபுரத்தினைத்துயர்செயதாருகன்றுஞ்சவெஞ்சினக்காளியைத்தருஞ்
சிரபுரத்துளானெனனவல்லவர்சித்திபெற்றவரே. (௭)

உறவுமாகியற்றவர்களுக்குமாநிதிகொடுத்துநீள்புவியிலங்குசீர்ப்
புறவமாநகாக்கிறைவனேயெனத்தெறிகிலாவினையே. (௮)

பண்புசேரிலங்கைக்குநாதனன்முடிகள்பத்தையுங்கெடநெரித்தவன்
சண்பையாதியைத்தொழுமவர்களைச்சாதியாவினையே (௯)

ஆழியங்கையிற்கொண்டமாலயனறிவொணாததோர்வடிவுகொண்டவன்
காழிமாநகாக்கடவுணாமமேகற்றலேற்றமே. (௧0)

விச்சையொன்றிலாச்சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக்கரிசறுத்தவன்
கொச்சைமாநகாக்கன்புசெயபவர்குணங்கள்கூறுமினே. (௧௧)

கழுமலத்தினுட்கடவுள்பாதமேகருதுஞானசம்பந்தனின்றமிழ்
முழுதுமவலவர்க்கின்பமேதருமுககணெம்மிறையே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

வேலினேர்தருகண்ணினாளுமைபங்கனங்கணன்மிழலைமாநக
ராலநீழலின்மேவினானடிக்கன்பர்துன்பிலரே. (௧)

விளங்குநான்மறைவல்லவேதியர்மல்குசீர்வளர்மிழலையானடி
யுளங்கொள்வார்தமையுளங்கொள்வார்வினையொல்லையாமறுமே. (௨)

விசையிலேறெழுபசையுநஞ்சினையுகைவுசெய்தவன்மிழலைமாநக
ரிசையுமீசனைநசையின்மேவினான்மிசைசெயாவினையே. (௩)

வென்றிசேர்கொடிமூடுமாமதின்மிழலைமாநகர்மேவிநாடொறு
நின்றவாதிதனடிநினைப்பவர்துன்பமொன்றிலரே. (௪)

போதகந்தனையுரிசெய்தோன்புயநேர்வரும்பொழின்மிழலைமாநக
ராதரஞ்செய்தவுக்கள்பாதமலாலோர்பற்றிலமே. (௫)

தக்கன்வேள்வியைச்சாடினார்மணிதொக்கமாளிகைமிழலைமேவிய
நக்கஞ்சடிதொழுவர்மேல்வினைநாடொறுங்கெடுமே. (௬)

போரணவுமுப்புரமெரித்தவன்பொழில்கள்சூழ்தருமிழலைமாநகர்ச்
சேருமீசனைச்சிந்தைசெய்பவர்தீவினைகெடுமே. (௭)

இரக்கமிற்றொழிலரக்கனுருடனெருக்கினானமிகுமிழலையானடி
சிரக்கொள்பூவெனவொருக்கினாபுகழ்பரக்குநீள்புவியே (௮)

துன்றுபூமகன்பன்றியானவனொன்றுமோராகிலாமிழலையானடி
சென்றுபூம்புனனின்றுதூவினார்நன்றுசேர்பவரே (௯)

புத்தர்கைச்சமண்பித்தர்பொய்க்குவைவைத்தவித்தகன்மிழலைமாநகர்
சித்தம்வைத்தவரித்தலத்தினுண்மெய்த்தவத்தவரே. (௧௦)

சந்தமார்பொழின்மிழலையீசனைச்சண்பைஞானசம்பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ்பத்தும்வல்லவர்பத்தராகுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லவனீச்சரம்-௩௭௨

திருச்சிற்றம்பலம்.

பரசுபாணியர்பாடல்வீணையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்றாரிவர்தன்மையறிவாரார். (௧)

பட்டநெற்றியர்நட்டமாடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௨)

பவளமேனியர்திகழுநீற்றினர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தழகராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௩)

பண்ணில்யாழினர்பயிலுமொந்தையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தண்ணலாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௪)

பல்லிலோட்டினர்பலிகொண்டுண்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெல்லியாட்டுகந்தாரிவர்தன்மையறிவாரார். (௫)

பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திச்சையாயிருப்பாரிவர்தன்மையறிவாரார் (௬)
பைங்கணேற்றினர்திங்கள்சூடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெங்குமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௭)
பார்தங்கைதொழுவேதமோதுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தாதியாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௮)
படிகொண்மேனியர்கடிகொள்கொன்றையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தடிகளாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௯)
பறைகொள்பாணியர்பிறைகொள்சென்னியர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திறைவராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (௧0)
வானமாள்வதற்கூனமொன்றிலைமாதர்பல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தன்நற்றமிழ்சொல்லவல்லவர்நல்லவர் (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்-திருஇயமகம்

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேபகனலவிழிநாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே (௧)

சதிமிகவந்தசலந்தரனேதடிசிரநேர்கொள்சலந்தரனே
யதிரொளிசேர்திகிரிப்படையாலமர்ந்தனரும்பர்துதிப்படையாள்
மதிதவழ்வெற்பதுகைச்சிலையேமருவிடமேற்பதுகைச்சிலையே
விதியினிலிட்டவிரும்பரனேவேணுபுரத்தைவிரும்பரனே. (௨)

காதமரத்திகழ்தோடினனேகானவனாய்க்கடிதோடினனே
பாதமதாற்கூற்றுதைத்தனனேபார்த்தனுடலம்புதைத்தனனே
தாதவிழ்கொன்றைதரித்தனனேசார்ந்தவினையதரித்தனனே
போதமமருமுரைப்பொருளேபுகலியமர்ந்தபரம்பொருளே. (௩)

மைத்திகழ்நஞ்சுமிழ்மாசுணமேமகிழ்ந்தரைசேர்வதுமாசுணமே
மெய்த்துடல்பூசுவர்மேன்மதியேவேதமதோதுவர்மேன்மதியே
பொய்த்தலையோடுறுமத்தமதேபுரிசடைவைத்ததுமத்தமதே
வித்தகராகியவெங்குருவேவிரும்பியமர்ந்தனர்வெங்குருவே (௪)

உடன்பயில்கின்றனன்மாதவனேயுறுபொறிகாய்ந்திசைமாதவனே
திடம்படமாமறைகண்டனனேதிரிகுணமேவியகண்டனனே
படங்கொளரவரைசெய்தனனேபகடுரிகொண்டரைசெய்தனனே
தொடர்ந்ததுயர்க்கொருநஞ்சிவனேதோணிபுரத்துறைநஞ்சிவனே.

திகழ்கையதும்புகைதங்கழலேதேவர்தொழுவதுந்தங்கழலே
இகழ்பவர்தாமொருமானிடமேயிருந்தனுமேவாமெழின்மானிடமே
மிகவருநீர்கொளுமஞ்சடையேமின்னிகாகின்றதுமஞ்சடையே
தகவிரதங்கொளவாசுந்தரரேதக்கதராயுறைசுந்தரரே. (௬)

ூர்வருகண்களிணைக்கயலேயுமையவள்கண்களிணைக்கயலே
பேர்மருவுங்கழலுகமதேயெழில்சொளுதாசனுகமதே
நீர்வருகொந்தளகங்கையதேநெடுஞ்சடைமேவியகங்கையதே
சேர்வருயோகதியம்பகனேசிரபுரமேயதிகம்பகனே. (எ)

ாண்டுதுயிலமாப்பினனேயிருங்கணிடந்தடியப்பினனே
தீண்டலரும்பரிசக்கரமேதிகழ்ந்தொளிசோவதுசக்கரமே
வேண்டிவருந்தகைதந்தலையேமிகைத்தவரோடுநகைத்தலையே
பூண்டனர்சேரலுமாபதியேபுறவமமர்ந்ததுமாபதியே (அ)

நின்மணிவாயதுநீழலையேநேசமதானவாநீழலையே
யுன்னிமநத்தெழுசங்கமதேயொளியதனோடுறுசங்கமதே
கன்னியரைக்கவருங்களனேகடல்விடமுண்டகருங்களனே
மன்னிவரைப்பதிசண்பையதேவாரிவயன்மலிசண்பையதே. (௯)

இலங்கையரக்கர்தமக்கிறையேயிடந்துகயிலையெடுக்கிறையே
புலன்கள்கெடவுடன்பாடினனேபொறிகள்கெடவுடன்பாடினனே
இலங்கியமேனியிராவணனேயெயதுபெயருமிராவணனே
கலந்தருளபெற்றதுமாவசியேகாழியானடிமாவசியே (௧0)

கண்ணிகள்புண்டரிகத்தினனேகலந்திரிபுண்டரிகத்தினனே
மண்ணிகழும்பரிசேனமதேவானகமேயவகைசேனமதே
நண்ணியடிமுடியெய்தலரேநளிர்மலிசோலையிலெய்தலரே
பண்ணியலகொச்சைப்பசுபதியேபசுமிகவூர்வர்பசுபதியே (௧௧)

பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலையவையெதிரே
வருநதியிடைமிசைவருகரனேவசையொடுமலர்கெடவருகரனே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழியேவலலவாதம்மிடாதிடமொழியே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம்-திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே
யாயுநன்பொருளுண்பொருளாதியேயாலநீழலவரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. (௧)

சடையணிந்ததுவெண்டலைமாலையேதம்முடம்பிலும்வெண்டலைமாலையே
படையிலங்கையிற்சூலமதென்பதேபாந்திலங்கையிற்சூலமதென்பதே

புடைபரப்பனபூதகணங்களேபோற்றிசைப்பனபூதகணங்களே
கடைகடோறுமிரப்பதுமிச்சையேகம்பமேவியிருப்பதுமிச்சையே. ()

வெள்ளெருக்கொடுதும்பைமிலைச்சியேவேறுமுன்செலத்தும்பைமிலை
யள்ளுநீறதுபூசுவதாகமேயானையாசுண்ணமூசுவதாகமே [ச்சியே
புள்ளியாடையுடுப்பதுகத்துமேபோனவூழியுடுப்பதுகத்துமே
கள்ளுலாமலர்க்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே (௩)

முற்றலாமையணிந்தமுதல்வரேமூரியாமையணிந்தமுதல்வரே
பற்றிவாளரவாட்டும்பரிசரேபாலுநெய்யுகந்தாட்டும்பரிசரே
வற்றலோடுகலம்பலிதேர்வதேவாணிறோடுகலம்பலிதேர்வதே
கற்றிலாமனங்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௪)

வேடனாகிவிசையற்கருளியேவேலைநஞ்சமிசையற்கருளியே
யாடுபாம்பரையார்த்தது . —ம்தேயஞ்சுபூதமுமார்த்ததுடையதே
கோடுவாணமதிக்கண்ணியழகிதேகுற்றமின்மதிக்கண்ணியழகிதே
காடுவாழ்பதியாவதுமும்மதேகம்பமாபதியாவதுமும்மதே. (௫)

இரும்புகைக்கொடிதங்குகழல்கையதேயிமயமாமகடங்குகழல்கையதே [கியே
யரும்புமொய்த்தமலர்ப்பொறைதாங்கியேயாழியானறனமலர்ப்பொறைதாங்
பெருமைபகனடமாடுதல்செய்துமேபேதைமாமனம்வாடுதல்செய்துமே
கருமபுமொய்த்தெழுகம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே (௬)

முதிரமங்கைதவஞ்செய்தகாலமேமுன்புமங்கைதவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகிலசந்தமுருட்டியேவேழமோடகிலசந்தமுருட்டியே
யதிரவாறுவாதத்தெழுவதொடேயானையாடுவரத்தெழுவதொடே
கதிர்கொள்பூண்முலைக்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௭)

பண்டரக்கனெடுத்தபலத்தையேபாய்ந்தரக்கனெடுத்தபலத்தையே
கொண்டரக்கியதுங்காலவிரலையேகோளரக்கியதுங்காலவிரலையே
யுண்டுழன்றதுமுண்டத்தலையிலேயுடுபதிக்கிடமுண்டத்தலையிலே
கண்டநஞ்சமடக்கினைகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே.

தூணியானசுடர்விடுசோதியேசுத்தமானசுடர்விடுசோதியே
பேணியோடுபிரமப்பறவையேபித்தனைப்பிரமப்பறவையே
சேணினோடுகீழூழிதிரிந்ததுமேசித்தமோடுகீழூழிதிரிந்ததுமே
காணநின்றனருற்றதுகம்பமேகடவுணீயிடமுற்றதுகம்பமே. (௯)

ஒருடம்பினையீருருவாகவேயுன்பொருட்டிறமீருருவர்கவே
யாருமெய்தற்கரிதுபெரிதுமேயாற்றலெய்தற்கரிதுபெரிதுமே
தோரும்மறியாததிகைப்பரேசித்தமும்மறியாததிகைப்பரே
காரிறத்தமணர்க்கொருகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே.

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திடுகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகலியேபூசுரன்றன்விரும்பிப்புகலியே

யந்தமில்பொருளாயினகொண்டுமேயண்ணலின்பொருளாயினகொண்டுமே
பந்தனின்னியலபாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் -ஏகாம்பரநாதர் - தேவியார் - காமாக்ஷியம்மை

திருவாலவாய்-பண்-திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டகளத்தனே (௧)

பாதியாயுடன்கொண்டதுமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிடுமாகனேகொண்டநற்கையின்மானிடமாகனே
நாதனாடொறுமாடுவதானையேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலநல்வாயிலே. (௨)

காடுநீடதுறப்பலகத்தனேகாதலானினைவார்தமகத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேபலபிணத்தசைநாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழநாளுமிருப்பனே
யாடநீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே (௩)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாகமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே
பண்டநாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (௪)

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசீறியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவீடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையாணிலவமலகியுதித்தனகங்கையா
லன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனாகத்தடவியே. (௫)

நக்கமேசவர்நாடுமோருருமேநாதன்மேனியின்மாசுணமூருமே
தக்கபூமனைச்சுற்றக்கருளொடேதாரமுய்ந்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கிறாமுதுண்கலனோடுமேயாலவாயரனுருமையோடுமே. (௬)

வெய்யவன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
ஐயனேயனலாடியமெய்யனேயன்பினானினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
ஐயமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயரன்கையதுவீணையே. (௭)

தோள்கள்பத்தொடுபத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கையமைக்கியே
வாளரக்கனிலத்துகளித்துமேவந்தமாலவரைகண்டுகளித்துமே

நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
யாளுமாதிமுறித்ததுமெய்கொலோவாலவாயரனுய்த்ததுமெய்கொலோ.

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாரிடுபிச்சையேசென்றுகொண்டொருசெய்வதுபிச்சையே
யங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனாரிடக்கையே. (௮)

தேரரோடமணர்க்குநல்காளையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகாளையே
கோரமட்டதுபுண்டரிகத்தையேகொண்டநீள்கழல்புண்டரிகத்தையே
நேரினார்களழித்ததுநாகமேநீள்சடைத்திகழ்கின்றவுநாகமே
யாரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனாரிடமென்பதே. (௧௰)

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபலபொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
கானுமாத்தனசெந்தமிழ்ப்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்ப்பத்துமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை-திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

துன்றுகொன்றைநஞ்சடையதேதூயகண்டநஞ்சடையதே
கன்றினமானிடக்கையதேகல்லினமானிடக்கையதே
யென்றுமேறுவதிடவமேயென்னிடைப்பலியிடவமே
நின்றதும்மிழலையுள்ளுமேநீணெறிச்சிறிதுமுள்ளுமே. (௧)

ஓதிவாயதுமறைகளேயுரைப்பதும்பலமறைகளே
பாதிகொண்டதுமாதையேபணிகிறேன்மிகுமாதையே
காதுசேர்கனங்குழையரோகாதலாகனங்குழையரோ
வீதிவாய்மிகும்வேதியாமிழலைமேவியவேதியா. (௨)

பாடுகின்றபண்டாரமேபத்தரன்னபண்டாரமே
சூடுகின்றதுமத்தமேதொழுதவென்னையுன்மத்தமே
நீடுசெய்வதுதக்கதேநின்னைத்திகழ்தக்கதே
நாடுசேர்மிழலையூருமேநாகநஞ்சழலையூருமே (௩)

கட்டுகின்றகழனாகமேகாய்ந்ததுமதனனாகமே
யிட்டமாவதிசைபாடலேயிசைந்தநூலினமர்பாடலே
கொட்டுவானமுழவம்வாணனேகுலாயசீர்மிழலைவாணனே
நட்டமாடுவதுசந்தியேநானுய்தற்கிரவுசந்தியே. (௪)

ஓவிலாதிடுங்கரணமேயுன்னுமென்னுடைக்கரணமே
யேவுசேர்வுநின்னாணையேயருளினின்றபொற்றாளையே
பாவியாதுரைமெய்யிலேபயின்றனின்னடிமெய்யிலே
மேவினன்விறற்கண்ணனேமிழலைமேயமுக்கண்ணனே. (௫)

வாய்ந்தமேனியெரிவண்ணமேமகிழ்ந்துபாடுவதுவண்ணமே
காய்ந்துவீழ்ந்தவன்காலனேகடுஞ்செயுங்காலனே
போந்ததெய்யமிடையிரவிலேயும்மிடைக்கள்ளமிரவிலே
மேய்ந்ததும்மிழலையென்பதேவிரும்பியேயணிவதென்பதே. (சு)

அப்பியன்றகண்ணயனுமேயமரர்கோமகனுமயனுமே
யொப்பிலின்றமரர்தருவதேயொண்கையாலமர்தருவதே
மெய்ப்பயின்றவரிருக்கையேமிழலையூருமதிருக்கையே
செப்புமின்னெருதுமேயுமேசேர்வுமகமெருதுமேயுமே. (எ)

தானவக்குலம்விளக்கியேதாரகைச்செலவிளக்கியே
வானடர்த்தகயிலாயமேவந்துமேவுகயிலாயமே
தானெடுத்தவல்லரக்கனேதடமுடித்திரளரக்கனே
மேனடைச்செலவிருப்பனேமிழலைநற்பதிவிருப்பனே (அ)

காயமிக்கதொருபன்றியேகலந்தநின்னவுருபன்றியே
யேயவிப்புவிமயங்கவேயிருவர்தாமனமயங்கவே
தூயமெய்த்திரளகண்டனேதோன்றிநின்றமணிகண்டனே
மேயவித்துயிலவிலக்கணாமிழலைமேவியவிலக்கணா (கூ)

கஞ்சியைக்குலவுகையரோகலக்கமாரமணாகையரோ
யஞ்சவாதிலருள்செய்யநீயணைந்திடும்பரிசுசெய்யநீ
வஞ்சனேவரவும்வல்லையேமதித்தெனைச்சிறிதும்வல்லையே
வெஞ்சலின்றிவருவித்தகாமிழலைசேரும்விறல்வித்தகா. (க0)

மேயசெஞ்சடையினப்பனேமிழலைமேவியவென்னப்பனே
யேயுமாசெயவிருப்பனேயிசைந்தவாசெயவிருப்பனே
காயவர்க்கசம்பந்தனேகாழிஞானசம்பந்தனே
வாயுரைத்ததமிழ்பத்துமேவல்லவர்க்குநிலைபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீகாழி-திருமாலைமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீயாமாமாயாழீகாமாகாணாகா
காணாகாமாகாழீயாமாமாயாநீமாமாயா (க)

யாகாயாழீகாயாகாதாயாராராதாயாயா
யாயாதாராராயாதாகாயாகாழீயாகாயா. (உ)

தாவாமூவாதாசாகாழீநாதாநீயாமாமா
மாமாயாநீதாநாழீகாசாதாவாமூவாதா. (ங)

நீவாவாயாகாயாழீகாவாவாவானோவாராமே
மேராவானோவாவாகாழீபாகாயாவாவாநீ. (ச)

யாகாலாமேயாகாழீயாமேதாவீதாயாவீ
வீயாதாவீதாமேயாழீகாயாமேலாகாயா. (௫)

மேலேபோகாமேதேழீகாலாலேகாலாறுயே
யேறுலாகாலேலாகாழீதேமேகாபோலேமே (௬)

நீயாமாநீயேயாமாதாவேழீகாநீதானே
னேதாநீகாழீவேதாமாயாயேநீமாயாநீ. (௭)

நேணவராவிழயாசைழியேவேகதளேரியளாயுழிகா
காழியுளாயரிளேதகவேயேழிசையாழவிராவணனே. (௮)

காலேமேகாணீகாழீகாலேமாலேமேபூ
பூமேலேமாலேகாழீகாணீகாலேமேகா. (௯)

வேரியுமேணவகாழியொயேயேனைநிணேமடளோகரர்தே
தேரர்களோடமணேநினையேயேயொழிகாவணமேயுரிவே. (௧௦)

நேரகழாமிதயாசழிதாயேனனியேனனிளாயுழிகா
காழியுளானினையேனினயேதாழிசயாதமிழாகரனே. (௧௧)

திருச்சிற்றம் பலம்.

திருக்கழுமலம்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மடமலிகொன்றைதுன்றுவாளெருக்கும்வன்னியுமத்தமுஞ்சடைமேற்
படலொலிதிரைகண்மோதியகங்கைதங்கலைவனாதம்மிடம்பகரில்
விடலொலிபரந்தவெண்டிரைமுத்தமிப்பிகள்கொணர்ந்துவெள்ளருவி
கடலொலியோதமோதவந்தலைக்குங்கழுமலநகரெனலாமே. (௧)

மின்னியவரவும்வெறிமலர்பலவும்விரும்பியதிங்களுந்தங்கு
சென்னியதுடையானதேவாதமபெருமானசேயிழையொடுமுறைவிடமாம்
பொன்னியனமணியுமுரிகரிமருப்புஞ்சந்தமுமுந்துவன்றிரைகள்
கன்னியராடக்கடலொலிமலியுங்கழுமலநகரெனலாமே. (௨)

சீருறுதொண்டர்கொண்டடிபோற்றச்செழுமலர்புனலொடுதூபந்
தாருறுகொன்றைதம்முடிவைத்தசைவனாதங்கிடமெங்கு
மூருறுபதிகளுலகுடனபொங்கியொலிபுனல்கொளவுடன்மிதந்த
காருறுசெம்மைநன்மையான்மிக்ககழுமலநகரெனலாமே. (௩)

மண்ணினாரேத்தவானுளார்பரசவந்தரத்தமரர்கள்போற்றப்
பண்ணினாரெல்லாம்பலபலவேடமுடையவர்பயில்விடமெங்கு
மெண்ணினான்மிக்காரியல்பினானிறைந்தாரேந்திழையவரொடுமைந்தர்
கண்ணினாலின்பங்கண்டொளிபரக்குங்கழுமலநகரெனலாமே. (௪)

சுருதியான்றலையுநாமகண்மூக்குஞ்சுடரவன்கரமுமுன்னியங்கு
பருதியான்பல்லுமிறுத்தவர்கருளும்பரமனார்பயின்றினிதிருக்கை

விருதினான்மறையுமங்கமோராறும்வேள்வியும்வேட்டவர்ஞானங்
கருதினாருலகிற்கருத்துடையார்சேர்கழுமலநகரெனலாமே, (௫)

புற்றில்வாளரவுமாமையும்பூண்டபுனிதனார்பனிமலர்க்கொன்றை
பற்றிவான்மதியஞ்சடையிடைவைத்தபடிறனார்பயின்றினிதிருக்கை
செற்றுவன்றிரைகளொன்றொடொன்றோடிச் செயிர்த்துவண்சங்கொடுவங்கங்
கற்றுறைவர்கள்கரைக்குவந்துரைக்குங்கழுமலநகரெனலாமே. (௬)

அலைபுனற்கங்கைதங்கியசடையாரடனெடுமதிலொருமூன்றுங்
கொலையிடைச்செந்தீவெந்தறக்கண்டகுழகனார்கோயிலதென்பர்
மலையின்மிக்குயர்ந்தமரக்கலஞ்சரக்குமற்றிடையிடையெங்குங்
கலைகளித்தேறிக்கானலில்வாழுங்கழுமலநகரெனலாமே (௭)

ஒருக்கமுன்னினியாததக்கனறன்வேள்வியுடைதரவுழறியபடையா
ரரக்கனைவரையாலாற்றலன்றழித்தவழகனாரமர்ந்துறைகோயில்
பரக்கும்வண்புகழார்பழியவைபார்த்துப்பலபலவறங்களேபயிற்றிக்
கரக்குமாறறியாவண்மையால்வாழுங்கழுமலநகரெனலாமே. (௮)

அருவரைபொறுத்தவாற்றலினானுமணிகிளர்தாமரையானு
மிருவருமேத்தவெரியுருவானவிறைவனாருறைவிடம்வினவி
லொருவரிவ்வுலகில்வாழ்கிலாவண்ணமொலிபுனல்வெள்ளமுன்பரப்பக்
கருவரைசூழ்ந்தகடலிடைமிதக்குங்கழுமலநகரெனலாமே. (௯)

உரிந்துயருருவிலுடைதவிர்ந்தாருமதந்துகில்போர்த்துழல்வாருந்
தெரிந்துபுன்மொழிகள்செப்பினகேளாச்செம்மையார்நன்மையாலுறைவாங்
குருந்துயர்கோங்குகொடிவிடுமுல்லைமல்லிகைசெண்பகம்வேங்கை
கருந்தடங்கண்ணின்மங்கைமார்கொய்யுங்கழுமலநகரெனலாமே (௧0)

கானலங்கழனியோதம்வந்துலவுங்கழுமலநகருறைவார்மேல்
ஞானசம்பந்தனற்றமிழ்மாலைநன்மையாலுரைசெய்துநவில்வா
ரூனசம்பந்தத்துறுபிணிநீங்கியுள்ளமுமொருவழிக்கொண்டு
வானிடைவாழ்வர்மண்மிசைப்பிறவார்மற்றிதற்காணையுநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - பண் புறநீர்மை

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தோலாடைபூண்பதுநாகம்பூசுசாந்தம்பொடிநீறு
கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்செய்கூத்துடையோ
னள்ளற்காராமையகடுவான்மதியமேய்க்கமுட்டாழைகளானை
வெள்ளைக்கொம்பீனும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௧)

இசைந்தவாறடியாரிடுதுவல்வானோரிழுக்குசந்தனத்திளங்கமலப்
பசும்பொன்வாசிகைமேற்பரப்புவாய்கரப்பாய்பத்திசெய்யாதவர்பக்க

லைசும்புபாய்கழனியலர்கயன்முதலோடடுத்தரிந்தெடுத்தவான்சும்மை
விசும்புதூர்ப்பனபோலவிம்மியவீழிமிழலையானெனவினைகெடுமே. (௨)

திருத்தனாறங்கனீற்றனான்மறையனீலமார்மிடற்றனெற்றிக்க
ணொருத்தன்மற்றெல்லாவுயிர்கட்குமுயிராயுளனிலன்கேடிலியுமைகோன்
றிருத்தமாய்நாளுமாடுநீர்ப்பொய்கைசிறியவரறிவினின்மிக்க
விருத்தனாயடிவீழ்ந்திடம்புகும்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௩)

தாங்கருங்காலந்தவிரவந்திருவர்தம்மொடுங்கூடினாரங்கம்
பாங்கினாற்பிரித்துப்பண்டுபோலெல்லாம்பண்ணியகண்ணுதற்பரமர்
தேங்கொள்பூங்கமுகுதெங்கிளங்கொடிமாச்செண்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூமகிழாலெயிற்புகாவீழிமிழலையானெனவினைகெடுமே. (௪)

கூசுமாமயானங்கோயில்வாயிற்கட்குடவயிறனசிலபூதம்
பூசுமாசாந்தம்பூதிமெல்லோதிபாகனாம்பொங்கரவரையோன்
வாசமாம்புன்னைமௌவல்செங்கழுநீர்மலரணைந்தெழுந்தவான்றென்றல்
வீசுமாம்பொழிறேனறுவலைசோவீழிமிழலையானெனவினைகெடுமே. (௫)

பாதியோர்மாதர்மாலுமோர்பாகர்பங்கயத்தயனுமோர்பால
ராதியாய்நடுவாயந்தமாய்நின்றவடிகளாரமரர்கட்கமரர்
போதுசேர்சென்னிப்புரூரவாப்பணிசெய்பூசுராபூமகனனைய
வேதியர்வேதத்தொலியறாவீழிமிழலையானெனவினைகெடுமே (௬)

தன்றவம்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கருளென
றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறையணிசடைய
னின்றநாள்காலையிருந்தநாண்மாலைகிடந்தமண்மேல்வருகலியை
வென்றவேதியர்கள்விழாவறாவீழிமிழலையானெனவினைகெடுமே. (௭)

கடுத்தவாளரக்கன்கைலையன்றெடுத்தகரமுரஞ்சிரநெரிந்தலற
வடர்த்ததோர்விரலாலஞ்செழுத்துரைக்கவருளினன்றடமிகுநெடுவாள்
படித்தநான்மறைகேட்டிருந்தபைங்கிளிகள்பதங்களையோதப்பாடிருந்த
விடைக்குலம்பயிற்றும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௮)

அளவிடலுற்றவயனொடுமாலுமண்டமண்கிண்டியுங்காணா
முளையெரியாயமூர்த்தியைத்தீர்த்தமுங்கணமுமுதல்வனைமுத்தைத்
தளையவிழ்கமலத்தவிசின்மேலன்னந்தனனிளம்பெடையொடும்புல்கி
விளைகதிர்கவரிவீசவீற்றிருக்குமிழலையானெனவினைகெடுமே (௯)

கஞ்சிப்போதுடையார்கையிற்கோசாரக்கலதிகள்கட்டுரைவிட்டு
வஞ்சித்தேவிரியவெழுந்தநஞ்சதனையுண்டமரர்க்கமுதருளி
யிஞ்சிக்கேகதலிக்கனிவிழக்கமுகின்குலையொடும்பழமவிழத்தெங்கின்
மிஞ்சுக்கேமஞ்சுசேர்பொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௧0)

வேந்தர்வந்திறைஞ்சவேதியர்வீழிமிழலையுள்விண்ணிழிவிமானத்
[illegible]ந்ததன்றேவியோடுறைகின்றவீசனையெம்பெருமானைத்

தோய்ந்தநீர்த்தோணிபுரத்துறைமறையோன்றூமொழிஞானசம்பந்தன்
வாய்ந்தபாமாலைவாய்நவில்வாரைவானவர்வழிபடுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (௧)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பராதலைவனுலகினியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (௨)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கமலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௩)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௪)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௫)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௬)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியாகின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௭)

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற

வேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே.

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளாசாக்கியர்தங்களகுறியினைநெறியிடைவாரா
வண்டநாயகனாமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே, (க

பன்னலம்புணருமபாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசனதிருவடியாங்கவைபோற்றிக
கன்னலம்பெரியகாழியுளஞானசமபந்தனசெந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே, (க

திருச்சிற்றம்பலம்.

திருப்பந்தணநல்லூர்-பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

இடறினார்கூற்றைப்பொடிசெயதாரமதிலையிவைசொல்லிபுலகெழுந்தேத்தக்
கடறினாராவாகாறறுளாராவாகாதலித்துறைதருகோயில
கொடிறனாயாதுங்குறைவிலார்தாமபோயக்கோவணங்கொண்டுகூத்தாடும்
படிறனாபோலும்பநதணநலலூாநின்றவெமபசுபதியாரே, (க

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்நாட்டுளாரெனவும்
வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார்விண்ணுளாரெனவுஞ்
சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியாதொண்டர்வாயவநதனசொலலும்
பழியுளார்போலுமபநதணநலலூாநின்றவெம்பசுபதியாரே. (உ

காட்டினாரெனவுநாட்டினாரெனவுங்கடுந்தொழிற்காலனைக்காலால்
வீட்டினாரெனவுஞ்சாநதவெண்ணீறுபூசியோர்வெண்மதிசடைமேற்
சூட்டினாரெனவுஞ்சுவடுதாமறியார்சொலலுளசொல்லுநாலவேதப்
பாட்டினாபோலும்பநதணநலலூர்நின்றவெம்பசுபதியாரே, (ங

முருகினார்பொழில்சூழுலகினாரேத்தமொய்த்தபல்கணங்களின்றுயர்கண்
டுருகினாராகியுறுதிபோநதுளளமொண்மையாலொளிதிகழ்மேனி
கருதினாரெலலாங்கைதொழுதேத்தக்கடலுணஞ்சமுதமாவாங்கிப்
பருகினாபோலும்பந்தணநலலூர்நின்றவெமபசுபதியாரே, (௪

பொன்னினார்கொன்றையிருவடங்கிடநதுபொறிகிளர்பூணநூல்புரள
மின்னினாருருவின்மிளிர்வதோரரவமேவுவெண்ணீறுமெய்பூசித்

துன்னினார்நால்வர்க்கறமமர்ந்தருளித்தொன்மையார்தோற்றமுங்கேடும்
பன்னினார்போலும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ரு)

ஒண்பொனாரனையவண்ணலவாழ்கெனவுமுமையவள்கணவன்வாழ்கெனவு
மண்பினாபிரியாரல்லுநண்பகலுமடியவரடியிணைதொழவே
நண்பினாரெல்லாநல்லரொன்றேத்தவல்லவாதீயரொன்றோகதும்
பண்பினார்போலும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (௬)

எற்றினார்தும்பிடைகொளவரிவிழிருநிலம்வானுலகெல்லை
தெற்றினார்தங்கள்காரணமாகச்செருமலைந்தடியிணைசேரவான்
முற்றினார்வாழுமும்மதில்வேவவேழ்விலைச்சூலமுமழுவும்
பற்றினார்போலும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே (௭)

ஒலிசெய்தகுழலின்முழவமதியம்பவோசையாலாடலறாக
கலிசெயதபூதங்கையினாலிடவேகாலினாற்பாயதுமரகனை
வலிகொள்வர்புலியினுரிகொள்வரேனைவாழ்வுநனாறுமொரார்தலைமிற
பலிகொளவர்போலும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (அ)

சேற்றினார்பொய்கைத்தாமரையானுஞ்செங்கணமாலிவரிருகூறாக்
தோற்றினார்தோற்றத்தொன்மையையறியாத்துணைமையும்பெருமையுந்தம்
சாற்றினார்சாற்றியாற்றலோமெனனச்சாண்கொடுத்தவாசெய்தபாவம [மிற்)
பாற்றினார்போலும்பந்தணநல்லூர்நின்றவெம்பசுபதியாரே (௯-௰

கல்லிசைபூணக்கலையொலிபோவாகழுமலமுநபதிதனனி
னலலிசையாளனபுலவிசைகேளாநற்றமிழ்ஞானசம்பந்தன
பலலிசைபகுவாயபடதலையேந்திமேவியபந்தணநல்லூர
சொலலியபாடலபத்துமவலலவர்மேற்றொலவினைசூழகிலாவே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவோமாம்புலியூர் - பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகமபுரிதருசடைமுடியடிகள்
வீங்கிருணட்டமாடுமெமவிகினாவிருபபொடுமுறைவிடமவினவிற
றேங்கமழ்பொழிலிற்செழுமலாகோதிச்செறிதருவணடிசைபாடு
மோங்கியபுகழூரோமமாமபுலியூருடையவர்வடதளியதுவே. (க)

சம்பாறகருளிச்சலந்தரன்வீயத்தழலுமிழ்சக்கரம்படைத்த
வெமபெருமாறனிமையவரேத்தவினிதினங்குறைவிடமவினவி
லம்பரமாகியழலுமிழ்புகையினாகுதியான்மழைபொழியு
மும்பர்களேத்துமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே (உ)

பாங்குடைத்தவத்துப்பகீரதற்கருளிப்படர்சடைக்கரந்தநீர்க்கங்கை
தாங்குதறவிர்த்துத்தராதலத்துழிதகத்தந்தவனுறைவிடமவினவி
லாங்கெரிமூன்றுமமர்ந்துடனிருந்தவங்கையாலாகுதிவேட்டு
மோங்கியமறையோரோமமாமபுலியுருடையவர்வடதளியதுவே

புற்றரவணிந்து நீறுமெய்பூசிப்பூதங்கள்சூழ்தராவூருர்
பெற்றமொன்றேறிப்பெய்பலிகொள்ளுமபிரானவனுறைவிடம்விண்ணிற்
கற்றநாலவேதமங்கமோராறுங்கருத்திஞரருத்தியாற்றெரியு
முற்றபலபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (சு)

நிலத்தவானமாள்பவர்கீழோர்துயர்கெடநெடியமாற்கருளா
லலைத்தவலசுராசறவாழியளித்தவனுறைவிடமவினவிற்
சலத்திறைபொருளகளவேண்டுதல்செய்யாத்தன்மையார்நன்மையான்மிக்க
வுலப்பிலபலபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (ரு)

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையுமலியுமாறங்கமைவேள்வி
யிணைநதநாலவேதமூனறெரியிரண்டுபிறப்பெனவொருமையாலுணரும்
குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்றமற்றவையுற்றதுமெல்லா
முணாநதவர்வாழோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (சு-எ)

தலையொருபத்துநதடக்கையிரட்டிதானுடையரக்கனொண்கயிலை
யலைவதுசெய்தவவன்றிறலைகெடுத்தவாதியாருறைவிடமவினவில
மலையெனவோங்குமாளிகைநிலவுமாமதிமாற்றலரென்று
முலவுபலபுகழாரோமமாமபுலியூருடையவாவடதளியதுவே. (அ)

கள்ளவிழ்மலர்மேலிருநதவன்கரியோனென்றிவாகாண்பரிதாய
வொள்ளெரியுருவருமையவளோடுமுகநதினிதுறைவிடம்வினவிற்
பள்ளநீர்வாளைபாய்தருகழனிப்பனிமலர்ச்சோலைசூழாலை
யொள்ளியபுகழாரோமமாமபுலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

தெள்ளியரல்லாத்தேரரோடமணர்தடுக்கொடுசீவரமுடிக்குங்
கள்ளமார்மனததுக்கலதிகட்கருளாக்கடவுளாருறைவிடம்வினவி
னள்ளிருள்யாமநான்மறைதெரிநதுநலகதிகழ்மூனறெரியோம்பு
மொள்ளியார்வாழோமமாமபுலியூருடையவர்வடதளியதுவே. (க0)

விளைதருவயலுள்வெயில்செறிபவளமேதிகண்மேய்புலத்திடறி
யொளிதரமலகுமோமமாமபுலியூருடையவர்வடதளியரனைக
களிதருநிவப்பிறகாண்டருசெலவககாழியுண்ஞானசம்பநத
னளிதருபாடலபத்தும்வல்லார்களமரலோகத்திருப்பாரே. (கக)

திருசசிற்றம்பலம்.

திருக்கோணமாமலை-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்நதவடிவினாகொடியணி... ...பா
கரைகெழுசநதுங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (க)

கடிதெனவந்தகரிதனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள்பெய்வளைமடநதைபிறைநுதலவளொடுமுடனாய்க்
கொடிதெனக்கதறுங்குரைகடலசூழ்நதுகொள்ளமுனித்திலஞ்சுமந்து
குடிதனைநெருக்கிப்பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்நதாரே. (உ)

பனித்திளந்திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேற்
றனித்தபேருருவவிழுத்தழனாகந்தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௩)

பழித்திளங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளமுஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே. ()

தாயினுநல்லதலைவரென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினுமனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந்தொழிலர்பானீக்கியுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௫)

பரிந்துநன்மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையாரம்மையாளுடையார்
விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே. (௬-௭)

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வுங்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே. (௮)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம
னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பெயர்ந்தநன்மாற்குங்
குருவராயநின்றார்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே. (௯)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற
வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித்
துன்றுமொண்பௌவமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலமோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே. (௧௦)

குற்றமில்லாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையாரேனறுவர்வானிடைப்பொலிந்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர்-கோணேசர்-தேவியார்-மாதுமையம்மை.

———(*)———

திருவெள்ளடை-பண்-அந்தாளிக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்ணீறணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரும்பல்கணமேத்தநின்றாடுவார்
விண்ணவர்பைம்பொழில்வெள்ளடைமேவிய
பெண்ணமர்மேனியெம்பிரானாரே. (௧)

திரைபுல்குகங்கைதிகழ்சடைவைத்து
வரைமகளோடுடனாடுதிர்மல்கு
விரைகமழ்தண்பொழில்வெள்ளடைமேவிய
வரைமல்குவாளரவாட்டுகந்தீரே. (உ)

அடையலர்தொன்னகர்மூன்றெரித்தன்ன
நடைமடமங்கையோர்பாகநயந்து
விடையுகந்தேறுதிர்வெள்ளடைமேவிய
சடையமர்வெண்பிறைச்சங்கரனீரே. (௩)

வளங்கிளர்கங்கைமடவரலோடு
களம்படவாடுதிர்காடரங்காக
விளங்கியதண்பொழில்வெள்ளடைமேவிய
விளம்பிறைசேர்சடையெம்பெருமானே. (௪)

சுரிகுழநல்லதுடியிடையோடு
பொரிபுல்குகாட்டிடையாடுதிர்பொங்கு
விரிதருபைம்பொழில்வெள்ளடைமேவிய
வெரிமழுவாட்படையெந்தைபிரானே. (௫)

காவியங்கண்மடவாளொடுங்காட்டிடைத்
தீயகலேந்திநின்றாடுதிர்தேன்மலர்
மேவியதண்பொழில்வெள்ளடைமேவிய
வாவினிலேந்துகொண்டாட்டுகந்தீரே. (௬-எ-அ-௯-க0-கக)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்ப்பெருமணம்-பண்-அந்தாளிகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கலலூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பலலூர்ப்பெருமணமபாட்டுமெய்யாயத்தில
செல்லூர்ப்பெருமணஞ்சூடலரோதொண்டா
...லூர்ப்பெருமணமேயநம்பானே. (க)

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூரப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. (உ)

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவிநின்
றின்புறுமெந்தையிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே (௩)

வல்லியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
கொல்லியலவேழத்துரிவிரிகோவண
நல்லியலார்தொழுநல்லூர்ப்பெருமணம்

ஏறுகந்தீரிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திருநல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே (௫)

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னியானபதியாவது
நட்டக்கொட்டாட்டறாநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்தீராலெம்பிரானீரே. (௬)

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித்தோலொடுபந்திகந்
நாகத்தநல்லூர்ப்பெருமணத்தானல்ல
போகத்தனயோகத்தையேபுரிந்தானே. (௭)

தக்கிருந்தீரன்றுதாளாலரக்கனை
யுக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே (௮)

ஏலுந்தண்டாமரையானுமியல்புடை
மாலுந்தம்மாண்பறிகின்றிலாமாமறை
நாலுந்தம்பாட்டென்பர்நல்லூர்ப்பெருமண
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே (௯)

ஆதர்மணொடுசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப்பிணக்குறுவீர்வம்மி
னாதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதனைத்தாடொழவீடெளிதாமே. (௰)

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவலோகத்தியாகேசர் - தேவியார் - நங்கையுமைநாயகியம்மை

மூன்றாந்திருமுறை முற்றிற்று.

பாமுதலிகளுக்குள் முதன்மையாகிய
ஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த
மூன்று திருமுறையும்
முற்றுப்பெற்றன.
ஆகப்பதிகம் ௩௱௮௰௪

திருச்சிற்றம்பலம்.

பரமசிவத்தினுடைய

அட்டவீரட்டம்

பூமன்சிரங்கண்டியந்தகன்கோவலபுரமதிகை .. ... *
மாமன்பறியல்சலந்தரன்விறகுடிமாயபழூவூ .. ... *
காமனகொறுக்கையமனகடவூரிந்தக்காசினியிற .. .. *
றேமன்னுகொன்றையுந்திங்களுஞ்சூடிதனசேவகமே ... ... *

(இதன்பொருள)

கொன்றைப்பூமாலையும் இளந்திங்களுந்தரித்துக கொண்டருளிய பரமசிவம் வீரஞ்செலுத்தியது.—திருககண்டியூரில - பிரமதேவன் சிரங்கொயதது்ம்.—திருககோவலூரில-அந்தகாசுரனை யெரிந்ததும.—திருவதிகையில-திரிபுரம் எரித்ததும.—திருபபறியலூரில-தககன்முடி தடிந்ததும —திருவிற்குடியில-சலந்தரனைத தலையரிந்ததும —திருப்பழூவூரில்-யானையையுரித்ததும —திருக்கொறுக்கையில- மன்மதனைத்தகனஞ்செயததும.— திருககடவூரில-யமனையுதைத்ததும்.